THE WISDOM ACADEMY™

We Guide... you Succeed.

தமிழ்

இலக்கியம் மற்றும்
தமிழ் அறிஞர்களும் தமிழ் தொண்டும்
(பகுதி -ஆ & இ)

தொகுதி - I

தமிழ் இலக்கியம் மற்றும் தமிழ் அறிஞர்களும் தமிழ் தொண்டும்

(பகுதி – ஆ & இ)
தொகுதி – I

TNPSC GROUP – I, II/IIA & IV

ISO தரச்சான்று பெற்றுள்ள நிறுவனம்

தலைமை அலுவலகம்

தி விஸ்டம் அகாடமி

எண். 1, முதல் தளம், இரண்டாவது மெயின் ரோடு, நியூ காலனி, குரோம்பேட்டை, சென்னை 600 044.
தொலைபேசி : 044-4280 2460; 94878 49494; 73388 91214

கிளை அலுவலகம்

தி விஸ்டம் அகாடமி

எண். 7, முதல் தளம், போஸ்ட் ஆபீஸ் ரோடு, (ஸ்டேட் பேங்க் எதிர்புறம்) பழனி 624 601.
அலைபேசி : 94878 49494; 73388 51213

© தி விஸ்டம் அகாடமி

முதல் பதிப்பு : 2021

திருத்திய பதிப்பு : 2022

பக்கங்கள் : 402

விலை : 550

வெளியீட்டாளர்கள்:

தி விஸ்டம் அகாடமி தலைமை அலுவலகம்

எண். 1, முதல் தளம், இரண்டாவது மெயின் ரோடு, நியூ காலனி, குரோம்பேட்டை, சென்னை – 600 044.

(பாலாஜி மருத்துவமனை எதிரில்)

தொலைபேசி : 044-42802460; 94878 49494; 73388 91214

தி விஸ்டம் அகாடமி கிளை அலுவலகம்

எண்.7, முதல் தளம், போஸ்ட் ஆபிஸ் ரோடு, (ஸ்டேட் பேங்க் எதிர்புறம்), பழனி 624 601.

அலைபேசி : 94878 49494; 73388 51213

மின்னஞ்சல் : thewisdomacademygovtjob@gmail.com

இணையதளம் : www.thewisdomacademy.in / www.thewisdomacademy.net

© இத்தொகுப்பின் அனைத்து உரிமைகளும் வெளியிட்டாளரிடம் உள்ளது. இப்பதிப்பின் எந்த பகுதியையும் அனுமதியின்றி மறுபதிப்பிடுவதோ, மீட்டெடுக்கக்கூடிய முறையில் சேமிப்பதோ அல்லது வேறு எந்த வடிவம் அல்லது முறையிலோ மின்னணு, இயந்திர, நகல், பதிவு அல்லது வேறு ஏதாவது முறையில் வெளியீட்டாளரின் எழுத்துப்பூர்வமான அனுமதியின்றி பரிமாற்றம் செய்தாலோ அல்லது வெளியிட்டாலோ அதனால் ஏற்படும் நட்டத்திற்கும் அவரே பொறுப்பாவர் மற்றும் தண்டனைக்குள்ளாவார். மேலும் இழப்பீட்டை ஈடுசெய்யும் பொருட்டு காப்பீட்டு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

முகவுரை

“ஊழையும் உப்பக்கம் காண்பர், உலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

மனம் தளராமல் இடைவிடாது முயற்சி செய்பவர், விதியையும் புறமுதுகு காட்டக் காண்பர்.

அன்பார்ந்த போட்டி தேர்வாளர்களுக்கு .....

இந்தப் புத்தகம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட “**தமிழ் இலக்கியம்**’’ என்ற தலைப்பின் கீழ் பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் தேர்வு ஆணையத்தின் மூலம் வெளியிடப்பட்ட மாதிரி வினாத்தாளில் இப்பகுதியில் இருந்து 30–35 வினாக்கள் கேட்கப்பட்டுள்ளதாலும், இனி வரும் காலங்களிலும் அனைத்து குடிமைப்பணித் தேர்வுகளிலும் இப்பாடத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், இந்த புத்தகம் முழுவதுமாக புதிய பள்ளிப் பாடப்புத்தகம் மற்றும் தேர்வுகளில் கேட்கப்படும் வினாக்களின் அடிப்படையிலும், தேர்வு நோக்கிலும் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்புத்தகம் குடிமைப்பணித் தேர்வுகளின் முதல்நிலை மற்றும் முதன்மைத் தேர்வுகளின் பாடத்திட்டத்தின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளதால், வரும் தமிழக அரசின் அனைத்துத் தேர்வுகளிலும் வெற்றிபெறுவதற்கு பயனுள்ள நூலாக விளங்கும். எனவே இந்நூலை சிறந்த முறையில் பயன்படுத்தி வெற்றி பெற்று பணியில் அமர மனமார்ந்த வாழ்த்துக்கள்.....

க. கார்த்திகேயன், B.A.,
ஆசிரியர் மற்றும் நிறுவனர்

தி விஸ்டம் அகாடமி
ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு துறை

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

பொருளடக்கம்

வ. எண்	பாடத்தலைப்புகள்	பக்க எண்
	பகுதி 'ஆ'	
	சங்க இலக்கியங்கள்	1–145
1	திருக்குறள்	5
	எட்டுத்தொகை	
2	புறநானூறு	76
3	அகநானூறு	87
4	நற்றிணை	96
5	குறுந்தொகை	98
6	ஐங்குறுநூறு	102
7	கலித்தொகை	104
8	பதிற்றுப்பத்து	106
9	பரிபாடல்	109
	பத்துப்பாட்டு	
10	பெரும்பாணாற்றுப்படை	111
11	சிறுபாணாற்றுப்படை	114
12	மலைபடுகடாம்	119
13	மதுரைக்காஞ்சி	121
14	நெடுநல்வாடை	124
15	முல்லைப்பாட்டு	126
	பதிணெண்கீழ்க்கணக்கு நூல்கள்	
16	ஆசாரக்கோவை	129
17	நாலடியார்	131
18	பழமொழி	133
19	சிறுபஞ்சமூலம்	135
20	சங்க இலக்கியத்தில் அறம்	137
21	சங்க கால கல்வெட்டுகள்	141
22	கம்ப இராமாயணம்	146
23	இராவண காவியம்	153

காப்பியங்கள் தொடர்பான செய்திகள்		
24	மணிமேகலை	157
25	நீலகேசி	161
26	சீவகசிந்தாமணி	163
27	சிலப்பதிகாரம்	166
28	யசோதர காவியம்	172
சமய முன்னோடிகள் தொடர்பான செய்திகள்		
28	பொய்கையாழ்வார்	173,187
29	பூதத்தாழ்வார்	174
30	முனைப்பாடியார்	176
31	குன்றக்குடி அடிகளார்(ஒப்புறவு நெறி)	181
32	திருவிளையாடற்புராணம்	183
33	திருமூலர்	187
34	ஆண்டாள் (நாச்சியார் திருமொழி)	189
35	திருஞானசம்பந்தர்(தேவாரம்)	191
36	குமரகுருபரர்(நீதிநெறி விளக்கம்)	193
37	சுந்தரர்	195
38	குலசேகராழ்வார்	197
39	H.A கிருஷ்ணப்பிள்ளை (இரட்சணிய யாத்திரிகம்)	198
40	கன்னிப்பாவை	202
சிற்றிலக்கியங்கள் தொடர்பான செய்திகள்		
41	வாய்மொழி இலக்கியம்	204
42	கலிங்கத்துப் பரணி	207
43	திருமலை முருகன் பள்ளு	210
44	குற்றால குறவஞ்சி	213
45	முத்தொள்ளாயிரம்	215
46	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்	217
47	தமிழ்விடு தூது	219
பகுதி 'இ'		
48	பாரதியார்	222
49	பாரதிதாசன்	234
50	கவிமணி தேசிய விநாயகனார்	247

51	பெருஞ்சித்திரனார்	254
52	சான்றோர்கள் சித்திரம்	259
53	தொல்காப்பியம்	265
54	இராமலிங்க அடிகள்	269
55	தாயுமானவர்	271
56	திரு.வி.க	273
	பெரியோர்களின் சுயசரிதை	
57	வேலுநாச்சியார்	278
58	தேசியம் காத்த செம்மல்	282
59	கப்பலோட்டிய தமிழர்	287
60	கண்ணியமிகு தலைவர்(காயிதே மில்லத்)	291
61	பாரத் ரத்னா எம்.ஜி. இராமச்சந்திரன்	295
62	அயோத்திதாசர் சிந்தனைகள்	300
63	சட்டமேதை அம்பேத்கர்	305
64	பெரியாரின் சிந்தனைகள்	310
65	சிற்றகல் ஒளி	315
66	ஜெயகாந்தன்	320
67	இசைத்தமிழர் இருவர்	324
68	சிவாஜி கணேசன்	329
69	நமது அடையாளங்களை மீட்டவர்	334
70	நா. முத்துக்குமார்	339
71	இந்திய தேசிய இராணுவத்தில் தமிழரின் பங்கு (மா.சு. அண்ணாமலை)	342
72	ஆனந்த ரங்கர் நாட்குறிப்பு	346
73	மகாத்மா காந்தி	351
74	தமிழ் கலைகள் மற்றும் பண்பாடு	355–402

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

சங்க இலக்கியங்கள்

பதினெண்மேற்கணக்கு நூல்கள்

❖ **எட்டுத்தொகை நூல்கள்**

1. நற்றிணை
2. குறுந்தொகை
3. ஐங்குறுநூறு
4. பதிற்றுப்பத்து
5. பரிபாடல்
6. கலித்தொகை
7. அகநானூறு
8. புறநானூறு

❖ **பத்துப்பாட்டு நூல்கள்**

1. திருமுருகாற்றுப் படை
2. சிறுபாணாற்றுப் படை
3. பெரும்பாணாற்றுப் படை
4. பொருநராற்றுப்படை
5. மலைபடுகடாம்
6. மதுரைக் காஞ்சி
7. நெடுநல்வாடை
8. குறிஞ்சிப்பாட்டு
9. முல்லைப்பாட்டு
10. பட்டினப்பாலை

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

1. திருக்குறள்
2. நாலடியார்
3. பழமொழி நானூறு
4. திரிகடுகம்
5. சிறுபஞ்சமூலம்
6. ஏலாதி
7. இன்னா நாற்பது
8. இனியவை நாற்பது
9. கார் நாற்பது
10. களவழி நாற்பது
11. ஐந்திணை ஐம்பது
12. ஐந்திணை எழுபது
13. திணைமொழி ஐம்பது
14. திணைமாலை நூற்றைம்பது
15. கைந்நிலை
16. நான்மணிக்கடிகை
17. முதுமொழிக்காஞ்சி
18. ஆசாரக்கோவை

எட்டுத்தொகை அட்டவணை

நூல்	ஆசிரியர் எண்ணிக்கை	பாடல் எண்ணிக்கை	எல்லை	பொருள்	தொகத் தவர்	தொகுப் பித்தவர்	கடவுள் வாழ்த்து	தெய்வம்
நற்றிணை	275	400	9–12	அகம்	தெரிய வில்லை	பண்ணாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி	பாரதம் பாடிய பெருந் தேவனார்	திருமால்
குறுந் தொகை	205	400	4–8	அகம்	பூரிக்கே	தெரிய வில்லை	பாரதம் பாடிய பெருந் தேவனார்	முருகன்
ஐங்குறு நூறு	5	500	3–6	அகம்	புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்	யானை கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பாறை	பாரதம் பாடிய பெருந் தேவனார்	சிவன்
பதிற்றுப் பத்து	8	80	8–57	புறம்	தெரிய வில்லை	தெரிய வில்லை	–	–
பரிபாடல்	13	22	25–400	அகம் புறம்	தெரிய வில்லை	தெரிய வில்லை	–	–
கலித் தொகை	5	150	11–80	ஆகம்	நல்லந்து வனார்	தெரிய வில்லை	நல்லந் துவனார்	சிவன்
அகநானூறு	145	400	13–31	அகம்	உருத்திர சன்மார்	பாண்டியன் உக்கிரப் பெருவழுதி	–	சிவன்
புறநானூறு	158	400	4–40	புறம்	தெரிய வில்லை	தெரிய வில்லை	பாரத் பாடிய பெருந் தேவனார்	சிவன்

g¤ J¥gh£L **அட்டவணை**

நூல்கள்	அடி	பொருள்	பாடியவர்	தலைவன்
திருமுருகாற்றுப்படை	317	புறம்	நக்கீரர்	முருகன்
பொருநராற்றுப்படை	248	புறம்	முடத்தாமக் கண்ணியார்	கரிகாலன் பெருவளத்தான்
சிறுபாணாற்றுப்படை	269	புறம்	நல்லூர் நத்தத்தனார்	ஒய்மா நாட்டு நல்லியக்கோடன்
பெரும்பாணாற்றுப்படை	500	புறம்	கடியலூர் உருத்திரங்கண்ணனார்	தொண்டைமான் இளந்திரையன்
முல்லைப்பாட்டு	103	அகம்	நப்பூதனார்	நெடுஞ்செழியன்
மதுரைக்காஞ்சி	782	புறம்	மாங்குடி மருதனார்	நெடுஞ்செழியன்
நெடுநல்வாடை	188	அகம் (ம) புறம்	நக்கீரர்	நெடுஞ்செழியன்
குறிஞ்சிப்பாட்டு	261	அகம்	கபிலர்	பிரகாலதத்தன்
பட்டினப்பாலை	301	அகம்	கடியலூர் உருத்திரங்கண்ணனார்	கரிகாலன்
மலைபடுகடாம்	583	புறம்	பெருங்கௌசிகனார்	நன்னன்

நூல்	எண்ணிக்கை	ஆசிரியர்	காலம் (நூற்றாண்டு)	சமயம்
திருக்குறள்	1330	திருவள்ளுவர்	2	
நாலடியார்	400	சமண முனிவர்கள்	7	சமணம்
பழமொழி	400	முன்றுறை அரையனார்	5	சமணம்
திரிகடுகம்	100	நல்லாதனார்	5	வைணவம்
சிறுபஞ்சமூலம்	104	காரியாசான்	5	சமணம்
ஏலாதி	80	கணிதமேதாவியார்	4	
இன்னாநாற்பது	40+1	கபிலர்	4	சைவம்
இனியவை நாற்பது	40+1	பூதஞ்சேந்தனார்	5	சைவம்
கார் நாற்பது	40	கன்னங்கூத்தனார்	5	
களவழி நாற்பது	40+1	பொய்கையார்		
ஐந்திணை ஐம்பது	50	பொறையனார்	4	
ஐந்திணை எழுபது	70	மூவாதியார்	5	சைவம்
திணைமொழி ஐம்பது	50	கண்ணஞ்சேந்தனார்	5	
திணைமாலை நூற்றமைப்பது	153	கணிமேதாவியர்	5	சமணம்
கைந்நிலை	60	புல்லங்காடனார்	5	
இன்னிலை	45	பொய்கையார்	5	
நான்மணிக்கடிகை	102+2	விளம்பிநாகனார்	4	வைணவம்
முதுமொழிக்காஞ்சி	100	கூடலூர் கிழார்	5	
ஆசாரக்கோவை	99+1	பெருவாயின் முள்ளியார்	5	சைவம்

திருக்குறள்

திரு + குறள்	-	திருக்குறள் (திரு- செல்வம், சிறப்பு, அழகு, மேன்மை, தெய்வத் தன்மை)
ஆசிரியர்	-	திருவள்ளுவர்
பெற்றோர்	-	ஆதி, பகவான்
மனைவி	-	வாசுகி
காலம்	-	கி.மு. 31 (அ) கி.பி. 2 ஆம் நூற்றாண்டு
ஊர்	-	திருமயிலாப்பூர்
இயற்றிய நூல்	-	திருக்குறள் (பதினெண்கீழ்கணக்கு நூல்களில் ஒன்று (அற நூல்)
சிறப்பு பெயர்கள்	-	நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப் புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பொய்யில் புலவர், பெருநாவலர்.
திருக்குறளின் சிறப்புப் பெயர்கள்	-	பொதுமறை, தமிழ்மறை, உலகப்பொதுமறை, முப்பால் நூல், உத்தரவேதம், தெய்வநூல், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, திருவள்ளுவப்பயன், அறவிலக்கியம், பொருளுரை, திருவள்ளுவம், முதுமொழி, தமிழ்திருமறை.

❖ திருக்குறள் - 133 அதிகாரங்களையும், அதிகாரத்திற்கு 10 குறட்பாக்கள் வீதம் 1330 குறட்பாக்களைக் கொண்டது.

இயல் இரண்டு

திருக்குறள்

7D1FTS



மக்கள் பயனுள்ள முறையில் வாழ வழிகாட்டிகளாக அமைபவை அறநூல்கள். அறநூல்களில் 'உலகப் பொது மறை' என்று போற்றப்படும் சிறப்புப் பெற்றது நம் திருக்குறள். திருக்குறளில் இல்லாத செய்திகளே இல்லை. ஏழு சொற்களில் மனிதர்களுக்கு அறத்தைக் கற்றுத்தரும் திருக்குறளைப் பயிலுவோம்; வாழ்வில் பின்பற்றுவோம்.

கடவுள் வாழ்த்து

1) *அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
பகவன் முதற்றே உலகு.

அகரமே எழுத்துகளுக்குத் தொடக்கம். ஆதி பகவனே உலகுக்குத் தொடக்கம்.

வான் சிறப்பு

2) *விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து*
உள்நின்று உடற்றும் பசி.

மழை உரியகாலத்தில் பெய்யாது போனால் உலகத்து உயிர்களை எல்லாம் பசி துன்புறுத்தும்.

3) *கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே*
*எடுப்பதூஉம் எல்லாம் மழை.**

உரிய காலத்தில் பெய்யாது கெடுப்பதும் மழைதான். உரிய காலத்தில் பெய்து காப்பதும் மழைதான்.

நீத்தார் பெருமை

4) *செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்*
செயற்கரிய செய்கலா தார்.

முடியாத செயலையும் முடித்துக் காட்டுபவர் பெரியோர்; முடியாது என்பவர் சிறியோர்.

மக்கட்பேறு

5) *தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து*
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது.

தம்மைவிடத் தம் பிள்ளைகள் அறிவுடையோர் என்றால் மக்களுக்கு அதுதான் மகிழ்ச்சி.

6th Tamil 025-050.indd 45 23/05/18 3:05 PM

6) *ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்*
*சான்றோன் எனக்கேட்ட தாய்.**

தன் பிள்ளையின் புகழைக் கேட்ட தாய் பெற்றெடுத்தபோது அடைந்த மகிழ்ச்சியைவிடப் பெருமகிழ்ச்சி அடைவாள்.

அன்புடைமை

7) *அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு.**

அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளும் எனக்கே என்பார்கள். அன்பு உடையவர்கள் தம் உடம்பும் பிறர்க்கே என்பார்கள்.

8) *அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு*
என்புதோல் போர்த்த உடம்பு.

அன்பு இருப்பதுதான் உயிருள்ள உடல். அன்பு இல்லாதது வெறும் எலும்பும் தோலும் தான்.

இனியவை கூறல்

9) *பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு*
அணியல்ல மற்றுப் பிற.

பணிவும் இன்சொல்லுமே ஒருவருக்கு மிகச்சிறந்த அணி.

10) *இனிய உளவாக இன்னாத கூறல்*
*கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.**

இனிய சொல் இருக்கும்போது இன்னாச்சொல் பேசுவது கனி இருக்கும்போது காயை உண்பதைப் போன்றது.

நூல் வெளி

திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர். எக்காலத்துக்கும் பொருந்தும் வாழ்க்கை நெறிகளை வகுத்துக் கூறியுள்ளார். வான்புகழ் வள்ளுவர், தெய்வப்புலவர், பொய்யில் புலவர் முதலிய பல சிறப்புப் பெயர்கள் இவருக்கு உண்டு

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. திருக்குறள் 133 அதிகாரங்களில் 1330 குறள்பாக்களைக் கொண்டுள்ளது. "திருக்குறளில் இல்லாததும் இல்லை, சொல்லாததும் இல்லை" என்னும் வகையில் சிறந்து விளங்குகிறது. திருக்குறளுக்கு உலகப் பொதுமறை, வாயுறை வாழ்த்து முதலிய பல சிறப்புப் பெயர்கள் வழங்குகின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

6th Tamil 025-050.indd 46 23/05/18 3:05 PM

கற்பவை கற்றபின்

7DABVF

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மக்களுக்கு மகிழ்ச்சி தருவது ----------
   அ) ஊக்கமின்மை ஆ) அறிவுடைய மக்கள் இ) வன்சொல் ஈ) சிறிய செயல்
2. ஒருவர்க்குச் சிறந்த அணி ----------
   அ) மாலை ஆ) காதணி இ) இன்சொல் ஈ) வன்சொல்

பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

1. இனிய ---------- இன்னாத கூறல்
   கனியிருப்பக் ----------கவர்ந் தற்று
2. அன்பிலார் ---------- தமக்குரியர் அன்புடையார்
   ---------- உரியர் பிறர்க்கு

நயம் அறிக.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

இந்தக் குறளில் உள்ள எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக

பின்வரும் செய்திக்குப் பொருத்தமான திருக்குறள் எது எனக் கண்டறிந்து எழுதுக.

2016 ஆம் ஆண்டு ரியோ நகரில் மாற்றுத்திறனாளிகள் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. அதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாரியப்பன் கலந்துகொண்டார். உயரம் தாண்டுதல் போட்டியில் அவர் தங்கப் பதக்கம் பெற்றார். செய்தியாளர்கள் அவருடைய தாயிடம் நேர்காணல் செய்தனர். "என் மகனின் வெற்றி எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. அவனைப் பெற்ற பொழுதைவிட இப்போது அதிகமாக மகிழ்கிறேன்" என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

அ) செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

ஆ) ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

இ) இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

குறுவினாக்கள்

1. உயிருள்ள உடல் எது?
2. எழுத்துகளுக்குத் தொடக்கமாக அமைவது எது?
3. அன்பிலார், அன்புடையார் செயல்கள் யாவை?

6th Tamil 025-050.indd 47 23/05/18 3:05 PM

இயல் ஐந்து

திருக்குறள்

உலகில் வாழும் மக்கள் அனைவருக்கும் சிறப்பான அறங்களை வலியுறுத்தியவர் திருவள்ளுவர். வீட்டிற்கு வந்த விருந்தினரைப் போற்றுதல், இனிய சொற்களைப் பேசுதல், பிறர் பொருளை விரும்பாமை, ஊக்கத்துடன் செயல்படுதல், பயனற்ற சொற்களைப் பேசாமல் இருத்தல் ஆகிய அறங்களைப் பற்றிய திருவள்ளுவரின் கருத்துகளை அறிவோம் வாருங்கள்.

K2UT9S

விருந்தோம்பல்

1. *விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா*
   மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று
   அமிழ்தமே ஆனாலும் விருந்தினர் இருக்கும்போது தான்மட்டும் உண்பது விரும்பத்தக்கது அன்று.

2. *மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து*
   *நோக்கக் குழையும் விருந்து**
   மோந்து பார்த்தால் அனிச்ச மலர் வாடிவிடும். நம் முகம் மாறினாலே விருந்தினர் உள்ளம் வாடிவிடும்.

கள்ளாமை

3. *உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்*
   கள்ளத்தால் கள்வேம் எனல்
   அடுத்தவர் பொருளைக் களவாடலாம் என உள்ளத்தால் நினைப்பது கூடத் தீமையானது.

4. *களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து*
   ஆவது போலக் கெடும்.
   களவு மூலம் சேர்க்கப்படும் செல்வம் வளர்வது போலத் தோன்றினாலும் முடிவில் அழிந்துவிடும்.

6th Tamil 077-205.indd 120 23/05/18 3:50 PM

ஊக்கமுடைமை

5. *உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை*
நில்லாது நீங்கி விடும்

ஊக்கமே நிலையான செல்வம். மற்றவை எல்லாம் நிலைத்து நில்லாமல் அழிந்து விடும்.

6. *ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவுஇலா*
ஊக்கம் உடையான் உழை.

தளராத ஊக்கம் உடையவனிடம் ஆக்கமானது தானே வழிகேட்டுக்கொண்டு செல்லும்.

7. *வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்*
*உள்ளத்து அனையது உயர்வு**

தண்ணீரின் உயரத்துக்கு ஏற்ப நீர்ப்பூக்கள் வளரும். ஊக்கத்தின் அளவுக்கு ஏற்ப மனிதர்கள் உயர்வார்கள்.

8. *உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது*
தள்ளினும் தள்ளாமை நீர்த்து

எண்ணுவதை உயர்வாகவே எண்ணுக. எண்ணியதை அடையாவிட்டாலும் எண்ணமே மனநிறைவைத் தரும்.

பயனில சொல்லாமை

9. *அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்*
பெரும்பயன் இல்லாத சொல்

நன்மை எது என ஆராயும் அறிவு உடையவர்கள் பயன்தராத சொற்களைப் பேசமாட்டார்கள்.

10. *சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க*
*சொல்லில் பயன்இலாச் சொல்**

பயனுடைய சொற்களை மட்டுமே பேசுக. பயன் இல்லாத சொற்களைப் பேசாமல் விட்டு விடுக.

6th Tamil 077-205.indd 121 23/05/18 3:50 PM

கற்பவை கற்றபின்

1. பாடப்பகுதியில் இடம்பெற்ற அதிகாரங்களில் உள்ள திருக்குறளுள் ஐந்தனை பொருளுடன் எழுதி வந்து வகுப்பில் பகிர்க.
2. திருக்குறள் உலகப் பொதுமறை எனப்படுவது ஏன்? வகுப்பில் பேசுக.

K34PBF

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. விருந்தினரின் முகம் எப்போது வாடும்?
   அ) நம் முகம் மாறினால் ஆ) நம் வீடு மாறினால்
   இ) நாம் நன்கு வரவேற்றால் ஈ) நம் முகவரி மாறினால்

2. நிலையான செல்வம் .....
   அ) தங்கம் ஆ) பணம் இ) ஊக்கம் ஈ) ஏக்கம்

3. ஆராயும் அறிவு உடையவர்கள் ..... சொற்களைப் பேசமாட்டார்.
   அ) உயர்வான ஆ) விலையற்ற இ) பயன்தராத ஈ) பயன்உடைய

4. பொருளுடைமை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) பொருளு+டைமை ஆ) பொரு+ளுடைமை
   இ)பொருள்+உடைமை ஈ) பொருள்+ளுடைமை

5. உள்ளுவது+எல்லாம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
   அ) உள்ளுவதுஎல்லாம் ஆ) உள்ளுவதெல்லாம்
   இ) உள்ளுவத்தெல்லாம் ஈ) உள்ளுவதுதெல்லாம்

6. பயன்+இலா என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
   அ) பயனிலா ஆ) பயன்னில்லா இ) பயன்இலா ஈ) பயன்இல்லா

நயம் அறிக

உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து

இக்குறளில் உள்ள எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

6th Tamil 077-205.indd 122 23/05/18 3:50 PM

இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.

பணிவுடையன் ஆதல் இன்சொலன் ஒருவற்கு
மற்றுப் பிற அணியல்ல

உள்ளுவது உயர்வுள்ளல் எல்லாம் மற்றது
தள்ளாமை தள்ளினும் நீர்த்து

"ஊக்கமது கைவிடேல்" என்பது ஔவையாரின் ஆத்திசூடி. இவ்வரியோடு தொடர்புடைய திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.

விருந்து புறத்ததாத் தாணுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டாற்பாற் அன்று

உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்

சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயன்இலாச் சொல்

பின்வரும் கதைக்குப் பொருத்தமான திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.

வீட்டிற்குள் வந்த வேலனை தந்தை அழைத்தார். "உங்கள் பள்ளியில் பேச்சுப்போட்டி நடப்பதாகக் கூறினாயே, பெயர் கொடுத்து விட்டாயா?" என்று கேட்டார். "இல்லையப்பா, அமுதன் என்னைவிட நன்றாகப் பேசுவான். அவனுக்குத்தான் பரிசு கிடைக்கும். எனவே நான் பெயர் கொடுக்கவில்லை" என்றான் வேலன். "போட்டியில் வெற்றியும் தோல்வியும் இயல்புதான். அதற்காகப் போட்டியிடாமல் விலகக் கூடாது. நாம் எந்த அளவு ஊக்கத்துடன் செயல்படுகிறோமோ அந்த அளவிற்கு வெற்றி கிடைக்கும். எனவே நீ போட்டியில் கலந்துகொள்" என்றார் அப்பா. உற்சாகம் அடைந்தான் வேலன். "நாளை பெயர் கொடுத்துவிடுகிறேன் அப்பா" என்றான்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு

அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்

குறுவினா

1. எப்படி உண்பது விரும்பத்தக்கது அன்று?
2. எது தீமையானது என்று வள்ளுவர் கூறுகின்றார்?
3. ஆக்கம் யாரிடம் வழிகேட்டுச் செல்லும்?
4. நாம் எத்தகைய சொற்களைப் பேசவேண்டும் என்று வள்ளுவர் கூறுகின்றார்?

6th Tamil 077-205.indd 123 23/05/18 3:50 PM

இயல் எட்டு

திருக்குறள்

LA3EXX

அறன் வலியுறுத்தல்

1. *மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்*
   *ஆகுல நீர பிற.**

   உள்ளத்தில் குற்றம் இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும். மற்றவை எல்லாம் வெறும் ஆரவாரமே.

2. *அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்*
   இழுக்கா இயன்றது அறம்.

   பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் பேசுதல் ஆகிய நான்கும் இல்லாமல் வாழ்வதே அறம் ஆகும்.

ஈகை

3. *வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற்று எல்லாம்*
   குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

   இல்லாதவர்க்கு தருவதே ஈகை ஆகும். மற்றவை எல்லாம் பயனை எதிர்பார்த்துச் செய்பவை ஆகும்.

4. *ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை*
   வைத்திழக்கும் வன்க ணவர்.

   இல்லாதவர்க்குத் தருவதால் உண்டாகும் இன்பத்தை அறியாதவர்கள் பொருளைச் சேர்த்து வைத்துப் பின் அதனை இழந்து விடுவார்கள்.

இன்னா செய்யாமை

5. *இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண*
   *நன்னயம் செய்து விடல்.**

   நமக்குத் துன்பம் செய்தவர் நாணும்படி அவருக்கு நன்மை செய்வதுதான் அவரைத் தண்டிக்கும் வழியாகும்.

6. *அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்*
   தந்நோய்போல் போற்றாக் கடை.

   பிற உயிரின் துன்பத்தைத் தமது துன்பம் போல் கருதாவிட்டால் தாம் பெற்றுள்ள அறிவால் எந்தப் பயனும் இல்லை.

7. *எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்*
   மாணாசெய் யாமை தலை.

   நம் உள்ளம் ஏற்றுக் கொள்ளாத எச்செயலையும் எக்காலத்திலும் யாருக்கும் சிறிதளவுகூடச் செய்யக் கூடாது.

6th Tamil 077-205.indd 184 23/05/18 3:51 PM

கொல்லாமை

8. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
*தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.**

தம்மிடம் இருப்பவற்றைப் பிற உயிர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துக் காப்பாற்ற வேண்டும். அதுவே அறநூல்களில் கூறப்படும் அறங்களுள் சிறந்தது.

பெரியாரைப் பிழையாமை

9. ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை

ஆற்றல் உடையவர்களை இகழக் கூடாது. அதுவே தம்மைத் தீங்கிலிருந்து காத்துக்கொள்ளும் வழிகளுள் சிறந்த வழியாகும்.

10.எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.

தீயினால் சுடப்பட்டவர்கூடப் பிழைத்துக்கொள்ள முடியும். ஆனால் பெரியவர்களுக்குத் தீங்கு செய்தவர் தப்ப முடியாது.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஏழைகளுக்கு உதவி செய்வதே …… ஆகும்.
   அ) பகை ஆ) ஈகை இ) வறுமை ஈ) கொடுமை
2. பிற உயிர்களின் .....க் கண்டு வருந்துவதே அறிவின் பயனாகும்.
   அ) மகிழ்வை ஆ) செல்வத்தை இ) துன்பத்தை ஈ) பகையை
3. உள்ளத்தில் ..... இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும்.
   அ) மகிழ்ச்சி ஆ) மன்னிப்பு இ) துணிவு ஈ) குற்றம்

இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.

வறியார்க்கொன்று ஈகைமற்று ஈவதே எல்லாம்
குறியெதிர்ப்பை உடைத்து நீரது.

எனைத்தானும் யார்க்கும் எஞ்ஞான்றும் மனத்தானாம்
மாணாசெய் தலை யாமை.

குறுவினா

1. அறிவின் பயன் யாது?
2. பிற உயிர்களை எவ்வாறு காப்பாற்ற வேண்டும்?
3. ஈகை பற்றிய வள்ளுவரின் கருத்து யாது?

LACAZK

6th Tamil 077-205.indd 185 23/05/18 3:51 PM

இயல் இரண்டு

திருக்குறள்

89CSZD



"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்"

என்று திருக்குறளின் பெருமையை ஔவையார் போற்றுகிறார். மனித சமுதாயத்தை ஆழ்ந்து நோக்கி, அஃது எவ்வாறு வாழ வேண்டும் என்று நன்கு சிந்தித்து எழுதப்பட்ட நூல் திருக்குறள். இது போன்ற ஒரு நூல் உலகில் எந்த மொழியிலும் இதுவரை தோன்றியது இல்லை என்பர். அத்தகைய பெருமைமிகு திருக்குறளைப் படிப்போம்.

அழுக்காறாமை

1. *ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து*
   அழுக்காறு இலாத இயல்பு.

   பொருள் : ஒருவர் தன் நெஞ்சில் பொறாமையில்லாத குணத்தையே ஒழுக்க நெறியாகக் கொண்டு வாழ வேண்டும்.

2. *அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்*
   கேடும் நினைக்கப் படும்.

   பொருள்: பொறாமை கொண்டவருடைய செல்வமும், பொறாமை இல்லாதவருடைய வறுமையும் சான்றோரால் ஆராயப்படும்.

புறங்கூறாமை

3. *கண்நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க*
   முன்இன்று பின்நோக்காச் சொல்.

   பொருள்: ஒருவருக்கு நேர்நின்று கடுமையான சொற்களைச் சொன்னாலும் சொல்லலாம். ஆனால், அவர் இல்லாதபோது புறங்கூறுதல் கூடாது.

4. *ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்*
   *தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.**

   பொருள்: பிறருடைய குற்றத்தைக் காண்பது போல், தன்னுடைய குற்றத்தையும் காண்பவருடைய வாழ்வில் துன்பம் இல்லை.

7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 47 14-03-2019 11:25:13

அருளுடைமை

5. *அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்*
பூரியார் கண்ணும் உள.

பொருள்: அருளாகிய செல்வமே செல்வங்களுள் சிறந்த செல்வமாகும். பொருட்செல்வம் இழிந்தவரிடத்திலும் உள்ளது.

6. *வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்*
மெலியார்மேல் செல்லும் இடத்து.

பொருள்: ஒருவர் தன்னைவிட மெலிந்தவரை துன்புறுத்தும்போது, தன்னை விட வலிமையுடையவரின் முன் தான் அஞ்சி நிற்கும் நிலையை எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

வாய்மை

7. *வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்*
*தீமை இலாத சொலல்.**

பொருள்: வாய்மை எனப்படுவது மற்றவர்க்கு ஒரு தீங்கும் தராத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.

8. *தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்*
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

பொருள்: ஒருவர் தன் நெஞ்சறிய பொய் சொல்லக்கூடாது. அவ்வாறு கூறினால் அவர் நெஞ்சமே அவனை வருத்தும்.

9. *உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்*
*உள்ளத்துள் எல்லாம் உளன்.**

பொருள்: உள்ளத்தில் பொய் இல்லாமல் வாழ்பவர், உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவர் ஆவார்.

இறைமாட்சி

10. *இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்லது அரசு.**

பொருள்: பொருள் வரும் வழிகளை அறிதலும், அவ்வழிகளில் பொருள்களைச் சேர்த்தலும், சேர்த்த பொருளைப் பாதுகாத்தலும், காத்த பொருளைப் பயனுள்ள வகையில் திட்டமிட்டுச் செலவிடுதலும் சிறந்த அரசின் செயலாகும்.

7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 48 14-03-2019 11:25:14

நூல் வெளி

திருக்குறளைத் தந்த திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்று கூறுவர். இவர் முதற்பாவலர், பொய்யில் புலவர், செந்நாப்போதார் போன்ற சிறப்புப் பெயர்களாலும் குறிப்பிடப்படுகிறார்.

தமிழ்நூல்களில் 'திரு' என்னும் அடைமொழியோடு வருகின்ற முதல் நூல் திருக்குறள் ஆகும். திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்ற மூன்று பகுப்புக் கொண்டது. இதில் அறம்–38, பொருள்–70, இன்பம்–25 என மொத்தம் 133 அதிகாரங்கள் உள்ளன. அதிகாரத்திற்கு 10 குறள்கள் வீதம் 1330 குறட்பாக்கள் உள்ளன. இதற்கு முப்பால், தெய்வநூல், பொய்யாமொழி போன்ற பிற பெயர்களும் உள்ளன.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வாய்மை எனப்படுவது _____.

   அ) அன்பாகப் பேசுதல் ஆ) தீங்குதராத சொற்களைப் பேசுதல்

   இ) தமிழில் பேசுதல் ஈ) சத்தமாகப் பேசுதல்

2. _____ செல்வம் சான்றோர்களால் ஆராயப்படும்.

   அ) மன்னன் ஆ) பொறாமை இல்லாதவன்

   இ) பொறாமை உள்ளவன் ஈ) செல்வந்தன்

3. 'பொருட்செல்வம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) பொரு + செல்வம் ஆ) பொருட் + செல்வம்

   இ) பொருள் + செல்வம் ஈ) பொரும் + செல்வம்

4. 'யாதெனின்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) யா+எனின் ஆ) யாது+தெனின் இ) யா+தெனின் ஈ) யாது+எனின்

5. தன்+நெஞ்சு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) தன்நெஞ்சு ஆ) தன்னெஞ்சு இ) தானெஞ்சு ஈ) தனெஞ்சு

6. தீது+உண்டோ என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) தீதுண்டோ ஆ) தீதுஉண்டோ இ) தீதிண்டோ ஈ) தீயுண்டோ

7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 49 14-03-2019 11:25:14

சிறந்த அரசின் பணிகளை வரிசைப்படுத்தி எழுதுக.

அ) பொருளைப் பிரித்துச் செலவு செய்தல்.

ஆ) பொருள் வரும் வழிகளை அறிதல்.

இ) சேர்த்த பொருளைப் பாதுகாத்தல்.

ஈ) பொருள்களைச் சேர்த்தல்.

குறுவினா

1. எப்போது தன்நெஞ்சே தன்னை வருத்தும்?
2. வாழும் நெறி யாது?
3. உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவன் யார்?

கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு திருக்குறள் அமைக்க.

பொருட்செல்வம்	எல்லாம்	பூரியார்	செல்வத்துள்
கண்ணும்	அருட்செல்வம்	உள	செவிச்செல்வம்
அச்செல்வம்	தலை	செல்வம்	–

1. _____ _____ _____ _____

_____ _____ _____

2. _____ _____ _____ _____

_____ _____ _____ _

பின்வரும் பத்திக்குப் பொருத்தமான திருக்குறளைத் தேர்ந்தெடு.

அறவழி என்றவுடன் நம் நினைவுக்கு வருபவர் தேசத்தந்தை காந்தியடிகள். அவர் தம் சிறு வயதில் 'அரிச்சந்திரன்' நாடகத்தைப் பார்த்தார். அதில் அரிச்சந்திரன் என்னும் மன்னர் 'பொய் பேசாமை' என்னும் அறத்தை எத்தகைய சூழ்நிலையிலும் தவறாமல் கடைப்பிடித்தார். இந்த நாடகத்தைக் கண்ட காந்தியடிகள் தாமும் பொய் பேசாமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று உறுதி பூண்டார். அதனைத் தம் வாழ்நாள் முழுவதும் பின்பற்றினார். இப்பண்பே காந்தியடிகள் எல்லார் இதயத்திலும் இடம் பிடிக்கக் காரணமாக அமைந்தது.

1. *ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து*
   அழுக்காறு இலாத இயல்பு.
2. *வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்*
   தீமை இலாத சொலல்.
3. *உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்*
   உள்ளத்துள் எல்லாம் உளன்.

7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 50 14-03-2019 11:25:14

இயல் ஆறு

திருக்குறள்

L6RSU5

கல்வி

1. *கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
   நிற்க அதற்குத் தக.
   பொருள் : கற்க வேண்டியவற்றைப் பிழை இல்லாமல் கற்க வேண்டும். கற்றபின் கற்ற வழியில் நடக்க வேண்டும்.

2. *எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்*
   கண்ணென்ப வாழும் உயிர்க்கு.
   பொருள் : எண்ணும் எழுத்தும் வாழும் மக்களுக்குக் கண்கள் போன்றவை.

3. *தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்*
   *கற்றனைத்து ஊறும் அறிவு.**
   பொருள் : தோண்டும் அளவிற்கு ஏற்ப மணற்கேணியில் நீர் ஊறும். அதுபோல் கற்கும் அளவிற்கு ஏற்ப மக்களுக்கு அறிவு வளரும்.

4. *கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
   மாடல்ல மற்றை யவை.
   பொருள் : அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே. ஒருவருக்கு அதனைவிடச் சிறந்த செல்வம் வேறு இல்லை.

தெரிந்து செயல்வகை

5. *செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க*
   செய்யாமை யானும் கெடும்.
   பொருள் : செய்யத்தகாத செயல்களைச் செய்வதாலும் செய்யத்தக்க செயல்களைச் செய்யாமல் விடுவதாலும் தீமை உண்டாகும்.

6. *எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்*
   *எண்ணுவம் என்பது இழுக்கு.**
   பொருள் : எந்தச் செயலையும் நன்கு சிந்தித்த பின் தொடங்க வேண்டும். தொடங்கிய பின் எண்ணிப் பார்க்கலாம் என்பது குற்றமாகும்.

7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 144 14-03-2019 11:25:31

7. *நன்றாற்றல் உள்ளும் தவறுண்டு அவரவர்*
பண்பறிந்து ஆற்றாக் கடை.

பொருள் : நாம் ஒருவருடைய பண்பை அறிந்து அவருக்கு நன்மை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் நன்மை செய்தாலும் தீமை வந்து சேரும்.

சுற்றந்தழால்

8. *காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்*
அன்ன நீரார்க்கே உள.

பொருள் : காகம் தனக்குக் கிடைத்ததை மறைக்காமல் தன் சுற்றத்தாரைக் கூவி அழைத்து உண்ணும். அத்தகைய பண்பு உடையவர்களிடமே செல்வமும் சேரும்.

மடியின்மை

9. *மடியை மடியா ஒழுகல் குடியைக்*
குடியாக வேண்டு பவர்.

பொருள் : தம் குடியைச் சிறப்புடைய குடியாகச் செய்ய விரும்புபவர், சோம்பலைத் துன்பமாகக் கருதி முயற்சியோடு வாழ்தல் வேண்டும்.

இடுக்கண் அழியாமை

10. *இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு*
*இடும்பை படாஅ தவர்.**

பொருள் : துன்பம் வந்த போது வருந்திக் கலங்காதவர், அந்தத் துன்பத்திற்கே துன்பம் உண்டாக்கி அதனை வென்று விடுவர்.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. _____ தீமை உண்டாகும்.
அ) செய்யத்தகுந்த செயல்களைச் செய்வதால்
ஆ) செய்யத்தகாத செயல்களைச் செய்யாமல் இருப்பதால்
இ) செய்யத்தகுந்த செயல்களைச் செய்யாமல் இருப்பதால்
ஈ) எதுவும் செய்யாமல் இருப்பதால்

2. தன்குடியைச் சிறந்த குடியாகச் செய்ய விரும்புபவரிடம் _____ இருக்கக் கூடாது.
அ) சோம்பல் ஆ) சுறுசுறுப்பு இ) ஏழ்மை ஈ) செல்வம்

7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 145 14-03-2019 11:25:32

3. 'எழுத்தென்ப' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) எழுத்து + தென்ப ஆ) எழுத்து + என்ப

இ) எழுத்து + இன்ப ஈ) எழுத் + தென்ப

4 . 'கரைந்துண்ணும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) கரைந்து + இன்னும் ஆ) கரை + துண்ணும்

இ) கரைந்து + உண்ணும் ஈ) கரை + உண்ணும்

5. கற்றனைத்து+ ஊறும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

அ) கற்றனைத்தூறும் ஆ) கற்றனைதூறும்

இ) கற்றனைத்தீறும் ஈ) கற்றனைத்தோறும்

பொருத்துக.

1. கற்கும் முறை – செயல்
2. உயிர்க்குக் கண்கள் – காகம்
3. விழுச்செல்வம் – பிழையில்லாமல் கற்றல்
4. எண்ணித் துணிக – எண்ணும் எழுத்தும்
5. கரவா கரைந்துண்ணும் – கல்வி

குறுவினா

1. 'நன்மை செய்வதிலும் தீமை உண்டாகும்' எப்போது?
2. தீமை உண்டாக்கும் இரண்டு செயல்களை எழுதுக.
3. துன்பத்திற்குத் துன்பம் உண்டாக்குபவர் யார்?

பாடப்பகுதியிலிருந்து படங்களுக்குப் பொருத்தமான திருக்குறளை எழுதுக.

_____ _____ _____ _____

_____ _____ _____.

1 0 2 3 8

அ ஆ க ச ட த

_____ _____ _____ _____

_____ _____ _____.

7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 146 14-03-2019 11:25:33

இயல் எட்டு

திருக்குறள்

VCQYAH

வினைசெயல் வகை

1. *பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்*
   இருள்தீர எண்ணிச் செயல்.

   பொருள் : வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தகுந்த காலம், மேற்கொள்ளும் செயலின் தன்மை , உரிய இடம் ஆகிய ஐந்தையும் ஐயம்தீர ஆராய்ந்து ஒரு செயலைச் செய்ய வேண்டும்.

2. *வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்*
   *யானையால் யானையாத் தற்று.**

   பொருள் : ஒரு யானையைக்கொண்டு மற்றொரு யானையைப் பிடிப்பர். அது போல ஒரு செயலைச் செய்யும்போதே அச்செயலால் மற்றொரு செயலையும் செய்து முடித்துக் கொள்ளல் வேண்டும்.

   அணி : உவமை அணி

அவை அஞ்சாமை

3. *கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்*
   கற்ற செலச்சொல்லு வார்.

   பொருள் : தாம் கற்றவற்றைக் கற்றவர்முன் தெளிவாகச் சொல்ல வல்லவர், கற்றவருள் மிகவும் கற்றவராக மதிக்கப்படுவார்.

4. *கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற*
   மிக்காருள் மிக்க கொளல்.

   பொருள் : கற்றவர் முன் தான் கற்றவற்றை மனத்தில் பதியும்படி சொல்லி, அவர்கள் கற்றவற்றையும் கேட்டு, அறிந்து கொள்ள வேண்டும்.

நாடு

5. *உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்*
   *சேராது இயல்வது நாடு.**

   பொருள்: மிக்க பசியும், ஓயாத நோயும், அழிவு செய்யும் பகையும் சேராமல் நல்ல வகையில் நடைபெறுவதே நாடாகும்.

7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 188 14-03-2019 11:26:30

6. *நாடென்ப நாடா வளத்தன நாடல்ல*

நாட வளம்தரு நாடு.

பொருள் : பெரிய அளவில் முயற்சி இல்லாமல் வளம்தரும் நாடே சிறந்த நாடாகும். முயற்சி செய்து சேரும் வளத்தை உடைய நாடு சிறந்த நாடு ஆகாது.

அரண்

7. *மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்*

காடும் உடையது அரண்.

பொருள் : தெளிந்த நீரும், நிலமும், மலையும், அழகிய நிழல் உடைய காடும் ஆகிய நான்கும் உள்ளதே அரண் ஆகும்.

8. *எனைமாட்சித்து ஆகியக் கண்ணும் வினைமாட்சி*

இல்லார்கண் இல்லது அரண்.

பொருள் : அரண் எவ்வளவு பெருமையுடையதாக இருந்தாலும், செயல் சிறப்பு இல்லாதவரிடத்தில் அது பயனில்லாதது ஆகும்.

பெருமை

9. *பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா*

*செய்தொழில் வேற்றுமை யான்.**

பொருள் : பிறப்பால் மக்கள் அனைவரும் ஒத்த இயல்புடையவர்களே. அவர்கள் செய்யும் நன்மை, தீமையாகியச் செயல்களால் அவர்களது சிறப்பியல்புகள் ஒத்திருப்பதில்லை.

10. *பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்*

அருமை உடைய செயல்.

பொருள் : உயர்ந்த பண்புகளை உடையவர் செய்வதற்கு அரிய செயல்களை உரிய நெறிமுறையில் செய்து முடிப்பர்.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. _____ ஒரு நாட்டின் அரணன்று.

அ) காடு ஆ) வயல் இ) மலை ஈ) தெளிந்த நீர்

2. மக்கள் அனைவரும் _____ ஒத்த இயல்புடையவர்கள்.

அ) பிறப்பால் ஆ) நிறத்தால் இ) குணத்தால் ஈ) பணத்தால்

7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 189 14-03-2019 11:26:30

3. 'நாடென்ப' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____.

அ) நான் + என்ப ஆ) நா + டென்ப இ) நாடு + என்ப ஈ) நாடு + டென்ப

4. கண் + இல்லது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

அ) கணிஇல்லது ஆ) கணில்லது இ) கண்ணில்லாது ஈ) கண்ணில்லது

பின்வரும் குறட்பாக்களில் உவமையணி பயின்றுவரும் குறளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. *பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
   செய்தொழில் வேற்றுமை யான்.

2. *வினையான் வினையாக்கிக் கோடல் தனைகவுள்*
   யானையால் யானையாத் தற்று.

3. *கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற*
   மிக்காருள் மிக்க கொளல்.

குறுவினா

1. ஒரு செயலைச் செய்ய எவற்றையெல்லாம் ஆராய வேண்டும்?
2. ஒரு நாட்டுக்கு எவையெல்லாம் அரண்களாக அமையும்?
3. சிறந்த நாட்டின் இயல்புகளாக வள்ளுவர் கூறுவன யாவை?

படங்களுக்குப் பொருத்தமான திருக்குறளை எழுதுக.



_____ _____ _____ _____

_____ _____ _____

_____ _____ _____ _____

_____ _____ _____

7th Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 190 14-03-2019 11:26:30

இயல் இரண்டு

திருக்குறள்

E4QW4D



திருக்குறள் நீதிநூல் மட்டுமன்று; அஃது ஒரு வாழ்வியல் நூல்; எக்காலத்திற்கும், எல்லா மக்களுக்கும் பொருந்தும் அறக்கருத்துகளைக் கொண்ட நூல். திருக்குறளின் பெருமையை விளக்க, 'திருவள்ளுவ மாலை' என்னும் நூல் எழுதப்பட்டிருப்பதே அதன் பெருமைக்குச் சான்றாகும். இத்தகைய பெருமை கொண்ட திருக்குறளைப் பயில்வோம்.

நடுவுநிலைமை

1. *தக்கார் தகவிலர் என்பது அவரவர்*
   எச்சத்தால் காணப் படும்.*

   பொருள் :நடுவு நிலைமை உடையவர், நடுவு நிலைமை இல்லாதவர் என்பது அவரவருக்குப் பின் எஞ்சி நிற்கும் புகழினாலும் பழியினாலும் அறியப்படும்.

2. *சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்*
   கோடாமை சான்றோர்க்கு அணி.

   பொருள் :தான் சமமாக இருந்து தன்னிடம் வைக்கப்படும் பொருள்களின் எடையைத் துலாக்கோல் சரியாகக் காட்டும். அதுபோல நடுவுநிலைமையுடன் சரியாகச் செயல்படுவதே சான்றோர்க்கு அழகாகும்.

   அணி :உவமை அணி.

கூடா ஒழுக்கம்

3. *வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்*
   புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

   பொருள் :மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவர் மேற்கொண்ட வலிய தவக்கோலம், புலியின் தோலைப் போர்த்திக்கொண்ட பசு பயிரை மேய்ந்ததைப் போன்றது.

   அணி :இல்பொருள் உவமை அணி.

4. *கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன*
   வினைபடு பாலால் கொளல்.*

   பொருள் :நேராக இருந்தாலும் அம்பு கொடியதாக இருக்கிறது. வளைவுடன் இருப்பினும் யாழின் கொம்பு இனிமையைத் தருகிறது. அதுபோல மக்களின் பண்புகளை அவரவர் தோற்றத்தால் அல்லாமல் செயல்வகையால் உணர்ந்துகொள்ள வேண்டும்.

8th Std Tamil _23-03-2019.indd 43 08-04-2019 3.26.25 PM

கல்லாமை

5. *உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்*
களர்அனையர் கல்லா தவர்.

பொருள்: கல்லாதவர் பயனில்லாத களர்நிலம் போன்றவர். அவர் உயிரோடு இருக்கிறார் என்பதைத் தவிர அவரால் வேறு எந்தப் பயனும் இல்லை.

6. *விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்*
*கற்றாரோடு ஏனை யவர்**.

பொருள்: கற்றவர்க்கும் கல்லாதவருக்கும் இடையே உள்ள வேறுபாடானது, மக்களுக்கும் விலங்குகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டிற்கு இணையானது.

குற்றங்கடிதல்

7. *வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்*
வைத்தூறு போலக் கெடும்.

பொருள்: பழிவருமுன்னே சிந்தித்து தம்மைக் காத்துக்கொள்ளாதவருடைய வாழ்க்கை, நெருப்பின் அருகில் வைக்கப்பட்ட வைக்கோல்போர் போல அழிந்துவிடும்.

அணி : உவமை அணி.

8. *தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்*
*என்குற்றம் ஆகும் இறைக்கு**.

பொருள்: தலைவன் முதலில் தன்குற்றத்தைக் கண்டு நீக்கி, அதன்பின் பிறருடைய குற்றத்தை ஆராய்ந்தால், அவனுக்கு எந்தப் பழியும் ஏற்படாது.

இடனறிதல்

9. *தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்*
இடங்கண்ட பின்அல் லது.

பொருள்: பொருத்தமான இடத்தை அறியாமல் எந்தச் செயலையும், தொடங்கவும் கூடாது; இகழவும் கூடாது.

10. *கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்*
நாவாயும் ஓடா நிலத்து.

பொருள்: வலிமையான சக்கரங்களைக் கொண்ட பெரியதேர் கடலில் ஓட இயலாது. கடலில் ஓடும் கப்பல் தரையில் ஓட இயலாது. அவரவர் தமக்குரிய இடங்களிலேயே சிறப்பாகச் செயல்பட முடியும்.

அணி : பிறிது மொழிதல் அணி.

8th Std Tamil _23-03-2019.indd 44 08-04-2019 3.26.26 PM

நூல் வெளி

பெருநாவலர், முதற்பாவலர், நாயனார் முதலிய பல சிறப்புப் பெயர்களால் குறிக்கப்படும் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்பர்.

திருக்குறள் உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த நூல் ஆகும். இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது. அறத்துப்பால் பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்னும் நான்கு இயல்களைக் கொண்டது. பொருட்பால் அரசியல், அமைச்சியல் , ஒழிபியல் என்னும் மூன்று இயல்களைக் கொண்டது. இன்பத்துப்பால் களவியல், கற்பியல் என்னும் இரண்டு இயல்களைக் கொண்டது.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. புகழாலும் பழியாலும் அறியப்படுவது _____.
   அ) அடக்கமுடைமை ஆ) நாணுடைமை
   இ) நடுவுநிலைமை ஈ) பொருளுடைமை
2. பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் _____.
   அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர்
   இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்
3. 'வல்லுருவம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.
   அ) வல் + உருவம் ஆ) வன்மை + உருவம்
   இ) வல்ல + உருவம் ஈ) வல்லு + உருவம்
4. நெடுமை + தேர் என்பதனைச் சேர்தெழுதக் கிடைக்கும் சொல் _____.
   அ) நெடுதேர் ஆ) நெடுத்தேர் இ) நெடுந்தேர் ஈ) நெடுமைதேர்
5. 'வருமுன்னர்' எனத் தொடங்கும் குறளில் பயின்று வந்துள்ள அணி _____.
   அ) எடுத்துக்காட்டு உவமை அணி ஆ) தற்குறிப்பேற்ற அணி
   இ) உவமை அணி ஈ) உருவக அணி

குறுவினா

1. சான்றோர்க்கு அழகாவது எது?
2. பழியின்றி வாழும் வழியாக, திருக்குறள் கூறுவது யாது?
3. 'புலித் தோல் போர்த்திய பசு' என்னும் உவமையால் திருக்குறள் விளக்கும் கருத்து யாது?

8th Std Tamil _23-03-2019.indd 45 08-04-2019 3.26.26 PM

திருக்குறளைச் சீர்பிரித்து எழுதுக.

1. தக்கார் தகவிலரெ ன்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்.

2. தொடங்கற்க எவ்வினையு மெள்ளற்க முற்று மிடங்கண்ட பின் அல்லது.

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. வலியில் நிலைமையான் வல்லுருவம் _____

   புலியின்தோல் _____மேய்ந் தற்று.

2. விலங்கொடு _____ அனையர் _____

   கற்றாரோடு ஏனை யவர்.

சீர்களை முறைப்படுத்தி எழுதுக.

யாழ்கோடு அன்ன கொளல் கணைகொடிது

வினைபடு பாலால் செவ்விதுஆங்கு.

படங்களுக்குப் பொருத்தமான திருக்குறள்களை எழுதுக.

1. _____ _____ _____ _____

   _____ _____ _____



2. _____ _____ _____ _____

   _____ _____ _____

8th Std Tamil _23-03-2019.indd 46 08-04-2019 3.26.26 PM

இயல் ஐந்து

திருக்குறள்

ID7SCN

தெரிந்து வினையாடல்

1. *செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு*
   எய்த உணர்ந்து செயல்.
   பொருள் : செயலாற்றும் திறன் உடையவரையும் செய்யவேண்டிய செயலையும் செய்வதற்குரிய காலத்தையும் ஆராய்ந்து அச்செயலை நிறைவேற்ற வேண்டும்.

2. *இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து*
   *அதனை அவன்கண் விடல்.**
   பொருள்: இச்செயலை இந்தவகையால் இவர் செய்துமுடிப்பார் என்று ஆராய்ந்து அச்செயலை அவரிடம் ஒப்படைக்கவேண்டும்.

செங்கோன்மை

3. *ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்*
   தேர்ந்துசெய் வஃதே முறை.
   பொருள்: எதையும் நன்கு ஆராய்ந்து ஒருபக்கம் சாயாது நடுவுநிலையில் நின்று நடத்துவதே சிறந்த ஆட்சியாகும்.

4. *இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை*
   முறைகாக்கும் முட்டாச் செயின்.
   பொருள்: உலகத்து உயிர்களை எல்லாம் அரசர் காப்பாற்றுவார். அவரை அவரது குற்றமற்ற ஆட்சி காப்பாற்றும்.

வெருவந்த செய்யாமை

5. *தக்காங்கு நாடித் தலைசெல்லா வண்ணத்தால்*
   ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.
   பொருள்: ஒருவர் செய்த குற்றத்தை முறையாக ஆராய்ந்து அவர் மீண்டும் குற்றம் செய்யாதவாறு தண்டிப்பது அரசனின் கடமையாகும்.

6. *இறைகடியன் என்றுஉரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்*
   உறைகடுகி ஒல்லைக் கெடும்.
   பொருள்: நம் அரசர் கடுமையானவர் என்று குடிமக்களால் தூற்றப்படும் கொடுஞ்சொல்லை உடைய அரசர், தன் வாழ்நாள் குறைந்து விரைவில் அழிவார்.

8th Std Tamil _23-03-2019.indd 118 08-04-2019 3.26.42 PM

சொல்வன்மை

7. *கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்*
*வேட்ப மொழிவதாம் சொல்.**

பொருள்: கேட்பவரைத் தன்வயப்படுத்துவதும் கேளாதவரைக் கேட்கத் தூண்டுவதும் சிறந்த சொல்லாற்றலின் இயல்பாகும்.

8. *சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை*
*வெல்லும்சொல் இன்மை அறிந்து.**

பொருள்: நாம் சொல்லும் சொல்லை வேறு சொல்லால் வெல்ல இயலாதவாறு சிறந்த சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பேசவேண்டும்.

அவையறிதல்

9. *அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்*
தொகைஅறிந்த தூய்மை யவர்.

பொருள்: சொல்வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் அவையின் தகுதி அறிந்து பேசுதல் வேண்டும்.

10. *கற்றுஅறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்*
சொல்தெரிதல் வல்லார் அகத்து.

பொருள்: சொற்களை ஆராயும் அறிஞர்நிறைந்த அவையில் பேசும்போதுதான் பலநூல்களைக் கற்றவரின் கல்வி பெருமையடையும்.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அரசரை அவரது _____ காப்பாற்றும்.

அ) செங்கோல் ஆ) வெண்கொற்றக்குடை
இ) குற்றமற்ற ஆட்சி ஈ) படை வலிமை

2. சொல்வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் _____ தகுதி அறிந்து பேச வேண்டும்.

அ) சொல்லின் ஆ) அவையின் இ) பொருளின் ஈ) பாடலின்

3. 'கண்ணோடாது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) கண் + ஓடாது ஆ) கண் + ணோடாது
இ) க + ஓடாது ஈ) கண்ணோ + ஆடாது

8th Std Tamil _23-03-2019.indd 119 08-04-2019 3.26.42 PM

4. 'கசடற' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) கச + டற ஆ) கசட + அற இ) கசடு + உற ஈ) கசடு + அற

5. என்று + ஆய்ந்து என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

அ) என்றாய்ந்து ஆ) என்றுஆய்ந்து இ) என்றய்ந்து ஈ) என்ஆய்ந்து

குறுவினா

1. நன்மையைத் தரும் செயலை ஒருவரிடம் ஒப்படைக்கும் வழி யாது?
2. சிறந்த ஆட்சியின் பண்பாகத் திருக்குறள் கூறுவது யாது?
3. அரசன் தண்டிக்கும் முறை யாது?
4. சிறந்த சொல்லாற்றலின் இயல்பு என்ன?

பின்வரும் நிகழ்வுக்குப் பொருத்தமான திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.

பள்ளி ஆண்டுவிழா ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதில் கலைக்குழுத் தலைவராக யாரைத் தேர்ந்தெடுப்பது என்று பேசப்பட்டது. ஆசிரியர்கள் பள்ளி மாணவர் தலைவன் செழியனை பரிந்துரைத்தனர். தலைமை ஆசிரியர் 'செழியன் மாணவர் தலைவனாக இருக்கிறான். ஆனால் இது கலைக்குழுவிற்கான தலைவர் பதவி. நடனம், இசை, நாடகம் என அனைத்துத் துறைகளிலும் ஆர்வமுள்ள ஒருவரே இதற்குத் தகுதியானவர். எனவே என்னுடைய தேர்வு கலையரசன்' என்று நன்கு ஆராய்ந்து கூறினார். ஆசிரியர்கள் அனைவரும் 'சிறந்த தேர்வு' என்று மகிழ்ந்தனர்.

1. அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர்.

2. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.

3. ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை..

8th Std Tamil _23-03-2019.indd 120 08-04-2019 3.26.42 PM

இயல் எட்டு

திருக்குறள்

FTKF81

படைச்செருக்கு

1. *கான முயல்எய்த அம்பினில் யானை*
   *பிழைத்தவேல் ஏந்தல் இனிது.**

   பொருள்: காட்டுமுயலை வீழ்த்திய அம்பினை ஏந்துவதைவிட யானைக்குக் குறிவைத்துத் தவறிய வேலை ஏந்துவது பெருமை தரும். (பெரிய முயற்சியே பெருமை தரும்.)

   அணி : பிறிதுமொழிதல் அணி

2. *பேராண்மை என்ப தறுகண்ஒன்று உற்றக்கால்*
   ஊராண்மை மற்றுஅதன் எஃகு.

   பொருள்: பகைவரை எதிர்த்து நிற்கும் வீரத்தை ஆண்மை என்று கூறுவர். பகைவருக்கும் துன்பம் வரும்போது, உதவி செய்தலை அந்த ஆண்மையின் கூர்மை என்று கூறுவர்.

நட்பு

3. *நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்*
   *பண்புடை யாளர் தொடர்பு.**

   பொருள்: நல்ல நூல்கள் படிக்கப் படிக்க இன்பம் தருவதுபோலப் பண்புடையவர் நட்பு பழகப் பழக இன்பம் தரும்.

   அணி : உவமைஅணி

4. *நகுதல் பொருட்டுஅன்று நட்டல் மிகுதிக்கண்*
   மேற்சென்று இடித்தல் பொருட்டு.

   பொருள்: நட்பு, சிரித்துப் பேசி மகிழ்வதற்கு மட்டும் உரியது அன்று; நண்பர் தவறு செய்தால் அவரைக் கண்டித்துத் திருத்துவதற்கும் உரியது.

நட்பு ஆராய்தல்

5. *ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை*
   தான்சாம் துயரம் தரும்.

   பொருள்: மீண்டும் மீண்டும் ஆராய்ந்து பாராமல் ஒருவனுடன் கொண்ட நட்பு தாம் சாகும் அளவுக்குத் துன்பம் தரும்.

8th Std Tamil _23-03-2019.indd 188 08-04-2019 3.26.56 PM

6. *கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை*
நீட்டி அளப்பதோர் கோல்.

பொருள்: நமக்கு வரும் துன்பத்தினாலும் ஒரு நன்மை உண்டு. அத்துன்பமே நமது நண்பர்களின் உண்மையான இயல்பை அளந்துகாட்டும் அளவுகோலாகும்.

மானம்

7. *பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய*
சுருக்கத்து வேண்டும் உயர்வு.

பொருள்: செல்வம் மிகுந்த காலத்தில் பணிவுடன் நடந்துகொள்ள வேண்டும். வறுமை வந்த காலத்தில் ஊக்கம் குறையாமல் பெருமித உணர்வுடன் வாழவேண்டும்.

8. *குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ*
குன்றி அனைய செயின்.

பொருள்: மலையளவு பெருமை உடையவராக இருந்தாலும் குன்றிமணியளவு தவறு செய்தால் அவரது பெருமை அழிந்துவிடும்.

பண்புடைமை

9. *பண்புடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்*
*மண்புக்கு மாய்வது மன்.**

பொருள்: பண்பு உடைய சான்றோரின் வழியில் நடப்பதால்தான் இவ்வுலகம் இன்னும் இயங்குகிறது; இல்லாவிட்டால் மண்ணுக்குள் புதைந்து அழிந்திருக்கும்.

10. *பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்*
கலம்தீமை யால்திரிந்து அற்று.

பொருள்: தூய்மையற்ற பாத்திரத்தில் வைக்கப்படும் பால் திரிந்துவிடும். அதுபோல நற்பண்பு இல்லாதவன் பெற்ற பெருஞ்செல்வமும் யாருக்கும் பயனின்றி அழியும்.

அணி : உவமையணி

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஆண்மையின் கூர்மை _____.
அ) வறியவருக்கு உதவுதல் ஆ) பகைவருக்கு உதவுதல்
இ) நண்பனுக்கு உதவுதல் ஈ) உறவினருக்கு உதவுதல்

2. வறுமை வந்த காலத்தில் _____ குறையாமல் வாழ வேண்டும்.
அ) இன்பம் ஆ) தூக்கம் இ) ஊக்கம் ஈ) ஏக்கம்

8th Std Tamil _23-03-2019.indd 189 08-04-2019 3.26.56 PM

3. 'பெருஞ்செல்வம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) பெரிய + செல்வம் ஆ) பெருஞ் + செல்வம்

இ) பெரு + செல்வம் ஈ) பெருமை + செல்வம்

4. 'ஊராண்மை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) ஊர் + ஆண்மை ஆ) ஊராண் + மை

இ) ஊ + ஆண்மை ஈ) ஊரு + ஆண்மை

5. திரிந்து + அற்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

அ) திரிந்ததுஅற்று ஆ) திரிந்தற்று இ) திரிந்துற்று ஈ) திரிவுற்று

பொருத்துக.

1. இன்பம் தருவது – நற்பண்பில்லாதவன் பெற்ற பெருஞ்செல்வம்
2. நட்பு என்பது – குன்றிமணியளவு தவறு
3. பெருமையை அழிப்பது – செல்வம் மிகுந்த காலம்
4. பணிவு கொள்ளும் காலம் – சிரித்து மகிழ மட்டுமன்று
5. பயனின்றி அழிவது – பண்புடையவர் நட்பு

குறுவினா

1. எது பெருமையைத் தரும்?
2. நண்பர்களின் இயல்பை அளந்துகாட்டும் அளவுகோல் எது?
3. இவ்வுலகம் யாரால் இயங்குவதாகத் திருக்குறள் கூறுகிறது?
4. நட்பு எதற்கு உரியது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?

படத்திற்குப் பொருத்தமான திருக்குறளை எழுதுக.

1. _____ _____ _____ _____

_____ _____ _____

8th Std Tamil _23-03-2019.indd 190 08-04-2019 3.26.56 PM

இயல் மூன்று

திருக்குறள்



பொறையுடைமை

1) *அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை*
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

தன்னைத் தோண்டுபவரைத் தாங்கும் நிலம் போலத் தன்னை இகழ்பவரைப் பொறுப்பது தலைசிறந்தது.

அணி – உவமையணி

2) *திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து*
அறனல்ல செய்யாமை நன்று.

பிறர் தனக்குத் தரக்கூடாத துன்பத்தைத் தந்தாலும் மனம் நொந்து அறம் அல்லாத செயல்களைச் செய்யாமை சிறப்புக்குரியது.

9th_Tamil_Pages 001-121.indd 87 23-03-2018 17:59:05

3) *மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்*
*தகுதியான் வென்று விடல்.**

செருக்கினால் துன்பம் தந்தவரை நம்முடைய பொறுமையால் வெல்ல வேண்டும்.

தீவினை அச்சம்

4) *தீயவை தீய பயத்தலால் தீயவை*
தீயினும் அஞ்சப் படும்.

தீயவை தீயவற்றையே தருதலால்
தீயைவிடக் கொடியதாகக் கருதி அவற்றைச் செய்ய அஞ்சவேண்டும்.

5) *மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்*
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.

மறந்தும்கூடப் பிறருக்குக் கெடுதல் செய்ய நினைக்கக் கூடாது.
நினைத்தால், நினைத்தவருக்குக் கெடுதல் செய்ய அறம் நினைக்கும்.

கேள்வி

6) *செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்*
செல்வத்துள் எல்லாந் தலை.

செல்வத்தில் சிறந்தது செவியால் கேட்டறியும் கேள்விச்செல்வம்.
அது பிற வழிகளில் வரும் செல்வங்களைவிடத் தலைசிறந்தது.
அணி – சொற்பொருள் பின்வருநிலையணி

7) *எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்*
*ஆன்ற பெருமை தரும். **

எவ்வளவு சிறிதானாலும் நல்லவற்றைக் கேட்டால்,
கேட்ட அளவுக்குப் பெருமை உண்டாகும்.

8) *நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய*
வாயினர் ஆதல் அரிது.

நுட்பமான கேள்வியறிவு இல்லாதவர்
அடக்கமான சொற்களைப் பேசுவது அரிது.

9) *செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்*
அவியினும் வாழினும் என்.

கேட்பதன் சுவையை உணராமல் நாவின் சுவை மட்டும் உணர்பவர்
இறந்தால்தான் என்ன! இருந்தால்தான் என்ன!

9th_Tamil_Pages 001-121.indd 88 23-03-2018 17:59:05

தெரிந்துதெளிதல்

10) *குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்*
மிகைநாடி மிக்க கொளல்.

ஒருவரின் குணத்தையும் குற்றத்தையும் ஆராய்ந்து,
அவற்றுள் மிகுதியானதைக் கொண்டு அவரைப்பற்றி முடிவு செய்க.
அணி – சொற்பொருள் பின்வருநிலையணி

11) *பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்*
கருமமே கட்டளைக் கல்.

ஒருவரின் பெருமைக்கும் சிறுமைக்கும்
அவரது செயல்பாடுகளே ஆராய்ந்து அறியும் உரைகல் ஆகும்.
அணி – ஏகதேச உருவக அணி

12) *தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்*
தீரா இடும்பை தரும்.

ஆராயாமல் ஒருவரைத் தேர்வு செய்வதும் அவ்வாறு தேர்வு செய்தபின்
அவரைப்பற்றி ஐயப்படுதலும் தீராத துன்பம் தரும்.

ஒற்றாடல்

13) *ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்*
ஒற்றினால் ஒற்றிக் கொளல்.

ஒற்றர் ஒருவர் சொன்ன செய்தியை மற்றோர் ஒற்றரால் அறிந்து முடிவு செய்க!

வினைத்தூய்மை

14) *ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை*
*ஆஅதும் என்னு மவர்.**

வாழ்வில் உயர நினைப்பவர் புகழைக் கெடுக்கும் செயல்களைப் புறம் தள்ளவேண்டும்.

15) *ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க*
சான்றோர் பழிக்கும் வினை.

தாயின் பசியைக் கண்டபோதும் சான்றோர் பழிக்கும் செயல்களைச் செய்யாதே.

16) *சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்*
கலத்துநீர் பெய்திரீஇ யற்று.

தீய செயலால் பொருள் சேர்த்துப் பாதுகாத்தல் சுடாத மண்கலத்தில் நீரூற்றி வைப்பதைப் போன்றது.
அணி – உவமையணி

9th_Tamil_Pages 001-121.indd 89 23-03-2018 17:59:05

பழைமை

17) *விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்*
கேளாது நட்டார் செயின்.

நட்பின் உரிமையில் தம்மைக் கேட்காமலேயே ஒரு செயலைச் செய்தாலும் நட்பு பாராட்டுவோர் விருப்பத்தோடு அச்செயலுக்கு உடன்படுவர்.

தீ நட்பு

18) *கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு*
சொல்வேறு பட்டார் தொடர்பு.

செயல் வேறு, சொல் வேறு என்று உள்ளவர் நட்பு கனவிலும் இனிமை தராது.

பேதைமை

19) *நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்*
பேணாமை பேதை தொழில்.

தகாத செயலுக்கு வெட்கப்படாமை, தக்கவற்றை நாடாமை, பிறரிடம் அன்பு இல்லாமை, ஏதொன்றையும் பாதுகாக்காமை முதலியவை பேதையின் செயல்கள்.

20) *ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்*
பேதையின் பேதையார் இல்.

படித்தும் படித்ததை உணர்ந்தும் உணர்ந்ததை மற்றவருக்குக் கூறியும் தான் அதன்படி செயல்படாத பேதையைப் போலப் பேதை யாருமில்லை!

நூல் வெளி

உலகப் பண்பாட்டிற்குத் தமிழினத்தின் பங்களிப்பாக அமைந்த நூல், திருக்குறள். இனம், சாதி, நாடு குறித்த எவ்வித அடையாளத்தையும் முன்னிலைப்படுத்தாத உலகப் பொதுமறை இந்நூல். இது முப்பால், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, தெய்வநூல், தமிழ்மறை, முதுமொழி, பொருளுறை போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர் ஆகிய பதின்மரால் திருக்குறளுக்கு முற்காலத்தில் உரை எழுதப்பட்டுள்ளது. இவ்வுரைகளுள் பரிமேலழகர் உரையே சிறந்தது என்பர். இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலைப் போற்றும் பாடல்களின் தொகுப்பே திருவள்ளுவ மாலை.

உலகின் பல மொழிகளிலும் பன்முறை மொழிபெயர்க்கப்பட்டதுடன், இந்திய மொழிகளிலும் தன் ஆற்றல் மிக்க அறக் கருத்துகளால் இடம் பெற்றது திருக்குறள். தமிழில் எழுதப்பட்ட உலகப் பனுவல் இந்நூல்.

பிற அறநூல்களைப் போல் அல்லாமல் பொது அறம் பேணும் திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவருக்கு நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப் புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் போன்ற சிறப்புப் பெயர்கள் உண்டு.

9th_Tamil_Pages 001-121.indd 90 23-03-2018 17:59:05

கற்பவை கற்றபின்...

1. படத்திற்கேற்ற குறளைத் தேர்வு செய்க.

.....

.....

.....

.....

.....

அ) நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

ஆ) விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்.

இ) செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை.

2. பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.

பாடல்

ஆண்டில் இளையவனென்று அந்தோ அகந்தையினால்
ஈண்டிங்கு இகழ்ந்தென்னை ஏளனம்செய் – மாண்பற்ற
காரிருள்போல் உள்ளத்தான் காந்திமதி நாதனைப்
பாரதி சின்னப் பயல்.

குறள்

அ) செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.

ஆ) மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

இ) குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

9th_Tamil_Pages 001-121.indd 91 23-03-2018 17:59:05

3. பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடித்துப் பொருத்துக.

பசுமண் கலத்துநீர் பெய்திரீஇ யற்று	ஒருவனின் செயல்பாடுகளே உரசி அறியும் உரைகல்
தத்தம் கருமமே கட்டளைக்கல்	அவ்வளவிற்குப் பெருமை உண்டாக்கும்
அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்	சுடாத மண்கலத்தில் நீரூற்றி வைப்பதைப் போல

4. தீரா இடும்பை தருவது எது?

அ. ஆராயாமை, ஐயப்படுதல்

ஆ. குணம், குற்றம்

இ. பெருமை, சிறுமை

ஈ. நாடாமை, பேணாமை

5. சொல்லுக்கான பொருளைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ. நுணங்கிய கேள்வியர் – நுட்பமான கேள்வியறிவு உடையவர்

ஆ. பேணாமை – பாதுகாக்காமை

இ. செவிச் செல்வம் – கேட்பதால் பெறும் அறிவு

ஈ. அறனல்ல செய்யாமை – அறம் அல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல்

குறுவினா

1. நிலம் போல யாரிடம் பொறுமை காக்கவேண்டும்?

2. தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

இக்குறட்பாவின் கருத்தை விளக்குக.

3. ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்.

இக்குறட்பாவில் அமைந்துள்ள நயங்களை எழுதுக.

4. கனவிலும் இனிக்காதது எவர் நட்பு?

9th_Tamil_Pages 001-121.indd 92 23-03-2018 17:59:05

கதைக்குப் பொருத்தமான குறளைத் தேர்வு செய்து காரணத்தை எழுதுக.

மௌனவிரதம் என்னும் தலைப்பில் நான்கு நண்பர்கள் ஒரு சொற்பொழிவைக் கேட்டனர். தாங்களும் ஒரு வாரத்துக்கு மௌனவிரதம் இருப்பதாகத் தீர்மானம் செய்தனர். மௌனவிரதம் ஆரம்பமாகி விட்டது! கொஞ்ச நேரம் போனதும் ஒருவன் சொன்னான், "எங்கள் வீட்டு அடுப்பை அணைத்துவிட்டேனா தெரியவில்லையே!"

பக்கத்திலிருந்தவன் "அடப்பாவி! பேசிட்டியே!" என்றான்.

உடனே மூன்றாவது ஆள், "நீ மட்டும் என்ன? நீயும்தான் பேசிவிட்டாய்!" என்றான்.

நான்காவது ஆள், "நல்லவேளை! நான் மட்டும் பேசவில்லை!" என்றான்.

இப்படியாக அவர்களின் மௌனவிரதம் முடிந்துபோனது.

1. *மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்*
   அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.

2. *திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து*
   அறனல்ல செய்யாமை நன்று.

3. *ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்*
   பேதையின் பேதையார் இல்.

திருக்குறள் பற்றிய சில ஆராய்ச்சிச் செய்திகள்

திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு–1812

திருக்குறள் அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடிகிறது.

திருக்குறளில் இடம்பெறும் இருமலர்கள்–அனிச்சம், குவளை

திருக்குறளில் இடம்பெறும் ஒரே பழம்– நெருஞ்சிப்பழம்

திருக்குறளில் இடம்பெறும் ஒரே விதை– குன்றிமணி

திருக்குறளில் இருமுறை வரும் ஒரே அதிகாரம்– குறிப்பறிதல்

திருக்குறளில் இடம்பெற்ற இரண்டு மரங்கள்– பனை, மூங்கில்

திருக்குறள் மூலத்தை முதன் முதலில் அச்சிட்டவர்– தஞ்சை ஞானப்பிரகாசர்

திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர்–மணக்குடவர்

திருக்குறளில் கோடி என்ற சொல் ஏழு இடங்களில் இடம்பெற்றுள்ளது.

ஏழு என்ற சொல் எட்டுக் குறட்பாக்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.

திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்– ஜி.யு. போப்

திருக்குறள் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் வெளிவந்துள்ளது.

9th_Tamil_Pages 001-121.indd 93 23-03-2018 17:59:05

இயல் ஆறு

திருக்குறள்

புல்லறிவாண்மை

1) *ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்*
போஒம் அளவும்ஓர் நோய்.

சொன்னாலும் செய்யாமல், தானாகவும் செய்யாமல்
இருப்பவன் உயிர், சாகும்வரை உள்ள நோய்!

2) *காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்*
கண்டானாம் தான்கண்ட வாறு.

அறிவில்லாதவனுக்கு அறிவுரை சொல்பவன் அறிவில்லாதவனாக மாறிவிடுவான்!
அறிவில்லாதவன் அவனுக்குத் தெரிந்த அளவில் அறிவுடையவனாகத் தோன்றுவான்!

இகல்

3) *இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்*
துன்பத்துள் துன்பங் கெடின்.

துன்பத்தில் மனக்கசப்பு என்னும் மோசமான துன்பம் மறைந்தால்,
இன்பத்தில் சிறந்த இன்பம் பெறலாம் .

9th_Tamil_Pages 122-277.indd 177 23-03-2018 18:00:06

குடிமை

4) *அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்*
*குன்றுவ செய்தல் இலர்.**

கோடிப் பொருள் அடுக்கிக் கொடுத்தாலும்,
ஒழுக்கமான குடியில் பிறந்தவர், தவறு செய்வதில்லை.

சான்றாண்மை

5) *அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)*
*ஐந்துசால்பு ஊன்றிய தூண்.**

பிறரிடம் அன்பும் பழிக்கு நாணுதலும் அனைவரிடமும் இணக்கமும்
இரக்கமும் உண்மையும் சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள்!
அணி – ஏகதேச உருவக அணி

6) *ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்*
மாற்றாரை மாற்றும் படை.

செயல் செய்பவரின் ஆற்றல், பணிவுடன் நடத்தல். அதுவே
சான்றோர்க்குப் பகைவரையும் நட்பாக்கும் கருவி.

7) *ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)*
ஆழி எனப்படு வார்.

ஊழிக்காலம் வந்தாலும் சான்றாண்மை என்னும் கடலுக்குக்
கரை போன்றவர் மாறமாட்டார்!
அணி – ஏகதேச உருவக அணி

நாணுடைமை

8) *பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்*
*அறம்நாணத் தக்கது உடைத்து.**

பிறர் வெட்கப்படும் பழிக்குக் காரணமாய் இருந்தும் தான் வெட்கப்படவில்லை என்றால், அறம் வெட்கப்பட்டு அவனை விட்டு விலகிப்போகும்.

உழவு

9) *சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை.**

பல தொழில்களால் இயங்கினாலும் உலகம் ஏருக்குப் பின்னாலேயே போகும்!
அதனால் வருந்தி உழைத்தாலும் உழவுத் தொழிலே சிறந்தது.

10) *உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது*
எழுவாரை எல்லாம் பொறுத்து.

மற்ற தொழில் செய்பவரையும் உழுபவரே தாங்கி நிற்பதால் அவரே உலகத்துக்கு அச்சாணி ஆவர்.
அணி – ஏகதேச உருவக அணி

9th_Tamil_Pages 122-277.indd 178 23-03-2018 18:00:06

கற்பவை கற்றபின்...

KHDNB4

1. படத்திற்கு ஏற்ற குறளைத் தேர்வு செய்க

அ. இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின்.

ஆ. ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய்.

இ. சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

2. பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடித்துப் பொருத்துக.

கண்டானாம் தான்கண்ட வாறு	பகைவரையும் நட்பாக்கும் கருவி
அறம்நாணத் தக்கது உடைத்து.	தெரிந்த அளவில் அறிவுடையவனாகத் தோன்றுவான்
மாற்றாரை மாற்றும் படை	அறம் வெட்கப்பட்டு அவனை விட்டு விலகிப்போகும்

3. ஐந்து சால்புகளில் இரண்டு

அ) வானமும் நாணமும் ஆ) நாணமும் இணக்கமும்

இ) இணக்கமும் சுணக்கமும் ஈ) இணக்கமும் பிணக்கமும்

4. கோடிட்ட இடங்களுக்கான விடையைக் கட்டத்துள் கண்டறிந்து வட்டமிடுக.

ஒ	ப்	பு	று
க	ப	ர	வ
ட	டை	வு	த
ல்	உ	ழ	வ
ம்	ற	அ	ர்

அ. அனைவரிடமும் இணக்கம் என்பதன் பொருள் ……

ஆ. உலகத்துக்கு அச்சாணி போன்றவர் ……

இ. தான் நாணான் ஆயின் …… நாணத் தக்கது.

ஈ. ஆழி என்பதன் பொருள்……

உ. மாற்றாரை மாற்றும் ……

ஊ. ஒழுக்கமான குடியில் பிறந்தவர் …… செய்வதில்லை.

5. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

இக்குறளின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு பக்கக்கதை ஒன்றை எழுதுக.

9th_Tamil_Pages 122-277.indd 179 23-03-2018 18:00:06

வாழ்வியல் இலக்கியம்

பண்பாடு

ந

திருக்குறள்

BH56RP

ஒழுக்கமுடைமை (14)

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

பொருள்: ஒழுக்கம் எல்லார்க்கும் சிறப்பைத் தருவதால் அவ்வொழுக்கத்தை உயிரினும் மேலானதாகப் பேணிக் காக்க வேண்டும்.

2. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை: இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

பொருள்: ஒழுக்கமாக வாழும் எல்லாரும் மேன்மை அடைவர். ஒழுக்கம் தவறுபவர் அடையக்கூடாத பழிகளை அடைவர்.

3. உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

பொருள்: உலகத்தோடு ஒத்து வாழக் கல்லாதார், பல நூல்களைக் கற்றாராயினும் அறிவு இல்லாதவரே (எனக் கருதப்படுவார்).

மெய் உணர்தல் (36)

4. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. *

பொருள்: எந்தப் பொருள் எந்த இயல்பினதாகத் தோன்றினாலும் அந்தப் பொருளின் உண்மைப் பொருளைக் காண்பதே அறிவாகும்.

5. காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.

பொருள்: ஆசை, சினம், அறியாமை என்ற மூன்றும் அழிந்தால் அவற்றால் வரும் துன்பமும் அழியும்.

பெரியாரைத் துணைக்கோடல் (45)

6. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

பொருள்: கிடைத்தற்கரிய பேறுகளுள் எல்லாம் பெரும்பேறு பெரியோரைப் போற்றித் துணையாக்கிக் கொள்ளுதல் ஆகும்.

10th_Tamil_Pages_Unit-3.indd 70 22-02-2019 13:40:14

7. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.

பொருள்: குற்றங் கண்டபொழுது இடித்துக் கூறும் பெரியாரைத் துணைக்கொள்ளாத பாதுகாப்பற்ற மன்னன், பகைவர் இன்றியும் தானே கெடுவான்.

8. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். *

பொருள்: தானொருவனாக நின்று பலரோடு பகைமேற்கொள்வதைக் காட்டிலும் பல மடங்கு தீமையைத் தருவது நற்பண்புடையோரின் நட்பைக் கைவிடுதலாகும்.

கொடுங்கோன்மை (56)

9. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு

பொருள்: ஆட்சியதிகாரத்தைக் கொண்டுள்ள அரசன் தன் அதிகாரத்தைக் கொண்டு வரிவிதிப்பது, வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வதற்கு நிகரானதாகும்.

அணி: உவமையணி

10. நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்

பொருள்: தன் நாட்டில் நிகழும் நன்மை தீமைகளை ஒவ்வொரு நாளும் ஆராய்ந்து ஆட்சி செய்யாத மன்னவன், தன் நாட்டை நாள்தோறும் இழக்க நேரிடுவான்.

கண்ணோட்டம் (58)

11. பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண். *

பொருள்: பாடலோடு பொருந்தவில்லையெனில் இசையால் என்ன பயன்? அது போலவே இரக்கம் இல்லாவிட்டால் கண்களால் என்ன பயன்?

அணி: எடுத்துக்காட்டு உவமையணி

12. கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்
குரிமை உடைத்திவ் வுலகு.

பொருள்: நடுநிலையாகக் கடமை தவறாமல் இரக்கம் காட்டுபவருக்கு இவ்வுலகமே உரிமை உடையதாகும்.

13. பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

பொருள்: விரும்பத் தகுந்த இரக்க இயல்பைக் கொண்டவர்கள், பிறர் நன்மை கருதித் தமக்கு நஞ்சைக் கொடுத்தாலும் அதனை உண்ணும் பண்பாளர் ஆவார்.

10th_Tamil_Pages_Unit-3.indd 71 22-02-2019 13:40:17

ஆள்வினை உடைமை (62)

14. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். *

பொருள்: ஒரு செயல் முடிப்பதற்கு இயலாதது என்று எண்ணிச் சோர்வு அடையாதிருக்க வேண்டும். அச்செயலை முயற்சியுடன் முடிப்பது பெருமை தரும்.

15. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு.

பொருள்: விடாமுயற்சி என்ற உயர்பண்பு கொண்டவர்களால்தான் பிறருக்கு உதவுதல் என்ற உயர்ந்த நிலையை அடைய முடியும்.

16. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். *

பொருள்: முயற்சி செய்தால் ஒருவர்க்குச் செல்வம் பெருகும். முயற்சி இல்லாவிட்டால் அவருக்கு வறுமையே வந்து சேரும்.

17. பொறிஇன்மை யார்க்கும் பழிஅன் றறிவறிந்
தாள்வினை இன்மை பழி.

பொருள்: ஐம்புலன்களில் ஏதேனும் குறையிருப்பினும் அது இழிவன்று. அறிய வேண்டியதை அறிந்து முயற்சி செய்யாததே இழிவாகும்.

18. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

பொருள்: சோர்விலாது முயற்சி செய்வோர் செய்கின்ற செயலுக்கு இடையூறாக வரும் முன்வினையையும் தோற்கடித்து வெற்றியடைவர்.

நன்றிஇல் செல்வம் (101)

19. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய
கோடிஉண் டாயினும் இல்.

பொருள்: பிறருக்குக் கொடுக்காமலும் தானும் அனுபவிக்காமலும் இருப்பவர் அடுக்கடுக்காய்ப் பல கோடிப் பொருள்கள் பெற்றிருந்தாலும் அதனால் பயன் இல்லை.

20. நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று.

பொருள்: பிறருக்கு உதவி செய்யாததால் ஒருவராலும் விரும்பப்படாதவர் பெற்ற செல்வம், ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றதாகும்.

அணி: உவமையணி

10th_Tamil_Pages_Unit-3.indd 72 22-02-2019 13:40:19

குறுவினா

1. 'நச்சப் படாதவன்' செல்வம் – இத்தொடரில் வண்ணமிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.

2. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல் – இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.

3. பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துக.

உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும்.	ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை
ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது.	உயிரினும் ஓம்பப் படும்
ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர்.	நடு ஊருள் நச்சு மரம் பழுத்தற்று

4. எய்துவர் எய்தாப் பழி – இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?

அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்

இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு

சிறுவினா

1. வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு – குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.

2. கவிதையைத் தொடர்க.

தண்ணீர் நிறைந்த குளம்
தவித்தபடி வெளிநீட்டும் கை
கரையில் கைபேசி படமெடுத்தபடி
.....
.....
.....
. . .

திருக்குறள் பற்றிய கவிதை:

உரை(றை) ஊற்றி ஊற்றிப்
பார்த்தாலும்
புளிக்காத பால்!
தந்தை தந்த
தாய்ப்பால்
முப்பால்!

– அறிவுமதி

10th_Tamil_Pages_Unit-3.indd 74 22-02-2019 13:40:20

வாழ்வியல் இலக்கியம்

கலை

சூ

திருக்குறள்

L9DMBL

அமைச்சு (64)

1. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு.

பொருள்: தொழில் செய்வதற்குத் தேவையான கருவி, அதற்கு ஏற்ற காலம், செயலின் தன்மை, செய்யும் முறை ஆகியவற்றை அறிந்து அரிய செயலைச் செய்பவரே அமைச்சர் ஆவார்.

2. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு.

பொருள்: மனவலிமை, குடிகளைக் காத்தல், ஆட்சி முறைகளைக் கற்றல் , நூல்களைக் கற்றல், விடாமுயற்சி ஆகிய ஐந்தும் சிறப்பாக அமைந்தவரே அமைச்சராவார்.

3. மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை.

பொருள்: இயற்கையான நுண்ணறிவும் நூலறிவும் உடைய அமைச்சர்களுக்கு முன், எந்த நுட்பமான சூழ்ச்சிகள் நிற்க முடியும்? (எந்த சூழ்ச்சியும் நிற்க இயலாது).

4. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல். *

பொருள்: ஒரு செயலைச் செய்வதற்குரிய முறைகளை நூல்வழியாக அறிந்திருப்பினும், உலகியல் நடைமுறைகளை அறிந்து செயல்பட வேண்டும்.

பொருள்செயல் வகை (76)

5. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். *

பொருள்: ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிப்புடையவராகச் செய்வது செல்வம். அஃது அல்லாமல் உலகில் சிறந்த பொருள் வேறு இல்லை.

அணி: சொற்பொருள்பின்வருநிலை அணி

6. அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

பொருள்: முறையறிந்து தீமையற்ற வழியில் சேர்த்த பொருள் ஒருவருக்கு அறத்தையும் தரும்; இன்பத்தையும் தரும்.

7. அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.

பொருள்: மற்றவர்களிடம் இரக்கமும் அன்பும் இல்லாமல் ஈட்டும் பொருளை ஏற்றுக்கொள்ளாமல் நீக்கிவிடவேண்டும்.

10th_Tamil_Unit 6.indd 154 22-02-2019 13:44:20

8. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை. *

பொருள்: தன் கைப்பொருளைக் கொண்டு ஒருவர் ஒரு செயலைச் செய்வது, மலைமேல் பாதுகாப்பாக நின்றுகொண்டு யானைப்போரைக் காண்பது போன்றது.

அணி: உவமை அணி

9. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்.

பொருள்: ஒருவர் பொருளை ஈட்ட வேண்டும்; அவருடைய பகைவரை வெல்லும் கூர்மையான ஆயுதம் அதைவிட வேறு இல்லை.

கூடாநட்பு (83)

10. தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து.

பொருள்: பகைவரின் தொழுது நிற்கும் கையின் உள்ளும், கொலைக்கருவி மறைந்து இருக்கும். அது போல் அவர்அழுத கண்ணீரின் உள்ளும் வஞ்சகம் மறைந்து இருக்கும் என்பதை உணர வேண்டும்.

பகை மாட்சி (87)

11. அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு.

பொருள்: சுற்றத்தாரிடம் ஒருவர் அன்பு இல்லாமலும் பொருந்திய துணை இல்லாமலும், வலிமையில்லாமலும் இருந்தால் அவர் எப்படிப் பகைவரின் வலிமையை எதிர்கொள்வார்?

12. அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு.

பொருள்: மனத்தில் துணிவு இல்லாதவராய், அறிய வேண்டியவற்றை அறியாதவராய், பொருந்தும் பண்பு இல்லாதவராய், பிறர்க்குக் கொடுத்து உதவாதவராய் இருந்தால் எளிதில் பகைக்கு ஆட்பட நேரும்.

குடிசெயல் வகை (103)

13. ஆள்வினையும் ஆன்ற அறிவு மெனவிரண்டின்
நீள்வினையால் நீளும் குடி.

பொருள்: விடா முயற்சி, சிறந்த அறிவாற்றல் இவ்விரண்டையும் இடைவிடாமல் பின்பற்றுபவரின் குடி உயர்ந்து விளங்கும்.

14. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. *

பொருள்: குற்றம் இல்லாமல் தன் குடிப்பெருமையை உயரச்செய்து வாழ்பவரை உலகத்தார் உறவாகக் கொண்டு போற்றுவர்.

10th_Tamil_Unit 6.indd 155 22-02-2019 13:44:22

நல்குரவு (105)

15. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது. *

பொருள்: ஒருவருக்கு வறுமையைப் போன்று துன்பம் தருவது எது என்றால் அது வறுமையே ஆகும்.

அணி: சொற்பொருள்பின்வருநிலை அணி

இரவு (106)

16. கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும்.

பொருள்: தம்மிடமுள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தராத நல்லாரைக் காணின் வறுமையின் கொடுமை முழுதும் கெடும்.

17. இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்ப துடைத்து.

பொருள்: இகழ்ந்து ஏளனம் செய்யாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால், இரப்பவரின் உள்ளத்தின் உள்ளே மகிழ்ச்சி பொங்கும்.

கயமை (108)

18. மக்களே போல்வர் கயவர்; அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில்.

பொருள்: கயவர் மக்களைப் போலவே இருப்பர்; கயவர்க்கும் மக்களுக்கும் உள்ள தோற்ற ஒப்புமையை வேறெதிலும் நாம் கண்டதில்லை.

அணி: உவமையணி

19. தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்.

பொருள்: தேவரும் கயவரும் ஒரு தன்மையர்; எவ்வாறு எனில் தேவர்களைப் போலக் கயவர்களும் தாம் விரும்புவனவற்றைச் செய்து ஒழுகுவர்.

அணி: வஞ்சப் புகழ்ச்சி அணி

20. சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்.

பொருள்: ஒருவர் தம் குறையைச் சொல்வதைக் கேட்டவுடனேயே உதவிசெய்வர் சான்றோர்; கரும்பைப் பிழிவது போல நெருக்கிப் பிழிந்தால்தான் பயன்படுவர் கயவர்.

அணி: உவமை அணி

10th_Tamil_Unit 6.indd 156 22-02-2019 13:44:25

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

கற்பவை கற்றபின்...

1. புதுக்கவிதையையும் குறளையும் ஒப்பிட்டுப் பேசுக.

புதுக்கவிதை

தக்காளியையும் வெண்டைக்காயையும்
தள்ளுவண்டிக்காரர் தராசில் நிறுக்கையில்,
தள்ளி நிற்கும் பிள்ளை
அவசியமாகக் கேட்கும் ஆயிரம் ரூபாயை
எப்படிக் கொடுக்க என்றே அவர் மனம் யோசிக்கும்....
"அத்தனைக் காய்களையும் விற்றால்தான்
மீதி ஐந்நூறாவது மிஞ்சும்; என்ன செய்ய..."
காய்கறி வாங்கியவர்
கவனக் குறைவாகக் கொடுத்த
இரண்டாயிரம் ரூபாயைக்
கூப்பிட்டுத் தந்துவிட்டுப்
பிள்ளைக்கு உதவ யாரிடம் கேட்கலாம்
என்பதை அடுத்தபடி யோசிக்கும் அவர் மனம்!

குறள்

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.

2. குறிப்புகள் உணர்த்தும் குறளின் கருத்துகள் குறித்துக் கலந்துரையாடுக.

அ) அவருக்கு அறிவும் அதிகம்; படிப்பும் அதிகம். யாராலும் அவருக்கெதிராகச் செயல்படமுடியாது.

ஆ) எச்சரிக்கையாக இரு. பழகுபவர்களில் யார் நல்லவர், யார் கெட்டவர் என்று கண்டுபிடிப்பது கடினம்.

இ) அவர் குடும்பம் முன்னேறியிருப்பதற்குக் காரணம் தொடர்ந்து முயல்வதும் தொழிலில் அவருக்கிருந்த அறிவும்.

ஈ) வாழ்க்கையில் நன்றாகப் பொருளீட்டு. அதுதான் உன்னைத் தாழ்வாக நினைத்தவர்களின் வாயை அடைக்கும்.

உ) அக்கம்பக்கத்தாரிடம் பழகாமல் ஒதுங்கியே இருந்தார்; துணைக்கும் யாரும் இல்லை. இப்போது உடம்பு சரியில்லாதபோது யாருமின்றித் திண்டாடுகிறார்.

குறுவினா

1. கரப்பிடும்பை இல்லார் – இத்தொடரின் பொருள் கூறுக.
2. தஞ்சம் எளியர் பகைக்கு – இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக.

10th_Tamil_Unit 6.indd 157 22-02-2019 13:44:25

அடக்கமுடைமை

1) *நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்*
*மலையினும் மாணப் பெரிது**

நேர்வழி மாறாது அடக்கமாய் இருப்பவனின் உயர்வு, மலையின் மாண்பைக் காட்டிலும் பெரியது.

2) *யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்*
*சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு**

ஒருவர் எதைக் காக்காவிட்டாலும் நாவைக் காக்கவேண்டும். அவ்வாறு காக்காவிட்டால் சொல்குற்றத்தில் சிக்கித் துன்பப்படுவர்.

3) *தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே*
*நாவினால் சுட்ட வடு**

தீயினால் சுட்ட புண்ணால் உடலில் வடு உண்டானாலும் உள்ளே ஆறிவிடும்; நாவினால் சுட்ட புண்ணால் உடலின் புறத்தே வடு உண்டாகாவிட்டாலும் உள்ளே ஆறாது.

அணி : வேற்றுமை அணி

4) *தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு*
*வேளாண்மை செய்தல் பொருட்டு**

விடாமுயற்சி செய்து ஈட்டிய பொருளெல்லாம் தகுதியானவருக்கு உதவி செய்வதற்கே ஆகும்.

5) *ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்*
செத்தாருள் வைக்கப் படும்

உயர்ந்தாரின் உலக நடைமுறையோடு ஒத்துப் போகிறவனே உயிர் வாழ்பவன். மற்றவன் செத்தவர்களுள் ஒருவனாகவே கருதப்படுவான்.

6) *மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்*
*பெருந்தகை யான்கண் படின் **

பெருந்தகையாளனிடம் உள்ள செல்வம் தன் எல்லா உறுப்புகளையும் மருந்தாகத் தரும் மரத்தைப் போன்றது.

அணி : உவமை அணி

புகழ்

7) *ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்*
பொன்றாது நிற்பதொன்று இல்

இணையற்ற உயர்ந்த புகழைப்போல உலகத்தில் ஒப்பற்ற ஒன்றாக நிலைத்து நிற்பது வேறொன்றும் இல்லை.

8) *தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று**

தோன்றினால் புகழ் தரும் பண்புகளுடன் தோன்றுக! இல்லையெனில் தோன்றாமல் இருப்பதே நல்லது.

9) *வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய*
*வாழ்வாரே வாழா தவர்**

பழியில்லாமல் வாழ்பவரே வாழ்பவர்; புகழில்லாமல் வாழ்பவர் வாழாதவர்.

தவம்

10) *வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்*
ஈண்டு முயலப் படும்

விரும்பியதை விரும்பியவாறே பெற முடியும் என்பதால் செய்ய முடிந்த தவத்தை இங்கேயே முயன்று பார்க்கலாம்.

11) *சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்*
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு

புடமிடச் சுடுகையில் ஒளிவிடும் பொன்போலத் தவமிருப்பவரைத் துன்பம் வருத்த வருத்த ஞானம் வளரும்.

அணி : உவமை அணி

12) *நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை*
மேற்சென்று செய்யப் படும்

நாக்கு அடைத்து, விக்கல் வந்து, உயிர்க்கு இறுதி வரும்முன், நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும்.

13) *நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்*
*பெருமை உடைத்துஇவ் வுலகு**

நேற்று இருந்தவன் இன்று இல்லை என்னும் நிலையாமைப் பெருமை உடையது இவ்வுலகம்!

14) *ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப*
கோடியும் அல்ல பல

ஒரு பொழுதுகூட வாழ்வின் தன்மையைச் சிந்திக்காதவர்கள் என்னும் எண்ணங்கள் கோடி அல்ல; இன்னும் அதிகம்.

துறவு

15) *யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்*
*அதனின் அதனின் இலன்**

ஒருவன், எந்தெந்தப் பொருள்களிடமிருந்து பற்று நீங்கியவனாக இருக்கின்றானோ அந்தந்தப் பொருள்களால் அவன் துன்பம் அடைவதில்லை.

16) *பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு**

பற்றுகளை அகற்றுவதற்காகவே பற்றில்லாதவனைப் பற்றி நிற்க வேண்டும்.

அணி : சொல் பின்வரும் நிலையணி

அவா அறுத்தல்

17) *இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்*
துன்பத்துள் துன்பம் கெடின்

பேராசை என்னும் பெருந்துன்பம் தொலைந்துபோனால் இன்பம் இடைவிடாமல் வரும்.

18) *ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே*
பேரா இயற்கை தரும்

ஒருக்காலும் நிறைவுசெய்ய முடியாத இயல்புடைய ஆசையை விட்டொழித்தால், நிலையான இன்பம் இயல்பாய் வரும்.

வலியறிதல்

19) *வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்*
*துணைவலியும் தூக்கிச் செயல்**

செயலின் வலிமையும் தன் வலிமையும் பகைவனின் வலிமையும் துணையாளர் வலிமையும் சீர்தூக்கிச் செயல்படுக.

20) *அமைந்தாங் கொழு*
*வியந்தான் விரைந்து கெடும்**

மற்றவருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னைப் பெரிதாக நினைப்பவன் விரைவாகக் கெடுவான்.

21) *பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்*
சால மிகுத்துப் பெயின்

மயிலிறகுதான் என்றாலும் அளவுக்கு மிகுதியாக ஏற்றினால், ஏற்றிய வண்டியின் அச்சும் முறியும்.

அணி : பிறிது மொழிதல் அணி

22) *அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல*
*இல்லாகித் தோன்றாக் கெடும்**

தன்னிடம் உள்ளவற்றின் அளவை அறிந்து வாழாதவனின் வாழ்க்கை, உள்ளதுபோலத் தோன்றிக் கெடும்.

காலமறிதல்

23) *அருவினை யென்ப உளவோ கருவியான்*
காலம் அறிந்து செயின்

உரிய கருவிகளுடன் தக்க காலம் அறிந்து செய்தால் அரிய செயல் என்று ஒன்று இல்லை.

24) *ஞாலம் கருதினும் கைகூடும் காலம்*
*கருதி இடத்தால் செயின்**

உரிய காலத்தில், பொருத்தமான இடத்தில், ஒரு செயலைச் செய்தால் உலகத்தையே பெறக் கருதினாலும் கிடைத்துவிடும்.

25) *காலம் கருதி இருப்பர் கலங்காது*
ஞாலம் கருது பவர்

உலகத்தை வெல்லக் கருதுபவர், கலங்காமல் உரிய காலத்துக்குக் காத்திருப்பர்.

26) *எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே*
செய்தற்கு அரிய செயல்

கிடைப்பதற்கு அரிய காலம் வாய்த்தால், அப்போதே முடிப்பதற்கு அரிய செயலைச் செய்து முடித்து விடுக.

பால்	அதிகாரம்	இயல்	இயல்களின் பெயர்கள்
அறம்	38	4	பாயிரவியல் 04, இல்லறவியல் 20, துறவறவியல் 13, ஊழியல் 01
பொருள்	70	3	அரசு இயல் 25, அமைச்சு இயல் 32, ஒழிபியல் 13
இன்பம்	25	2	களவியல் 07, கற்பியல் 18

திருக்குறள், உலகப் பொதுமறை என்று போற்றப்படும் தமிழ் இலக்கியமாகும். இது உலக மக்கள் அனைவருக்கும், எந்தக் காலத்திற்கும் எவ்வகையிலும் பொருந்தும் வகையில் அமைந்தமையால் அவ்வாறு போற்றப்படுகிறது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகக் குறிப்பிடப்படும் வாழ்வியல் நூல். 1330 குறள்பாக்களால் ஆனது.

உலகப்பொதுமறை, பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, முப்பால், உத்தரவேதம், தெய்வநூல் எனப் பல பெயர்களாலும் திருக்குறள் அழைக்கப்படுகிறது. இப்பாடல்கள் அனைத்தும் குறள் வெண்பா என்னும் பா வகையால் ஆனது. பாவின் வகையைத் தன் பெயராகக்கொண்டு உயர்வு விகுதியாகத் 'திரு' என்னும் அடைமொழியுடன் திருக்குறள் என்று அழைக்கப்படுகிறது. ஏழு சீர்களில் வாழ்வியல் நெறிகளைப் பேசும் இந்நூல் உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

திருக்குறளுக்குப் பத்துப் பேருடைய உரை இருப்பதாகப் பழம்பாடல் ஒன்று கூறுகிறது. அவர்கள் பரிமேலழகர், மணக்குடவர், காலிங்கர், பரிதி, பரிப்பெருமாள், தருமர், தாமத்தர், நச்சர், திருமலையர், மல்லர் ஆகியோர். நாளது வரையிலும் பலர் உரை எழுதும் சிறப்புப் பெற்றது இந்நூல். திருக்குறளின் சிறப்பினை விளக்கப் பல புலவர்கள் பாடிய பாடல்களால் தொகுக்கப்பட்ட நூலே திருவள்ளுவ மாலை.

தேவர், நாயனார், தெய்வப்புலவர், செந்நாப்போதர், பெருநாவலர், பொய்யில் புலவர், பொய்யாமொழிப் புலவர், மாதானுபங்கி, முதற்பாவலர் என்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படும் திருவள்ளுவரைப் பற்றிய அறுதியான தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை.

கற்பவை கற்றபின்...

1. *படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.*

அ) *வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம் ஈண்டு முயலப் படும்.*

ஆ) *அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல இல்லாகித் தோன்றாக் கெடும்.*

இ) *நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது.*

2. *துன்பப்படுபவர் _____*

அ) *தீக்காயம் பட்டவர்* ஆ) *தீயினால் சுட்டவர்*

இ) *பொருளைக் காக்காதவர்* ஈ) *நாவைக் காக்காதவர்*

3. *பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.*

மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர் – நிலமிசைத்
துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்
எஞ்சினார் இவ்வுலகத் தில்.

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

அ) ஒன்றா உலகத்
பொன்றாது நிறபதொன்று இல.

ஆ) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

இ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

4. கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைத் தேர்ந்தெடுக்க

பூக்களுக்கும் முள்களுக்கும் இடையில்
புழங்குகிறது யோசனை
பாசத்துக்கும் நியாயத்துக்கும் நடுவில்
நசுங்குகிறது அறம்
இன்பத்துக்கும் பேராசைக்கும் நடக்கும்
போராட்டத்தில் வெடிக்கின்றன
வெளியில் குண்டுகளும்
வீட்டில் சண்டைகளும்....
ஆசை அறுத்தல் எளிதல்ல!
முயன்று பார்க்கலாம் வா!

அ) அருவினை யென்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.

ஆ) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

இ) இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

5. ஒப்புரவு என்பதன் பொருள் _____

அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது

6. பொருத்துக

அ) வாழ்பவன்	i) காத்திருப்பவன்
ஆ) வாழாதவன்	ii) மருந்தாகும் மரமானவன்
இ) தோன்றுபவன்	iii) ஒத்ததறிபவன்
ஈ) வெல்ல நினைப்பவன்	iv) புகழ் தரும் பண்புடையவன்
உ) பெரும் பண்புடையவன்	v) இசையொழித்தவன்
	vi) வீழ்பவன்

7. இலக்கணக் குறிப்புத் தருக.

அ) சுடச்சுடரும் ஆ) சுடச்சுடரும் பொன் இ) சுடச்சுட

8. விரைந்து கெடுபவன் யார்?

அ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைப்பவன்

ஆ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

இ) பிறருடன் ஒத்து... ன உயர்வாக நினைக்காதவன்

ஈ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்

9. வேளாண்மை செய்தற் பொருட்டு – பொருள் கூறுக.

10. பற்று நீங்கியவனுக்கு உண்டாவது – பற்றற்றவனைப் பற்றுவதால் உண்டாவது

அ) பற்றுகள் பெருகும் – பொருள்களின் இன்பம் பெருகும்

ஆ) பற்றுகள் அகலும் – பொருள்களின் துன்பம் அகலும்

இ) பொருள்களின் துன்பம் அகலும் – பற்றுகள் அகலும்

ஈ) பொருள்களின் இன்பம் பெருகும் – பற்றுகள் பெருகும்

11. அருவினை – புணர்ச்சி விதி கூறுக.

குறுவினா

1. தீயினால் சுட்டதைப் புண் என்றும் நாவினால் சுட்டதை வடு என்றும் வள்ளுவம் கூறுவது ஏன்?

2. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்

பெருந்தகை யான்கண் படின். – இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.

3. நல்ல செயல்களை விரைந்து செய்யச் சொல்வதன் மூலம் நிலையாமை பற்றித் திருக்குறள் யாது கூறுகிறது?

4. சீர்தூக்கி ஆராயவேண்டிய ஆற்றல்கள் யாவை?

5. மருந்து மரமாக இருப்பவர் யார்? மருந்து எது?

சிறுவினா

1, தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே

நாவினாற் சுட்ட வடு. – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

2. புகழுக்குரிய குணங்களாக நீவிர் கருதுவன யாவை? புகழின் பெருமையைப் பொதுமறைவழி நின்று கூறுக.

3. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை

மேற்சென்று செய்யப் படும். – இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு கூறுக.

4. சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்

துணைவலியும் தூக்கிச் செயல்.

5. விரும்பியதை அடைவது எப்படி? குறள்வழி விளக்குக.

நெடுவினா

1. கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம்வழி நிறுவுக.

2. 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்' – இக்கூற்றை முப்பால்வழி விளக்குக.

பொச்சாவாமை

1) *இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்*
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து

தங்களின் மகிழ்ச்சியில் கடமையை மறக்கும்போது மறதியால் கெட்டவர்களை நினைத்துப் பார்த்துக் கொள்க.

2) *உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்*
உள்ளியது உள்ளப் பெறின்

எப்போதும் எண்ணியதையே எண்ணிக்கொண்டிருந்தால், எண்ணியதை அடைதல் எளியதே!

குறிப்பறிதல்

3) *குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்*
*யாது கொடுத்தும் கொளல்**

முகக்குறிப்பில் அகக்குறிப்பை அறிபவரை என்ன பொறுப்பைக் கொடுத்தாவது துணையாக்கிக் கொள்க.

4) *பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்*
வகைமை உணர்வார்ப் பெறின்

கண்ணின் குறிப்புகளை உணர்பவரைப் பெற்றால் பகைமையும் நட்பையும் அவரது கண்ணே அறிவித்துவிடும்.

படைமாட்சி

5) *மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்*
எனநான்கே ஏமம் படைக்கு

வீரம், மானம், முன்னோர் வழியில் நடத்தல், நம்பிக்கைக்கு உரியவர் ஆதல் ஆகிய நான்கே படைக்குப் பாதுகாப்பு.

பகைத்திறம் தெளிதல்

6) *பகைஎன்னும் பண்பில் அதனை ஒருவன்*
நகையேயும் வேண்டற்பாற்று அன்று

பகை என்னும் பண்பற்றதை ஒருவன் விளையாட்டுக்குக் கூட விரும்பக் கூடாது!

7) *வில்லேர் உழவ*

*சொல்லேர் உழவர் பகை**

வில் வீரரின் பகையைப் பெற்றாலும், சொல்வன்மை உடைய அறிஞரின் பகையைப் பெறக்கூடாது!

8) *இளைதாக முள்மரம் கொல்க களையுநர்*

*கைகொல்லும் காழ்த்த இடத்து**

சிறியதாக இருக்கையிலேயே முள்மரத்தைக் களைந்து விடுக! முதிர்ந்துவிட்டால் வெட்டுபவரின் கையையே வருத்தும்.

அணி : பிறிதுமொழிதல் அணி

மருந்து

9) *மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது*

*அற்றது போற்றி உணின்**

உண்டதும், செரித்ததும் அறிந்து உண்டால் மருந்து என ஒன்று வேண்டியதில்லை.

10) *நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*

*வாய்நாடி வாய்ப்பச் செயல்**

நோயையும் அதன் காரணத்தையும் அதை நீக்கும் வழியையும் ஆராய்ந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.

அணி : சொற்பொருள் பின்வரும் நிலையணி

11) *உற்றான் அளவும் பிணியளவும் காலமும்*

கற்றான் கருதிச் செயல்

நோயாளியின் வயதையும் நோயின் அளவையும் மருத்துவத்தின் காலத்தையும் ஆராய்ந்து மருத்துவர் செயல்படவேண்டும்

12) *உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று*

அப்பால்நாற் கூற்றே மருந்து

நோயாளி, மருத்துவர், மருந்து, மருந்தாளுநர் – என்று மருத்துவம் நான்குவகையில் அடங்கும்.

இரவச்சம்

13) *இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து*

*கெடுக உலகியற்றி யான்**

பிறரிடம் கையேந்தி உயிர்வாழும் நிலை இருக்கும் எனில், அப்படி அவர்களின் உலகத்தை உருவாக்கியவன் அலைந்து கெடட்டும்.

14) *இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்*

பார்தாக்கப் பக்கு விடும்

பிறரை எதிர்பார்த்து இரந்து வாழ்தல் என்னும் பாதுகாப்பற்ற படகு, கொடாமை என்னும் பாறை மோதினால் உடைந்துவிடும்.

அணி : உருவக அணி

1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



அ) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை

ஆ) இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

இ) உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

2. கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைக் கண்டறிக.

கொடி தவித்ததைப் பாரி
அறிந்துகொண்டான்
மயில் தவித்ததைப் பேகன்
உணர்ந்துகொண்டான்
பிள்ளையின் பரிதவிப்பைத்
தாய் அறிவாள்
பளிங்கு முகத்தைப் படித்துக்கொள்
அப்படிப் படித்தவர்களைப்
பிடித்துக்கொள்.

அ) இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து

ஆ) குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்

இ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

3. மகிழ்ச்சியின் மைந்,

அ) முகக்குறிப்பை அறிந்தவரை

ஆ) எண்ணியதை எண்ணியவரை

இ) மறதியால் கெட்டவர்களை

ஈ) சொல்லேர் உழவரை

4. பொருள் கூறுக

அ) ஏமம்

ஆ) மருந்துழைச் செல்வான்

5. இலக்கணக்குறிப்பு தருக

அ) கெடுக

ஆ) குறிப்புணர்வார்

குறுவினா

1. மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?
2. படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?
3. பகைவர் வலிமையற்று இருக்கும்போதே வென்றுவிடவேண்டும் என்னும் குறட்பாவைக் கூறுக.
4. எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

சிறுவினா

1. உருவக அணிக்குத் திருக்குறள் ஒன்றை எடுத்துக்காட்டாகத் தந்து விளக்குக.
2. இளைதாக முள்மரம் கொல்க களையுநர்

கைகொல்லும் காழ்த்த இடத்து. - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.

3. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?

நெடுவினா

வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.

வாழ்வியல்

இயல் 3

திருக்குறள்

EFRLUD



05 இல்வாழ்க்கை

1. *அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
   *பண்பும் பயனும் அது.**
   அன்பும் அறமும் உடையதாக இல்வாழ்க்கை விளங்குமானால், அதுவே வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும். (நிரல்நிறை அணி)

2. *இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்*
   முயல்வாருள் எல்லாம் தலை.
   அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ்பவர், முயற்சிச் சிறப்புடையோரை விடமேம்பட்டவர் ஆவார்.

3. *வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்*
   *தெய்வத்துள் வைக்கப் படும்.**
   உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவர், வானுலகத்தில் உள்ள தெய்வத்துக்கு இணையாக மதிக்கப்படுவார்.

11. செய்ந்நன்றி அறிதல்

4. **செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
வானகமும் ஆற்ற லரிது.*

தான் ஓர் உதவியும் செய்யாதிருந்தும் தனக்கு உதவி செய்த ஒருவருக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது.

5. **காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்**
ஞாலத்தின் மாணப் பெரிது.

உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும், அது உலகத்தின் அளவைவிட மிகப் பெரியதாகும்.

6. **பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
நன்மை கடலிற் பெரிது.

இன்ன பயன் கிடைக்கும் என்று ஆராயாமல் ஒருவர் நமக்குச் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரிதாகும்.

7. **தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்**
கொள்வர் பயன்தெரி வார்.

ஒருவர் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயன் தெரிந்தவர்கள், அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர்.

8. **நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது**
அன்றே மறப்பது நன்று.*

ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதன்று; அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிடுவது நல்லது.

9. **எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை**
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.*

எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வாய்ப்பிருக்கும்; ஒருவர் செய்த உதவியை மறந்துவிட்டவர்க்கு உய்வே இல்லை.

18. வெஃகாமை

10. **படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்**
நடுவன்மை நாணு பவர்.

நடுவுநிலைமையை விட்டுவிட நாணம் கொள்ளும் பண்பாளர்கள் பெரும்பயன் கிடைப்பினும், பிறர் பொருளைக் கவரும் பழியான செயல்களைச் செய்யார்.

11. **இலம்என்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற**
புன்மைஇல் காட்சி யவர்.

ஐம்புலன்களையும் வென்ற தெளிவுடையோர், தாம் வறியர் என்ற காரணத்தைக் காட்டிப் பிறர் பொருளை விரும்புதலைச் செய்ய மாட்டார்.

12. **அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை**
வேண்டும் பிறன்கைப் பொருள்.*

ஒருவருடைய செல்வம் குறையாமலிருக்க வழி எது என்றால், அவர் பிறருடைய கைப்பொருளை விரும்பாதிருத்தலாகும்.

26. புலால் மறுத்தல்

13. *தினல்பொருட்டால் கொல்லாது உலகுஎனின் யாரும்*
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.

உலகத்தார் புலால் தின்னும்பொருட்டு உயிர்களைக் கொல்பவர்கள் இல்லையாயின், வருவாயின் பொருட்டு ஊன் விற்பவர் யாரும் இருக்க மாட்டார்.

31. வெகுளாமை

14. *செல்இடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்இடத்துக்*
காக்கின்என் காவாக்கால் என்?

தன் சினம் செல்லுபடியாகும் மெலியவரிடத்தில் கொள்ளாமல் காப்பவரே உண்மையில் சினம் காப்பவர்; செல்லுபடியாகாத வலியவரிடத்தில், காத்தால் என்ன? காக்காவிட்டால் என்ன?

15. *மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய*
*பிறத்தல் அதனான் வரும்.**

தீமையான விளைவுகள் சினத்தாலேயே ஏற்படும் என்பதால் யாரிடத்திலும் சினம் கொள்ளாமல் அதை மறந்துவிட வேண்டும்.

16. *நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்*
பகையும் உளவோ பிற?

முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தைவிட நமக்கு வேறு பகை இல்லை.

17. *தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்*
*தன்னையே கொல்லும் சினம்.**

ஒருவர் தன்னைத்தான் காத்துக்கொள்ள விரும்பினால், சினம் வாராமல் காத்துக்கொள்ள வேண்டும்; காக்காவிட்டால், சினம் நம்மையே அழித்துவிடும்.

18. *சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்*
*ஏமப் புணையைச் சுடும்.**

சினம், தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு. அது ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டழிக்கும். **(ஏகதேச உருவக அணி)**

38. ஊழ்

19. *நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்*
*உண்மை அறிவே மிகும்.**

ஒருவர் நுட்பமான நூல் பலவற்றைக் கற்றிருந்தாலும், அவருக்கு இயல்பாக உள்ளதாகும் அறிவே மேலோங்கித் தோன்றும்.

20. *இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு*
தெள்ளியர் ஆதலும் வேறு.

உலக இயல்பு இரு வேறு வகைப்படும்; செல்வம் உடையவர் அறிவுடையவராக இருப்பதில்லை; தெளிந்த அறிவுடையோர் செல்வமுடையவராக இருப்பதில்லை.

நூல்வெளி

திரு + குறள் = திருக்குறள். சிறந்த குறள் வெண்பாக்களால் ஆகிய நூல் ஆதலால் இப்பெயர் பெற்றது. இது பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று. குறள் – இரண்டடி வெண்பா, திரு – சிறப்பு அடைமொழி. திருக்குறள் என்பது அடையடுத்த கருவி ஆகுபெயர் ஆகும். குறள், உலகப்பொது மறை; அறவிலக்கியம்; தமிழர் திருமறை; மனித நாகரிகம் பிற நாடுகளில் தோன்றும் முன்னரே மனித வாழ்வின் மேன்மைகளையும் வாழ்வியல் நெறிகளையும் வகுத்துக் காட்டிய நூல். ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம் முதலிய உலக மொழிகள் பலவற்றிலும் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி, பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில் என்னும் பழமொழிகள் இந்நூலின் பெருமையை விளக்குகின்றன. இவற்றுள் 'நால்' என்பது நாலடியாரையும் 'இரண்டு' என்பது திருக்குறளையும் குறிக்கும்.

தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிதி பரிமேலழகர் திருமலையார்
மல்லர் பரிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர் நூற்கு
எல்லையுரை செய்தார் இவர்.

என்று ஒரு பழம்பாடல் திருக்குறளுக்கு உரை எழுதியவர்களின் பட்டியலொன்றைத் தருகிறது. ஏட்டுச் சுவடியிலிருந்து திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு 1812.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" எனப் பாரதியாரும்,
"வள்ளுவனைப் பெற்றதால்
பெற்றதே புகழ் வையகமே" - எனப் பாரதிதாசனும் புகழ்ந்து பாடியுள்ளனர்.

தமிழ்நாடு அரசு 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலையினை, கன்னியாகுமரியில் நிறுவியுள்ளது. திருவள்ளுவரின் நினைவைப் போற்றும் வகையில் வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டுள்ளது.

பால்	அதிகாரம் – எண்ணிக்கை	இயல் – எண்ணிக்கை	இயல்களின் பெயர்கள்
அறம்	38	4	பாயிரவியல் (04) இல்லறவியல் (20) துறவறவியல் (13) ஊழியல் (01)
பொருள்	70	3	அரசு இயல் (25) அமைச்சு இயல் (32) ஒழிபியல் (13)
இன்பம்	25	2	களவியல் (07) கற்பியல் (18)
	133	09	

கற்பவை கற்றபின்...

1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.

அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

ஆ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

2. கடலின் பெரியது

அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி இ) தினையளவு செய்த உதவி

3. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.

நல்லார் நயவர் இருப்ப நயம் இலாக்
கல்லார்க் கொன்றாகிய காரணம் – தொல்லை
வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்
நினைப்ப வருவதொன் றில்

அ) இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு.

ஆ) நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு

இ) ஊழில் பெருவலி யாஉள மற்று ஒன்று
சூழினும் தான்முந்து உறும்

4. கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.

உயர் அலுவலரின் வருகை
அலுவலகமே அல்லாடும்
அவருடைய சினம் அனைவரும் அறிந்ததே
கோப்புகளை விரைந்து முடிக்க
ஒழுங்கு செய்ய
நேரத்தில் இருக்க வேண்டும்
விரைகிறது மனம்
பரபரப்பும் மனவழுத்தமுமாய்
வண்டியை எடுக்கிறேன்
காலைக் கட்டிக் கொள்கிறது குழந்தை
'போ அந்தப் பக்கம்'
உதறிச் செல்கிறேன் குழந்தையை.

5. இலக்கணக்குறிப்புத் தருக.

அன்பும் அறமும், நன்கலம், மறத்தல், உலகு

6. பொருள் கூறுக.

வெகுளி, புணை, ஏமம், திரு

7. வையகமும் வானகமும் ஆற்றலரிது – எதற்கு?

அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன் தூக்கார் செய்த உதவி

இ) தினைத்துணை நன்றி ஈ) செய்ந்நன்றி

8. பகையும் உளவோ பிற? – பொருள் கூறுக

9. செல்லிடத்து – புணர்ச்சி விதி கூறுக.

10. பொருத்துக:

அ)	வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்	–	1) சேர்ந்தாரைக் கொல்லி
ஆ)	பயன்தூக்கார் செய்த உதவி	–	2) ஞாலத்தின் மாணப் பெரிது
இ)	சினம்	–	3) தெய்வத்துள் வைக்கப்படும்
ஈ)	காலத்தினாற் செய்த நன்றி	–	4) நன்மை கடலின் பெரிது

அ) 4,3,2,1 ஆ) 3, 4, 1, 2 இ) 1, 2, 3, 4 ஈ) 2, 3, 4, 1

குறுவினா

1. முயல்வாருள் எல்லாம் தலை என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?
2. ஞாலத்தின் பெரியது எது?
3. மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?
4. செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை?
5. சினத்தை ஏன் காக்க வேண்டும்?

சிறுவினா

1. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.
2. இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழி நின்று விளக்குக.
3. எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? – குறள் வழி விளக்குக.
4. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.
5. கீழ்க்காணும் குறளில் ஏகதேச உருவக அணி எவ்வாறு பயின்று வருகிறது என்பதை விளக்குக.

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

நெடுவினா

1. செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.
2. சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் – இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.



43. அறிவு உடைமை

1. அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
*உள்அழிக்கல் ஆகா அரண்.**

அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும்; அன்றியும் பகைவரால் அழிக்க முடியாத பாதுகாப்பு அரணும் அதுவே ஆகும்.

2. சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

மனத்தை அது போகும் போக்கில் செல்லவிடாமல், தீமையிலிருந்து விலக்கி நல்ல வழியில் செலுத்துவதே அறிவாகும்.

3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
*மெய்ப்பொருள் காண்பது அறிவு.**

எப்பொருளை யார் யார் சொல்லக் கேட்டாலும் அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும். **(சொற்பொருள் பின்வரும் நிலையணி)**

4. எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.

உலகம் எத்தகைய உயர்ந்த நெறியில் செல்கிறதோ, அந்நெறியில் தானும் உலகத்தோடு இணைந்து செல்வதே அறிவாகும்.

5. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
*அதிர வருவதோர் நோய்.**

பின்பு வரப்போவதை முன்பே அறிந்து காத்துக்கொள்ளும் வல்லமைகொண்ட அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.

46. சிற்றினம் சேராமை

6. மனத்தான்ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி; இனத்தான்ஆம்
இன்னான் எனப்படும் சொல்.

மக்களுக்கு இயற்கையறிவு மனத்தால் ஏற்படும்; இப்படிப்பட்டவர் என்று உலகத்தாரால் மதிக்கப்படும் சொல், சேர்ந்த இனத்தால் ஏற்படும்.

7. நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
*அல்லல் படுப்பதூஉம் இல்.**

நல்ல இனத்தைவிடச் சிறந்ததாகிய துணையும் உலகத்தில் இல்லை; தீய இனத்தைவிடத் துன்பத்தை தரும் பகையும் இல்லை.

67. வினைத்திட்பம்

8. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
*மற்றைய எல்லாம் பிற.**

நல்ல செயல்பாட்டிற்கு மன உறுதியே வேண்டும்; மற்றவை எல்லாம் பயன்படா.

9. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
*சொல்லிய வண்ணம் செயல்.**

இச்செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சொல்லுதல் எவர்க்கும் எளியது. சொல்லியபடி செய்து முடித்தல் அரியது.

10. எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

எண்ணியவர் மனவுறுதியுடையவராக இருந்தால், அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவர். **(சொற்பொருள் பின்வரும் நிலையணி)**

11. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
*அச்சாணி அன்னார் உடைத்து.**

ஒருவரின் தோற்றத்தைக் கண்டு இகழக்கூடாது. பெரிய தேர்க்குச் சிறு அச்சாணிதான் இன்றியமையாதது.

XII Std Tamil Chap_06.indd 158 2/22/2019 1:41:57 PM

69. தூது

12. கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
*எண்ணி உரைப்பான் தலை.**

தன்கடமை இன்னது என்று தெளிவாக அறிந்து, அதைச் செய்வதற்கு ஏற்ற காலத்தையும் தக்க இடத்தையும் ஆராய்ந்து சொல்கின்றவரே சிறந்த தூதுவர்.

70. மன்னரைச் சேர்ந்து ஒழுகல்

13. அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்துஒழுகு வார்.

தீக்காய்வார் அகலாது அணுகாது இருப்பதுபோல் அரசர்களைச் சார்ந்திருப்பவர் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும். **(தொழில் உவமை அணி)**

14. பழையம் எனக்கருதிப் பண்புஅல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்.

யாம் அரசர்க்குப் பழைமையான நட்புடையவராய் உள்ளோம் எனக் கருதித் தகுதி அல்லாதவற்றைச் செய்தால் அந்த உரிமை கேட்டினைத் தரும்.

89. உட்பகை

15. வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
*கேள்போல் பகைவர் தொடர்பு.**

வாளைப்போல் வெளிப்படையாகத் துன்பம் செய்யும் பகைவருக்கு அஞ்ச வேண்டியதில்லை; ஆனால் உறவுடையவர் போல் நடித்து உட்பகை கொண்டவரின் தொடர்புக்கு அஞ்ச வேண்டும்.

16. உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று.

அகத்தில் உடன்பாடு இல்லாதவருடன் கூடி வாழும் வாழ்க்கை, ஒரு குடிசையில் பாம்புடன் வாழ்வது போன்றது. **(உவமை அணி)**

93. கள் உண்ணாமை

17. துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்.

உறங்கியவர், இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர்; அவ்வாறே கள்ளுண்பவரும் நஞ்சு உண்பவரே ஆவர்.

18. களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

கள்ளுண்டு மயங்கியவனிடம் நல்லன சொல்லித் திருத்த முயல்வது, நீரில் மூழ்கிய ஒருவரைத் தீப்பந்தம் கொண்டு தேடுவது போன்றது.

XII Std Tamil Chap_06.indd 159 2/22/2019 1:41:57 PM

19. சிறுமை பலசெய்து சீர்அழிக்கும் சூதின்
வறுமை தருவதுஒன்று இல்.

ஒருவருக்குத் துன்பம் பலவற்றையும் உண்டாக்கி அவருடைய புகழையும் கெடுக்கின்ற சூதைப்போல் வறுமை தருவது வேறொன்றும் இல்லை.

20. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
*கழகத்துக் காலை புகின்.**

சூதாடுமிடத்தில் ஒருவருடைய காலம் கழியுமானால், அது அவருடைய பரம்பரைச் செல்வத்தையும் இயல்பான நற்பண்பையும் கெடுக்கும்.

கற்பவை கற்றபின்...

1. படத்திற்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



அ) எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்

ஆ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

இ) வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

2. கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைக் கண்டறிக.

மனமோ மாட்டுவண்டி
பாதையொழுங்கில் போக நினைக்கும் மாடு
இப்படி இருந்தால் எப்படி நகரும்
வாழ்க்கைச் சக்கரம்
ஊர் போகும் பாதையில்
சக்கரம் உருண்டால்
அதுவே அறிவு; அதுவே தெளிவு.

அ) எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.

ஆ) சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

இ) அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்.

3. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.

சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
மாரிபோல் மாண்ட பயத்ததாம் – மாரி
வறந்தக்கால் போலுமே வாலருவி நாட!
சிறந்தக்கால் சீரியார் நட்பு.

அ) பழையம் எனக்கருதிப் பண்பு அல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்

ஆ) எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

இ) நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

XII Std Tamil Chap_06.indd 160 2/22/2019 1:41:58 PM

4. அல்லல் படுப்பதூம் இல் – எவரோடு பழகினால்?

அ) வாள்போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர்

இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார்

5. திண்ணியர் என்பதன் பொருள்

அ) அறிவுடையவர் ஆ) மன உறுதியுடையவர்

இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்

6. ஆராய்ந்து சொல்கிறவர்

அ) அரசர்

ஆ) சொல்லியபடி செய்பவர்

இ) தூதுவர்

ஈ) உறவினர்

7. பொருத்துக.

அ) பாம்போடு உடன் உறைந்தற்று – 1) தீக்காய்வார்

ஆ) செத்தார் – 2) சீர் அழிக்கும் சூது

இ) வறுமை தருவது – 3) கள் உண்பவர்

ஈ) இகல்வேந்தர் சேர்ந்து ஒழுகுவார் – 4) உடம்பாடு இலாதவர்

அ) 1, 2, 3, 4 ஆ) 2, 3, 4, 1 இ) 4, 1, 3, 2 ஈ) 4, 3, 2, 1

8. நடுங்கும்படியான துன்பம் இல்லாதவர்

அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ளக் கூடியவர்.

ஆ) மனத்திட்பம் உடையவர்

இ) அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர்

ஈ) சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவர்.

9. எளியது, அரியது என்பன

அ) தீயினத்தின் துணை – நல்லினத்தின் துணை

ஆ) சொல்வது – சொல்லியபடி செய்வது

இ) சிறுமை பல செய்வது – பகைவர் தொடர்பு

ஈ) மெய்ப்பொருள் காண்பது – உருவுகண்டு எள்ளாதது

குறுவினா

1. மனத்தை அதன்போக்கில் செல்லவிடக் கூடாது என்று வள்ளுவம் கூறுவது ஏன்?

2. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து – இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.

3. மன உறுதியின் தேவை பற்றித் திருக்குறள் யாது கூறுகிறது?

4. நஞ்சுண்பவர் என வள்ளுவர் யாரை இடித்துரைக்கிறார்?

5. அரசரோடு நட்புப் பாராட்டினாலும் செய்யத்தகாதன யாவை?

6. பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?

7. அஞ்சத் தகுந்தன, அஞ்சத் தகாதன என வள்ளுவம் குறிப்பிடுவது யாது?

8. வறுமையும் சிறுமையும் தருவது எது?

9. நீங்கள் படித்ததில் பிடித்த குறளை எழுதி, காரணத்தைக் குறிப்பிடவும்.

10. உலகத்தில் சிறந்த துணையாகவும் பகையாகவும் வள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?

11. இலக்கணக் குறிப்புத் தருக.
ஒரீஇ, படுப்பதூஉம், சொல்லுதல்

12. கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரீஇ யற்று – பொருள் கூறுக.

13. பெருந்தேர் – புணர்ச்சி விதி கூறுக.

சிறுவினா:

1. அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

2. அறிவின் மேன்மை பற்றித் திருக்குறள் வழி நீவிர் கருதுவன யாவை?

3. எடுத்துக்காட்டு உவமையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.
துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்

4. மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள்நெறி நின்று விளக்குக.

5. சிற்றினம் சேராமையும், நல்லினத்தின் துணையுமாக வள்ளுவர் உரைப்பன பற்றி நீவிர் அறிவனவற்றை எழுதுக.

6. வாளையும் பாம்பையும் எவ்வகைப் பகைக்குச் சான்றாக வள்ளுவர் கூறுகிறார்?

7. சூதும் கள்ளும் கேடு தரும் – திருக்குறள் வழி விவரிக்க.

நெடுவினா.

1. அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.

3. திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் – நிறுவுக.

கவிதைப்பேழை

இயல் மூன்று

புலி தங்கிய குகை

PTYDYV

தமிழர்கள் பழங்காலம் முதலே கல்வியிலும் வீரத்திலும் சிறந்து விளங்கினர். நாட்டைக் காக்கப் போர்க்களம் செல்வதைத் தம் முதன்மையான கடமைகளுள் ஒன்றாகக் கருதினர். கல்வியறிவும் கவிபாடும் திறனும் பெற்ற சங்ககாலத் தாய் ஒருவர் தம் மகனின் வீரத்தைப் பற்றிப் பெருமிதத்துடன் கூறும் செய்தியை அறிவோம்.

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டு உளனோ எனவினவுதி என்மகன்
யாண்டுஉளன் ஆயினும் அறியேன் ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே
*தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே**

–காவற்பெண்டு

கவிநடை உரை

எம் சிறுகுடிலின் அழகிய தூணைப் பற்றி நின்று
என் மகன் எங்கே என்று வினவும் பெண்ணே!
அவனிருக்கும் இடம் யானறியேன்;
புலி தங்கிச் சென்ற குகை போல
அவனைப் பெற்ற வயிறு இங்குள்ளது;
ஒருவேளை அவன் போர்க்களத்தில் இருக்கக் கூடும்!

சொல்லும் பொருளும்

சிற்றில் – சிறு வீடு
யாண்டு – எங்கே
கல் அளை – கற்குகை
ஈன்ற வயிறு – பெற்றெடுத்த வயிறு

பாடலின் பொருள்

(சால்புடைய பெண் ஒருத்தி புலவரின் வீட்டிற்குச் சென்று, 'அன்னையே! உன் மகன் எங்கு உள்ளான்?' என்று கேட்டாள்.)

'சிறு அளவிலான எம் வீட்டின் தூணைப் பற்றிக்கொண்டு, ஏதும் அறியாதவள் போல நீ "உன் மகன் எங்கே?" என என்னைக் கேட்கிறாய். அவன் எங்குள்ளான் என்று எனக்குத் தெரியவில்லை. ஆயினும் புலி தங்கிச் சென்ற குகை போல அவனைப் பெற்றெடுத்த வயிறு என்னிடம் உள்ளது. அவன் இங்கில்லை எனில் போர்க்களத்தில் இருக்கக்கூடும். போய்க் காண்பாயாக' என்று புலவர் பதிலளித்தார்.

www.cbsetamil.com

7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 52 20-03-2020 17:47:53

நூல் வெளி

காவற்பெண்டு சங்ககாலப் பெண்பாற்புலவர்களுள் ஒருவர். சோழ மன்னன் போரவைக் கோப்பெரு நற்கிள்ளியின் செவிலித்தாயாக விளங்கியவர் என்பர். கல்வியில் தேர்ச்சியும் கவிபாடும் ஆற்றலும் மிக்க இவர், சங்க கால மக்களின் வீரத்தைக் கருப்பொருளாகக் கொண்டு இப்பாடலைப் பாடியுள்ளார். இவர் பாடிய ஒரே ஒரு பாடல் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது.

புறநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இந்நூல் பண்டைக்காலத் தமிழ் மக்களின் வாழ்க்கைமுறை, நாகரிகம், பண்பாடு, வீரம் முதலியவற்றை வெளிப்படுத்தும் நூலாக விளங்குகிறது. இந்நூலில் 86–ஆம் பாடல் இங்குத் தரப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

1. சங்க காலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை அறிந்து எழுதுக.
2. பண்டைக்காலப் போர்க்கருவிகள் சிலவற்றைப் படம் வரைந்து அவற்றின் பெயர்களை எழுதுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'யாண்டு' என்னும் சொல்லின் பொருள் _____.

   அ) எனது ஆ) எங்கு இ) எவ்வளவு ஈ) எது

2. 'யாண்டுளனோ?' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) யாண்டு + உளனோ? ஆ) யாண் + உளனோ?

   இ) யா + உளனோ? ஈ) யாண்டு + உனோ?

3. 'கல் + அளை' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) கல்லளை ஆ) கல்அளை இ) கலலளை ஈ) கல்லுளை

குறுவினா

தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் கூறுகிறார்?

சிறுவினா

தம் மகன் குறித்துத் தாய் கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

சிந்தனை வினா

தாய் தன் வயிற்றைப் புலி தங்கிச்சென்ற குகையோடு ஒப்பிடுவது ஏன்?

www.cbsetamil.com

7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 53 20-03-2020 17:47:53

கவிதைப் பேழை

இயற்கை

உ

புறநானூறு

குடபுலவியனார்

நுழையும்முன்

நிலம், நீர், காற்று என்பவை மனிதனின் அடிப்படைத் தேவைகளாகும். இயற்கை நமக்குக் கொடையாகத் தந்திருக்கும் இவற்றை உரிய முறையில் பேணிப் பாதுகாக்க வேண்டும். நீரின் இன்றியமையாமையை உணர்ந்த நம் முன்னோர்கள், நீர்நிலைகளை உருவாக்குபவர்களை "உயிரை உருவாக்குபவர்கள்" என்று போற்றினர்.

வான் உட்கும் வடிநீண் மதில்,
மல்லல் மூதூர் வய வேந்தே!
செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்
ஞாலம் காவலர் தோள்வலி முருக்கி,
ஒருநீ ஆகல் வேண்டினும், சிறந்த
நல்லிசை நிறுத்தல் வேண்டினும், மற்றுஅதன்
தகுதி கேள்இனி மிகுதி ஆள!

நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலமும் புணரியோர், ஈண்டு
*உடம்பும் உயிரும் படைத்திசினோரே!**

வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன்
வைப்பிற்று ஆயினும், நண்ணி ஆளும்
இறைவன் தாட்கு உதவாதே ! அதனால்
அடுபோர்ச் செழிய ! இகழாது வல்லே ;
நிலன் நெளிமருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம ! இவண் தட்டோரே !
தள்ளாதோர் இவண் தள்ளா தோரே !

(புறம் 18: 11 – 30)

(பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடியது)

திணை: பொதுவியல் துறை: முதுமொழிக்காஞ்சி

9th_Tamil_Pages 001-121.indd 44 22-12-2020 15:38:48

விண்ணை முட்டும் திண்ணிய நெடுமதில்
வளமை நாட்டின் வலிய மன்னவா
போகும் இடத்திற்குப் பொருள்
உலகம் வெல்லும் ஒரு தனி ஆட்சி
வாடாத புகழ் மாலை வரவேண்டுமென்றால்
தகுதிகள் இவைதாம் தவறாது தெரிந்துகொள்
உணவால் ஆனது உடல்
நீரால் ஆனது உணவு
உணவு என்பது நிலமும் நீரும்
நீரையும் நிலத்தையும் இணைத்தவர்
உடலையும் உயிரையும் படைத்தவர்
புல்லிய நிலத்தின் நெஞ்சம் குளிர
வான் இரங்கவில்லையேல்
யார் ஆண்டு என்ன
அதனால் எனது சொல் இகழாது
நீர்வளம் பெருக்கி நிலவளம் விரிக்கப்
பெற்றோர் நீடுபுகழ் இன்பம் பெற்றோர்
நீணிலத்தில் மற்றவர் இருந்தும் இறந்தும்
கெட்டோர் மண்ணுக்குப் பாரமாய்க் கெட்டோர்

பொதுவியல் திணை

வெட்சி முதலிய புறத்திணைகளுக் கெல்லாம் பொதுவான செய்திகளையும் முன்னர் விளக்கப்படாத செய்திகளையும் கூறுவது பொதுவியல் திணையாகும்.

முதுமொழிக்காஞ்சித் துறை

அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருளினது உறுதி தரும் தன்மையைக் கூறுதல்.

சொல்லும் பொருளும்

யாக்கை – உடம்பு, புணரியோர் – தந்தவர், புன்புலம் – புல்லிய நிலம், தாட்கு – முயற்சி, ஆளுமை; தள்ளாதோர் இவண் தள்ளாதோரே – குறைவில்லாது நீர் நிலை அமைப்பவர்கள் குறைவில்லாது புகழுடையவர்களாக விளங்குவார்கள்.

பாடலின் பொருள்

வான்வரை உயர்ந்த மதிலைக் கொண்ட பழைமையான ஊரின் தலைவனே! வலிமை மிக்க வேந்தனே! நீ மறுமை இன்பத்தை அடைய விரும்பினாலோ உலகு முழுவதையும் வெல்ல விரும்பினாலோ நிலையான புகழைப் பெற விரும்பினாலோ செய்ய வேண்டியன என்னவென்று கூறுகிறேன். கேட்பாயாக!

உலகில் உள்ள யாவற்றையும் மிகுதியாகக் கொண்டு விளங்கும் பாண்டிய நெடுஞ்செழியனே! நீர் இன்றி அமையாத உடல் உணவால் அமைவது; உணவையே முதன்மையாகவும் உடையது. எனவே உணவு தந்தவர் உயிரைத் தந்தவர் ஆவர்.

உணவு எனப்படுவது நிலத்துடன் நீரும் ஆகும். நிலத்தையும் நீரையும் ஒன்று சேர்த்தவர் இவ்வுலகில் உடலையும் உயிரையும் ஒன்று சேர்த்தவர். நெல் முதலிய தானியங்களை விதைத்து மழையைப் பார்த்திருக்கும் பரந்த நிலமாயினும் அதனைச் சார்ந்து ஆளும் அரசனின் முயற்சிக்குச் சிறிதும் உதவாது. அதனால், நான் கூறிய மொழிகளை இகழாது விரைவாகக் கடைப்பிடிப்பாயாக.

நிலம் குழிந்த இடங்கள்தோறும் நீர்நிலையைப் பெருகச் செய்தல் வேண்டும். அவ்வாறு நிலத்துடன் நீரைக் கூட்டியோர் மூவகை இன்பத்தையும் நிலைத்த புகழையும் பெறுவர். இதைச் செய்யாதவர் புகழ் பெறாது வீணே மடிவர்.

இலக்கணக்குறிப்பு

மூதூர், நல்லிசை, புன்புலம் – பண்புத்தொகைகள்; நிறுத்தல் – தொழிற்பெயர் ; அமையா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

நீரும் நிலமும், உடம்பும் உயிரும் – எண்ணும்மைகள்; அடுபோர் – வினைத்தொகை.

கொடுத்தோர் – வினையாலணையும் பெயர்.

9th_Tamil_Pages 001-121.indd 45 22-12-2020 15:38:48

பகுபத உறுப்பிலக்கணம்

நிறுத்தல் – நிறு + த் + தல்

நிறு – பகுதி

த் – சந்தி

தல் – தொழிற்பெயர் விகுதி

கொடுத்தோர் – கொடு +த் + த் + ஓர்

கொடு – பகுதி

த் – சந்தி

த் – இறந்தகால இடைநிலை

ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி

நூல்வெளி

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று புறநானூறு. இது பண்டைய வேந்தர்களின் வீரம், வெற்றி, கொடை குறித்தும் குறுநில மன்னர்கள், புலவர்கள், சான்றோர்கள் உள்ளிட்டவர்களின் பெருமைகளைப் பற்றியும் அன்றைய மக்களின் புறவாழ்க்கையைப் பற்றியும் கூறுகிறது. இந்நூல் பண்டைத் தமிழர்களின் அரிய வரலாற்றுச்செய்திகள் அடங்கிய பண்பாட்டுக் கருவூலமாகத் திகழ்கிறது.

குளம்தொட்டுக் கோடு பதித்து வழிசீத்து
உளம்தொட்டு உழுவயல் ஆக்கி – வளம்தொட்டுப்
பாகுபடும் கிணற்றோடு என்று இவ்வைம் பாற்படுத்தான்
ஏகும் சொர்க்கத்து இனிது

– சிறுபஞ்சமூலம் 64

கற்பவை கற்றபின்...

1. பின்வரும் புறநானூற்றுத் தொடர்களுக்கான பொருளைப் பள்ளி நூலகத்திற்குச் சென்று அறிந்து எழுதுக.

   அ) உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே! (புறம் – 18)

   ஆ) உண்பது நாழி உடுப்பவை இரண்டே ! (புறம் – 189)

   இ) யாதும் ஊரே யாவரும் கேளிர் ! (புறம் – 192)

   ஈ) சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே !
   நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே ! (புறம் – 312)

   உ) உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் ,
   பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே ! (புறம் – 183)

2. "உணவாகும் மழை" என்னும் தலைப்பில் விளக்கக் குறிப்புகளுடன் கூடிய படத்தொகுப்பை உருவாக்குக.

9th_Tamil_Pages 001-121.indd 46 22-12-2020 15:38:48

கவிதைப்பேழை

இயல் 3

புறநானூறு

25SV4Y

நுழையும்முன்

தமிழரின் வாழ்வியல் கருவூலமான புறநானூறு, வீரத்தையும் ஈரத்தையும் மட்டும் பேசாமல், வாழ்வின் விழுமியங்களையும் பேசுகிறது. பிறர்க்கென வாழ்வதே பிறவிப்பயன் என்ற கருத்தினை விளக்கும் இப்பாடல், தனக்கென வாழா மனிதர்களைப் பற்றிப் பேசுகிறது.

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்!
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
*பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.** (182)

–கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

கிடைத்திருப்பதென்னவோ அரிய அமிழ்தம்!
அதனால் என்ன
தனித்துண்ணத் தகுமோ?
எமக்கது பெரிதில்லை
எவரிடத்தும் வெறுப்பில்லை
சோம்பல் சுயமழிக்கும்
உயர்ந்தோர் அஞ்சுவது அஞ்சுவர் தாமும்
புகழா இதோ எம் உயிர்.
இகழா பூமிப்பரிசும் பொருட்டில்லை.
எமக்குள்ளிருப்பது குறுமனம் அன்று
பெருமலையெனத் தமக்கென வாழாது
பிறர்க்கென வாழும் தகைசால் மாண்பினர்
உளதால் அன்றோ
இக்கணமும் உயிர்த்திருக்கிறது உலகம்.

திணை : பொதுவியல் திணை

வெட்சி முதல் பாடாண் வரை உள்ள திணைகளில் கூறப்படாத செய்திகளையும் பிற பொதுவான செய்திகளையும் தொகுத்துக் கூறுவது பொதுவியல் திணையாகும்.

துறை : பொருண்மொழிக்காஞ்சித் துறை

மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுதல் பொருண்மொழிக்காஞ்சித் துறையாகும்.

சொல்லும் பொருளும்

தமியர் – தனித்தவர் ; முனிதல் – வெறுத்தல் ; துஞ்சல் – சோம்பல் ; அயர்வு – சோர்வு ; மாட்சி – பெருமை ; நோன்மை – வலிமை ; தாள் – முயற்சி.

பாடலின் பொருள்

தமக்காக உழைக்காமல் பிறர்க்காகப் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்கள், இந்திரனுக்குரிய அமிழ்தம் கிடைத்தாலும் அஃது உயிர்க்காப்பது என்பதற்காகத் தனித்து உண்ண மாட்டார்கள்; யாரையும்

வெறுக்க மாட்டார்கள்; சோம்பலின்றிச் செயல்படுவார்கள்; பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சுவார்கள்; புகழ்வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பார்கள்; உலகம் முழுவதும் கிடைப்பதாயிருந்தாலும் பழிவரும் செயல்களைச் செய்யார்; எதற்கும் மனம் தளர மாட்டார்கள். இத்தகைய சிறப்புடையோர் இருப்பதால்தான் இவ்வுலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது. இப்பாடல் நேரிசை ஆசிரியப்பா வகையைச் சார்ந்தது.

இலக்கணக்குறிப்பு

அம்ம – அசைநிலை; உண்டல், துஞ்சல் – தொழிற்பெயர்கள்; முயலா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

பகுபத உறுப்பிலக்கணம்

துஞ்சல் – துஞ்சு + அல்

துஞ்சு – பகுதி, அல் – தொழிற்பெயர் விகுதி

முனிவிலர் – முனி + வ் + இல் + அர்

முனி – பகுதி, வ் – உடம்படுமெய் சந்தி

இல் – எதிர்மறை இடைநிலை

அர் – பலர்பால் வினைமுற்று விகுதி

புணர்ச்சி விதி

இயைவதாயினும் – இயைவது + ஆயினும்

உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் – இயைவத் + ஆயினும்.

உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – இயைவதாயினும்.

புகழெனின் – புகழ் + எனின்

உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – புகழெனின்.

பேராசிரியர் ஜார்ஜ் எல். ஹார்ட் (GEORGE L. HART) என்பவரால் புறநானூறு The Four Hundred Songs of War and Wisdom: An Anthology of Poems from Classical Tamil, the Puranānuru என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஜி.யு.போப் (G. U. POPE), புறநானூற்றுப்பாடல்கள் சிலவற்றை "Extracts from puranānooru & Purapporul venbamalai" என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

சுவடிகளில் எழுதிப் பயன்படுத்தப்பட்டு அழிந்துபோகும் நிலையில் இருந்த புறநானூற்றின் பல சுவடிகளை ஒப்பிட்டு ஆய்ந்து பயன்பெறும் வகையில், உ.வே.சா. 1894 ஆம் ஆண்டு முதன் முதலாக அச்சில் பதிப்பித்து வெளியிட்டார்.

நூல்வெளி

புறநானூறு, எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. புறத்திணை சார்ந்த நானூறு பாடல்களைக் கொண்டது; புறம், புறப்பாட்டு என்றும் வழங்கப்படும்; அகவற்பாக்களால் ஆனது. புறநானூற்றுப் பாடல்கள் சங்ககாலத்தில் ஆண்ட அரசர்களைப் பற்றியும் மக்களின் சமூக வாழ்க்கை பற்றியும் எடுத்துரைக்கின்றன.

கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி: பாண்டிய மன்னருள் பெருவழுதி என்னும் பெயரில் பலர் இருந்தனர். ஆயினும், அரிய பண்புகள் அனைத்தையும் தம் இளமைக்காலத்திலேயே பெற்றிருந்த காரணத்தால் அக்கால மக்கள், இவரை இளம்பெருவழுதி என்று அழைத்தனர். கடற்பயணம் ஒன்றில் இறந்துபோனமையால் இவர், கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்று பிற்காலத்தவரால் அழைக்கப்படுகின்றார். இவரது பாடல்கள் புறநானூற்றில் ஒன்றும் பரிபாடலில் ஒன்றும் இடம் பெற்றுள்ளன.

கற்பவை கற்றபின்...

1. உலகியல் கருத்துகளைப் பேசும் ஏதேனும் ஓர் இலக்கியப் பாடலின் நயமும் சொல்லும் பொருளும் குறித்து வகுப்பில் பேசுக.
2. உங்களுக்குத் தெரிந்த, நீங்கள் கேள்வியுற்ற "பிறர்க்கென முயலுநர்" எவரேனும் ஒருவர் குறித்த தகவல்களைத் திரட்டிக் கட்டுரை உருவாக்குக.

கவிதைப்பேழை

கல்வி

ச

புறநானூறு

– ஔவையார்

GK4ZZC

நுழையும்முன்

வாழ்வின் அணியாக விளங்குவது கல்வி. கற்றோர் எந்நிலையிலும் சிறந்தே இருப்பர்; தாழும் நிலை வரினும் கலங்காது, அறிவால் உலகையே சொந்தமாக்கிக்கொள்வர்; எங்குச் சென்றாலும் மற்றவர் மதிப்பைப் பெறுவர். எல்லாப் புகழும் உடைய கற்றோரது செம்மாப்பு இங்குக் கவிதையாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

வாயி லோயே! வாயி லோயே!
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித் தாம்
உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து
வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க்கு அடையா வாயி லோயே!
கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன் அறியலன் கொல்? என் அறியலன் கொல்?
**அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,*
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே. (206)

பா வகை : நேரிசை ஆசிரியப்பா

திணை: **பாடாண்.**

பாடாண் திணை - ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

துறை: பரிசில் துறை
பரிசில் துறை - பரிசு வேண்டி வாயிலில் நிற்பது.

சொல்லும் பொருளும்

வாயிலோயே – வாயில் காப்போனே; **வள்ளியோர்** – வள்ளல்கள்; **வயங்குமொழி** – விளங்கும் சொற்கள்; **வித்தி** – விதைத்து; **உள்ளியது** – நினைத்தது; **உரன்** – வலிமை; **வறுந்தலை** – வெறுமையான இடம்; **காவினெம்** – கட்டிக்கொள்ளுதல்; **கலன்** – யாழ்; **கலப்பை** – கருவிகளை வைக்கும் பை; **மழு** – கோடரி.

பாடலின் பொருள்

வாயில் காவலனே! வாயில் காவலனே! புலவர்களாகிய எங்களைப் போன்றவர்களின் வாழ்நிலை, வள்ளல்களை அணுகி அவர்தம் செவிகளிலே அறிவார்ந்த சொற்களைத் துணிச்சலுடன் விதைத்துத் தாம் எண்ணியதை முடிக்கும் வலிமையுடையது; அதே வேளையில் அவ்வள்ளல்கள் பற்றித் தாம் எழுதிய கவிதையின் சிறப்பை அறிந்து பரிசளிக்க வேண்டுமே என நினைந்து வருந்தும் தன்மையைக் கொண்டது. பரிசிலர்க்கு வாயிலை அடைக்காத காவலனே! விரைந்து ஓடும் குதிரையைக் கொண்ட நெடுமான் அஞ்சி, தன்னுடைய தகுதியை அறியானோ? (அவனை நம்பித்தான் இவ்வுலகில் வறுமை நிலையில் உள்ளோர் வாழ்கின்றனர் என்னும் நினைப்புப் போலும்.) இவ்வுலகில், அறிவும் புகழும் உடையோர் இன்னும் மாய்ந்துவிடவில்லை. இந்த உலகமும் வெற்றிடமாகிவிடவில்லை. (எங்களை அறிந்து பரிசில் தரப் பல பேர் உள்ளனர்.) ஆகவே, எம் யாழினை எடுத்துக்கொண்டோம்; கருவிப்பையையும் சுருக்கிட்டுக் கட்டிக்கொண்டோம். மரம் வெட்டும் தச்சனின் தொழில் வல்ல பிள்ளைகள், கோடரியுடன் காட்டுக்குச் சென்றால் அவர்கள் வெட்டுவதற்கு ஏதாவது ஒரு மரம் கிடைக்காமலா போகும்? அதுபோல, கலைத்தொழில் வல்ல எங்களுக்கும் இவ்வுலகில் எத்திசையில் சென்றாலும் அத்திசையில் உணவு, தவறாமல் கிட்டும்.

(பரிசிலர்க்குச் சிறுவரும், கல்விக்குக் கோடரியும், போகும் திசைக்குக் காடும், உணவுக்குக் காட்டில் உள்ள மரங்களும் உவமைகள்)

இலக்கணக் குறிப்பு

வயங்குமொழி – வினைத்தொகை

அடையா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

அறிவும் புகழும் – எண்ணும்மை

சிறாஅர் – இசைநிறை அளபெடை.

புணர்ச்சி விதி

எத்திசை = **எ + திசை**

விதி : இயல்பினும் விதியினும் நின்ற
உயிர்முன் கசதப மிகும் – எத்திசை.

நூல்வெளி

சிற்றரசனான அதியமான் நெடுமான் அஞ்சி பரிசில் தராமல் காலம் நீட்டித்தபோது ஔவையார் பாடிய பாடல் நமக்குப் பாடப்பகுதியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பாடல் இடம்பெற்றுள்ள புறநானூறு, எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இது புறப்பொருள் பற்றியது; புறம், புறப்பாட்டு எனவும் அழைக்கப்படுகிறது. தமிழரின் போர், வீரம், நாகரிகம், பண்பாடு, நெறிப்பட்ட வாழ்க்கை முதலியவற்றை விளக்கமாக எடுத்துரைக்கிறது.

அதியமானிடம் நட்புப் பாராட்டிய ஔவை அவருக்காகத் தூது சென்றவர்; அரசவைப் புலவராக இருந்து அரும்பணியாற்றியவர்; இவர் பாடியதாக அகநானூற்றில் 4, குறுந்தொகையில் 15, நற்றிணையில் 7, புறநானூற்றில் 33 என 59 பாடல்கள் நமக்குக் கிடைத்துள்ளன.

கற்பவை கற்றபின்...

கல்வியின் சிறப்பை உணர்த்தும் திருக்குறள், நாலடியார் பாடல்களைத் திரட்டி வகுப்பறையில் உரையாடுக.

கவிதைப்பேழை

நிருவாகம் எ

புறநானூறு

– பிசிராந்தையார்

TGQUP8



குடிமக்களின் உளப்பாங்கை அறிந்து அதற்கு ஏற்றவாறு ஆட்சி புரிபவனே சிறந்த அரசன். மக்களின் விருப்பத்திற்கு மாறாக அரசன் செயல்படுவது நாட்டின் வளர்ச்சிக்குக் கேடு விளைவிக்கும். அரசனை நல்வழிப்படுத்தும் பெரும் பொறுப்பைச் சங்கப் புலவர்கள் மேற்கொண்டனர். புலவர்களின் அறிவுரைகளைத் தலைமேற்கொண்டு அரசர்களும் செயல்பட்டனர். சங்கப் பாடல் தொகுப்பில் இத்தகைய செவியறிவுறூஉ என்னும் துறைப்பாடல்கள் நாட்டு நலனையும் நிருவாகச் சீர்மையையும் பாடுவனவாக உள்ளன.

*காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்;*
அறிவுடை வேந்தன் நெறிஅறிந்து கொளினே,
கோடி யாத்து, நாடுபெரிது நந்தும்;
மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்,
யானை புக்க புலம் போலத்
தானும் உண்ணான், உலகமும் கெடுமே. (184)

பா வகை : நேரிசை ஆசிரியப்பா

திணை: **பாடாண்.**

பாடாண் திணை – ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

துறை: **செவியறிவுறூஉ.**

செவியறிவுறூஉ துறை – அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யுமாறு அவன் கேட்க அறிவுறுத்தல், செவியறிவுறூஉ என்னும் துறையாகும்.

சொல்லும் பொருளும்:

காய் நெல் – விளைந்த நெல்.
மா – ஒருநில அளவு (ஓர் ஏக்கரில் மூன்றில் ஒரு பங்கு).
செறு – வயல்; **தமித்து** – தனித்து; **புக்கு** – புகுந்து.
யாத்து – சேர்த்து; **நந்தும்** – தழைக்கும்.
வரிசை – முறைமை; **கல்** – ஒலிக்குறிப்பு.
பரிவு – அன்பு; **தப** – கெட; **பிண்டம்** – வரி;
நச்சின் – விரும்பினால்.

உரை:

ஒரு மாவிற்கும் குறைந்த நிலமாயினும் அதன்கண் விளைந்த நெல்லை அறுத்து உணவாக்கிக் கவளமாகக் கொடுத்தால் யானைக்குப் பல நாட்களுக்கு உணவாகும். நூறு மடங்கு பெரிய வயலாக இருந்தாலும் யானை தனித்துச் சென்று வயலில் புகுந்து உண்ணுமாயின் அதன் வாயில் புகுந்த நெல்லைவிட அதன் கால்களால் மிதிபட்டு அழிந்த நெல்லின் அளவு அதிகமாகும். அதுபோல அறிவுடைய அரசன், வரி திரட்டும் முறை அறிந்து மக்களிடமிருந்து வரி திரட்டினால் நாடு, கோடிக் கணக்கில் செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும். அரசன் அறிவில் குறைந்தவனாகி, முறை அறியாத சுற்றத்தாரோடு ஆரவாரமாக, குடிமக்களின் அன்பு கெடுமாறு, நாள்தோறும் வரியைத் திரட்ட விரும்புவது, யானை

தான் புகுந்த நிலத்தில் தானும் உண்ணாமல் பிறருக்கும் பயன்படாமல் வீணாக்குவது போன்றது. அரசன் தானும் பயனடைய மாட்டான்; நாட்டு மக்களும் துன்புறுவர்.

இலக்கணக்குறிப்பு

காய்நெல் – வினைத்தொகை
புக்க – பெயரெச்சம்
அறியா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

உறுப்பிலக்கணம்

அறிந்து = **அறி + த் (ந்) + த் + உ**
அறி – பகுதி; த் – சந்தி (ந் ஆனது விகாரம்); த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

அறுத்து = **அறு + த் + த் + உ**
அறு – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை;
உ – வினையெச்ச விகுதி.

நூல்வெளி

இப்பாடப்பகுதி புறநானூற்றின் 184ஆவது பாடல் ஆகும். புறநானூறு புறம், புறப்பாட்டு எனவும் அழைக்கப்பெறுகிறது; பண்டைத் தமிழகத்தின் அரசியல், சமூக வரலாற்றை விளக்கும் அரிய கருத்துக் கருவூலமாகத் திகழ்கிறது. முடியுடை மூவேந்தர், குறுநில மன்னர், வேளிர் முதலிய சிறப்புடை மக்கள், போர்ச் செய்திகள், கையறுநிலை, நடுகல் போன்ற பல்வேறு பொருண்மைகளை வெளிப்படுத்தும் இந்நூலை 1894ஆம் ஆண்டு உ.வே.சா. அச்சில் பதிப்பித்தார். இதன் சிறப்புக் கருதி இதனைப் பலரும் ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் மொழிபெயர்த்துள்ளனர். கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் ஜார்ஜ். எல் ஹார்ட் The Four Hundred Songs of War and Wisdom : An Anthology of Poems from Classical Tamil, the Purananuru என்னும் தலைப்பில் 1999ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இப்பாடலின் ஆசிரியர் பிசிராந்தையார். பிசிர் என்பது பாண்டிய நாட்டில் இருந்த ஓர் ஊர். ஆந்தையார் என்பது இப்புலவரின் இயற்பெயர். இவர் காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்ட மன்னன், அறிவுடை நம்பி. பிசிரந்தையார் அரசனுக்கு அறிவுரை சொல்லக் கூடிய உயர்நிலையில் இருந்த சான்றோராவார்.

கற்பவை கற்றபின்...

சிறந்த அரசு நிருவாகத்திற்கு நீவிர் அளிக்கும் பரிந்துரைகளை நாளிதழ்த் தலையங்கமாக எழுதுக.

கவிதைப்பேழை

இயல் நான்கு

கவின்மிகு கப்பல்

AYZH8W

நுழையும்முன்

கடலும் கப்பலும் கண்ணுக்கு விருந்தாகக் காட்சியளிப்பவை. அலைவீசும் கடலில் அசைந்தாடிச் செல்லும் கப்பலைக் காணக் காண உள்ளம் உவகையில் துள்ளும். அச்சம் தரும் கடலில், அஞ்சாது கப்பலோட்டியவர் நம் தமிழர். காற்றின் துணைகொண்டு கப்பலைச் செலுத்திய நம் முன்னோரின் திறத்தைச் சங்கப்பாடலின்வழி அறிவோமா?

உலகுகிளர்ந் தன்ன உருகெழு வங்கம்
புலவுத்திரைப் பெருங்கடல் நீர்இடைப் போழ
இரவும் எல்லையும் அசைவுஇன்று ஆகி
விரைசெலல் இயற்கை வங்கூழ் ஆட்ட
கோடுஉயர் திணிமணல் அகன்துறை நீகான்
மாட ஒள்எரி மருங்குஅறிந்து ஒய்ய

– மருதன் இளநாகனார்



சொல்லும் பொருளும்

உரு	–	அழகு	வங்கம்	–	கப்பல்
போழ	–	பிளக்க	எல்	–	பகல்
வங்கூழ்	–	காற்று	கோடு உயர்	–	கரை உயர்ந்த
நீகான்	–	நாவாய் ஓட்டுபவன்	மாட ஒள்ளெரி	–	கலங்கரை விளக்கம்

பாடலின் பொருள்

உலகம் புடைபெயர்ந்தது போன்ற அழகு பொருந்திய தோற்றத்தை உடையது நாவாய். அது புலால் நாற்றமுடைய அலைவீசும் பெரிய கடலின் நீரைப் பிளந்து கொண்டு செல்லும். இரவும் பகலும் ஓரிடத்தும் தங்காமல் வீசுகின்ற காற்றானது நாவாயை அசைத்துச் செலுத்தும். உயர்ந்த கரையை உடைய மணல் நிறைந்த துறைமுகத்தில் கலங்கரை விளக்கத்தின் ஒளியால் திசை அறிந்து நாவாய் ஓட்டுபவன் நாவாயைச் செலுத்துவான்.

நூல் வெளி

மருதன் இளநாகனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். கலித்தொகையின் மருதத்திணையில் உள்ள முப்பத்து ஐந்து பாடல்களையும் பாடியவர் இவரே. மருதத்திணை பாடுவதில் வல்லவர் என்பதால் மருதன் இளநாகனார் என அழைக்கப்படுகிறார்.

அகநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. புலவர் பலரால் பாடப்பட்ட நானூறு பாடல்களைக் கொண்டது. இந்நூலினை நெடுந்தொகை என்றும் அழைப்பர். இந்நூலின் 255 ஆம் பாடல் இங்குத் தரப்பட்டுள்ளது.

தெரிந்து தெளிவோம்

எட்டுத்தொகை நூல்கள்

நற்றிணை	பரிபாடல்
குறுந்தொகை	கலித்தொகை
ஐங்குறுநூறு	அகநானூறு
பதிற்றுப்பத்து	புறநானூறு

கற்பவை கற்றபின்

1. கடலில் கிடைக்கும் பொருள்களின் பெயர்களைத் தொகுக்க.
2. கடற்பயணம் பற்றிய சிறுகதை ஒன்றை அறிந்துவந்து வகுப்பறையில் பகிர்க.

www.cbsetamil.com
7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 80 20-03-2020 17:47:59

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இயற்கை வங்கூழ் ஆட்ட –அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் _____.

   அ) நிலம் ஆ) நீர் இ) காற்று ஈ) நெருப்பு

2. மக்கள் _____ ஏறி வெளிநாடுகளுக்குச் சென்றனர்.

   அ) கடலில் ஆ) காற்றில் இ) கழனியில் ஈ) வங்கத்தில்

3. புலால் நாற்றம் உடையதாக அகநானூறு கூறுவது _____.

   அ) காற்று ஆ) நாவாய் இ) கடல் ஈ) மணல்

4. 'பெருங்கடல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) பெரு + கடல் ஆ) பெருமை + கடல் இ) பெரிய + கடல் ஈ) பெருங் + கடல்

5. இன்று + ஆகி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) இன்றுஆகி ஆ) இன்றிஆகி இ) இன்றாகி ஈ) இன்றாஆகி

6. எதுகை இடம்பெறாத இணை _____.

   அ) இரவு- இயற்கை ஆ) வங்கம் - சங்கம்

   இ) உலகு - புலவு ஈ) அசைவு - இசைவு

பொருத்துக.

1. வங்கம் - பகல்
2. நீகான் - கப்பல்
3. எல் - கலங்கரை விளக்கம்
4. மாட ஒள்ளெரி - நாவாய் ஓட்டுபவன்

குறுவினா

1. நாவாயின் தோற்றம் எவ்வாறு இருந்ததாக அகநானூறு கூறுகிறது?
2. நாவாய் ஓட்டிகளுக்குக் காற்று எவ்வாறு துணைசெய்கிறது?

சிறுவினா

கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது?

சிந்தனை வினா

தரைவழிப்பயணம், கடல்வழிப் பயணம் ஆகியவற்றுள் நீங்கள் விரும்புவது எது? ஏன்?

www.cbsetamil.com

7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 81 20-03-2020 17:47:59

கவிதைப்பேழை

இயல் 5

அகநானூறு

29CL54

நுழையும்முன்

சொல்ல வந்த கருத்தை 'உள்ளுறை', 'இறைச்சி' வழியாக உரைப்பது அகநானூற்றுப் பாடல்களின் சிறப்பு. அதனைப் பாடும் கவிஞர் சொல்லின் பயன்பாடு குறையாமல் கூறுவதோடு மரபின் நாகரிகம் குறைவுபடாது கூறவும் வேண்டும். அன்பை மறைக்கவும் வேண்டும்; பயன்பாடு கருதி வெளிப்படுத்தவும் வேண்டும். தலைவியைத் தலைவன் சந்திக்க வேண்டிய குறியிடத்தைப் பற்றிய குறிப்பைப் பொதிந்து வெளியிடுவது தோழியின் பொறுப்பு.

பெருங்கடல் முகந்த இருங்கிளைக் கொண்மூ!
இருண்டுஉயர் விசும்பின் வலனேர்பு வளைஇப்,
போர்ப்புஉறு முரசின் இரங்கி, முறைபுரிந்து
அறன் நெறி பிழையாத் திறன்அறி மன்னர்
அருஞ்சமத்து எதிர்ந்த பெருஞ்செய் ஆடவர்
கழித்துஎறி வாளின், நளிப்பன விளங்கும்
மின்னுடைக் கருவியை ஆகி, நாளும்
கொன்னே செய்தியோ, அரவம்? பொன்னென
மலர்ந்த வேங்கை மலிதொடர் அடைச்சிப்
பொலிந்த ஆயமொடு காண்தக இயலித்
தழலை வாங்கியும் தட்டை ஒப்பியும்,
அழலேர் செயலை அம்தழை அசைஇயும்,
குறமகள் காக்கும் ஏனல்
புறமும் தருதியோ? வாழிய, மழையே!

(அகம்.188)

– வீரை வெளியன் தித்தனார்

திணை : குறிஞ்சி

துறை: இரவில் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது.

சொல்லும் பொருளும்

கொண்மூ – மேகம்; விசும்பு – வானம்; சமம் – போர்; அரவம் – ஆரவாரம்; ஆயம் – சுற்றம்; தழலை, தட்டை – பறவைகளை ஓட்டும் கருவிகள்.

பெருங்கடலில் நீர்முகக்கும் முகிலே சொல்நீ
வான்வெளி இருளப் பரபரப்பாய் வரும்உலா
போர்க்கள முரசாய்ப் பொழுதுக்கும் இடிமுழக்கம்
அறநெறியாளன் ஆட்சியில் காக்கும்
போர்க்கள வீரர் வாள்போல் பொறிமின்னல்
நாளும் இவையெல்லாம் சும்மா நடிப்பா?
அல்லது
ஆளை அலைக்கழிக்கும் மழை ஆரவாரமா?
பொன்பூ வேங்கை மாலை தொடுத்து
அணியும் தோழியர் ஆயத்துடன் இருப்பாள்
அழல்எரி அசோகஇலை ஆடை உடுப்பாள்
காண்பதற்கு இனிய ஒயிலுடன் நடப்பாள்
தழலை தட்டைக் கருவியொலி எழுப்பிப்
பறவைகள் விரட்டித் தினைப்புனம் காப்பாள்
தலைவியின் காட்டிலும் பொழிவாயா?
இல்லை
தப்பிப் பிழைத்துப் போய்விடுவாயா?

பாடலின் பொருள்

தலைவனுக்குக் குறியிடம் சொல்லும் தோழி மேகத்திடம் சொல்வதுபோல் சொல்கிறாள்: "பெருங்கடலில் நீரை முகந்துகொண்டு செல்லும் மேகக் கூட்டமே! வானம் இருளும்படி உலாவுகிறாய். போர் முரசம்போல முழங்குகிறாய். முறைமை தெரிந்து அறநெறி பிழையாமல் திறமையுடன் ஆளும் அரசனின் போர்க்களத்தில் திறமை மிக்க போர்வீரன் சுழற்றும் வாள்போல மின்னுகிறாய். முழக்கமும் மின்னலுமாக நாள்தோறும் வெற்று ஆரவாரம் செய்கிறாயா அல்லது மழை பொழிவாயா? பொன்னென மலர்ந்த வேங்கை மலரைக் கட்டி அணிந்துகொண்டிருக்கும் தோழியர் ஆயத்தோடு மெல்ல மெல்ல நடந்து குறமகள் தினைப்புனம் காப்பாள். தழலை, தட்டை ஆகிய கருவிகளில் ஒலியெழுப்பிப் பறவைகளை ஓட்டிக்கொண்டு காப்பாள். அவள் அசோக இலைகளால் தழையாடை அணிந்திருப்பாள். குறமகள் அப்படித் தினைப்புனம் காக்கும் பகுதியிலும் நீ மழை பொழிவாயா? "

தலைவி தினைப்புனம் காக்கும் இடத்துக்குத் தலைவன் வரலாம் என்பது குறிப்பு. இது இறைச்சிப் பொருள்.

இலக்கணக்குறிப்பு

வளைஇ, அசைஇ – சொல்லிசை அளபெடைகள்; **அறன், திறன்** – ஈற்றுப்போலிகள்; **பிழையா** – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; **அருஞ்சமம்** – பண்புத்தொகை; **எறிவாள்**– வினைத்தொகை.

நூல்வெளி

அகநானூறு 145 புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு. இது, களிற்றியானை நிரை, மணிமிடை பவளம், நித்திலக்கோவை என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்நூலுக்கு நெடுந்தொகை நானூறு என்ற பெயரும் உண்டு. இந்நூலின் தொகுப்பு முறையில் ஓர் ஒழுங்கு உண்டு. வீரை வெளியன் தித்தனார் பாடிய ஒரேயொரு பாடல் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.

திணை	பாடல் வரிசை	எண்ணிக்கை
பாலை	1, 3, 5, 7...	200
குறிஞ்சி	2, 8, 12, 18...	80
முல்லை	4, 14, 24, 34...	40
மருதம்	6, 16, 26, 36...	40
நெய்தல்	10, 20, 30, 40...	40

கற்பவை கற்றபின்...

சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள கூற்றுமுறைகள் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.

முதற்பொருளும் உரிப்பொருளும்

திணை	நிலம்	பெரும்பொழுது	சிறுபொழுது	உரிப்பொருள்
குறிஞ்சி	மலையும் மலை சார்ந்த நிலமும்	கூதிர், முன்பனி	யாமம்	புணர்தலும் புணர்தல் நிமித்தமும்
முல்லை	காடும் காடு சார்ந்த நிலமும்	கார்	மாலை	இருத்தலும் இருத்தல் நிமித்தமும்
மருதம்	வயலும் வயல் சார்ந்த நிலமும்	ஆறு பெரும் பொழுதுகளும்	வைகறை	ஊடலும் ஊடல் நிமித்தமும்
நெய்தல்	கடலும் கடல் சார்ந்த நிலமும்	ஆறு பெரும் பொழுதுகளும்	எற்பாடு	இரங்கலும் இரங்கல் நிமித்தமும்
பாலை	சுரமும் சுரம் சார்ந்த நிலமும்	இளவேனில் முதுவேனில்	நண்பகல்	பிரிதலும் பிரிதல் நிமித்தமும்

கருப்பொருள்

நிலம்	குறிஞ்சி	முல்லை	மருதம்	நெய்தல்	பாலை
தெய்வம்	சேயோன்	மாயோன்	வேந்தன்	வருணன்	கொற்றவை
மக்கள்	பொருப்பன், வெற்பன், சிலம்பன், கொடிச்சி,	குறும்பொறை, நாடன், தோன்றல், கிழத்தி	ஊரன், மகிழ்நன், மனைவி	சேர்ப்பன், புலம்பன்	விடலை, மீளி, எயிற்றி
	குறவர், குறத்தியர், கானவர்	இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர்	உழவர், உழத்தியர், கடையர், கடைசியர்	நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர்,	எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர்
புள்	கிளி, மயில்	காட்டுக்கோழி	நாரை, மகன்றில், அன்னம்	கடற்காகம்	புறா, பருந்து, கழுகு
விலங்கு	சிங்கம், புலி, கரடி, யானை	மான், முயல்	எருமை, நீர்நாய்	சுறாமீன்	செந்நாய்
ஊர்	சிறுகுடி	பாடி	பேரூர், மூதூர்	பாக்கம், பட்டினம்	குறும்பு
நீர்	அருவி நீர், சுனைநீர்	குறுஞ்சுனை கானாறு	ஆற்று நீர், கிணற்று நீர், குளத்து நீர்	உவர்நீர்க் கேணி, சுவர் நீர்க்கேணி	நீரில்லாக் குழி, கிணறு
பூ	வேங்கை, காந்தள், குறிஞ்சி	முல்லை, பிடவம், தோன்றி	தாமரை, குவளை	நெய்தல், தாழை	குராஅம்பூ, மராம்பூ
மரம்	சந்தனம், தேக்கு, அகில், மூங்கில்	கொன்றை, காயா, குருந்தம்	மருதம், வஞ்சி, காஞ்சி	புன்னை, ஞாழல்	பாலை, உழிஞை, ஓமை
உணவு	மலைநெல், தினை, மூங்கிலரிசி	வரகு, சாமை, முதிரை	செந்நெல், வெண்ணெல்	உப்பும் மீனும் விற்றுப் பெற்ற பொருள்	வழியிற் பறித்த பொருள்
பறை	தொண்டகப் பறை	ஏறுகோட்பறை	நெல்லரிகிணை, மணமுழவு	மீன்கோட் பறை, நாவாய்ப் பம்பை	துடி
யாழ்	குறிஞ்சி யாழ்	முல்லையாழ்	மருதயாழ்	விளரியாழ்	பாலையாழ்
பண்	குறிஞ்சிப் பண்	சாதாரிப் பண்	மருதப் பண்	செவ்வழிப்பண்	பஞ்சுரப்பண்
தொழில்	வெறியாடல், மலை நெல் விதைத்தல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல்	சாமை, வரகு விதைத்தல், களைகட்டல், அரிதல்	வயலில் களை கட்டல், நெல்லரிதல்	உப்பு உண்டாக்கல், விற்றல், மீன் பிடித்தல், உணக்கல்	போர் செய்தல் ஊறையாடல்

XI Std Tamil Chap_117-148.indd 128 1/10/2020 4:35:53 PM

கவிதைப்பேழை

நாகரிகம் ரு

அகநானூறு

– அம்மூவனார்

KTKW8M



நுழையும்முன்

மக்கள் வாழும் சூழலுக்குத் தக்கவாறு அமையக்கூடிய தன்மை உடையது தொழில். பழந்தமிழர்களின் தொழில் நிலத்தின் இயல்பைச் சார்ந்து அமைந்திருந்தது. இன்றும் கடற்கரையில் வாழும் மக்கள் மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல் போன்ற தொழில்களைச் செய்து வருகிறார்கள். பண்டைய நெய்தல் நிலமக்கள் தங்கள் வாழிடத்தில் உள்ள வளங்களைப் பயன்படுத்தித் தொழில் செய்தனர். ஆண்களும் பெண்களும் வணிகம் செய்த செய்தியைச் சங்கப்பாடல்கள் புலப்படுத்துகின்றன.

பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்
இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த
வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி
என்றூழ் விடர குன்றம் போகும்
கதழ்கோல் உமணர் காதல் மடமகள்
சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி
நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்
சேரி விலைமாறு கூறலின் மனைய
விளியறி ஞமலி குரைப்ப, வெரீஇய
மதர்கயல் மலைப்பின் அன்னகண் எனக்கு,
இதைமுயல் புனவன் புகைநிழல் கடுக்கும்
மாமூது அள்ளல் அழுந்திய சாகாட்டு
எவ்வந் தீர வாங்குந் தந்தை
கைபூண் பகட்டின் வருந்தி
வெய்ய உயிர்க்கும் நோயா கின்றே. (140)

திணை : நெய்தல்

கூற்று : தலைமகன் பாங்கற்கு உரைத்தது.

சொல்லும் பொருளும்

வேட்டம் – மீன் பிடித்தல்; **கழி** – உப்பங்கழி; **செறு** – வயல்; **கொள்ளை** – விலை; **என்றூழ்** – சூரியனின் வெப்பம்; **விடர்** – மலைவெடிப்பு; **கதழ்** – விரைவு; **உமணர்** – உப்பு வணிகர்; **எல்வளை** – ஒளிரும் வளையல்; **தெளிர்ப்ப** – ஒலிப்ப; **விளிஅறி** – குரல்கேட்ட; **ஞமலி** – நாய்; **வெரீஇய** – அஞ்சிய; **மதர்கயல்** – அழகிய மீன்; **புனவன்** – கானவன்; **அள்ளல்** – சேறு; **பகடு** – எருது

பாடலின் பொருள்

பரதவர், பெரிய கடல் பரப்பில் மீன் வேட்டையாடுவர். நிலப்பரப்பில் உப்பளங்களில் உழவு செய்யாமலே உப்பு விளைவிப்பர். அந்த வெண்ணிறக் கல்உப்பை, உப்பு வணிகர் தங்களது வண்டியில் ஏற்றிச்செல்வர். வண்டியில் பூட்டிய எருதுகளை விரட்டக் கையில் தாழ்கோல் வைத்திருப்பர். கோடைக்காலத்தின் வெப்பத்தால் பிளவுபட்ட பாறைக் குன்றைக் கடந்து தொலைவில் உள்ள ஊர்களில் விற்பனை செய்வர்.

அத்தகைய உமணர் ஒருவரின் மகள், அழகும் இளமையும் வாய்ந்தவள். அவள் தன் கைகளில் அணிந்திருந்த அழகிய வளையல்கள் ஒலிக்கத் தெருவில் கைகளை வீசி நடந்து சென்றாள். அங்கு 'உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக்கொள்ள வாரீரோ!' என்று கூவினாள். அவள் கூவுவதைக் கேட்டு வீட்டில் உள்ள நாய் இது வேற்றுக் குரலென்று குரைத்தது. அதனை எதிர்பாராத அப்பெண்ணின் கண்கள் இரண்டும் அச்சத்தால் மீன்கள் தம்முள் போர் செய்வது போல் மருண்டன.

மருண்ட அப்பெண்ணின் கண்களை நான் அங்குக் கண்டேன். புதிதாகத் தினைப்புனம் அமைக்கும் கானவர் பழையபுனத்தைத் தீயிட்டு எரிப்பர். அப்பொழுது உண்டாகும் கரும்புகை போன்ற கருஞ்சேற்றில் அப்பெண்ணுடைய தந்தையின், உப்பு ஏற்றிச்செல்லும் வண்டி சிக்கிக்கொண்டது. அவ்வண்டியைச் சேற்றிலிருந்து துன்பத்துடன் மீட்க முயன்ற

எருதிற்கு அவள் தந்தை உதவிசெய்தார். அந்த எருது அடைந்த துன்பம் போல, அவள் கண்களால் நான் துன்புற்றேன்.

உள்ளுறை: 'வண்டியை இழுக்கும் எருதுகளின் துன்பத்தைத் தந்தை போக்கியது போல, தலைவியைக் கண்டதனால் எனக்கேற்பட்ட துன்பத்தை நீ போக்குதற்கு உரியவன்' என்று தலைவன் பாங்கனிடம் உள்ளுறுத்துக் கூறினான். எருதைத் தலைவனுக்கும் தந்தையைப் பாங்கனுக்கும் உப்பின் எடையால் எருது வருந்தும் நிலையைக் காதல் வருத்தத்திற்கும் உள்ளுறையாக வைத்துப் பாடல் புனையப்பட்டுள்ளது.

இலக்கணக் குறிப்பு

பெருங்கடல் – பண்புத்தொகை

உழாஅது – செய்யுளிசை அளபெடை

வெரீஇய – சொல்லிசை அளபெடை

உறுப்பிலக்கணம்

செய்த – செய் + த் + அ, செய் – பகுதி, த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி

சாற்றி – சாற்று + இ, சாற்று – பகுதி, இ – வினையெச்ச விகுதி

புணர்ச்சி விதி

பெருங்கடல் – **பெருமை + கடல்**

விதி : 'ஈறுபோதல்' – பெரு + கடல்

விதி : 'இனமிகல்' – பெருங்கடல்

தெரியுமா?

பழங்காலத்தில் தமிழ்நாட்டில் சந்தைக்குரிய உற்பத்திப் பொருளாக உப்பு விளங்கியது. உப்பு விளையும் களத்திற்கு 'அளம்' என்று பெயர். பிற நிலங்களில் கிடைக்கும் பொருள்களை உமணர்கள் உப்பிற்குப் பண்டமாற்றாகப் பெற்றனர்.

தெரிந்து தெளிவோம்

உப்பங்கழி

கடலுக்கு அருகில் மணல் திட்டுகளில் கடல்நீர் தேங்கியிருக்கும் பகுதிக்கு 'உப்பங்கழி' எனப் பெயர். கடல்நீரைப் பாத்திகளில் தேக்கி வெயிலில் ஆவியாக்கி உப்புப் படிவதற்கு ஏற்றவகையில் அமைக்கப்பட்ட இடத்தை உப்பளம் என்கிறோம். ஆடை போல் படியும் இந்த உப்பைக் கூட்டிச் சேகரித்து, பக்குவப்படுத்தி விற்பனைக்கு அனுப்புவர்.

நூல்வெளி

பாடல்வைப்பு முறையில் பாடல் எண்ணிற்கு ஏற்பத் திணைகள் வரிசையாக வைத்துத் தொகுக்கப்பட்ட நூல் அகநானூறு. இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இந்நூல் மூன்று பிரிவுகளை உடையது. களிற்றியானைநிரையில் 120, மணிமிடை பவளத்தில் 180, நித்திலக்கோவையில் 100 எனப் பாடல்கள் உள்ளன. அகப்பாடல்கள் மட்டுமே பாடியவர்களுள் ஒருவர் அம்மூவனார்; நெய்தல் திணை பாடல்களைப் பாடுவதில் வல்லவர். இவரின் பாடல்கள் எட்டுத்தொகையில் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு ஆகியவற்றிலும் தொகுக்கப்பெற்றுள்ளன.

கற்பவை கற்றபின்...

1. தற்காலத்தில் வணிகத்தில் சிறந்து விளங்கும் மகளிர் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
2. பழங்காலத் தொழில்கள் குறித்துக் கருத்தரங்க உரை உருவாக்குக.

XII Std Tamil Chap_5.indd 117 17-12-2020 16:52:17

கவிதைப்பேழை

இயல் 4

நற்றிணை

28EPLF

நுழையும்முன்

வளமையும் வறுமையும் வாழ்க்கையென்னும் நாணயத்தின் இருபக்கங்களாகும். வறுமையில் செம்மையாய் வாழ அறிவுறுத்துவது கல்வி. இம்மாண்பு சிலருக்கு இயல்பிலேயே கைகூடும். வளமான மனையில் பிறந்த பெண்ணொருத்தி, குறைந்த வளமுடைய தலைவன் வீட்டிலும் தன்னிலை மாறாது வறுமையிற் செம்மையாய் வாழ்கின்ற காட்சியைப் படம் பிடிக்கிறது நற்றிணையின் இப்பாடல்.

பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை ஏந்திப்
புடைப்பின் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண்என்று ஒக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று
அரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்
பரீஇ மெலிந்துஒழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுது மறுத்து உண்ணும் சிறு மதுகையளே. (110)

– போதனார்

தித்திக்கும் தேனும் பாலும்
பொற்கிண்ணத்தில் கலங்க
ஒருவாய் சுவைக்கவும் ஒவ்வாமை காட்டி
முத்துப் பந்தலில் ஓடி விளையாடி
மூச்சிறைக்க வைத்த செல்லச் சிறுமகள்
மலர்ச்செண்டும் தோற்க வளமனை சாடி
மறுகை மறுத்து மறைவாள் அன்று

இன்றோ
ஒருநேர உணவே அமிழ்தென நுகரும்
பெருந்தனப் பாங்கு பெற்றது எங்கே?
இல்லவன் செல்வத்து இருப்புக்கு ஏற்ப
பிறரை நயவாப் பொருளியல் பெருமிதம்
பேரறிவு ஒழுக்கம் பெற்றது எப்படி?

திணை : பாலை துறை : மகள் நிலை உரைத்தல்

கூற்று : தலைவி இல்லறம் ஆற்றும் செவ்வியைப் பாராட்டிச் செவிலித்தாய் நற்றாயிடம் கூறியது.

கூற்று விளக்கம்: *திருமணம் முடிந்து கணவன் வீட்டில் வசிக்கும் தலைவியைக் காணச் சென்றுவந்த செவிலி, நற்றாயிடம் மகள் வறுமையிலும் செம்மையாக வாழ்வதைச் சொல்லி, இத்தகைய இல்லற அறிவை எப்படிப் பெற்றாள் என வியந்து கூறுதல்.*

துறை விளக்கம்: *"மகள் நிலை உரைத்தல்" என்பது தலைவனோடு உடன்போகிய விளையாட்டுப் பருவம் மாறாத மகள் இல்லறம் ஆற்றும் பாங்கை நற்றாயிடம் செவிலித்தாய் எண்ணிக் கூறுவது. இத்துறை "மனைமருட்சி" என்றும் கூறப்படும்.*

சொல்லும் பொருளும்

பிரசம் – தேன்; புடைத்தல் – கோல்கொண்டு மிரட்டுதல்; கொழுநன் குடி – கணவனுடைய வீடு; வறன் – வறுமை; கொழுஞ்சோறு – பெருஞ்செல்வம்; உள்ளாள் – நினையாள்; மதுகை – பெருமிதம்.

பாடலின் பொருள்

"நம் வீட்டில் தேன் கலந்த இனிய பால் உணவை ஒளிமிக்க பொற்கலத்தில் இட்டுச் செவிலித்தாயர் ஒரு கையில் ஏந்தி வருவர். நம் மகளை உண்ண வைப்பதற்காக இன்னொரு கையில் பூச்சுற்றிய மென்மையான சிறு கோலை வைத்திருப்பர். வீட்டின் முற்றத்தில் பந்தரின்கீழ் 'இதை உண்பாயாக' எனச் செல்லமாக அக்கோலால் அடித்து வேண்டுவர். மகளோ, 'நான் உண்ணேன்' என மறுத்து முத்துப்பரல்கள் இட்ட பொற்சிலம்பு ஒலிக்க அங்குமிங்கும் ஓடுவாள். செவிலித்தாயர் அவளைப் பின்தொடர முடியாமல் நடை தளர்ந்து நிற்பர். இப்படிப்பட்ட விளையாட்டுப் பெண், நம் மகள். இவள் எப்படி இப்போது இத்தகைய அறிவையும் இல்லற நடைமுறையும் கற்றாள்? தான் மணந்துகொண்ட கணவன் வீட்டில் வறுமையுற்ற நிலையிலும் தன் தந்தையின் வீட்டில் பெற்ற வளமான உணவினைப் பற்றி நினைத்துப் பாராள். ஓடுகின்ற நீரிலே கிடக்கும் நுண்மணலில் இடைவெளி இருப்பதுபோல் ஒரு பொழுது இடைவெளி விட்டு ஒரு பொழுது உண்ணும் வன்மை பெற்றிருக்கிறாள். இது என்ன வியப்பு?"

இலக்கணக் குறிப்பு

வெண்சுவை, தீம்பால் – பண்புத்தொகைகள்; விரிகதிர், ஒழுகுநீர் – வினைத்தொகைகள்; பொற்கலம், பொற்சிலம்பு – மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்; கொண்ட – பெயரெச்சம்; அறிவும் ஒழுக்கமும் – எண்ணும்மை; பந்தர் – பந்தல் என்பதன் ஈற்றுப்போலி.

பகுபத உறுப்பிலக்கணம்

மெலிந்து – மெலி + த்(ந்) + த் + உ

மெலி – பகுதி; த் – சந்தி, ந் ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

உ – வினையெச்ச விகுதி.

மறுத்து – மறு + த் + த் + உ

மறு – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை

உ – வினையெச்ச விகுதி.

புணர்ச்சி விதி

சிறுகோல் – சிறுமை + கோல்

ஈறு போதல் – சிறுகோல்

பொற்சிலம்பு – பொன் + சிலம்பு

ணன வல்லினம் வர ட ற வும் – பொன்சிலம்பு.

நூல்வெளி

நற்றிணை எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்துப் போற்றப்படுவதாகும்; 'நல்ல திணை' என்ற அடைமொழியால் போற்றப்படும் சிறப்பினை உடையது. இது, நானூறு பாடல்களைக் கொண்டது. 9 அடிகளைச் சிற்றெல்லையாகவும் 12 அடிகளைப் பேரெல்லையாகவும் கொண்டது. நற்றிணையைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி. இதன் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். போதனார்: சங்ககாலப் புலவர். நற்றிணையில் 110ஆம் பாடலை மட்டும் பாடியுள்ளார். நற்றிணையின் பேரெல்லை 12 அடி.விதிவிலக்காக 13 அடிகளைக் கொண்டதாக இவரது பாடல் அமைந்துள்ளது.

கற்பவை கற்றபின்...

சூழலோடு பொருந்திக் கல்வியை வளர்த்துக்கொள்பவர் பெண்ணே! ஆணே! – கலந்துரையாடல் நிகழ்த்துக.

கவிதைப் பேழை

மனிதம்

கூ

குறுந்தொகை

– பாலை பாடிய பெருங்கடுங்கோ

LRY8F3

நுழையும்முன்

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று மனிதம் பேசிய சங்கக் கவிதைகள் தமிழ்ச் சமுதாயத்தின் மாண்புகளைக் காட்டும் காலக் கண்ணாடியாய்த் திகழ்வன. அவற்றுள் ஒன்றான குறுந்தொகை ஓர் அக இலக்கிய நூலாகும்; அதன் சிறப்புக் கருதியே 'நல்ல குறுந்தொகை' என்று அழைக்கப்படுகிறது; குறுந்தொகைப் பாடல்கள் பலவும் இயற்கைக் காட்சிகள் மூலம் அன்பின் வளத்தைப் படம்பிடித்துக் காட்டுவன. தலைவனைப் பிரிந்த தலைவியின் துயரைத் துடைக்கத் தோழி ஆறுதல் கூறுவதாக அமைந்த ஒரு பாடல் மனிதத்தை உணர்த்துகிறது.

நசை பெரிது உடையர்; நல்கலும் நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழி அவர் சென்ற ஆறே. (37)



பேரன்பு உடையவன் பெரிதுனக்குத் தருவான்
பொருள்தேடச் சென்றவன் பறந்தோடி வருவான்
பசித்தீ அணைக்க மெல்லிய யாமரக்
கிளையொடித்து உதவும் யானைக் காட்சியே
உன்நினைவு தூவி இங்கவனை அழைத்துவரும்
மலரினும் மெல்லியளே மனக்கவலை கொள்ளாதே

திணை: பாலை

துறை: தலைவன் விரைந்து வருவான் எனத் தோழி தலைவியை ஆற்றியது.

9th_Tamil_Pages 122-264.indd 239 22-12-2020 15:58:13

சொல்லும் பொருளும்

நசை–விருப்பம்; நல்கல் –வழங்குதல்; பிடி–பெண்யானை; வேழம் –ஆண்யானை; யா–ஒரு வகை மரம், பாலை நிலத்தில் வளர்வது; பொளிக்கும் –உரிக்கும்; ஆறு–வழி

பாடலின் பொருள்

தோழி தலைவியிடம், ''தலைவன் உன்னிடம் மிகுந்த விருப்பம் உடையவன். அவன் மீண்டும் வந்து அன்புடன் இருப்பான். பொருள் ஈட்டுதற்காகப் பிரிந்து சென்ற வழியில், பெண் யானையின் பசியைப் போக்க, பெரிய கைகளை உடைய ஆண்யானை, மெல்லிய கிளைகளை உடைய 'யா' மரத்தின் பட்டையை உரித்து, அதிலுள்ள நீரைப் பருகச்செய்து தன் அன்பை வெளிப்படுத்தும்" (அந்தக் காட்சியைத் தலைவனும் காண்பான்; அக்காட்சி உன்னை அவனுக்கு நினைவுபடுத்தும். எனவே, அவன் விரைந்து உன்னை நாடி வருவான். வருந்தாது ஆற்றியிருப்பாயாக) என்று கூறினாள்.

இப்பாடலில் இறைச்சி அமைந்துள்ளது.

இலக்கணக் குறிப்பு

களைஇய – சொல்லிசை அளபெடை,

பெருங்கை, மென்சினை – பண்புத் தொகைகள்,

பொளிக்கும் – செய்யும் என்னும் வினைமுற்று, பிடிபசி – ஆறாம் வேற்றுமைத் தொகை, அன்பின – பலவின்பால் அஃறிணை வினைமுற்று,

பகுபத உறுப்பிலக்கணம்

உடையர் = உடை+ ய் + அர்

உடை – பகுதி

ய் – சந்தி (உடம்படுமெய்)

அர் – பலர்பால் வினைமுற்று விகுதி

பொளிக்கும் = பொளி + க் + க் + உம்

பொளி –பகுதி

க் – சந்தி; க் –எதிர்கால இடைநிலை

உம் – வினைமுற்று விகுதி

நூல் வெளி

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று குறுந்தொகை. இது, தமிழர் வாழ்வின் அகப்பொருள் நிகழ்வுகளைக் கவிதையாக்கிக் கூறுகிறது; கடவுள் வாழ்த்து நீங்கலாக 401 பாடல்களைக் கொண்டது. இதன் பாடல்கள் நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் கொண்டவை. 1915ஆம் ஆண்டு சௌரிப்பெருமாள் அரங்கனார் முதன் முதலில் இந்நூலைப் பதிப்பித்தார். நமக்குப் பாடமாக வந்துள்ளது 37ஆவது பாடல் ஆகும். இப்பாடலின் ஆசிரியர் 'பாலை பாடிய பெருங்கடுங்கோ'. இவர் சேர மரபைச் சேர்ந்த மன்னர்; கலித்தொகையில் பாலைத் திணையைப் பாடியதால் 'பாலை பாடிய பெருங்கடுங்கோ' என அழைக்கப் பெற்றார்.

கற்பவை கற்றபின்...

நீங்கள் கண்ட/ உதவிசெய்து மனம் நெகிழ்ந்த நிகழ்வை வகுப்பறையில் பதிவு செய்க.

LS84GQ

9th_Tamil_Pages 122-264.indd 240 22-12-2020 15:58:13

கவிதைப்பேழை

இயல் 3

குறுந்தொகை

25IZ3B

நுழையும்முன்

அன்பும் அறனும் விளையும் திருமண வாழ்வைத் தலைவி விரும்புவதையும் இரு மனம் இணையும் திருமணத்தை உறுதிசெய்ய இரு வீட்டார் முனைவதையும் அகத்திணை இலக்கணத்தின் இலக்கியமாய் விளங்கும் குறுந்தொகை இப்பாடல்வழிக் காட்சிப்படுத்துகிறது.

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னும் மாக்களோடு
இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே. (146)*

– *வெள்ளிவீதியார்*

தோழி, நீ வாழி! நானறிய ஒன்று சொல்.
(உன் இதயம் உள்ளவன் தான்முயன்று தேடி)
இன்று கொடுத்த ஈடிலாப் பரிசம்
நன்று நன்றென நம்மூர்ப்
பொது அவையில் சொன்ன
முதுபெரும் சான்றோர்போல்
பிரிந்தோரைச் சேர்ப்போர் இருந்தாரோ அன்றும்.

திணை: குறிஞ்சித்திணை

துறை: தலைவன் சான்றோரைத் தலைவியின் தமர்பால் மணம் பேசி வர விடுப்ப, தன் தமர் மறுப்பாரோ என்று அஞ்சிய தலைவியை நோக்கி, "தலைவன் வரைவை நமர் ஏற்றுக்கொண்டனர்; நீ கவலை ஒழிவாயாக" என்று தோழி கூறியது.

துறை விளக்கம்: தலைவன் தலைவியை மணம் முடிப்பது பற்றிப் பேச, சான்றோரை அனுப்புகிறான். தலைவி, அப்போது எங்கே தன் பெற்றோர் மணம் பேச மறுத்துவிடுவார்களோ என்று கலங்குகிறாள். இந்நிலையில் தோழி அவளிடம் தலைவனின்

தரப்பைத் தலைவியின் பெற்றோர் ஏற்றுக்கொண்டனர் என்று தேற்றுகிறாள்.

சொல்லும் பொருளும்

சிதவல் - தலைப்பாகை, தண்டு - ஊன்றுகோல்

பாடலின் பொருள்

(ஊர் மக்களின் அவையில் முன்பு பலமுறை தலைவனின் பரிசப் பொருட்கள் திருப்பி அனுப்பப்பட்டன.) "தலைவி! இன்றோ தலைப்பாகை அணிந்து கையில் தண்டுடன் இருக்கும் முதியவர்கள் மூலமாகத் தலைவன் (போதுமென்று சொல்லத்தக்க அளவு பரிசப் பொருட்களைக் கொண்டுவந்து அவைமுன் வைத்துள்ளான்) மணம் பேசச் செய்துள்ளான். அவையில் இருந்த தலைவியின் உறவினரும் கண்டு, 'நன்று நன்று' என்று கூறி மகிழ்ந்தனர். நம்முடைய ஊரில் முன்பெல்லாம் பரிசத்தொகை போதவில்லை என்பதற்காகப் பிரித்துவிடப்பட்ட தலைவன் தலைவியரைச் (போதிய பரிசத்தொகை கிடைத்தவுடன்) சேர்த்து வைப்போர் இருந்தனர்தானே?" என்று தோழி கூறுகிறாள்.

இப்பாடல் நேரிசை ஆசிரியப்பா வகையைச் சார்ந்தது.

இலக்கணக்குறிப்பு

பிரிந்தோர் – வினையாலணையும் பெயர்

நன்றுநன்று – அடுக்குத்தொடர்

பகுபத உறுப்பிலக்கணம்

பிரிந்தோர் – பிரி + த்(ந்) + த் + ஓர்

பிரி – பகுதி

த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி

புணர்ச்சி விதி

தண்டுடை – தண்டு + உடை

உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்

தண்ட் + உடை

உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

தண்டுடை

நூல்வெளி

குறுந்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. கடவுள் வாழ்த்து நீங்கலாக, அகத்திணை சார்ந்த 401 பாடல்களை உடையது. "நல்ல குறுந்தொகை" எனச் சிறப்பித்து உரைக்கப்படுவது. உரையாசிரியர்கள் பலராலும் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட நூல். ஆதலால் இந்நூலே முதலில் தொகுக்கப்பட்ட தொகை நூலாகக் கருதப்படுகிறது. இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ ஆவார். இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார்.

வெள்ளிவீதியார் சங்ககாலப் பெண்புலவர்களுள் ஒருவர். சங்கத்தொகை நூல்களில் 13 பாடல்கள் இவரால் பாடப்பட்டவை.

கற்பவை கற்றபின்...

திருமணங்களில் மணக்கொடை கேட்பது குற்றமே – விவாதிக்க.

XI Std Tamil Chap_057-090.indd 65 20-02-2020 13:33:03

கவிதைப்பேழை

இயல் 2

ஐங்குறுநூறு

23YNSF

நுழையும்முன்

இல்லறத்தில் அன்பும் அறனும் சிறக்க வேண்டித் தலைவன் பொன்னும் பொருளும் ஈட்ட வெளியூர் செல்வது பற்றிப் பல சங்கப் பாடல்கள் பேசுகின்றன. மக்கள் வாழ்வோடு இயைந்த மலர்கள், தலைவனின் வரவைத் தலைவிக்கு அறிவிக்கும் பாடலிது.

ஆடுகம் விரைந்தே

காயா கொன்றை நெய்தல் முல்லை
போதவிழ் தளவமொடு பிடவலர்ந்து கவினிப்
பூவணி கொண்டன்றால் புறவே
பேரமர்க் கண்ணி ஆடுகம் விரைந்தே

–பேயனார்

(கிழவன் பருவம் பாராட்டும் பத்து. 412)

(சொன்ன காலத்துக்கும் முன்பே வந்தேன்
சொல்லாமல் சொல்லும் மலர்களைக் கண்டேன்)
அகன்ற கடைவிழி உடையவளே
காயா கொன்றை நெய்தல் முல்லை
செம்முல்லை பிடவமாய்க்
கொல்லைப் புறத்தில் கொட்டிக்கிடக்கும்
பேரழகுப் பூக்களின் பாடலைக்
கொண்டாடி மகிழ்வோம் விரைந்தோடி வா.

திணை – முல்லை

துறை – பருவங் (கார் காலம்) குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்ற தலைவிக்கு உரைத்தது.

சொல்லும் பொருளும்

காயா, கொன்றை, நெய்தல், முல்லை, தளவம், பிடவம்	– மழைக்கால மலர்கள்
போது	– மொட்டு
அலர்ந்து	– மலர்ந்து
கவினி	– அழகுற

பாடலின் பொருள்

[பொருளீட்டுவதற்காக வெளியூர் சென்றான் தலைவன். அவன், தான் வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்ற காலத்திற்கு முன்னரே வீட்டிற்குத் திரும்புகிறான். வருவதாகக் கூறிச் சென்ற மழைக்காலம் முடியும் முன்னே வந்துவிட்டதனை உணர்த்த நினைக்கிறான்.]

"பெரிய அழகிய கண்களையுடையவளே! அழகிய மாலை நேரத்தில் முல்லை நிலத்தில் காயா, கொன்றை, நெய்தல், முல்லை, செம்முல்லை, பிடவம் ஆகிய மலர்கள் பூத்திருக்கின்றன. அப்பூக்களைப் பார்த்து மகிழ்ந்து ஆட, 'விரைந்து வா' "(என்று தலைவன் தன் தலைவியை அழைக்கிறான்.)

இலக்கணக்குறிப்பு

ஆல் – அசைநிலை

கண்ணி – அண்மை விளிச்சொல்

ஆடுகம் – தன்மைப் பன்மை வினைமுற்று.

பகுபத உறுப்பிலக்கணம்

அலர்ந்து – அலர் + த் (ந்) + த் + உ

அலர் – பகுதி

த் – சந்தி, (ந் ஆனது விகாரம்)

த் – இறந்தகால இடைநிலை

உ – வினையெச்ச விகுதி.

மழைக்கால மலர்கள்

காயா

கொன்றை

நெய்தல்

முல்லை

தளவம்

பிடவம்

நூல்வெளி

ஐந்து + குறுமை + நூறு = ஐங்குறுநூறு. மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் கொண்ட அகவற்பாக்களால் ஆன நூல். திணை ஒன்றிற்கு நூறு பாடல்களாக, ஐந்து திணைகளுக்கு ஐந்நூறு பாடல்கள் கொண்டது. ஐந்து திணைகளைப் பாடிய புலவர்கள்: குறிஞ்சித்திணை – கபிலர், முல்லைத்திணை – பேயனார், மருதத்திணை – ஓரம்போகியார், நெய்தல் திணை – அம்மூவனார், பாலைத்திணை – ஓதலாந்தையார். ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார். தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை.

பேயனார், சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இவர் இயற்றிய 105 பாடல்கள் கிடைத்துள்ளன.

கற்பவை கற்றபின்...

தமிழ் இலக்கியங்கள் காட்டும் பூக்கள் குறித்த செய்திகளைத் திரட்டி, தகவல் பலகையில் காட்சிப்படுத்துக.

இயல் ஐந்து

பாடறிந்து ஒழுகுதல்

TJZ3XW

அன்பு, அறிவு, பண்பு போன்றவை ஒவ்வொரு மனிதனும் வளர்த்துக்கொள்ள வேண்டிய உயர்குணங்கள் ஆகும். இச்சொற்களின் பொருளை மேலோட்டமாக அனைவரும் அறிவர். ஆனால் இவை ஒவ்வொன்றுக்கும் நுட்பமான பொருள் உண்டு. அதனை விளக்கும் கலித்தொகைப் பாடல் ஒன்றை அறிவோம்.

*ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை
அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்
செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை
நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை
முறை எனப்படுவது கண்ஓடாது உயிர் வெளவல்
பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்*

சொல்லும் பொருளும்

அலந்தவர்	–	வறியவர்	கிளை	–	உறவினர்
செறாஅமை	–	வெறுக்காமை	பேதையார்	–	அறிவற்றவர்
நோன்றல்	–	பொறுத்தல்	மறாஅமை	–	மறவாமை
போற்றார்	–	பகைவர்	பொறை	–	பொறுமை

பாடலின் பொருள்

இல்வாழ்வு என்பது வறியவர்களுக்கு உதவி செய்தல். பாதுகாத்தல் என்பது அன்புடையோரைப் பிரியாது வாழ்தல். பண்பு எனப்படுவது சான்றோர் காட்டிய வழியில் நடத்தல். அன்பு எனப்படுவது உறவினர்களோடு வெறுப்பின்றி வாழ்தல். அறிவு எனப்படுவது அறிவற்றவர் கூறும் சொற்களைப் பொறுத்தல். செறிவு எனப்படுவது முன் சொன்ன வாக்கை மறுக்காமல் காப்பாற்றுதல். நிறை எனப்படுவது மறைபொருளைப் பிறர் அறியாமல் காத்தல். நீதிமுறை எனப்படுவது குற்றம் செய்தவருக்கு உரிய தண்டனை வழங்குதல். பொறுமை எனப்படுவது தம்மை இகழ்வாரையும் பொறுத்தல். நாம் ஒவ்வொருவரும் இத்தகைய பண்புநலன்களைப் பின்பற்றி வாழவேண்டும்.

நூல் வெளி

கலித்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இது கலிப்பா என்னும் பாவகையால் ஆன நூல்; நூற்று ஐம்பது பாடல்களைக் கொண்டது. குறிஞ்சிக்கலி, முல்லைக்கலி, மருதக்கலி, நெய்தற்கலி, பாலைக்கலி என்னும் ஐந்து பிரிவுகளை உடையது. கலித்தொகையைத் தொகுத்த நல்லந்துவனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். நெய்தற்கலிப் பாடல்களை இயற்றியவரும் இவரே.

கற்பவை கற்றபின்

அன்பு, வாய்மை, நேர்மை போன்ற நற்பண்புகளின் பெயர்களைத் தொகுத்து பட்டியல் ஒன்று உருவாக்குக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பசியால் வாடும் _____ உணவளித்தல் நமது கடமை.

அ) பிரிந்தவர்க்கு ஆ) அலந்தவர்க்கு இ) சிறந்தவர்க்கு ஈ) உயர்ந்தவருக்கு

2. நம்மை _____ப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

அ) இகழ்வாரை ஆ) அகழ்வாரை இ) புகழ்வாரை ஈ) மகிழ்வாரை

3. மறைபொருளைக் காத்தல் _____ எனப்படும்.

அ) சிறை ஆ) அறை இ) கறை ஈ) நிறை

4. 'பாடறிந்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) பாட் + அறிந்து ஆ) பா + அறிந்து இ) பாடு + அறிந்து ஈ) பாட்டு + அறிந்து

5. முறை + எனப்படுவது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

அ) முறையப்படுவது ஆ) முறையெனப்படுவது

இ) முறைஎனப்படுவது ஈ) முறைப்படுவது

குறுவினா

1. பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
2. முறை, பொறை என்பவற்றுக்குக் கலித்தொகை கூறும் விளக்கம் யாது?

சிறுவினா

நமக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக.

சிந்தனை வினா

வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய பண்பு நலன்களாக நீங்கள் கருதுவன யாவை?

www.cbsetamil.com

8th Std Tamil _20-12-2019.indd 97 03-01-2020 19:34:42

கவிதைப்பேழை

இயல் 7

பதிற்றுப்பத்து

J8FHYC

நுழையும்முன்

நாட்டில் வாழும் உயிர்கள் இன்புற்று வாழ வேண்டும். அவ்வாழ்வு சிறக்க நாட்டின் அரசன் மக்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்த வேண்டும். வள்ளுவர், "உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேரா தியல்வது நாடு" என்று குறிப்பிடுகிறார். பசியும் நோயும் பகையும் இல்லாதிருப்பதே சிறந்த நாடு என்று அறிவுறுத்துகிறார்.

பாடல் பின்னணி

உதியன் சேரலாதனுக்கும் வேண்மாளுக்கும் மகனாகப் பிறந்தவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். இவன் வடக்கே இமயமலைவரை படையெடுத்துச் சென்று, வெற்றி பெற்று, இமயத்தில் வில்லினைப் பொறித்தவன். தமிழின் சிறப்பை உலகறியச் செய்தவன். கடம்பர்களை வென்று, தன் வீரர்களுக்குக் கவசமாக விளங்கியவன். சேரலாதனின் நாடு காத்தற் சிறப்பையும் கொடைச் சிறப்பையும் குமட்டூர்க் கண்ணனார் புகழ்வதாகப் பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தில் உள்ள இப்பாடல் அமைந்துள்ளது.

நிரைய வெள்ளம்

பதிபிழைப்பு அறியாது துய்த்தல் எய்தி
நிரையம் ஒரீஇய வேட்கைப் புரையோர்
மேயினர் உறையும் பலர்புகழ் பண்பின்
நீபுறம் தருதலின் நோய்இகந்து ஒரீஇய
யாணர்நன் னாடும் கண்டுமதி மருண்டனென்

மண்ணுடை ஞாலத்து மன்னுயிர்க்கு எஞ்சாது
ஈத்துக்கை தண்டாக் கைகடும் துப்பின்
புரைவயின் புரைவயின் பெரிய நல்கி
ஏமம் ஆகிய சீர்கெழு விழவின்
நெடியோன் அன்ன நல்லிசை
ஒடியா மைந்தநின் பண்புபல நயந்தே.

(15: 30–40)

– குமட்டூர்க் கண்ணனார்.



உறுபசி ஓவாப்பிணி செறுபகை இன்மையால்
புலம்பெயர்ந்து செல்லாது வாழும் மக்கள்!
சான்றோர் புகழும் ஆட்சிச் சிறப்பில்
துயரம் தொலைந்த புதுவள நன்னாடு!
மண்ணுலக உயிர்கள் மாண்புடன் வாழ
ஈகையால் நீளும்கை! எதிரிகளை அழிக்கும்கை!
இடையறாது இடையறாது
பெரும்பொருள்கொடுத்துப்
பாதுகாப்பு அளிக்கும் பெருவிழாத் தலைவன் என
நற்புகழ் குறையாத வலிமைமிகு உந்தன்
பண்புபல நினைந்தும் கண்டும்
பெருவியப்பு அடைந்தேன்; மதிமிரண்டு போனேன்!

திணை : பாடாண்திணை

பாடாண் திணையானது ஒரு மன்னனின் புகழ், வலிமை, வள்ளன்மை, அருள் முதலானவற்றை ஆய்ந்து கூறுவதாகும். பாடப்படும் ஆண்மகனின் உயர்பண்புகளைக் கூறுவது இத்திணையின் நோக்கமாகும்.

துறை: செந்துறைப் பாடாண்பாட்டு

செந்துறையாவது உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதல். இது செந்துறைப் பாடாண் பாட்டு எனப்படும்.

வண்ணம் : ஒழுகு வண்ணம்

வண்ணம் என்பது ஒலிநய (சந்தம்) வேறுபாடு ஆகும்.

> வண்ணந் தாமே நாலைந் தென்ப.
>
> தொல். பொ. 524

ஒழுகு வண்ணம் என்பது ஒழுகிய ஓசையாற் செல்வதாகும்.

> ஒழுகு வண்ண மோசையி னொழுகும்.
>
> தொல். பொ. 538

தூக்கு: செந்தூக்கு

தூக்கு என்பது செய்யுள் அடிகளை வரையறை செய்வதாகும். செந்தூக்கு என்பது வஞ்சிப்பாவின் இறுதியடி போன்றோ, ஆசிரியவடியின் இறுதி போன்றோ அமையும்.

> வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே.
>
> தொல் . பொ. 383

பா வகை : நேரிசை ஆசிரியப்பா

சொல்லும் பொருளும்

பதி - நாடு; பிழைப்பு - வாழ்தல்; நிரையம் - நரகம்; ஒரீஇய - நோய் நீங்கிய; புரையோர் - சான்றோர்; யாணர் – புது வருவாய்; மருண்டெனன் - வியப்படைந்தேன்; மன்னுயிர் -நிலைபெற்றுள்ள உயிர்த்தொகுதி; தண்டா - ஓயாத; கடுந்துப்பு - மிகுவலிமை; ஏமம் - பாதுகாப்பு; ஒடியா - குறையா; நயந்து – விரும்பிய.

முதல் 29 அடிகளின் கருத்துச் சுருக்கம்:
(சேரலாதனே! பகை நாட்டில் ஓராண்டுவரை தங்கிப் போர் செய்வாய். பகைவர்க்கு நரகத் துன்பத்தைத் தரும் உன் வீரர்கள் உன்னுடனே வெள்ளமென வருவர். பகைநாட்டில் நீ மூட்டிய தீயால் அந்நாட்டின் பழைய அழகு அழிந்தது. காய்ந்த வயல்களில் வீரர்கள் தங்கினர். இத்துன்பத்தை மறந்து உன்னை எதிர்த்து அழிந்த பகைவர் நாடுகளைக் கண்டு வந்தேன். பல வளங்களை உடைய உன் நாட்டில் தொடர்ச்சியான விழாக்களைக் கொண்டாடும் பழமையான ஊரில் உன் வெற்றி முரசு கொட்டுகிறது. நெடுஞ்சேரலாதனே! கலைஞர்கள் உன்னை வாழ்த்தி இசைக்கின்றனர்.)

பாடலின் பொருள்

"சேரலாதனே, உன் குடிமக்கள் எப்பொழுதும் நல்ல செயல்களையே செய்து வருபவர்கள் பசி, பிணி அறியாத அவர்கள் நாட்டை விட்டுப் புலம்பெயராமல் உன் நாட்டிலேயே சுற்றத்தாரோடு வாழ விரும்புவர். அவ்வாறான குடிமக்களால் நீ

போற்றப்படுகிறாய். இப்பெரிய நிலவுலகத்தில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் இடையறாது கொடுக்கும் பண்புடையவனே, நீ சான்றோர்களுக்கு அரிய பொருள்கள் நல்குவாய். எப்பொழுதும் விழாக்கள் நிகழும் நாட்டிற்கு நீ உரிமை உடையவன். நெடியோன் போன்ற புகழினை உடைய உன் நாட்டின் வளத்தையும் பகை நாட்டின் அழிவையும் கண்டு வியப்படைகிறேன்."

சேரநாடு செல்வவளம் மிக்கது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் நாட்டையும் மக்களையும் கண்ணெனக் காத்தான். ஆகவேதான், அவன் நாட்டு மக்கள் வேற்று நாட்டுக்குச் செல்ல விரும்புவதில்லை. புது வருவாய்ப் பெருக்கமும் ஈத்துவக்கும் இன்பமும் உடையவன் சேரலாதன்.

இலக்கணக் குறிப்பு

துய்த்தல் – தொழிற்பெயர்; ஒரீஇய – சொல்லிசை அளபெடை; புகழ்பண்பு – வினைத்தொகை; நன்னாடு – பண்புத்தொகை; மருண்டனென் – தன்மை ஒருமை வினைமுற்று;

ஒடியா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

பகுபத உறுப்பிலக்கணம்

மருண்டனென் – மருள்(ண்) + ட் + அன் + என்

மருள் – பகுதி, 'ள்' 'ண்' ஆனது விகாரம்

ட் – இறந்தகால இடைநிலை, அன் – சாரியை

என் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

துய்த்தல் – துய் + த் + தல்

துய் – பகுதி, த் – சந்தி, தல் – தொழிற்பெயர் விகுதி

புணர்ச்சி விதி

மண்ணுடை – மண் + உடை

தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் – மண்ண் + உடை

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – மண்ணுடை

புறந்தருதல் – புறம் + தருதல்

மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும் – புறந்தருதல்.

நூல்வெளி

எட்டுத்தொகையில் அமைந்த புறத்திணை நூல்களுள் ஒன்று பதிற்றுப்பத்து. சேர மன்னர்கள் பத்துப்பேரின் சிறப்புகளை எடுத்தியம்பும் இது, பாடாண் திணையில் அமைந்துள்ளது. முதல் பத்துப் பாடல்களும் இறுதிப் பத்துப் பாடல்களும் கிடைக்கவில்லை. ஒவ்வொரு பாடலின் பின்னும் துறை, வண்ணம், தூக்கு, பாடலின் பெயர் என்பவை இடம்பெற்றிருக்கின்றன; பாடலில் வரும் சிறந்த சொற்றொடர் அப்பாடலுக்குத் தலைப்பாகத் தரப்பட்டிருக்கிறது. பாடப்பகுதிப் பாடலுக்குச் சேரலாதனின் படைவீரர் பகைவர்முன் நிரையபாலரைப் போலப் (நரகத்து வீரர்கள்) படைவெள்ளமாக நின்றதால் 'நிரைய வெள்ளம்' என்று தலைப்பு இடப்பட்டுள்ளது. பாடப்பகுதியான இரண்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். இவனைப் பாடிய குமட்டூர்க் கண்ணனார், உம்பற்காட்டில் 500 ஊர்களையும் தென்னாட்டு வருவாயுள் பாதியையும் பரிசாகப் பெற்றார்.

கற்பவை கற்றபின்...

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து (738)

என்ற குறள்வழி நாட்டிற்கு அழகு சேர்ப்பன குறித்துக் கலந்துரையாடுக.

XI Std Tamil Chap_179-202.indd 189 1/10/2020 4:38:42 PM

கவிதைப் பேழை

தொழில்நுட்பம்

ச

பரிபாடல்

– கீரந்தையார்

CRFUU1

நுழையும்முன்

இலக்கியங்கள் தாம் தோன்றிய சமுதாயத்தின் நாகரிகம், பண்பாடு மட்டுமல்லாமல் அக்காலகட்டத்தில் நிலவிய அறிவியல் கோட்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் தாங்கி அமைகின்றன. அறிவியல் செழுமை அடைந்திருக்கும் இக்காலத்தின் தொடக்க விதைகளைப் பண்டைய இலக்கியங்களில் நாம் பார்க்கமுடிகிறது. மேனாட்டு அறிவியல் சிந்தனையின் சாயல், துளியும் இல்லாமல் படைக்கப்பட்ட தமிழர் இலக்கியங்களில் துளிர்த்திருக்கும் அறிவியல் கருத்துகள் இன்றளவும் அவற்றோடு ஒத்துப்போவதைக் காண்கையில் பெருவியப்பு மேலிடுகிறது. புவியின் உருவாக்கம் குறித்து இன்றைய அறிவியல் கூறுகிற கருத்தை அன்றே காட்டிய பழங்கவிதை வியப்பிலும் வியப்பே!

விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்
கரு வளர் வானத்து இசையில் தோன்றி,
உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;
உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்

செந்தீச் சுடரிய ஊழியும்; பனியொடு
தண்பெயல் தலைஇய ஊழியும்; அவையிற்று
உள் முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு,
மீண்டும் பீடு உயர்பு ஈண்டி, அவற்றிற்கும்
உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்...

பா. எண். 2 : 4–12

நெருப்புப் பந்தாய் வந்து குளிர்ந்த பூமி

பாடலின் பொருள்

எதுவுமேயில்லாத பெருவெளியில் அண்டத் தோற்றத்துக்குக் காரணமான கரு (பரமாணு) பேரொலியுடன் தோன்றியது. உருவம் இல்லாத காற்று முதலான பூதங்களின் அணுக்களுடன் வளர்கின்ற வானம் என்னும் முதல் பூதத்தின் ஊழி அது. அந்த அணுக்களின் ஆற்றல் கிளர்ந்து பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. பிறகு நெருப்புப் பந்துபோலப் புவி உருவாகி விளங்கிய ஊழிக்காலம் தொடர்ந்தது. பின்னர்ப் பூமி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது. மீண்டும் மீண்டும் நிறை வெள்ளத்தால் நிறைந்த இப்பெரிய உலகத்தில், உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது. அச்சூழலில் உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியான ஊழிக்காலம் வந்தது.

10th_Tamil_Unit 4.indd 83 24-01-2020 10.06.04 AM

சொல்லும் பொருளும்

விசும்பு – வானம்
ஊழி – யுகம்
ஊழ் – முறை
தண்பெயல் – குளிர்ந்த மழை
ஆர்தருபு – வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த
பீடு – சிறப்பு
ஈண்டி – செறிந்து திரண்டு

இலக்கணக் குறிப்பு

ஊழ்ஊழ் – அடுக்குத் தொடர்
வளர்வானம் – வினைத்தொகை
செந்தீ – பண்புத்தொகை
வாரா (ஒன்றன்)– ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

பகுபத உறுப்பிலக்கணம்

கிளர்ந்த – கிளர் + த் (ந்) + த் + அ
கிளர் – பகுதி
த் – சந்தி
த்(ந்) – ந் ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி

தெரிந்து தெளிவோம்

இல்நுழைகதிர்

இந்த அண்டப் பெருவெளியில் நம் பால்வீதி போன்று எண்ணற்ற பால்வீதிகள் உள்ளன. வெளியே நின்று பார்த்தோமெனில், சிறுதூசிபோலக் கோடிக்கணக்கான பால்வீதிகள் தூசுகளாகத் தெரியும். அமெரிக்க வானியல் வல்லுநர் எட்வின் ஹப்பிள் 1924இல் நம் பால்வீதி போன்று பல பால்வீதிகள் உள்ளன என்று நிரூபித்தார்.

1300 ஆண்டுகளுக்குமுன் மாணிக்கவாசகர் திருஅண்டப் பகுதியில் இவ்வாறு எழுதுகிறார்...

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்

……

சிறிய ஆகப் பெரியோன் தெரியின்" (திருவாசகம் 3 – 1 – 6)

அண்டப் பகுதிகளின் உருண்டை வடிவும், ஒப்பற்ற வளமையான காட்சியும் ஒன்றுக்கு ஒன்று ஈர்ப்புடன் நின்ற அழகினைச் சொல்வது எனின், அவை நூறுகோடிக்கும் மேல் விரிந்து நின்றன. இல்லத்துள் நுழையும் கதிரவனின் ஒளிக் கற்றையில் தெரியும் தூசுத் துகள்போல அவை நுண்மையாக இருக்கின்றன.

நூல் வெளி

பரிபாடல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும். பாடப்பகுதியிலுள்ள பாடலை எழுதியவர் கீரந்தையார். இந்நூல் "ஓங்கு பரிபாடல்" எனும் புகழுடையது. இது சங்க நூல்களுள் பண்ணோடு பாடப்பட்ட நூல். உரையாசிரியர்கள் இதில் எழுபது பாடல்கள் இருப்பதாகக் கூறியுள்ளனர். இன்று 24 பாடல்களே கிடைத்துள்ளன.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, சமூக உறவு அறிவாற்றல், இயற்கையைப் புரிந்துகொள்ளும் திறன் போன்றவற்றைச் சங்க இலக்கியம் மூலம் நாம் அறிந்துகொள்கிறோம்.

கற்பவை கற்றபின்...

1. *பரிபாடல் இசைப்பாடல் ஆகும். பாடப்பகுதியின் பாடலை இசையுடன் பாடி மகிழ்க.*
2. *பரிபாடல் காட்டும் பெருவெடிப்புக் காட்சியைப் படங்களாக வரைந்து பொருத்தமான செய்திகளுடன் வழங்குக.*

10th_Tamil_Unit 4.indd 84 24-01-2020 10.06.04 AM

கவிதைப்பேழை

இயல் நான்கு

கலங்கரை விளக்கம்

AJGM7K

நுழையும்முன்

கடலும் கடல்சார்ந்த இடமும் தமிழரின் வாழ்நிலங்களுள் ஒன்று. கடலோடு வாழ்ந்த தமிழர், தம் தொழில்நுட்ப அறிவால் கலம் படைத்து, அதனைக் கொண்டு மீன்பிடித்தும், வணிகம் செய்தும் வாழ்ந்து வந்தனர். கடற்பயணம் சென்று கரை திரும்பத் தமிழர் கண்ட தொழில்நுட்பமே கலங்கரை விளக்கம். அது குறித்துச் சங்கப் பாடல் விளக்குவதைக் காண்போம்.

வானம் ஊன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்
துறை.....*

– கடியலூர் உருத்திரங் கண்ணனார்

சொல்லும் பொருளும்

மதலை – தூண்
ஞெகிழி – தீச்சுடர்
அழுவம் – கடல்
வேயா மாடம் – வைக்கோல் போன்றவற்றால் வேயப்படாது, திண்மையாகச் சாந்து பூசப்பட்ட மாடம்
சென்னி – உச்சி
உரவுநீர் – பெருநீர்ப் பரப்பு
கரையும் – அழைக்கும்

பாடலின் பொருள்

கலங்கரை விளக்கமானது வானம் கீழே விழுந்துவிடாமல் தாங்கிக் கொண்டிருக்கும் தூண் போலத் தோற்றமளிக்கிறது; ஏணி கொண்டு ஏறமுடியாத உயரத்தைக் கொண்டிருக்கிறது; வேயப்படாமல் சாந்து பூசப்பட்ட விண்ணை முட்டும் மாடத்தை உடையது. அம்மாடத்தில் இரவில் ஏற்றப்பட்ட எரியும் விளக்கு, கடலில் துறைமுகம் அறியாமல் கலங்கும் மரக்கலங்களைத் தன் துறைமுகம் நோக்கி அழைக்கிறது.

நூல் வெளி

கடியலூர் உருத்திரங்கண்ணனார் சங்ககாலப் புலவர். இவர் கடியலூர் என்ற ஊரில் வாழ்ந்தவர். இவர் பத்துப்பாட்டில் உள்ள பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன் தொண்டைமான் இளந்திரையன். இந்நூலின் 346 முதல் 351 வரை உள்ள அடிகள் நமக்குப் பாடப்பகுதியாகத் தரப்பட்டுள்ளன.

வள்ளல் ஒருவரிடம் பரிசு பெற்றுத் திரும்பும் புலவர், பாணர் போன்றோர் அந்த வள்ளலிடம் சென்று பரிசு பெற, பிறருக்கு வழிகாட்டுவதாகப் பாடப்படுவது ஆற்றுப்படை இலக்கியம் ஆகும்.

தெரிந்து தெளிவோம் — பத்துப்பாட்டு நூல்கள்

திருமுருகாற்றுப்படை	மதுரைக்காஞ்சி
பொருநராற்றுப்படை	நெடுநல்வாடை
பெரும்பாணாற்றுப்படை	குறிஞ்சிப்பாட்டு
சிறுபாணாற்றுப்படை	பட்டினப்பாலை
முல்லைப்பாட்டு	மலைபடுகடாம்

www.cbsetamil.com
7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 77 20-03-2020 17:47:58

கற்பவை கற்றபின்

1. கடற்கரைக்குச் சென்று அங்குள்ள காட்சிகளைக் கண்டு மகிழ்க.
2. 'கலங்கரை விளக்கம்'- மாதிரி ஒன்று செய்து வருக.
3. கடலும் கலங்கரை விளக்கமும் – ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வேயாமாடம் எனப்படுவது _____.
   அ) வைக்கோலால் வேயப்படுவது ஆ) சாந்தினால் பூசப்படுவது
   இ) ஓலையால் வேயப்படுவது ஈ) துணியால் மூடப்படுவது
2. உரவுநீர் அழுவம் – இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் _____.
   அ) காற்று ஆ) வானம் இ) கடல் ஈ) மலை
3. கடலில் துறைமுகம் அறியாமல் கலங்குவன _____.
   அ) மீன்கள் ஆ) மரக்கலங்கள் இ) தூண்கள் ஈ) மாடங்கள்
4. தூண் என்னும் பொருள் தரும் சொல் _____.
   அ) ஞெகிழி ஆ) சென்னி இ) ஏணி ஈ) மதலை

குறுவினா

1. மரக்கலங்களைத் துறைமுகம் நோக்கி அழைப்பது எது?
2. கலங்கரை விளக்கத்தில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?

சிறுவினா

கலங்கரை விளக்கம் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை கூறும் கருத்துகளை எழுதுக.

சிந்தனை வினா

கலங்கரை விளக்கம் கப்பல் ஓட்டிகளைத் தவிர வேறு யாருக்கெல்லாம் பயன்படும் என நீங்கள் கருதுகிறீர்கள்?

www.cbsetamil.com

7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 78 20-03-2020 17:47:58

கவிதைப்பேழை

ஆளுமை அ

சிறுபாணாற்றுப்படை

– நத்தத்தனார்

XQ7QXI

நுழையும்முன்

ஈகைப்பண்பு மனிதத்தின் அடையாளமாக இருக்கிறது. கொடுக்கிற பண்பு இருந்தால் எடுக்கிற நிலை இருக்காது. தமிழ் இலக்கியங்கள் கொடைத்தன்மையை வியந்து போற்றுகின்றன; எதிர்பார்ப்பு இல்லாமல் கொடுக்கும் தன்மையை வலியுறுத்துகின்றன; கொடுப்பதில் மகிழ்ச்சி காணும் பண்பைப் போற்றுகின்றன. ஆற்றுப்படை இலக்கியங்கள் இக்கொடை பண்பை விளக்கும் இலக்கியங்களாக இருக்கின்றன. இன்றளவும் கொடைப் பண்பால் பெயர்பெற்றிருக்கிற வள்ளல்கள் எழுவர் பற்றிய பதிவுகள் கொடைக்கு இலக்கணமாகவும் மனிதத்தின் அடையாளமாகவும் அமைந்திருக்கின்றன.

பேகன் – (பொதினி மலை)

வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும் ... (84–87)

பாரி (பறம்பு மலை)

..... சுரும்பு உண
நறுவீ உறைக்கும் நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் அருவி வீழும் சாரல்
பறம்பின் கோமான் பாரியும் ... (87–91)

காரி (மலையமான் நாடு)

..... கறங்குமணி
வாலுளைப் புரவியொடு வையகம் மருள
ஈர நன்மொழி இரவலர்க்கு ஈந்த
அழல்திகழ்ந்து இமைக்கும் அஞ்சுவரு நெடுவேல்
கழல்தொடித் தடக்கைக் காரியும் ... (91–95)

ஆய் (பொதியமலை)

..... நிழல் திகழ்
நீலம், நாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய, சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆயும்; ... (95–99)

அதிகன் (தகடூர்)

…… மால்வரைக்
கமழ்பூஞ்சாரல் கவினிய நெல்லி
அமிழ்து விளை தீங்கனி ஔவைக்கு ஈந்த
உரவுச்சினம் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்
அரவக் கடல் தானை அதிகனும் … (99-103)

நள்ளி (நளிமலை)

…… …… கரவாது
நட்டோர் உவப்ப நடைப் பரிகாரம்
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழைபொழியும்வளிதுஞ்சுநெடுங்கோட்டு
நளிமலை நாடன் நள்ளியும் … (103-107)

ஓரி (கொல்லிமலை)

…….…… நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க்கு ஈந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை ஓரியும் … (107-111)

இவர்களோடு நல்லியக்கோடன்.

…… என ஆங்கு
எழுசமங் கடந்த எழு உறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்*…
… (111-115)

பா வகை:நேரிசை ஆசிரியப்பா

சொல்லும் பொருளும்

வளமலை – வளமான மலை (மலைநாடு) இன்று பழநி மலை என்று அழைக்கப்படுகிறது; **கவாஅன்** – மலைப்பக்கம்; **கலிங்கம்** – ஆடை; **சுரும்பு** – வண்டு; **நாகம்** – சுரபுன்னை, நாகப்பாம்பு; **பிறங்கு** – விளங்கும்; **பறம்பு** – பறம்பு மலை; **கறங்கு** – ஒலிக்கும்; **வாலுளை** – வெண்மையான தலையாட்டம்; **மருள** – வியக்க; **நிழல்** – ஒளி வீசும்; **நீலம்** – நீலமணி; **ஆலமர் செல்வன்** – சிவபெருமான் (இறைவன்); **அமர்ந்தனன்** – விரும்பினன்; **சாவம்** – வில்; **மால்வரை** – பெரியமலை (கரிய மலையுமாம்); **கரவாது** – மறைக்காது; **துஞ்சு** – தங்கு; **நளிசினை** – செறிந்த கிளை (பெரிய கிளை); **போது** – மலர்; **கஞலிய** – நெருங்கிய; **நாகு** – இளமை; **குறும்பொறை** – சிறு குன்று; **கோடியர்** – கூத்தர்; **மலைதல்** – போரிடல்; **உறழ்** – செறிவு; **நுகம்** – பாரம்.

பாடலின் பொருள்

பருவம் பொய்க்காமல் மழை பெய்யும் வளமலையில் வாழும் மயிலுக்குப் பேகன் (அது குளிரால் நடுங்கும் என்று எண்ணித் தன் மனத்தில் சுரந்த அருளினால்) தன்னுடைய ஆடையைக் கொடுத்தான். இவன் வலிமை வாய்ந்த ஆவியர் குலத்தில் தோன்றியவன்; பெரிய மலை நாட்டுக்கு உரியவன்; வலிமையும் பெருந்தன்மையும் நற்பண்பும் கொண்டவன்; பொதினி மலைக்குத் தலைவன்.

வண்டுகள் உண்ணும் வண்ணம் நல்ல தேனை மிகுதியாகக் கொண்ட மலர்களைச் சிந்தும் சுரபுன்னை மரங்கள் நிறைந்த நெடுவழியில், மலர்களையுடைய (கொம்பின்றித் தவித்துக்கொண்டிருந்தது) முல்லைக்கொடியொன்று பற்றிப்படரத் தான் ஏறிவந்த பெரிய தேரினை ஈந்தவன் பாரி. அவன், வெள்ளிய அருவிகளைக் கொண்ட பறம்புமலையின் தலைவன்.

உலகம் வியக்கும்படி வெண்மையான பிடரியுடன் தலையை ஆட்டும் குதிரைகளையும் ஏனைய செல்வங்களையும் இனிய மொழிகளுடன் இரவலர்க்கு இல்லையென்னாமல் கொடுப்பவன் காரி என்னும் வள்ளல். இவன், பகைவர் அஞ்சக்கூடிய வகையில் நெருப்பைப் போல் சுடர்விடுகின்ற நீண்ட வேலினையும் வீரக்கழலையும் உடையவன்; தோள்வளையை அணிந்த நீண்ட கைகளை உடையவன்.

ஒளிமிக்க நீல வண்ணக் கல்லையும் நாகம் கொடுத்த ஆடையினையும் மன விருப்பம் கொண்டு ஆலின்கீழ் அமர்ந்த இறைவனுக்குக் கொடுத்தவன், ஆய் என்னும் வள்ளல். இவன் வில் ஏந்தியவன்; சந்தனம் பூசி உலர்ந்த தோள்களை உடையவன்; ஆர்வத்துடன் இனிமையான மொழிகளைப் பேசுபவன்.

XII Std Tamil Chap_8.indd 201 17-12-2020 16:21:51

நறுமணம் கமழும் பெரிய மலைச்சாரலில் இருந்த அழகுமிக்க நெல்லி மரத்தின் கனி, உயிர் நிலைபெற்று வாழ உதவும் அமுதத்தின் தன்மையுடையது. அது தனக்குக் கிடைக்கப் பெற்றபோது, அதனை (தான் உண்ணாமல்) ஔவைக்கு வழங்கியவன் அதிகன் என்னும் வள்ளல்; வலிமையும் சினமும் ஒளியும்மிக்க வேலினை உடையவன்: கடல் போன்று ஒலிக்கும் படையினையும் உடையவன் .

நள்ளி என்னும் வள்ளல், தன்னிடம் உள்ள பொருட் செல்வத்தை இல்லையென்னாது நட்புக் கொண்டவர் உள்ளம் மகிழ்ச்சி அடையுமாறு இனிய வாழ்விற்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் குறிப்பறிந்து வழங்கும் பெரிய கைகளை உடையவன். இவன் காலந்தவறாமல் பெய்யும் மழை போன்றவன்; போர்த் தொழிலில் வல்லமையுடையவன்; மழைக்காற்று எப்போதும் இருக்கக்கூடிய உயர்ந்த மலை நாட்டை உடையவன்.

செறிவான கிளைகளில் மணம் வீசும் மலர்கள் நிறைந்த, சுரபுன்னை மரங்கள் சூழ்ந்த சிறிய மலை நாட்டைக் கூத்தர்க்குப் பரிசாக வழங்கியவன் ஓரி என்னும் வள்ளல். இவன் காரி என்னும் வலிமைமிக்க குதிரையைக் கொண்ட காரி என்பவனை எதிர்த்து நின்று அஞ்சாமல் போரிட்டவன்; ஓரி என்னும் வலிமைமிக்க குதிரையைத் தன்னிடத்தில் கொண்டவன்.

மேலே குறிப்பிட்ட ஏழு வள்ளல்கள் ஈகை என்னும் பாரத்தை இழுத்துச் சென்றனர்; ஆனால் நல்லியக்கோடன், தானே தனியொருவனாக இருந்து அந்த ஈகையின் பாரத்தைத் தாங்கி இழுத்துச் செல்லும் வலிமை உடையவன்.

தெரிந்து தெளிவோம்

கடையெழு வள்ளல்களும் – ஆண்ட நாடுகளும்

பேகனின் ஊரான ஆவினன்குடி 'பொதினி' என்றழைக்கப்பட்டு, தற்போது பழனி எனப்படுகிறது. பழனி மலையும் அதைச் சுற்றிய மலைப்பகுதிகளும் பேகனது நாடாகும்.

பாரியின் நாடு பறம்பு மலையும், அதைச் சூழ்ந்திருந்த முந்நூறு ஊர்களும் ஆகும். பறம்பு மலையே பிறம்பு மலையாகி, தற்போது பிரான்மலை எனப்படுகிறது. இம்மலை சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் சிங்கம்புணரிக்கு அருகில் உள்ளது.

காரியின் நாடு (மலையமான் திருமுடிக்காரி) மலையமான் நாடு என்பதாகும். இது மருவி 'மலாடு' எனப்பட்டது. இது விழுப்புரம் மாவட்டம் தென்பெண்ணை ஆற்றங்கரையில் அமைந்துள்ள திருக்கோவிலூரும் (திருக்கோயிலூர்) அதைச் சூழ்ந்துள்ள பகுதிகளுமாகும்.

ஆய் நாடு (ஆய் அண்டிரன்) – பொதிய மலை எனப்படும் மலை நாட்டுப் பகுதியாகும். தற்போது அகத்தியர் மலை என்றும் அழைக்கப்படுகிறது. இது திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள குற்றாலம், பாபநாசம் ஆகிய மலைப்பகுதிகளும் அதைச் சூழ்ந்துள்ள பகுதிகளுமாகும்.

அதியமான் நாடு (அதிகமான் நெடுமான் அஞ்சி) 'தகடூர்' என்றழைக்கப்பட்ட தருமபுரியைத் தலைநகராகக் கொண்டு விளங்கிய பகுதி. இப்பகுதியில் உள்ள 'பூரிக்கல்' மலைப்பகுதியில் இருந்து பறித்து வந்த நெல்லிக்கனியையே ஔவையாருக்கு அதிகமான் கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

நள்ளியின் நாடு (நளிமலை நாடன்) நெடுங்கோடு மலை முகடு என்றழைக்கப்பட்ட பகுதி. தற்போது உதகமண்டலம் 'ஊட்டி' என்று கூறப்படுகிறது.

ஓரியின் நாடு (வல்வில் ஓரி) – நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 'கொல்லி மலையும்' அதைச் சூழ்ந்துள்ள பல ஊர்களும் ஆகும்.

ஓய்மா நாட்டு நல்லியக்கோடனது நாடு

திண்டிவனத்தைச் சார்ந்தது ஓய்மா நாடு என அழைக்கப்பட்ட நிலப்பகுதி ஆகும்.

ஏழு வள்ளல்கள் ஆண்ட இடங்கள் நிலப்படம்



தெரியுமா?

முல்லைக் கொடி படரத் தேர் தந்த பாரியின் செயலும், மயிலுக்குத் தன் ஆடையைத் தந்த பேகனின் செயலும் அறியாமையால் செய்யப்பட்டவையல்ல. இஃது அவர்களின் ஈகை உணர்வின் காரணமாகச் செய்யப்பட்டதேயாகும். இச்செயலே இவர்களின் பெருமைக்குப் புகழ் சேர்ப்பதாகிவிட்டது. இதையே, பழமொழி நானூறு, 'அறிமடமும் சான்றோர்க்கு அணி' என்று கூறுகிறது.

புறநானூறு குறிப்பிடும் மற்றொரு வள்ளல் குமணன். இவன் முதிர மலையை (பழனி மலைத்தொடர்களில் ஒன்று) ஆட்சி செய்த குறுநில மன்னனாவான். தன் தம்பியாகிய இளங்குமணனிடம் நாட்டைக் கொடுத்துவிட்டுக் காட்டில் மறைந்து வாழ்ந்தான். இளங்குமணன் தன் அண்ணனின் தலையைக் கொய்து தருவோர்க்குப் பரிசில் அறிவித்திருந்தான். அப்போது தன்னை நாடிப் பரிசில் பெற வந்த பெருந்தலைச் சாத்தனார் எனும் புலவர்க்குக் கொடுப்பதற்குத் தன்னிடம் பொருள் இல்லாமையால், தன் இடையிலுள்ள உறைவாளைத் தந்து, "தன் தலையை அரிந்து சென்று, இளங்குமணனிடம் கொடுத்துப் பரிசில் பெற்றுச் செல்லுமாறு" கேட்டுக் கொண்டான். இதனால் இவன் 'தமிழுக்குத் தலை கொடுத்த குமண வள்ளல்' என்று போற்றப்படுகிறான். புறநானூறு 158 – 164, 165 ஆகிய பாடல்களிலும் இவனைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

இலக்கணக் குறிப்பு

வாய்த்த, உவப்ப, கொடுத்த, ஈந்த – பெயரெச்சங்கள்; **கவாஅன்** – செய்யுளிசையளபெடை; **தடக்கை** – உரிச்சொல் தொடர்; **நீலம்** – ஆகுபெயர், **அருந்திறல், நெடுவழி, வெள்ளருவி, நெடுவேல், நன்மொழி, நன்னாடு** – பண்புத் தொகைகள்; **கடல்தானை** – உவமைத்தொகை; **அரவக்கடல்** – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை; **மலைதல்** – தொழிற்பெயர்; **விரிகடல்** – வினைத்தொகை

உறுப்பிலக்கணம்

ஈந்த = ஈ + த்(ந்) + த் + அ

ஈ – பகுதி; த் – சந்தி (' ந்' ஆனது விகாரம்); த் – இறந்தகால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி

அமர்ந்தனன் = அமர் + த்(ந்) + த் + அன் + அன்

அமர் – பகுதி; த் – சந்தி (' ந்' ஆனது விகாரம்); த் – இறந்தகால இடைநிலை; அன் – சாரியை; அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

தாங்கிய = தாங்கு + இ(ன்) + ய் + அ

தாங்கு – பகுதி; இ(ன்) – இறந்தகால இடைநிலை; ய் – உடம்படுமெய் சந்தி; அ – பெயரெச்ச விகுதி

புணர்ச்சி விதி

நன்மொழி = நன்மை + மொழி

விதி : 'ஈறுபோதல்' – 'நன்மொழி'.

உரனுடை = உரன் + உடை

விதி : 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – 'உரனுடை'.

சிறுபாணன் பயணம்

நல்லூர் (சிறுபாணன் பயணம் தொடங்கிய இடம்)
↓ 8கல்
எயிற்பட்டினம் (மரக்காணம்)
↓ 12 கல்
வேலூர் (உப்பு வேலூர்)
↓ 11 கல்
ஆமூர் (நல்லாமூர்)
↓ 6கல்
கிடங்கில் (திண்டிவனம்)
(சிறுபாணன் பயணம் முடித்த இடம்)

– மா. இராசமாணிக்கனார்,
பத்துப்பாட்டு ஆராய்ச்சி

நூல்வெளி

சிறுபாணாற்றுப்படையை இயற்றியவர் நல்லூர் நத்தத்தனார். இது பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று; ஓய்மாநாட்டு மன்னனான நல்லியக்கோடனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு 269 அடிகளில் எழுதப்பட்ட நூல். பரிசுபெற்ற பாணன் ஒருவன் தான் வழியில் கண்ட மற்றொரு பாணனை அந்த அரசனிடம் ஆற்றுப்படுத்துவதாக இது அமைந்துள்ளது. வள்ளல்களாகக் கருதப்பட்ட குறுநில மன்னர்கள் பற்றிய செய்திகள் இப்பாடப்பகுதியில் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன.

கற்பவை கற்றபின்...

1. எதையும் எதிர்பாராமல் நீங்கள் பிறருக்கு உதவி செய்த நிகழ்வை வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.
2. தமிழர்கள் கொடைத் தன்மையில் சிறந்து விளங்கினர் என்பதற்குச் சான்றுகள் திரட்டி ஒப்படைவு எழுதுக.

கவிதைப் பேழை

பண்பாடு

நு

மலைபடுகடாம்

– பெருங்கௌசிகனார்

83G4JE

நுழையும்முன்

பண்டைத் தமிழர்கள் பண்பில் மட்டுமன்றி, கலைகளிலும் சிறந்து விளங்கினர். அன்று கூத்தர், பாணர், விறலியர் போன்ற கலைஞர்கள் ஊர் ஊராகச் சென்று தம் கலைத்திறன்களை நிகழ்த்திக்காட்டி மக்களை மகிழ்வித்தனர். அவர்களுக்கு மன்னர்களும் வள்ளல்களும் விருந்தோம்பியும் பரிசளித்தும் போற்றினர். அவ்வகையாக விருந்தோம்பிய தன்மையைக் காட்சிப்படுத்துகிறது தினைச்சோற்று விருந்து.



அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி,
கன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி,

அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரியம் எனினே,

நும்இல் போல நில்லாது புக்கு,
கிழவிர் போலக் கேளாது கெழீஇ
சேட் புலம்பு அகல இனிய கூறி
பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்

அடி : 158 – 169

சொல்லும் பொருளும்

அசைஇ	–	இளைப்பாறி,	அல்கி	–	தங்கி
கடும்பு	–	சுற்றம்,	நரலும்	–	ஒலிக்கும்
ஆரி	–	அருமை,	படுகர்	–	பள்ளம்
வயிரியம்	–	கூத்தர்,	வேவை	–	வெந்தது
இறடி	–	தினை,	பொம்மல்	–	சோறு

பாடலின் பொருள்

நன்னனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்ற கூத்தர், பரிசில் பெறப்போகும் கூத்தரைக் கானவர்களின் வளம் நிறைந்த புதுவருவாயை உடைய சிறிய ஊர்களில் தங்கி உணவு பெறுவதற்கு வழிப்படுத்துதல்.

"பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள்; இரவில் சேர்ந்து தங்குங்கள்; எரியும் நெருப்பைப் போல ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்துகொள்ளுங்கள்; சிவந்த பூக்கள் கொண்ட அசோக மரங்களை உடைய பொருத்தமான பாதையில் செல்லுங்கள்; அசையும் மூங்கில்கள் ஓசை எழுப்பும் கடினப்பாதையில் சென்று மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள். அங்குள்ளவர்களிடம், 'பகைவரைப் பொறாமல் போர் செய்யும் வலிய முயற்சியும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர்கள்' என்று சொல்லுங்கள்.

10th_Tamil_Unit 3.indd 56 24-01-2020 10.05.33 AM

அதன் பிறகு நீங்கள் உங்கள் வீட்டிற்குள் போவது போலவே அவர்களுடைய வீட்டுக்குள் உரிமையுடன் நுழையுங்கள். உறவினர் போலவே அவர்கள் உங்களுடன் பழகுவர். நீண்ட வழியைக் கடந்துவந்த உங்களின் துன்பம்தீர இனிய சொற்களைக் கூறுவர். அங்கே, நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச் சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள்."

இலக்கணக் குறிப்பு

அசைஇ, கெழீஇ – சொல்லிசை அளபெடைகள்

பரூஉக், குரூஉக்கண் } – சொல்லிசை அளபெடைகள்

பகுபத உறுப்பிலக்கணம்

மலைந்து – மலை + த்(ந்) + த் + உ

மலை – பகுதி

த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

உ – வினையெச்ச விகுதி

பொழிந்த – பொழி + த்(ந்) + த் + அ

பொழி – பகுதி

த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

அ – பெயரெச்ச விகுதி

ஆற்றுப்படுத்தும் கூத்தன், வள்ளலை நாடி எதிர்வரும் கூத்தனை அழைத்து, யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம், நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம்பெற்று வாழ்வாயாக என்று கூறுதல் ஆற்றுப்படை.

நூல் வெளி

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று 'மலைபடுகடாம்'. 583 அடிகளைக் கொண்ட இது கூத்தராற்றுப்படை எனவும் அழைக்கப்படுகிறது; மலையை யானையாக உருவகம் செய்து மலையில் எழும் பலவகை ஓசைகளை அதன் மதம் என்று விளக்குவதால் இதற்கு மலைபடுகடாம் எனக் கற்பனை நயம் வாய்ந்த பெயர் சூட்டப்பட்டுள்ளது.

நன்னன் என்னும் குறுநில மன்னனைப் பாட்டுடைத் தலைவனாக் கொண்டு இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் பாடியது மலைபடுகடாம்.

கற்பவை கற்றபின்...

1. **உணவு, விருந்து குறித்த பழமொழிகளைத் திரட்டி, அவை சார்ந்த நிகழ்வுகளை எடுத்துரைக்க.**

   எ.கா. 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை'

2. **பத்தியைப் படித்து, வார இதழ் ஒன்றிற்கு அனுப்பும் வகையில் சமையல் குறிப்பாக மாற்றுக.**

கம்மங்கூழ்

பொசுக்குகிறது வெயில். ஒரு துளி மழை பட்டால் வறுத்த உளுந்தின் வாசம் பரப்பும் வறண்ட மண். வெடித்த நிலம். செழித்து விளைகிறது கம்மம் பயிர். உரலில் குத்தி, சுளகில் புடைக்க அதன் உமி நீங்கும். நீர் தெளித்துத் தெளித்து, மீண்டும் உரலில் இடிக்க அது ஒன்றுடன் ஒன்று ஒட்டி மாவாகும். உப்புக்கலந்து, உலையில் ஏற்றி, கொதிக்கும் நீரில் கரையவிட்டுக் கிண்ட, கட்டியாகி அது சோறாகும். கம்மஞ் சோற்றை உருட்டிவைத்து, பின் மோர் விட்டுக் கரைத்தால் அது கம்மங்கஞ்சி அல்லது கம்மங்கூழ். மோர்மிளகாய் வற்றல், உப்பில் தோய்த்த பச்சை மிளகாய் அல்லது சின்ன வெங்காயம் கடித்துக் கஞ்சியைக் குடித்தால் உச்சி தொட்டு உள்ளங்கால்வரை தேகம் குளிர்ந்து போகும். அனல் அடங்கும். உயிர் வரும். கம்பு – கறுப்பு நிறக் கரிசல் மண்ணின் இயற்கைத் தங்கம்.

10th_Tamil_Unit 3.indd 57 24-01-2020 10.05.33 AM

கவிதைப் பேழை

நாடு

எ

மதுரைக்காஞ்சி

–மாங்குடி மருதனார்

KFAKHX



மதுரையைச் சிறப்பித்துப் பாடியுள்ள நூல்களுள் பதினெண் மேற்கணக்கின், மதுரைக்காஞ்சி முதன்மையானது. இந்நூலில் மதுரை மாநகர் மக்களின் வாழ்விடம், கோட்டை கொத்தளம், அந்நகரில் நிகழும் திருவிழாக்கள், பலவகைப் பள்ளிகள், நாற்பெருங்குழு, அந்தி வணிகம் ஆகிய காட்சிகள் கவித்துவமாய் விரிந்துள்ளன. காலை தொடங்கி மறுநாள் விடியல்வரையில் நகரத்தைச் சுற்றிவந்து கண்ணுற்றதை முறைப்படுத்திக் கூறுவது போன்ற வருணனைப் பாடல் இது.

மதுரை மாநகர்

மண்உற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கின்
விண்உற ஓங்கிய பல்படைப் புரிசை
தொல்வலி நிலைஇய, அணங்குடை நெடுநிலை
நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்
மழைஆடும் மலையின் நிவந்த மாடமொடு
வையை அன்ன வழக்குடை வாயில்
வகைபெற எழுந்து வானம் மூழ்கி
சில்காற்று இசைக்கும் பல்புழை நல்இல்
ஆறு கிடந்தன்ன அகல்நெடுந் தெருவில்
பல்வேறு குழாஅத்து இசைஎழுந்து ஒலிப்ப
மாகால் எடுத்த முந்நீர் போல
முழங்கிசை நன்பணை அறைவனர் நுவல
கயம் குடைந்தன்ன இயம்தொட்டு இமிழிசை
மகிழ்ந்தோர் ஆடும் கலிகொள் சும்மை
ஓவுக் கண்டன்ன இரு பெரு நியமத்து

(அடிகள் 351–365)

9th_Tamil_Pages 122-264.indd 191 22-12-2020 15:57:57

மண்வரை ஆழ்ந்த தெளிந்த அகழி,
விண்ணை முட்டும் கற்படை மதில்கள்,
தொன்மை உடைய வலிமை மிக்க
தெய்வத் தன்மை பொருந்திய நெடுவாசல்,
பூசிய நெய்யால் கறுத்த கதவுகள்,
முகில்கள் உலவும் மலையொத்த மாடம்,
வற்றாத வையைபோல் மக்கள் செல்லும் வாயில்,
மாடம் கூடம் மண்டபம் எனப்பல
வகைபெற எழுந்து வானம் மூழ்கி
தென்றல் வீசும் சாளர இல்லம்,
ஆற்றைப் போன்ற அகல்நெடும் தெருவில்
பலமொழி பேசுவோர் எழுப்பும் பேச்சொலி,
பெருங்காற்று புகுந்த கடலொலி போல
விழாவின் நிகழ்வுகள் அறையும் முரசு,
நீர்குடைந்ததுபோல் கருவிகளின் இன்னிசை,
கேட்டோர் ஆடும் ஆரவார ஓசை,
ஓவியம் போன்ற இருபெரும் கடைத் தெருக்கள்.

பாடலின் பொருள்

மதுரை மாநகரில் ஆழமான தெளிந்த நீரையுடைய அகழி உள்ளது. பல கற்களைக் கொண்டு கட்டப்பட்ட மதில் வானளவு உயர்ந்துள்ளது. பழைமையானதும் வலிமை மிக்கதும் தெய்வத்தன்மை பொருந்தியதுமாகிய வாயில் உள்ளது. அவ்வாயில் நெய்பூசியதால் கருமையடைந்த வலிமையான கதவுகளை உடையது. மேகங்கள் உலாவும் மலைபோல் மாளிகைகள் உயர்ந்து உள்ளன. இடைவிடாது ஓடுகின்ற வையை ஆற்றைப்போல மக்கள் எப்போதும் வாயில்கள்வழிச் செல்கின்றனர்.

மண்டபம், கூடம், அடுக்களை எனப் பல்வேறு பிரிவுகளைக்கொண்டு வான்வரை ஓங்கிய தென்றல் காற்று இசைக்கும் பல சாளரங்களையுடைய நல்ல இல்லங்கள் உள்ளன. ஆறு போன்ற அகலமான நீண்ட தெருக்களில் பொருள்களை வாங்க வந்த மக்கள் பேசும் பல்வேறு மொழிகள் ஒலிக்கின்றன. விழா பற்றிய முரசறைவோரின் முழக்கம் பெருங்காற்று புகுந்த கடலொலிபோல் ஒலிக்கிறது. இசைக்கருவிகளை இயக்குவதால் உண்டாகும் இசை, நீர்நிலைகளைக் கையால் குடைந்து விளையாடும் தன்மைபோல எழுகிறது. அதனைக் கேட்ட மக்கள் தெருக்களில் ஆரவாரத்தோடு ஆடுகின்றனர். பெரிய தெருக்களில் இருக்கும் நாளங்காடியும் அல்லங்காடியும் ஓவியங்கள்போலக் காட்சியளிக்கின்றன.

9th_Tamil_Pages 122-264.indd 192 22-12-2020 15:57:58

தெரியுமா?

"பொறிமயிர் வாரணம் ...
கூட்டுறை வயமாப் புலியொடு குழும" (மதுரைக்காஞ்சி 673 – 677 அடிகள்) என்ற அடிகளின் மூலமாக மதுரையில் வனவிலங்குச் சரணாலயம் இருந்த செய்தியை மதுரைக் காஞ்சியின் மூலம் அறியலாம்.

பத்துப்பாட்டு ஆராய்ச்சி – மா. இராசமாணிக்கனார்

சொல்லும் பொருளும்

புரிசை – மதில்; அணங்கு – தெய்வம்; சில்காற்று – தென்றல்; புழை – சாளரம்; மாகால் – பெருங்காற்று; முந்நீர் – கடல்; பணை – முரசு; கயம் – நீர்நிலை; ஓவு – ஓவியம்; நியமம் – அங்காடி.

இலக்கணக் குறிப்பு

ஓங்கிய – பெயரெச்சம்; நிலைஇய – சொல்லிசை அளபெடை; குழாஅத்து – செய்யுளிசை அளபெடை; வாயில் – இலக்கணப் போலி.

மா கால் – உரிச்சொல் தொடர்; முழங்கிசை, இமிழிசை – வினைத்தொகைகள்.

நெடுநிலை, முந்நீர் – பண்புத் தொகைகள்;
மகிழ்ந்தோர் – வினையாலணையும் பெயர்.

பகுபத உறுப்பிலக்கணம்

ஆழ்ந்த – ஆழ் + த்(ந்) + த் + அ

ஆழ் – பகுதி; த் – சந்தி (ந் ஆனது விகாரம்);

த் – இறந்தகால இடைநிலை;
அ – பெயரெச்ச விகுதி.

ஓங்கிய – ஓங்கு + இ(ன்) + ய் + அ

ஓங்கு – பகுதி;
இ(ன்) – இறந்தகால இடைநிலை

ய் – உடம்படுமெய் அ – பெயரெச்ச விகுதி.

மகிழ்ந்தோர் – மகிழ் + த்(ந்) + த் + ஓர்

மகிழ் – பகுதி;

த் – சந்தி (ந் ஆனது விகாரம்);

த் – இறந்தகால இடைநிலை;

ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி

நூல் வெளி

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மதுரைக்காஞ்சி. காஞ்சி என்றால் நிலையாமை என்பது பொருள். மதுரையின் சிறப்புகளைப் பாடுவதாலும் நிலையாமையைப் பற்றிக் கூறுவதாலும் மதுரைக்காஞ்சி எனப்பட்டது. இந்நூல் 782 அடிகளைக் கொண்டது. அவற்றுள் 354 அடிகள் மதுரையைப் பற்றி மட்டும் சிறப்பித்துக் கூறுகின்றன. இதைப் 'பெருகுவள மதுரைக்காஞ்சி' என்பர். இதன் பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.

மதுரைக்காஞ்சியைப் பாடியவர் மாங்குடி மருதனார். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மாங்குடி என்னும் ஊரில் பிறந்தவர். எட்டுத்தொகையில் பதின்மூன்று பாடல்களைப் பாடியுள்ளார்.

கற்பவை கற்றபின்...

1. *உங்கள் ஊரின் பெயர்க் காரணத்தை எழுதி வகுப்பறையில் கலந்துரையாடுக.*
2. *தமிழ்த்தாயின் ஆணிவேர் துளிர்த்த இடம் மதுரை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட உலகின் தொன்மை நகரங்களில் ஒன்று மதுரை. அந்நகரத்தில் இயலும் இசையும் நாடகமும் பொங்கிப் பெருகின – இத்தொடர்களுக்கு வலிமை சேர்க்கும் வகையில் கருத்துகளைத் திரட்டி ஐந்து மணித்துளிகள் பேசுக.*

KFJGYK

9th_Tamil_Pages 122-264.indd 193 22-12-2020 15:57:58

கவிதைப்பேழை

இயற்கை **உ**

நெடுநல்வாடை

– நக்கீரர்

9CHWK3

'ஐப்பசி அடை மழை! கார்த்திகை கனமழை!' என்பது சொலவடை, ஓராண்டை ஆறு பருவங்களாக வகைப்படுத்திய பழந்தமிழர் ஐப்பசி, கார்த்திகை மாதங்களைக் கூதிர்ப்பருவம் என்று அழைத்தனர். பருவ மாற்றங்களால் உயிரினங்களின் இயல்பு வாழ்க்கை, மாற்றம் பெறுகிறது. முல்லை நில மக்கள், பறவைகள்,விலங்குகள் இவற்றின் வாழ்வில் மழையும் குளிரும் ஏற்படுத்தும் மாற்றத்தை சங்க இலக்கியம் பதிவு செய்துள்ளது.

'வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
*கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க**
மாமேயல் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோள் ஒழியக் கடிய வீசிக்
குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள். [1–12]

பா வகை : நேரிசை ஆசிரியப்பா

சொல்லும் பொருளும்

புதுப்பெயல் – புதுமழை; **ஆர்கலி** – வெள்ளம்; **கொடுங்கோல்** – வளைந்த கோல்; **புலம்பு** – தனிமை; **கண்ணி** – தலையில் சூடும் மாலை; **கவுள்** – கன்னம்; **மா** – விலங்கு.

திணை : வாகை

வாகைத் திணை – வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப்பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவது வாகைத் திணை.

துறை : கூதிர்ப்பாசறை

கூதிர்ப்பாசறை – போர்மேற் சென்ற அரசன் குளிர் காலத்தில் தங்கும் படைவீடு.

பாடலின் பொருள்

தான் தங்கியிருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து எழுந்த மேகமானது உலகம் குளிருமாறு புதிய மழையைப் பொழிந்தது. தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த, வளைந்த கோலையுடைய ஆயர் எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலங்களில் மேய விட்டனர். தாம் பழகிய நிலத்தை விட்டுப் பெயரும் நிலையால் வருத்தம் அடைந்தனர். அவர்கள் தலையில் சூடியிருந்த நீண்ட இதழ்களையுடைய காந்தள் மாலை கசங்கியது. பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றியபோதிலும் அவர்களது பற்கள் நடுங்கின.

விலங்குகள் குளிர்மிகுதியால் மேய்ச்சலை மறந்தன. குரங்குகள் நடுங்கின.

மரங்களில் தங்கியிருந்த பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன. பசுக்கள் பாலுண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன. மலையையே குளிரச் செய்வது போன்றிருந்தது அக்குளிர்கால நள்ளிரவு.

இலக்கணக் குறிப்பு

வளை இ – சொல்லிசை அளபெடை;

பொய்யா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்;

புதுப்பெயல், கொடுங்கோல் – பண்புத்தொகைகள்.

உறுப்பிலக்கணம்

கலங்கி = **கலங்கு + இ**

கலங்கு – பகுதி, இ – வினையெச்ச விகுதி

புணர்ச்சி விதி

இனநிரை = **இனம் + நிரை**

விதி : மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் – இனநிரை

புதுப்பெயல் = **புதுமை + பெயல்**

விதி :ஈறுபோதல் – புது + பெயல்

விதி : இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் – புதுப்பெயல்

நூல்வெளி

பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் இயற்றிய நூல் நெடுநல்வாடை. இது பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று; 188 அடிகளைக் கொண்டது; ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது. இப்பாடலின் பெயர் இருவகையில் பொருள் சிறந்து விளங்குகிறது. தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் துன்பமிகுதியால் நெடுவாடையாகவும் போர்ப் பாசறையிலிருக்கும் தலைவனுக்கு வெற்றி பெற ஏதுவான நல்வாடையாகவும் இருப்பதால் நெடுநல்வாடை எனும் பெயர் பெற்றது.

கற்பவை கற்றபின்...

தற்கால வாழ்க்கைமுறையில் மழை, குளிர் காலங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவது குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.

கவிதைப் பேழை

இயற்கை

உ

முல்லைப்பாட்டு

– நப்பூதனார்

8HYYKQ

நுழையும்முன்

இயற்கைச் சூழல் நமக்குள் இனிய உணர்வுகளைத் தூண்டுகிறது. தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வைக் கொண்டிருந்தனர். மழைக்காலத்தில் அவர்கள் வாழ்வை எதிர்கொள்கிற இயல்பு இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மழையின் சீற்றம் இயல்பு வாழ்வில் ஏற்படுத்தும் மாற்றங்களைச் சங்க இலக்கியம் படம்பிடித்துக் காட்டுகிறது.

நல்லோர் விரிச்சி கேட்டல்

நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை,
அருங்கடி மூதூர் மருங்கில் போகி,
யாழ்இசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லொடு,
நாழி கொண்ட, நறுவீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது,
பெருமுது பெண்டிர், விரிச்சி நிற்ப
**சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்*
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்" என்போள்
*நன்னர் நன்மொழி கேட்டனம் **

அடி : 1–17

10th_Tamil_Unit 2.indd 33 24-01-2020 10.05.06 AM

சொல்லும் பொருளும்

நனந்தலை உலகம் – அகன்ற உலகம்
நேமி – சக்கரம்
கோடு – மலை
கொடுஞ்செலவு – விரைவாகச் செல்லுதல்
நறுவீ – நறுமணமுடைய மலர்கள்
தூஉய் – தூவி
விரிச்சி – நற்சொல்
சுவல் – தோள்

பாடலின் பொருள்

அகன்ற உலகத்தை வளைத்துப் பெருமழை பொழிகிறது. வலம்புரிச்சங்கு பொறித்த கைகளையுடைய திருமால், குறுகிய வடிவம் கொண்டு மாவலி மன்னன் நீர் வார்த்துத் தரும்பொழுது, மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்து உயர்ந்து நிற்பது போன்றுள்ளது மழைமேகம். அம்மேகம், ஒலிக்கும் கடலின் குளிர்நீரைப் பருகிப் பெருந்தோற்றம் கொண்டு, வலமாய் எழுந்து, மலையைச் சூழ்ந்து, விரைந்த வேகத்துடன் பெருமழையைப் பொழிகிறது.

துன்பத்தைச் செய்கின்ற அம்மாலைப்பொழுதில், முதிய பெண்கள் மிகுந்த காவலையுடைய ஊர்ப்பக்கம் சென்றனர். யாழிசை போன்று ஒலிக்கும் வண்டுகள் சூழ்ந்து ஆரவாரிக்கும் நறுமணம் கொண்ட அரும்புகள்; அந்த மலர்ந்த முல்லைப் பூக்களோடு நாழியில் கொண்டு வந்த நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின்முன் தூவினர். பிறகு தெய்வத்தைத் தொழுது, தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர்.

அங்கு, சிறு தாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக்கொண்டிருந்தது. அதன் வருத்தத்தை ஓர் இடைமகள் கண்டாள். குளிர்தாங்காமல் கைகளைக் கட்டியபடி நின்ற அவள், "புல்லை மேய்ந்து உன் தாய்மார் வளைந்த கத்தியை உடைய கம்பைக் கொண்ட எம் இடையர் ஓட்டிவர இப்போது வந்துவிடுவர், வருந்தாதே" என்றாள். இது நல்ல சொல் எனக்கொண்டு முதுபெண்கள் தலைவியிடம் *நற்சொல்லை நாங்கள் கேட்டோம்* என்று கூறினர். இவ்வாறு தலைவன் வருகை குறித்து முதுபெண்டிர் விரிச்சி கேட்டு நின்றனர்.

நின் தலைவன் பகைவரை வென்று திறைப்பொருளோடு வருவது உறுதி. தலைவியே! மனத்தடுமாற்றம் கொள்ளாதே! என ஆற்றுப்படுத்தினர் முதுபெண்டிர்.

இலக்கணக்குறிப்பு

மூதூர் – பண்புத்தொகை
உறுதுயர் – வினைத்தொகை
கைதொழுது – மூன்றாம் வேற்றுமைத் தொகை
தடக்கை – உரிச்சொல் தொடர்

பகுபத உறுப்பிலக்கணம்

பொறித்த – பொறி + த் + த் +அ
பொறி – பகுதி
த் – சந்தி
த் – இறந்தகால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி

தெரிந்து தெளிவோம்

விரிச்சி

ஏதேனும் ஒரு செயல் நன்றாக முடியுமோ? முடியாதோ? என ஐயம் கொண்ட பெண்கள், மக்கள் நடமாட்டம் குறைவாக இருக்கும் ஊர்ப்பக்கத்தில் போய், தெய்வத்தைத் தொழுது நின்று அயலார் பேசும் சொல்லைக் கூர்ந்து கேட்பர்; அவர்கள் நல்ல சொல்லைக் கூறின் தம் செயல் நன்மையில் முடியும் என்றும் தீய மொழியைக் கூறின் தீதாய் முடியும் என்றும் கொள்வர்.

10th_Tamil_Unit 2.indd 34 24-01-2020 10.05.06 AM

பாடப்பகுதிப் பாடலில் இடம்பெற்றுள்ள முதல் கரு உரிப்பொருள்கள்



நூல் வெளி

முல்லைப்பாட்டு, பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. இது 103 அடிகளைக் கொண்டது. இப்பாடலின் 1– 17அடிகள் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளன. முல்லைப்பாட்டு ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது; முல்லை நிலத்தைப் பற்றிப் பாடப்பட்டது; பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடைய நூல் இது. இதைப் படைத்தவர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார்.

கற்பவை கற்றபின்...

1. *முல்லைப்பாட்டின் காட்சிகளிலிருந்து சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழலை உணர முடிகிறதா? உங்களின் கருத்துகளைப் பதிவு செய்க.*

2. *குறிப்புகளைக் கொண்டு ஆர்வமூட்டும் வகையில் கதை/நிகழ்வை எழுதுக.*

   அமைதி – வனம் – மனத்தைத் தொட்டது – கொஞ்சம் அச்சம் – ஆனால் பிடித்திருந்தது – இரவில் வீட்டின் அமைதியை விட – வனத்தின் அமைதி – புதுமை – கால்கள் தரையில் – இலைகளின் சலசலப்பு – பறவைகள் மரங்களின் மேல் – சிறகடிப்பு – அருகில் திரும்பியவுடன் – திடீரென ஆரவார ஓசை – தண்ணீரின் ஓட்டம் – அழகான ஆறு – உருண்ட சிறுகூழாங்கற்கள் –இயற்கையின் கண்காட்சி

10th_Tamil_Unit 2.indd 35 24-01-2020 10.05.06 AM

கவிதைப்பேழை

இயல் ஐந்து

ஆசாரக்கோவை



நல்லொழுக்கமே நல்ல மனிதர்களை உருவாக்கும். நாம் ஒழுக்க நெறிகளை அறிந்தால்தான் அவற்றைப் பின்பற்றி நல்வாழ்வு வாழ முடியும். இந்த நோக்கத்திற்காகவே நம் முன்னோர் அற நூல்களைப் படைத்தனர். நாம் பின்பற்ற வேண்டிய நற்பண்புகளை அறநூல்கள் விளக்குகின்றன. அவற்றை அறிவோம் வாருங்கள்.

JZ8YSB

நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு
ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் – இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து

– பெருவாயின் முள்ளியார்

சொல்லும் பொருளும்

நன்றியறிதல்	–	பிறர் செய்த உதவியை மறவாமை
ஒப்புரவு	–	எல்லோரையும் சமமாகப் பேணுதல்
நட்டல்	–	நட்புக் கொள்ளுதல்

பாடலின் பொருள்

பிறர் செய்த உதவியை மறவாதிருத்தல்; பிறர் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொள்ளுதல்; இனிய சொற்களைப் பேசுதல்; எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாதிருத்தல்; கல்வி அறிவு பெறுதல்; எல்லோரையும் சமமாகப் பேணுதல்; அறிவுடையவராய் இருத்தல்; நற்பண்புகள் உடையவரோடு நட்புக் கொள்ளுதல் ஆகிய எட்டும் நல்லொழுக்கத்தை விதைக்கும் விதைகள் ஆகும்.

நூல் வெளி

ஆசாரக்கோவையின் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார். இவர் பிறந்த ஊர் கயத்தூர். ஆசாரக்கோவை என்பதற்கு நல்ல ஒழுக்கங்களின் தொகுப்பு என்பது பொருள். இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூல் நூறு வெண்பாக்களைக் கொண்டது.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 100 20-03-2020 17:42:31

கற்பவை கற்றபின்

1. நாம் எந்தெந்த வகையில் பிறருக்கு உதவலாம் என்பது குறித்து நண்பர்களுடன் கலந்துரையாடுக.
2. இந்தப் பாடலில் கூறப்படும் கருத்துகளுக்குப் பொருத்தமான திருக்குறள் அதிகாரங்களின் தலைப்புகளைப் பட்டியலிடுக.
3. "கூடா நட்புக் கேடாய் முடியும்" என்னும் கருத்து அமைந்த கதை ஒன்று கூறுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பிறரிடம் நான் _____ பேசுவேன்.

   அ) கடுஞ்சொல் ஆ) இன்சொல் இ) வன்சொல் ஈ) கொடுஞ்சொல்

2. பிறர் நமக்குச் செய்யும் தீங்கைப் பொறுத்துக்கொள்வது _____ ஆகும்.

   அ) வம்பு ஆ) அமைதி இ) அடக்கம் ஈ) பொறை

3. அறிவு+உடைமை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

   அ) அறிவுடைமை ஆ) அறிவுஉடைமை

   இ) அறியுடைமை ஈ) அறிஉடைமை

4. இவை+எட்டும் என்பதனைச் சேர்த்து எழுதக்கிடைக்கும் சொல் _____

   அ) இவைஎட்டும் ஆ) இவையெட்டும் இ) இவ்வெட்டும் ஈ) இவ்எட்டும்

5. நன்றியறிதல் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

   அ) நன்றி+யறிதல் ஆ) நன்றி+அறிதல் இ) நன்று+அறிதல் ஈ) நன்று+யறிதல்

6. பொறையுடைமை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

   அ) பொறுமை+உடைமை ஆ) பொறை+யுடைமை

   இ) பொறு+யுடைமை ஈ) பொறை+உடைமை

குறுவினா

1. எந்த உயிருக்கும் செய்யக்கூடாதது எது?
2. நாம் யாருடன் நட்புக் கொள்ள வேண்டும்?

JZHUTY

சிறுவினா

ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?

சிந்தனை வினா

1. உங்கள் நண்பரிடம் உங்களுக்குப் பிடித்த பண்புகளைப் பட்டியலிடுக.
2. நல்ல ஒழுக்கங்களை வித்து எனக் கூறுவதின் காரணத்தைச் சிந்தித்து எழுதுக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 101 20-03-2020 17:42:31

கவிதைப்பேழை

இயல் ஐந்து

அழியாச் செல்வம்

E7N8CB

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பல்வகையான செல்வங்களைச் சேர்த்து வைக்கின்றனர். அவற்றுள் சில செல்வங்கள் களவு போகவோ, அழியவோ கூடும். ஆகையால் பெற்றோர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வங்களுள் சிறந்ததும், அழியாததும் ஆகிய செல்வத்தைப் பற்றி அறிவோம்.

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்
எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன
*விச்சைமற்று அல்ல பிற.**

–சமண முனிவர்

சொல்லும் பொருளும்

வைப்புழி – பொருள் சேமித்து வைக்கும் இடம்
கோட்படா –ஒருவரால் கொள்ளப்படாது
வாய்த்து ஈயில் – வாய்க்கும்படி கொடுத்தலும்
விச்சை – கல்வி

பாடலின் பொருள்

கல்வியைப் பொருள் போல வைத்திருப்பினும் அது பிறரால் கொள்ளப்படாது. ஒருவற்கு வாய்க்கும்படி கொடுத்தாலும் குறைவுபடாது. மிக்க சிறப்பினை உடைய அரசராலும் கவர முடியாது. ஆதலால் ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் கல்வியே ஆகும். மற்றவை செல்வம் ஆகா.

நூல் வெளி

நாலடியார் சமண முனிவர்கள் பலரால் எழுதப்பட்ட நூலாகும். இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும். இது நானூறு வெண்பாக்களால் ஆனது. இந்நூலை நாலடி நானூறு என்றும், வேளாண்வேதம் என்றும் அழைப்பர். திருக்குறள் போன்றே அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது. இந்நூல் திருக்குறளுக்கு இணையாக வைத்துப் போற்றப்படுவதை நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்னும் தொடர் மூலம் அறியலாம்.

www.cbsetamil.com
7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 103 20-03-2020 17:48:01

கற்பவை கற்றபின்

1. கல்வியின் சிறப்பை விளக்கும் பிற பாடல்களைத் திரட்டி எழுதுக.
2. கல்வியின் சிறப்பை விளக்கும் கதை ஒன்றனை அறிந்து வந்து வகுப்பறையில் கூறுக.
3. பின்வரும் பாடலைப் படித்து மகிழ்க.

வெள்ளத்தால் அழியாது வெந்தணலால்
வேகாது வேந்த ராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும்
நிறைவன்றிக் குறைவு றாது
கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கு
மிகஎளிது கல்வி யென்னும்
உள்ளபொருள் உள்ளிருக்கப் புறத்தேயோர்
பொருள்தேடி உழல்கின் றீரே – தனிப்பாடல் திரட்டு.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் _____.
அ) வீடு ஆ) கல்வி இ) பொருள் ஈ) அணிகலன்
2. கல்வியைப் போல் _____ செல்வம் வேறில்லை.
அ) விலையில்லாத ஆ) கேடில்லாத இ) உயர்வில்லாத ஈ) தவறில்லாத
3. 'வாய்த்தீயின்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.
அ) வாய்த்து + ஈயின் ஆ) வாய் + தீயின் இ) வாய்த்து +தீயின் ஈ) வாய் + ஈயின்
4. 'கேடில்லை ' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.
அ) கேடி + இல்லை ஆ) கே +இல்லை
இ) கேள்வி + இல்லை ஈ) கேடு + இல்லை
5. எவன் + ஒருவன் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.
அ) எவன்ஒருவன் ஆ) எவன்னொருவன் இ) எவனொருவன் ஈ)ஏன்னொருவன்

குறுவினா

கல்விச் செல்வத்தின் இயல்புகளாக நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.

சிறுவினா

கல்விச் செல்வம் குறித்து நாலடியார் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

சிந்தனை வினா

'கல்விச் செல்வம் அழியாத செல்வம் எனப்படுவது ஏன்?' – சிந்தித்து எழுதுக.

www.cbsetamil.com

7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 104 20-03-2020 17:48:02

கவிதைப்பேழை

இயல் ஏழு

விருந்தோம்பல்

LUT6SW

தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளில் 'விருந்தோம்பல்' முதன்மையானதாகும். தமக்கு இல்லாவிட்டாலும் இருப்பதை விருந்தினருக்குத் தந்து மகிழ்ந்த நிகழ்வுகளைத் தமிழ் இலக்கியங்கள் பேசுகின்றன. கடையெழு வள்ளல்களுள் ஒருவர் பாரி. அப்பாரியின் புதல்வியர் பாணர்களுக்குப் புதுமையாக உணவு அளித்த செய்தியைக் கூறும் பாடலை அறிவோம்.

மாரியொன்று இன்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு – நீர்உலையுள்
பொன்திறந்து கொண்டு புகாவாக நல்கினாள்
*ஒன்றுறா முன்றிலோ இல்**

– முன்றுறை அரையனார்

சொல்லும் பொருளும்

மாரி	– மழை	மடமகள்	– இளமகள்
வறந்திருந்த	– வறண்டிருந்த	நல்கினாள்	– கொடுத்தாள்
புகாவாக	– உணவாக	முன்றில்	– வீட்டின் முன் இடம் (திண்ணை) இங்கு வீட்டைக் குறிக்கிறது

பாடலின் பொருள்

மழையின்றி வறட்சி நிலவிய காலத்தில், பாரி மகளிரான அங்கவை, சங்கவை ஆகியோரிடம் பாணர்கள் இரந்து நின்றனர். பாரிமகளிர் உலைநீரில் பொன் இட்டு அவர்களுக்குத் தந்தனர். அதனால் பொருள் ஏதும் இல்லாத வீடு எதுவும் இல்லை என்பதை அறியலாம்.

இப்பாடலில் இடம் பெற்றுள்ள பழமொழி ஒன்றுறா முன்றிலோ இல் என்பதாகும். ஒன்றுமில்லாத வீடு எதுவுமில்லை என்பது இதன் பொருள்.

www.cbsetamil.com

7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 148 20-03-2020 17:48:07

நூல் வெளி

பழமொழி நானூறு நூலின் ஆசிரியர் முன்றுறை அரையனார் ஆவார். இவர் கி.பி. (பொ.ஆ.) நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பர். பழமொழி நானூறு நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல் மூலம் இவர் சமண சமயத்தைச் சேர்ந்தவர் என அறியமுடிகிறது.

பழமொழி நானூறு பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இது நானூறு பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி இடம் பெற்றிருப்பதால் இது பழமொழி நானூறு என்னும் பெயர்பெற்றது. இந்நூலின் ஒரு பாடல் இங்குத் தரப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

1. வள்ளல்கள் எழுவரின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.
2. விருந்தோம்பல் பண்பை விளக்கும் கதை ஒன்றை அறிந்து வந்து வகுப்பறையில் கூறுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மரம் வளர்த்தால் _____ பெறலாம்.

   அ) மாறி ஆ) மாரி இ) காரி ஈ) பாரி

2. 'நீருலையில்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) நீரு + உலையில் ஆ) நீர் + இலையில்

   இ) நீர் + உலையில் ஈ) நீரு + இலையில்

3. மாரி + ஒன்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) மாரியொன்று ஆ) மாரிஒன்று

   இ) மாரியின்று ஈ) மாரியன்று

குறுவினா

1. பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.
2. 'பொருள் ஏதும் இல்லாத வீடுகளே இல்லை' – எவ்வாறு?

சிந்தனை வினா

தமிழர்களின் பிற பண்பாட்டுக் கூறுகளை எழுதுக.

www.cbsetamil.com

7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 149 20-03-2020 17:48:08

கவிதைப் பேழை

கல்வி

ரு

சிறுபஞ்சமூலம்

–காரியாசான்

KBGYV5



மனித வாழ்வைச் செழுமையாக்குபவை அறப் பண்புகளே. காலந்தோறும் தமிழில் அறக் கருத்துகளைக் கூறும் இலக்கியங்கள் தோன்றிவருகின்றன. அவற்றுள் ஒன்றுதான் சிறுபஞ்சமூலம் என்னும் நூல். வயதுக்கும் அறிவுக்கும் சில நேரங்களில் தொடர்பு இருப்பதில்லை. சாதனைக்கு வயது ஒரு தடையில்லை.

அறிவுடையார் தாமே உணர்வர்

பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்,
மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா,
விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு.* *(பா. எண்: 22)*

பாடலின் பொருள்

பூக்காமலே சில மரங்கள் காய்ப்பதுண்டு. இதைப் போலவே நன்மை, தீமைகளை நன்குணர்ந்தவர், வயதில் இளையவராக இருந்தாலும், அவர் மூத்தவரோடு வைத்து எண்ணத் தக்கவரே ஆவார். பாத்தி அமைத்து விதை விதைக்காமலே, தானே முளைத்து வளரும் விதைகளும் உள்ளன. அதைப் போலவே மேதையரும் பிறர் உணர்த்தாமல் எதையும் தாமே உணர்ந்துகொள்வர்.

அணி : பாடலில் எடுத்துக்காட்டு உவமையணி பயின்று வந்துள்ளது.

சொல்லும் பொருளும்

மூவாது – முதுமை அடையாமல்; நாறுவ – முளைப்ப, தாவா – கெடாதிருத்தல்

இலக்கணக் குறிப்பு

அறிவார், வல்லார்– வினையாலணையும் பெயர்கள்

விதையாமை, உரையாமை – எதிர்மறைத் தொழிற்பெயர்கள்

தாவா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

பகுபத உறுப்பிலக்கணம்

உரையாமை = உரை + ய் + ஆ + மை

உரை – பகுதி; ய் – சந்தி (உடம்படுமெய்)

ஆ – எதிர்மறை இடைநிலை

மை – தொழிற்பெயர் விகுதி

காய்க்கும் = காய் + க் + க் + உம்

காய் – பகுதி; க் – சந்தி; க் – எதிர்கால இடைநிலை; உம் – பெயரெச்ச விகுதி

9th_Tamil_Pages 122-264.indd 133 22-12-2020 15:57:38

நூல் வெளி

தமிழில் சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து நீதிநூல்கள் தோன்றின. அவை பதினெண் கீழ்க்கணக்கு எனத் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று சிறுபஞ்சமூலம். ஐந்து சிறிய வேர்கள் என்பது இதன் பொருள். அவை கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகியன. இவ்வேர்களால் ஆன மருந்து உடலின் நோயைப் போக்குகின்றது. அதுபோலச் சிறுபஞ்சமூலப் பாடல்களில் உள்ள ஐந்தைந்து கருத்துகள் மக்களின் அறியாமையைப் போக்கி நல்வழிப்படுத்துவனவாய் அமைந்துள்ளன. இப்பாடல்கள் நன்மை தருவன, தீமை தருவன, நகைப்புக்கு உரியன என்னும் வகையில் வாழ்வியல் உண்மைகளை எடுத்துக்காட்டுகின்றன.

சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் காரியாசான், மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர். காரி என்பது இயற்பெயர். ஆசான் என்பது தொழிலின் அடிப்படையில் அமைந்தபெயர். மாக்காரியாசான் என்று பாயிரச் செய்யுள் இவரைச் சிறப்பிக்கிறது.

தெரிந்து தெளிவோம்

சாதனைக்கு வயது தடையன்று

10 வயதிற்குள்ளாகவே சொற்பொழிவு நிகழ்த்தவும் பாடவும் ஆற்றல் பெற்றவர் வள்ளலார்.

11ஆவது வயதிலேயே அரசவையில் கவிதை எழுதி 'பாரதி' என்னும் பட்டம் பெற்றவர் பாரதியார்.

15ஆவது வயதிலேயே பிரெஞ்சு இலக்கியக் கழகத்துக்குத் தமது கவிதைகளை எழுதியனுப்பியவர் விக்டர் ஹியூகோ.

16ஆவது வயதிலேயே தமது தந்தையின் போர்ப் படையில் தளபதியானவர் மாவீரன் அலெக்சாண்டர்.

17ஆவது வயதிலேயே பைசா நகரச் சாய்ந்த கோபுரத்தின் விளக்கு ஊசலாடுவது குறித்து ஆராய்ந்தவர் அறிவியலாளர் கலீலியோ.

தெரியுமா?

சிறுபஞ்சமூலத்தின் ஒவ்வொரு பாடலிலும் ஐந்து கருத்துகள் இடம்பெற்றுள்ளன. அது போல, ஒரு பாடலில் மூன்று, ஆறு கருத்துகளைக் கொண்ட அறநூல்கள் பதினெண்கீழ்க்கணக்கு வரிசையில் அமைந்துள்ளன. அந்நூல்களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

கற்பவை கற்றபின்...

1. *பூக்காமலே காய்க்கும் மரங்கள், விதைக்காமலே முளைக்கும் விதைகள் எவையெனக் கேட்டறிந்து வகுப்பறையில் கூறுக.*

2. *மூவாது மூத்தவர், காணாது கண்டவர்*
   இவை போல நயம் அமைந்த தொடர்களை உருவாக்குக.

KBQUWS

9th_Tamil_Pages 122-264.indd 134 22-12-2020 15:57:38

அறம்

அ

சங்க இலக்கியத்தில் அறம்

நுழையும்முன்

தமிழர் பொருள் ஈட்டி அறம்செய்து இன்புற்றனர்; இல்வாழ்க்கையை அறவாழ்க்கையாகக் கொண்டனர்; உலகே பரிசாகக் கிடைத்தாலும் பழிதரும் செயல்களைச் செய்ய மறுத்தனர்; சங்க காலத்தில் அறத்தை மனித உறவின் மையமாகக் கொண்டிருந்தனர்; சமயக் கலப்பில்லாத மானிட அறம் இயல்பாக நிலவிய காலம், சங்ககாலம்.

QHUIJW



மனிதன் தனியானவன் அல்லன். அவன் சமூகக் கடலின் ஒருதுளி. அவனுக்குள்ளே சமூகம் – சமூகத்துக்குள்ளே அவன். மனிதன் எல்லாரோடும் எல்லாவற்றோடும் எவ்வளவுக்கெவ்வளவு தன்னை இணைத்துக் கொள்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய மகிழ்ச்சி பெருகுகிறது. இந்த மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க வேண்டும் என்றால் அனைத்தையும் ஊடுருவிச் செல்லும் பொதுவிதியான அறத்தை மனிதன் ஏற்க வேண்டும்.

சங்க காலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்களின் காலத்தை அறநெறிக்காலம் என்பர். அறநெறிக்கால அறங்கள் சமயம் சார்ந்தவை. ஆனால், சங்க கால அறங்கள்

10th_Tamil_Unit 8.indd 184 24-01-2020 10.08.23 AM

இயல்பானவை.'கவிதை வாழ்க்கையின் திறனாய்வு' என்று திறனாய்வாளர் ஆர்னால்டு கூறுகிறார். அந்த வகையில் சங்ககால வாழ்க்கையில் இருந்து உருவான அறங்களே சங்க இலக்கியத்தில் பதிவு பெற்றுள்ளன. சங்க அறங்கள் சமயங்களிடமிருந்து இரவல் பெறப்பட்டவை அல்ல.

அறத்தில் வணிக நோக்கம் கொள்ளாமை

அறம் செய்வதில் வணிக நோக்கம் இருக்கக்கூடாது என்பது சங்ககால மக்களின் கருத்தாக இருந்தது. இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயனை மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கு கூடாது எனக் கூறப்பட்டது.

"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்" – புறம்.

எனச் சங்ககால வள்ளல்களில் ஒருவரான ஆய் பற்றி ஏணிச்சேரி முடமோசியார் குறிப்பிட்டுள்ளார். நோக்கமின்றி அறம் செய்வதே மேன்மை தருவது என்பது இதில் உணர்த்தப்பட்டுள்ளது.

அரசியல் அறம்

சங்கப் பாக்களில் அறம் பற்றிய அறிவுரைகள் பெரும்பாலும் அரசர்களை முதன்மைப்படுத்தியே கூறப்பட்டுள்ளன.

'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்', 'அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்' மன்னர்களுடைய செங்கோலும் வெண்கொற்றக்குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன. அரசன் செங்கோல் போன்று நேரிய ஆட்சியை மேற்கொள்ள வேண்டும் என்பது பல பாடல்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நீர்நிலை பெருக்கி நிலவளம் கண்டு உணவுப்பெருக்கம் காண்பதும் அதனை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும் அரசனின் கடமையாகச் சொல்லப்பட்டது. குற்றங்களை, அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்கிறார் ஊன் பொதிப் பசுங்குடையார். அரசன் அறநெறியில் ஆட்சிசெய்வதற்கு அமைச்சரும் உதவினர். நன்றும் தீதும் ஆய்தலும் அன்பும் அறனும் காத்தலும் அமைச்சர் கடமை என்கிறது மதுரைக்காஞ்சி. 'செம்மை சான்ற காவிதி மாக்கள்' என்று அமைச்சர்களை மாங்குடி மருதனார் போற்றுகிறார்.

அறங்கூறவையம்

அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அறம் கூறு அவையம் பற்றி'அறம் அறக் கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு. உறையூரிலிருந்த அறஅவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது; அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.

போர் அறம்

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு புறப்பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

எறியார் எறிதல் யாவணது எறிந்தோர்
எதிர்சென்று எறிதலும் செல்லான் – புறம் 301.

கொடை

வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது. ஒரு மனிதன் தன்னுடைய மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவதுதான் உண்மையான மகிழ்ச்சி. அதாவது தன் மகிழ்ச்சியை மறப்பதுதான் மகிழ்ச்சி.

10th_Tamil_Unit 8.indd 185 24-01-2020 10.08.24 AM

செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே
(புறம் 189 :7–8)

என்றார் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்.

கொடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்படுவது, பழந்தமிழர் கொடை மாட்சியைப் புலப்படுத்துகிறது. எழுவரின் கொடைப் பெருமை சிறுபாணாற்றுப்படையிலும் பெருஞ்சித்திரனார் பாடலிலும் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆற்றுப்படை இலக்கியங்கள், கொடை இலக்கியங்களாகவே உள்ளன. பதிற்றுப்பத்து சேர அரசர்களின் கொடைப் பதிவாகவே உள்ளது. புறநானூற்றின் கொடைப்பதிவும் குறிப்பிடத்தக்கது.

அரியன என்று கருதாது, தயங்காது கொடுத்தலும் ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாமையும் நாள்தோறும் கொடுத்தலும் கொடைப் பெருமைகளாகப் பேசப்படுகின்றன. வள்ளல்கள் "இல்லோர் ஒக்கல் தலைவன்", "பசிப்பிணி மருத்துவன் " என்றெல்லாம் போற்றப்பட்டனர். வழங்குவதற்குப் பொருள் உள்ளதா? என்று கூடப் பார்க்காமல் கொடுக்கும் பிடவூர்க்கிழான் மகன் பெருஞ்சாத்தனை நக்கீரர் பாராட்டுகிறார். வள்ளலின் பொருள் இரவலனின் பொருள்; வள்ளலின் வறுமை இரவலனின் வறுமை என்று பெரும்பதுமனார் குறிப்பிடுகிறார்.

உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்கிறார் ஔவையார். இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடி வரவழைத்தல் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் இயல்பு என்கிறார் நச்செள்ளையார். பேகன் மறுமை நோக்கிக் கொடுக்காதவன் என்கிறார் பரணர். தன்னை நாடி வந்த பரிசிலன் பொருள் பெறாமல் திரும்புவது, தான் நாட்டை இழந்த துன்பத்தைவிடப் பெருந்துன்பம் எனக் குமணன் வருந்தியதாகப் பெருந்தலைச் சாத்தனார் குறிப்பிட்டுள்ளார். எல்லாவற்றையும் கொடுப்பவன் என்று மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாராட்டுகிறார்.

புற இலக்கியங்களில் மட்டுமன்றி அக இலக்கியங்களிலும் ஈதல் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. ஈயாமை இழிவு, இரப்போர்க்கு ஈயாது வாழ்தலைவிட உயிரை விட்டுவிடுதல் மேலானது என்றெல்லாம் கலித்தொகையில் கூறப்பட்டுள்ளது.

வள்ளல்கள் மட்டுமன்றிப் புலவர்களும் ஈந்து மகிழ்ந்ததை இலக்கியம் பதிவு செய்துள்ளது. தான் பெற்றதைப் பிறருக்கு வழங்கும் பெருஞ்சித்திரனாரின் பேருள்ளம் புறநானூற்றில் புலப்படுத்தப்பட்டிருக்கிறது.

உதவி

பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் 'உதவியாண்மை' என்று குறிப்பிடுகிறார். தன்னைத் தாண்டிப் பிறரைப் பற்றிச் சிந்திக்கும்போது, இருக்கும் நிலையை ஒதுக்கி, தான் இருக்க வேண்டிய நிலை எது என்பதை மனிதன் உணர்கிறான் எனலாம். அன்பு என்ற சுடருக்குத் தியாகம்தானே எண்ணெய்யாக இருக்க முடியும்?

பிறர் நோயும் தம் நோய்போல் போற்றி அறன்அறிதல்
சான்றவர்க்கு எல்லாம் கடன் (கலி.139)

என்று பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி, உதவுதல் பற்றி நல்லந்துவனார் குறிப்பிடுகிறார்.

'உண்மையான செல்வம் என்பது பிறர்துன்பம் தீர்ப்பதுதான்' என்கிறார் நல்வேட்டனார்.

சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே (நற். 210)

உறவினர் கெட, வாழ்பவனின் பொலிவு அழியும் என்று பெருங்கடுங்கோ குறிப்பிடுகிறார். இதனால்தான் 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவு' என்கிறது தமிழ் இலக்கியம். 'நிறைவடைகிறவனே செல்வன்'

10th_Tamil_Unit 8.indd 186 24-01-2020 10.08.24 AM

என்கிறது சீன நாட்டுத் தாவோயியம். உடல் உறுப்புகள் ஒன்றுக்கொன்று உதவுவது போலச் சமூக உறுப்புகளான மனிதர்களும் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ள வேண்டும். இதயம் இரத்தத்தை எல்லாம் தனக்கே வைத்துக் கொண்டால் என்ன ஆவது? இரைப்பை, உணவை அப்படியே தானே வைத்துக் கொண்டால் என்ன ஆவது? பிறருக்கு உதவாமல், மனிதத்திற்குக் கொடும்பாவி கட்டுவது சங்க காலத்தில் இல்லை.

வாய்மை

வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை, "பொய்யாச் செந்நா","பொய்படுபறியா வயங்கு செந்நா" என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

நாக்கு ஓர் அதிசயத் திறவுகோல் என்பார்கள். இன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான். துன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான். மெய் பேசும் நா மனிதனை உயர்த்துகிறது. பொய்பேசும் நா மனிதனைத் தாழ்த்துகிறது.

'பிழையா நன்மொழி' என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது; இதற்கு மாறாகப் 'பொய் மொழிக் கொடுஞ்சொல்' என்று பொய்யைக் குறிப்பிடுகிறது. நிலம் புடைபெயர்ந்தாலும் பொய்சொல்லக் கூடாது என்பது பல பாடல்களில் வற்புறுத்தப்பட்டுள்ளது. வாய்மையைப் பற்றி, சங்ககால மக்கள் கொண்டிருந்த கருத்தழுத்தத்தை இப்பகுதிகள் புலப்படுத்துகின்றன. பொய்ச்சான்று கூறாமையும் வலியுறுத்தப்பட்டது.

சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள், ஒரு மனிதன் தனியாகவும் சமூக உறுப்பினனாகவும் இயங்குவதற்கும் அவனது பண்பு நலனை உருவாக்குவதற்கும் உதவும் விதிமுறைகள் எனலாம்.

தாம் சிந்திக்காமல் பிறர் சொல்ல அறியும் அறம் மூன்றாம் தரமானது. சிந்தித்து அறிந்து கொள்ளும் அறம் இரண்டாம் தரமானது. இயல்பாக அறியும் அறம் முதல் தரமானது. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இயல்பான முதல் தரமான அறங்கள் எனலாம்.

எத்திசையும் புகழ் மணக்க.....

போதிதர்மர்

கி.பி.(பொ.ஆ.) ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காஞ்சி மாநகரத்துச் சிற்றரசர் ஒருவர் போதிதர்மர் என்னும் சமயப்பெயர்பூண்டு சீனாவுக்குச் சென்றார். பௌத்த சமயத் தத்துவத்தின் ஒரு பிரிவைப் போதித்தார். அதிலிருந்து உருவானதே "ஜென்" தத்துவம். இது, பின்னர் ஜப்பான் முதலிய நாடுகளுக்கும் பரவிச் செழித்து விளங்கியது. போதி தருமருக்குச் சீனர்கள் கோவில் கட்டி சிலை வைத்து இன்றளவும் வணங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

கற்பவை கற்றபின்...

1. பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள அறக்கருத்துகளை வலியுறுத்தும் சங்க இலக்கியப் பாடலடிகள் ஐந்தினைத் தொகுத்து அவை கூறும் அறச் செய்திகளை எழுதுக.
2. கொன்றை வேந்தன் முதலான பிற்கால அறநூல்களின் பெயர்களை அறிந்து, அவற்றுள் ஏதேனும் ஒரு நூலின் அறக் கருத்துக்களை எடுத்துக் கொண்டு அவை இன்றும் பொருந்தி நிற்பது குறித்துக் கலந்துரையாடுக.

10th_Tamil_Unit 8.indd 187 24-01-2020 10.08.24 AM

விரிவானம்

நிருவாகம் எ

சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும்

– ஐராவதம் மகாதேவன்

UBINQ8



தொல்லியல் கடந்த காலத்தைக் காட்டும் கண்ணாடி. கல்வெட்டுகள் கடந்த காலத்தின் பக்கங்கள். தென்னிந்தியா, கல்வெட்டுகளின் களஞ்சியம். கல்வெட்டை ஆய்வது எளிதன்று. புலப்படாத எழுத்து, அகராதியில் அடங்காத சொற்கள், வழக்கிலில்லாத செய்திகள் எனப் பல தடைகள். இத்தடைகளைக் கடந்து கல்வெட்டுகளைப் படித்து உண்மைகளை அறிதல் கடினம். கல்வெட்டில் எழுத்துருக்களை ஆய்வது மிகக் கடினமான பணி. சங்ககாலத்தை அறிய இலக்கியங்கள் மட்டுமே துணை என்று இருந்த நிலையில் கல்வெட்டுகளும் துணையாக இருப்பதைக் கண்டறிந்த ஆய்வு முன்னோடி ஐராவதம் மகாதேவன். ஆய்வில், உண்மைகளைக் காண்கையில் ஊற்றெடுக்கும் உவகையை அவர் எழுத்தின் வழியே நாமும் அடைவோம்.

கரூரை அடுத்த புகளூரில் ஆறுநாட்டான் குன்றின் மீது பொறிக்கப்பட்டுள்ள சேரல் இரும்பொறை மன்னர்களின் கல்வெட்டுகளைக் கண்டறியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததும், அதை ஒட்டி உலகத் தமிழ்க் கருத்தரங்குகளில் தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகளைப் பற்றி எழுந்த சுவையான விவாதங்கள், என் வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்ச்சிகள் ஆகும். அவற்றுள் சில நினைவுகளை உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

1962ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டு காலம் நான் கைத்தறித் துறை இயக்குநர் ஆகப் பணியாற்றி வந்தேன். தமிழகத்தில் மாவட்டத்திற்கு ஒரு நூற்பு ஆலை அமைக்கும் பொறுப்பையும் ஏற்றிருந்தேன். அதே நேரத்தில்தான் ஓய்வு கிடைக்கும்பொழுது மலைச் சாரல்களிலும் சிறு குன்றுகளிலும் காணப்படும் பிராம்மிக் கல்வெட்டுகளைச் சேகரிக்கும் சொந்த முயற்சியிலும் ஈடுபட்டிருந்தேன். எனக்கு அப்பொழுது இரண்டு ஆசைகள் இருந்தன. ஒன்று, பொருள் விளங்கவில்லை என்று அறிஞர்களால் அநேகமாகக் கைவிடப்பட்டிருந்த தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகளைச் சரிவர வாசிக்கும் முறையைக் கண்டறிய வேண்டும்; மற்றொன்று, சங்ககாலத் தமிழ் மன்னர்களைப் பற்றிய எவ்விதமான புறச்சான்றுகளுமே தமிழகத்தில் கிடைக்கவில்லை என்ற குறை நீங்குமாறு அவர்களுடைய பெயர்களையோ மற்ற குறிப்புகளையோ இக்கல்வெட்டுகளில் காணவேண்டும் என்பனவாகும். இவ்விரு ஆசைகளும் நிறைவேறியது எனக்குக் கிடைத்த பெரும்பேறுகள் என்றே கருதுகிறேன். தமிழ்நாட்டிலுள்ள பிராம்மிக் கல்வெட்டுகள் தமிழிலேயே எழுதப்பட்டவை என்றும் அவைகளைப் பொருள் சிறக்க வாசிக்க ஒரு முறை இருக்கிறது என்றும் நான் கண்டறிந்த ஆராய்ச்சிகளைப் பற்றி இங்குக் கூற இடமில்லை. சங்க காலத் தமிழ் மன்னர்கள் முதன்முதலாகத் தமிழகக் கல்வெட்டுகளில் தோன்றிய கதையை மட்டும் இங்குக் கூறலாம் என்று நினைக்கிறேன்.

இந்திய அரசின் தொல்பொருள் துறையினர் ஆண்டுதோறும் வெளியிட்டு வந்த தென்னிந்தியக் கல்வெட்டுகளைப் பற்றிய அறிக்கைகளில் 1927–28 ஆம் ஆண்டுகளின் தொகுதியில் புகளூர்க் கல்வெட்டுகளைப் பற்றிய செய்திகள் முதன்



முதலாகக் கிடைக்கின்றன. இவ்வறிக்கையில் ஆறுநாட்டான் குன்றின் மீதுள்ள குகைகளுள் ஒன்றில் நான்கு வரிகளில் எழுதப்பட்டுள்ள ஒரு பிராம்மிக் கல்வெட்டு இருப்பதாகவும், அது மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதால் அதைச் சரிவரப் படிக்க முடியவில்லை என்றும் அதில் ஆதன் என்ற சொல் காணப்படுவதால் அக்கல்வெட்டு சேர மன்னர்களைப் பற்றியதாக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகள் பெரும்பாலும் மிகச் சுருக்கமாக ஒரே வரியில் மூன்று அல்லது நான்கு சொற்களைக் கொண்டு மட்டுமே பொறிக்கப்பட்டவை. இந்நிலையில், நான்கு வரிகளாலான மிக நீளமான கல்வெட்டு அதிலும் சேர மன்னர்களைக் குறிக்கக் கூடிய ஒரு கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்ட பிறகும் நாற்பது ஆண்டுகளாக வாசிக்கப்படாமல் இருந்து வந்தது எனக்கு வருத்தமாக இருந்தது. என்றாவது ஒருநாள் நேரில் போய்ப் பார்த்து இக்கல்வெட்டைத் தீர ஆராய வேண்டும் என்று எண்ணியிருந்தேன்.

அந்த நாளும் 1965ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் தேதியன்று வந்தது. அன்று கரூருக்கு அருகில் கட்டப்பட்டு வந்த கூட்டுறவு நூற்பாலையைப் பார்வையிடச் சென்றிருந்தேன். என் வழக்கப்படி, கையுடன் அருகாமையிலுள்ள பழங்கல்வெட்டுகளைப் பற்றிய குறிப்புகளையும் எடுத்துச் சென்றிருந்தேன். அவற்றுள் ஒரு குறிப்பு மேற்கூறிய ஆறுநாட்டான் குன்றிலுள்ள கல்வெட்டுகளைப் பற்றியது ஆகும். நூற்பு ஆலையில் என்னுடைய அலுவல்களை முடித்துக்கொண்டு மாலை நேரத்தில் நானும் மற்றும் சில நண்பர்களுமாகக் காரில் ஆறுநாட்டான் குன்றின் அடிவாரம் வரை சென்றோம். அதற்குமுன் எங்களில் எவரும் அச்சிற்றூருக்குப் போனது இல்லை; மலையின் மீது ஏற கிழக்குப் பக்கத்திலிருந்து படிக்கட்டுகள் இருப்பது கூட எங்களுக்கு அப்பொழுது தெரியாது. பெரும்பாலும் தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகள் மனித சஞ்சாரம் அற்ற முள் புதர்கள் நிறைந்த குன்றுகளில்தான் இருக்கின்றன! அதே நினைவில் எவரையும் வழி கேட்காது குன்றின் தென்புறம் இருக்கும் ஒரு கரடுமுரடான சரிவின் வழியாக வியர்க்க விறுவிறுக்க, குன்றின் மீது ஏறி உச்சியின் தெற்குச் சாரலை அடைந்தோம். மேலைக்

தெரியுமா?

தென்தமிழ் நாட்டில் உள்ள குகைகளில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளில் 'பிராம்மி' வரிவடிவத்துடன் தமிழி, தரமிழி, திராவிடி என்று அழைக்கப்படுகிற வேறுபட்ட வரிவடிவங்களும் இருப்பதை ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டது. தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சங்ககாலக் கல்வெட்டுகள், இலக்கியத் தரவுகள் ஆகியவற்றில் அசோகர் காலத்திய பிராம்மி வரிவடிவத்திலிருந்து முரண்பாடுகள் தெரியவருகின்றன. இவற்றை இக்கல்வெட்டுகளை ஆராய்ந்த ஐராவதம் மகாதேவன் தன்னுடைய ஆய்வு நூலான 'எர்லி தமிழ் எபிகிராபி' யில் தெளிவுபடுத்துகிறார்.

தமிழ் மொழியை எழுதப் பயன்படுத்தப்பட்ட பழந்தமிழ் வரிவடிவத்தைத் தமிழ்ப் பிராம்மி என்றழைக்காமல் 'தமிழி' என்றோ அல்லது பழந்தமிழ் என்றோ அழைக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறார்.

கோடியில் தென்முகமாக இருந்த குகையின் உயரமான வாயிலுக்கு மேலாக வெட்டப்பட்டிருந்த பிராம்மிக் கல்வெட்டு மஞ்சள் நிறமான மாலை வெய்யிலில் பளிச்சென்று தெரிந்தது. கல்வெட்டு மிகவும் தேய்ந்துபோய் அங்கொன்றும் இங்கொன்றும் ஆகச் சில எழுத்துகள் மட்டும்தான் தெரியும் என்று எதிர்பார்த்து ஏமாற்றம் அடையத் தயாராகத்தான் வந்திருந்தேன். ஆனால் நான் கண்டது வேறு; மிகப்பெரிய எழுத்துகளில் நான்கு நீண்ட வரிகளில் தெளிவாகப் பொறிக்கபட்டிருந்தது அக்கல்வெட்டு. முதலிலும் முடிவிலும் ஓரிரு எழுத்துகள் நீங்கலாக ஏனைய எழுத்துகளைப் படிப்பதும் எனக்குக் கடினமாகவே இல்லை. இந்தக் கல்வெட்டையா நாற்பது ஆண்டுகளாகப் படிக்க முடியவில்லை என்று விட்டுவிட்டார்கள் என்ற வியப்பு அன்று மேலோங்கியது; இன்றும் தணியவில்லை.

கையுடன் எடுத்து வந்திருந்த நோட்டுப் புத்தகத்தைப் பிரித்து, கல்வெட்டை எழுத்துக் கூட்டி வாசித்த வண்ணம் படியெடுக்கலானேன். முதல் வரியில் புதுமை எதுவும் இல்லை: **யாற்றூர்** என்னும் இடத்தைச் சேர்ந்த சமணத் துறவியான **செங்காயபன்** வசிக்கும் உறையுள் இது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இது பெரும்பாலும் ஏனைய தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகள் தரும் செய்திகள் போலவே இருந்தது. அடுத்த வரிக்குப் போனேன்: இரண்டாவது வரியில் **கோ** என்ற முதல் சொல்லைக் கண்டவுடன் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது; சங்க காலத் தமிழ் மன்னரின் கல்வெட்டுகள் இது என்பது உறுதியானது. மேலும் படித்தேன் இரண்டாம் வரியை.

'கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்' என்ற சொற்களைப் படித்தவுடன் எனக்கு ஏற்பட்ட வியப்பையும் மகிழ்ச்சியையும் சொல்லி மாளாது! ஆனாலும் தமிழிலும் வரலாற்றுத் துறையிலும் ஈடுபாடு உள்ள அன்பர்களுக்கு எனக்கு ஏற்பட்ட உணர்ச்சி வெள்ளத்தை விளக்க அவசியம் இல்லை என்றே நினைக்கிறேன். அடுத்தடுத்து **'பெருங்கடுங்கோன்', 'இளங்கடுங்கோ', 'இளங்கோ'** என்ற பெயர்களைப் படித்தபொழுது என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. சங்க நூல்களில் மட்டும் இதுவரை காணப்பட்ட பண்டைய தமிழ் மன்னர்களின் பெயர்களைத் தமிழகத்தில் முதல்முறையாக ஒரு கல்வெட்டில் கண்டுவிட்ட ஆனந்தத்தில் நோட்டுப் புத்தகத்தைத் தலைக்கு மேல் தூக்கிப் பிடித்துக்கொண்டு கூத்தாடினேன். என்னுடன் வந்தவர்கள், என்னை ஒரு மாதிரியாக பார்த்தார்கள்!

என்னை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திய அக்கல்வெட்டின் முழு வாசகம் பின்வருமாறு:

"....அம்மண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய்
கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்
பெருங் கடுங்கோன் மகன் (இ)ளங்
கடுங்கோ (இ)ளங்கோ ஆக அறுத்த கல்"

இது கருவூரிலிருந்து ஆட்சி செய்த சேரல் இரும்பொறை மன்னர்கள் பொறித்தது. பதிற்றுப்பத்திலும் ஏனைய சில சங்க நூல்களிலும் பாடப்பெற்ற பழந்தமிழ் மன்னர்கள் இவர்கள். இக்கல்வெட்டு

ஏறத்தாழ கி.பி. (பொ.ஆ.) இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது. இச்செய்திகள் மட்டும் எனக்கு அப்பொழுதே விளக்கமாகத் தெரிந்தன. அதற்குள் இருட்டிவிட்டதால் மற்ற கல்வெட்டுகளை இன்னொரு முறை பார்த்துக் கொள்ளலாம் என்று (கீழ்ப்புறம் இருந்த படிக்கட்டுகள் வழியாக!) இறங்கிக் கரூருக்குத் திரும்பினோம்.

நான் சென்னை வந்த அன்றே வரலாற்றுப் பேராசிரியர் **திரு. நீலகண்ட சாஸ்திரி** அவர்களின் வீட்டுக்குச் சென்று நான் எடுத்துவந்த கல்வெட்டுப் படியைக் காட்டினேன். அவர் அப்பொழுது என்னிடம் கேட்ட கேள்வி இன்றும் நினைவில் இருக்கிறது. **"கையால்தானே எழுதியிருக்கிறீர்கள்; ஒழுங்காகப் படியெடுத்தீர்களா?"** என்று கேட்டார்! ஆராய்ச்சி முறைகளில் அவருக்கு இருந்த அழுத்தத்தையும் உண்மைப்பற்றையும் படிப்பினைகளாகக் கொண்டேன் அன்று. அதற்கு அடுத்த சில நாட்களிலேயே கரூரிலிருந்த நண்பர்களின் உதவியால் அந்தக் குகை வாயிலில் மூங்கிலால் சாரம் கட்டி அதன் மீது ஏறி நின்று பாறையின் மீது மெல்லிய தாட்களைப் பரப்பிக் கல்வெட்டை எழுத்தெழுத்தாகக் கவனமாகப் படியெக்க ஏற்பாடு செய்தேன். அதற்குப் பிறகு ஒவ்வொரு முறையும் கரூருக்குச் செல்லும்

தெரிந்து தெளிவோம்

புகளூர்க் கல்வெட்டில் காணப்படும் மூன்று தலைமுறை மன்னர்கள் முறையே பதிற்றுப்பத்தின் 6ஆவது 7ஆவது 8ஆவது பாட்டுடைத் தலைவர்கள் என்று ஐராவதம் மகாதேவன் எழுதியிருந்தார். இதை மறுத்து இம்மன்னர்கள் முறையே 7ஆவது 8ஆவது 9ஆவது பாட்டுடைத் தலைவர்கள் என்று விளக்கியிருந்தார் மாணவர் ஒருவர். அதைச் சரியென்று உணர்ந்த மகாதேவன் முதல் உலகத்தமிழ் மாநாட்டில் அறிஞர்கள் முன்னிலையில் அதைக்குறிப்பிட்டு அக்கருத்தை ஏற்றுக்கொள்வதாகக் கூறினார். ஆய்வில் உண்மையை ஏற்றுக்கொள்வது தவற்றைத் திருத்திக்கொள்வது என்னும் உயரிய நெறி அவரிடம் இருந்தது.

தெரியுமா?

"1965 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3 ஆம் தேதியன்று மதுரைக்கு அருகில் உள்ள மாங்குளம் குகைக் கல்வெட்டுகள் (இயல் – 1 முகப்புப் படம்) சங்ககாலப் பாண்டிய மன்னாகிய நெடுஞ்செழியனுடையவை என்றும் அவை கி.மு. (பொ. ஆ.) 2ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்றும் கண்டுபிடித்தேன்".

– ஐராவதம் மகாதேவன்
நூற்றாண்டு மாணிக்கம், பக்.109

பொழுதெல்லாம் புகளூருக்கும் 'தலயாத்திரை' சென்று ஆறுநாட்டான் குன்றிலிருந்த எல்லா பிராம்மிக் கல்வெட்டுகளையும் ஒன்றொன்றாகப் படியெடுத்து முடித்தேன். அதே ஆண்டு மார்ச் மாதம் ஹிந்து தினத் தாளில் புகளூர்க் கல்வெட்டுகளைப் பற்றி ஒரு சிறு குறிப்பையும் வெளியிட்டேன்.

பிறகு ஒரு நாள் என் ஆராய்ச்சிக் குறிப்புகளை எடுத்துக்கொண்டு கோவையில் அப்பொழுது வசித்து வந்த திரு.கே.வி. சுப்பிரமணியனார் அவர்களைக் காணச் சென்றேன். அவர்தான் தமிழ்நாட்டிலுள்ள பிராம்மிக் கல்வெட்டுகளின் ஆராய்ச்சிக்கு அடிகோலியவர். இக்கல்வெட்டுகளில் தமிழுக்கே உரிய எழுத்துக்களான ழ, ள, ற, ன ஆகியவை வருவதை முதன் முதலாகச் சுட்டிக்காட்டி இக்கல்வெட்டுகள் பிராகிருத மொழியில் ஆனவை என்ற தவறான கருத்தை மறுத்து, இவை தமிழில்தான் எழுதப்பட்டவை என்று நிறுவிய சீரிய ஆராய்ச்சியாளர் **கே.வி. சுப்பிரமணியனார்.** வயது மிகவும் முதிர்ந்து, உடல் தளர்ந்து, கண் பார்வை சரியாக இல்லாத நிலையிலும் புகளூர்க் கல்வெட்டைப் பற்றிய செய்திகளைத் தினத் தாள்களில் படிக்கக் கேட்டுத் தெரிந்து வைத்துக்கொண்டிருந்தார் அவர். நான் அவர் முன் அமர்ந்தவுடன், **'சேரல் இரும்பொறை மன்னர்களின் கல்வெட்டைப் பற்றி எழுதியவர் நீங்கள்தானா?'** என்று கேட்டார். நான் 'ஆம் என்றவுடன் தன் கை விரல்களால் என் முகத்தைத் தடவிப் பார்த்தார்; அப்பொழுது அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது; **"நீங்கள் கொடுத்து வைத்தவர்!"** என்று ஆசி கூறினார். அப்பெரியவரின் கல்விப் பற்றையும் தூய உள்ளத்தையும் அன்பையும் நினைத்து நினைத்து என் உள்ளம் நெகிழ்கிறது.

நன்றி : **'கல்வெட்டு'** இதழ்.

நூல்வெளி

ஐராவதம் மகாதேவன் எழுதிய இக்கட்டுரை 'கல்வெட்டு' இதழில் வெளிவந்தது. இவர் இந்திய ஆட்சிப்பணி அலுவலராக இருந்து, தொல்லியலிலும் எழுத்தியலிலும் கொண்ட ஆர்வத்தால் விருப்ப ஓய்வு பெற்றார். தனக்கு மிகவும் விருப்பமான கல்வெட்டு ஆய்வில் 30 ஆண்டுகள் ஈடுபட்டார். சிந்துவெளி எழுத்துருவை ஆய்ந்து திராவிட எழுத்து என்று அவர் கண்ட முடிவு, வரலாற்றில் திருப்பத்தை ஏற்படுத்தியது. அவருடைய ஆய்வுகள் ஐந்திற்கும் மேற்பட்ட நூல்களாகவும் கட்டுரைகளாகவும் வெளிப்பட்டுள்ளன. ஆய்வுக்காக ஜவகர்லால் நேரு ஆய்வறிஞர் விருது (1970), இந்திய வரலாற்று ஆராய்ச்சி மைய விருது (1992), தாமரைத்திரு விருது (2009) ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார். பதிற்றுப்பத்தில் இடம்பெற்ற சேர அரசர்களின் பெயர்கள் புகளூர்க் கல்வெட்டில் இடம்பெற்றுள்ளதை இவர் கண்டுபிடித்தது, இலக்கியத்தையும் கல்வெட்டாய்வையும் ஒருங்கிணைத்தது. பாறைகளிலிருந்த பழங்கல்வெட்டுகளைப் படியெடுத்து ஆய்வு நூலாக்கி இவர் தந்தது, இமயப் பணி.

கற்பவை கற்றபின்...

உங்கள் பகுதியில் உள்ள பழங்காலக் கல்வெட்டுகள் பற்றிய செய்திகளைத் தொகுத்து வகுப்பில் கலந்துரையாடுக.

கவிதைப் பேழை

கலை

சூ

கம்பராமாயணம்

– கம்பர்

JJJ47Y

நுழையும்முன்

உள்ளதை உணர்ந்தபடி கூறுவது கவிதை. கவிஞனின் உலகம் இட எல்லை அற்றது; கால எல்லை அற்றது; கவிஞனின் சிந்தைக்குள் உருவாகும் காட்சியைச் சொல்லைக்கொண்டு எழுப்புகிறான். அவன் கண்ட காட்சிகள் அதற்குத் துணைபுரிகின்றன; கேட்ட ஓசைகள் துணைபுரிகின்றன; விழுமியங்கள் துணைபுரிகின்றன; ஒப்புமைகள் துணைபுரிகின்றன; கலையின் உச்சம் பெறுவதுதான் அவன் எல்லையாகிறது; கம்பன் அப்படிப்பட்ட கவிஞன். அதனால்தான் 'கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்' என்று பாரதி பெருமைப்படுகிறார்.

பாலகாண்டம் – ஆற்றுப்படலம்

(ஆறு இயற்கையின் தோற்றமாக இல்லாமல் ஓர் ஓவியமாக விரிகிறது. அதை உயிரெனக் காணும் அந்த அழகுணர்ச்சி கவிதையாகி ஓடி நெஞ்சில் நிறைகிறது.)



தா துகு சோலை தோறுஞ் சண்பகக் காடு தோறும்
போ தவிழ் பொய்கை தோ றும் புதுமணற் றடங்க டோறும்
மா தவி வேலிப் பூக வனம்தொ றும் வயல்க டோறும்
ஓதிய வுடம்பு தோறு முயிரென வுலாய தன்றே. (31)

பாடலின் பொருள்

மகரந்தம் சிந்துகின்ற சோலைகள், மரம் செறிந்த செண்பகக் காடுகள், அரும்புகள் அவிழ்ந்து மலரும் பொய்கைகள், புதுமணல் தடாகங்கள், குருக்கத்தி, கொடி வேலியுடைய கமுகந்தோட்டங்கள், நெல்வயல்கள் இவை அனைத்திலும் பரவிப் பாய்கிறது சரயுஆறு. அது, ஓர் உயிர் பல உடல்களில் ஊடுருவி உலாவுவது போல் பல இடங்களில் பாய்கிறது.

பாலகாண்டம் – நாட்டுப்படலம்

(இயற்கை கொலுவீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன்கவி காட்டுகிறது.)

தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கண் முழவி னேங்கக் குவளை கண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ. * (35)

கவிதை, கவிஞன்மூலம் தன்னையே வெளிப்படுத்திக் கொள்கிறது. அது எப்படி வருகின்றதோ அதை மாற்றினால் அழகு குன்றும். மீண்டும் மீண்டும் மறிதரும் சந்தம் உணர்வுகளை நம்முள் செலுத்துகிறது. உள்ளம் சூறையாடப்படுகிறது.

10th_Tamil_Unit 6.indd 136 24-01-2020 10.06.54 AM

பாடலின் பொருள்

குளிர்ந்த சோலைகளில் மயில்கள் அழகுற ஆட, விரிதாமரை மலர்கள், ஏற்றிய விளக்குகள் போல் தோன்ற, சூழும் மேகங்கள் மத்தள ஒலியாய் எழ, மலரும் குவளை மலர்கள் கண்கள் விழித்துப் பார்ப்பதுபோல் காண, நீர் நிலைகள் எழுப்பும் அலைகள் திரைச்சீலைகளாய் விரிய, மகர யாழின் தேனிசைபோல் வண்டுகள் ரீங்காரம் பாட மருதம் வீற்றிருக்கிறது.

பாலகாண்டம் – நாட்டுப்படலம்

(ஒன்றின் இருப்பால் இன்னொன்று அடையாளப்படுத்தப்படுகிறது என்ற மெய்யியலைக்கொண்டு, ஒரு நாட்டின் பெருமையைப் புலப்படுத்தும் கம்பனின் உத்தி போற்றத்தக்கது.)

வண்மை யில்லையோர் வறுமை யின்மையாற்
றிண்மை யில்லையோர் செறுந ரின்மையால்
உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்
வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால். (84)

கோசல நாட்டில் வறுமை சிறிதும் இல்லாததால், கொடைக்கு அங்கே இடமில்லை; நேருக்குநேர் போர் புரிபவர் இல்லாததால், உடல் வலிமையை எடுத்துக்காட்ட வாய்ப்பில்லை; பொய்மொழி இல்லாமையால், மெய்மை தனித்து விளங்கவில்லை; பல வகைக் கேள்விச் செல்வம் மிகுந்து விளங்குவதால் அங்கு அறியாமை சிறிதும் இல்லை.

அயோத்தியா காண்டம் – கங்கைப்படலம்

(இராமனுடைய மாநிற மேனியை வருணிக்கும் கம்பன், மை, மரகதம் என்றெல்லாம் உவமை சொல்லி, நிறைவாகச் சொல்ல இயலவில்லை என்பதை 'ஐயோ' என்ற சொல்லில் வைப்பதன் வாயிலாக அதை இயன்றதாக்குகிறான்.)

வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான். * (1926)

பாடலின் பொருள்

பகலவன் பட்டொளி இராமனின் நீலமேனி ஒளியில் பட்டு இல்லையெனும்படி மறைந்துவிட, இடையே இல்லையெனும்படியான நுண்ணிய இடையாள் சீதையொடும், இளையவன் இலக்குவனொடும் போனான். அவன் நிறம் மையோ? பச்சைநிற மரகதமோ? மறிக்கின்ற நீலக் கடலோ? கார்மேகமோ? ஐயோ! ஒப்பற்ற அழியாத அழகினை உடைய வடிவு கொண்டவன் இராமன்.

அயோத்தியா காண்டம்– கங்கை காண் படலம்

(கவிதைகள் மூலம் பெறும் இன்பங்கள் எத்தனையோ! அதில் ஒன்று சந்த இன்பம். பொருள் புரியாவிடினும் சந்த இன்பம் மகிழ்ச்சியூட்டுகிறது. 'ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமடா' என்று பாரதி சொல்வதை இதில் உணரமுடியும்.)

ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு நடுங்கிடும் வில்லாளோ
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல் அன்றோ
ஏழமை வேட னிறந்தில னென்றெனை யேசாரோ. (2317)

10th_Tamil_Unit 6.indd 137 24-01-2020 10.06.54 AM

பாடலின் பொருள்

ஆழமும் பெரிய அலைகளையும் உடைய கங்கை ஆற்றை பரதன் முதலானோர் கடந்து செல்வார்களா? யானைகள் கொண்ட சேனையைக்கண்டு, புறமுதுகு காட்டி விலகிச் செல்கின்ற வில்வீரனோ நான்! தோழமை என்று இராமர் சொன்ன சொல், ஒப்பற்ற சொல் அல்லவா? தோழமையை எண்ணாமல் இவர்களைக் கடந்து போகவிட்டால் அற்பனாகிய இந்த வேடன் இறந்திருக்கலாமே என உலகத்தார் என்னைப் பழி சொல்ல மாட்டார்களா?

யுத்த காண்டம் – கும்பகருணன் வதைப் படலம்

(உலக்கையால் மாறிமாறி இடிக்கும் ஒத்த ஓசையில் அமைந்த சந்தம், கும்பகருணனை எழுப்பும் காட்சியைக் கண்முன் நிறுத்துகிறது.)

உறங்கு கின்ற கும்ப கன்ன வுங்கண் மாய வாழ்வெலாம்
இறங்கு கின்ற தின்று காணை ழுந்தி ராயெ ழுந்திராய்
கறங்கு போல விற்பி டித்த கால தூதர் கையிலே
உறங்கு வாயு றங்கு வாயி னிக்கி டந்து றங்குவாய். (7316)

பாடலின் பொருள்

உறங்குகின்ற கும்பகருணனே! உம்முடைய பொய்யான வாழ்வு எல்லாம் இன்றிலிருந்து இறங்குவதற்குத் தொடங்கிவிட்டது. அதனைக் காண்பதற்காக எழுந்திடுவாய்! எழுந்திடுவாய்! காற்றாடி போல எல்லா இடங்களிலும் திரிகின்ற வில்லைப் பிடித்த காலனுக்குத் தூதரானவர் கையில் இனிப் படுத்து உறங்குவாயாக!

நூல் வெளி

கம்பர், இராமனது வரலாற்றைத் தமிழில் வழங்கி "இராமாவதாரம்" எனப் பெயரிட்டார். இது கம்பராமாயணம் என வழங்கப்பெறுகிறது. இது ஆறு காண்டங்களை உடையது. கம்பராமாயணப் பாடல்கள் சந்தநயம் மிக்கவை. அவற்றுள் அழகுணர்ச்சிமிக்க சில கவிதைகள் பாடப்பகுதியாக அமைந்துள்ளன.

"கல்வியில் பெரியவர் கம்பர்", "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" போன்ற முதுமொழிகளுக்கு உரியவர் கம்பர்; சோழ நாட்டுத் திருவழுந்தூரைச் சார்ந்தவர்; திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர்; "விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்" என்று புகழ்பெற்றவர்; சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, திருக்கை வழக்கம், ஏரெழுபது, சிலையெழுபது முதலிய நூல்களை இயற்றியவர்.

கற்பவை கற்றபின்...

கம்பராமாயணக் கதைமாந்தர்களுள் எவரேனும் ஒருவர் குறித்து வகுப்பில் உரையாற்றுக.

10th_Tamil_Unit 6.indd 138 24-01-2020 10.06.54 AM

கவிதைப்பேழை

பண்பாடு ந

கம்பராமாயணம்

BW59PQ

நுழையும்முன்

'யாவரும் கேளிர்' என்பது தமிழர் நற்பண்பின் வளர்ச்சி; 'சிறியோரை இகழ்தல் இலமே' என்பது அந்நற்பண்பின் மலர்ச்சி; 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பது அவ்வுயிர்ப்பண்பின் முதிர்ச்சி; காக்கை குருவி எங்கள் ஜாதி என்பது அத்தமிழ்ப்பண்பின் தொடர்ச்சி. கம்பனின் காவியம் இராமனை இப்பண்பின் படிமமாகப் படைத்திருப்பது உயர்ச்சி. தந்தை தாய் மீதான அன்பு, உடன் பிறப்பியம் ஆகியவற்றை, எல்லைகள் அனைத்தையும் கடந்து இராமன் விரிவுபடுத்துகிறான். வேடன், பறவை, எளிய முதியவள், வானரம், எதிரியின் தம்பி என்ற வேலிகள் அவன் அன்பிற்கு இல்லை.



அயோத்தியா காண்டம் – குகப் படலம்

குகன்

வேடுவர் தலைவன் குகன். பாறை உடலுக்குள் பஞ்சு உள்ளம் கொண்டவன் அவன். காட்டிற்குச் செல்லும் இராமன், கங்கையைக் கடக்க அவன் உதவுகிறான். அன்பிற்கு அடைக்கும் தாழ் இல்லை என்பதை நிறுவும் வகையில் இராமன் குகன் நட்பு முகிழ்க்கிறது. இராமன் இளவரசனாக இருப்பினும் வேடனான குகனை உடன்பிறப்பாக ஏற்றுக் கொள்கிறான். பின்னாளில் அவனைச் சந்திக்கும் பரதனும் "எனக்கும் மூத்தோன்" எனக் குகனை ஏற்கிறான்.

1. *அன்னவன் உரை கேளா*
அமலனும் உரை நேர்வான்
என்உயிர் அனையாய் நீ
இளவல் உன் இளையான்; இந்
நன்னுதலவள் நின் கேள்;
நளிர் கடல் நிலம் எல்லாம்
உன்னுடையது; நான் உன் தொழில்
உரிமையின் உள்ளேன். (1994)

சொல்லும் பொருளும்

அமலன் – இராமன்; **இளவல்** – தம்பி; **நளிர்கடல்** – குளிர்ந்தகடல்

பொருள்

குகன் கூறியவற்றைக் கேட்ட இராமன் "என் உயிர் போன்றவனே! நீ என் தம்பி; இலக்குவன் உன் தம்பி; அழகிய நெற்றியைக் கொண்ட சீதை, உன் அண்ணி; குளிர் கடலும் இந்நிலமும் எல்லாம் உனதேயாகும். நான் உன்னுடைய ஏவலுக்கேற்பப் பணிபுரிபவன்" என்று கூறினான்.

2. *'துன்பு உளதுஎனின் அன்றோ*
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம் (1995)*

சொல்லும் பொருளும்

துன்பு – துன்பம்; **உன்னேல்** – எண்ணாதே

பா வகை : கலி விருத்தம்

பொருள்

இராமன் காட்டிற்குச் சென்று துன்புறுவானே என்று குகன் வருந்தினான். அதை உணர்ந்த இராமன் கூறுகிறான், குகனே! துன்பம் என்று ஒன்று இருந்தால்தானே இன்பம் என்பது புலப்படும். துன்பத்திற்குப் பின் இன்பம் உறுதியாக உண்டு. நமக்கிடையே இப்போது இப்பிரிவு நேர்கிறது என்று எண்ணாதே. இதுவரை நாங்கள் நால்வரே உடன்பிறந்தவர் என்றிருந்தோம். உறவு என்பது எங்கள் நால்வரோடு நின்றுவிடவில்லை. இப்போது உன்னையும் சேர்த்து நாம் ஐவர் ஆகின்றோம்.

ஆரணியகாண்டம் – சடாயு உயிர் நீத்த படலம்

சடாயு

இராவணன் சீதையைச் சிறையெடுத்தபோது கழுகு வேந்தன் சடாயு தடுத்துச் சண்டையிட்டுக் காயப்படுகிறான். இராமனிடம் நடந்ததைக் கூறுகிறான்; பின் இறந்துவிடுகிறான். இராமன், தன் தந்தையின் நண்பனான அக்கழுகு வேந்தனையும் தன் தந்தையாகவே கருதி, மகன் நிலையில் அவனுக்குரிய இறுதிச் சடங்குகளைச் செய்கிறான்.

3. *இந்தனம் எனைய என்ன கார்*
அகில் ஈட்டத்தோடும்
சந்தனம் குவித்து வேண்டும்
தருப்பையும் திருத்தி, பூவும்
சிந்தினன் மணலின் வேதி
தீது அற இயற்றி, தெண் நீர்
தந்தனன் தாதை தன்னைத் தடக்
கையான் எடுத்துச் சார்வான். (3356)

பொருள்

"எப்படிப்பட்ட சிறப்பான விறகுகள் இவை" என்று கண்டவர் வியக்கும்படியான கரிய அகில் கட்டைகளையும் சந்தனக் கட்டைகளையும் இராமன் கொண்டுவந்து வைத்தான். தேவையான அளவு தருப்பைப் புற்களையும் ஒழுங்குபட அடுக்கினான். பூக்களையும் கொண்டுவந்து தூவினான். மணலினால் மேடையைத் திருத்தமாக அமைத்தான். நன்னீரையும் எடுத்து வந்தான். இறுதிச்சடங்கு செய்யப்படக்கூடிய மேடைக்குத் தன் தந்தையாகிய சடாயுவைப் பெரிய கைகளில் தூக்கிக் கொண்டு வந்தான்.

ஆரணிய காண்டம் – சவரி பிறப்பு நீங்கு படலம்

சவரி

இராமனிடம் மிகுதியான அன்பையும் பக்தியையும்கொண்டவள்சவரி.சீதையைத்தேடிவரும் இராமனை, சுக்ரீவனுடன் நட்புக்கொள்ளுமாறு செய்தவள் இவள். அவ்வகையில் காப்பியத்தின் போக்கில் ஒரு திருப்பத்தை உருவாக்குபவள் சவரி. இராமன், அன்பளாகிய சவரியிடம் தாயிடம் காட்டும் அன்பைக் காட்டினான்.

4. *அன்னது ஆம் இருக்கை நண்ணி,*
ஆண்டுநின்று, அளவு இல் காலம்
தன்னையே நினைந்து நோற்கும் சவரியைத்
தலைப்பட்டு, அன்னாட்கு
இன்னுரை அருளி, தீது இன்று
இருந்தனை போலும் என்றான்
முன் இவற்கு இது என்று எண்ணல் ஆவது
ஓர் மூலம் இல்லான். (3700)

XII Std Tamil Chap_03.indd 54 17-12-2020 16:50:48

பொருள்

இவனுக்கு முன்னே இப்படியொருவர் இருந்தார் என்று பிறிதொருவரைக் காட்ட இயலாத நிலையிலுள்ள முதற்பொருளாகிய இராமன், சவரியிடம் இனிதாகப் பேசினான். தன்னையே நினைத்துத் தவமிருந்த சவரியிடம், "இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தாய் அல்லவா?" என்று பரிவுடன் கேட்டான்.

5. ஆண்டு, அவள் அன்பின் ஏத்தி,
அழுது இழி அருவிக் கண்ணள்,
மாண்டது என் மாயப் பாசம்;
வந்தது, வரம்பு இல் காலம்
பூண்ட மா தவத்தின் செல்வம்;
போயது, பிறவி, என்பாள்
வேண்டிய கொணர்ந்து நல்க.
விருந்து செய்து இருந்த வேலை (3701)

பொருள்

அப்போது சவரி, இராமனைப் புகழ்ந்து அன்பின் கனிவினால் அருவி இழிவது போலக் கண்ணீர் வடித்தாள். (இராமனைக் கண்டதால்) " என் பொய்யான உலகப்பற்று அழிந்தது; அளவற்ற காலம் நான் மேற்கொண்டிருந்த தவம் பலித்தது; என் பிறவி ஒழிந்தது" என்று கூறினாள். வேண்டிய எல்லாம் கொண்டுவந்து அவள் இராம இலக்குவனுக்கு விருந்து செய்விக்க, அவர்களும் விருந்தை ஏற்றனர்.

கிட்கிந்தா காண்டம் – நட்பு கோட்படலம்

சுக்ரீவன்

சீதையைத் தேடிவரும் இராம இலக்குவரைக் கண்ட அனுமன், சுக்ரீவனை அழைத்து வந்தான். சுக்ரீவனை நண்பனாக ஏற்றுக் கொள்கிறான் இராமன்.

6. தவா வலி அரக்கர் என்னும்
தகா இருள் பகையைத் தள்ளி,
குவால் அறம் நிறுத்தற்கு ஏற்ற
காலத்தின் கூட்டம் ஒத்தார்
அவா முதல் அறுத்த சிந்தை
அனகனும், அரியும் வேந்தும்
உவா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார். (3806)

சொல்லும் பொருளும்

அனகன் – இராமன்; **உவா** – அமாவாசை; **உடுபதி** – சந்திரன்

பொருள்

குறையாத வலிமை உடையவர்களும் வேண்டாத இருள் போன்றவர்களுமாகிய பகைவர்களை அழித்து அறங்கள் அனைத்தையும் நிலைபெறச் செய்வதற்கு ஏற்ற உரிய காலம்போல் இராமனும் சுக்ரீவனும் ஒருங்கிருந்தார்கள். ஆசையை அறவே அழித்த சிந்தையான் இராமனும் வானரத் தலைவன் சுக்ரீவனும் அமாவாசைக் காலத்தில் ஒன்றாக இணைந்திருக்கிற சந்திரனையும் சூரியனையும் ஒத்து இருந்தார்கள்.

7. மற்று இனி உரைப்பது என்னே?
வானிடை மண்ணில், நின்னைச்
செற்றவர் என்னைச் செற்றார்;
தீயரே எனினும் உன்னோடு
உற்றவர் எனக்கும் உற்றார்; உன்
கிளை எனது; என் காதல்
சுற்றம் உன் சுற்றம்; நீ என்
இன் உயிர்த் துணைவன் என்றான். (3812)

சொல்லும் பொருளும்

செற்றார் – பகைவர், **கிளை** – உறவினர்

பொருள்

இராமன் சுக்ரீவனிடம், "இனி நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? விண்ணிலும் மண்ணிலும் உள்ள உன் பகைவர் என் பகைவர்; தீயவராக இருப்பினும் கூட உன் நண்பர்கள் என் நண்பர்கள்; உன் உறவினர் என் உறவினர்; அன்பு மிகுந்த என் சுற்றத்தினர் உன் சுற்றத்தினர்; நீ, என் இனிய உயிர் நண்பன்!" என்றான்.

யுத்த காண்டம் – வீடணன் அடைக்கலப் படலம்

வீடணன்

சீதையைக் கவர்ந்து வந்தது தவறென வீடணன், இராவணனிடம் கூறுகிறான். அவன் கூற்றை மதியாத இராவணன், வீடணனைக் கடிந்தான். இலங்கையை விட்டுவந்த வீடணன், இராமன் இருக்குமிடம் வந்து அடைக்கலம் வேண்டினான். இராமன் அவனை உடன்பிறந்தவனாக ஏற்று இலங்கை அரசை அவனுக்கு உரிமையாக்கினான்.

8. *ஆழியான் அவனை நோக்கி,*
அருள்சுரந்து, உவகை கூர
ஏழினோடு ஏழாய் நின்ற
உலகும் என் பெயரும் எந் நாள்
வாழும் நாள், அன்றுகாறும்,
வாள் எயிற்று அரக்கர் வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம்
நின்னதே, தந்தேன் என்றான். (6503)

பொருள்

ஆணைச்சக்கரத்தையுடைய இராமன் உள்ளத்தில் கருணை பொங்க வீடணனிடம், "ஒளிபொருந்திய பற்களை உடைய அரக்கர் வாழ்வதும் ஆழமான கடல் நடுவே உள்ளதுமான இலங்கை அரசாட்சி, ஏழேழாகிய பதினான்கு உலகங்களும் எனது பெயரும் இங்கு எவ்வளவு காலம் இருக்குமோ அவ்வளவு காலம் உனக்கே உரிமை எனக் கொடுத்தேன்" என்று கூறினான்.

9. *குகனோடும் ஐவர் ஆனேம்*
முன்பு; பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து,
புதல்வரால் பொலிந்தான் நுந்தை. (6507)*

பா வகை: அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பொருள்

(நாங்கள் நால்வர் உடன்பிறந்தவர்களாக இருந்தோம்). குகனுடன் சேர்த்து நாங்கள் ஐவர் ஆனோம். பின்னர் மேருமலையைச் சுற்றி வரும் கதிரவனின் மகனான சுக்ரீவனுடன் அறுவர் ஆனோம். உள்ளத்தில் அன்புகொண்டு எங்களிடம் வந்த அன்பனே, உன்னுடன் சேர்த்து எழுவர் ஆனோம். புகுதற்கரிய கானக வாழ்வை மேற்கொள்ளும்படி என்னை அனுப்பிய உன் தந்தையாகிய தயரதன், இதனால் புதல்வர்களைக் கூடுதலாக அடைந்து பெருமை பெறுகிறான்.

இலக்கணக் குறிப்பு

உளது – இடைக்குறை; **மாதவம்** – உரிச்சொற்றொடர்; **தாழ்கடல்**–வினைத்தொகை; **செற்றவர்** – வினையாலணையும் பெயர்; **நுந்தை** – நும் தந்தை என்பதன் மரூஉ

உறுப்பிலக்கணம்

தந்தனன் = **தா (த) + த் (ந்) + த் + அன் + அன்**

தா – பகுதி (த எனக் குறுகியது விகாரம்); த் – சந்தி (ந் ஆனது விகாரம்); த் – இறந்தகால இடைநிலை; அன் – சாரியை; அன் – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

பொலிந்தான் = **பொலி + த் (ந்) + த் + ஆன்**

பொலி – பகுதி; த் – சந்தி (ந் ஆனது விகாரம்); த் – இறந்தகால இடைநிலை; ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

புணர்ச்சி விதி

அருங்கானம் = **அருமை + கானம்**;
விதி : ஈறு போதல் – அரு + கானம்;
விதி : இனமிகல் – அருங்கானம்

நூல்வெளி

கம்பராமாயணம் பல்வேறுவிதமான பண்புகளை அடிப்படையாகக் கொண்ட பாத்திரங்களால் படைக்கப்பட்டிருக்கிறது. இராமன் அனைத்து உயிர்களையும் கீழ் மேல் எனக் கருதாது சமமாக அன்பு காட்டும் பகுதிகள் பாடமாக இடம்பெற்றுள்ளன. அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், யுத்த காண்டம் ஆகியவற்றிலிருந்து குகன், சடாயு, சவரி, சுக்ரீவன், வீடணன் ஆகியோரைப் பற்றிய பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உடன்பிறப்பியப் பண்பையும் அன்பையும் வெளிப்படுத்தும் பாடல்கள் இவை. இந்நூலை இயற்றியவர் கம்பர். இதற்குக் கம்பர் இராமாவதாரம் என்னும் பெயர் சூட்டினார். கம்பனது கவிநலத்தின் காரணமாக இது "கம்பராமாயணம்" என்றே அழைக்கப்படுகிறது. கம்பரது காலம் 12ஆம் நூற்றாண்டு. எழுதப்பட்ட காலம்தொட்டு மக்கள் இலக்கியமாகப் போற்றப்படுவதற்குக் கவிச்சக்கரவர்த்தி கம்பனின் கவிநலமே காரணம்.

கற்பவை கற்றபின்...

உங்கள் மனம் கவர்ந்த கம்பராமாயணப் பாத்திரம் எது? ஏன்? வகுப்பறையில் உரையாடுக.

கவிதைப் பேழை

கலை

சூ

இராவண காவியம்

– புலவர் குழந்தை

KI6BG2

நுழையும்முன்

பூத்துக் குலுங்கும் பூஞ்சோலை; அடர்ந்து வளர்ந்த பசுமரங்கள்; நீர் நிறைந்த நதிக்கரைகள்; பச்சை போர்த்திய புல்வெளிகள்; துள்ளித் திரியும் மானினங்கள்; மயில்கள், குயில்கள், கிளிகள் பறந்து திரியும் பறவைகளென இத்தகு அழகிய சூழலைக் கண்டு மனம் மகிழ்ந்ததுண்டா? அழகைச் சுவைத்தால் மனம் புத்துணர்வு பெறும்; எண்ணம் வளமை பெறும். தமிழ் இலக்கியத் திரையில் மிகுதியான எழிலோவியங்களைச் சொல்லோவியங்களாகப் புலவர்கள் தீட்டி வைத்துள்ளனர். அவற்றில் சில காட்சிகளைக் கண்டு சுவைப்போம் வாருங்கள்.

குறிஞ்சி

1. *அருவிய முருகியம் ஆர்ப்பப் பைங்கிளி*
   பருகிய தமிழிசை பாடப் பொன்மயில்
   அருகிய சிறைவிரித் தாடப் பூஞ்சினை
   மருவிய குரக்கினம் மருண்டு நோக்குமால். (49)

2. *அடுப்பிடு சாந்தமோடு அகிலின் நாற்றமும்*
   துடுப்பிடு மைவனச் சோற்றின் நாற்றமும்
   மடுப்படு காந்தளின் மணமுந் தோய்தலாற்
   கடைப்படு பொருளெலாம் கமழும் குன்றமே (52)

சொல்லும் பொருளும்: மைவனம் – மலைநெல்; முருகியம்– குறிஞ்சிப்பறை; பூஞ்சினை–பூக்களை உடைய கிளை; சிறை– இறகு; சாந்தம் – சந்தனம்

9th_Tamil_Pages 122-264.indd 157 22-12-2020 15:57:42

முல்லை

3. பூவையும் குயில்களும் பொலங்கை வண்டரும்
பாஇசை பாடமுப் பழமும் தேனும்தந்
தேஇசை பெறும்கடறு இடையர் முக்குழல்
ஆவினம் ஒருங்குற அருகுஅ ணைக்குமால் (58)

4. முதிரையும் சாமையும் வரகும் மொய்மணிக்
குதிரைவா லியும்களம் குவித்துக் குன்றுஎனப்
பொதுவர்கள் பொலிஉறப் போர்அ டித்திடும்
அதிர்குரல் கேட்டுஉழை அஞ்சி ஓடுமே! (60)

சொல்லும் பொருளும்: பூவை– நாகணவாய்ப் பறவை; பொலம்– அழகு; கடறு– காடு; முக்குழல்–கொன்றை, ஆம்பல், மூங்கில் ஆகியவற்றால் ஆன குழல்கள்; பொலி– தானியக்குவியல்; உழை– ஒரு வகை மான்.

பாலை

5. மன்னிய முதுவெயில் வளைப்ப வாய்வெரீஇ
இன்னிளம் குருளைமிக்கு இனைந்து வெம்பிடத்
தன்னிழல் தங்கவே தாய்மை மீதுற
நன்னரில் வலியசெந் நாய்உய ங்குமே. (65)

6. கடிக்கமழ் மராமலர்க் கண்ணி அம்சிறார்
படிக்குற எருத்துக்கோடு அன்ன பாலைக்காய்
வெடிக்கவிட்டு ஆடிட விரும்பிக் கோலினால்
அடிக்கும் ஓசையின்பருந்து அஞ்சி ஓடுமே (67)

சொல்லும் பொருளும்: வாய்வெரீஇ– சோர்வால் வாய் குழறுதல்; குருளை– குட்டி; இனைந்து– துன்புறுதல்; உயங்குதல்– வருந்துதல். படிக்குஉற– நிலத்தில் விழ; கோடு– கொம்பு;.

மருதம்

7. கல்லிடைப் பிறந்த ஆறும்
கரைபொரு குளனும் தோயும்
முல்லைஅம் புறவில் தோன்று
முருகுகான் யாறு பாயும்
நெல்லினைக் கரும்பு காக்கும்
நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லல்அம் செறுவில் காஞ்சி
வஞ்சியும் மருதம் பூக்கும்* (72)

8. மரைமலர்க் குளத்தில் ஆடும்
மயிர்த்தலைச் சிறுவர் நீண்ட
பொருகரிக் குருத்து அளந்து
பொம்மெனக் களிப்பர் ஓர்பால்
குரைகழல் சிறுவர் போரில்
குலுங்கியே தெங்கின் காயைப்
புரைதபப் பறித்துக் காஞ்சிப்
புனைநிழல்அருந்து வாரே. (77)

சொல்லும் பொருளும்: கல்–மலை; முருகு– தேன், மணம், அழகு; மல்லல்– வளம்; செறு– வயல்; கரிக்குருத்து– யானைத்தந்தம்; போர்– வைக்கோற்போர்; புரைதப– குற்றமின்றி.

நெய்தல்

9. பசிபட ஒருவன் வாடப்
பார்த்துஇனி இருக்கும் கீழ்மை
முசிபட ஒழுகும் தூய
முறையினை அறிவார் போல
வசிபட முதுநீர் புக்கு
மலையெனத் துவரை நன்னீர்
கசிபட ஒளிமுத் தோடு
கரையினில் குவிப்பார் அம்மா (82)

10. வருமலை அளவிக் கானல்
மணலிடை உலவிக் காற்றில்
சுரிகுழல் உலர்த்தும் தும்பி
தொடர்மரை முகத்தர் தோற்றம்
இருபெரு விசும்பிற் செல்லும்
இளமைதீர் மதியம் தன்னைக்
கருமுகில் தொடர்ந்து செல்லுங்
காட்சி போல்தோன்று மாதோ. (84)

சொல்லும் பொருளும்: தும்பி– ஒருவகை வண்டு; துவரை–பவளம்; மரை– தாமரை மலர்; விசும்பு– வானம்; மதியம்–நிலவு.

9th_Tamil_Pages 122-264.indd 158 22-12-2020 15:57:43

பாடலின் பொருள்

1. அருவிகள் பறையாய் ஒலிக்கும்; பைங்கிளி தானறிந்த தமிழிசையைப் பாடும்; பொன் போன்ற அழகிய மயில் தன் அருமையான சிறகினை விரித்து ஆடும்; இக்காட்சியினைப் பூக்கள் நிறைந்த மரக்கிளைகளில் அமர்ந்திருக்கும் குரங்கினம் மிரட்சியுடன் பார்க்கும்.

2. தீயில் இட்ட சந்தனமரக் குச்சிகள், அகில் இவற்றின் நறுமணமும் உலையிலிட்ட மலை நெல்லரிசிச் சோற்றின் மணமும் காந்தள் மலரின் ஆழ்ந்த மணமும் பரவித் தோய்ந்து கிடந்ததனால் எல்லா இடங்களிலும் உள்ள பொருள்கள் மணம் கமழ்ந்து காணப்பட்டன.

3. நாகணவாய்ப் பறவைகளும் குயில்களும் அழகுமிக்க வண்டுகளும் பாவிசைத்துப் பாடின. புகழ்பெற்ற முல்லை நில மக்களான ஆயர், முக்கனியும் தேனும் சேகரித்துக் கொண்டு முக்குழல் இசையால் மேயும் பசுக் கூட்டங்களை ஒன்று சேர்த்தனர்.

4. முதிரை, சாமை, கேழ்வரகு, மணி போன்ற குதிரைவாலி நெல் ஆகியவற்றை முல்லை நில மக்கள் அறுத்துக் கதிரடித்துக் களத்தில் குன்று போலக் குவித்து வைத்திருப்பர். கதிரடிக்கும் அதிர்வு தரும் ஓசையைக் கேட்டு மான்கள் அஞ்சி ஓடும்.

5. கொடிய பாலைநிலத்து வெயிலின் வெப்பத்தைத் தாங்க இயலாத செந்நாய்க்குட்டி, வாய் மிகவும் உலர்ந்து குழறியது. இதனைக் கண்டு அதன் தாய் வருந்தியது. குட்டி இளைப்பாற எங்கும் நிழலில்லை. எனவே கடும் வெயிலில் தான் துன்புற்று நின்று, தனது நிழலில் குட்டியை இளைப்பாறச் செய்தது.

6. சிறுவர்கள் நன்கு மணம் வீசும் மராமலர்களை மாலையாக அணிந்திருந்தனர். எருதின் கொம்புகளைப் போன்றிருந்த பாலைக்காயை நிலத்தில் விழுந்து வெடிக்குமாறு அவர்கள் கோலினால் அடித்து விளையாடினர். அவ்வோசையைக் கேட்ட பருந்துகள் அச்சத்துடன் பறந்தோடின.

7. மலையிடையே தோன்றும் ஆறும் கரையை மோதித் ததும்பும் குளத்து நீரும் முல்லை நிலத்தின் அழகிய காட்டாறும் மருத நிலத்தில் பாய்ந்தோடும்; அங்கு நெற்பயிரினைக் காக்கும் வகையில் கரும்பு வளர்ந்து நிற்கும். பெருகி வரும் நீரினைக் கால்வாய்வழி வயலில் தேக்கி வளம் பெருக்கும். இத்தகு வளம் நிறைந்த மருதநில வயலில் காஞ்சி, வஞ்சி மலர்கள் பூத்து நிற்கும்.

8. தாமரை மலர்கள் பூத்திருந்த குளத்தில் சிறுவர்கள் நீராடினர். அக்குளத்தில் நீந்தும் யானையின் தந்தங்களை அளந்து பார்த்து, அதன் வடிவழகு கண்டு மகிழ்ந்தனர். சிறுகழல் அணிந்த சிறார்கள் வைக்கோற் போர் குலுங்கிடும்படி ஏறி, தென்னை இளநீர்க் காய்களைப் பறித்தனர். பின்னர்க் காஞ்சி மர நிழலில் அமர்ந்து அருந்தினர்.

9. தூய ஒழுக்கமுறையைப் பின்பற்றுபவர்கள், பசித்துயரால் துன்புறுவோரைக் கண்டு வருந்துவார்கள். அதுபோலத் தான் வாழும் இடமானது மூழ்குமாறு பெரும் கடலலை புகுந்து விட்டாலும், மலையளவுக்குப் பவளங்களையும் நல் இயல்பு தோன்றும் ஒளி முத்துகளையும் நெய்தல் நிலத்தவர் கடற்கரையில் கொண்டுவந்து குவிப்பர்.

10. தும்பியானது கரையை நெருங்கி வருகின்ற மலை போன்ற அலையினைத் தடவி, கடற்கரை மணலிடை உலவி, காற்றிலே தன் நீண்ட சிறகினை உலர்த்தும். பின்னர்ப் பெண்களின் முகத்தைத் தாமரை மலரெனக் கருதித் தொடர்ந்து செல்லும் அது வானில் முழு நிலவைத் தொடர்ந்து செல்லும் கருமேகத்தின் காட்சி போல் உள்ளது.

தெரிந்து தெளிவோம்

"இராவண காவியம் காலத்தின் விளைவு. ஆராய்ச்சியின் அறிகுறி. புரட்சிப் பொறி. உண்மையை உணர வைக்கும் உன்னத நூல்" – பேரறிஞர் அண்ணா

9th_Tamil_Pages 122-264.indd 159 22-12-2020 15:57:43

இலக்கணக் குறிப்பு

பைங்கிளி– பண்புத்தொகை; பூவையும் குயில்களும், முதிரையும், சாமையும், வரகும்– எண்ணும்மைகள். இன்னிளங்குருளை– பண்புத்தொகை ; அதிர்குரல் – வினைத்தொகை; மன்னிய– பெயரெச்சம்; வெரீஇ– சொல்லிசை அளபெடை; கடிகமழ்– உரிச்சொற்றொடர்; மலர்க்கண்ணி– மூன்றாம் வேற்றுமைஉருபும் பயனும் உடன் தொக்க தொகை;

எருத்துக்கோடு– ஆறாம் வேற்றுமைத்தொகை; கரைபொரு– இரண்டாம் வேற்றுமைத் தொகை; மரைமுகம்– உவமைத்தொகை; கருமுகில்– பண்புத்தொகை; வருமலை– வினைத்தொகை;

பகுபத உறுப்பிலக்கணம்

பருகிய = பருகு+இன்+ ய்+அ;

பருகு – பகுதி;

இன்– இறந்தகால இடைநிலை (ன் கெட்டது விகாரம்);

ய் –உடம்படுமெய்; அ –பெயரெச்ச விகுதி

பூக்கும் = பூ + க் + க் + உம்;

பூ – பகுதி; க் – சந்தி

க் – எதிர்கால இடைநிலை;

உம் – வினைமுற்று விகுதி

தெரிந்து தெளிவோம்

கோர்வை/கோவை : கோ என்பது வேர்ச்சொல். கோப்பு, கோவை, கோத்தல், கோத்தான், கோத்தாள் என்பதே சரி.
(எ.கா.) ஆசாரக்கோவை,
ஊசியில் நூலைக் கோத்தான்.

நூல் வெளி

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தனித்தமிழ்ப் பெருங்காப்பியம் இராவண காவியம். இந்நூல் தமிழகக் காண்டம், இலங்கைக் காண்டம், விந்தக் காண்டம், பழிபுரி காண்டம், போர்க்காண்டம் என ஐந்து காண்டங்களையும் 3100 பாடல்களையும் கொண்டது. இந்நூல் புலவர் குழந்தை அவர்களால் இயற்றப்பட்டது. தமிழகக் காண்டத்திலுள்ள பாடல்கள் இங்கு இடம்பெற்றுள்ளன. தந்தை பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்க 25 நாள்களில் இவர் திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளார். யாப்பதிகாரம், தொடையதிகாரம் உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட இலக்கண, இலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.

இராமாயணத்தில் எதிர்நிலை மாந்தராகப் படைக்கப்பட்ட இராவணனை முதன்மை நாயகனாகக் கொண்டு இயற்றப்பட்டது இராவண காவியம்.

கற்பவை கற்றபின்...

1. *ஐவகை நிலங்களில் உங்கள் மாவட்டம்/ஊர் அமைந்த நிலவகை பற்றியும் அதன் கவின்மிகு காட்சியையும் படக் கட்டுரையாக்குக.*
2. *இப்பாடப்பகுதியில் உங்களை ஈர்த்த கவிதைக் காட்சியினை ஓவியமாகத் தீட்டுக/ கவிதை வடிக்க.*
3. *வைக்கோற் போர், நெற்குதிர், போரடிக்கும் களம் போன்ற உழவுத் தொழிலோடு தொடர்புடையவற்றின் விளக்கங்களைத் தொகுத்து வகுப்பில் கலந்துரையாடுக.*

KIF7HP

9th_Tamil_Pages 122-264.indd 160 22-12-2020 15:57:43

கவிதைப் பேழை

பண்பாடு

நூ

மணிமேகலை

– சீத்தலைச் சாத்தனார்

நுழையும்முன்

மக்களின் வாழ்வில் பிறந்தது முதலாக நடத்தப்படுகின்ற நிகழ்வுகளில் விழா, தனக்கென ஒரு தனியிடம் பெறுகிறது. மனித மாண்புகளை எடுத்துரைக்கும் விழா, பண்பாட்டின் வெளிப்பாடாகவும் திகழ்கிறது. அல்லும் பகலும் உழைப்பில் திளைக்கின்ற மக்களை உற்சாகப்படுத்தி ஓய்வு தரும் வாயில் விழாதான். அவ்வகையில் புகார் நகரோடு அதிகம் தொடர்புடையதாகத் திகழ்ந்த இந்திரவிழா சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் விவரிக்கப்படுகிறது. அவ்விழா நிகழ்வுகளைக் கண்முன்னே காட்சிப்படுத்துவதாய் அமைகிறது மணிமேகலையின் விழாவறை காதை.

49P3VG

விழாவறை காதை

மெய்த்திறம் வழக்கு நன்பொருள் வீடெனும்
இத்திறம் தத்தம் இயல்பினிற் காட்டும்
சமயக் கணக்கரும் தந்துறை போகிய
அமயக் கணக்கரும் அகலா ராகிக்
கரந்துரு எய்திய கடவு ளாளரும்
பரந்தொருங்கு ஈண்டிய பாடை மாக்களும்
ஐம்பெருங் குழுவும் எண்பேர் ஆயமும்
வந்தொருங்கு குழீஇ வான்பதி தன்னுள்

(அடிகள் 11–18)

9th_Tamil_Pages 001-121.indd 68 22-12-2020 15:38:52

தோரண வீதியும் தோம்அறு கோட்டியும்
பூரண கும்பமும் பொலம்பா லிகைகளும்
பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்;
காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
பூக்கொடி வல்லியும் கரும்பும் நடுமின்;
பத்தி வேதிகைப் பசும்பொன் தூணத்து
முத்துத் தாமம் முறையொடு நாற்றுமின்;
விழவுமலி மூதூர் வீதியும் மன்றமும்
பழமணல் மாற்றுமின்; புதுமணல் பரப்புமின்;
கதலிகைக் கொடியும் காழ்ஊன்று விலோதமும்
மதலை மாடமும் வாயிலும் சேர்த்துமின்;
(அடிகள் 43–53)

தண்மணற் பந்தரும் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை அறிவீர் பொருந்துமின்;
ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள்
பட்டிமண் டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்;
பற்றா மாக்கள் தம்முடன் ஆயினும்
செற்றமும் கலாமும் செய்யாது அகலுமின்;
வெண்மணற் குன்றமும் விரிபூஞ் சோலையும்
தண்மணல் துருத்தியும் தாழ்பூந் துறைகளும்
தேவரும் மக்களும் ஒத்துடன் திரிதரும்
நாலேழ் நாளினும் நன்கறிந்தீர் என –
ஒளிறுவாள் மறவரும் தேரும் மாவும்
களிறும் சூழ்தரக் கண்முரசு இயம்பி
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க! என வாழ்த்தி;
அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கென் .
(அடிகள் 58–72)

சொல்லும் பொருளும்

சமயக் கணக்கர் –சமயத் தத்துவவாதிகள், பாடைமாக்கள் – பல மொழிபேசும் மக்கள், குழீஇ– ஒன்றுகூடி, தோம் – குற்றம், கோட்டி–மன்றம், பொலம்–பொன், வேதிகை–திண்ணை, தூணம்–தூண், தாமம்–மாலை, கதலிகைக் கொடி –சிறு சிறு கொடியாகப் பல கொடிகள் கட்டியது, காழூன்று கொடி – கொம்புகளில் கட்டும் கொடி, விலோதம் – துணியாலான கொடி, வசி– மழை, செற்றம்–சினம், கலாம்–போர், துருத்தி– ஆற்றிடைக்குறை (ஆற்றின் நடுவே இருக்கும் மணல்திட்டு).

பாடலின் பொருள்

இந்திர விழாவைக் காண வந்தோர்

உயர்வுடைய புகார் நகரில் மெய்ப்பொருள் உணர்த்தும் உலகியல், தத்துவம், வீடுபேறு ஆகிய பொருள்களை அவரவர் இயற்கைத் தன்மைக்கு ஏற்ப விளக்குபவராகிய சமயவாதிகள் கூடியிருக்கின்றனர். தமது நெறியில் சிறந்தவராக விளங்கும் காலத்தைக் கணக்கிட்டுச் சொல்லும் காலக்கணிதரும் கூடியிருக்கின்றனர். இந்நகரை விட்டு நீங்காதவராய்த் தம் தேவருடலை மறைத்து மக்கள் உருவில் வந்திருக்கும் கடவுளரும் கடல்வழி வாணிகம் செய்து பெரும் செல்வம் காரணமாய்ப் புகார் நகரில் ஒன்று திரண்டிருக்கும் பல மொழி பேசும் அயல் நாட்டினரும் குழுமியிருக்கின்றனர். அரசர்க்குரிய அமைச்சர் குழுவாகிய ஐம்பெருங்குழு, எண்பேராயத்தைச் சேர்ந்தவர்களும் அரசவையில் ஒன்று திரண்டிருக்கின்றனர்.

விழா முன்னேற்பாடுகள் பற்றி அறிவித்தல்

"தோரணம் கட்டிய தெருக்களிலும் குற்றமில்லாத மன்றங்களிலும் பூரணகும்பம், பொற்பாலிகை, பாவை விளக்கு மற்றும் பலவகையான மங்கலப் பொருள்களை முறையாக அழகுபடுத்தி வையுங்கள். குலை முற்றிய பாக்கு மரத்தையும் வாழை மரத்தையும் வஞ்சிக்கொடியையும் பூங்கொடிகளையும் கரும்பையும் நட்டு வையுங்கள். வீடுகளின்முன் தெருத் திண்ணையில் வரிசை வரிசையாக இருக்கும் தங்கத் தூண்களிலே முத்து மாலைகளைத் தொங்கவிடுங்கள்.

விழாக்கள் நிறைந்த இம்மூதூரின் தெருக்களிலும் மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புதிய மணலைப் பரப்புங்கள். துகில் கொடிகளையும் கம்புகளில் கட்டிய கொடிகளையும் பெரிய மாடங்களிலும் மாடங்களின் வாயில்களிலும் சேர்த்துக் கட்டுங்கள்.

9th_Tamil_Pages 001-121.indd 69 22-12-2020 15:38:52

பட்டிமண்டபம் ஏறுமின்

குளிர்ந்த மணல் பரப்பிய பந்தல்களிலும் மரங்கள் தாழ்ந்து நிழல்தரும் ஊர் மன்றங்களிலும் நல்லன பற்றிச் சொற்பொழிவாற்றுங்கள். அவரவர் சமயத்திற்கு உரிய உட்பொருளறிந்து வாதிடுவோர் பட்டிமண்டப முறைகளைத் தெரிந்து வாதிட்டுத் தீர்வு காணுங்கள்.

சினமும் பூசலும் கைவிடுக

மாறுபாடு கொண்ட பகைவர்களிடம் கூடக் கோபமும் பூசலும் கொள்ளாது அவர்களைவிட்டு விலகி நில்லுங்கள். வெண்மையான மணல் குன்றுகளிலும் மலர் செறிந்த பூஞ்சோலைகளிலும் குளிர்ந்த ஆற்றிடைக்குறைகளிலும் மரக்கிளைகள் நிழல் தரும் தண்ணீர்த் துறைகளிலும் விழா நடைபெறும். அந்த இருபத்தெட்டு நாள்களிலும் தேவரும் மக்களும் ஒன்றுபட்டு மகிழ்வுடன் உலாவிவருவர் என்பதை நன்கு அறியுங்கள்."

வாழ்த்தி அறிவித்தல்

ஒளிவீசும் வாளேந்திய காலாட் படையினரும் தேர்ப்படையினரும் குதிரைப் படையினரும் யானைப் படையினரும் சூழ்ந்து வர, அகன்ற முரசினை அறைந்து, "பசியும் நோயும் பகையும் நீங்கி மழையும் வளமும் எங்கும் பெருகுவதாகுக" என வாழ்த்தி மேற்கண்ட செய்திகளை நகருக்கு முரசறைவோன் அறிவித்தான்.

தெரிந்து தெளிவோம்

ஐம்பெருங்குழு

1. அமைச்சர்
2. சடங்கு செய்விப்போர்
3. படைத்தலைவர்
4. தூதர்
5. சாரணர் (ஒற்றர்)

எண்பேராயம்

1. கரணத்தியலவர்
2. கரும விதிகள்
3. கனகச்சுற்றம்
4. கடைக்காப்பாளர்
5. நகரமாந்தர்
6. படைத்தலைவர்
7. யானை வீரர்
8. இவுளி மறவர்

இலக்கணக் குறிப்பு

தோரணவீதியும், தோமறு கோட்டியும் – எண்ணும்மைகள்

காய்க்குலைக் கமுகு, பூக்கொடி வல்லி, முத்துத்தாமம் – இரண்டாம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்கத் தொகைகள்

மாற்றுமின், பரப்புமின் – ஏவல் வினைமுற்றுகள்

உறுபொருள் – உரிச்சொல்தொடர்

தாழ்பூந்துறை – வினைத்தொகை

பாங்கறிந்து – இரண்டாம் வேற்றுமைத்தொகை

நன்பொருள், தண்மணல், நல்லுரை – பண்புத்தொகைகள்

9th_Tamil_Pages 001-121.indd 70 22-12-2020 15:38:52

பகுபத உறுப்பிலக்கணம்

பரப்புமின் – பரப்பு + மின்

பரப்பு – பகுதி

மின் – முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி

அறைந்தனன் – அறை +த்(ந்) + த் +அன்+அன்

அறை – பகுதி

த் – சந்தி. த் – ந் ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

அன் – சாரியை

அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

நூல் வெளி

தொடர்நிலைச் செய்யுள் வரிசையில் இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும் தமிழ் மக்களின் வாழ்வியலைச் சொல்லும் கருவூலங்களாகத் திகழ்கின்றன. மணிமேகலை, ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. மணிமேகலையின் துறவு வாழ்க்கையைக் கூறுவதால், இந்நூலுக்கு மணிமேகலைத் துறவு என்னும் வேறு பெயரும் உண்டு. இது பெண்மையை முதன்மைப்படுத்தும் புரட்சிக் காப்பியம்; பண்பாட்டுக் கூறுகளைக் காட்டும் தமிழ்க்காப்பியம். இக்காப்பியம் சொற்சுவையும் பொருட்சுவையும் இயற்கை வருணனைகளும் நிறைந்தது; பௌத்த சமயச் சார்புடையது. கதை அடிப்படையில் மணிமேகலையைச் சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியெனக் கூறுவர். முப்பது காதைகளாக அமைந்துள்ள மணிமேகலையின் முதல் காதையே விழாவறை காதை.

மணிமேகலைக் காப்பியத்தை இயற்றியவர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார். சாத்தன் என்பது இவரது இயற்பெயர். இவர், திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த சீத்தலை என்னும் ஊரில் பிறந்து மதுரையில் வாழ்ந்தவர் என்று கூறுவர். கூலவாணிகம் (கூலம் – தானியம்) செய்தவர். இக்காரணங்களால் இவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்று அழைக்கப்பெற்றார். சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளும் இவரும் சமகாலத்தவர் என்பர். தண்டமிழ் ஆசான், சாத்தன், நன்னூற்புலவன் என்று இளங்கோவடிகள் சாத்தனாரைப் பாராட்டியுள்ளார்.

அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள்! மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல். (மணிமேகலை 25: 228 – 231)

கற்பவை கற்றபின்...

1. *உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவிற்கான அழைப்பிதழ் ஒன்றினை வடிவமைக்க.*
2. *குறிப்புகளைக் கொண்டு ஓர் இயற்கைக் காட்சியை விரித்தெழுதுக.*

   பூஞ்சோலை – சிரிக்கும் மலர்கள் – பசுமையான புல்வெளி – கூவும் குயில் – வீசும் தென்றல் – விளையாடும் குழந்தைகள் – அழகிய காட்சிகள்

9th_Tamil_Pages 001-121.indd 71 22-12-2020 15:38:52

கவிதைப்பேழை

இயல் மூன்று

நோயும் மருந்தும்

SQ79WW

மக்களின் உடலுக்கும் உள்ளத்திற்கும் துன்பம் தருவன நோய்கள். உள்ளத்தில் தோன்றும் தீய எண்ணங்களால் ஏற்படும் துன்பங்களையும் நோய்கள் என்றே நம் முன்னோர் குறிப்பிட்டனர். அந்நோய்களை நீக்கும் மருந்துகளாக விளங்கும் அறக்கருத்துகளை இலக்கியங்கள் விளக்குகின்றன. அத்தகைய கருத்துகளை விளக்கும் நீலகேசிப் பாடல்களை அறிவோம்.

தீர்வனவும் தீராத் திறத்தனவும் செய்ம்மருந்தின்
ஊர்வனவும் போலாதும் உவசமத்தின் உய்ப்பனவும்
யார்வினவும் காலும் அவைமூன்று கூற்றவா
நேர்வனவே ஆகும் நிழல்இகழும் பூணாய் (பா.113)

**பேர்தற்கு அரும்பிணி தாம்இவை அப்பிணி*
தீர்தற்கு உரிய திரியோக மருந்துஇவை
ஓர்தல் தெளிவோடு ஒழுக்கம் இவையுண்டார்
*பேர்த்த பிணியுள் பிறவார் பெரிதின்பமுற்றே**
(பா.116)

சொல்லும் பொருளும்

தீர்வன	–	நீங்குபவை	திறத்தன	–	தன்மையுடையன
உவசமம்	–	அடங்கி இருத்தல்	கூற்றவா	–	பிரிவுகளாக
நிழல்இகழும்	–	ஒளிபொருந்திய	பூணாய்	–	அணிகலன்களைஅணிந்தவளே
பேர்தற்கு	–	அகற்றுவதற்கு	பிணி	–	துன்பம்
திரியோகமருந்து	–	மூன்று யோகமருந்து	ஓர்தல்	–	நல்லறிவு
தெளிவு	–	நற்காட்சி	பிறவார்	–	பிறக்கமாட்டார்

பாடலின் பொருள்

ஒளிபொருந்திய அணிகலன்களை அணிந்த பெண்ணே! நோயின் தன்மைபற்றி யார் வினவினாலும் அது மூன்று வகைப்படும் என அறிவாயாக. மருந்தினால் நீங்கும் நோய்கள் ஒருவகை. எதனாலும் தீராத தன்மையுடைய நோய்கள் மற்றொரு வகை. அடங்கி இருப்பனபோல வெளித்தோற்றத்தில் தெரிந்தாலும் முற்றிலும் தீராமல் உள்ளுக்குள் இருந்து துன்பம் தருவன இன்னொரு வகை.

அகற்றுவதற்கு அரியவை பிறவித்துன்பங்கள் ஆகும். இவற்றைத் தீர்க்கும் மருந்துகள் மூன்று. நல்லறிவு, நற்காட்சி, நல்லொழுக்கம் என்பவையே அம்மருந்துகள். இவற்றை ஏற்றோர் பிறவித்துன்பத்திலிருந்து நீங்கி உயரிய இன்பத்தை அடைவர்.

நூல் வெளி

நீலகேசி ஐஞ்சிறுகாப்பியங்களுள் ஒன்று. இந்நூல் சமணசமயக் கருத்துகளை வாதங்களின் அடிப்படையில் விளக்குகிறது. கடவுள் வாழ்த்து நீங்கலாகப் பத்துச் சருக்கங்களைக் கொண்டது. சமயத் தத்துவங்களை விவாதிக்கும் தருக்க நூலான இதன் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. நீலகேசிக் காப்பியத்தின் தருமவுரைச் சருக்கத்திலிருந்து இரண்டு பாடல்கள் இங்குத் தரப்பட்டுள்ளன.

கற்பவை கற்றபின்

ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுகாப்பியங்கள் ஆகியவற்றின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. உடல்நலம் என்பது _____ இல்லாமல் வாழ்தல் ஆகும்.
   அ) அணி ஆ) பணி இ) பிணி ஈ) மணி
2. நீலகேசி கூறும் நோயின் வகைகள் _____.
   அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து
3. 'இவையுண்டார்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.
   அ) இ + யுண்டார் ஆ) இவ் + உண்டார்
   இ) இவை + உண்டார் ஈ) இவை + யுண்டார்
4. தாம் + இனி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.
   அ) தாம்இனி ஆ) தாம்மினி இ) தாமினி ஈ) தாமனி

குறுவினா

1. நோயின் மூன்று வகைகள் யாவை?
2. நீலகேசியில் பிறவித்துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன யாவை?

சிறுவினா

நோயின் வகைகள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை?

சிந்தனை வினா

துன்பமின்றி வாழ நாம் கைக்கொள்ளவேண்டிய நற்பண்புகள் யாவை?

www.cbsetamil.com

8th Std Tamil _20-12-2019.indd 49 03-01-2020 19:34:34

கவிதைப் பேழை

நாடு

எ

சீவக சிந்தாமணி

–திருத்தக்கத் தேவர்

LIYGKX



சங்க இலக்கியங்கள் நிகழ்வுகளில் கருத்தைக் கூறும் தன்னுணர்ச்சிப் பாடல்களாக அமைந்தன. அவற்றைத் தொடர்ந்து பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அறக்கருத்துகளைக் கூறுவனவாக இருந்தன. பின்னர், ஒப்பில்லாத தலைவன் ஒருவனது வாழ்க்கையைப் பாடுவனவாய்க் காப்பியங்கள் உருவாயின. இவ்வகையில், சீவகனைத் தலைவனாகக் கொண்டு தோன்றிய காப்பியம் சீவக சிந்தாமணி. இன்பங்களைத் துறந்து துறவு பூணவேண்டும் என்பதே இக்காப்பியத்தின் மையக்கருத்தாகும். ஏமாங்கத நாட்டின் வளத்தைத் திருத்தக்கத்தேவர் வருணிக்கும் பகுதி அந்நாட்டின் செழிப்பை உணர்த்துகிறது.

ஏமாங்கத நாட்டு வளம்

பார் போற்றும் ஏமாங்கதம்

1. *காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் நெற்றிப்*
பூமாண்ட தீந்தேன் தொடை கீறி வருக்கை போழ்ந்து
தேமாங்கனி சிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங்கதம் என்று இசையால்திசை போயது உண்டே! (31)

சொல்லும் பொருளும்:
தெங்கு – தேங்காய்; இசை – புகழ்;
வருக்கை – பலாப்பழம்; நெற்றி – உச்சி

வாரி வழங்கும் வள்ளல்

2. *வள்ளல் கைத்தல மாந்தரின் மால்வரைக்*
கொள்ளை கொண்ட கொழுநிதிக் குப்பையை
உள்ளம் இல்லவர்க்கு ஊர்தொறும் உய்த்துஉராய்
வெள்ளம் நாடு மடுத்து விரைந்ததே. (36)

சொல்லும் பொருளும்:
மால்வரை – பெரியமலை;
மடுத்து – பாய்ந்து; கொழுநிதி – திரண்ட நிதி

மணம் கமழும் கழனி

3. *நெறிமருப்பு எருமையின் ஒருத்தல் நீள்இனம்*
செறிமருப்பு ஏற்றினம் சிலம்பப் பண் உறீஇப்
பொறிவரி வராலினம் இரியப் புக்குடன்
வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே. (44)

சொல்லும் பொருளும்:
மருப்பு – கொம்பு; வெறி – மணம்;
கழனி – வயல்; செறி – சிறந்த; இரிய – ஓட

9th_Tamil_Pages 122-264.indd 186 22-12-2020 15:57:56

தலைவணங்கி விளைந்த நெற்பயிர்

4. சொல்அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே. (53)*

சொல்லும் பொருளும்

சூல் – கரு

எல்லாம் ஆயிரம் ஆயிரமாய்

5. அடிசில் வைகல் ஆயிரம் அறப்புறமும் ஆயிரம்
கொடியனார் செய் கோலமும் வைகல்தோறும் ஆயிரம்
மடிவுஇல் கம்மியர்களோடும் மங்கலமும் ஆயிரம்
ஒடிவுஇலை வேறுஆயிரம் ஓம்புவாரின் ஓம்பலே. (76)

சொல்லும் பொருளும்

அடிசில் – சோறு; மடிவு – சோம்பல்

கொடியனார் – மகளிர்

நாடுகள் சூழ்ந்த ஏமாங்கதம்

6. நற்றவம் செய்வார்க்கு இடம்தவம் செய்வார்க்கும் அஃதுஇடம்
நற்பொருள் செய்வார்க்கு இடம்பொருள் செய்வார்க்கும் அஃதுஇடம்
வெற்ற(ம்) இன்பம் விழைவிப்பான் விண்உவந்து வீழ்ந்தென
மற்றநாடு வட்டமாக வைகுமற்ற நாடரோ. (77)

சொல்லும் பொருளும்

நற்றவம் – பெருந்தவம்; வட்டம் – எல்லை; வெற்றம் – வெற்றி

சீவகசிந்தாமணி–இலம்பகங்கள்

1. நாமகள் இலம்பகம்
2. கோவிந்தையார் இலம்பகம்
3. காந்தருவதத்தையார் இலம்பகம்
4. குணமாலையார் இலம்பகம்
5. பதுமையார் இலம்பகம்
6. கேமசரியார் இலம்பகம்
7. கனகமாலையார் இலம்பகம்
8. விமலையார் இலம்பகம்
9. சுரமஞ்சியார் இலம்பகம்
10. மண்மகள் இலம்பகம்
11. பூமகள் இலம்பகம்
12. இலக்கணையார் இலம்பகம்
13. முத்தி இலம்பகம்

பாடலின் பொருள்

1. தென்னை மரத்திலிருந்து நன்றாக முற்றிய காய் விழுகிறது. அது விழுகின்ற வேகத்தில், பாக்கு மரத்தின் உச்சியிலுள்ள சுவைமிக்க தேனடையைக் கிழித்து, பலாப் பழத்தினைப் பிளந்து, மாங்கனியைச்சிதற வைத்து, வாழைப் பழத்தினை உதிர்க்கவும் செய்தது. இத்தகு வளம் நிறைந்த ஏமாங்கத நாட்டின் புகழ் உலகின் பலதிசைகளிலும் பரவியிருந்தது.

2. இரந்து கேட்பவர்க்கு இல்லை யென்னாது வாரி வழங்கும் செல்வர்களைப் போன்றது வெள்ளம். அது உயர்ந்த மலையிலிருந்து செல்வக் குவியலைச் சேர்த்துக்கொண்டு வந்து, ஊக்கமில்லாத மக்களுக்கு ஊர்தோறும் வழங்கும் வகையில் நாட்டினுள் விரைந்து பாய்கிறது.

3. அழகான கொம்புகளை உடைய ஆண் எருமைகளும் நேரான கொம்புகளையுடைய வலிமையான எருதுகளும் பேரொலி எழுப்புகின்றன. அவ்வொலி கேட்டுப் புள்ளிகளும் வரிகளும் உடைய வரால் மீன்கள் கலைந்து ஓடுகின்றன. அத்தகு மணம் வீசும் வயலில் உழவர் கூட்டம் வெள்ளம் போல் நிறைந்திருந்தது.

4. கருக்கொண்ட பச்சைப் பாம்புபோல நெற்பயிர்கள் தோற்றம் கொண்டுள்ளன. நெற்பயிர்கள் கதிர்விட்டு நிமிர்ந்து நிற்பது, செல்வம் பெற்ற பக்குவம் இல்லாதவர் தலைநிமிர்ந்து நிற்பதுபோல் உள்ளது. அப்பயிர்கள் முற்றியவுடன் நெற்கதிர்கள் சாய்ந்திருப்பது, தெளிந்த நூலைக் கற்ற நல்லவர்களின் பணிவைப்போல் உள்ளது.

9th_Tamil_Pages 122-264.indd 187 22-12-2020 15:57:57

5. வளம் நிறைந்த ஏமாங்கத நாட்டிலுள்ள ஊர்களில் நாள்தோறும் கிடைக்கும் உணவு வகைகள் ஆயிரம்; அறச்சாலைகள் ஆயிரம்; அங்கே மகளிர் ஒப்பனை செய்துகொள்ள மணிமாடங்கள் ஆயிரம்; மேலும் செய்தொழிலில் சிறிதும் சோம்பல் இல்லாத கம்மியர் ஆயிரம்; அதனால் நிகழும் திருமணங்களும் ஆயிரம்; ஏமாங்கத நாட்டில் தவிர்தலின்றி காவல் செய்யும் பாதுகாவலரும் ஆயிரம்.

6. ஏமாங்கத நாடு, உண்மையான தவம் புரிவோர்க்கும் இல்லறம் நடத்துவோர்க்கும் இனிய இடமாகும். நிலையான பொருளைத் தேடுவோர்க்கும் நிலையில்லாத பொருட்செல்வத்தைத் தேடுவோர்க்கும் உகந்த இடமாகும். நாடுகள் சூழ்ந்து இருக்கும் எழில்மிகு சிறப்புப் பொருந்திய ஏமாங்கத நாடு வானுலகம் வழங்கும் இன்பம், உலகோர் ஏற்கும் வகையில் தாழ்ந்து மண்ணுலகிற்கு இறங்கி வந்தது போல் திகழ்ந்தது.

இலக்கணக் குறிப்பு

நற்றவம் – பண்புத்தொகைகள்;

செய்கோலம் – வினைத்தொகை;

தேமாங்கனி (தேன்போன்ற மாங்கனி) – உவமைத்தொகை

இறைஞ்சி – வினையெச்சம்.

கொடியனார் – இடைக்குறை

பகுபத உறுப்பிலக்கணம்

இறைஞ்சி – இறைஞ்சு+ இ

இறைஞ்சு – பகுதி; இ – வினையெச்ச விகுதி

ஓம்புவார் – ஓம்பு + வ் + ஆர்

ஓம்பு – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை;

ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி

நூல் வெளி

சீவக சிந்தாமணி ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. இது விருத்தப்பாக்களால் இயற்றப்பட்ட முதல் காப்பியமாகும். 'இலம்பகம்' என்ற உட்பிரிவுகளைக் கொண்டது. 13 இலம்பகங்களைக் கொண்டுள்ள இந்நூல், 'மணநூல்' எனவும் அழைக்கப்படுகிறது. நாமகள் இலம்பகத்தில் நாட்டுவளம் என்னும் பகுதி பாடமாக அமைந்துள்ளது. இதன் ஆசிரியர் திருத்தக்கதேவர். சமண சமயத்தைச் சார்ந்த இவர், இன்பச்சுவை மிக்க இலக்கியமும் இயற்றமுடியும் என்று நிறுவும் வகையில் இக்காப்பியத்தை இயற்றினார். இவரது காலம் ஒன்பதாம் நூற்றாண்டு. சீவக சிந்தாமணி பாடுவதற்கு முன்னோட்டமாக 'நரிவிருத்தம்' என்னும் நூலை இயற்றினார் என்பர்.

கற்பவை கற்றபின்...

1. அருகிலுள்ள இயற்கைக் காட்சிகளைக் குறிப்பெடுத்து ஓவியம் தீட்டுக.
2. உங்கள் பள்ளி வேரூன்றிய நாள் தொடங்கி வளர்ந்த வரலாற்றையும் அதன் சிறப்புகளையும் கட்டுரையாக்குக.

LJ8CMK

9th_Tamil_Pages 122-264.indd 188 22-12-2020 15:57:57

கவிதைப்பேழை

இயல் இரண்டு

சிலப்பதிகாரம்

7AXDFL

நுழையும்முன்

நம்மைச் சுற்றிலும் எங்குப் பார்த்தாலும் இயற்கையின் அழகு கொட்டிக் கிடக்கிறது. கடலும், மலையும், கதிரும், நிலவும் மழையும் பனியும் இயற்கையின் கொடைகள் அல்லவா? அவற்றைக் கண்டு மகிழாதவர் உண்டோ? நிலவின் குளிர்ச்சியையும் கதிரவனின் வெம்மையையும், மழையின் பயனையும் சிலப்பதிகாரம் போற்றுகிறது.

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கு அலர்தார்ச் சென்னி குளிர் வெண்குடை போன்றுஇவ்
அங்கண் உலகு அளித்த லான்

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலம் திரிதலான்

**மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்*
நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்
*மேல்நின்று தான் சுரத்தலான்**

– இளங்கோவடிகள்

வான்நிலா போற்றுவோம்! வான்நிலா போற்றுவோம்!
மாலை அணிந்த சோழனின் குளிர்ந்த
வெண்குடை போல அருளை வழங்கும்
வான்நிலா போற்றுவோம்! வான்நிலா போற்றுவோம்!

கதிரவன் போற்றுவோம்! கதிரவன் போற்றுவோம்!
காவிரி நாடன் சோழனின் ஆணைச்
சக்கரம் போலவே இமயத்தை வலம்வரும்
கதிரவன் போற்றுவோம்! கதிரவன் போற்றுவோம்!

வான்மழை போற்றுவோம்! வான்மழை போற்றுவோம்!
கடல்சூழ் உலகுக்கு அருளைப் பொழியும்
மன்னனைப் போல முகில்வழி சுரக்கும்
வான்மழை போற்றுவோம்! வான்மழை போற்றுவோம்!

6th Std Tamil CBSE Pages 25-50.indd 26 20-03-2020 16:26:18

சொல்லும் பொருளும்

திங்கள்	-	நிலவு	பொற்கோட்டு	-	பொன்மயமான சிகரத்தில்
கொங்கு	-	மகரந்தம்	மேரு	-	இமயமலை
அலர்	-	மலர்தல்	நாமநீர்	-	அச்சம் தரும் கடல்
திகிரி	-	ஆணைச்சக்கரம்	அளி	-	கருணை

பாடலின் பொருள்

தேன் நிறைந்த ஆத்திமலர் மாலையை அணிந்தவன் சோழ மன்னன். அவனுடைய வெண்கொற்றக் குடை குளிர்ச்சி பொருந்தியது. அதைப் போலவே வெண்ணிலவும் தன் ஒளியால் உலகுக்கு இன்பம் அளிக்கிறது. அதனால் வெண்ணிலவைப் போற்றுவோம்.

காவிரி ஆறு பாய்ந்து வளம் செய்யும் நாட்டை ஆட்சி செய்பவன் சோழ மன்னன். அவனது ஆணைச் சக்கரம் போல, கதிரவனும் பொன்போன்ற சிகரங்களையுடைய இமயமலையை வலப்புறமாகச் சுற்றிவருகிறது. அதனால் கதிரவனைப் போற்றுவோம்!

அச்சம்தரும் கடலை எல்லையாகக் கொண்ட உலகிற்கு மன்னன் அருள் செய்கிறான். அதுபோல, மழை, வானிலிருந்து பொழிந்து மக்களைக் காக்கிறது. அதனால் மழையைப் போற்றுவோம்!

நூல் வெளி

சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை இயற்றியவர் இளங்கோவடிகள். இவர் சேர மன்னர் மரபைச் சேர்ந்தவர் என்று சிலப்பதிகாரப் பதிகம் கூறுகிறது. இவர் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர்.

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம். இதுவே தமிழின் முதல் காப்பியம். இது முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம், என்றெல்லாம் போற்றப்படுகிறது. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

திங்கள், ஞாயிறு, மழை என இயற்கையை வாழ்த்துவதாக இந்நூல் தொடங்குகிறது. அவ்வாழ்த்துப்பகுதி நமக்குப் பாடமாகத் தரப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

1. 'வளர்பிறையும் தேய்பிறையும்' என்னும் தலைப்பில் பேசுக.
2. நீங்கள் விரும்பும் இயற்கைப் பொருள்களின் பெயர்களைப் பட்டியலிடுக.
3. "நிலா " என்னும் தலைப்பில் நான்கு அடிகளில் கவிதை படைத்திடுக.

6th Std Tamil CBSE Pages 25-50.indd 27 20-03-2020 16:26:18

மதிப்பீடு

7B79H9

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கழுத்தில் சூடுவது _____

   அ) தார் ஆ) கணையாழி இ) தண்டை ஈ) மேகலை

2. கதிரவனின் மற்றொரு பெயர் _____

   அ) புதன் ஆ) ஞாயிறு இ) சந்திரன் ஈ) செவ்வாய்

3. 'வெண்குடை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

   அ) வெண் + குடை ஆ)வெண்மை + குடை

   இ) வெம் + குடை ஈ) வெம்மை + குடை

4. 'பொற்கோட்டு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

   அ) பொன் + கோட்டு ஆ) பொற் + கோட்டு

   இ) பொண் + கோட்டு ஈ) பொற்கோ + இட்டு

5. கொங்கு + அலர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

   அ) கொங்குஅலர் ஆ) கொங்அலர் இ) கொங்கலர் ஈ) கொங்குலர்

6. அவன் + அளிபோல் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

   அ)அவன்அளிபோல் ஆ) அவனளிபோல்

   இ) அவன்வளிபோல் ஈ) அவனாளிபோல்

நயம் அறிக.

1. பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதுக
2. பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக

குறுவினா

1. சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது?
2. இயற்கை போற்றத்தக்கது ஏன்?

சிந்தனைவினா

இயற்கையைப் போற்றும் வழக்கம் ஏற்படக் காரணமாக எவற்றைக் கருதுகிறீர்கள்?

6th Std Tamil CBSE Pages 25-50.indd 28 20-03-2020 16:26:18

கவிதைப் பேழை

நாடு

எ

சிலப்பதிகாரம்

–இளங்கோவடிகள்

NDR1GK



இன்று 'எங்கும் வணிகம் எதிலும் வணிகம்'! பொருள்களை உற்பத்தி செய்வதைவிட சந்தைப்படுத்துவதில்தான் உலக நாடுகளும் தொழில் முனைவோரும் அதிக அக்கறை செலுத்துகிறார்கள். இன்று நேற்றல்ல; பண்டைக் காலந்தொட்டே வாணிகமும் தொழிலும் ஒழுங்கு முறையுடன் சிறந்திருந்ததை இலக்கியங்கள் காட்சிப்படுத்துகின்றன! அவற்றுள் ஒன்றே மருவூர்ப்பாக்கக் காட்சி!

மருவூர்ப் பாக்கம்

வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்;
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;

*தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;

பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்; *

காழியர், கூவியர், கள்நொடை ஆட்டியர்,
மீன்விலைப் பரதவர், வெள்உப்புப் பகருநர்,
பாசவர், வாசவர், பல்நிண விலைஞரோடு
ஓசுநர் செறிந்த ஊன்மலி இருக்கையும்;

கஞ்ச காரரும் செம்புசெய் குநரும்
மரம்கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்

கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டு ஆளரும்
பொன்செய் கொல்லரும் நன்கலம் தருநரும்
துன்ன காரரும் தோலின் துன்னரும்
கிழியினும் கிடையினும் தொழில்பல பெருக்கிப்

பழுதுஇல் செய்வினைப் பால்கெழு மாக்களும்;
குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்
வழுவின்றி இசைத்து வழித்திறம் காட்டும்
அரும்பெறல் மரபின் பெரும்பாண் இருக்கையும்;

சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுஇன்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும்

இந்திரவிழா ஊரெடுத்த காதை (அடி 13–39)



10th_Tamil_Unit 7.indd 168 24-01-2020 10.07.58 AM

சொல்லும் பொருளும்

சுண்ணம் – நறுமணப்பொடி,
காருகர் – நெய்பவர் (சாலியர்),
தூசு – பட்டு, துகிர் – பவளம்,
வெறுக்கை – செல்வம், நொடை – விலை,
பாசவர் – வெற்றிலை விற்போர்,
ஓசுநர் – எண்ணெய் விற்போர்,
மண்ணுள் வினைஞர் – ஓவியர்,
மண்ணீட்டாளர் – சிற்பி, கிழி – துணி.

பாடலின் பொருள்

புகார் நகர மருவூர்ப்பாக்கத்தின் வணிக வீதிகளில் வண்ணக்குழம்பு, சுண்ணப்பொடி, குளிர்ந்த மணச்சாந்து, பூ, நறுமணப் புகைப்பொருள்கள், அகில் முதலான மணப்பொருள்கள் விற்பவர்கள் வீதிகளில் வணிகம் செய்து கொண்டிருக்கின்றனர்.

இங்குப் பட்டு, முடி, பருத்திநூல், இவற்றினைக் கொண்டு அழகாகப் பின்னிக் கட்டும் கைத்தொழில் வல்லுநரான நெசவாளர் வாழும் வீதிகள் உள்ளன. இங்குப் பட்டும் பவளமும், சந்தனமும் அகிலும், முத்தும் மணியும் பொன்னும் அளக்க முடியாத அளவிற்குக் குவிந்து கிடக்கும் வளம் நிறைந்த அகன்ற வணிக வீதிகளும் உள்ளன. மேலும் இவ்வீதிகளில் வேறு பலப்பல பண்டங்களின் விற்பனை நடைபெறுகின்றது. எட்டுவகைத் தானியங்களும் குவிந்து கிடக்கும் கூலக்கடைத் தெருக்களும் உள்ளன.

மருவூர்ப்பாக்கத்தின் தெருக்களில், பிட்டு வணிகம் செய்பவரும் அப்பம் சுடுபவரும் கள் விற்கும் வலைச்சியரும் மீன் விற்கும் பரதவரும் உள்ளனர். மேலும் வெண்மையான உப்பு விற்கும் உமணரும் வெற்றிலை விற்பவரும் ஏலம் முதலான ஐந்து நறுமணப் பொருள் விற்பவரும் பல வகையான இறைச்சிகள் விற்பவரும் எண்ணெய் வணிகரும் இங்கு வணிகம் செய்கின்றனர்.

இவற்றுடன் அத்தெருக்களில் பல்வகைப் பொருள்களை விற்கின்ற கடைகளும் உள்ளன. வெண்கலம், செம்புப் பாத்திரங்கள் செய்வோர், மரத்தச்சர், இரும்புக்கொல்லர், ஓவியர், மண் பொம்மைகள் செய்பவர், சிற்பிகள் ஆகியோர் உள்ளனர். பொற்கொல்லர், இரத்தின வேலை செய்பவர், தையற்காரர், தோல்பொருள் தைப்பவர், துணியாலும் கட்டைகளாலும் பொம்மைகள் செய்பவர் ஆகியோர் உள்ளனர்.

இவ்வாறாகப் பழுதின்றிக் கைத்தொழில் பல செய்யும் மக்கள் வாழும் பகுதிகள் இங்கு நிறைந்துள்ளன. குழலிலும் யாழிலும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழு இசைகளைக் (ச, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழு சுரங்களை) குற்றமில்லாமல் இசைத்துச் சிறந்த திறமையைக் காட்டும் பெரும்பாணர்களின் இருப்பிடங்களும் உள்ளன.

இவர்களுடன் மருவூர்ப்பாக்கத்தின் தெருக்களில் சிறுசிறு கைத்தொழில் செய்வோர், பிறருக்கு ஏவல் செய்வோர் வாழும் இடங்களும் உள்ளன. இவை அனைத்தும் குற்றமின்றிச் சிறப்புடன் அமைந்து விளங்கப் பரந்து கிடந்தன.

இலக்கணக் குறிப்பு

வண்ணமும் சுண்ணமும் – எண்ணும்மை
பயில்தொழில் – வினைத்தொகை

பகுபத உறுப்பிலக்கணம்

மயங்கிய – மயங்கு + இ(ன்) + ய் + அ
மயங்கு – பகுதி
இ(ன்) – இறந்தகால இடைநிலை; 'ன்' புணர்ந்து கெட்டது.
ய் – உடம்படுமெய்
அ – பெயரெச்ச விகுதி

ஐம்பெருங்காப்பிய முறைவைப்பு

"சிந்தா மணியாம் சிலப்பதிகா ரம்படைத்தான்
கந்தா மணிமே கலைபுனைந்தான் – நந்தா
வளையா பதிதருவான் வாசவனுக் கீந்தான்
திளையாத குண்டலகே சிக்கும்"

–திருத்தணிகையுலா.

10th_Tamil_Unit 7.indd 169 24-01-2020 10.07.58 AM

தெரியுமா?

பெருங்குணத்துக் காதலாள் நடந்த பெருவழி

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து கண்ணகியும் கோவலனும் உறையூர் மற்றும் திருவரங்கம் வழியாகக் கொடும்பாளூர் என்னும் இடத்தை அடைந்தனர். தென்னவன் சிறுமலையின் வலப்பக்கம் வழியாகச் சென்றால் மதுரையை அடையலாம். சிறுமலையின் இடப்பக்க வழியாகச் சென்றால் திருமால்குன்றம்(அழகர் மலை) வழியாக மதுரை செல்லலாம். இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட வழியில், சோலைகள் மிகுந்த ஊர்களும் காடுகளும் உள்ளன. அவ்வழியாகச் சென்றால் மூன்று வழிகளும் சந்திக்கும் மதுரைப் பெருவழியை அடைந்து, மதுரை செல்லலாம். கோவலனையும் கண்ணகியையும் கவுந்தியடிகள் இடைப்பட்ட வழியிலேயே அழைத்துச் சென்றார்.

மதுரையில் கணவனை இழந்த கண்ணகி, மதுரையிலிருந்து வைகையின் தென்கரை வழியாக நெடுவேள் குன்றம்(சுருளி மலை) சென்று வேங்கைக் கானல் என்னுமிடத்தை அடைந்தாள்.

உரைப்பாட்டு மடை (உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்)

உரைப்பாட்டு மடை என்பது சிலப்பதிகாரத்தில் வரும் தமிழ்நடை. இது உரைநடைப்பாங்கில் அமைந்திருக்கும் பாட்டு.

வாய்க்காலில் பாயும் நீரை வயலுக்குத் திருப்பிவிடுவது மடை. உரை என்பது பேசும் மொழியின் ஓட்டம். இதனைச் செய்யுளாகிய வயலில் பாய்ச்சுவது உரைப்பாட்டு மடை.

நூல் வெளி

சிலப்பதிகாரம், புகார்க்காண்டத்தின் இந்திரவிழா ஊரெடுத்த காதையிலிருந்து இப்பாடப்பகுதி எடுத்தாளப்பட்டுள்ளது.

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம். இது முத்தமிழ்க்காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்றும் சிறப்பிக்கப்படுகிறது; மூவேந்தர் பற்றிய செய்திகளைக் கூறுகிறது. இது புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று காண்டங்களையும் முப்பது காதைகளையும் உடையது; கோவலன், கண்ணகி, மாதவி வாழ்க்கையைப் பாடுவது. மணிமேகலைக் காப்பியத்துடன் கதைத்தொடர்பு கொண்டிருப்பதால் இவையிரண்டும் இரட்டைக்காப்பியங்கள் எனவும்அழைக்கப்பெறுகின்றன.

சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள், சேர மரபைச் சேர்ந்தவர். மணிமேகலையின் ஆசிரியர் சீத்தலைச்சாத்தனார் கோவலன் கண்ணகி கதையைக் கூறி, 'அடிகள் நீரே அருளுக' என்றதால் இளங்கோவடிகளும் 'நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச்செய்யுள்' என இக்காப்பியம் படைத்தார் என்பர்.

கற்பவை கற்றபின்...

1. *சிலப்பதிகாரக் கதைச் சுருக்கத்தை அறிந்து வந்து வகுப்பறையில் கூறுக.*
2. *சிலப்பதிகாரம் காட்டும் மருவூர்ப்பாக்கம் பற்றிய விவரிப்பை இன்றைய கடைத்தெருவுடன் ஒப்பிட்டு உரையாடுக.*

10th_Tamil_Unit 7.indd 170 24-01-2020 10.07.58 AM

கவிதைப் பேழை

அறம்

அ

யசோதர காவியம்

LP3HVY



படித்து இன்புற மட்டுமன்றி வாழ்க்கை நெறிகளை அறிவுறுத்த உதவுவனவும் இலக்கியங்களே! உலகப் பொதுமறையாம் திருக்குறள் தொடங்கி அறம் சார்ந்த தனித்துவ இலக்கியங்கள் தமிழில் உள்ளன. அவ்விலக்கியங்கள் காட்டும் வாழ்க்கைப்பாதை உயர்வானது; அப்பாதையில் பயணித்தால் வாழ்க்கையை வளமாக்கலாம். வாருங்கள் அறத்தேரின் வடம் பிடிப்போம்!

ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக
போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக
நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக
காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே. 1405

சொல்லும் பொருளும்

அறம் – நற்செயல்; வெகுளி– சினம்; ஞானம்– அறிவு; விரதம் – மேற்கொண்ட நன்னெறி.

பாடலின்பொருள்

நாம் ஒரு செயலைச் செய்வதென்றால் அச்செயல் பயன்தரத்தக்க நற்செயலாக இருத்தல் வேண்டும்; நம்மிடம் உள்ள தீய பண்புகளை நீக்கிட வேண்டுமாயின் முதலில் சினத்தை நீக்கவேண்டும்; ஆராய வேண்டுமானால் மெய்யறிவு நூல்களை ஆராய வேண்டும்; இடைவிடாது போற்றிக் காக்க வேண்டுமானால் தாம் கொண்ட நன்னெறியினைக் காக்க வேண்டும்.

இலக்கணக் குறிப்பு

ஆக்குக, போக்குக, நோக்குக, – வியங்கோள் வினைமுற்றுகள்

பகுபத உறுப்பிலக்கணம்

போக்குக = போக்கு+க

போக்கு – பகுதி

க – வியங்கோள் வினைமுற்று விகுதி

நூல் வெளி

ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று யசோதர காவியம். இந்நூல் வடமொழியிலிருந்து தமிழில் தழுவி எழுதப் பெற்றதாகும். இந்நூலின் ஆசிரியர் பெயரை அறிய முடியவில்லை. இது சமண முனிவர் ஒருவரால் இயற்றப்பட்டது என்பர். யசோதர காவியம், 'யசோதரன்' என்னும் அவந்தி நாட்டு மன்னனின் வரலாற்றைக் கூறுகிறது. இந்நூல் ஐந்து சருக்கங்களைக் கொண்டது; பாடல்கள் எண்ணிக்கை 320 எனவும் 330 எனவும் கருதுவர்.

கற்பவை கற்றபின்...

LPCDXL

தொடர்களை ஒப்பிட்டுக் கருத்துகளை வகுப்பறையில் கலந்துரையாடுக.

அறம் செய விரும்பு ஆறுவது சினம்	ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக

9th_Tamil_Pages 122-264.indd 219 22-12-2020 15:58:05

கவிதைப்பேழை

இயல் எட்டு

புதுமை விளக்கு

ST4L5U

உள்ளத்தூய்மையோடு நன்னெறியில் நடப்பதே சான்றோரின் இயல்பு. இறைவழிபாட்டில் சடங்குகளை விட உள்ளத் தூய்மையே முதன்மையானது. இயற்கையையும் தம் உள்ளத்து அன்பையும் விளக்காக ஏற்றி வழிபட்ட சான்றோர்களின் பாடல்களைக் கற்று மகிழ்வோம்.

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் – செய்ய
சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
*இடர்ஆழி நீங்குகவே என்று**

– பொய்கையாழ்வார்

சொல்லும் பொருளும்

வையம் – உலகம்
வெய்ய – வெப்பக்கதிர் வீசும்
சுடர்ஆழியான் – ஒளிவிடும் சக்கரத்தை உடைய திருமால்
இடர்ஆழி – துன்பக்கடல்
சொல்மாலை – பாமாலை

பாடலின் பொருள்

பூமியை அகல்விளக்காகவும், ஒலிக்கின்ற கடலை நெய்யாகவும், வெப்பக்கதிர் வீசும் கதிரவனைச் சுடராகவும் கொண்டவன் திருமால். சிவந்த ஒளிவீசும் சக்கரத்தை உடைய அவனது திருவடிகளுக்கு என் துன்பக்கடல் நீங்க வேண்டிப் பாடலால் மாலை சூட்டினேன்.

நூல் வெளி

பொய்கையாழ்வார் காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள திருவெஃகா என்னும் ஊரில் பிறந்தவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் உள்ள முதல் திருவந்தாதி இவர் பாடியதாகும். அதன் முதல் பாடல் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

www.cbsetamil.com

7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 168 20-03-2020 17:48:11

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா – நன்புஉருகி
ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான்

– பூதத்தாழ்வார்

சொல்லும் பொருளும்

தகளி – அகல்விளக்கு
நாரணன் – திருமால்
ஞானம் – அறிவு

பாடலின் பொருள்

ஞானத்தமிழ் பயின்ற நான் அன்பையே அகல்விளக்காகவும், ஆர்வத்தையே நெய்யாகவும், இனிமையால் உருகும் மனத்தையே இடுகின்ற திரியாகவும் கொண்டு, ஞான ஒளியாகிய சுடர் விளக்கை மனம் உருக திருமாலுக்கு ஏற்றினேன்.

நூல் வெளி

பூதத்தாழ்வார் சென்னையை அடுத்துள்ள மாமல்லபுரத்தில் பிறந்தவர். இவர் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் இரண்டாம் திருவந்தாதியை இயற்றியுள்ளார். நம் பாடப்பகுதி இரண்டாம் திருவந்தாதியில் உள்ள முதல்பாடலாகும்.

தெரிந்து தெளிவோம்

ஒரு பாடலின் இறுதி எழுத்தோ, அசையோ, சொல்லோ அடுத்து வரும் பாடலுக்கு முதலாக அமைவதை அந்தாதி என்பர். (அந்தம் – முடிவு, ஆதி – முதல்).

இவ்வாறு அந்தாதியாக அமையும் பாடல்களைக் கொண்டு அமைவது அந்தாதி என்னும் சிற்றிலக்கிய வகையாகும்.

தெரிந்து தெளிவோம்

திருமாலைப் போற்றிப் பாடியவர்கள் பன்னிரு ஆழ்வார்கள். அவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு நாலாயிரத் திவ்விய பிரபந்தம் ஆகும். இதனைத் தொகுத்தவர் நாதமுனி ஆவார்.

பன்னிரு ஆழ்வார்களுள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரையும் முதலாழ்வார்கள் என்பர்.

www.cbsetamil.com
7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 169 20-03-2020 17:48:11

கற்பவை கற்றபின்

பன்னிரு ஆழ்வார்களின் பெயர்களைத் திரட்டுக

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. "இடர் ஆழி நீங்குகவே" – இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்_____.

   அ) துன்பம் ஆ) மகிழ்ச்சி இ) ஆர்வம் ஈ) இன்பம்

2. 'ஞானச்சுடர்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) ஞான + சுடர் ஆ) ஞானச் + சுடர் இ) ஞானம் + சுடர் ஈ) ஞானி + சுடர்

3. இன்பு + உருகு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) இன்பு உருகு ஆ) இன்பும் உருகு இ) இன்புருகு ஈ) இன்பருகு

பொருத்துக.

1. அன்பு – நெய்
2. ஆர்வம் – தகளி
3. சிந்தை – விளக்கு
4. ஞானம் – இடுதிரி

குறுவினா

1. பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் அகல்விளக்காக எவற்றை உருவகப்படுத்துகின்றனர்?
2. பொய்கை ஆழ்வார் எதற்காகப் பாமாலை சூட்டுகிறார்?

சிறுவினா

பூதத்தாழ்வார் ஞானவிளக்கு ஏற்றும் முறையை விளக்குக.

சிந்தனை வினா

பொய்கையாழ்வார் ஞானத்தை விளக்காக உருவகப்படுத்துகிறார். நீங்கள் எவற்றை எல்லாம் விளக்காக உருவகப்படுத்துவீர்கள்?

www.cbsetamil.com

7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 170 20-03-2020 17:48:11

கவிதைப்பேழை

இயல் எட்டு

அறம் என்னும் கதிர்

TEDW9E

இளமைப்பருவம் எதனையும் எளிதில் கற்றுக்கொள்ளும் பருவமாகும். இப்பருவத்தில் கல்வியை மட்டுமல்லாது நற்பண்புகளையும் கற்றுக்கொள்ள வேண்டும். அது வாழ்வு முழுமைக்கும் பயனளிக்கும். அறநெறிகளை இளமைப்பருவத்தில் கற்றுக்கொள்வதை உழவுத்தொழிலோடு ஒப்பிட்டுக் கூறும் பாடல் ஒன்றனை அறிவோம்.

இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனஓர்
*பைங்கூழ் சிறுகாலைச் செய்**

– முனைப்பாடியார்

சொல்லும் பொருளும்

வித்து	–	விதை	களை	–	வேண்டாத செடி
ஈன	–	பெற	பைங்கூழ்	–	பசுமையான பயிர்
நிலன்	–	நிலம்	வன்சொல்	–	கடுஞ்சொல்

பாடலின் பொருள்

இனிய சொல்லையே விளைநிலமாகக் கொள்ளவேண்டும். அதில் ஈகை என்னும் பண்பை விதையாக விதைக்க வேண்டும். வன்சொல் என்னும் களையை நீக்க வேண்டும். உண்மை பேசுதல் என்னும் எருவினை இடவேண்டும். அன்பாகிய நீரைப் பாய்ச்ச வேண்டும். அப்போதுதான் அறமாகிய கதிரைப் பயனாகப் பெற முடியும். இளம் வயதிலேயே இச்செயல்களைச் செய்ய வேண்டும்.

நூல் வெளி

முனைப்பாடியார் திருமுனைப்பாடி என்னும் ஊரைச் சேர்ந்த சமணப்புலவர். இவரது காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டு.

இவர் இயற்றிய அறநெறிச்சாரம் 225 பாடல்களைக் கொண்டது. அறநெறிகளைத் தொகுத்துக் கூறுவதால் இந்நூல் அறநெறிச்சாரம் எனப் பெயர்பெற்றது. இந்நூலின் பதினைந்தாம் பாடல் நமக்குப் பாடமாகத் தரப்பட்டுள்ளது.

www.cbsetamil.com

7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 171 20-03-2020 17:48:12

கற்பவை கற்றபின்

1. பிறருடன் பேசும்போது நீங்கள் பயன்படுத்தும் இன்சொற்களைத் தொகுத்துக் கூறுக.
2. உன் அன்னை பயன்படுத்திய இன்சொல்லால் நீ மகிழ்ந்த நிகழ்வு ஒன்றைக் கூறுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. காந்தியடிகள் எப்போதும் ----------ப் பேசினார்

   அ) வன்சொற்களை ஆ) அரசியலை இ) கதைகளை ஈ) வாய்மையை

2. 'இன்சொல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) இனிய + சொல் ஆ) இன்மை + சொல் இ) இனிமை + சொல் ஈ) இன் + சொல்

3. அறம் + கதிர் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) அற கதிர் ஆ) அறுகதிர் இ) அறக்கதிர் ஈ) அறம்கதிர்

4. ' இளமை' என்னும் சொல்லின் எதிர்ச்சொல் _____.

   அ) முதுமை ஆ) புதுமை இ) தனிமை ஈ) இனிமை

பொருத்துக.

1. விளைநிலம் – உண்மை
2. விதை – இன்சொல்
3. களை – ஈகை
4. உரம் – வன்சொல்

குறுவினா

1. அறக்கதிர் விளைய எதனை எருவாக இடவேண்டும் என முனைப்பாடியார் கூறுகிறார்?
2. நீக்கவேண்டிய களை என்று அறநெறிச்சாரம் எதனைக் குறிப்பிடுகிறது?

சிறுவினா

இளம் வயதிலேயே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவன யாவை?

சிந்தனை வினா

இளம் வயதிலேயே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய நற்பண்புகள் எவை எனக் கருதுகிறீர்கள்?

www.cbsetamil.com
7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 172 20-03-2020 17:48:12

இயல் எட்டு

ஒப்புரவு நெறி

TTWRAQ

நுழையும்முன்

மனிதர்கள் தனித்து வாழப் பிறந்தவர்கள் அல்லர். சமுதாயமாகக் கூடி வாழ்ந்து ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழப்பிறந்தவர்கள். பிறருக்கு உதவி செய்யும் பொழுது அவர்களுக்குத் தாழ்வு ஏற்படாவண்ணம் உதவுவதே சிறந்த பண்பாகும். அறநெறியில் பொருளீட்டித் தாமும் வாழ்ந்து பிறரையும் வாழ வைப்பதே ஒப்புரவு நெறியாகும். அதனைப் பற்றிய சிந்தனைகளை அறிவோம்.

இந்த மானுடப் பிறவி தற்செயலாகவோ விபத்தின் காரணமாகவோ அமைந்தது அன்று. இஃது ஓர் அரிய வாய்ப்பு. ஒரே ஒரு தடவை மட்டுமே வழங்கப் பெறும் வாய்ப்பு. இந்தப் பிறவியை மதித்துப் போற்றிப் பயன் கொள்ளுதல் கடமை. அதனால் எவ்வளவு நாள் வாழ்ந்தோம் என்பது அல்ல, எப்படி வாழ்ந்தோம் என்பதே கேள்வி. வாழ்ந்த காலம் எந்தமுத்திரையைப் பெற்றது? வாழ்ந்த காலம் ஏதாவது அடையாளங்களைப் பெற்றதா? நம் பெயர் காலந்தோறும் பேசப்படுமா என்றெல்லாம் சிந்திப்பவர்கள் வாழும்நெறி பற்றிக் கவலைப்படுவார்கள்; குறிக்கோளுடன் வாழத்தலைப்படுவார்கள்.

வாழ்வின் குறிக்கோள்

வாழ்க்கை குறிக்கோள் உடையது. அக்குறிக்கோள் எது? தாம் வாழ்வதா? தாம் வாழ்தல் என்பது சாதனை ஆதலால், தாம் வாழ்தல் என்பது எளிய ஒன்று. இயற்கையே கூட வாழ்வித்துவிடும். நல்ல சமூக அமைப்பும் அரசும் தோன்றிவிட்டால் தாம் வாழ்தல் என்பது

எளிது. வாழ்க்கை, தொண்டினையே குறிக்கோளாக உடையது. இந்தக் குறிக்கோளுடன்தான் ஒப்புரவு நெறியைத் திருக்குறள் அறிமுகப்படுத்துகிறது. திருக்குறள் நெறியில் மக்கள் ஒருவருக்கொருவர் கடமைகளைச் செய்வதற்கு உரியவர்கள். உரிமைகளைப் பெறுவதற்கும் உரியவர்கள். ஒருவர் எல்லாருக்காகவும், எல்லாரும் ஒருவருக்காகவும் என்னும் பொதுவுடைமை நெறியே திருவள்ளுவரின் வாழும் நெறி.

வாழ்வும் ஒப்புரவும்

ஒருவர் செய்யும் செயலானது அது தரும் பயனைவிட, செய்பவரின் மனப்பாங்கு, உணர்வு ஆகியவற்றின் அடிப்படையிலேயே மதிப்பிடப்படுகிறது. தரத்தைக் காட்டுகிறது. ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுதல் மட்டும் போதாது. உதவி செய்தல் எதற்காக? தற்காப்புக்காகவும் இலாபத்திற்காகவும்கூட உதவி செய்யலாமே! சொல்லப்போனால் இத்தகைய உதவிகள் ஒருவகையில் வாணிகம் போலத்தான். அதே உதவியைக் கட்டுப்பாட்டு உணர்வுடன், உதவி பெறுபவரை உறவுப்பாங்கில் எண்ணி, உரிமை உடையவராக நினைந்து, உதவிசெய்வதற்குப் பதில் அவரே எடுத்துக் கொள்ளும் உரிமையை வழங்குதல் ஒப்புரவு ஆகும்.

ஒப்புரவின் இயல்பு

ஒப்புரவில் பெறுபவர் அந்நியர் அல்லர்; உறவினர். கடமையும் உரிமையும் உடையவர். ஒப்புரவுநெறி சார்ந்த வாழ்க்கையில் வள்ளல்கள் இல்லை. வாங்குபவரும் இல்லை. ஒப்புரவுநெறி சார்ந்த வாழ்க்கையில் உடைமைச்சார்பு இறுக்கமான தனியுடைமையாக இல்லாமல் அறநெறி சார்ந்த குறிக்கோளுடைய உடைமையாக அமையும். ஒப்புரவில் ஈதல்-ஏற்றல் என்பதன் வழியாக அமையும் புரவலர்- இரவலர் உறவு இல்லை. ஒப்புரவுநெறி சார்ந்த வாழ்க்கை உரிமையும் கடமையும் உடைய வாழ்வு முறையாக அமைவதால் கடமைகள் உரிமைகளை வழங்குகின்றன.

பொருள்ஈட்டலும் ஒப்புரவும்

பொருள் ஈட்டலிலும் அந்தப் பொருளை நுகர்தலிலும் அறிவியல் பாங்கு தேவை. அயலவர் உண்ணாது இருக்கும்போது நாம் மட்டும் உண்பது நெறியும் அன்று; முறையும் அன்று. அதுமட்டுமல்ல, பாதுகாப்பும் அன்று. அயலவன் விழித்து எழுந்தால் நமது நிலை பாதிக்கும். ஆதலால் வாழ்வு அறநிலையைப் பாதுகாவல் வாழ்வாக அமைய வேண்டும். இம்முறையை அப்பரடிகள் எடுத்துக் கூறினார். அண்ணல் காந்தியடிகள் வழிமொழிந்தார். பாவேந்தர் பாரதிதாசனும் உலகம் உண்ண உண்; உடுத்த உடுப்பாய் என்றார். செல்வத்துப் பயன் ஒப்புரவு வாழ்க்கை.

பொருளீட்டல் தான்மட்டும் வாழ்வதற்காக என்பது அறிவியல் கருத்து அன்று. பொருளீட்டும் வாழ்க்கையேகூடச் சமூக வாழ்க்கைதான். மற்றவர்களுக்கு வழங்கி, மகிழ்வித்து மகிழ, வாழ்வித்து வாழப் பொருள் தேவை என்பதே பொருளீட்டலுக்கு உரிய கரு. இரப்பார்க்கு இல்லென்று இயைவது கரத்தல் அறிவியல் அன்று; அறமும் அன்று. செய்வது செய்து பொருள் ஈட்டி இரப்பார் துன்பத்தை மாற்றுவதே சமூகத்தின் பொது நிலை. பொருள் ஈட்டல், சேர்த்தல், பாதுகாத்தல் மனித வாழ்க்கையில் நடைபெறும் ஒரு பணி - இல்லை - ஒரு போராட்டம். பொருள் தேடுவது ஒரு பெரிய காரியம். அதைவிடப் பெரிய காரியம் அதை முறையாக அனுபவிப்பதும் கொடுத்து மகிழ்வதும் ஆகும்.

www.cbsetamil.com

7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 174 20-03-2020 17:48:12

வறுமையைப் பிணி என்றும் செல்வத்தை மருந்து என்றும் கூறுவது தமிழ் மரபு. பொருள் தேடல் வாழ்க்கையின் லட்சியம் அன்று. பொருள் வாழ்க்கையின் கருவியே. நல்ல அறிவும் பண்பும் உடையவர்களுக்குப் பணம் பணியாள். ஆனால், இவை இல்லாதவர்க்கோ மோசமான எசமானன். வாழ்க்கையை உணர்ந்து கொள்ளச் செல்வம் மட்டுமன்றி வறுமையும்கூடத் துணை செய்யும். பொருளும் தேவை; அதைத் துய்க்கத் திறனும் தேவை. பொருளை மற்றவர்களுக்குக் கொடுத்து மகிழ்ச்சி பெறலாம். செல்வத்தைத் தனியே அனுபவித்தல் இழத்தலுக்குச் சமம்.

செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே *(புறம் 189; 7–8)*

என்கிறது புறநானூறு.

ஒப்புரவின் பயன்

ஊருணி, தேவைப்படுவோர் அனைவரும் தண்ணீர் எடுத்துக் குடிப்பதற்கு உரிமை உடையது. அதைத் தடுப்பார் யாருமில்லை. ஊருணித்தண்ணீர் எடுத்து அனுபவிக்கப்படுவது. பழுத்த பயன்மரத்தின் கனிகளை அனைவரும் எடுத்து அனுபவிக்கலாம். பயன்மரம் பழங்களைத் தருவது உரிமை எல்லைகளைக் கவனத்தில் கொண்டல்ல. மருந்துமரம் உதவி செய்தலில் தன்னை மறந்த நிலையிலான பயன்பாட்டு நிலை ஒன்றே காணப்பெறுகிறது. நோயுடையார் எல்லாரும் பயன்படுத்தலாம். ஒப்புரவை விளக்கப் பயன்படுத்தியுள்ள இந்த உவமைகள் இன்றும் பயன்படுத்தத் தக்கவையாகவே அமைந்துள்ளன. ஆயினும் ஊருணி, பயன்மரம், மருந்துமரம் ஆகியன மனிதர்கள் தம் படைப்பாற்றலைக் கொண்டு படைத்தவை என்பதை நினைவில் கொள்க!

ஒப்புரவும் கடமையும்

ஊருணியை அகழ்ந்தவன் மனிதன். அந்த ஊருணியில் தண்ணீரைக் கொணர்ந்து தேக்கியது யார்? மனிதர்தாம். ஊருணியை அமைத்துத் தண்ணீரைத் தேக்கும் கடமை பொறுப்புணர்வுடன் கூட்டுப் பொறுப்புடன் செய்யப் பெற்றால்தான் ஊருணியில் தண்ணீர் நிறையும். பலரும் எடுத்துக் குடிக்கலாம். பயன்தரும் மரங்களை வளர்த்தால்தான் கனிகள் கிடைக்கும். தின்று அனுபவிக்கலாம்.

இங்கும் மனிதனின் படைப்பைத் தொடர்ந்துதான் நுகர்வு வருகிறது; ஒப்புரவு வருகிறது. அதேபோல மருந்துமரங்களையும் நட்டு வளர்த்தால்தான் பயன்படுத்த முடியும். ஆதலால் ஒப்புரவாண்மையுடன் வாழ முதலில் தேவைப்படுவது உழைப்பு; கூட்டு உழைப்பு. பொருள்களைப் படைக்கும் கடமைகள் நிகழாத வரையில் ஒப்புரவு வாழ்வு மலராது. கடமைகள் இயற்றப் பெறாமல் ஒப்புரவு தோன்றாது. ஒரோவழி தோன்றினாலும் நிலைத்து

தெரிந்து தெளிவோம்

ஊருணி நீர்நிறைந்து அற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. (குறள். 215)

உலகினர் விரும்புமாறு உதவி செய்து வாழ்பவரது செல்வமானது ஊருணியில் நிரம்பிய நீர்போலப் பலருக்கும் பயன்படும்.

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்துஅற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின். (குறள். 216)

நற்பண்பு உடையவரிடம் செல்வம் சேர்வது ஊருக்குள் பயன் தரும் மரத்தில் பழங்கள் பழுத்திருப்பதைப் போன்றது.

www.cbsetamil.com
7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 175 20-03-2020 17:48:12

நில்லாது. கடமைகளில், பொருள் செய்தலில் ஒவ்வொருவரும் கூட்டு உழைப்பில் ஈடுபட்டால்தான் ஒப்புரவுநெறி தோன்றும்; வளரும்; நிலைத்து நிற்கும்.

நிறைவாக

நாம் இன்று வாழ்வது உண்மை. நமக்கு வாய்த்திருக்கும் வாய்ப்புகளும் அருமையானவை. ஏன் காலம் கடத்த வேண்டும்? இன்று நன்று, நாளை நன்று என்று எண்ணிக் காலத்தைப் பாழடிப்பானேன்? இன்றே வாழத் தொடங்குவோம். வாழத் தொடங்கியதன் முதற்படியாகக் குறிக்கோளைத் தெளிவாகச் சிந்தித்து முடிவு செய்வோம். இந்தப் புவியை நடத்தும் பொறுப்பை ஏற்போம். பொதுமையில் இந்தப் புவியை நடத்துவோம். பொதுவில் நடத்துவோம். உலகம் உண்ண உண்போம். உலகம் உடுத்த உடுத்துவோம். எங்கு உலகம் தங்கியிருக்கிறதோ அங்கேயே நாமும் தங்குவோம். மண்ணகத்தில் விண்ணகம் காண்போம்.

நூல் வெளி

மக்கள் பணியையே இறைப் பணியாக எண்ணித்தம் வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்தவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார். குன்றக்குடி திருமடத்தின் தலைவராக விளங்கிய இவர் தமது பேச்சாலும் எழுத்தாலும் இறைத்தொண்டும் சமூகத் தொண்டும் இலக்கியத் தொண்டும் ஆற்றியவர். திருக்குறள் நெறியைப் பரப்புவதைத் தம் வாழ்நாள் கடமையாகக் கொண்டவர். நாயன்மார் அடிச்சுவட்டில், குறட்செல்வம், ஆலயங்கள் சமுதாய மையங்கள் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார். அருளோசை, அறிக அறிவியல் உள்ளிட்ட சில இதழ்களையும் நடத்தியுள்ளார்.

ஒப்புரவு நெறி என்னும் தலைப்பில் அடிகளார் கூறியுள்ள கருத்துகள் நம் பாடப் பகுதியில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

கற்பவை கற்றபின்

பிறருக்காக உழைத்துப் புகழ்பெற்ற சான்றோர்கள் பற்றிய செய்திகளைத் திரட்டி வந்து வகுப்பறையில் பகிர்க.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஒருவர் எல்லாருக்காகவும் எல்லாரும் ஒருவருக்காகவும் என்பது _____ நெறி.

அ) தனியுடைமை ஆ) பொதுவுடைமை

இ) பொருளுடைமை ஈ) ஒழுக்கமுடைமை

www.cbsetamil.com

7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 176 20-03-2020 17:48:12

2. செல்வத்தின் பயன் _____ வாழ்வு.

அ) ஆடம்பர ஆ) நீண்ட இ) ஒப்புரவு ஈ) நோயற்ற

3. வறுமையைப் பிணி என்றும் செல்வத்தை _____ என்றும் கூறுவர்.

அ) மருந்து ஆ) மருத்துவர்

இ) மருத்துவமனை ஈ) மாத்திரை

4. உலகம் உண்ண உண்; உடுத்த உடுப்பாய் என்று கூறியவர் _____.

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்

இ) முடியரசன் ஈ) கண்ணதாசன்

எதிர்ச்சொற்களைப் பொருத்துக.

1. எளிது – புரவலர்
2. ஈதல் – அரிது
3. அந்நியர் – ஏற்றல்
4. இரவலர் – உறவினர்

தொடர்களில் அமைத்து எழுதுக.

குறிக்கோள் _____

கடமைகள் _____

வாழ்நாள் _____

சிந்தித்து _____

குறுவினா

1. பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது?
2. பொருளீட்டுவதன் நோக்கமாகக் குன்றக்குடி அடிகளார் கூறுவது யாது?

சிறுவினா

1. ஒப்புரவுக்கு அடிகளார் தரும் விளக்கம் யாது?
2. ஊருணியையும் மரத்தையும் எடுத்துக்காட்டிக் குன்றக்குடி அடிகளார் கூறும் செய்திகள் யாவை?

சிந்தனை வினா

ஒப்புரவுக்கும் உதவிசெய்தலுக்குமுள்ள வேறுபாடு யாது?

www.cbsetamil.com

7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 177 20-03-2020 17:48:12

கவிதைப் பேழை

கல்வி

ந

திருவிளையாடற்புராணம்

– பரஞ்சோதி முனிவர்

கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புச் செய்வது தமிழ்கூறும் நல்லுலகம். அரசரும் புலவருக்குக் கவரி வீசுவர்; கண்ணுக்கு எட்டிய திசை வரை தெரியும் நிலங்களைப் புலவருக்குக் கொடை கொடுத்து மகிழ்வர்; இறைவனும் அறிவைப் போற்றுபவன்; அறிவாய் நிற்பவன்; அறிவிற் சிறந்த புலவருக்காகத் தூது சென்றவன்; புலவரது அறிவுப் பெருமையை உணர்த்துபவன்.

FQL2ZZ

காண்டம் : திரு ஆலவாய்க் காண்டம்(3)

படலம் : இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம் (56)

படலச் சுருக்கம்



பாண்டிய நாட்டை ஆட்சிபுரிந்த குலேசபாண்டியன் என்னும் மன்னன் தமிழ்ப் புலமையில் சிறந்து விளங்கினான். கபிலரின் நண்பரான இடைக்காடனார் என்னும் புலவர், தாம் இயற்றிய கவிதையினை மன்னன் முன்பு பாட,அதைப் பொருட்படுத்தாமல் மன்னன் புலவரை அவமதித்தான். மனம் வருந்திய இடைக்காடனார், இறைவனிடம் முறையிட்டார். மன்னனின் பிழையை உணர்த்துவதற்காக இறைவன் கடம்பவனக் கோவிலை விட்டு நீங்கி, வடதிருஆலவாயில் சென்று தங்கினார். இதை அறிந்த மன்னன் தன் பிழையைப் பொறுத்தருளுமாறு இறைவனை வேண்டி, இடைக்காடனாருக்குச் சிறப்புச் செய்தான். இறைவனும் கோவிலுக்குத் திரும்பினார்.

இடைக்காடனார் மன்னனின் அவையில் கவிதை படித்தல்

1. கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல் மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென் சொல் மொழிந்து அரசன் தனைக் காண்டும் எனத் தொடுத்த பனுவலொடு மூரித் தீம் தேன் வழிந்து ஒழுகு தாரானைக் கண்டு தொடுத்து உரைப்பனுவல் வாசித்தான் ஆல். (2615)

சொல்லும் பொருளும் : கேள்வியினான் – நூல் வல்லான், கேண்மையினான் – நட்பினன்

10th_Tamil_Unit 5.indd 107 24-01-2020 10.06.27 AM

மன்னன் தன் புலமையை மதிக்காமை குறித்து இறைவனிடம் முறையிடல்

2. *சந்நிதியில் வீழ்ந்து எழுந்து தமிழ் அறியும் பெருமானே தன்னைச் சார்ந்தோர்*
நல் நிதியே திரு ஆலவாய் உடைய நாயகனே நகுதார் வேம்பன்
பொன் நிதி போல் அளவு இறந்த கல்வியும் மிக்கு உளன் என்று புகலக் கேட்டுச்
சொல் நிறையும் கவி தொடுத்தேன் அவமதித்தான் சிறிது முடி துளக்கான் ஆகி. (2617)

சொல்லும் பொருளும் : தார் – மாலை, முடி – தலை

3. *என்னை இகழ்ந்தனனோ சொல் வடிவாய் நின்இடம் பிரியா இமையப் பாவை*
தன்னையும் சொல் பொருளான உன்னையுமே இகழ்ந்தனன் என் தனக்கு யாது என்னா
முன்னை மொழிந்து இடைக்காடன் தணியாத முனிவு ஈர்ப்ப முந்திச் சென்றான்
அன்ன உரை திருச்செவியின் ஊறுபாடு என உறைப்ப அருளின் மூர்த்தி. (2619)

சொல்லும் பொருளும் : முனிவு – சினம்

இறைவன் கோவிலைவிட்டு நீங்குதல்

4. *போனஇடைக் காடனுக்கும் கபிலனுக்கும் அகத்துவகை பொலியுமாற்றான்*
ஞானமய மாகியதன் இலிங்கவுரு மறைத்துஉமையாம் நங்கை யோடும்
வானவர்தம் பிரானெழுந்து புறம்போய்த்தன் கோவிலின்நேர் வடபால் வையை
ஆனநதித் தென்பாலோர் ஆலயங்கண்டு அங்கு இனிதின் அமர்ந்தான் மன்னோ. (2620)

சொல்லும் பொருளும் : அகத்து உவகை – மனமகிழ்ச்சி

கோவிலைவிட்டு நீங்கிய காரணம் அறியாது மன்னன் இறைவனை வேண்டுதல்

5. *அல்லதை என் தமரால் என் பகைஞரால் கள்வரால் அரிய கானத்து*
எல்லை விலங்கு ஆதிகளால் இடையூறு இன் தமிழ் நாட்டில் எய்திற்றாலோ
தொல்லை மறையவர் ஒழுக்கம் குன்றினரோ தவம் தருமம் சுருங்கிற்றாலோ
இல்லறனும் துறவறனும் பிழைத்தனவோ யான் அறியேன் எந்தாய்! எந்தாய்!. (2629)

சொல்லும் பொருளும் : தமர் – உறவினர்

இறைவனின் பதில்

6. *ஓங்கு தண் பணைசூழ் நீப வனத்தை நீத்து ஒரு போதேனும்*
நீங்குவம் அல்லேம் கண்டாய் ஆயினும் நீயும் வேறு
தீங்கு உளை அல்லை காடன் செய்யுளை இகழ்தலாலே
ஆங்கு அவன் இடத்தில் யாம் வைத்த அருளினால் வந்தேம் என்னா. (2637)

சொல்லும் பொருளும் : நீபவனம் – கடம்பவனம்

மன்னன் தன் பிழையைப் பொறுத்து அருளுமாறு இறைவனிடம் வேண்டுதல்

7. *பெண்ணினைப் பாகம் கொண்ட பெருந்தகைப் பரம யோகி*
விண்ணிடை மொழிந்த மாற்றம் மீனவன் கேட்டு வானோர்
புண்ணிய சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை அன்றோ
எண்ணிய பெரியோர்க்கு என்னா ஏத்தினான் இறைஞ்சி னானே. (2638)

சொல்லும் பொருளும் : மீனவன் – பாண்டிய மன்னன்

10th_Tamil_Unit 5.indd 108 24-01-2020 10.06.27 AM

மன்னன், புலவருக்கு மரியாதை செய்தல்

8. விதிமுறை கதலி பூகம் கவரிவால் விதானம் தீபம்
புதியதோர் நிறைநீர்க் கும்பங் கதலிகை புனைந்த மன்றல்
கதிர்மணி மாடத் தம்பொற் சேக்கைமேற் கற்றோர் சூழ
மதிபுனை காடன் தன்னை மங்கல அணிசெய் தேற்றி. (2641)

சொல்லும் பொருளும் : கவரி – சாமரை (கவரிமாவின் முடியில் செய்த விசிறியாகிய அரசச் சின்னம்)

மன்னன், புலவரிடம் மன்னிப்பை வேண்டுதல்

9. புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா. * (2644)

சொல்லும் பொருளும் : நுவன்ற – சொல்லிய, என்னா – அசைச் சொல்

பாடலின் பொருள்

1. 'குலேசபாண்டியன் என்னும் பாண்டிய மன்னன் மிகுந்த கல்வியறிவு மிக்கவன்' எனக் கற்றோர் கூறக் கேட்டார் இடைக்காடனார் என்னும் புலவர். கலைகளை முழுவதும் உணர்ந்த நண்பர் கபிலனின்மேல் அன்புகொண்ட அப்புலவர், மிகவும் இனிய தேன் ஒழுகும் வேப்பமாலையினை அணிந்த பாண்டியனின் அவைக்குச் சென்று, தான் இயற்றிய கவிதையைப் படித்தார்.
2. இடைக்காடனார் இறைவன் திருமுன் விழுந்து வணங்கி எழுந்து, "தமிழறியும் பெருமானே! அடியார்க்கு நல்நிதி போன்றவனே! திருஆலவாயிலில் உறையும் இறைவனே! அழகிய வேப்பமலர் மாலையை அணிந்த பாண்டியன், பொருட்செல்வத்தோடு கல்விச் செல்வமும் மிக உடையவன் எனக் கூறக்கேட்டு, அவன் முன் சொற்சுவை நிரம்பிய கவிதை பாடினேன். அவனோ சிறிதேனும் சுவைத்துத் தலை அசைக்காமல் புலமையை அவமதித்தான்" என்றார்.
3. இடைக்காடனார் இறைவனிடம், "பாண்டியன் என்னை இகழவில்லை, சொல்லின் வடிவாக உன் இடப்புறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும், சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையுமே அவமதித்தான்" என்று சினத்துடன் கூறிச் சென்றார். அவரது சொல் வேற்படைபோல் இறைவனின் திருச்செவியில் சென்று தைத்தது.
4. கோவிலை விட்டு வெளியேறிய இடைக்காடனாருக்கும் அவர் நண்பராகிய கபிலருக்கும் மனமகிழ்ச்சி உண்டாக்க நினைத்தார் இறைவன். ஞானமயமாகிய தம்முடைய இலிங்க வடிவத்தை மறைத்து உமாதேவியாரோடும் திருக்கோவிலைவிட்டு வெளியேறி நேர் வடக்கே வையை ஆற்றின் தென் பக்கத்தே ஒரு திருக்கோவிலை ஆக்கி அங்குச் சென்று இருந்தார்.
5. "இறைவனே, என்னால், என் படைகளால், என் பகைவரால், கள்வரால், காட்டில் உள்ள விலங்குகளால் இத்தமிழ்நாட்டில் தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதா? மறையவர் நல்ஒழுக்கத்தில் குறைந்தனரோ? தவமும் தருமமும் சுருங்கியதோ? இல்லறமும் துறவறமும் தத்தம் நெறியில் இருந்து தவறினவோ? எமது தந்தையே யான் அறியேன்" என்று வேண்டினான் பாண்டிய மன்னன்.
6. இறைவன் மன்னனிடம், "சிறந்த குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த கடம்பவனத்தை விட்டு ஒருபோதும் நீங்கமாட்டோம். இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர வேறு குற்றம் உன்னிடம் இல்லை. இடைக்காடனார் மீது கொண்ட அன்பினால் இவ்வாறு இங்கு வந்தோம்" என்றார்.

10th_Tamil_Unit 5.indd 109 24-01-2020 10.06.27 AM

7. வானிலிருந்து ஒலித்த இறைவனின் சொற்கேட்டுப் பாண்டிய மன்னன், "உமையை ஒரு பாகத்திற்கொண்ட மேலான பரம்பொருளே, புண்ணியனே, சிறியவர்களின் குற்றம் பொறுப்பது பெரியவருக்குப் பெருமையல்லவா?" என்று தன் குற்றத்தைப் பொறுக்க வேண்டிப் போற்றினான்.

8. மன்னனது மாளிகை, வாழையும் கமுகும் சாமரையும் வெண்ணிற மேல்விதானமும் விளக்கும் உடையது; அன்றலர்ந்த மலர்களால் தொடுத்த மாலை பூரண கும்பம் கொடி ஆகியவற்றால் ஒப்பனை செய்யப்பட்டது; போற்றத்தக்க ஒளியுடைய மணிகள் பதிக்கப் பெற்றது. அங்குள்ள புலவர்கள் சூழ அறிவை அணிகலனாகப் பூண்ட இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து பொன் இருக்கையில் விதிப்படி அமர்த்தினான்.

9. பாண்டியன், "புண்ணிய வடிவான புலவர்களே, நான் இடைக்காடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று பணிந்து வணங்கினான். நுண்ணிய கேள்வியறிவுடைய புலவர்களும், "மன்னா, நீ கூறிய அமுதம்போன்ற குளிர்ந்த சொல்லால் எங்கள் சினமான தீ தணிந்தது" என்றனர்.

இலக்கணக் குறிப்பு

கேள்வியினான் – வினையாலணையும் பெயர்

காடனுக்கும் கபிலனுக்கும் – எண்ணும்மை

பகுபத உறுப்பிலக்கணம்

தணிந்தது – தணி + த்(ந்) + த் + அ + து

தணி – பகுதி, த் – சந்தி

த்(ந்) – ந் ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

அ – சாரியை, து – படர்க்கை வினைமுற்று விகுதி

சொல்லேருழவனுக்குக் கவரி வீசிய வில்லேருழவன்

ஏடாளும் புலவரொருவர் நாடாளும் மன்னரைக் காண அரண்மனை சென்றார். களைப்பு மிகுதியால் முரசுக் கட்டிலில் கண்ணயர்ந்தார்; அரச குற்றமான அச்செயலைச் செய்த புலவருக்குத் தண்டனை வழங்காமல் கவரி வீசினார் மன்னர். உறங்கிய புலவர் மோசிகீரனார். கவரி வீசிய மன்னர் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை. கண்விழித்த புலவர் மன்னரின் செயலைக் கண்டு வியந்து பாமழை பொழிந்தார். அப்பாடல் இதோ...

"மாசற விசித்த வார்புறு வள்பின் ..." புறம் 50

நூல் வெளி

திருவிளையாடற் கதைகள் சிலப்பதிகாரம் முதற்கொண்டு கூறப்பட்டு வந்தாலும் பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற்புராணமே விரிவும் சிறப்பும் கொண்டது. இந்நூல் மதுரைக் காண்டம், கூடற் காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்ற மூன்று காண்டங்களும் 64 படலங்களும் உடையது; பரஞ்சோதி முனிவர் திருமறைக்காட்டில் (வேதாரண்யம்) பிறந்தவர்; பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்; சிவபக்தி மிக்கவர். வேதாரண்யப் புராணம், திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரை பதிற்றுப்பத்தந்தாதி முதலியன இவர் இயற்றிய வேறு நூல்களாகும்.

கற்பவை கற்றபின்...

இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலத்தை நாடகமாக்கி வகுப்பில் நடித்துக் காட்டுக.

10th_Tamil_Unit 5.indd 110 24-01-2020 10.06.27 AM

கவிதைப்பேழை

இயல் எட்டு

ஒன்றே குலம்

J7ZLDN

மனிதர்களிடையே பிறப்பால் உயர்வுதாழ்வு பாராட்டுவது தவறானது. உலகமக்கள் அனைவரையும் உடன்பிறந்தாராகக் கருதி அன்புகாட்ட வேண்டும். பிறருக்கு ஏற்படும் பசி முதலிய துன்பங்களைத் தமக்கு ஏற்பட்டதாகக் கருதி அவற்றைப்போக்க முயல்வதே மனிதர்களின் சிறந்த கடமையாகும். அதுவே இறைத்தொண்டாகும். இக்கருத்துகளை விளக்கும் திருமூலரின் பாடல்களை அறிவோம்.

*ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்ம்மினே

படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்குஅங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்குஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்குஅது ஆமே*

– திருமூலர்

சொல்லும் பொருளும்

நமன் – எமன்
நாணாமே – கூசாமல்
சித்தம் – உள்ளம்
உய்ம்மின் – ஈடேறுங்கள்
நம்பர் – அடியார்
ஈயில் – வழங்கினால்
படமாடக்கோயில் – படங்கள் அமைந்த மாடங்களையுடைய கோயில்

பாடலின் பொருள்

மனிதர் அனைவரும் ஒரே இனத்தினர். உலகைக் காக்கும் இறைவனும் ஒருவனே. இக்கருத்துகளை நன்றாக மனத்தில் நிறுத்துபவர்களுக்கு எமனைப் பற்றிய அச்சம் தேவை இல்லை. கூசாமல் செல்லவேண்டிய நல்வழி இதைவிட வேறு இல்லை. உலகத்து மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழவேண்டுமாயின் இவற்றை நினைத்து ஈடேறுங்கள்.

படங்கள் அமைந்த மாடங்களையுடைய கோயிலில் வீற்றிருக்கும் இறைவனுக்கு ஒருபொருளைக் காணிக்கையாகச் செலுத்தினால் அது நடமாடும் கோயிலாகிய உடம்பையுடைய அடியார்களுக்குச் சேராது. அடியார்களாகிய மக்களுக்குக் கொடுப்பது கோயிலில் இருக்கும் இறைவனுக்கும் சேரும்.

www.cbsetamil.com

8th Std Tamil _20-12-2019.indd 168 03-01-2020 19:34:52

நூல் வெளி

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகவும் பதினெண் சித்தர்களுள் ஒருவராகவும் கருதப்படுபவர் திருமூலர். இவர் இயற்றிய திருமந்திரம் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. எனவே, இந்நூலைத் தமிழ் மூவாயிரம் என்பர். இது பன்னிரு திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது.

திருமந்திரம் என்னும் நூலிலிருந்து இரண்டு பாடல்கள் இங்குத் தரப்பட்டுள்ளன.

கற்பவை கற்றபின்

பிறர் துன்பம் கண்டு வருந்தி அவர்களுக்குத் தொண்டுசெய்த சான்றோர்களின் பெயர்களைத் திரட்டுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அறநெறியில் வாழ்பவர்கள் உயிரைக் கவர வரும் _____ க் கண்டு அஞ்சமாட்டார்கள்.
   அ) புலனை ஆ) அறனை இ) நமனை ஈ) பலனை
2. ஒன்றே _____ என்று கருதி வாழ்வதே மனிதப்பண்பாகும்.
   அ) குலம் ஆ) குளம் இ) குணம் ஈ) குடம்
3. 'நமனில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.
   அ) நம் + இல்லை ஆ) நமது + இல்லை
   இ) நமன் + நில்லை ஈ) நமன் + இல்லை
4. நம்பர்க்கு + அங்கு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.
   அ) நம்பரங்கு ஆ) நம்மார்க்கு இ) நம்பர்க்கங்கு ஈ) நம்பங்கு

குறுவினா

1. யாருக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை?
2. மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழ விரும்புபவர் செய்யவேண்டியது யாது?

சிறுவினா

மக்களுக்குச் செய்யவேண்டிய தொண்டு குறித்துத் திருமூலர் கூறுவது யாது?

சிந்தனை வினா

அன்றாட வாழ்வில் நாம் பிறருக்கு எத்தகைய உதவிகளைச் செய்யலாம்?

www.cbsetamil.com

8th Std Tamil _20-12-2019.indd 169 03-01-2020 19:34:52

கவிதைப் பேழை

கலை

சூ

நாச்சியார் திருமொழி

–ஆண்டாள்

KIP3JC

நுழையும்முன்

பக்தி இலக்கியம் உணர்ச்சி நிறைந்த பாடல்களை உள்ளடக்கியது. இறையோடு ஒன்றுதலும் அதன்பால் அனைவரையும் சரணடையச் செய்வதும் பக்தி இலக்கியத்தின் பணியாக இருந்தது. இறையை நாயகனாக எண்ணி நாயகி பாவத்தில் பாடுவதும் காணப்படுகிறது. இப்பாவத்தில் பெண் கவிஞர் ஒருவர் பாடுவது உண்மைக் காதலெனக் கருத வைக்கிறது. ஆண்டாள் பாடியதால் அவர் திருமால் மீது காதல் கொண்டு பாடியதாகக் கொள்கின்றனர். அழகியலுக்கும் பக்திக்கும் இடம் தருகிற ஆண்டாள் கவிதைகள் கற்பவர் மனத்தைக் கவர்கின்றன.

கதிரொளி தீபம் கலசம் உடனேந்தி
சதிரிள மங்கையர் தாம்வந்து எதிர்கொள்ள
மதுரையார் மன்னன் அடிநிலை தொட்டுஎங்கும்
அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழீநான்.

(57)

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்துஎன்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்.

(58)

சொல்லும் பொருளும்: தீபம் – விளக்கு; சதிர் – நடனம்; தாமம் – மாலை

9th_Tamil_Pages 122-264.indd 161 22-12-2020 15:57:43

பாடலின் பொருள்

1. 'ஆடும் இளம் பெண்கள், கைகளில் கதிரவன் போன்ற ஒளியை உடைய விளக்கையும் கலசத்தையும் ஏந்தியவாறு வந்து எதிர்கொண்டு அழைக்கிறார்கள். வடமதுரையை ஆளும் மன்னன் கண்ணன் பாதுகைகளை அணிந்துகொண்டு புவி அதிர மகிழ்ச்சியுடன் நடந்து வருகிறான்'. இக்காட்சியைக் கனவில் கண்டதாக ஆண்டாள் கூறுகிறார்.

2. 'மத்தளம் முதலான இசைக்கருவிகள் முழங்குகின்றன. வரிகளையுடைய சங்குகளை நின்று ஊதுகின்றனர். அத்தை மகனும், மது என்ற அரக்கனை அழித்தவனுமான கண்ணன், முத்துகளையுடைய மாலைகள் தொங்கவிடப்பட்ட பந்தலின் கீழ், என்னைத் திருமணம் செய்துகொள்கிறான்'. இக்காட்சியைக் கனவில் கண்டதாக ஆண்டாள் கூறுகிறார்.

தெரிந்து தெளிவோம்

பெண்ணின் திருமண வயது 18; ஆணின் திருமண வயது 21 என்று சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலக்கணக் குறிப்பு

முத்துடைத்தாமம் – இரண்டாம் வேற்றுமைத் தொகை

பகுபத உறுப்பிலக்கணம்

தொட்டு – தொடு (தொட்டு) + உ

தொடு – பகுதி, தொட்டு என ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது – விகாரம்

உ – வினையெச்ச விகுதி

கண்டேன் – காண் (கண்) + ட் + ஏன்

காண் – பகுதி('கண்' எனக் குறுகியது விகாரம்), ட் – இறந்தகால இடைநிலை

ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

நூல் வெளி

திருமாலை வழிபட்டுச் சிறப்புநிலை எய்திய ஆழ்வார்கள் பன்னிருவர். அவருள் ஆண்டாள் மட்டுமே பெண். இறைவனுக்குப் பாமாலை சூட்டியதோடு தான் அணிந்து மகிழ்ந்த பூமாலையையும் சூட்டியதால், "சூடிக் கொடுத்த சுடர்க்கொடி" என அழைக்கப்பெற்றார். இவரைப் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் என்பர். ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு "நாலாயிர திவ்வியப் பிரபந்தம்" ஆகும். இத்தொகுப்பில் ஆண்டாள் பாடியதாகத் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்ற இரு தொகுதிகள் உள்ளன. நாச்சியார் திருமொழி மொத்தம் 143 பாடல்களைக் கொண்டது. நம் பாடப்பகுதியின் இரு பாடல்கள் ஆறாம் திருமொழியில் இடம்பெற்றுள்ளன.

கற்பவை கற்றபின்...

1. திருப்பாவையில் இடம்பெற்றுள்ள தொடைநயம் மிக்க பாடல்களுள் எவையேனும் இரண்டினை இணையத்திலோ நூலகத்திலோ இருந்து திரட்டி வகுப்பறையில் பாடுக.
2. கண்ணனைப் பல்வேறு உறவுநிலைகளில் வைத்து பாரதியார் பாடியவற்றுள் உங்களைக் கவர்ந்த பாடல்களைக் குறித்துக் கலந்துரையாடுக.
3. சங்க காலத்திலிருந்து தற்காலம் வரையுள்ள பெண் புலவர்களின் சில கவிதைகளைக் கொண்டு ஒரு கவிதைத் தொகுப்பு உருவாக்குக.

KIXYKZ

9th_Tamil_Pages 122-264.indd 162 22-12-2020 15:57:43

கவிதைப்பேழை

நாகரிகம்

உ

KE327B

தேவாரம்

– திருஞானசம்பந்தர்

நுழையும்முன்

மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளும் நாகரிகத்தின் வெளிப்பாடு, கோவில் திருவிழா. கோவில் ஓர் ஊரின் பெருமைக்குரிய அடையாளங்களுள் ஒன்று. அதன் புகழைப் பறைசாற்றும் எழுச்சியே திருவிழாக்கள். அத்தகைய விழாக்கள் நிறைந்த ஊர் 'திருமயிலை' என்று அழைக்கப்படும் மயிலாப்பூர். இவ்வூர் சென்னை மாநகரின் ஒரு பகுதி. அங்குள்ள இறைவனுக்குக் கொண்டாடப்படும் பங்குனி உத்திர விழா அன்று முதல் இன்றுவரை தொடர்கிறது.

திருமயிலாப்பூர்

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி உத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய் (7)

முத்துப்பல்லக்கில் தேவாரம் தந்த திருஞானசம்பந்தர்...
17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், திருநெல்வேலி.

சொல்லும் பொருளும்

மலிவிழா – விழாக்கள் நிறைந்த

மடநல்லார் – இளமை பொருந்திய பெண்கள்

கலிவிழா – எழுச்சி தரும் விழா

பலிவிழா – திசைதோறும் பூசையிடும் உத்திரவிழா

ஒலிவிழா – ஆரவார விழா

பாடலின் பொருள்

பூம்பாவாய்! இளம்பெண்கள் ஆரவாரத்தோடு கொண்டாடும் திருவிழாக்கள் நிறைந்த வீதிகளையுடைய பெரிய ஊர் திருமயிலை. அங்கு எழுச்சிமிக்க விழாக்கள் நிகழும். மயிலை கபாலீச்சரம் என்னும் கோவிலில் வீற்றிருக்கும் இறைவனுக்குப் பூசையிடும் பங்குனி உத்திர ஆரவார விழாவினைக் காணாமல் செல்வது முறை ஆகுமா?

இலக்கணக் குறிப்பு :

மாமயிலை – உரிச்சொற்றொடர்

புணர்ச்சி விதி

பூம்பாவாய் = பூ + பாவாய்

விதி: பூப்பெயர்முன் இனமென்மையும்
தோன்றும் – பூம்பாவாய்

உறுப்பிலக்கணம் :

கண்டான் = காண்(கண்) + ட் + ஆன்

காண் – பகுதி (கண் எனக் குறுகியது விகாரம்)

ட் – இறந்தகால இடைநிலை

ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

அமர்ந்தான் = அமர் + த்(ந்) + த் + ஆன்

அமர் – பகுதி

த் – சந்தி (ந் ஆனது விகாரம்)

த் – இறந்தகால இடைநிலை.

ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

மயிலாப்பூர் சிறப்புகள்:

1. மடலார்ந்த தெங்கின் மயிலை
2. இருளகற்றும் சோதித் தொன்மயிலை
3. கற்றார்கள் ஏத்தும் கபாலீச்சரம்
4. கண்ணார் மயிலைக் கபாலீச்சரம்
5. கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரம்
6. மங்குல் மதிதவழும் மாடவீதி மயிலாப்பூர்
7. ஊர்திரை வேலை உலாவும் உயர்மயிலை

மயிலைப் பதிகத்தில் காணப்பெறும் விழாக்கள்

1. ஐப்பசி	–	ஓண விழா
2. கார்த்திகை	–	விளக்குத் திருவிழா
3. மார்கழி	–	திருவாதிரை விழா
4. தை	–	தைப்பூச விழா
5. மாசி	–	கடலாட்டு விழா
6. பங்குனி	–	பங்குனி உத்திர விழா

நூல்வெளி

பாடப்பகுதியாக உள்ள பாடல், இரண்டாம் திருமுறையில் உள்ள திருமயிலாப்பூர் பதிகத்தில் இடம்பெற்றுள்ளது. பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் பாடிய பாடல்களின் தொகுப்புகள். இவர் பாடல்கள் இசைப் பாடல்களாகவே திகழ்கின்றன. இப்பாடல்கள் நம்பியாண்டார் நம்பி என்பவரால் தொகுக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களுக்குத் தேவாரம் என்று பெயர். சமுதாயத்தின் பொருளாதார கலை பண்பாட்டு நிலைகள், தமிழுக்கு இருந்த உயர்நிலை, இசை தத்துவம் சமயக் கோட்பாடுகள் அனைத்தும் சம்பந்தர் பாடல்களில் விரவிக் கிடக்கின்றன.

கற்பவை கற்றபின்...

உங்கள் பகுதியில் கொண்டாடப்படும் திருவிழாக்கள் பற்றிய தகவல்களைத் திரட்டி நாளிதழ் ஒன்றின் செய்திப்பிரிவிற்கு அளிக்கும் வகையில் செய்தியாக எழுதுக.

கவிதைப்பேழை

இயல் நான்கு

கல்வி அழகே அழகு

T5G8WK

மனிதர்கள் தங்களை அழகுபடுத்திக்கொள்ள எண்ணற்ற அணிகலன்களைப் பயன்படுத்துகின்றனர். அவை தங்கம், வெள்ளி போன்ற விலைமதிப்பு மிக்க உலோகங்களால் செய்யப்பட்டவையாக உள்ளன. ஆனால் மனிதனுக்கு அழகையும் உயர்வையும் தரக்கூடிய உண்மையான அணிகலன் எது என்பதைக் கூறும் நீதிநெறி விளக்கப்பாடல் ஒன்றை அறிவோம்.

*கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம் – முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக்கு அழகுசெய் வார்*

–குமரகுருபரர்

சொல்லும் பொருளும்

கலன் – அணிகலன்

முற்ற – ஒளிர

பாடலின் பொருள்

ஒளிரும் மணிகளால் செய்யப்பட்ட அணிகலனுக்கு மேலும் அழகூட்ட வேறு அணிகலன்கள் தேவையில்லை. அதுபோலக் கல்வி கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே அழகு தரும். ஆகையால் அழகு சேர்க்கும் பிற அணிகலன்கள் அவருக்குத் தேவையில்லை.

நூல் வெளி

குமரகுருபரர் பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவர் தமிழ்மொழிக்குப் பெருமை சேர்க்கும் பல சிற்றிலக்கியங்களைப் படைத்துள்ளார். கந்தர் கலிவெண்பா, கயிலைக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ஆகியன அவற்றுள் சிலவாகும்.

மக்களின் வாழ்வுக்குத் தேவையான நீதிகளைச் சுட்டிக்காட்டுவதால் இந்நூல் நீதிநெறி விளக்கம் எனப் பெயர் பெற்றது. கடவுள் வாழ்த்து உட்பட 102 வெண்பாக்கள் இந்நூலில் உள்ளன. இந்நூலின் பதின்மூன்றாம் பாடல் நமக்குப் பாடப்பகுதியாகத் தரப்பட்டுள்ளது.

www.cbsetamil.com

8th Std Tamil _20-12-2019.indd 70 03-01-2020 19:34:37

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

கற்பவை கற்றபின்

1. கல்வி குறித்து வழங்கப்படும் பழமொழிகளைத் தொகுத்து எழுதுக.
2. கற்றோரின் சிறப்புகளைப் பற்றிப் பிற நூல்களில் இடம்பெற்ற பாடல்களைத் தொகுத்து எழுதுக.
3. பின்வரும் நாலடியார் பாடலைப் படித்துச் சுவைக்க.

கல்வி கரையில கற்பவர் நாள் சில
மெல்ல நினைக்கின் பிணி பல – தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கற்றவருக்கு அழகு தருவது _____.

அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி

2. 'கலனல்லால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) கலன் + லல்லால் ஆ) கலம் + அல்லால்

இ) கலன் + அல்லால் ஈ) கலன் + னல்லால்

சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. அழகு _____
2. கற்றவர் _____
3. அணிகலன் _____

குறுவினா

யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?

சிறுவினா

நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

சிந்தனை வினா

கல்வியின் பயன்களாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.

www.cbsetamil.com

8th Std Tamil _20-12-2019.indd 71 03-01-2020 19:34:38

கவிதைப்பேழை

இயல் ஐந்து

திருக்கேதாரம்

EJ9R5P

நுழையும்முன்

உயிர்கள் அனைத்தையும் இசைவிப்பது இசை. இது மனிதர்களின் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் ஆற்றல் உடையது. இசைக்கருவிகளின் ஓசையாடு பாடல் இணையும்போது அது செவிகளுக்கு மட்டுமன்றிச் சிந்தைக்கும் விருந்தாகிறது. தமிழ் இசை பாடப்படும் இனிய சூழலை விளக்கும் தேவாரப்பாடல் ஒன்றை அறிவோம்.

பண்ணின்தமிழ் இசைபாடலின் பழவெய்முழவு அதிரக்
கண்ணின்ஒளி கனகச்சுனை வயிரம்அவை சொரிய
மண்நின்றன மதவேழங்கள் மணிவாரிக்கொண்டு எறியக்
கிண் என்றுஇசை முரலும்திருக் கேதாரம்என் னீரே.

– சுந்தரர்

சொல்லும் பொருளும்

பண்	–	இசை
கனகச்சுனை	–	பொன் வண்ண நீர்நிலை
மதவேழங்கள்	–	மதயானைகள்
முரலும்	–	முழங்கும்
பழவெய்	–	முதிர்ந்த மூங்கில்



பாடலின் பொருள்

பண்ணோடு சேர்ந்த இனிய தமிழ்ப் பாடல்களைப் பாடும் போது அதற்கு ஏற்றவாறு முதிர்ந்த மூங்கில்களால் ஆகிய புல்லாங்குழலும் முழவும் இணைந்து ஒலிக்கும். கண்களுக்கு இனிய குளிர்ச்சி தரும் ஒளியை உடைய பொன்வண்ண நீர்நிலைகள் வைரங்களைப் போன்ற நீர்த்திவலைகளை வாரி இறைக்கும். நிலத்தின் மீது நின்று கொண்டிருக்கும் மதயானைகள் மணிகளை வாரி வாரி வீசும். இவற்றால் இடையறாது எழும் 'கிண்' என்னும் ஒலியானது இசையாக முழங்கும். இத்தகைய சிறப்புகள் உடைய நகரம் திருக்கேதாரம் ஆகும்.

www.cbsetamil.com

8th Std Tamil _20-12-2019.indd 94 03-01-2020 19:34:41

நூல் வெளி

சுந்தரர், தேவாரம் பாடிய மூவருள் ஒருவர். இவர் நம்பியாரூரர், தம்பிரான் தோழர் என்னும் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகிறார். இவர் அருளிய தேவாரப்பாடல்கள் பன்னிரு திருமுறைகளுள் ஏழாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளன. இவர் இயற்றிய திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகக் கொண்டே சேக்கிழார் பெரியபுராணத்தைப் படைத்தளித்தார்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய பாடல்களின் தொகுப்பே தேவாரம் ஆகும். இந்நூலைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி ஆவார். இந்நூலில் சுந்தரர் பாடியுள்ள கேதாரப்பதிகப்பாடல் ஒன்று இங்குத் தரப்பட்டுள்ளது.

தே + ஆரம் – இறைவனுக்குச் சூட்டப்படும் மாலை என்றும், தே + வாரம் – இனிய இசை பொருந்திய பாடல்கள் எனவும் பொருள் கொள்ளப்படும். பதிகம் என்பது பத்துப் பாடல்களைக் கொண்டது.

கற்பவை கற்றபின்

தேவாரம் பாடிய மூவர் பற்றிய செய்திகளைத் திரட்டுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. காட்டிலிருந்து வந்த _____ கரும்பைத் தின்றன.

அ) முகில்கள் ஆ) முழவுகள் இ) வேழங்கள் ஈ) வேய்கள்

2. 'கனகச்சுனை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) கனகச் + சுனை ஆ) கனக + சுனை இ) கனகம் + சுனை ஈ) கனம்+சுனை

3. முழவு + அதிர என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

அ) முழவுதிர ஆ) முழவுதிரை இ) முழவதிர ஈ) முழவுஅதிர

குறுவினா

தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக்கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?

சிறுவினா

திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார்?

சிந்தனை வினா

விழாக்களின்போது இசைக்கருவிகளை இசைக்கும் வழக்கம் எவ்வாறு தோன்றியிருக்கும் என எழுதுக.

www.cbsetamil.com

8th Std Tamil _20-12-2019.indd 95 03-01-2020 19:34:41

கவிதைப் பேழை

தொழில்நுட்பம்

ச

பெருமாள் திருமொழி

– குலசேகராழ்வார்

CBWZSP

நுழையும்முன்

தமிழர், பண்டைய நாட்களிலிருந்தே அறிவியலை வாழ்வியலோடு இணைத்துக் காணும் இயல்புடையவர்களாக இருக்கிறார்கள். அதன்விளைவாக, சங்க இலக்கியத்தில் அறிவியல் கருத்துகள் நிறைந்துள்ளன. அதற்கு இணையாகப் பக்தி இலக்கியங்களிலும் அறிவியல் கருத்துகள் செறிந்திருக்கின்றன.



வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே. *

பாசுர எண்: 691

பாடலின் பொருள்

மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி அவரை நேசிப்பார். வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே! அதுபோன்று நீ உனது விளையாட்டால் நீங்காத துன்பத்தை எனக்குத் தந்தாலும் உன் அடியவனாகிய நான் உன் அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்கின்றேன்.

சொல்லும் பொருளும் சுடினும் – சுட்டாலும், மாளாத–தீராத, மாயம் – விளையாட்டு

வித்துவக்கோடு என்னும் ஊர், கேரள மாநிலத்தில் பாலக்காடு மாவட்டத்தில் உள்ளது. குலசேகர ஆழ்வார் அங்குள்ள இறைவனான உய்யவந்த பெருமாளை அன்னையாக உருவகித்துப் பாடுகிறார்.

நூல் வெளி

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் முதலாயிரத்தில் 691ஆவது பாசுரம் பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. பெருமாள் திருமொழி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ஐந்தாம் திருமொழியாக உள்ளது. இதில் 105 பாடல்கள் உள்ளன. இதனைப் பாடியவர் குலசேகராழ்வார். இவரின் காலம் எட்டாம் நூற்றாண்டு.

கற்பவை கற்றபின்...

தமிழர் மருத்துவமுறைக்கும் நவீன மருத்துவமுறைக்கும் உள்ள தொடர்பு குறித்து ஒப்படைவு உருவாக்குக.

10th_Tamil_Unit 4.indd 82 24-01-2020 10.06.03 AM

கவிதைப்பேழை

ஆளுமை அ

இரட்சணிய யாத்திரிகம்

– எச்.ஏ. கிருட்டிணனார்

XANVW7



நுழையும்முன்

நிறைய அன்பு, குறையாத ஆர்வம், தொடரும் நெகிழ்ச்சி, தொண்டில் மகிழ்ச்சி என்பன மனிதத்தின் இயல்புகள். இம்மனிதமே அனைத்துச் சமயங்களின் அடிப்படைக் கொள்கை. இக்கொள்கையைப் பேச்சாலும் வசையாலும் வாழ்வில் வதை பல பட்டு வெளிப்படுத்தியவர், இயேசு பெருமானார்.

இறைமகனின் எளியநிலை

1. *பாசம்என உன்னலிர் பிணித்தமை பகைத்த*
நீசமனு மக்களை நினைந்து உருகும் அன்பின்
நேசம் எனும் வல்லியதை நீக்க வசம் இன்றி
ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின். –1421

2. *பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி*
ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
*நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி.** –1448

ஆளுநர் முன் நிறுத்துதல்

3. *எண்ண மிட்டவர் பொந்தியு பிலாத்தேனும் இறைமுன்*
அண்ணலைத் தனி நிறுவவும், ஆக்கினைத் தீர்ப்புப்
பண்ணவும் என நிண்ணயம் பண்ணினர் பகைகொண்டு
ஒண்ணுமோ வறுங் கூவலுக்கு உததியை ஒடுக்க! –1464

ஆளுநர் விதித்த கொலைத்தண்டனையை நிறைவேற்ற இழுத்துச் சென்று துன்புறுத்துதல்

4. *முன்னுடை களைந்து ஒரு முருக்கு அலர்ந்தெனச்*
செந்நிற அங்கிமேல் திகழச் சேர்த்தினர்;
கொல் நுனை அழுந்தி வெம் குருதி பீறிடப்
பின்னிய முள்முடி சிரத்துப் பெய்தனர். –1524

5. கைதுறுங் கோலினைக் கவர்ந்து கண்டகர்
வெய்துறத் தலைமிசை அடித்து வேதனை
செய்தனர்; உமிழ்ந்தனர் திருமுகத்தினே;
வைதனர்; பழித்தனர், மறங்கொள் நீசரே. –1526

மக்கள் புலம்பல்

6. என்கொல் மேதினி கீண்டு வெடித்திலது என்பார்!
என்கொல் வானம் இடிந்து விழுந்திலது என்பார்!
என்கொல் வாரிதி நீர் சுவறாததும் என்பார்!
என்கொலோ முடிவு இத்துணை தாழ்த்ததும் என்பார்! –1540

பொல்லாங்கு பொறுத்தல்

7. பொல்லாத யூதர்களும் போர்ச்சேவ கர்குழுவும்
வல்லானை எள்ளிப் புறக்கணித்து வாய்மதமாய்ச்
சொல்லாத நிந்தைமொழி சொல்லித்து ணிந்தியற்றும்
பொல்லாங்கை யெல்லாம்நம் ஈசன் பொறுத்திருந்தார். –1564

சொல்லும் பொருளும்

1) **உன்னலிர்** – எண்ணாதீர்கள்; **பிணித்தமை** – கட்டியமை; **நீச** – இழிந்த; **நேசம்** – அன்பு; **வல்லியதை** – உறுதியை; **ஓர்மின்** – ஆராய்ந்து பாருங்கள்.

2) **பாதகர்** – கொடியவர்; **குழுமி** – ஒன்றுகூடி; **பழிப்புரை** – இகழ்ச்சியுரை; **ஏதமில்** – குற்றமில்லாத; **ஊன்ற** – அழுந்த; **மாற்றம்** – சொல்; **நுவன்றிலர்** – கூறவில்லை.

பா வகை: அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3) **ஆக்கினை** – தண்டனை; **நிண்ணயம்** – உறுதி; **கூவல்** – கிணறு; **ஒண்ணுமோ** – முடியுமோ; **உததி** – கடல்; **ஒடுக்க** – அடக்க.

4) **களைந்து** – கழற்றி; **திகழ** – விளங்க; **சேர்த்தினர்** – உடுத்தினர்; **சிரத்து** – தலையில்; **பெய்தனர்** – வைத்து அழுத்தினர்.

5) **கைதுறும்** – கையில் கொடுத்திருந்த; **கண்டகர்** – கொடியவர்கள்; **வெய்துற** – வலிமை

XII Std Tamil Chap_8.indd 197 17-12-2020 16:21:50

மிக; **வைதனர்** – திட்டினர்; **மறங்கொள்** – முரட்டுத் தன்மையுள்ளவர்.

6) **மேதினி** – உலகம்; **கீண்டு** – பிளந்து; **வாரிதி** – கடல்; **சுவறாதது** – வற்றாதது.

7) **வல்லானை** – வலிமை வாய்ந்தவரை; **நிந்தை** – பழி; **பொல்லாங்கு** – கெடுதல்; தீமை.

பாடலின் பொருள்

1) இறைமகன் தன்னைப் பிறர் கயிற்றால் கட்டும்போது அதற்கு உடன்பட்டு நின்றார். அச்செயலானது, இயல்பாக மனிதர்களிடம் காணப்படுகிற சாதாரண அன்புச்செயல் என்று கருத வேண்டியதில்லை. தம்மீது பகை கொண்டு தனக்கு இழிவான செயல்களைச் செய்த இம்மனிதர்கள் தாங்கள் வாழும் காலம் முழுவதும் துன்பத்தில் இருப்பார்களோ என்று எண்ணி அவர்களுக்காக இரக்கப்படுகிற தன்மையே காரணம். அந்த அன்பு என்னும் உறுதியான கட்டிலிருந்து விடுபட முடியாமல்தான், எந்த உதவியும் பெற இயலாத ஓர் ஏழையைப் போல அமைதியுடன் நின்றார். இதை நீங்கள் எண்ணிப் பாருங்கள்.

2) கொடியோர் ஒன்றுகூடிக் கூறிய இகழ்ச்சி மொழி எனும் கொடிய தீக்கொள்ளியானது, மாசில்லாத அருள்நிறைந்த இறைமகன் இதயத்தில் அழுந்தியது. அவர் மிக வேதனையடைந்து மனம் வெந்து புண்பட்டாரே அல்லாமல், தம்மைத் துன்புறுத்துகிறவர்கள் மீது சினந்து வருந்தத்தக்க ஒரு மறுசொல்லும் கூறாமல் நின்றார். தாம் கருதி வந்த வேலை நிறைவேறுவதற்காக அவர் அமைதி காத்தார்.

3) பெருந்தகையரான இறைமகனைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணம்கொண்டு போந்தியு பிலாத்து என்னும் ஆளுநரின் முன் தனியாகக் கொண்டுபோய் நிறுத்தினர். அவருக்குத் தண்டனை பெற்றுத் தரவும் உறுதியாக இருந்தனர். வற்றிய சிறிய கிணறு தனக்குள் கடலை அடக்கிக்கொள்ள முடியுமா? முடியாது.

4) இறைமகனை இழுத்துச் சென்ற அக்கொடியவர்கள், அவர் அணிந்திருந்த வெள்ளாடையைக் கழற்றிவிட்டு, முருக்க மலர் போன்று சிவந்த ஓர் அங்கியை அவருக்குப் போர்த்தினர். துன்பம் தரும் கூர்மையான முள் செடியினால் பின்னப்பட்ட ஒரு முடியை அவருடைய தலையில் வைத்து இரத்தம் பீறிட்டு ஒழுகுமளவு அழுத்தினர்.

5) கொடுமனம் படைத்த அந்த முரடர்கள், இறைமகனுடைய கையிலிருந்த கோலினைப் பிடுங்கி எடுத்துக் கொண்டனர். முள்முடி சூட்டப்பட்ட அவர் தலையின்மேல் வன்மையாக அடித்து வேதனை செய்தனர். மேலும், அவருடைய திருமுகத்தில் எச்சிலை உமிழ்ந்து, திட்டிப் பழித்துக் கேலி செய்தனர்.

6) மக்கள் 'இத்தனை கொடுமைகளுக்குப் பிறகும் இவ்வுலகம் பிளந்து வெடிக்கவில்லையே! இது என்னே!' என்பர்; 'வானம் இடிந்து விழவில்லையே! இது என்னே!' என்பர்; 'கடல்நீர் வற்றிப் போகவில்லையே! இது என்னே!' என்பர்; மேலும், 'இந்த உலகம் இன்னும் அழியாமல் தாமதிப்பதும் ஏனோ' என்பர்.

7) பொல்லாத யூதர்களும் போர்ச் சேவகர் கூட்டமும் எல்லாம் வல்ல இறைமகனை இகழ்ந்து பேசியும் புறக்கணித்தும் வாயில் வந்தபடி சொல்லத் தகாத பழிமொழிகளைக் கூறினர். அவர்கள் செய்த பொல்லாங்குகளை எல்லாம் நம் இறைமகன், பொறுத்திருந்தார்.

இலக்கணக் குறிப்பு

கருந்தடம், வெங்குருதி – பண்புத்தொகைகள்; **வெந்து, சினந்து, போந்து** – வினையெச்சங்கள்; **உன்னலிர்** – முன்னிலைப் பன்மை வினைமுற்று; **ஓர்மின்** – ஏவல் பன்மை வினைமுற்று; **சொற்ற, திருந்திய** – பெயரெச்சங்கள்; **பாதகர்** – வினையாலணையும் பெயர்; **ஊன்ற ஊன்ற** – அடுக்குத் தொடர்.

XII Std Tamil Chap_8.indd 198 17-12-2020 16:21:50

உறுப்பிலக்கணம்

பகைத்த = **பகை + த் + த் + அ**

பகை – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி.

களைந்து = **களை + த்(ந்) + த் + உ**

களை – பகுதி; த் – சந்தி (' ந்' ஆனது விகாரம்); த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

பழித்தனர் = **பழி + த் + த் + அன் + அர்**

பழி – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை; அன் – சாரியை; அர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

இடிந்து = **இடி + த்(ந்) + த் + உ**

இடி – பகுதி; த் – சந்தி (' ந்' ஆனது விகாரம்); த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

புணர்ச்சி விதி

முன்னுடை = **முன்+உடை**

விதி : 'தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' – முன்ன் + உடை

விதி : 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – முன்னுடை.

ஏழையென = **ஏழை + என**

விதி : 'இ ஈ ஐ வழி யவ்வும் – ஏழை + ய் + என

விதி : 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – ஏழையென.

தெரியுமா?

திருநெல்வேலியில் இருந்து வெளிவந்த 'நற்போதகம்' எனும் ஆன்மீக மாத இதழில் இரட்சணிய யாத்திரிகம் பதின்மூன்று ஆண்டுகள் தொடராக வெளிவந்தது.

இரட்சணிய யாத்திரிகம், 1894ஆம் ஆண்டு மே திங்களில் முதல் பதிப்பாக வெளியிடப்பட்டது.

நூல்வெளி

ஜான் பன்யன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய பில்கிரிம்ஸ் புரோகிரஸ் (Pilgrims Progress) எனும் ஆங்கில நூலின் தழுவலாக இரட்சணிய யாத்திரிகம் படைக்கப்பட்டது. இது 3766 பாடல்களைக் கொண்ட ஒரு பெரும் உருவகக் காப்பியம். இது ஆதி பருவம், குமார பருவம், நிதான பருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம் ஆகிய ஐந்து பருவங்களைக் கொண்டது. இக்காப்பியத்தின் குமார பருவத்தில் உள்ள இரட்சணிய சரித படலத்தில் இடம்பெறும் இயேசுவின் இறுதிக்கால நிகழ்ச்சிகள் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளன. இதன் ஆசிரியர் எச்.ஏ. கிருட்டிணனார். பிற சமய இலக்கியங்களைப் போலவே கிறித்துவ சமய இலக்கியங்களும் தமிழ் இலக்கிய வளமைக்குப் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளன. எச்.ஏ. கிருட்டிணனார் போற்றித் திருஅகவல், இரட்சணிய மனோகரம் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். இவரைக் கிறித்துவக் கம்பர் என்று போற்றுவர்.

கற்பவை கற்றபின்...

பொறுத்தாரை இவ்வுலகம் பொன்போல் போற்றும் – என்னும் தலைப்பில் கலந்துரையாடுக.

கவிதைப்பேழை

இயல் ஒன்பது

உயிர்க்குணங்கள்

5LT4LS

ஒவ்வொரு மனிதனிடமும் பலவகையான பண்புகள் குவிந்து கிடக்கின்றன. அவற்றுள் நற்பண்புகளும் உண்டு; தீய பண்புகளும் உண்டு. தீயனவற்றை விலக்கி, நல்லனவற்றை வளர்த்து வாழ்வாங்கு வாழ்வதே மனிதனின் கடமையாகும். மனிதனுக்குள் நிறைந்திருக்கும் பண்புகளைக் கன்னிப்பாவை என்னும் நூலின் பாடல்வழி அறிவோம்.

அறிவுஅருள் ஆசைஅச்சம்
அன்புஇரக்கம் வெகுளிநாணம்
நிறைஅழுக்காறு எளிமை
நினைவுதுணிவு இன்பதுன்பம்
பொறைமதம் கடைப்பிடிகள்
பொச்சாப்பு மானம்அறம்
வெறுப்புஉவப்பு ஊக்கம்மையல்
வென்றிஇகல் இளமைமூப்பு
மறவிஓர்ப்பு இன்னபிற
மன்னும்உயிர்க் குணங்கள்எல்லாம்
குறைவறப் பெற்றவள்நீ
குலமாதே பெண்ணரசி
இறைமகன் வந்திருக்க
இன்னும்நீ உறங்குதியோ
புறப்படு புன்னகைநீ
பூத்தேலோ ரெம்பாவாய்!

– இறையரசன்

சொல்லும் பொருளும்

நிறை – மேன்மை
பொறை – பொறுமை
பொச்சாப்பு – சோர்வு
மையல் – விருப்பம்
ஓர்ப்பு – ஆராய்ந்து தெளிதல்
அழுக்காறு – பொறாமை
மதம் – கொள்கை
இகல் – பகை
மன்னும் – நிலைபெற்ற

www.cbsetamil.com

8th Std Tamil _20-12-2019.indd 192 03-01-2020 19:34:56

பாடலின் பொருள்

அறிவு, கருணை, ஆசை, அச்சம், அன்பு, இரக்கம், சினம், நாணம், மேன்மை, பொறாமை, எளிமை, நினைவு, துணிவு, இன்பம், துன்பம், பொறுமை, கொள்கையைப் பின்பற்றுதல், சோர்வு, மானம், அறம், வெறுப்பு, மகிழ்ச்சி, ஊக்கம், விருப்பம், வெற்றி, பகை, இளமை, முதுமை, மறதி, ஆராய்ந்து தெளிதல் போன்றவை இவ்வுலகில் நிலைபெற்ற மனிதர்களிடம் உள்ள பண்புகளாகும். இவற்றையுடைய மனிதகுலத்தில் பிறந்த பெண்ணே! நற்பண்புகள் எவையென அறிவுறுத்த இறைவனின் திருக்குமாரன் வந்தபின்னும் நீ உறங்கலாமா? உண்மையை உணர, புன்னகை பூத்து நீ புறப்படுவாயாக!

தெரிந்து தெளிவோம்

பாவை நூல்கள்

மார்கழித் திங்களில் பொழுது விடியும் முன்பே பெண்கள் துயிலெழுந்து, பிற பெண்களையும் எழுப்பிக்கொண்டு, ஆற்றுக்குச் சென்று நீராடி, இறைவனை வழிபடும் வழக்கம் உண்டு. இதனைப் பாவை நோன்பு என்பர். அவ்வாறு திருமாலை வழிபடச் செல்லும் பெண்கள், பிற பெண்களை எழுப்புவதாக ஆண்டாள் பாடிய நூலே திருப்பாவை.

இதேபோலச் சிவபெருமானை வழிபடச் செல்லும் பெண்கள், பிற பெண்களை எழுப்புவதாகப் பாடப்பட்ட நூல் திருவெம்பாவை. இதனை இயற்றியவர் மாணிக்கவாசகர்.

நூல் வெளி

இறையரசனின் இயற்பெயர் சே. சேசுராசா என்பதாகும். கல்லூரி ஒன்றில் தமிழ்ப்பேராசிரியராகப் பணிபுரிந்தவர். ஆண்டாள் இயற்றிய திருப்பாவையைத் தழுவி, கன்னிப்பாவை என்னும் நூலை எழுதியுள்ளார். அந்நூலில் இருந்து ஒரு பாடல் இங்குத் தரப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

பின்வரும் திருப்பாவைப் பாடலைப் படித்து மகிழ்க.

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செழுங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பின் காண்;
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்,
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய், நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய். பாடல்-14

www.cbsetamil.com
8th Std Tamil _20-12-2019.indd 193 03-01-2020 19:34:56

கவிதைப்பேழை

இயல் ஐந்து

கண்மணியே கண்ணுறங்கு

நுழையும்முன்

பாடல்கள் மனத்திற்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் தருபவை. பாடலைப் பாடினாலும் மகிழ்ச்சி; கேட்டாலும் மகிழ்ச்சி. ஏட்டில் எழுதப்படாத இசைப்பாடல்கள் தமிழில் ஏராளமாக உள்ளன. தமிழரின் பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு நிகழ்விலும் பாடல்கள் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன. இந்நாட்டுப்புறப் பாடல்களே தமிழர்களின் வாழ்க்கை முறைகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ

நந்தவனம் கண் திறந்து
நற்றமிழ்ப் பூ எடுத்து
பண்ணோடு பாட்டிசைத்துப்
பார் போற்ற வந்தாயோ!

தந்தத்திலே தொட்டில் கட்டித்
தங்கத்திலே பூ இழைத்துச்
செல்லமாய் வந்து உதித்த
சேரநாட்டு முத்தேனோ!

வாழை இலை பரப்பி
வந்தாரைக் கை அமர்த்திச்
சுவையான விருந்து வைக்கும்
சோழநாட்டு முக்கனியோ!

குளிக்கக் குளம் வெட்டிக்
குலம்வாழ அணை கட்டிப்
பசியைப் போக்க வந்த
பாண்டிநாட்டு முத்தமிழோ!

கண்ணே கண்மணியே
கண்ணுறங்கு கண்ணுறங்கு!

6th Std Tamil CBSE Pages 77-206.indd 102 20-03-2020 17:42:31

சொல்லும் பொருளும்

நந்தவனம் – பூஞ்சோலை
பண் – இசை
பார் – உலகம்
இழைத்து – பதித்து

JZRQVL

தொகைச்சொற்களின் விளக்கம்

முத்தேன் – கொம்புத்தேன், மலைத்தேன், கொசுத்தேன்

முக்கனி – மா, பலா, வாழை

முத்தமிழ் – இயல், இசை, நாடகம்

பாடலின் பொருள்

தமிழ்ச் சோலையில் பூ எடுத்து, இசையுடன் பாடி உலகம் புகழ வந்தாயோ! தங்கப் பூ பதித்த தந்தத்தால் ஆன தொட்டிலில் செல்லமாய் உறங்க வந்த சேரநாட்டின் முத்தேனோ! இல்லம் வந்தவரை இன்முகத்தோடு வரவேற்று அறுசுவை உணவளிக்கும் சோழ நாட்டின் முக்கனியோ! குளம் வெட்டி, அணை கட்டிக் குடிமக்களின் பசியைப் போக்கும் பாண்டி நாட்டின் முத்தமிழோ! கண்ணே கண்மணியே கண்மூடி உறங்குவாயாக!

நூல் வெளி

தாலாட்டு வாய்மொழி இலக்கியங்களுள் ஒன்று. தால் என்பதற்கு நாக்கு என்று பொருள். நாவை அசைத்துப் பாடுவதால் தாலாட்டு (தால்+ஆட்டு) என்று பெயர்பெற்றது. குழந்தையின் அழுகையை நிறுத்தவும் தூங்க வைக்கவும் இனிய ஓசையுடன் பாடும் பாடல் தாலாட்டு.

கற்பவை கற்றபின்

1. உங்கள் பகுதியில் பாடப்படும் தாலாட்டுப்பாடல் ஒன்றை அறிந்து வந்து பாடுக.
2. உங்கள் பகுதியில் பேசப்படும் பழமொழிகளைத் தொகுக்க.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 103 20-03-2020 17:42:31

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

மதிப்பீடு

K11LX9

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'பாட்டிசைத்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……..

   அ) பாட்டி+சைத்து ஆ) பாட்டி+இசைத்து

   இ) பாட்டு+இசைத்து ஈ) பாட்டு+சைத்து

2. 'கண்ணுறங்கு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……

   அ) கண்+உறங்கு ஆ) கண்ணு+உறங்கு

   இ) கண்+றங்கு ஈ) கண்ணு+றங்கு

3. வாழை+இலை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ……

   அ) வாழையிலை ஆ)வாழைஇலை

   இ) வாழைலை ஈ)வாழிலை

4. கை+அமர்த்தி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ……..

   அ) கைமர்த்தி ஆ) கைஅமர்த்தி

   இ) கையமர்த்தி ஈ) கையைமர்த்தி

5. உதித்த என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல் ……

   அ) மறைந்த ஆ) நிறைந்த

   இ) குறைந்த ஈ) தோன்றிய

குறுவினா

1. இப்பாடலில் குறிப்பிடப்படும் மூன்று நாடுகள் யாவை?
2. நமது வீட்டிற்கு வந்தவரை உபசரிக்கும் முறையாக நாட்டுப்புறப் பாடல் கூறுவது யாது?
3. கண்மணியே கண்ணுறங்கு பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

சிறுவினா

தாய் தன் குழந்தையை எவ்வாறெல்லாம் பாராட்டுகிறாள்?

சிந்தனை வினா

1. வாய்மொழி இலக்கிய வகைகளின் பெயர்களைத் தொகுக்க.
2. குழந்தைகளைக் கொஞ்சுவதற்குப் பயன்படுத்தப்படும் சொற்களைத் தொகுக்க.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 104 20-03-2020 17:42:32

கவிதைப்பேழை

இயல் ஏழு

படை வேழம்

57A9KG

நுழையும்முன்

தமிழர்கள் அறத்தையும் வீரத்தையும் தமது உடைமைகளாகக்கொண்டவர்கள். அவர்தம் வீரமும் போர்அறமும் தனிச்சிறப்பு வாய்ந்தவை. பகைவரை அஞ்சச்செய்யும் வீரமும் அஞ்சியோடும் பகைவரைத் துன்புறுத்தாத அறமும் தமிழரின் மாண்பினை நமக்கு உணர்த்துவன. அதனைப் போற்றிப் பாடும் சிற்றிலக்கியமான கலிங்கத்துப்பரணியின் பாடல்கள் சிலவற்றை அறிவோம்.

கலிங்கப் படையின் நடுக்கம்

எதுகொல் இது மாயை ஒன்றுகொல்
எரிகொல் மறலிகொள் ஊழி யின்கடை
அதுகொல் என அலறா இரிந்தனர்
அலதி குலதியொடு ஏழ்க லிங்கரே (1)

கலிங்கர் தோற்றுச் சிதைந்தோடல்

*வழிவர் சிலர்கடல் பாய்வர் வெங்கரி
மறைவர் சிலர்வழி தேடி வன்பிலம்
இழிவர் சிலர்சிலர் தூறு மண்டுவர்
இருவர் ஒருவழி போகல் இன்றியே (2)

ஒருவர் ஒருவரின் ஓட முந்தினர்
உடலின் நிழலினை வெருவி அஞ்சினர்
அருவர் வருவர் எனா இறைஞ்சினர்
அபயம் அபயம் எனநடுங்கியே* (3)

மழைகள் அதிர்வன போல் உடன்றன
வளவன் விடுபடை வேழம் என்றிருள்
முழைகள் நுழைவர்கள் போரில் இன்றுநம்
முதுகு செயும்உப காரம் என்பரே (4)

– செயங்கொண்டார்

www.cbsetamil.com

8th Std Tamil _20-12-2019.indd 144 03-01-2020 19:34:49

சொல்லும் பொருளும்

மறலி	– காலன்	வழிவர்	– நழுவி ஓடுவர்
கரி	– யானை	பிலம்	– மலைக்குகை
தூறு	– புதர்	மண்டுதல்	– நெருங்குதல்
அருவர்	– தமிழர்	இறைஞ்சினர்	– வணங்கினர்
உடன்றன	– சினந்து எழுந்தன	முழை	– மலைக்குகை

பாடலின் பொருள்

சோழர் படையின் தாக்குதலைக் கண்ட கலிங்கர், இஃது என்ன மாய வித்தையா என வியந்தனர். தம்மை எரிக்கவந்த தீயோ என அஞ்சினர். சோழர்படை தம் உயிரைப் பறிக்கும் காலனோ என அஞ்சினர்; தமது இறுதிக்காலம் நெருங்கிவிட்டதோ என எண்ணி, அலைந்து குலைந்து நடுங்கினர்.

அப்படி நடுங்கிய கலிங்கப் படையினர் படைக் கூட்டத்திலிருந்து விலகி ஓடினர். சிலர் கடலில் தாவிக் குதித்துத் தப்பினர். சிலர் யானைகளின் பின்னே மறைந்துகொண்டனர். எத்திசையில் செல்வது எனத் தெரியாமல், செல்வதற்கு அரிதான மலைக் குகைகளினுள்ளும் புதர்களுக்குள்ளும் தப்பி ஓடினர்.

கலிங்க வீரர்கள் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு ஓடினர். தம் நிழலையும் மற்றவர் நிழலையும் கண்டு தமிழர்கள் துரத்தி வருவதாக எண்ணி அஞ்சினர்; தஞ்சம் வேண்டி வணங்கினர்.

சோழ மன்னனின் படையிலுள்ள யானைகள் சினமுற்று இடியைப் போலப் பிளிறின; அவ்வோசையைக் கேட்டு அஞ்சிய வீரர்கள் இருள் நிறைந்த குகைக்குள் சென்று மறைந்தனர்; ஏனையோர் புறமுதுகுகாட்டி ஓடிப் பிழைத்தனர்.

நூல் வெளி

செயங்கொண்டார் தீபங்குடி என்னும் ஊரினைச் சேர்ந்தவர் என்பர். இவர் முதற்குலோத்துங்கச் சோழனுடைய அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவர். இவரைப் பரணிக்கோர் செயங்கொண்டார் என்று பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் புகழ்ந்துள்ளார்.

கலிங்கத்துப்பரணி தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றான பரணி வகையைச் சார்ந்த நூல். தமிழில் முதல்முதலில் எழுந்த பரணி இந்நூலே ஆகும். இது முதலாம் குலோத்துங்க சோழன், அவருடைய படைத்தலைவர் கருணாகரத் தொண்டைமான் ஆகியோரின் கலிங்கப்போர் வெற்றியைப் பேசுகிறது. இந்நூலைத் தென்தமிழ்த் தெய்வப்பரணி என்று ஒட்டக்கூத்தர் புகழ்ந்துள்ளார். கலிங்கத்துப் பரணி கலித்தாழிசையால் பாடப்பெற்றது; 599 தாழிசைகள் கொண்டது.

போர்முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிகொண்ட வீரரைப் புகழ்ந்து பாடும் இலக்கியம் பரணி ஆகும்.

www.cbsetamil.com

8th Std Tamil _20-12-2019.indd 145 03-01-2020 19:34:49

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

கற்பவை கற்றபின்

1. உங்களுக்குத் தெரிந்த சிற்றிலக்கிய வகைகளின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.
2. போர்க்கருவிகளின் படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சிங்கம் _____யில் வாழும்.

   அ) மாயை ஆ) ஊழி இ) முழை ஈ) அலை

2. கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு _____.

   அ) வீரம் ஆ) அச்சம் இ) நாணம் ஈ) மகிழ்ச்சி

3. 'வெங்கரி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) வெம் + கரி ஆ) வெம்மை + கரி இ) வெண் + கரி ஈ) வெங் + கரி

4. 'என்றிருள்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) என் + இருள் ஆ) எட்டு + இருள்

   இ) என்ற + இருள் ஈ) என்று + இருள்

5. போல் + உடன்றன என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) போன்றன ஆ) போலன்றன

   இ) போலுடன்றன ஈ) போல்உடன்றன

குறுவினா

1. சோழ வீரர்களைக் கண்டு கலிங்கர் எவ்வாறு நடுங்கினர்?
2. கலிங்க வீரர்கள் எவ்வாறு அஞ்சி ஓடினர்?
3. சோழனின் யானைப் படையைக் கண்ட வீரர்களின் செயல்கள் யாவை?

சிறுவினா

சோழ வீரர்களைக் கண்ட கலிங்கப் படை வீரர்களின் செயல்களாகக் கலிங்கத்துப்பரணி கூறுவன யாவை?

சிந்தனை வினா

ஒரு நாட்டின் பாதுகாப்பிற்குத் தேவையானவை எவை எனக் கருதுகிறீர்கள்?

www.cbsetamil.com
8th Std Tamil _20-12-2019.indd 146 03-01-2020 19:34:49

கவிதைப்பேழை

இயல் 2

திருமலை முருகன் பள்ளு

23PSQS

நுழையும்முன்

உழவர், உழத்தியரின் வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை எளிய நடையில் நயம்பட வெளிப்படுத்துவதே பள்ளுச் சிற்றிலக்கியத்தின் உட்கோளாகும். 'நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது' என்பர். வேளாண்மை இலக்கியமான பள்ளு, அரிய பல செய்திகளின் கருவூலமாக விளங்குகிறது.

வடகரை நாடு

மலரில் ஆரளி இந்துளம் பாடும்
மடைஇ டங்கணி வந்துளம் ஆடும்
சலச வாவியில் செங்கயல் பாயும்
தரளம் ஈன்றவெண் சங்கயல் மேயும்
குலமின் னார்மழை பெய்யெனப் பெய்யும்
குடங்கை ஏற்பவர் செய்யெனச் செய்யும்
புலவர் போற்றும் திருமலைச் சேவகன்
புகழ்வட ஆரி நாடெங்கள் நாடே.

தென்கரை நாடு

வளருங் காவில் முகில்தொகை ஏறும்– பொன்
மாடம் எங்கும் அகிற்புகை நாறும்
குளிரும் மஞ்ஞையும் கொண்டலும் காக்கும்
கோல்முறை மன்னர் மண்டலங் காக்கும்
இளமின் னார்பொன் னரங்கில் நடிக்கும்–முத்(து)
ஏந்தி வாவித் தரங்கம் வெடிக்கும்
அளியுலாம் கொன்றை சூடுங் குற்றாலத்– தென்
ஐயன்தென் ஆரி நாடெங்கள் நாடே.

–பெரியவன் கவிராயர்

சொல்லும் பொருளும்

ஆரளி – மொய்க்கின்ற வண்டு, இந்துளம் – இந்தளம் எனும் ஒரு வகைப் பண், இடங்கணி – சங்கிலி, உளம் – உள்ளான் என்ற பறவை, சலச வாவி – தாமரைத் தடாகம், தரளம் – முத்து, வட ஆரிநாடு – திருமலை.

கா – சோலை, முகில்தொகை – மேகக் கூட்டம், மஞ்ஞை – மயில், கொண்டல் – கார்கால மேகம், மண்டலம் – உலகம், வாவித் தரங்கம் – குளத்தில் எழும் அலை, அளியுலாம் – வண்டு மொய்க்கின்ற, தென் ஆரிநாடு – குற்றாலம்.

பாடலின் பொருள்

வடகரை நாடு

வடகரை நாட்டில் மலரில் மொய்க்கும் வண்டுகள் இந்தளம் என்ற பண்ணை ரீங்காரமிட்டுப் பாடும். மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த உள்ளான் பறவை வண்டின் இசைகேட்டு வாய்க்காலின் மதகுகளிடையே கட்டப்பட்ட சங்கிலியில் வாலை ஆட்டிக்கொண்டு அமர்ந்திருக்கும்.

தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும். முத்துகளை ஈன்ற வெண்மையான சங்குகள் பரவிக் காணப்படும். மின்னலையொத்த பெண்கள், பெய் என்றால் மழை பெய்யும். உள்ளங்கை ஏந்தி இரந்து உண்ணும் இயல்புடைய முனிவர்கள் கூறும் வார்த்தைகள் மெய்யாகும். இத்தன்மை கொண்ட திருமலையில் புலவர்கள் போற்றுகின்ற திருமலைச் சேவகன் வீற்றிருக்கின்றார்.

தென்கரை நாடு

தென்கரை நாட்டின் நீண்டு வளர்ந்த சோலையில் மேகக் கூட்டங்கள் தங்கிச் செல்லும். இந்நாட்டில் உள்ள பொன்னாலான மாடமாளிகைகளில் அகில்புகையின் நறுமணம் பரவிக்கொண்டே இருக்கும். இம்மாளிகைகளை மயில்களும் கார்கால மேகங்களும் சூழ்ந்து காக்கும்.

செங்கோலைக் கொண்ட மன்னர் தென்கரை நாட்டை நீதி தவறாது காவல் காப்பர். இளைய பெண்கள் பொன்னாலான

தெரிந்து தெளிவோம்

உங்கள் மாவட்டத்திலுள்ள ஆறு, ஏரி, குளங்களின் பெயர்களை அறிவீர்களா? கேட்டறிக.

தமிழகத்தில் முன்னோர்கள் பயிரிட்டு வந்த நெல் வகைகள் தற்பொழுது குறைந்ததற்கான காரணம் அறிவீர்களா?

அரங்கில் நடித்து விளையாடி மகிழ்ந்திருப்பர். இங்குள்ள குளங்களின் அலைகள் முத்துகளை ஏந்தி வரும். அவ்வலைகள் கரைகளில் மோதும்பொழுது முத்துகள் சிதறி வெடிக்கும். இத்தன்மை கொண்ட குற்றாலத்தில் வண்டுகள் மொய்க்கும் கொன்றை மலரைச் சூடிய தென்னாடுடைய சிவபெருமானாகிய குற்றாலநாதர் வீற்றிருக்கின்றார்.

இலக்கணக்குறிப்பு

செங்கயல், வெண்சங்கு – பண்புத்தொகைகள்

அகிற்புகை– ஆறாம் வேற்றுமைத்தொகை

மஞ்ஞையும் கொண்டலும்– எண்ணும்மை

கொன்றைசூடு – இரண்டாம் வேற்றுமைத்தொகை

பகுபத உறுப்பிலக்கணம்

ஈன்ற – ஈன் + ற் + அ

ஈன் – பகுதி

ற் – இறந்தகால இடைநிலை

அ – பெயரெச்ச விகுதி.

புணர்ச்சி விதி

செங்கயல் – செம்மை + கயல்

ஈறு போதல் – செம் + கயல்
முன்னின்ற மெய் திரிதல் – செங்கயல்.

தெரியுமா?

பள்ளு 96 வகையான சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. இது உழத்திப் பாட்டு என வும் அழைக்கப்படும். தொல்காப்பியம் குறிப்பிடும் புலன் என்னும் இலக்கிய வகையைச் சாரும்.

திருமலை முருகன் பள்ளு கூறும் நெல் வகைகள்

- சீரகச்சம்பா
- சீதாபோகம்
- ரங்கஞ்சம்பா
- மணல்வாரி
- அதிக்கிராதி
- முத்துவெள்ளை
- புழுகுச்சம்பா
- சொரிகுரும்பை
- புத்தன்வாரி
- சிறைமீட்டான்
- கார்நெல்
- அரியநாயகன்

- கருங்சூரை
- பூம்பாளை
- குற்றாலன்
- பாற்கடுக்கன்
- கற்பூரப்பாளை
- காடைக் கழுத்தன்
- மிளகுச் சம்பா
- பனைமுகத்தன்
- மலைமுண்டன்
- திருவரங்கன்
- குருவைக் கிள்ளை
- முத்துவெள்ளை

திருமலை முருகன் பள்ளு கூறும்

மாடு வகைகள்

காரி, தொந்திக்காளை
மால்காளை, மறைகாளை
மயிலைக்காளை, மேழைக்காளை
செம்மறையான், கருமறையான்

உழவுக் கருவிகள்

கலப்பை, நுகம், பூட்டு,
வள்ளைக்கை, உழக்கோல், கொழு
கயமரம், மண்வெட்டி, வடம்

சொற்சுவை

கண்காணி: பேச்சு வழக்கில் கங்காணி என்று பயன்படுத்தப்படுகிறது. கண்காணம் என்பது பயிர்த்தொழிலில் கையாளப்படும் ஒரு சொல். கங்காணம் என்றும் வழங்கப்படுகிறது.

இதன் பொருள், நாள்தோறும் வயலில் நெல் அறுவடை செய்து களத்தில் ஒப்படி செய்யப்படும் நெல் அளவு என்பதாகும். கண்காணி என்பது இந்த ஒப்படியை மேற்பார்வை செய்பவரைக் குறிக்கும்.

நூல்வெளி

திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்திற்கு அருகில் உள்ளது பண்புளிப்பட்டணம். இவ்வூர் 'பண்பை' என்றும் 'பண்பொழில்' என்றும் அழைக்கப்படும். இங்குள்ள சிறு குன்றின் பெயர் திருமலை. குன்றின் மேலுள்ள முருகக்கடவுளைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு திருமலைமுருகன் பள்ளு பாடப்பட்டுள்ளது. இந்நூலில் கலித்துறை, கலிப்பா, சிந்து ஆகிய பாவகைகள் விரவி வந்துள்ளன. இந்நூல் 'பள்ளிசை' என்றும் 'திருமலை அதிபர் பள்ளு' எனவும் வழங்கப்படுகிறது. திருமலை முருகன் பள்ளு நூலின் ஆசிரியர் பெரியவன் கவிராயர். இவர் காலம் 18ஆம் நூற்றாண்டு.

கற்பவை கற்றபின்...

உங்கள் பள்ளி வளாகத்தின் இயற்கைச்சூழலை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் ஏற்ற திட்டம் ஒன்றை உருவாக்குக.

XI Std Tamil Chap_027-056.indd 36 1/10/2020 4:04:36 PM

கவிதைப்பேழை

இயல் 6

குற்றாலக் குறவஞ்சி

2AN1DC

நுழையும்முன்

சங்க இலக்கியங்கள் வீரர்களை, அரசர்களை, வள்ளல்களை, தனிமனிதர்களைப் பாடின. சமய நூல்கள் கடவுளரைப் பாடின சிற்றிலக்கியங்கள் கடவுளரோடு மனிதர்களையும் பாடின. அவற்றுள் இயற்றமிழின் செழுமையையும் இசைத்தமிழின் இனிமையையும் நாடகத்தமிழின் எழிலினையும் ஒருங்கேகொண்டு முத்தமிழ்க் காவியமாகத் திகழ்வது குற்றாலக் குறவஞ்சி.

குறவஞ்சி என்பது ஒரு வகை நாடக (opera) இலக்கிய வடிவமாகும். இது சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று. பாட்டுடைத் தலைவன் உலா வரக்கண்ட தலைவி, அத்தலைவன் மீது காதல்கொள்ள, குறவர் குலத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி தலைவிக்குக் குறிகூறிப் பரிசில் பெறும் செய்திகளைக் கூறுவதால் குறவஞ்சி என்னும் பெயர் பெற்றது. இது குறத்திப்பாட்டு என்றும் வழங்கப்படுகின்றது. பரிசில் பெற்றுவரும் சிங்கிக்கும் சிங்கனுக்கும் இடையிலான உரையாடல் சுவைமிக்கது.

சிங்கனுக்கும் சிங்கிக்கும் உரையாடல்

கண்ணிகள்

சிங்கன் : இத்தனை நாளாக என்னுடன்
சொல்லாமல்
எங்கே நடந்தாய் நீ சிங்கி? (எங்கே)

சிங்கி : கொத்தார் குழலார்க்கு
வித்தாரமாகக்
குறிசொல்லப் போனனடா சிங்கா!
(குறிசொல்ல)

சிங்கன் : பார்க்கில் அதிசயம் தோணுது
சொல்லப்
பயமா இருக்குதடி சிங்கி! (பயமா)

சிங்கி : ஆர்க்கும் பயமில்லை தோணின
காரியம்
அஞ்சாமல் சொல்லடா சிங்கா!
(அஞ்சாமல்)

சிங்கன் : காலுக்கு மேலே பெரிய விரியன்
கடித்துக் கிடப்பானேன் சிங்கி?
(கடித்து)

சிங்கி : சேலத்துநாட்டில்குறிசொல்லிப்பெற்ற
சிலம்பு கிடக்குதடா சிங்கா!
(சிலம்பு)

சிங்கன் : சேலத்தார் இட்ட சிலம்புக்கு மேலே
திருகு முறுகு என்னடி சிங்கி?
(திருகு)

சிங்கி : கோலத்து நாட்டார் முறுக்கிட்ட
தண்டை
கொடுத்த வரிசையடா சிங்கா!
(கொடுத்த)

சிங்கன் : நீண்டு குறுகியும் நாங்கூழுப் போல
நெளிந்த நெளிவு என்னடி சிங்கி?
(நெளிந்த)

சிங்கி : பாண்டிய னார்மகள் வேண்டும்
குறிக்காகப்
பாடகம் இட்டதடா சிங்கா! (பாடகம்)

சிங்கன் : மாண்ட தவளை உன் காலிலே கட்டிய
மார்க்கம் அது ஏது பெண்ணே சிங்கி?
(மார்க்கம்)

சிங்கி : ஆண்டவர் குற்றாலர் சந்நிதிப்
பெண்கள்
அணிமணிக் கெச்சம் அடா சிங்கா!
(அணிமணி)

சிங்கன் : சுண்டு விரலிலே குண்டலப் பூச்சி
சுருண்டு கிடப்பானேன் சிங்கி?
(சுருண்டு)

சிங்கி : கண்டிய தேசத்தில் பண்டுநான் பெற்ற
காலாழி பீலியடா சிங்கா! (காலாழி)

சொல்லும் பொருளும்

கொத்து - பூமாலை; குழல் - கூந்தல்; கோலத்து நாட்டார் - கலிங்க நாட்டார்; வரிசை - சன்மானம்; நாங்கூழ் - மண்புழு.

இலக்கணக்குறிப்பு

மாண்ட தவளை – பெயரெச்சம்.

பகுபத உறுப்பிலக்கணம்

பெற்ற – பெறு (பெற்று) + அ

பெறு – பகுதி

பெற்று – ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது

அ – பெயரெச்ச விகுதி.

புணர்ச்சி விதி

பயமில்லை – பயம் + இல்லை

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – பயமில்லை.

நூல்வெளி

தமிழ்நாட்டின் தென்காசிக்கு அருகில் அமைந்திருக்கும் குற்றாலம் என்னும் ஊரின் சிறப்பைப் புகழ்ந்து, அங்குள்ள குற்றாலநாதரைப் போற்றிப் பாடப்பட்டது குற்றாலக் குறவஞ்சி. இந்நூல், திரிகூட ராசப்பக் கவிராயரின் 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்பட்டது. மதுரை முத்துவிசயரங்க சொக்கலிங்கனார் விருப்பத்திற்கு இணங்கப் பாடி அரங்கேற்றப்பட்டது. திரிகூட ராசப்பக் கவிராயர் திருநெல்வேலியில் தோன்றியவர். குற்றாலநாதர் கோவிலில் பணிபுரியும் காலத்தில் சைவசமயக் கல்வியிலும் இலக்கிய இலக்கணங்களிலும் தேர்ச்சி பெற்றார். 'திருக்குற்றாலநாதர் கோவில் வித்துவான்' என்று சிறப்புப் பட்டப்பெயர் பெற்றவர். குற்றாலத்தின்மீது தலபுராணம், மாலை, சிலேடை, பிள்ளைத்தமிழ், யமக அந்தாதி முதலிய நூல்களையும் இயற்றியிருக்கின்றார்.

கற்பவை கற்றபின்...

1. குறவஞ்சியில் கூறப்பட்டுள்ள அணிகலன்களின் பெயர்களைப் படங்களுடன் திரட்டி அணிகலன்கள் அணியப்படுவதற்கான அறிவியல் காரணங்களையும் இணைத்து, படத்தொகுப்பேடு உருவாக்குக.
2. குறவஞ்சியில் இடம்பெறும் உரையாடல் நயத்தைப் புலப்படுத்துக.

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

கவிதைப் பேழை

நாடு

எ

முத்தொள்ளாயிரம்

LJH8P8

நுழையும்முன்

ஒரு நாட்டின் வளத்தைப் பாடுவதைப் புலவர்கள் கவிமரபாகக் கொண்டிருந்தனர். பிற்காலக் காப்பியங்களில் நாட்டுவளம் தவறாது இடம்பெற்றது. முத்தொள்ளாயிரம் சேரன், சோழன், பாண்டியன் ஆகியோருடைய நாடுகளின் வளங்களை நயமாக வெளிப்படுத்துகிறது.

1. சேரநாடு

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப்பு ள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
*நச்சிலைவேல் கோக்கோதை நாடு.**

சொல்லும் பொருளும்: அள்ளல் – சேறு; பழனம் – நீர் மிக்க வயல்; வெரீஇ – அஞ்சி; பார்ப்பு – குஞ்சு.

அணி – தற்குறிப்பேற்ற அணி

2. சோழநாடு

காவல் உழவர் களத்துஅகத்துப் போர்ஏறி
நாவலோஎ என்றிசைக்கும் நாளோதை – காவலன்தன்
கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தால் போலுமே
நல்யானைக் கோக்கிள்ளி நாடு.

சொல்லும் பொருளும்: 'நாவலோ' – நாள் வாழ்க என்பது போன்ற வாழ்த்து; இசைத்தால் – ஆரவாரத்தோடு கூவுதல்.

அணி – உவமை அணி

3. பாண்டியநாடு

நந்தின் இளஞ்சினையும் புன்னைக் குவிமொட்டும்
பந்தர் இளங்கமுகின் பாளையும்–சிந்தித்
திகழ்முத்தம் போல்தோன்றும் செம்மற்றே தென்னன்
நகைமுத்த வெண்குடையான் நாடு.

சொல்லும் பொருளும்: நந்து – சங்கு; கமுகு – பாக்கு.

முத்தம் – முத்து

அணி – உவமை அணி

9th_Tamil_Pages 122-264.indd 189 22-12-2020 15:57:57

பாடலின் பொருள்

1. சேறுபட்ட நீர்மிக்க வயல்களில் அரக்கு நிறத்தில் செவ்வாம்பல்கள் மெல்ல விரிந்தன. அதைக் கண்ட நீர்ப்பறவைகள் தண்ணீரில் தீப்பிடித்துவிட்டது என்று அஞ்சி விரைந்து தம் குஞ்சுகளைச் சிறகுகளுக்குள் ஒடுக்கி வைத்துக் கொண்டன. அடடா! பகைவர் அஞ்சும் வேலைக் கொண்ட சேரனின் நாட்டில் இந்த அச்சம் இருக்கின்றதே.

2. நெல்லை அறுவடை செய்து காக்கும் உழவர்கள் நெற்போர் மீதேறி நின்றுகொண்டு மற்ற உழவர்களை 'நாவலோ' என்று கூவி அழைப்பர். இவ்வாறு அவர்கள் செய்வது வீரர்கள் போர்க்களத்தில் கொல்யானை மீது ஏறி நின்றுகொண்டு மற்ற வீரர்களை 'நாவலோ' என்று அழைப்பது போலிருந்தது. யானைப்படைகளை உடைய சோழனது நாடு, இத்தகு வளமும் வீரமும் மிக்கது.

3. சங்குகள் மணலில் ஈனுகின்ற முட்டைகள் முத்துகள் போலிருக்கின்றன. தரையில் உதிர்ந்துகிடக்கும் புன்னை மொட்டுகள் முத்துகள் போலிருக்கின்றன. பந்தல் போட்டதுபோல் தோன்றும் பாக்கு மரத்தின் பாளையிலிருந்து சிந்தும் மணிகளும் முத்துகள் போலிருக்கின்றன. முத்துகளால் ஆன வெண்கொற்றக் குடையை உடைய பாண்டியனது நாடு இத்தகைய முத்து வளம் மிக்கது.

இலக்கணக் குறிப்பு

வெண்குடை, இளங்கமுகு – பண்புத் தொகைகள்

கொல்யானை, குவிமொட்டு – வினைத்தொகைகள்.

வெரீஇ – சொல்லிசையளபெடை

பகுபத உறுப்பிலக்கணம்

கொண்ட – கொள்(ண்) + ட் + அ

கொள் – பகுதி(ண் ஆனது விகாரம்)

ட் – இறந்தகால இடைநிலை;

அ – பெயரெச்ச விகுதி

நூல் வெளி

வெண்பாவால் எழுதப்பட்ட நூல் முத்தொள்ளாயிரம்; மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் சேர, சோழ, பாண்டியர் என்று பொதுவாகப் பாடுகிறது. மூன்று மன்னர்களைப் பற்றிப் பாடப்பட்ட 900 பாடல்களைக் கொண்ட நூல் என்பதால் முத்தொள்ளாயிரம் என்று பெயர்பெற்றது. நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. புறத்திரட்டு என்னும் நூலிலிருந்து 108 செய்யுள்கள் கிடைத்துள்ளன. அவை முத்தொள்ளாயிரம் என்னும் பெயரில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.ஆசிரியரின் பெயரை அறியமுடியவில்லை. இவர் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராகக் கருதப்படுகிறார். சேரநாட்டை அச்சமில்லாத நாடாகவும் சோழநாட்டை ஏர்க்களச் சிறப்பும் போர்க்களச் சிறப்பும் உடைய நாடாகவும் பாண்டிய நாட்டை முத்துடை நாடாகவும் பாடப்பகுதி காட்டுகிறது.

கற்பவை கற்றபின்...

1. நீங்கள் வசிக்கும் பகுதி, வேந்தருள் யார் ஆண்ட நாடு என்பதை அறிந்து அவர்களைப் பற்றிய செய்தித் தொகுப்பேடு ஒன்றை உருவாக்குக.
2. நெல் விதைப்பது முதல் அரிசி புடைப்பது வரை வயற்களக் காட்சியை அறிந்து தகுந்த படங்களுடன் வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

LJR4QV

9th_Tamil_Pages 122-264.indd 190 22-12-2020 15:57:57

கவிதைப் பேழை

கலை

சு

முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

–குமரகுருபரர்

IPRA6Y

நுழையும்முன்

சந்தத்துடன் உள்ள பாடலில் உயிர்ப்பு அதிகம் இருக்கும்; கேட்போருக்கு ஈர்ப்பும் இருக்கும். தொடக்கம் முதல் தமிழிலக்கியத்தில் சந்தத்தை ஊட்டிய, இசை நாட்டியப் பாடல்கள் மொழிக்குப் பெருமை சேர்த்தன. ஏற்றம் இறைத்தலுக்கு ஏற்ற சந்தத்தை கொண்டிருக்கிறது நாட்டுப்புறத்தமிழ்! குழந்தையின் தலை அசைத்தலுக்கும் சந்தம் அமைத்துத் தருகிறது பிள்ளைத்தமிழ்!

ஆடுக செங்கீரை!

செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்
கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட
வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை *

செங்கீரைப் பருவம், பா.எண்.8

சொல்லும் பொருளும்

பண்டி – வயிறு
அசும்பிய – ஒளிவீசுகிற
முச்சி – தலையுச்சிக் கொண்டை

பாடலின் பொருள்

திருவடியில் அணிந்த சிறு செம்பொன் கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடட்டும். இடையில் அரைஞாண் மணியோடு ஒளிவீசுகின்ற அரைவடங்கள் ஆடட்டும். பசும்பொன் என ஒளிரும் தொந்தியுடன் சிறுவயிறு சரிந்தாடட்டும். பட்டம் கட்டிய நெற்றியில் விளங்குகின்ற பொட்டுடன் வட்டவடிவான சுட்டி பதிந்தாடட்டும். கம்பிகளால் உருவான குண்டலங்களும் காதின் குழைகளும் அசைந்தாடட்டும். உச்சிக் கொண்டையும் அதில் சுற்றிக் கட்டப்பட்டுள்ள ஒளிமிக்க முத்துகளோடு ஆடட்டும். தொன்மையான வைத்தியநாதபுரியில் எழுந்தருளிய முருகனே! செங்கீரை ஆடி அருள்க! இவற்றுடன் அழகிய பவளம் போன்ற திருமேனியும் ஆட, செங்கீரை ஆடுக.

இலக்கணக்குறிப்பு:

குண்டலமும் குழைகாதும் – எண்ணும்மை
ஆடுக – வியங்கோள் வினைமுற்று

பகுபத உறுப்பிலக்கணம்:

பதிந்து – பதி +த்(ந்) + த் + உ;
பதி – பகுதி
த் – சந்தி (ந்–ஆனது விகாரம்)
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

10th_Tamil_Unit 6.indd 134 24-01-2020 10.06.52 AM

செங்கீரைப் பருவம்

செங்கீரைச்செடி காற்றில் ஆடுவது போன்று குழந்தையின் தலை 5-6 ஆம் மாதங்களில் மென்மையாக அசையும். இப்பருவத்தைச் செங்கீரைப் பருவம் என்பர். இப்பருவத்தில் குழந்தை தன் இருகை ஊன்றி, ஒருகாலினை மடக்கி, மற்றொரு காலை நீட்டி தலைநிமிர்ந்தும் முகமசைந்தும் ஆடும்.

அணிகலன்கள்

சிலம்பு, கிண்கிணி - காலில் அணிவது
அரைநாண் - இடையில் அணிவது
சுட்டி - நெற்றியில் அணிவது
குண்டலம், குழை - காதில் அணிவது
சூழி - தலையில் அணிவது

நூல் வெளி

குமரகுருபரர் இயற்றிய முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழில் செங்கீரைப் பருவத்தின் எட்டாம் பாடல் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது. 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று பிள்ளைத்தமிழ். இதில் இறைவனையோ, தலைவரையோ, அரசனையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடுவர். பாட்டுடைத் தலைவரின் செயற்கரிய செயல்களை எடுத்தியம்புவது பிள்ளைத்தமிழ். பத்துப் பருவங்கள் அமைத்து, பருவத்திற்குப் பத்துப்பாடல் என நூறு பாடல்களால் இது பாடப்பெறும். இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகையாகப் பாடப்பெறும்.

குமரகுருபரரின் காலம் 17ஆம் நூற்றாண்டு. இவர் தமிழ், வடமொழி, இந்துஸ்தானி ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர்; கந்தர் கலிவெண்பா, மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம், சகலகலாவல்லிமாலை, நீதிநெறி விளக்கம், திருவாரூர் மும்மணிக்கோவை முதலான நூல்களை இயற்றியுள்ளார்.

இருபாலருக்கும் பொதுவான பருவங்கள் – காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி.

ஆண்பாற் பிள்ளைத்தமிழ் (கடைசி மூன்று பருவம்) – சிற்றில், சிறுபறை, சிறுதேர்

பெண்பாற் பிள்ளைத்தமிழ் (கடைசி மூன்று பருவம்) – கழங்கு, அம்மானை, ஊசல்

கற்பவை கற்றபின்...

சந்தநயமிக்க குழந்தைப் பாடல்கள் சிலவற்றைத் தொகுத்து, வகுப்பறையில் பாடி மகிழ்க.

10th_Tamil_Unit 6.indd 135 24-01-2020 10.06.52 AM

கவிதைப் பேழை

மொழி

க

தமிழ்விடு தூது

தமிழின் பெருமையைப் பாடக் கவிஞர்கள் கையாளும் உத்திகள் பற்பல. கவிதை, அதற்கொரு கருவி. கிளி, அன்னம், விறலி, பணம், தந்தி என்று பல தூது வாயில்களைப்பற்றி அறிந்துள்ளோம். தமிழையே தூதுப் பொருளாக்கியுள்ளது 'தமிழ்விடு தூது'. தமிழின் இனிமை, இலக்கிய வளம், பாச்சிறப்பு, சுவை, அழகு, திறம், தகுதி ஆகியன இச்சிற்றிலக்கியத்தில் விரவியுள்ளன.

சீர்பெற்ற செல்வம்

தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்

உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்துஉரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் – மண்ணில்

குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ – திறம்எல்லாம்

வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்
சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே – அந்தரமேல்*

முற்றும்உணர்ந்த தேவர்களும் முக்குணமே பெற்றார்நீ
குற்றம்இலாப் பத்துக் குணம்பெற்றாய் – மற்றொருவர்

ஆக்கிய வண்ணங்கள் ஐந்தின்மேல் உண்டோநீ
நோக்கிய வண்ணங்கள் நூறுஉடையாய் – நாக்குலவும்

ஊனரசம் ஆறுஅல்லால் உண்டோ செவிகள்உணவு
ஆன நவரசம்உண் டாயினாய் – ஏனோர்க்கு

அழியா வனப்பு ஒன்று அலது அதிகம் உண்டோ
ஒழியா வனப்புஎட்டு உடையாய்....

(கண்ணிகள் 69 – 76)

9th_Tamil_Pages 001-121.indd 10 22-12-2020 15:38:42

சொல்லும் பொருளும்

குறம், பள்ளு – சிற்றிலக்கிய வகைகள்; மூன்றினம் – துறை, தாழிசை, விருத்தம் ; திறமெல்லாம் – சிறப்பெல்லாம்; சிந்தாமணி – சிதறாத மணி(சீவகசிந்தாமணி), என்னும் இருபொருளையும் குறிக்கும் ; சிந்து – ஒருவகை இசைப்பாடல்.

முக்குணம் – மூன்று குணங்கள் (சத்துவம்–அமைதி, மேன்மை ஆகியவற்றைச் சுட்டும் குணம்; இராசசம் – போர், தீவிரமான செயல்களைக் குறிக்கும் குணம்; தாமசம்– சோம்பல், தாழ்மை போன்றவற்றைக் குறிக்கும் குணம்); பத்துக்குணம் – செறிவு, சமநிலை முதலிய பத்துக்குண அணிகள்.

வண்ணங்கள் ஐந்து – வெள்ளை, சிவப்பு, கறுப்பு, மஞ்சள், பச்சை; வண்ணம்நூறு – குறில், அகவல், தூங்கிசை வண்ணம் முதலாக இடை மெல்லிசை வண்ணம் ஈறாக நூறு.

ஊனரசம் – குறையுடைய சுவை; நவரசம் – வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், கோபம், நகை, சமநிலை ஆகிய ஒன்பது சுவை; வனப்பு– அழகு. அவை அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு.

பாடலின் பொருள்

இனிக்கும் தெளிந்த அமுதமாய் அந்த அமிழ்தினும் மேலான முத்தி ஆகிய விடுதலை தரும் கனியே! இயல், இசை, நாடகம் என, மூன்றாய்ச் சிறந்து விளங்கும் என் தமிழே! அறிவால் உண்ணப்படும் தேனே! உன்னிடம் நான் மகிழ்ந்து விடுக்கும் வேண்டுகோள் ஒன்றுள்ளது. அதைக் கேட்பாயாக.

தமிழே! உன்னிடமிருந்து குறவஞ்சி, பள்ளு என்ற நூல்களைப் பாடிப் புலவர்கள் சிறப்புக் கொள்கின்றனர். பிறர் படிக்கும் வகையில் நீ அவற்றைக் கொண்டிருக்கிறாய். அதனால் உனக்குத் தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூவகைப் பாவினங்களிலும் உறவு ஏதேனும் உண்டோ?

தெரிந்து தெளிவோம்

கண்ணி – இரண்டு கண்களைப் போல் இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலைக்குக் கண்ணி என்று பெயர். அதேபோல் தமிழில் இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் வகை கண்ணி ஆகும்.

பாவின் திறம் அனைத்தும் கைவரப்பெற்று (பொருந்தி நின்று) என்றுமே 'சிந்தா (கெடாத) மணியாய் இருக்கும் உன்னை (இசைப்பாடல்களுள் ஒருவகையான) 'சிந்து' என்று (அழைப்பது நின் பெருமைக்குத் தகுமோ? அவ்வாறு) கூறிய நா இற்று விழும் அன்றோ?

வானத்தில் வசிக்கும் முற்றும் உணர்ந்த தேவர்கள் கூட சத்துவம், இராசசம், தாமசம் என்னும் மூன்று குணங்களையே பெற்றுள்ளார்கள். ஆனால், நீயோ பத்துக்குற்றங்கள் இல்லாமல் செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்னும் பத்துக்குணங்களையும் பெற்றுள்ளாய்.

மனிதரால் உண்டாக்கப்பட்ட வண்ணங்கள் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என ஐந்திற்குமேல் இல்லை. நீயோ புலவர்கள் கண்டடைந்த குறில், அகவல், தூங்கிசை வண்ணம் முதலாக இடைமெல்லிசை வண்ணம் ஈறாக நூறு வண்ணங்களைக் கொண்டுள்ளாய்.

நாவின்மீது பொருந்தும் குறைபாடுடைய உணவின் சுவைகள் ஆறுக்கு மேல் இல்லை. நீயோ செவிகளுக்கு விருந்தளிக்கும் ஒன்பது சுவைகளைப் பெற்றுள்ளாய். தமிழை அடையப் பெறாத மற்றையோர்க்கு அழியாத அழகு ஒன்றே ஒன்று அல்லாமல் அதிகம் உண்டோ? நீயோ நீங்காத அம்மை முதலிய அழகுகள் எட்டினைப் பெற்றுள்ளாய்.

9th_Tamil_Pages 001-121.indd 11 22-12-2020 15:38:42

இலக்கணக் குறிப்பு

முத்திக்கனி – உருவகம்

தெள்ளமுது – பண்புத்தொகை

குற்றமிலா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

நா – ஓரெழுத்து ஒருமொழி

செவிகள் உணவான – நான்காம் வேற்றுமைத்தொகை.

சிந்தா மணி – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

பகுபத உறுப்பிலக்கணம்

கொள்வார் – கொள் + வ் + ஆர்

கொள் – பகுதி

வ் – எதிர்கால இடைநிலை

ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி

உணர்ந்த – உணர் + த் (ந்) + த் + அ

உணர் – பகுதி

த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

அ – பெயரெச்ச விகுதி

நூல் வெளி

தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் 'தூது' என்பதும் ஒன்று. இது, 'வாயில் இலக்கியம்', 'சந்து இலக்கியம்' என்னும் வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. இது தலைவன் தலைவியருள் காதல் கொண்ட ஒருவர் மற்றொருவர்பால் செலுத்தும் அன்பைப் புலப்படுத்தித் தம்முடைய கருத்திற்கு உடன்பட்டமைக்கு அறிகுறியாக 'மாலையை வாங்கிவருமாறு' அன்னம் முதல் வண்டு ஈறாகப் பத்தையும் தூது விடுவதாகக் 'கலிவெண்பா'வால் இயற்றப்படுவதாகும். தமிழ்விடு தூது, மதுரையில் கோவில்கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல்கொண்ட பெண் ஒருத்தி, தன் காதலைக் கூறிவருமாறு தமிழ்மொழியைத் தூதுவிடுவதாக அமைந்துள்ளது. இந்நூல் 268 கண்ணிகளைக் கொண்டுள்ளது. தமிழின் சிறப்புகளைக் குறிப்பிடும் சில கண்ணிகள் இப்பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ளன. இந்நூலை 1930இல் உ.வே.சா. முதன் முதலில் பதிப்பித்தார். இதன் ஆசிரியர் யார் என அறிந்துகொள்ள இயலவில்லை.

கற்பவை கற்றபின்...

1. *நமது எண்ணங்களையும் கருத்துகளையும் எளிதாக எடுத்துரைக்க உதவுவது தமிழ்மொழி என்ற தலைப்பில் ஒரு பக்க அளவில் உரை ஒன்றை எழுதுக.*

2. *படித்துத் திரட்டுக.*

"காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும் கருணை மார்பின்
மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப்
போதொளிரும் திருவடியும் பொன்முடி சூளாமணியும் பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத் தாங்குதமிழ் நீடுவாழ்க"
– கவியோகி சுத்தானந்த பாரதியார்.

இப்பாடல் காட்டும் இலக்கியங்களின் பெயர்களை வரிசைப்படுத்துக.

3Z51RF

9th_Tamil_Pages 001-121.indd 12 22-12-2020 15:38:42

கவிதைப்பேழை

இயல் இரண்டு

காணி நிலம்



அடுக்ககங்களில் வாழும் பலர் இயற்கை தரும் இன்பத்தை எண்ணி ஏங்குகிறார்கள். 'வீடு' என்பது எப்படி இருக்க வேண்டும் என்று பாரதியார் கற்பனை செய்கிறார். இயற்கைச் சூழலை உருவாக்க வேண்டியதன் தேவையை உணர்த்துகிறார். இயற்கையைப் பலவகைகளிலும் போற்றிடும் பாரதியின் கனவு இல்லத்தைப் பற்றி அறிவோம்.

*காணி நிலம் வேண்டும் – பராசக்தி
காணி நிலம் வேண்டும் – அங்குத்
தூணில் அழகியதாய் – நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் – அந்தக்
காணி நிலத்திடையே – ஓர் மாளிகை
கட்டித் தரவேண்டும் – அங்குக்
கேணி அருகினிலே – தென்னைமரம்
கீற்றும் இளநீரும்
பத்துப் பன்னிரண்டு – தென்னைமரம்
பக்கத்திலே வேணும் * – நல்ல
முத்துச் சுடர் போலே – நிலாவொளி
முன்பு வரவேணும் – அங்குக்
கத்துங் குயிலோசை – சற்றே வந்து
காதில் படவேணும் – என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே – நன்றாய் இளம்
தென்றல் வரவேணும்.

– பாரதியார்

சொல்லும் பொருளும்

காணி – நில அளவைக் குறிக்கும் சொல்
மாடங்கள் – மாளிகையின் அடுக்குகள்
சித்தம் – உள்ளம்.

6th Std Tamil CBSE Pages 25-50.indd 29 20-03-2020 16:26:19

பாடலின் பொருள்

காணி அளவு நிலம் வேண்டும். அங்கு ஒரு மாளிகை கட்டித்தர வேண்டும். அழகான தூண்களையும் தூய நிறமுடைய மாடங்களையும் அது கொண்டிருக்கவேண்டும். நல்ல நீரையுடைய கிணறும் அங்கே இருக்க வேண்டும். இளநீரும் கீற்றும் தரும் தென்னைமரங்கள் வேண்டும்.

அங்கே முத்து போன்ற நிலவொளி வீச வேண்டும். காதுக்கு இனிய குயிலின் குரலோசை கேட்க வேண்டும். உள்ளம் மகிழுமாறு இளந்தென்றல் தவழ வேண்டும்.

நூல் வெளி

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர் பாரதியார். அவரது இயற்பெயர் சுப்பிரமணியன். இளமையிலேயே சிறப்பாகக் கவிபாடும் திறன் பெற்றவர். எட்டயபுர மன்னரால் பாரதி என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர். தம் கவிதையின் வழியாக விடுதலை உணர்வை ஊட்டியவர். மண் உரிமைக்காகவும் பெண் உரிமைக்காகவும் பாடியவர். நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் மிக்க பாடல்கள் பலவற்றைப் படைத்தவர். பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு போன்ற பல நூல்களை இயற்றி உள்ளார்.

பாரதியார் கவிதைகள் என்னும் தொகுப்பில் இப்பாடல் இடம் பெற்றுள்ளது.

கற்பவை கற்றபின்

1. பாடலை ஓசைநயத்துடன் படித்து மகிழ்க.
2. காணி என்பது நில அளவைக் குறிக்கும் சொல். இதுபோல நிலத்தை அளக்கப் பயன்படும் சொற்களைப் பட்டியலிடுக.
3. என் கனவு இல்லம் என்னும் தலைப்பில் பேசுக.

மதிப்பீடு

7BQ1KJ

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'கிணறு' என்பதைக் குறிக்கும் சொல்_____

அ) ஏரி ஆ) கேணி இ) குளம் ஈ) ஆறு

2. 'சித்தம்' என்பதன் பொருள் _____

அ) உள்ளம் ஆ) மணம் இ) குணம் ஈ) வனம்

6th Std Tamil CBSE Pages 25-50.indd 30 20-03-2020 16:26:19

3. மாடங்கள் என்பதன் பொருள் மாளிகையின் ------

அ) அடுக்குகள் ஆ) கூரை இ) சாளரம் ஈ) வாயில்

4. நன்மாடங்கள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ------

அ) நன்+மாடங்கள் ஆ) நற் +மாடங்கள்

இ) நன்மை + மாடங்கள் ஈ) நல் + மாடங்கள்

5. நிலத்தினிடையே என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ------

அ) நிலம் + இடையே ஆ) நிலத்தின் + இடையே

இ) நிலத்து + இடையே ஈ) நிலத் + திடையே

6. முத்து + சுடர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்------

அ) முத்துசுடர் ஆ) முச்சுடர் இ) முத்துடர் ஈ) முத்துச்சுடர்

7. நிலா + ஒளி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்-------

அ) நிலாஒளி ஆ) நிலஒளி இ) நிலாவொளி ஈ) நிலவுஒளி

பொருத்துக.

1. முத்துச்சுடர்போல – மாடங்கள்
2. தூய நிறத்தில் – தென்றல்
3. சித்தம் மகிழ்ந்திட – நிலாஒளி

நயம் அறிக.

1. காணி நிலம் பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.
2. காணி நிலம் பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

குறுவினா

1. காணி நிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன யாவை?
2. பாரதியார் இயற்கையின் மீது கொண்டுள்ள விருப்பம் குறித்து எழுதுக.

சிந்தனைவினா

பாரதியார் வீட்டின் அருகில் தென்னை மரங்கள் வேண்டும் என்கிறார்.
நீங்கள் எந்தெந்த மரங்களை வளர்ப்பீர்கள் என எழுதுக.

6th Std Tamil CBSE Pages 25-50.indd 31 20-03-2020 16:26:19

கவிதைப்பேழை

இயல் ஒன்று

தமிழ்மொழி வாழ்த்து

Z3RN9I

மொழி, கருத்தை அறிவிக்கும் கருவி மட்டும் அன்று; அது மக்களின் பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்புடையது; உணர்வுடன் கலந்தது. தமிழர்கள் தம் தாய்மொழியாகிய தமிழை உயிராகக் கருதிப் போற்றி வந்துள்ளனர். புலவர் பலர் தமிழைப் பல வகையாக வாழ்த்திப் பாடியுள்ளனர். அத்தகைய பாடல் ஒன்றை அறிவோம்.

*வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி!
வாழிய வாழியவே!

வான மளந்தது அனைத்தும் அளந்திடு
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே! *

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

– பாரதியார்

சொல்லும் பொருளும்

நிரந்தரம் – காலம் முழுமையும்
வைப்பு – நிலப்பகுதி
சூழ்கலி – சூழ்ந்துள்ள அறியாமை இருள்
வண்மொழி – வளமிக்கமொழி
இசை – புகழ்
தொல்லை – பழமை, துன்பம்

www.cbsetamil.com

8th Std Tamil _20-12-2019.indd 2 03-01-2020 19:34:26

பாடலின் பொருள்

தமிழ்மொழி எக்காலத்தும் நிலைபெற்று வாழ்க! ஆகாயத்தால் சூழப்பட்ட எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் வளமான தமிழ்மொழி வாழ்க! ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து, புகழ்கொண்ட தமிழ்மொழி வாழ்க! எங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழி உலகம் உள்ள வரையிலும் வாழ்க! எங்கும் சூழ்ந்துள்ள அறியாமை இருள் நீங்கட்டும்! அதனால் தமிழ்மொழி மேன்மையுற்று உலகம் முழுதும் சிறப்படைக! பொருந்தாத பழைய கருத்துகளால் உண்டாகும் துன்பங்கள் நீங்கித் தமிழ்நாடு ஒளிர்க! தமிழ்மொழி வாழ்க! தமிழ்மொழி வாழ்க! என்றென்றும் தமிழ்மொழி வாழ்க! வானம்வரை உள்ளடங்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து மேன்மேலும் வளரும் தமிழ்மொழி வாழ்க!

நூல் வெளி

கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர், விடுதலைப் போராட்ட வீரர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர் சி. சுப்பிரமணிய பாரதியார். இந்தியா, விஜயா முதலான இதழ்களை நடத்தி விடுதலைப் போருக்கு வித்திட்டவர். கவிதைகள் மட்டுமன்றி, சந்திரிகையின் கதை, தராசு உள்ளிட்ட உரைநடை நூல்களையும் வசனகவிதைகளையும் சீட்டுக்கவிகளையும் எழுதியவர். சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த் தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன் என்றெல்லாம் பாரதிதாசன் இவரைப் புகழ்ந்துள்ளார்.

இப்பாடல் பாரதியார் கவிதைகள் என்னும் தொகுப்பில் தமிழ்மொழி வாழ்த்து என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

கற்பவை கற்றபின்

1. 'தமிழ்மொழி வாழ்த்து' – பாடலை இசையுடன் பாடி மகிழ்க.
2. படித்துச் சுவைக்க.

செந்தமிழ் அந்தாதி

செந்தமிழே! செங்கரும்பே! செந்தமிழர் சீர்காக்கும்
நந்தா விளக்கனைய நாயகியே! – முந்தை
மொழிக்கெல்லாம் மூத்தவளே! மூவேந்தர் அன்பே!
எழில்மகவே! எந்தம் உயிர்.

உயிரும்நீ; மெய்யும்நீ; ஓங்கும் அறமாம்
பயிரும்நீ; இன்பம்நீ; அன்புத் தருவும்நீ;
வீரம்நீ; காதல்நீ; ஈசன் அடிக்குநல்
ஆரம்நீ; யாவும்நீ யே!

– து. அரங்கன்

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் _____.

   அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி

2. 'என்றென்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) என் + றென்றும் ஆ) என்று + என்றும்

   இ) என்றும் + என்றும் ஈ) என் + என்றும்

3. 'வானமளந்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) வான + மளந்தது ஆ) வான் + அளந்தது

   இ) வானம் + அளந்தது ஈ) வான் + மளந்தது

4. அறிந்தது + அனைத்தும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) அறிந்ததுஅனைத்தும் ஆ) அறிந்தனைத்தும்

   இ) அறிந்ததனைத்தும் ஈ) அறிந்துனைத்தும்

5. வானம் + அறிந்த என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) வானம்அறிந்து ஆ) வான்அறிந்த

   இ) வானமறிந்த ஈ) வான்மறிந்த

தமிழ்மொழி வாழ்த்து - இப்பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுதுக.

_____ _____ _____ _____ _____ _____ _____ _____

_____ _____ _____ _____ _____ _____ _____ _____

குறுவினா

1. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
2. தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?

சிறுவினா

தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

சிந்தனை வினா

பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன?

www.cbsetamil.com

8th Std Tamil _20-12-2019.indd 4 03-01-2020 19:34:27

கவிதைப் பேழை

இயற்கை

உ

காற்றே வா!

– பாரதியார்

7MX9I3

நுழையும்முன்

நம்மை எப்போதும் சூழ்ந்திருக்கும் இயற்கையை நாம் என்றேனும் உற்றுப் பார்க்கிறோமா? இருளில் நடந்தாலும் வானத்து விண்மீன்களையும் நம்முடனேயே நடந்துவரும் நிலவையும் கண்டு மகிழ்கிறோமா? காடு, மலை, அருவி, கதிரவன் இவற்றோடு இயைந்ததே இயற்கை வாழ்வு. 'நீரின்றி அமையாது உலகு' என்றாற் போல 'காற்றின்றி அமையாது உலக உயிரியக்கம்' என்பதையே வெவ்வேறு கோணங்களில் காலந்தோறும் கவிஞர்கள் பலரும் பாடிவருகிறார்கள்.

காற்றே, வா.
மகரந்தத் தூளைச் சுமந்துகொண்டு, மனத்தை
மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன் வா;
இலைகளின்மீதும், நீரலைகளின்மீதும் உராய்ந்து, மிகுந்த
ப்ராண – ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு.

காற்றே, வா.
எமது உயிர் – நெருப்பை நீடித்துநின்று நல்லொளி தருமாறு
நன்றாக வீசு.

சக்தி குறைந்துபோய், அதனை அவித்துவிடாதே.
பேய்போல வீசி அதனை மடித்துவிடாதே.
மெதுவாக, நல்ல லயத்துடன், நெடுங்காலம்
நின்று வீசிக் கொண்டிரு.
உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்.

உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்.
உன்னை வழிபடுகின்றோம்.

பாரதியார் கவிதைகள்

சொல்லும் பொருளும்:

மயலுறுத்து – மயங்கச்செய்
ப்ராண – ரஸம் – உயிர்வளி
லயத்துடன் – சீராக

10th_Tamil_Unit 2.indd 31 24-01-2020 10.05.04 AM

நூல் வெளி

மகாகவி சுப்பிரமணிய பாரதியார், 'நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா', 'சிந்துக்குத் தந்தை' என்றெல்லாம் பாராட்டப் பெற்றவர்; எட்டயபுர ஏந்தலாக அறியப்பட்டவர்; கவிஞர்; கட்டுரையாளர்; கேலிச்சித்திரம்–கருத்துப்படம் போன்றவற்றை உருவாக்கியவர்; சிறுகதை ஆசிரியர்; இதழாளர்; சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும், பெண்ணடிமைத்தனத்தையும் தன் பாடல்களில் எதிர்த்து எழுதியவர்; குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய காவியங்களையும் கண்ணன் பாட்டையும் பாப்பா பாட்டு, புதிய ஆத்திசூடி என, குழந்தைகளுக்கான நீதிகளையும் பாடல்களில் தந்தவர்; இந்தியா, சுதேசமித்திரன் முதலிய இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றியவர். பாட்டுக்கொரு புலவன் எனப் பாராட்டப்பட்டவர் பாரதியார்; இவருடைய கவிதைத் தொகுப்பிலுள்ள காற்று என்னும் தலைப்பிலான வசனகவிதையின் ஒரு பகுதியே பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.

தெரிந்து தெளிவோம்

உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசனகவிதை எனப்படுகிறது. ஆங்கிலத்தில் Prose Poetry (Free verse) என்றழைக்கப்படும் இவ்வடிவம் தமிழில் பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது. உணர்ச்சி பொங்கக் கவிதை படைக்கும் இடங்களில் யாப்பு, தடையாக இருப்பதை உணர்ந்த பாரதியார் இவ்வடிவத்தை இலகுவாகக் கையாண்டுள்ளார். இவ்வசன கவிதையே புதுக்கவிதை என்ற வடிவம் உருவாகக் காரணமாயிற்று..

கற்பவை கற்றபின்...

1. *இவ்வசன கவிதையில் இடம்பெற்றுள்ள வேண்டுகோள் சொற்களும் கட்டளைச் சொற்களும் (வாசனையுடன் வா, அவித்து விடாதே.....) கவிதையின் உட்பொருளை வெளிப்படுத்தத் துணைநிற்பது குறித்துப் பேசுக.*

2. *"திக்குகள் எட்டும் சிதறி – தக்கத்*
தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட
பக்க மலைகள் உடைந்து வெள்ளம்
பாயுது பாயுது பாயுது – தாம்தரிகிட
தக்கத் ததிங்கிட தித்தோம் – அண்டம்
சாயுது சாயுது சாயுது – பேய்கொண்டு
தக்கை யடிக்குது காற்று – தக்கத்
தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட" –பாரதியார்

இது போன்ற இயற்கையொலிகளை உணர்வுடன் வெளிப்படுத்தும் கவிதைகளைத் திரட்டி வந்து வகுப்பறையில் படித்துக்காட்டுக.

10th_Tamil_Unit 2.indd 32 24-01-2020 10.05.04 AM

விரிவானம்

மொழி க

தம்பி நெல்லையப்பருக்கு

– பாரதியார்

5XTUCS



உறவுக்கு, அறிவுறுத்தலுக்கு, வேண்டுதலுக்கு, வணிகத்திற்கு என்று கடிதங்கள் எழுதுகையில் அவற்றின் மொழியாட்சி மாறுபடுகிறது. கடித வடிவில் சொல்ல வேண்டியவற்றை வெளியிடும் முறை உண்டு. கடிதங்களை இலக்கியமாக்கும் எழுத்தாளர்கள், மொழிக்கு அதன் வழியாகத் தனி அழகை உருவாக்கித் தருகிறார்கள். தனிப்பட எழுதும் கடிதங்களிலும் ஈர்க்கும் மொழியில் அழுத்தமான எண்ணங்களைத் தந்து அவற்றைப் பொதுவெளிக்கு உரியதாக்குபவர்களும் இருக்கிறார்கள். காலத்தின் குரல்களான அக்கடிதங்களில் மொழி, வீறுபெறுகிறது.

புதுச்சேரி,

19, ஜூலை 1915.

எனதருமைத் தம்பியாகிய ஸ்ரீ நெல்லையப்பரைப் பராசக்தி நன்கு காத்திடுக.

தம்பி – மாதத்துக்கு மாதம், நாளுக்கு நாள், நினதறிவு மலர்ச்சி பெற்று வருவதைக் காண்கிறேன். நினது உள்ளக்கமலத்திலே பேரறிவாகிய உள் – ஞாயிற்றின் கதிர்கள் விரைவிலே தாக்கி நினக்கு நல்லின்பம் உண்டாகுமென்றே கருதுகிறேன்.

**

நெஞ்சம் இளகி விரிவெய்த விரிவெய்த அறிவிலே சுடர் ஏறுகிறது. நம்மிலும் மெலியாருக்கு நாம் இரங்கி அவர்களை நமக்கு நிகராகச் செய்துவிட வேண்டுமென்று பாடுபடுதலே நாம் வலிமை பெறுவதற்கு வழியாகும். வேறு வழியில்லை.

**

ஹா! உனக்கு ஹிந்தி, மராட்டி முதலிய வடநாட்டு பாஷைகள் தெரிந்திருந்து, அந்த பாஷைப் பத்திரிகைகள் என்ன அற்புதமான புதுமை பெற்றுள்ளன என்பதை நேரிடத் தெரிந்து கொள்ள முடியுமானால் – தமிழ்நாட்டிற்கு எத்தனை நன்மையுண்டாகும்! தமிழ், தமிழ், தமிழ் – என்று எப்போதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்க! ஆனால் புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம் – தமிழில் ஏறிக்கொண்டே போக வேண்டும்.

**

தம்பி, – நான் ஏது செய்வேனடா!

தம்பி – உள்ளமே உலகம்!

ஏறு! ஏறு! ஏறு! மேலே! மேலே! மேலே!

நிற்கும் நிலையிலிருந்து கீழே விழாதபடி கயிறுகள் கட்டி வைத்துக்கொண்டு பிழைக்க முயற்சி பண்ணும் பழங்காலத்து மூடர்களைக் கண்டு குடல் குலுங்கச் சிரி.

உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்து போ.

பற! பற! – மேலே! மேலே! மேலே!

**

தம்பி – தமிழ்நாடு வாழ்க என்றெழுது.

தமிழ்நாட்டில் நோய்கள் தீர்க என்றெழுது.

தமிழ்நாட்டில் வீதி தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் மலிக என்றெழுது.

அந்தத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே நவீன கலைகளெல்லாம் பயிற்சி பெற்று வளர்க என்றெழுது.

ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள் என்றெழுது.

அவை ஒன்றிலொன்று தாழ்வில்லை என்றெழுது.

பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது.

பெண்ணை அடைத்தவன் கண்ணை அடைத்தான் என்றெழுது.

தொழில்கள், தொழில்கள், தொழில்கள் என்று கூவு.

வியாபாரம் வளர்க, யந்திரங்கள் பெருகுக.

முயற்சிகள் ஓங்குக. ஸங்கீதம், சிற்பம், யந்திர நூல், பூமிநூல், வான நூல், இயற்கை நூலின் ஆயிரம் கிளைகள் இவை தமிழ் நாட்டிலே மலிந்திடுக என்று முழங்கு.

சக்தி! சக்தி! சக்தி! என்று பாடு.

தம்பி – நீ வாழ்க!

உனதன்புள்ள,

பாரதி

XII Std Tamil Chap_01.indd 11 17-12-2020 16:36:06



தெரிந்து தெளிவோம்

எட்டயபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றிக் கவிகேசரி சாமி தீட்சிதர் என்பவர் வம்சமணி தீபிகை என்னும் நூலை 1879இல் வெளியிட்டார். அப்பதிப்பைத் திருத்தி வெளியிட ஆசைகொண்ட பாரதி, ஆட்சிசெய்த வெங்கடேசுர எட்டப்பருக்கு 6.8.1919இல் கடிதம் எழுதினார். பலவிதமான குற்றங்களையுடைய அந்நூலை நல்ல இனிய தமிழ்நடையில் அமைத்துத் தருவேன் என்று குறிப்பிட்டார். ஆனால் அவர் ஆசை நிறைவேறவில்லை. வம்சமணிதீபிகை நூலின் மூலவடிவம் மறுபதிப்பாக இளசை மணி என்பவரால் 2008இல் அப்படியே வெளியிடப்பட்டது.

எட்டயபுர ஜமீனுக்குப் பாரதி எழுதிய கவிதைக் கடிதம்

ஐயநின் அருளே அருங்கதி யென்ன
உய்ய இவண்வந் துற்று என் தந்தையார்
என்னையும் புறமொழிகற்க வென்றி யம்புவர்
என்னை யான் செய்குவ தின்றமிழ் கற்பினோ
பின்னை ஒருவரும் பேணார் ஆதலின்
கன்ன யான் அம்மொழி கற்கத் துணிந்தனன்; எனினும்
கைப்பொருள் அற்றான் கற்ப தெவ்வகை?

தெரியுமா?

பரலி சு. நெல்லையப்பர் விடுதலைப் போராட்ட வீரர், கவிஞர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், இதழாளர், பதிப்பாளர் எனப் பன்முகம் கொண்டவர். பாரதியின் கண்ணன் பாட்டு, நாட்டுப்பாட்டு, பாப்பாப்பாட்டு, முரசுப்பாட்டு ஆகியவற்றைப் பதிப்பித்தவர். பாரதி நடத்திய சூரியோதயம், கர்மயோகி ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் லோகோபகாரி, தேசபக்தன் ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் பிறகு ஆசிரியராகவும் பணியாற்றியவர். இவர் நெல்லைத்தென்றல், பாரதி வாழ்த்து, உய்யும் வழி ஆகிய கவிதை நூல்களையும் வ.உ. சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றையும் எழுதியுள்ளார்.

நூல்வெளி

மகாகவி பாரதி நெல்லையப்பருக்கு எழுதிய இக்கடிதம் ரா.அ. பத்மநாபன் பதிப்பித்த 'பாரதி கடிதங்கள்' என்னும் நூலில் இடம்பெற்றிருக்கிறது. பாரதி, பதினைந்து வயதில் கல்விகற்க உதவிவேண்டி எட்டயபுரம் அரசருக்கு எழுதிய கவிதைக் கடிதம்முதல் அவர்தம் மறைவிற்கு முன்னர் குத்திகேசவருக்கு எழுதிய கடிதம்வரை அனைத்தும் நம்மிடம் பேசுவதுபோல இருப்பதே அவருடைய நடையழகின் சிறப்பு. பாரதியாரைவிட ஏழாண்டுகள் இளையவரான பரலி சு. நெல்லையப்பரைப் பாரதி தன்னுடைய அருமைத் தம்பியாகவே கருதி அன்புகாட்டி வந்தார். பாரதியின் கடிதங்கள் மேலும் அவரை நன்றாகப் புரிந்துகொள்ளத் துணைபுரிகின்றன.

கற்பவை கற்றபின்...

1. பாரதியின் வாழ்வினைக் காலக்கோடாக உருவாக்குக.
2. காலத்தை வென்ற மகாகவியான பாரதிக்குக் கற்பனைக்கடிதம் ஒன்றினை எழுதுக.

இயல் ஒன்று

இன்பத்தமிழ்



நமது தாய்மொழியாகிய தமிழைத் தமிழ் இலக்கியங்கள் போற்றுகின்றன. தமிழ் வணக்கம் தற்கால இலக்கிய மரபாக ஆகிவிட்டது. பாரதிதாசன் தமிழைப் பலவாறாகப் போற்றுகிறார். கண்ணே! மணியே! என்று குழந்தையைக் கொஞ்சுவதும் உண்டு. அதுபோல அவர் நம் செந்தமிழுக்குப் பெயர்கள் பல சூட்டி மகிழ்வதைக் காண்போம்.

தமிழுக்கும் அமுதென்றுபேர்! – அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்! *

தமிழுக்கு நிலவென்று பேர்! – இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்! *

தமிழுக்கு மணமென்று பேர்! – இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்! *

தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! – இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!

தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! – இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!

தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! – இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!

– பாரதிதாசன்

சொல்லும் பொருளும்

நிருமித்த - உருவாக்கிய
சமூகம் - மக்கள் குழு
விளைவு - வளர்ச்சி
அசதி - சோர்வு

6ZKN6M

6th Std Tamil CBSE Pages 1-24.indd 2 20-03-2020 16:18:21

பாடலின் பொருள்

தமிழுக்கு அமுது என்று பெயர். இன்பம் தரும் அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு இணையானது.

தமிழுக்கு நிலவு என்று பெயர். இன்பத்தமிழ் எங்கள் சமூக வளர்ச்சிக்கு அடிப்படையான நீர் போன்றது.

தமிழுக்கு மணம் என்று பெயர். அது எங்கள் வாழ்விற்காகவே உருவாக்கப்பட்ட ஊர் ஆகும்.

தமிழ் எங்கள் இளமைக்குக் காரணமான பால் போன்றது. நல்ல புகழ்மிகுந்த புலவர்களுக்குக் கூர்மையான வேல் போன்ற கருவியாகும்.

தமிழ் எங்கள் உயர்விற்கு எல்லையாகிய வானம் போன்றது. இன்பத்தமிழ் எங்கள் சோர்வை நீக்கி ஒளிரச் செய்யும் தேன் போன்றது.

தமிழ் எங்கள் அறிவுக்குத் துணை கொடுக்கும் தோள் போன்றது. தமிழ் எங்கள் கவிதைக்கு வைரம் போன்ற உறுதி மிக்க வாள் ஆகும்.

நூல் வெளி

பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம். பாரதியாரின் கவிதைகள் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார். தம் கவிதைகளில் பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு முதலான புரட்சிகரமான கருத்துகளைப் பாடுபொருளாகப் பாடியுள்ளார். எனவே, இவர் புரட்சிக்கவி என்று போற்றப்படுகிறார். இவர் பாவேந்தர் என்றும் சிறப்பிக்கப்படுகிறார். இப்பாடல், 'பாரதிதாசன் கவிதைகள்' என்ற நூலில் 'தமிழ்' என்னும் தலைப்பின்கீழ் இடம்பெற்றுள்ளது.

கற்பவை கற்றபின்

1. இன்பத்தமிழ் என்ற பாடலை இனிய ஓசையுடன் பாடுக.
2. தமிழை அமுது, நிலவு, மணம் என்று பெயரிட்டு அழைப்பது பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.
3. தமிழுக்கு நீங்கள் சூட்ட விரும்பும் பெயர்களைப் பட்டியலிடுக.
4. தமிழ்க் கவிதைகள், பாடல்களைப் படித்து மகிழ்க.

(எ.கா.)

தமிழே உயிரே வணக்கம்
தாய்பிள்ளை உறவம்மா உனக்கும் எனக்கும்
அமிழ்தே நீ இல்லை என்றால்
அத்தனையும் வாழ்வில் கசக்கும் புளிக்கும்
தமிழே உன்னை நினைக்கும்
தமிழன் என் நெஞ்சம் இனிக்கும் இனிக்கும்

– காசி ஆனந்தன்

6th Std Tamil CBSE Pages 1-24.indd 3 20-03-2020 16:18:21

மதிப்பீடு

78KEZS

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஏற்றத் தாழ்வற்ற ------ அமைய வேண்டும்

அ) சமூகம் ஆ) நாடு இ) வீடு ஈ) தெரு

2. நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவர்க்கு ------ ஆக இருக்கும்

அ) மகிழ்ச்சி ஆ) கோபம் இ) வருத்தம் ஈ) அசதி

3. நிலவு + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ---------

அ) நிலயென்று ஆ) நிலவென்று இ) நிலவன்று ஈ) நிலவுஎன்று

4. தமிழ் + எங்கள் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ---------

அ) தமிழங்கள் ஆ) தமிழெங்கள் இ) தமிழுங்கள் ஈ) தமிழ்எங்கள்

5. 'அமுதென்று' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ---------

அ) அமுது + தென்று ஆ) அமுது + என்று இ) அமுது + ஒன்று ஈ) அமு + தென்று

6. 'செம்பயிர்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ---------

அ) செம்மை + பயிர் ஆ) செம் + பயிர் இ) செமை + பயிர் ஈ) செம்பு + பயிர்

இன்பத்தமிழ் – பாடலின் கருத்துக்கு ஏற்றபடி பொருத்துக.

1. விளைவுக்கு – பால்
2. அறிவுக்கு – வேல்
3. இளமைக்கு – நீர்
4. புலவர்க்கு – தோள்

ஒத்த ஓசையில் முடியும் (இயைபு) சொற்களை எடுத்து எழுதுக.

(எ.கா.) பேர் – நேர்

குறுவினா

1. பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?
2. நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?

சிறுவினா

1. இன்பத் தமிழ் – பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டனை எழுதுக.
2. சமூக வளர்ச்சிக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?

சிந்தனை வினா

வேல் என்பது ஓர் ஆயுதம். தமிழ் ஏன் வேலுடன் ஒப்பிடப்படுகிறது?

6th Std Tamil CBSE Pages 1-24.indd 4 20-03-2020 16:18:21

கவிதைப்பேழை

இயல் ஐந்து

இன்பத்தமிழ்க் கல்வி

DY5PEV

பாரதிதாசன் கவிதை எழுதுவதற்காகத் தாளையும் எழுதுகோலையும் எடுத்தார். எதைப்பற்றி எழுதுவது எனச் சிந்தித்தார். வானம், ஓடை, காடு, தென்றல், மயில் போன்ற இயற்கைப் பொருள்கள் எல்லாம் அவர் கருத்தைக் கவர்ந்தன. எனினும் புரட்சிக்கவிஞராகிய பாவேந்தர் தமிழரின் இன்னல் தீர்க்கும் வழி ஒன்றைக் கவிதையாகப் படைத்தார். அதை நாமும் படித்துச் சுவைப்போம்.

ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட
என்னை எழுதென்று சொன்னது வான்
ஓடையும் தாமரைப் பூக்களும் தங்களின்
ஓவியந் தீட்டுக என்றுரைக்கும்
காடும் கழனியும் கார்முகிலும் வந்து
கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும்
ஆடும் மயில் நிகர் பெண்களெல்லாம் உயிர்
அன்பினைச் சித்திரம் செய்க என்றார்

சோலைக் குளிர்தரு தென்றல் வரும்பசுந்
தோகை மயில்வரும் அன்னம் வரும்
மாலைப் பொழுதினில் மேற்றிசையில் விழும்
மாணிக்கப் பரிதி காட்சி தரும்
வேலைச் சுமந்திடும் வீரரின் தோள் உயர்
வெற்பென்று சொல்லி வரைக என்னும்
கோலங்கள் யாவும் மலை மலையாய் வந்து
கூவின என்னை – இவற்றிடையே

இன்னலிலே தமிழ் நாட்டினிலேயுள்ள
என்தமிழ் மக்கள் துயின்றிருந்தார்
அன்னதோர் காட்சி இரக்கமுண்டாக்கியென்
ஆவியில் வந்து கலந்ததுவே
இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக்கும் நிலை எய்தி விட்டால்
துன்பங்கள் நீங்கும் சுகம் வரும் நெஞ்சினில்
தூய்மை உண்டாகிடும் வீரம் வரும் !

– பாரதிதாசன்

சொல்லும் பொருளும்

எத்தனிக்கும் – முயலும்
வெற்பு – மலை
கழனி – வயல்
நிகர் – சமம்
பரிதி – கதிரவன்
அன்னதோர் – அப்படிஒரு
கார்முகில் – மழைமேகம்
துயின்றிருந்தார் – உறங்கியிருந்தார்

பாடலின் பொருள்

கவிதை எழுத ஏடு ஒன்று எடுத்தேன். என்னைக் கவிதையாக எழுதுக என்று வானம் கூறியது. நீரோடையும் தாமரை மலர்களும் "எங்களைக் கவி ஓவியமாகத் தீட்டுக" என்றன. காடும் வயல்களும் கருநிற மேகங்களும் என் கண்களைக் கவர்ந்து, கவிதையில் இடம்பெற முயன்றன. ஆடும் மயில் போன்ற பெண்கள் "அன்பினைக் கவிதையாக எழுதுக" என்றனர்.

சோலையின் குளிர்ந்த தென்றல் வந்தது. பசுமையான தோகையையுடைய மயில் வந்தது. அன்னம் வந்தது. மாணிக்கம் போல் ஒளி வீசி மாலையில் மேற்குத் திசையில் மறைகின்ற கதிரவனும் வந்தான். வேல் ஏந்திய வீரர்கள், "மலை போன்ற எங்களது தோள்களின் அழகினை எழுதுங்கள்" என்றனர். இவ்வாறு அழகிய காட்சிகள் எல்லாம் பெருந்திரளாக வந்து தங்களைக் கவிதையாக எழுதுமாறு கூறின.

ஆனால், துன்பத்தில் கிடக்கும் என் தமிழ்நாட்டு மக்கள் அறியாமையில் தூங்கிக் கிடக்கிறார்கள். அந்தக் காட்சி என் மனத்தில் இரக்கத்தை உண்டாக்கி, என் உயிரில் வந்து கலந்து விட்டது. இத்துன்பம் நீங்க அனைவரும் இன்பத்தமிழ்க் கல்வியைக் கற்றவர்கள் என்னும் நிலை ஏற்பட வேண்டும். அந்நிலை ஏற்பட்டால் வாழ்வில் துன்பங்கள் நீங்கிடும். நெஞ்சில் தூய்மை உண்டாகிடும். வீரம் வரும்.

நூல் வெளி

கவிஞர், இதழாளர், தமிழாசிரியர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர் பாரதிதாசன். இவர் கவிதை, கதை, கட்டுரை, நாடகம் ஆகியவற்றைப் படைப்பதில் வல்லவர். பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இசையமுது, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, கண்ணகி புரட்சிக் காப்பியம் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய பிசிராந்தையார் என்னும் நாடகநூலுக்குச் சாகித்திய அகாடமி விருது அளிக்கப்பட்டது.

பாரதிதாசன் கவிதைகள் என்னும் தொகுப்பிலிருந்து தமிழ்ப்பேறு என்னும் தலைப்பில் உள்ள பாடல் இங்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

1. இயற்கைக்காட்சி குறித்து நான்கு வரிகளில் கவிதை எழுதுக.
2. 'தாய்மொழி வழிக் கல்வியே சிறந்தது' என்பது குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.

www.cbsetamil.com
7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 101 20-03-2020 17:48:01

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பெண்களுக்கு நிகராகப் பாரதிதாசன் கூறுவது_____.

   அ) மயில் ஆ) குயில் இ) கிளி ஈ) அன்னம்

2. பின்வருவனவற்றுள் ' மலை'யைக் குறிக்கும் சொல்

   அ) வெற்பு ஆ) காடு இ) கழனி ஈ) புவி

3. 'ஏடெடுத்தேன்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) ஏடெடு + தேன் ஆ) ஏட்டு + எடுத்தேன்

   இ) ஏடு + எடுத்தேன் ஈ) ஏ + டெடுத்தேன்

4. 'துயின்றிருந்தார்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) துயின்று + இருந்தார் ஆ) துயில் + இருந்தார்

   இ) துயின்றி + இருந்தார் ஈ) துயின் + இருந்தார்

5. என்று + உரைக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) என்றுஉரைக்கும் ஆ) என்றிரைக்கும்

   இ) என்றரைக்கும் ஈ) என்றுரைக்கும்

பொருத்துக.

1. கழனி – கதிரவன்
2. நிகர் – மேகம்
3. பரிதி – சமம்
4. முகில் – வயல்

குறுவினா

1. பாரதிதாசனின் மனத்தைக் கவர முயன்ற இயற்கைப் பொருள்கள் யாவை?
2. தமிழ் மொழிக்கல்வி பயில்வதால் உண்டாகும் நன்மைகள் எவையெனப் பாரதிதாசன் குறிப்பிடுகிறார்?

சிறுவினா

'இன்பத்தமிழ்க் கல்வி' – பாடலின் மையக்கருத்தை உங்கள் சொந்த நடையில் எழுதுக.

சிந்தனை வினா

தமிழ் மொழிக்கல்வி பயில்வதால் ஏற்படும் நன்மைகளாக நீங்கள் கருதுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

www.cbsetamil.com

7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 102 20-03-2020 17:48:01

கவிதைப்பேழை

இயல் 7

புரட்சிக்கவி

J8A9KL

மக்களாட்சிக்கு முன்புவரை சட்டம், நிருவாகம், நீதி ஆகியவை அரசனிடமே குவிந்து இருந்தன. இந்நிலை சிறிது சிறிதாக மக்கள் புரட்சியால் மாற்றப்பட்டுத் தற்பொழுது மக்களாட்சிமுறை பல்வேறு நாடுகளில் மலர்ந்துள்ளது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியன மக்களாட்சியின் அடிப்படைக்கூறுகள். மக்களாட்சிச் சிந்தனைகளைப் பரப்பியதில் இலக்கியத்திற்கும் பெரும்பங்கு உண்டு. அரசு என்பது மக்களுக்கானதே என்று காலந்தோறும் இலக்கிய வடிவங்களின் மூலம் கவிஞர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

முன்கதைச் சுருக்கம்

அரசன் ஒருவன் தன் மகள் அமுதவல்லிக்குக் கவிதை எழுதும் கலையினைப் பயிற்றுவிக்க விரும்புகிறான். அதற்காக அமைச்சரிடம் கருத்துரை கேட்கிறான். அமைச்சர் உதாரன் பெயரை முன்மொழிந்து, 'அவன் அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்' என்று கூறுகிறார். தன் மகள் எளிய கவிஞரோடு காதல் வயப்படுவாளோ என எண்ணி அரசன் தயங்குகிறான். அதற்கு அமைச்சர் ஓர் உத்தியைக் கூறுகிறார்.

அதன்படி உதாரன் பார்வையற்றவன் என்று அமுதவல்லியிடம் கூறுகின்றனர். இதுபோலவே உதாரனிடம் அமுதவல்லி தொழுநோயாளி என்று தெரிவிக்கின்றனர். இருவருக்கும் இடையில் திரையிடப்படுகிறது. உதாரன், அமுதவல்லிக்குக் கவிதை எழுதும் கலையைக் கற்றுத் தருகிறான்.

ஓர் இரவுப்பொழுதில் அழகிய நிலவினைக் கண்டு உதாரன் தன்னை மறந்து கவிதை ஒன்றைப் பாடுகிறான். பார்வையற்ற ஒருவன் நிலவின் அழகைக் கண்டு எவ்வாறு கவிபாட முடியும் என்று ஐயம் கொண்ட அமுதவல்லி திரையினை விலக்கினாள். அழகிய ஆண் மகன் இருக்கக் கண்டு அவனை விரும்பத் தொடங்குகிறாள். உதாரனும் அழகான அமுதவல்லியைக் கண்டு விருப்பம் கொள்கிறான். இருவருக்கும் இடையே அன்பு மலர்கிறது.



இவர்களின் விருப்பம் அரசனுக்குத் தெரியவருகிறது. இதனை விரும்பாத அரசன், உதாரனைக் குற்றவாளியாக்கி மரண தண்டனை விதிக்கிறான். அமுதவல்லி அதை எதிர்க்கிறாள். அதனால், சினம்கொண்ட மன்னன் இருவருக்கும் சேர்த்தே மரண தண்டனை விதிக்கிறான்.

இதனைத் தொடர்ந்து வரும் இக்காவியத்தின் இறுதிப்பகுதி இங்குப் பாடமாக இடம்பெற்றுள்ளது.

பா வகை: எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

உயிர் எமக்கு வெல்லமல்ல

'காதலனைக் கொலைக்களத்துக் கனுப்பக் கண்டும்
கன்னிஎனை மன்னிக்கக் கேட்டுக்கொண்ட
நீதிநன்று மந்திரியே! அவன் இறந்தால்
நிலைத்திடும்என் உயிர்எனவும் நினைத்து விட்டாய்!
சாதல்எனில் இருவருமே சாதல் வேண்டும்,
தவிர்வதெனில் இருவருமே தவிர்தல் வேண்டும்;
ஓதுகஇவ் விரண்டில் ஒன்று மன்னவன்வாய்!
உயிர் எமக்கு வெல்லமல்ல!' என்றாள் மங்கை.

கடைசிப் பேச்சு

கொலைக்களத்தில் கொலைஞர்களும் அதிகா ரங்கள்
கொண்டவரும் காதலரும் ஓர்பால் நின்றார்;
அலைகடல்போல் நாட்டார்கள் வீடு பூட்டி
அனைவருமே வந்திருந்தார். உதார னுக்கும்
சிலைக்குநிகர் மங்கைக்கும் 'கடைசி யாகச்
சிலபேச்சுப் பேசிடுக' என்றுசொல்லித்
தலைப்பாகை அதிகாரி விடைதந் திட்டான்;
தமிழ்க்கவிஞன் சனங்களிடை முழக்கம் செய்வான்;

பேரன்பு கொண்டவரே, பெரியோ ரே,என்
பெற்றதாய் மாரே, நல் இளஞ்சிங் கங்காள்!
நீரோடை நிலங்கிழிக்க, நெடும ரங்கள்
நிறைந்துபெருங் காடாகப், பெருவி லங்கு
நேரோடி வாழ்ந்திருக்கப் பருக்கைக் கல்லின்
நெடுங்குன்றில் பிலஞ்சேரப், பாம்புக் கூட்டம்
போராடும் பாழ்நிலத்தை அந்த நாளில்
புதுக்கியவர் யார்? அழகு நகர்உண் டாக்கி!
சிற்றூரும் வரப்பெருத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்ப டுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறைஉழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
*போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?**

ஒருமனிதன் தேவைக்கே இந்தத் தேசம்

அரசனுக்கும் எனக்கும் ஒரு வழக்குண் டாக
அவ்வழக்கைப் பொதுமக்கள் தீர்ப்ப தேதான்
சரியென்றேன்; ஒப்பவில்லை! இவளும் நானும்
சாவதென்றே தீர்ப்பளித்தான்; சாக வந்தோம்!
ஒருமனிதன் தேவைக்கே இந்தத் தேசம்
உண்டென்றால், அத்தேசம் ஒழிதல் நன்றாம்!
இருவர் இதோ சாகின்றோம்! நாளை நீங்கள்
இருப்பதுமெய் என்றெண்ணி இருக்கின் றீர்கள்!

மாசில்லாத உயர் தமிழ்

'தமிழ்அறிந்த தால் வேந்தன் எனை அழைத்தான்
தமிழ்க்கவிஎன் றெனை அவளும் காத லித்தாள்!
அமுதென்று சொல்லுமிந்தத் தமிழ், என் ஆவி
அழிவதற்குக் காரணமாயிருந்த தென்று
சமுதாயம் நினைத்திடுமோ? ஐயகோ! என்
தாய் மொழிக்குப் பழிவந்தால் சகிப்ப துண்டோ?
உமைஒன்று வேண்டுகின்றேன் மாசில் லாத
உயர்தமிழை உயிர்என்று போற்று மின்கள்!

மக்களுக்கே ஆளும் உரிமை

அரசனுக்குப் பின்னிந்தத் தூய நாட்டை
ஆளுதற்குப் பிறந்தஒரு பெண்ணைக் கொல்ல
அரசனுக்கோ அதிகாரம் உங்க ளுக்கோ?
அவ்வரசன் சட்டத்தை அவம தித்தான்
சிரம் அறுத்தல் வேந்தனுக்குப்பொழுது போக்கும்
சிறியகதை! நமக்கெல்லாம் உயிரின் வாதை!
அரசன்மகள் தன்நாளில் குடிகட் கெல்லாம்
ஆளுரிமை பொதுவாக்க நினைத்தி ருந்தாள்!

ஆழ்க எந்தன் குருதி

வாழியஎன் நன்னாடு பொன்னா டாக!
வாழியநற் பெருமக்கள் உரிமை வாய்ந்தே
வீழியபோய் மண்ணிடையே விண்வீழ் கொள்ளி
வீழ்வதுபோல் தனித்தாளும் கொடிய ஆட்சி!
ஏழையினேன் கடைசிமுறை வணக்கம் செய்தேன்!
என் பெரியீர், அன்னையீர், ஏகு கின்றேன்!
ஆழ்க என்றன் குருதியெலாம் அன்பு நாட்டில்
ஆழ்க' என்றான்! தலை குனிந்தான் கத்தி யின்கீழ்!

கொலையாளி உயிர் தப்பல்

படிகத்தைப் பாலாபி ஷேகம் செய்து
பார்ப்பதுபோல் அமுதவல்லி கண்ணீர் வெள்ளம்
அடிசோர்தல் கண்டார்கள் அங்கி ருந்தோர்
ஆவென்று கதறினாள்! 'அன்பு செய்தோர்
படிமீது வாழாரோ?' என்று சொல்லிப்
பதைபதைத்தாள்! இதுகேட்ட தேச மக்கள்
கொடிதென்றார்! கொடுவாளைப் பறித்தார்; அந்தக்
கொலையாளர் உயிர்தப்ப ஓட லானார்!

செல்வமும் உரிமையும் மக்களுக்கே

கவிஞனுக்கும் காதலிக்கும் மீட்சி தந்தார்!
காவலன்பால் தூதொன்று போகச் சொன்னார்;
'புவியாட்சி தனிஉனக்குத் தாரோம் என்று
போய்உரைப்பாய்' என்றார்கள்! போகா முன்பே
செவியினிலே ஏறிற்றுப் போனான் வேந்தன்!
செல்வமெலாம் உரிமைஎலாம் நாட்டா ருக்கே
நவைஇன்றி எய்துதற்குச் சட்டம் செய்தார்!
நலிவில்லை! நலம்எல்லாம் வாய்ந்த தங்கே!

சொல்லும் பொருளும்

ஓதுக – சொல்க; முழக்கம் – ஒங்கி உரைத்தல்; கனிகள் – உலோகங்கள்; மணி – மாணிக்கம்; படிகம் – பளபளப்பான கல்; படி – உலகம்; மீட்சி – விடுதலை; நவை – குற்றம்.

இலக்கணக் குறிப்பு

ஓதுக, பேசிடுக, ஆழ்க, வாழிய – வியங்கோள் வினைமுற்றுகள்; அலைகடல் – வினைத்தொகை; தமிழ்க்கவிஞர் – இருபெயரொட்டுப் பண்புத்தொகை; பேரன்பு, நெடுங்குன்று – பண்புத்தொகைகள்.

ஒழிதல் – தொழிற்பெயர்; உழுதுழுது – அடுக்குத்தொடர்.

பகுபத உறுப்பிலக்கணம்

நின்றார் – நில்(ன்) + ற் + ஆர்

நில் – பகுதி ('ல்' 'ன்' ஆனது விகாரம்), ற் – இறந்தகால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

செய்வான் – செய்+வ்+ஆன்

செய் – பகுதி, வ் –எதிர்கால இடைநிலை, ஆன் –ஆண்பால் வினைமுற்று விகுதி.

அழைத்தான் – அழை + த் + த் + ஆன்

அழை – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

வேண்டுகின்றேன் – வேண்டு + கின்று + ஏன்

வேண்டு – பகுதி, கின்று –நிகழ்கால இடைநிலை, ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

ஆழ்க – ஆழ் + க

ஆழ் – பகுதி, க – வியங்கோள் வினைமுற்று விகுதி.

பறித்தார் – பறி + த் + த் + ஆர்

பறி – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

புணர்ச்சி விதி

நீரோடை – நீர் + ஓடை

உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே – நீரோடை

சிற்றூர் – சிறுமை+ ஊர், ஈறு போதல் சிறு + ஊர்

தன்னொற்றிரட்டல் – சிற்று + ஊர்

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் – சிற்ற் + ஊர்

உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே – சிற்றூர்

கற்பிளந்து – கல் + பிளந்து

ல ள வேற்றுமையில் வலிவரின் றடவும் – கற்பிளந்து

XI Std Tamil Chap_179-202.indd 185 1/10/2020 4:38:41 PM

மணிக்குலம் – மணி + குலம்

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் – மணிக்குலம்

அமுதென்று – அமுது + என்று

உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் – அமுத் + என்று

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – அமுதென்று

புவியாட்சி – புவி + ஆட்சி

இ ஈ ஐ வழி யவ்வும் – புவி + ய் + ஆட்சி

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – புவியாட்சி

தெரிந்து தெளிவோம்

ஒரு மூல மொழிப் பிரதியின் உள்ளடக்கத்தை அப்பிரதிக்கு இணையான இலக்கு மொழிப் பிரதியின் வழியாக வெளிப்படுத்துதலே மொழிபெயர்ப்பு. தழுவல், சுருக்கம், மொழியாக்கம், நேர்மொழிபெயர்ப்பு என்பவற்றை மொழிபெயர்ப்பின் வகைகளாகக் கொள்ளலாம்.

தமிழிலிருந்து பிற மொழிக்கு

சங்க இலக்கிய மொழிபெயர்ப்பு

ஏ.கே.ராமானுஜம் – Love Poems from a Classical Tamil Anthology

ம.லெ. தங்கப்பா – Hues And Harmonies From An Ancient Land

பிற மொழியிலிருந்து தமிழுக்கு

"அந்நியன்" – ஆல்பர் காம்யு, "உருமாற்றம்"– காப்கா – ஜெர்மனியிலிருந்து

'சொற்கள்'– ழாக் பிரெவர், "குட்டி இளவரசன்"– எக்சுபெரி – பிரெஞ்சிலிருந்து

"உலகக் கவிதைகள்"– தொகுப்பு: பிரம்மராஜன்

நூல்வெளி

வடமொழியில் எழுதப்பட்ட பில்கணீயம் என்னும் காவியத்தைத் தழுவி, தமிழில் பாரதிதாசனால் 1937இல் எழுதப்பட்டது புரட்சிக்கவி. பாரதியின் மீது கொண்ட பற்றின் காரணமாகக் கனக சுப்புரத்தினம் என்னும் தம் பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றிக்கொண்டார். மொழி, இனம், குடியாட்சி உரிமைகள் ஆகியவை பற்றித் தம் பாடல்களில் உரக்க வெளிப்படுத்தியமையால் புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் அழைக்கப்பட்டார். பிரெஞ்சு மொழியில் அமைந்த தொழிலாளர் நலச் சட்டத்தைத் தமிழ் வடிவில் தந்தவர். குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, சேர தாண்டவம், ஆகிய காப்பியங்களையும் எண்ணற்ற பாடல்களையும் இயற்றியவர். 'குயில்' என்னும் இலக்கிய இதழை நடத்தியுள்ளார். இவருடைய 'பிசிராந்தையார்' நாடகத்துக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது. 'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே' என்ற இவரின் தமிழ் வாழ்த்துப் பாடலைப் புதுவை அரசு தனது தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழக அரசு இவருடைய பெயரால் திருச்சியில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவியுள்ளது.

கற்பவை கற்றபின்...

1. மக்களாட்சியின் சிறப்பைப் பற்றிக் கட்டுரை எழுதுக.
2. பாரதிதாசனாரின் 'புரட்சிக் கவி' குறுங்காவியத்தை முழுமையாகப் படித்துச் சுவைத்து உங்கள் கருத்தைப் பதிவு செய்க.

கவிதைப் பேழை

கல்வி

ந

குடும்ப விளக்கு

–பாரதிதாசன்

KAY7RU

நுழையும்முன்

புதுமைக் கருத்துகளை இயம்பும் வகையில் இருபதாம் நூற்றாண்டில் எழுந்தவையே மறுமலர்ச்சி இலக்கியங்கள். இயற்கையைப் போற்றுதல், தமிழுணர்ச்சி ஊட்டுதல், பகுத்தறிவு பரப்புதல், பொதுவுடைமை பேசுதல், விடுதலைக்குத் தூண்டுதல், பெண்கல்வி பெறுதல் போன்ற பாடுபொருள்களில் தோன்றிய பல்வேறு இலக்கியங்களுள் குறிப்பிடத்தக்க ஒன்று, பாவேந்தர் பாரதிதாசனின் குடும்பவிளக்கு.

1. *கல்வி இல்லாத பெண்கள்*
களர்நிலம் அந்நி லத்தில்
புல்விளைந் திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை
கல்வியை உடைய பெண்கள்
திருந்திய கழனி அங்கே
நல்லறிவு உடைய மக்கள்
விளைவது நவில வோநான்!

சொல்லும் பொருளும்:

களர்நிலம் – பண்படாத நிலம்,
நவிலல் – சொல்லல்.

2. *வானூர்தி செலுத்தல் வைய*
மாக்கடல் முழுது மளத்தல்
ஆனஎச் செயலும் ஆண்பெண்
அனைவர்க்கும் பொதுவே! இன்று
நானிலம் ஆட வர்கள்
ஆணையால் நலிவு அடைந்து
போனதால் பெண்களுக்கு
விடுதலை போனது அன்றோ!

சொல்லும் பொருளும்:

வையம் – உலகம்;
மாக்கடல் – பெரிய கடல்,

3. *இந்நாளில் பெண்கட்கு எல்லாம்*
ஏற்பட்ட பணியை நன்கு
பொன்னேபோல் ஒருகை யாலும்
விடுதலை பூணும் செய்கை
இன்னொரு மலர்க்கை யாலும்
இயற்றுக! கல்வி இல்லா
மின்னாளை வாழ்வில் என்றும்
மின்னாள் என்றே உரைப்பேன்!

9th_Tamil_Pages 122-264.indd 130 22-12-2020 15:57:37

சொல்லும் பொருளும்: இயற்றுக – செய்க; மின்னாளை – மின்னலைப் போன்றவளை; மின்னாள் – ஒளிரமாட்டாள்.

4. *சமைப்பதும் வீட்டு வேலை*
சலிப்பின்றிச் செயலும் பெண்கள்
தமக்கே ஆம் என்று கூறல்
சரியில்லை; ஆடவர்கள்
நமக்கும் அப் பணிகள் ஏற்கும்
என்றெண்ணும் நன்னாள் காண்போம் !
சமைப்பது தாழ்வா ? இன்பம்
சமைக்கின்றார் சமையல் செய்வார்!

5. *உணவினை ஆக்கல் மக்கட்கு!*
உயிர்ஆக்கல் அன்றோ? வாழ்வு
பணத்தினால் அன்று! வில்வாள்
படையினால் காண்ப தன்று!
தணலினை அடுப்பில் இட்டுத்
தாழியில் சுவையை இட்டே
அணித்திருந் திட்டார் உள்ளத்(து)
அன்பிட்ட உணவால் வாழ்வோம்!

சொல்லும் பொருளும்: தணல் – நெருப்பு; தாழி – சமைக்கும் கலன்; அணித்து – அருகில்.

6. *சமைப்பது பெண்க ளுக்குத்*
தவிர்க்கஒணாக் கடமை என்றும்
சமைத்திடும் தொழிலோ, நல்ல
தாய்மார்க்கே தக்கது என்றும்
தமிழ்த்திரு நாடு தன்னில்
இருக்குமோர் சட்டந் தன்னை
இமைப் போதில் நீக்கவேண்டில்
பெண்கல்வி வேண்டும் யாண்டும்!

சொல்லும் பொருளும்: தவிர்க்கஒணா – தவிர்க்க இயலாத; யாண்டும் – எப்பொழுதும்.

பாடலின் பொருள்

1. கல்வியறிவு இல்லாத பெண்கள் பண்படாத நிலத்தைப் போன்றவர்கள். அந்நிலத்தில் புல் முதலானவைதான் விளையலாம். நல்ல பயிர் விளையாது. அதுபோல கல்வி அறிவிலாத பெண்கள் வாயிலாக அறிவுடைய மக்கள் உருவாகமாட்டார்கள். கல்வியைக் கற்ற பெண்கள் பண்பட்ட நன்செய் நிலத்தினைப் போன்றவர்கள். அவர்கள் மூலம் சிறந்த அறிவுடைய மக்கள் உருவாகின்றனர் என்பதை நான் சொல்லவும் வேண்டுமோ?

2. வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவை. இன்று உலகமானது ஆண்களின் கட்டுப்பாட்டில் நலிந்து போனதால்தான் பெண்களுக்கு விடுதலை பறிபோனது.

3. இன்று பெண்களுக்கென உள்ள வேலைகளையும் அவர்களின் விடுதலைக்கான செயலையும் பெண்களே செய்தல் வேண்டும். மின்னல்போல் ஒளிரும் இயல்புடையவள் பெண்; ஆனால் கல்வியறிவு இல்லாத பெண் தன் வாழ்வில் என்றும் ஒளிரமாட்டாள் என்றே நான் சொல்வேன்.

4. சமைப்பது, வீட்டு வேலைகளைச் சலிப்பில்லாமல் செய்வது போன்றவை பெண்களுக்கே உரியவை என்று கூறுவது பொருத்தமற்றது. அவை நமக்கும் உரியவை என்று ஆண்கள் ஏற்றுக்கொள்ளும் எண்ணம் வரவேண்டும். அந்த நன்னாளைக் காண்போம். சமைப்பது தாழ்வென எண்ணலாமா? சமைப்பவர் உணவை மட்டும் சமைப்பதில்லை. அதற்கும் மேலாக இன்பத்தையும் படைக்கின்றார்.

5. உணவைச் சமைத்துத் தருவது என்பது உயிரை உருவாக்குவது போன்றதாகும். "வாழ்க்கை" என்பது பொருட்செல்வத்தாலோ வீரத்தாலோ அமைவதன்று. அடுப்பில் நெருப்பு மூட்டி சமைக்கும் கலத்தில் சுவையை இட்டு, அருகில் இருந்து உள்ளத்து அன்போடு உணவு பரிமாறுதலில்தான் வாழ்வு நலம்பெறுகிறது.

6. சமைக்கும் பணி, பெண்களுக்குத் தவிர்க்க முடியாத கடமை எனவும் அப்பணி நல்ல தாய்மார்களுக்கே உரியது எனவும் தமிழ்த்திரு நாட்டில் இருக்கின்ற வழக்கத்தினைக் கண் இமைக்கும் நேரத்தில் நீக்க வேண்டுமாயின் பெண்களுக்கு எப்போதும் கல்வி வேண்டும்.

9th_Tamil_Pages 122-264.indd 131 22-12-2020 15:57:37

இலக்கணக்குறிப்பு

மாக்கடல் – உரிச்சொல்தொடர்;

ஆக்கல் – தொழில்பெயர்;

பொன்னேபோல் – உவம உருபு;
மலர்க்கை – உவமைத்தொகை;

வில்வாள் – உம்மைத்தொகை;

தவிர்க்கஒணா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

பகுபத உறுப்பிலக்கணம்

விளைவது = விளை + வ் +அ + து

விளை – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை; அ – சாரியை; து – தொழிற்பெயர் விகுதி.

சமைக்கின்றார் = சமை + க் + கின்று + ஆர்

சமை – பகுதி; க் – சந்தி; கின்று – நிகழ்கால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

நூல் வெளி

குடும்ப விளக்கு, குடும்ப உறவுகள் அன்பு என்னும் நூலால் பிணைந்துள்ளதை உணர்த்துகிறது; கற்ற பெண்ணின் குடும்பமே பல்கலைக்கழகமாக மிளிரும் என்பதைக் காட்டுகிறது; குடும்பம் தொடங்கி உலகினைப் பேணுதல்வரை தன் பணிகளைச் சிறப்பாகச் செய்யும் பெண்ணுக்குக் கல்வி முதன்மையானதும் இன்றியமையாததும் ஆகும். இந்நூல் ஐந்து பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பகுதியில், விருந்தோம்பல் தலைப்பிலுள்ள தலைவியின் பேச்சில் இடம்பெற்றுள்ள கவிதைகள் பாடப்பகுதியாக உள்ளன.

பாரதிதாசனின் இயற்பெயர் கனக.சுப்புரத்தினம். இவர் பாரதியின் கவிதை மீதுகொண்ட ஈர்ப்பினால் பாரதிதாசன் என்று தம்பெயரை மாற்றிக் கொண்டார். பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, தமிழியக்கம் உள்ளிட்டவை இவரது படைப்புகள். இவர் இயற்றிய கவிதைகள் அனைத்தும் 'பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள்' என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன. இவரது பிசிராந்தையார் நாடக நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்...

1. *பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் – பாரதி

மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம்
செய்திடல் வேண்டுமம்மா.... – கவிமணி

பெண்எனில் பேதை என்ற எண்ணம்
இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும்
உருப்படல் என்பது சரிப்படாது – பாவேந்தர்

KB83TH

இவை போன்ற பெண்மையைப் போற்றும் கவிதை அடிகளைத் திரட்டுக.

2. ஆணுக்கும் சமையல் செய்யத் தெரிந்திருப்பதன் பயன் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடி அதன் கருத்துகளைத் தொகுக்க.

9th_Tamil_Pages 122-264.indd 132 22-12-2020 15:57:37

கவிதைப்பேழை

இயல் ஒன்பது

ஆசியஜோதி

LAL728

நுழையும்முன்

இரக்கம் என்பது தலைசிறந்த பண்பு. மனிதரிடம் மட்டுமன்று, மற்ற எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொள்ள வேண்டும். பிற உயிர்களைத் தம்முயிர் போல் எண்ணிக் காக்க வேண்டும். அதுவே சான்றோர் போற்றும் உயிர் இரக்கம் ஆகும். அவ்விரக்கமே மனித குலத்தை வாழ வைக்கிறது. உலக உயிர்கள் எல்லாம் துன்பம் இன்றி இன்புற்று வாழ வேண்டும் என்று விரும்பியவர் புத்தர். அவரின் அறவுரையை அறிவோம் வாருங்கள்.

முன்கதைச் சுருக்கம்

அரச வாழ்வைத் துறந்து நள்ளிரவில் அரண்மனையை விட்டு வந்தவர் புத்தர்பிரான். பிம்பிசார மன்னனின் யாகத்துக்காக ஆடுகள் கொண்டு செல்லப்பட்டன. அவற்றின் நடுவில் அடிபட்டு வலியால் துடித்துக் கொண்டிருந்த ஆட்டுக்குட்டியைப் புத்தர் தம் தோளில் சுமந்து சென்றார். யாகசாலையை அடைந்தார். மன்னனுக்கு அறவுரை கூறினார். நாடெங்கும் உயிர்க்கொலையைத் தடுத்து நிறுத்தினார்.

நின்றவர் கண்டு நடுங்கினாரே – ஐயன்
நேரிலே நிற்கவும் அஞ்சினாரே;
துன்று கருணை நிறைந்த வள்ளல் – அங்கு
சொன்ன மொழிகளைக் கேளும் ஐயா!

வாழும் உயிரை வாங்கிவிடல் – இந்த
மண்ணில் எவர்க்கும் எளிதாகும்;
வீழும் உடலை எழுப்புதலோ – ஒரு
வேந்தன் நினைக்கிலும் ஆகாதையா!

யாரும் விரும்புவது இன்னுயிராம்; – அவர்
என்றுமே காப்பதும் அன்னதேயாம்;
பாரில் எறும்பும் உயிர்பிழைக்கப் – படும்
பாடு முழுதும் அறிந்திலீரோ?



6th Std Tamil CBSE Pages 77-206.indd 188 20-03-2020 17:42:59

நேரிய உள்ளம் இரங்கிடுமேல் – இந்த
நீள்நிலம் முற்றுமே ஆண்டிடலாம்;
பாரினில் மாரி பொழிந்திடவே – வயல்
பக்குவ மாவது அறிந்திலீரோ?

காட்டும் கருணை உடையவரே – என்றும்
கண்ணிய வாழ்வை உடையவராம்;
வாட்டும் உலகில் வருந்திடுவார்– இந்த
மர்மம் அறியாத மூடரையா!

காடு மலையெலாம் மேய்ந்துவந்து – ஆடுதன்
கன்று வருந்திடப் பாலையெல்லாம்
தேடிஉம் மக்களை ஊட்டுவதும் – ஒரு
தீய செயலென எண்ணினீரோ?

அம்புவி மீதில்இவ் ஆடுகளும் – உம்மை
அண்டிப் பிழைக்கும் உயிரலவோ?
நம்பி இருப்பவர் கும்பி எரிந்திடில்
நன்மை உமக்கு வருமோ ஐயா?

ஆயிரம் பாவங்கள் செய்தவெல்லாம் – ஏழை
ஆட்டின் தலையோடு அகன்றிடுமோ?
தீயவும் நல்லவும் செய்தவரை – விட்டுச்
செல்வது ஒருநாளும் இல்லைஐயா!

ஆதலால் தீவினை செய்யவேண்டா – ஏழை
ஆட்டின் உயிரையும் வாங்கவேண்டா;
பூதலந் தன்னை நரகம்அது ஆக்கிடும்
புத்தியை விட்டுப் பிழையும்ஐயா!

– கவிமணி தேசிக விநாயகனார்

சொல்லும் பொருளும்

அஞ்சினர்	–	பயந்தனர்	முற்றும்	–	முழுவதும்
கருணை	–	இரக்கம்	மாரி	-	மழை
வீழும்	–	விழும்	கும்பி	–	வயிறு
ஆகாது	-	முடியாது	பூதலம்	–	பூமி
நீள்நிலம்	–	பரந்த உலகம்	பார்	–	உலகம்

6th Std Tamil CBSE Pages 77-206.indd 189 20-03-2020 17:42:59

பாடலின் பொருள்

யாகசாலையில் நின்றவர் அனைவரும் புத்தர்பிரானைக் கண்டு நடுங்கினர். அவர் முன்னால் நிற்கவும் அஞ்சினர். கூடி இருந்த மக்களின் முன்னால் இரக்கமே உருவான புத்தர்பிரான் கூறிய உரையைக் கேளுங்கள்.

வாழ்கின்ற உயிர்களை அழிப்பது இந்த உலகத்தில் எல்லார்க்கும் எளிய செயல். ஆனால், இறந்த உடலுக்கு உயிர் கொடுத்து எழுப்புவது மன்னனாலும் முடியாத செயல்.

எல்லாரும் தம் உயிரைப் பெரிதாக மதித்துப் பாதுகாக்கின்றனர். எறும்பு கூடத் தன் உயிரைக் காத்துக் கொள்ளப் பாடுபடுவதை அறியாதவர் உண்டோ?

நேர்மையான இரக்க மனம் கொண்டிருப்பவரால் மட்டுமே பரந்த இவ்வுலகம் முழுமையையும் ஆட்சி செய்ய முடியும். உலகில் மழை பெய்வதால் வயல் பக்குவம் அடைவதை அறியாதவர் உண்டோ?

எல்லா உயிர்கள் மீதும் இரக்கம் கொள்பவரே நேர்மையான வாழ்வு வாழ்பவர். இந்த மறைபொருளை அறியாதவர் பிற உயிர்களை வருத்தித் தாமும் துன்புறுவர்.

காடுமலை எல்லாம் மேய்ந்து வருகிறது ஆடு. அது தன் குட்டி வருந்திடும் வகையில் பாலை எல்லாம் மக்களுக்குத் தருகிறது. இதனைத் தீயசெயல் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

இந்த உலகில் ஆடுகளும் உங்களை நம்பி இருக்கும் உயிர்கள் அன்றோ? நம்மை நம்பி இருப்பவரின் வயிறு எரியும்வகையில் நடந்து கொள்வதால் உங்களுக்கு நன்மை கிடைக்குமா?

ஆயிரம் பாவங்கள் செய்துவிட்டு, ஆட்டின் உயிரை எடுப்பதால் பாவங்கள் நீங்கி விடுமா? ஒருவர் செய்த நன்மையும் தீமையும் ஒருநாளும் அவரை விட்டுச் செல்லாது.

ஆகையால், தீய செயல்களைச் செய்யாதீர்கள். பிற உயிர்களைக் கொல்லும் செயலைச் செய்யாதீர்கள். இந்தப் பூமியை மகிழ்ச்சியற்றதாக மாற்றிடும் எண்ணத்தை உங்களைவிட்டு நீக்குங்கள். இங்கு மக்களோடு சேர்ந்து மற்ற உயிர்களும் மகிழ்வோடு வாழ வழி செய்யுங்கள்.

நூல் வெளி

தேசிக விநாயகனார் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர். முப்பத்தாறு ஆண்டுகள் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர். கவிமணி என்னும் பட்டம் பெற்றவர்.



ஆசிய ஜோதி, ஆங்கில மொழியில் எட்வின் அர்னால்டு என்பவர் எழுதிய லைட் ஆஃப் ஆசியா (Light of Asia) என்னும் நூலைத் தழுவி எழுதப்பட்டது. இந்நூல் புத்தரின் வரலாற்றைக் கூறுகிறது.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 190 20-03-2020 17:43:01

கற்பவை கற்றபின்

1. நீங்கள் மிகவும் விரும்பும் தாவரங்கள், பறவைகள், விலங்குகளின் பெயர்களைப் பட்டியலிடுக.
2. உங்களைப்போல் பிறரையும் நேசியுங்கள் – என்னும் தலைப்பில் பேசுக.

மதிப்பீடு

LAV33V

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. புத்தரின் வரலாற்றைக் கூறும் நூல் _____
   அ) ஜீவ ஜோதி ஆ) ஆசிய ஜோதி இ) நவ ஜோதி ஈ) ஜீவன் ஜோதி
2. நேர்மையான வாழ்வை வாழ்பவர் _____
   அ) எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொண்டவர் ஆ) உயிர்களைத் துன்புறுத்துபவர்
   இ) தம்மை மட்டும் காத்துக்கொள்பவர் ஈ) தம் குடும்பத்தையே எண்ணி வாழ்பவர்
3. ஒருவர் செய்யக் கூடாதது _____
   அ) நல்வினை ஆ) தீவினை இ) பிறவினை ஈ) தன்வினை
4. 'எளிதாகும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____
   அ) எளிது + தாகும் ஆ) எளி + தாகும் இ) எளிது + ஆகும் ஈ) எளிதா + ஆகும்
5. 'பாலையெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____
   அ) பாலை+யெல்லாம் ஆ) பாலை+எல்லாம் இ) பாலை+எலாம் ஈ) பா+எல்லாம்
6. இனிமை + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____
   அ) இன்உயிர் ஆ) இனியஉயிர் இ) இன்னுயிர் ஈ) இனிமைஉயிர்
7. மலை+எலாம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____
   அ) மலைஎலாம் ஆ) மலையெலாம் இ) மலையெல்லாம் ஈ) மலைஎல்லாம்

குறுவினா

1. அரசனாலும் செய்ய முடியாத செயல் எது?
2. எறும்பு எதற்காகப் பாடுபடுகிறது?
3. ஒருநாளும் விட்டுச் செல்லாதது எது?
4. உலகம் முழுமையையும் எப்போது ஆளமுடியும்?

சிறுவினா

எல்லா உயிர்களும் மகிழ்வோடு வாழப் புத்தர்பிரான் கூறும் அறிவுரைகள் யாவை?

சிந்தனை வினா

பறவைகளும், விலங்குகளும் சுதந்திரமாக வாழ வேண்டும் எனில் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

6th Std Tamil CBSE Pages 77-206.indd 191 20-03-2020 17:43:01

கவிதைப்பேழை

இயல் மூன்று

வருமுன் காப்போம்

HIEYBN

நுழையும்முன்

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது பழமொழி. நோய் வந்தபின் தீர்க்க முயல்வதை விட வருமுன் காப்பதே அறிவுடைமை. நல்ல உணவு, உடல்தூய்மை, உடற்பயிற்சி ஆகியவையே நல்ல உடல் நலத்திற்கு அடிப்படை. இவற்றை விளக்கும் பாடல் ஒன்றை அறிவோம்.

*உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்;
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ?

சுத்தம் உள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீயதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே!

காலை மாலை உலாவிநிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே! *

கூழை யேநீ குடித்தாலும்
குளித்த பிறகு குடியப்பா
ஏழை யேநீ ஆனாலும்,
இரவில் நன்றாய் உறங்கப்பா!

மட்டுக் குணவை உண்ணாமல்
வாரி வாரித் தின்பாயேல்
திட்டு முட்டுப் பட்டிடுவாய்!
தினமும் பாயில் விழுந்திடுவாய்!

தூய காற்றும் நன்னீரும்,
சுண்டப் பசித்த பின்உணவும்
நோயை ஓட்டி விடும்அப்பா!
நூறு வயதும் தரும்அப்பா!

அருமை உடலின் நலமெல்லாம்
அடையும் வழிகள் அறிவாயே!
வருமுன் நோயைக் காப்பாயே!
வையம் புகழ வாழ்வாயே!

–கவிமணி தேசிக விநாயகனார்

www.cbsetamil.com
8th Std Tamil _20-12-2019.indd 50 03-01-2020 19:34:34

சொல்லும் பொருளும்

நித்தம் நித்தம்	–	நாள்தோறும்	வையம்	–	உலகம்
மட்டு	–	அளவு	பேணுவையேல்	–	பாதுகாத்தால்
சுண்ட	–	நன்கு	திட்டுமுட்டு	–	தடுமாற்றம்

பாடலின் பொருள்

உடலில் உறுதி கொண்டவரே, உலகில் மகிழ்ச்சி உடையவராவார். உடல் உறுதியற்ற நோயாளர்க்கு வாழும் இடமும் செல்வமும் இனிய வாழ்வு தாரா. சுத்தம் நிறைந்துள்ள எல்லா இடங்களிலும் சுகம் உண்டு. நாள்தோறும் நீங்கள் தூய்மையைப் போற்றிப் பாதுகாத்தால் நீடித்த வாழ்நாளைப் பெறலாம்.

காலையும் மாலையும் நடைப்பயிற்சி மேற்கொண்டு, நல்லகாற்றைச் சுவாசித்து வருவோரை நோய் அணுகாது. அவர் உயிரைக் கவர எமனும் அணுகமாட்டான். எனவே, நீங்கள் கூழைக் குடித்தாலும் குளித்தபிறகே குடித்தல் வேண்டும்! நீங்கள் வறுமையில் வாழ்ந்தாலும் இரவில் நன்றாக உறங்குதல் வேண்டும்.

அளவாக உண்ணாமல் அதிகமாக உண்டால் செரிமானம் தடுமாறி நாள்தோறும் நோய்வாய்ப்பட்டுப் பாயில் விழுவீர்கள். தூய்மையான காற்றும் நல்ல குடிநீரும் நன்கு பசித்த பிறகு உண்பதும் நம்மை நோய் அணுகாமல் காப்பாற்றும்! நூறாண்டு வாழ வைக்கும். அரிய நம் உடல் நலமோடு இருப்பதற்கான வழிகள் இவை என்பதை அறிவீர்களாக! ஆகவே நோய் வருமுன் காப்போம்! உலகம் புகழ வாழ்வோம்!.

நூல் வெளி

கவிமணி எனப் போற்றப்படும் தேசிக விநாயகனார், குமரி மாவட்டம் தேரூரில் பிறந்தவர்; முப்பத்தாறு ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவர், ஆசியஜோதி, மருமக்கள் வழி மான்மியம், கதர் பிறந்த கதை உள்ளிட்ட பல கவிதை நூல்களையும் உமர்கய்யாம் பாடல்கள் என்னும் மொழிபெயர்ப்பு நூலையும் படைத்துள்ளார்.

மலரும் மாலையும் என்னும் நூலிலிருந்து ஒரு பாடல் இங்குத் தரப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

1. 'தன் சுத்தம்' என்னும் தலைப்பில் படத்தொகுப்பு ஒன்று உருவாக்குக.
2. சுகாதாரம் பற்றிய பழமொழிகளைத் தொகுத்து எழுதுக.

   (எ.கா.) சுத்தம் சோறு போடும்.

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. காந்தியடிகள் _____ போற்ற வாழ்ந்தார்.

   அ) நிலம் ஆ) வையம் இ) களம் ஈ) வானம்

2. 'நலமெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) நலம் + எல்லாம் ஆ) நலன் + எல்லாம்

   இ) நலம் + எலாம் ஈ) நலன் + எலாம்

3. இடம் + எங்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்_____.

   அ) இடவெங்கும் ஆ) இடம்எங்கும்

   இ) இடமெங்கும் ஈ) இடம்மெங்கும்

வருமுன்காப்போம் – இப்பாடலில் இடம்பெற்றுள்ள மோனை, எதுகை, இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.

மோனை _____ _____ _____ _____

_____ _____ _____ _____

எதுகை _____ _____ _____ _____

_____ _____ _____ _____

இயைபு _____ _____ _____ _____

_____ _____ _____ _____

குறுவினா

1. நம்மை நோய் அணுகாமல் காப்பவை எவை?
2. அதிகமாக உண்பதால் ஏற்படும் தீமைகளாகக் கவிமணி குறிப்பிடுவன யாவை?

சிறுவினா

உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

சிந்தனை வினா

நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகளாக நீங்கள் கருதுவன யாவை?

www.cbsetamil.com

8th Std Tamil _20-12-2019.indd 52 03-01-2020 19:34:34

கவிதைப்பேழை

இயல் ஒன்று

தமிழ்க்கும்மி

கூட்டமாகக்கூடிக் கும்மியடித்துப் பாடி ஆடுவது மகிழ்ச்சியான அனுபவம். கும்மியில் தமிழைப் போற்றிப்பாடி ஆடுவது பெரும் மகிழ்ச்சி தருவதாகும். வாருங்கள்! தமிழின் பெருமையை வாயாரப் பேசலாம்; காதாரக் கேட்கலாம்; இசையோடு பாடலாம்; கும்மி கொட்டி ஆடலாம்.

78UB2F

கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி இளங்
கோதையரே கும்மி கொட்டுங்கடி – நிலம்
எட்டுத் திசையிலும் செந்தமிழின் புகழ்
எட்டிடவே கும்மி கொட்டுங்கடி!

ஊழி பலநூறு கண்டதுவாம் அறிவு
ஊற்றெனும் நூல்பல கொண்டதுவாம் – பெரும்
ஆழிப் பெருக்கிற்கும் காலத்திற்கும் முற்றும்
அழியாமலே நிலை நின்றதுவாம்!

பொய் அகற்றும் உள்ளப் பூட்டறுக்கும் – அன்பு
பூண்டவரின் இன்பப் பாட்டிருக்கும் – உயிர்
மெய்புகட்டும் அறமேன்மை கிட்டும் இந்த
மேதினி வாழ்வழி காட்டிருக்கும் !

– பெருஞ்சித்திரனார்

சொல்லும் பொருளும்

ஆழிப் பெருக்கு	–	கடல் கோள்	ஊழி	–	நீண்டதொருகாலப்பகுதி
மேதினி	–	உலகம்	உள்ளப்பூட்டு	–	உள்ளத்தின் அறியாமை

6th Std Tamil CBSE Pages 1-24.indd 5 20-03-2020 16:18:22

பாடலின் பொருள்

இளம்பெண்களே! தமிழின் புகழ் எட்டுத்திசைகளிலும் பரவிடும் வகையில் கைகளைக் கொட்டிக் கும்மியடிப்போம்.

பல நூறு ஆண்டுகளைக் கண்டது தமிழ்மொழி. அறிவு ஊற்றாகிய நூல்கள் பலவற்றைக் கொண்ட மொழி. பெரும் கடல் சீற்றங்கள், கால மாற்றங்கள் ஆகிய எவற்றாலும் அழியாமல் நிலைத்திருக்கும் மொழி.

தமிழ், பொய்யை அகற்றும் மொழி; அது மனத்தின் அறியாமையை நீக்கும் மொழி; அன்புடைய பலரின் இன்பம் தரும் பாடல்கள் நிறைந்த மொழி; உயிர் போன்ற உண்மையை ஊட்டும் மொழி ; உயர்ந்த அறத்தைத் தரும் மொழி. இந்த உலகம் சிறந்து வாழ்வதற்கான வழிகளையும் காட்டும் மொழி தமிழ்மொழி .

நூல் வெளி

பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் மாணிக்கம். இவர் பாவலரேறு என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார். கனிச்சாறு, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, நூறாசிரியம் முதலான நூல்களை இயற்றியுள்ளார். தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்களை நடத்தினார். தனித்தமிழையும் தமிழுணர்வையும் பரப்பிய பாவலர் இவர்.

இப்பாடல் கனிச்சாறு என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது. இந்நூல் எட்டுத் தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இது தமிழுணர்வு நிறைந்த பாடல்களைக் கொண்டது.

கற்பவை கற்றபின்

1. தமிழ்க்கும்மி பாடலை இசையோடு பாடி மகிழ்க.

2. பின்வரும் கவிதை அடிகளைப் படித்து மகிழ்க.

வான்தோன்றி வளி தோன்றி நெருப்புத் தோன்றி
மண் தோன்றி மழை தோன்றி மலைகள் தோன்றி
ஊன் தோன்றி உயிர் தோன்றி உணர்வு தோன்றி
ஒளி தோன்றி ஒலி தோன்றி வாழ்ந்த அந்நாள்
தேன் தோன்றியது போல மக்கள் நாவில்
செந்தமிழே! நீ தோன்றி வளர்ந்தாய்! வாழி!

– வாணிதாசன்

6th Std Tamil CBSE Pages 1-24.indd 6 20-03-2020 16:18:22

மதிப்பீடு

794743

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தாய் மொழியில் படித்தால் ------ அடையலாம்
   அ) பன்மை ஆ) மேன்மை இ) பொறுமை ஈ) சிறுமை
2. தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் ------ சுருங்கிவிட்டது
   அ) மேதினி ஆ) நிலா இ) வானம் ஈ) காற்று
3. 'செந்தமிழ்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____
   அ) செந் + தமிழ் ஆ) செம் + தமிழ் இ) சென்மை + தமிழ் ஈ) செம்மை + தமிழ்
4. 'பொய்யகற்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____
   அ) பொய் + அகற்றும் ஆ) பொய் + கற்றும்
   இ) பொய்ய + கற்றும் ஈ) பொய் + யகற்றும்
5. பாட்டு+ இருக்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ---------
   அ) பாட்டிருக்கும் ஆ) பாட்டுருக்கும் இ) பாடிருக்கும் ஈ) பாடியிருக்கும்
6. எட்டு + திசை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ---------
   அ) எட்டுத்திசை ஆ) எட்டிதிசை இ) எட்டுதிசை ஈ) எட்டிஇசை

நயம் உணர்ந்து எழுதுக.

1. பாடல் அடிகளில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் (மோனை) சொற்களை எடுத்து எழுதுக.
2. பாடல் அடிகளில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் (எதுகை) சொற்களை எடுத்து எழுதுக.
3. பாடல் அடிகளில் இறுதி எழுத்து ஒன்றுபோல் வரும் (இயைபு) சொற்களை எடுத்து எழுதுக.

குறுவினா

1. தமிழ் மொழியின் செயல்களாகக் கவிஞர் கூறுவன யாவை?
2. செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?

சிறுவினா

1. கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுவதன் காரணம் என்ன?
2. தமிழ்க் கும்மி பாடலின்வழி நீங்கள் அறிந்துகொண்டவற்றை உம் சொந்த நடையில் எழுதுக.

சிந்தனை வினா

தமிழ் மொழி அறியாமையை எவ்வாறு அகற்றும்?

6th Std Tamil CBSE Pages 1-24.indd 7 20-03-2020 16:18:22

கவிதைப் பேழை

மொழி

க

அன்னை மொழியே

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்

3EGD9S

நுழையும்முன்

சின்னக் குழந்தையின் சிரிப்பும் ஆனவள்; பழுத்த நரையின் பட்டறிவும் ஆனவள்; வானத்திற்கும் வையத்திற்கும் இடைப்பட்ட யாவற்றையும் கவிதையாகக் கொண்டவள்; உணர்ந்து கற்றால் கல்போன்ற மனத்தையும் கற்கண்டாக்குபவள்; அறிவைப் பெருக்குபவள்; அன்பை வயப்படுத்துபவள்; செப்புதற்கரிய அவள் பெருமையைப் போற்றுவோம் .

அழகார்ந்த செந்தமிழே!

*அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே! *

செப்பரிய நின்பெருமை

செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்

உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்
செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த
அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி
முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே!

– கனிச்சாறு

10th_Tamil_Unit 1.indd 2 24-01-2020 10.04.07 AM

பாடலின் பொருள்

அன்னை மொழியே! அழகு நிறைந்த செழுந்தமிழே! பழமைக்கும் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே! கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசே! பாண்டிய மன்னனின் மகளே! திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவளே! பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே! பதினெண் கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே! பொங்கியெழும் நினைவுகளால் தலை பணிந்து வாழ்த்துகின்றோம்.

செழுமை மிக்க தமிழே! எமக்குயிரே! சொல்லுதற்கரிய நின் பெருமைதனை என்னுடைய தமிழ் நாக்கு எவ்வாறுதான் விரித்துரைக்கும்? பழம்பெருமையும் தனக்கெனத் தனிச் சிறப்பும் இலக்கிய வளமும் கொண்ட தமிழே! வியக்கத்தக்க உன்னுடைய நீண்ட நிலைத்த தன்மையும் வேற்று மொழியார் உன்னைப் பற்றி உரைத்த புகழுரையும் எமக்குள் பற்றுணர்வை எழுப்புகின்றன. எம் தனித்தமிழே! வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுவது போன்று நாங்கள் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம்.

சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் – என்றன்
சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்

க. சச்சிதானந்தன்

நூல் வெளி

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் கனிச்சாறு (தொகுதி 1) தொகுப்பிலிருந்து இருவேறு தலைப்பில் உள்ள பாடல்கள் (தமிழ்த்தாய் வாழ்த்து, முந்துற்றோம் யாண்டும்) எடுத்தாளப்பட்டுள்ளன. தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களின் வாயிலாகத் தமிழுணர்வை உலகெங்கும் பரப்பியவர் துரை. மாணிக்கம் என்ற இயற்பெயர் கொண்ட பெருஞ்சித்திரனார்.

இவர் உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப் பறவைகள் முதலிய நூல்களைப் படைத்துள்ளார். இவரின் திருக்குறள் மெய்ப்பொருளுரை, தமிழுக்குக் கருவூலமாய் அமைந்துள்ளது. இவரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

கற்பவை கற்றபின்...

1. "நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை"

இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள எட்டுத்தொகை நூல்களைப் பெயர்க்காரணத்துடன் எடுத்துக்காட்டுக.

2. "எந்தமிழ்நா நின் பெருமை எடுத்தே உரைவிரிக்கும்" என்ற பாடலடியைக் கொண்டு வகுப்பறையில் ஐந்துநிமிட உரை நிகழ்த்துக.

10th_Tamil_Unit 1.indd 3 24-01-2020 10.04.07 AM

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை :

- ‘‘புலமைக் கதிரவன்’’
- திருச்சி – அதவத்தூர்
- திருவாவடுதுறை மடத்தின் தலைமைப் புலவர்
- ஆசிரியர் :
  - திருவாவடுதுறை மடத்தலைவர் சுப்ரமணிய தேசிகர்
  - சென்னை தாண்டவராயர்
  - திருத்தணிகை விசாகப் பெருமாள்
- சேக்கிழார் பிள்ளைத் தமிழ்
- தல புராணம் பாடுவதில் வல்லவர்
- யமக அந்தாதி, திரிபந்தாதி, வெண்பா அந்தாதி – உருவாக்கினார்.
- மாலை, கோவை, கலம்பகம், பிள்ளைத் தமிழ் – பாடினார்.
- மாணவர்கள்: உ.வே.சா, தியாகராசர், குலாம்காதிறு நாவலர்.

ஆபிரகாம் பண்டிதர் :

- ‘‘தமிழிசை இயக்கத்தின் தந்தை’’
- தென்காசி – சாம்பவர் வடகரை
- புகைப்படக் கலை, அச்சுக் கலை, சோதிடம், மருத்துவம், இசை
- ஆசிரியர் பணி – திண்டுக்கல்
- சித்த மருத்துவம் – ‘‘பண்டுவர்’’ – மருத்துவர்
- தஞ்சை மக்கள் இவரை ‘‘பண்டிதர்’’ என்றழைத்தனர்.
- ‘‘சங்கீத வித்தியா மகாஜன சங்கம்’’ அமைப்பு
- கருணாமிர்த சாகரம்.

சி.வை. தாமோதரனார் :

- தமிழ் தந்தை, தமிழ்ப் ‘‘பதிப்புலகின் தலைமகன்’’
- இலங்கை – யாழ்ப்பாணம்
- 20 வயது – ‘‘நீதிநெறி விளக்கம்’’ – உரை பதிப்பித்தார்.
- 1868 – தொல்காப்பிய சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையர் உரையை பதிப்பித்தார்.
- கலித்தொகை, இறையனார் அகப்பொருள், வீரசோழியம், பதிப்பித்தார்.
- கட்டளைக் கலித்துறை , நட்சத்திர மாலை, சூளாமணி வசனம்
- ஆறாம் வாசகப் புத்தகம் – பள்ளி நூல்
- பெர்சிவல் பாதிரியார் இவரை ‘‘தினவர்த்தமானி’’ எனும் இதழுக்கு ஆசிரியராக்கினார்.
- சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ் பண்டிதர்
- குடந்தை – வழக்கறிஞர்

- 1884 – புதுக்கோட்டை உயர்நிலைப்பள்ளியை நிறுவினார்.

பெ.நா. அப்புசாமி :

- அறிவியல் தமிழர், அறிவியல் தமிழின் முன்னோடி
- நெல்லை – பெருங்குளம்
- அறிவியல் தமிழுக்காக 70 ஆண்டுகள் தொண்டாற்றினார்.
- ''தமிழர் நேசன்'' தமிழில் வந்த முதல் அறிவியல் இதழ்
- நூண்துகள் கொள்கை, அறிவுக்குறி எண், பொங்கியெழு கேணி – தொடர்
- புத்தகங்கள் – மின்சாரம், வானக்காட்சி, இன்றைய விஞ்ஞானமும் நீங்களும் , அணுசக்தியின் எதிர்காலம், ராக்கெட்டும் துணைக் கோள்களும்.
- புனைபெயர் : ''பேனா''
- பாரதியார் கவிதைகள், சங்கப்பாடல்கள் – ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு
- தமிழ்ப் பேரவை செம்மல் – மதுரை பல்கலைக்கழகம்

ஜி.யு. போப் :

- செந்தமிழ்ச் செம்மல்
- 1839 ல் தென்னிந்தியா வருகை
- சாந்தோம் – முதல் தமிழ் சொற்பொழிவு
- மொழியெர்ப்பு – திருக்குறள், திருவாசகம், நன்னூல், புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை.
- ''இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிகொண்டிருக்கிறான்''.

இரகசியமணி டி.கே. சிதம்பரநாதர்:

- ''தமிழில் எல்லாம் உண்டு ; தமிழின் கவிச் சுவைக்கு ஈடுமில்லை இணையுமில்லை; தமிழால் அறிவியல் மட்டுமன்று ;அனைத்து இயல்புகளையும் கற்க முடியும்.
- ஞாயிறு தோறும் இலக்கியம் பேசுகின்ற இடம் ''வட்டத் தொட்டி''
- புத்தகம் : இதய ஒலி, கம்பர் யார் ?
- உரை : முத்தொள்ளாயிரம், கம்பராமாயணம்.
- சட்ட மேலவை உறுப்பினர்.
- அறநிலையத்துறை குழுவில் உறுப்பினர்.

சங்கரதாசு சுவாமிகள்:

- தமிழ் கற்ற இடம் : புலவரேறு பழநி தண்டபாணி சுவாமிகள்
- இரணியன், இராவணன், எமதருமன் – வேடம்
- வண்ணம், சந்தம் பாடுவதில் வல்லவராயிருந்த சுவாமிகளின் ''சந்தக்குழிப்புகளின்'' சொற் சிலம்பங்களைக் கொண்டு அக்காலத்தில் மக்கள் வியப்புற்றனர்.
- ''சமரச சன்மார்க்க சபை'' நாடக குழு இதில் பயிற்சி பெற்றவர் G.S. கிட்டப்பா

- 1918 – மதுரை – தத்துவ விளக்கச் சபை'' ''டி.கே.எஸ். சகோதரர்கள்''.
- தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்
- தமிழ் நாடக இமயமலை.

மயிலை சீனி. வேங்கடசாமி :

- தமிழ் மொழியில் மறந்தும் மறைந்ததுமான சிறந்த செய்திகள் அளவு கடந்துள்ளன. அவற்றை வெளிகொணர்ந்து வீரிய உணர்வுடன் வெளிட்டார்.
- இராமேஸ்வரத் தீவு, உறையூர் அழிந்த வரலாறு, மறைந்து போன மருங்காப்பட்டினம் – கட்டுரை
- களப்பிரர் காலத் தமிழகம்
- புத்தகங்கள் : கொங்கு நாட்டு வரலாறு, துளுவ நாட்டு வரலாறு , சேரன் செங்குட்டுவன், மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன்.
- 1980 மதுரை பல்கலைக்கழகம் – தமிழ்ப் பேரவை செம்மல்

இராமலிங்க அடிகள்:

- ''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்''
- திருவருட்பா
- அமைதி, அன்பு வழியிலான சமூகம் உருவாக விரும்பினார்.
- புத்தகங்கள் : தெய்வமணிமாலை, கந்தர் சரவணப் பத்து
- மனு முறை கண்ட வாசகம் – உரைநடை
- பதிப்பித்த நூல் – ஒழிவில் ஒடுக்கம், தொண்டை மண்டல சதகம், சின்மய தீபிகை.
- சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
- சத்திய தருமச் சாலை
- உருவ வழிபாடு மறுப்பு

ஆறுமுக நாவலர்:

- வசனநடை கைவந்த வள்ளலார்
- இலங்கை – யாழ்ப்பாணம் – நல்லூர்
- பதிப்பித்தவை – திருக்குறள் பரிமேலழகர் உரை, சூடாமணி நிகண்டு, நன்னூல் சங்கர நமச்சிவாயர் விருத்தியுரை.
- இலக்கண நூல்கள் , பூமி சாஸ்திர நூல்கள்
- புராண நூல்களை வசனமாக எழுதி அதனை அனைவரும் படிக்கும் எளிய வடிவாக மாற்றினார்.
- திருவாவடுதுறை ஆதினம் இவருக்கு ''நாவலர்''என்ற பட்டம் வழங்கியது.
- பெர்சிவல் பாதிரியார் விவிலியத்தை தமிழில் மொழி பெயர்க்க உதவினார்.

மயூரம் வேதநாயகம :

- 1876 – 78 தாது வருடப் பஞ்சம்
- இச்சமயத்தில் தனது சொத்துக்களை விற்று உணவளித்தார்.
- கோபாலகிருஷ்ண பாரதியார், ‘‘நீயே புருஷ மேரு’’ என்று பாடலை பாடினார்.
- பிரதாப முதலியார் சரித்திரம் (1879) – தமிழின் முதல் நாவல்
- மாயவரம் நகர்மன்ற தலைவர்
- சமகாலத்தவர் : மீனாட்சி சுந்தரனார், வள்ளலார், சுப்ரமணிய தேசிகர்
- 1805 – 1861 ஆம் ஆண்டுவரை ஆங்கிலத்தில் இருந்த நீதிமன்றத் தீர்ப்புகளை முதன் முதலில் ‘‘தமிழில்’’ மொழிபெயர்த்து ‘‘சித்தாந்த சங்கிரகம்’’ என்ற நூலாக வெளியிட்டார்.
- புத்தகங்கள் – பெண்மதிமாலை , திருவருள் அந்தாதி, சர்வ சமய சமரசக் கீர்த்தனை, சுகுண சுந்தரி
- 1000 க்கும் மேற்பட்ட கீர்த்தனைகள் இயற்றியுள்ளார்.
- இசை , வீணை வாசிப்பு.
- பெண் கல்வி.

பரிதிமாற் கலைஞர் :

- திராவிட சாஸ்திரி – சி.வை.தாமோதரனார் பெயரிட்டார்.
- தந்தை – வடமொழி , தமிழ் – மகாவித்துவான் சபாபதி (F.A. – First examination in Arts)
- பாஸ்கர சேதுபதி மன்னரிடம் உதவி தொகை பெற்றார்.
- 1893 – மதராஸ் கிறிஸ்துவ கல்லூரி (MCC) தமிழாசிரியர்
- ரூபாவதி, கலாவதி – நாடக நூல்.
- களவழி நாற்பது நூலைத் தழுவி எழுதப்பட்டது – மான விஜயம்
- நாடகவியல் – நாடக இலக்கண நூல்
- தணிப்பாசுரத் தொகை – ஜி.யு. போப் மொழிபெயர்ப்பு
- அறிவியல் இதழ் – ஞானபோதினி – மு.சி பூர்ண லிங்கம்
- ‘‘தமிழை உயர்தனிச் செம்மொழி’’ என்று முதன் முதலில் கூறியவர்.
- 2004, அக்டோபர் 12 – தமிழ் செம்மொழி அந்தஸ்து பெற்றது.
- இயற்பெயர் – சூரிய நாராயண சாஸ்திரி
- திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும் பொருந்திய தாய்மொழி செம்மொழி ஆயின் தமிழ் உயர் தனிச் செம்மொழி.

மறைமலையடிகள் :

- ‘‘அஃது எனக்குத் தெரியாது’’
- சுவாமி வேதாசலம் – இயற்பெயர்

- இதழ்கள் :
  - 1902 – அறிவுக்கடல் – ‘‘ஞான சாகரம்’’
  - 1908 – Oriental mystic myna
  - 1935 – Ocean of wisdom
- புத்தகங்கள் : முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, சாகுந்தல நாடகம், மாணிக்க வாசகர் வரலாறும் காலமும்.

சோமசுந்தர பாரதியார் :

- எட்டயபுரம் அரண்மனை – சுப்ரமணிய பாரதி , சோமசுந்தரம் பாரதி
- சுதேசி நீராவி கப்பல் கம்பெனி நிர்வாகம் பொறுப்பு
- என்னிடம் இரண்டு சரக்குக் கப்பலோடு மூன்றாவதாக ஒரு தமிழ்க் கப்பலும் உள்ளது. வ.உ.சி இவரைப்பற்றி குறிப்பிடுகிறார்.
- புத்தகங்கள் – தசரதன் குறையும் கைகேயி நிறையும் , திருவள்ளுவர், சேரர் தாயமுறை, தமிழும் தமிழரும்.
- உரை : தொல்காப்பிய பொருளதிகார அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல்.
- சடங்குகள் இல்லாத திருமண விழாக்கள் – முன்னின்று நடத்தினார்.
- வ.உ.சி , சுப்ரமணிய சிவா வழக்கு ஆகியோர்க்கு வாதாடியவர்
- கட்டளை அல்லது நல்ல தமிழ் நடைக்கு, எளிதில் பொருள் விளங்கும் தெளிவு இன்றியமையாதது. இயல் வழக்கில்லா அருஞ் சொற்களும் பொருள் பல குறித்து மருளவைக்கும் பொதுச் சொற்களும் விரவும் நடையைச் செய்யுள் வழக்கில் ஒருவரும் விரும்பார்.
- எளிமையும் தெளிவும் எழுத்திலும் பேச்சிலும் எம்மொழி நடைக்கும் இனிமையும் எழிலும் என்றும் உதவும் என்பது எல்லார்க்கும் உடன்பாடு.

வை.மு.கோதைநாயகி :

- வைத்தாமாநிதி முடும்பை கோதைநாயகி அம்மாள்
- நாவல் இராணி, கதா மோகினி, ஏக அரசி
- இந்திர மோகனா – நாடக நூல்
- செய்தி தாள் ஜகன் மோகினி – 35 ஆண்டுகள்
- மேடைப் பேச்சில் காந்தியக் கொள்கையை பரப்புரை செய்தார்
- தபால் வினோதம் – குறுநாவல்

மா. இராசமாணிக்கனார்:

- புத்தகங்கள் : சிந்து வெளி நாகரிகம் பற்றி ‘‘மொகஞ்சதாரோ அல்லது சிந்துவெளி நாகரிகம்’’, சோழர் வரலாறு , பல்லவர் வரலாறு , பெரியபுராண ஆராய்ச்சி, தமிழ்நாட்டு வட எல்லை, பத்துப்பாட்டு ஆராய்ச்சி.
- 2006 – 2007 நாட்டுடமையாக்கப்பட்டன இவரது படைப்புகள்

வ.சு.ப மாணிக்கம் :

- தமிழ் இமயம்
- ‘‘எங்கும் தமிழ் எதிலும் தமிழ்’’என்பதற்காக தமிழ் வழிக் கல்வி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.
- தமிழ் யாப்பியல் வரலாறும் வளர்ச்சியும் ஆய்வு.
- புத்தகங்கள் – தமிழ்க் காதல், வள்ளுவம், கம்பர், சங்கநெறி
- தமிழுக்கு புதிய சொல்லாக்கங்களையும் உவமைகளையும் உருவாக்கி தருவதில் தனி ஈடுபாடு கொண்டவராக திகழ்ந்தவர்.
- தமிழ்நாடு திருவள்ளுவர் விருது பெற்றவர்.
- 2006 படைப்புகள் நாட்டுடமையாக்கப்பட்டன.

கவிதைப்பேழை

இயல் 4

தொல்காப்பியம்

சிறப்புப் பாயிர உரைவிளக்கப் பாடல்

28JXZ6

நுழையும்முன்

தொல்காப்பியரால் தொகுத்தும் பகுத்தும் சேர்த்தும் எழுதப்பட்ட நூல் தொல்காப்பியமாகும். இந்நூல் எழுத்து, சொல் மட்டுமன்றிப் பொருள் இலக்கணமான வாழ்வின் இலக்கணத்தையும் வகுத்துக் கூறுவதாகும். நாட்டின் எதிர்காலமாய் விளங்கும் மாண்பு பொருந்திய மாணவர் எவ்வாறு கற்க வேண்டும் என்பதை இதன் சிறப்புப் பாயிர உரைவிளக்கப் பாடல் தெள்ளிதின் விளக்குகிறது.

வழக்கின் இலக்கணம் இழுக்கின்று அறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்துஅவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்தல் என்றின்னவை
கடனாக் கொளினே மடம்நனி இகக்கும். 1

ஒருகுறி கேட்போன் இருகாற் கேட்பிற்
பெருக நூலிற் பிழைபா டிலனே. 2

முக்காற் கேட்பின் முறையறிந்து உரைக்கும். 3



சொல்லும் பொருளும்

இகக்கும்- நீக்கும்; இழுக்கு- குற்றம்; வினாயவை- கேட்டவை.

பாடலின் பொருள்

சிறப்புடைய மாணவர் எனப்படுவோர் உலக வழக்கு, நூல் வழக்கு ஆகிய இலக்கணங்களை ஆசிரியர்களிடம் குற்றமின்றி அறிவர்; பாடங்களைப் போற்றிக் கற்பர். ஆசிரியர்களிடம் கற்ற பாடங்களை மீண்டும் நினைத்துப் பயிற்சி பெறுவர். ஆசிரியரை அணுகிப் பாடக்கருத்துகளைக் கேட்டுத் தெளிவு அடைவர். ஆசிரியர்களைப் போன்ற உயர்சிந்தனை உடையவர்களுடன் கலந்துரையாடி விளக்கம் பெறுவர். தங்களது ஐயங்களை ஆசிரியர்களிடம் வினவித் தெளிவுறுவர். அவ்வாறு தெளிவுற்ற கருத்துகளைப் பிறர்க்கு உணர்த்தித் தெளிவடையச் செய்வர். ஆசிரியர் கூறும் கருத்துகளை ஒருமுறைக்கு இருமுறை கேட்கும் மாணவர்கள் நூலைப் பிழையின்றிக் கற்கும் திறன் பெறுவர். மூன்றுமுறை கேட்போர் பாடக்கருத்துகளைப் பிறர்க்கு முறையாக எடுத்துரைக்கும் ஆற்றல் பெறுவர். இத்தன்மையில் பாடம் கேட்டலைக் கடமையாகக் கொண்ட மாணவர்கள் அறியாமையிலிருந்து நீங்கிச் சிறந்து விளங்குவர்.

இலக்கணக்குறிப்பு

அறிதல், போற்றல், நினைத்தல், கேட்டல், பயிறல் – தொழிற்பெயர்கள்;
நனிஇகக்கும் – உரிச்சொற்றொடர்

பகுபத உறுப்பிலக்கணம்

விடுத்தல் – விடு + த் + தல்

விடு – பகுதி; த் – சந்தி;

தல் – தொழிற்பெயர் விகுதி.

அறிந்து – அறி + த்(ந்) + த் + உ

அறி – பகுதி. த் – சந்தி, ந் ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

உ – வினையெச்ச விகுதி.

புணர்ச்சி விதி

இழுக்கின்றி – இழுக்கு + இன்றி

உயிர் வரின் உக்குறள் மெய் விட்டோடும்

– இழுக்க் + இன்றி

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – இழுக்கின்றி.

முறையறிந்து – முறை + அறிந்து

இ ஈ ஐ வழி யவ்வும் – முறை + ய் + அறிந்து

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – முறையறிந்து.

உ

தொல்காப்பியம்.

இரண்டு

இமதக்கினிமகரிஷியின் புத்திரரும்,
அகஸ்திய மகரிஷியின் முதன் மாணாக்கரு
மாயெத்திராண தாமச்சினென்னுமியற்பெயரையுடைய

தொல்காப்பியமகரிஷியினால்

அருளிச்செய்யப்பட்டது.

இதில்

முதலாவது - எழுத்ததிகாரமூலமும்,
மதுரை ஆசிரியர் பாரத்துவாசி

நச்சினார்க்கினியரால்

அருளிச்செய்யப்பட்ட வதனாயும்,
காலிதங்களாலாய வழுக்களை நீக்கி பச்சிட்டுத் தருவெனச் செ
லித்தலான்ன் கேட்டுக்கொள்ளக் கனம் பொருந்திய
தம்பேனி பாரால் ஏற்படுத்தப்பட்ட பூதிவி
சிட்டியென்னுஞ் சகல சாஸ்திர
சாலைத் தமிழ்த் தலைமைப்
புலமைதாடாதிய
மழை வை

மகாலிங்கையரவர்களால்

பலபிரதிகளைக்கொண்டாராயப்பட்டுத்
திருவண்ணாமலை

வீரபத்திரையரால்

தமது-கல்விக்கடல் அச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டன.

சாலிவாகன - ஆயிரத்து - தளாவதினி - சரியான பிலவங்க (ஆம்) ஆவணியீ.

தொல்காப்பியம் முதல் பதிப்பு (1847) முகப்புப் பக்கம்

நூல்வெளி

நமக்குக் கிடைக்கும் தமிழ் நூல்களில் காலத்தால் பழமையான இலக்கணநூல் தொல்காப்பியம். இதன் ஆசிரியர் தொல்காப்பியர். தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒன்பது இயல்களாக மொத்தம் இருபத்தேழு இயல்கள் உள்ளன. தொல்காப்பியத்திற்குப் பலர் உரை எழுதியுள்ளனர். அவர்களுள் பழமையான உரையாசிரியர்கள் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், கல்லாடனார், சேனாவரையர், தெய்வச்சிலையார், பேராசிரியர் ஆகியோர் ஆவர். நச்சினார்க்கினியரின் சிறப்புப்பாயிர உரைவிளக்கத்தில் உள்ள பாடல் பாடமாக இடம் பெற்றுள்ளது.

கற்பவை கற்றபின்...

தொல்காப்பியம் குறித்து நீங்கள் அறிந்த செய்திகளைத் தொகுத்து ஒப்படைவு உருவாக்குக.

கவிதைப் பேழை

தொழில்நுட்பம்

சு

உயிர்வகை

– தொல்காப்பியர்

நுழையும்முன்

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புல உணர்வுகளின் வாயிலாகவே அறிவு என்பதை நாம் பெறுகிறோம். இதற்குரிய பொறிகளான கண், காது, வாய், மூக்கு, உடல் என்னும் ஐந்து உறுப்புகளில் எது குறைந்தாலும் குறிப்பிட்ட ஓர் அனுபவத்தை இழந்துவிடுவோம். ஆனால், அனைத்து உயிரினங்களுக்கும் இந்தப் புலன் அறிவுகள் எல்லாம் இருப்பதில்லை. இதைக் கொண்டு உயிரினங்களைப் புலன்களின் எண்ணிக்கை அடிப்படையில் முன்னோர் பகுத்தனர். ஆறாவது அறிவு மனத்தால் அறியப்படுவது என்பர்.

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
*நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே**

(நூ.எ.1516)

9th_Tamil_Pages 001-121.indd 105 22-12-2020 15:38:56

இலக்கணக்குறிப்பு

உணர்ந்தோர் – வினையாலணையும் பெயர்.

பகுபத உறுப்பிலக்கணம்

நெறிப்படுத்தினர் – நெறிப்படுத்து+இன்+அர்

நெறிப்படுத்து – பகுதி

இன் – இறந்தகால இடைநிலை

அர் – பலர்பால் வினைமுற்று விகுதி

அறிவுநிலை	அறியும் ஆற்றல்	உரையாசிரியர்களின் எடுத்துக்காட்டு
ஓரறிவு	உற்றறிதல் (தொடுதல் உணர்வு)	புல், மரம்
ஈரறிவு	உற்றறிதல் + சுவைத்தல்	சிப்பி, நத்தை
மூவறிவு	உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல்	கரையான், எறும்பு
நான்கறிவு	உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல்	நண்டு, தும்பி
ஐந்தறிவு	உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் + கேட்டல்	பறவை, விலங்கு
ஆறறிவு	உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் + கேட்டல் +பகுத்தறிதல் (மனம்)	மனிதன்

நூல் வெளி

தமிழ்மொழியில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கணநூல் தொல்காப்பியம். இதனை இயற்றியவர் தொல்காப்பியர். தொல்காப்பியம் பிற்காலத்தில் தோன்றிய பல இலக்கண நூல்களுக்கு முதல் நூலாக அமைந்திருக்கிறது. இது எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களையும் 27 இயல்களையும் கொண்டுள்ளது. எழுத்து, சொல் அதிகாரங்களில் மொழி இலக்கணங்களை விளக்குகிறது. பொருளதிகாரத்தில் தமிழரின் அகம், புறம் சார்ந்த வாழ்வியல் நெறிகளையும் தமிழ் இலக்கியக் கோட்பாடுகளையும் இந்நூல் விளக்குகிறது. இந்நூலில் பல அறிவியல் கருத்துகள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாகப் பிறப்பியலில் எழுத்துகள் பிறக்கும் இடங்களை உடற்கூற்றியல் அடிப்படையில் விளக்கியிருப்பதை அயல்நாட்டு அறிஞர்களும் வியந்து போற்றுகின்றனர். இது தமிழர்களின் அறிவாற்றலுக்குச் சிறந்த சான்றாகும்.

கற்பவை கற்றபின்...

1. அ. தட்டான் பூச்சி தாழப்பறந்தால் தப்பாமல் மழை வரும்.

   ஆ. வானில் பறக்குது குதிரை
   பறக்கப் பறக்க வால் குறையும் குதிரை – அது என்ன?

   –இவை போன்ற அறிவியல் செய்திகள் கொண்ட பழமொழிகள், விடுகதைகளைப் படித்தும் கேட்டும், அவற்றின் அறிவியல் அடிப்படையை வகுப்பறையில் கலந்துரையாடுக.

2. 'விமான நிலையத்தில் நான்' – கற்பனையாகக் கதை ஒன்றினை எழுதுக.

9th_Tamil_Pages 001-121.indd 106 22-12-2020 15:38:56

கவிதைப்பேழை

நாகரிகம் | ரு

தெய்வமணிமாலை

– இராமலிங்க அடிகள்

JJA86B

நுழையும்முன்

ஆன்மநேய ஒருமைப்பாட்டையும் சமய ஒருமைப்பாட்டையும் ஒளி வழிபாட்டையும் முன்வைத்த சீர்திருத்தச் சிந்தனை உருவான இடம் சென்னை. இவ்வுண்மை நெறியை உருவாக்கி வளர்த்த வள்ளலார், சென்னையில் வாழ்ந்து வடலூர் சென்று ஆன்மிக மையத்தை ஏற்படுத்தினார். அவரது சிந்தனைகளின் ஊற்றுக்களமாக இருந்தது கந்தகோட்டம்.

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
*பிடியா திருக்கவேண்டும்**
மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டும்உனை
மறவா திருக்கவேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில்நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே!
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே! (8)



பா வகை : பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பாடலின் பொருள்

அறம் செய்வார் நிறைந்திருக்கும் சென்னையின் கந்தகோட்டத்துத் திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் கந்தவேளே! குளிர்ந்த முகத்தோற்றத்தையுடைய தூய மாணிக்க மணியே! அம்மணிகளுள் அருள்நிறைந்த சைவமணியே! எனக்கு ஒருநெறிப்பட்ட மனத்துடன் நின்னுடைய மலர்போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்; உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாகப் பேசும் வஞ்சகர்தம் உறவு என்னைப் பற்றாதவாறு காக்க வேண்டும்; பெருமை சான்ற நினது புகழையே நான் பேச வேண்டும்; பொய் பேசாதிருக்க வேண்டும்; சிறந்த வாழ்வியல் நெறியைப் பின்பற்றுமாறு எனக்கு அருள வேண்டும்; மதமான பேய் என்னை அணுகாதிருக்க வேண்டும்; துறவுக்கு எதிரான பெண்ணாசையை என் மனம் மறக்க வேண்டும்; என்றும் உன்னை மறவாதிருக்க வேண்டும்; மதியும் நின் கருணையாகிய நிதியும் நோயற்ற வாழ்வும் உடையவனாக நான் இருக்க வேண்டும்; ஆறுமுகங்களை உடைய தெய்வமாகிய மணியே, இத்தகைய சிறப்புகளை நீ எனக்கு அருள்வாயாக.

இலக்கணக் குறிப்பு

மலரடி – உவமைத்தொகை

வளர்தலம் – வினைத்தொகை

உறுப்பிலக்கணம்

நினைக்கின்ற = **நினை + க் + கின்று + அ**
நினை – பகுதி; க் – சந்தி; கின்று – நிகழ்கால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி.

வைத்து = **வை + த் + த் + உ**
வை – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

பேசுவார் = **பேசு + வ் + ஆர்**
பேசு – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

புணர்ச்சி விதி

உள்ளொன்று = உள் + ஒன்று
விதி : 'தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்' – உள்ள் + ஒன்று
விதி : 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – உள்ளொன்று.

ஒருமையுடன் = ஒருமை + உடன்
விதி : 'இஈஐவழி யவ்வும்' – ஒருமை + ய் + உடன்
விதி : 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – ஒருமையுடன்.

நூல்வெளி

பாடப்பகுதியிலுள்ள பாடல், இராமலிங்க அடிகள் இயற்றிய திருவருட்பாவில் ஐந்தாம் திருமுறையில் இடம்பெற்ற தெய்வமணிமாலை என்னும் பாமாலையில் உள்ளது. இப்பாடல் சென்னை, கந்தகோட்டத்து முருகப்பெருமானின் அருளை வேண்டும் தெய்வமணிமாலையின் 8ஆம் பாடல். சமரச சன்மார்க்க நெறிகளை வகுத்தவரும் பசிப்பிணி போக்கியவருமான அடிகள் சிதம்பரத்தை அடுத்த மருதூரில் பிறந்தார். சிறுவயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தார். இம்மண்ணில் ஆன்மநேய ஒருமைப்பாடு எங்கும் தழைக்கவும் உண்மைநெறி ஓங்கவும் உழைத்தவர் அடிகளார். வாடிய பயிரைக் கண்டபோது வாடிய அவ்வள்ளலின் பாடல்கள் ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கும் தன்மையுடையவை. திருவருட்பா, ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. 'மனுமுறை கண்ட வாசகம்', 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' ஆகியவை இவருடைய உரைநடை நூல்கள்.

கற்பவை கற்றபின்...

தெய்வமணிமாலைப் பாடல் கருத்துகளுக்கு இணையான திருக்குறள்களைத் தொகுத்து வருக.

XII Std Tamil Chap_5.indd 112 17-12-2020 16:52:15

கவிதைப்பேழை

இயல் எட்டு

பராபரக் கண்ணி

L6INXS

அற இலக்கியங்கள் நம் முன்னோர்களின் வாழ்க்கை அனுபவங்களை உள்ளடக்கியவை. அவை வாழ்வியல் நெறிகளையும் ஒழுக்கங்களையும் விளக்குபவை. நம் தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள் உலகம் முழுமைக்கும் பொதுவானவை. அற இலக்கியங்கள் கூறும் கருத்துகளைக் கடைப்பிடித்து வாழ்வதே சிறந்த வாழ்வு. அவற்றை நாமும் பின்பற்றுவோம்; வாழ்வை வளமாக்குவோம்.

தம்உயிர்போல் எவ்வுயிரும் தானென்று தண்டருள்கூர்
*செம்மையருக்கு ஏவல்என்று செய்வேன் பராபரமே!**

அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே!

எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
*அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே!**

– தாயுமானவர்

சொல்லும் பொருளும்

தண்டருள்	–	குளிர்ந்த கருணை	பணி	–	தொண்டு
கூர்	–	மிகுதி	எய்தும்	–	கிடைக்கும்
செம்மையருக்கு	–	சான்றோருக்கு	எல்லாரும்	–	எல்லா மக்களும்
ஏவல்	–	தொண்டு	அல்லாமல்	–	அதைத்தவிர
பராபரமே	–	மேலான பொருளே			

பாடலின் பொருள்

அனைத்து உயிர்களையும் தம் உயிர்போல் கருதும் கருணை மிகுந்த சான்றோர்க்குத் தொண்டு செய்ய வேண்டும்.

அன்பர்களுக்குத் தொண்டு செய்பவராக என்னை ஆக்கிவிட்டால் போதும். இன்பநிலை தானே வந்து சேரும்.

எல்லாரும் இன்பமாக வாழ வேண்டும். அதைத்தவிர, வேறு எதையும் நினைக்க மாட்டேன்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 166 20-03-2020 17:42:50

நூல் வெளி

இப்பாடலை எழுதியவர் தாயுமானவர். திருச்சியை ஆண்ட விசயரகுநாத சொக்கலிங்கரிடம் தலைமைக் கணக்கராகப் பணி புரிந்தவர்.



இப்பகுதி தாயுமானவர் பாடல்கள் என்னும் நூலில் உள்ளது. இந்நூலைத் தமிழ் மொழியின் உபநிடதம் எனப் போற்றுவர். இப்பாடல்கள் 'பராபரக் கண்ணி' என்னும் தலைப்பில் உள்ளன. 'கண்ணி' என்பது இரண்டு அடிகளில் பாடப்படும் பாடல்வகை.

கற்பவை கற்றபின்

1. உங்கள் வீட்டில் வளர்க்கும் உயிரினங்கள் பற்றிக் கூறுக.
2. நீங்கள் பிறர் மகிழும்படி செய்த நிகழ்வுகளைக் கூறுக.

மதிப்பீடு

L6SJZF

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. தம் + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____
   அ) தம்முயிர் ஆ) தமதுயிர் இ) தம்உயிர் ஈ) தம்முஉயிர்
2. இன்புற்று + இருக்க என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____
   அ) இன்புற்றிருக்க ஆ)இன்புறுறிருக்க இ) இன்புற்றுஇருக்க ஈ) இன்புறு இருக்க
3. 'தானென்று' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____
   அ) தானெ + என்று ஆ)தான் + என்று இ) தா + னென்று ஈ) தான் + னென்று
4. 'சோம்பல்' என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச்சொல் _____
   அ) அழிவு ஆ) துன்பம் இ) சுறுசுறுப்பு ஈ) சோகம்

நயம் அறிக

பராபரக்கண்ணி பாடலில் இடம் பெற்றுள்ள எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

குறுவினா

1. யாருக்குத் தொண்டு செய்ய வேண்டும்?
2. இன்பநிலை எப்போது வந்து சேரும்?

சிறுவினா

பராபரக்கண்ணியில் தாயுமானவர் கூறுவன யாவை?

சிந்தனைவினா

குளிரால் வாடுபவர்களுக்கு நீங்கள் எவ்விதம் உதவுவீர்கள்?

6th Std Tamil CBSE Pages 77-206.indd 167 20-03-2020 17:42:52

இயல் நான்கு

பல்துறைக் கல்வி

B5KNXE

நுழையும்முன்

கேடில் விழுச்செல்வம் கல்வி. மனிதன் விலங்கிலிருந்து மாறுபட்டு உயர்ந்து நிற்பதற்கு அடிப்படையாய் விளங்குவது கல்வி ஆகும். மனித சமுதாயத்தின் வளர்ச்சியிலும் அதைச் சீர்திருத்தி இட்டுச் செல்வதிலும் கல்வி பெரும்பங்கு வகிக்கிறது. மனித ஆற்றலை மேம்படுத்தவும் பண்பாட்டினைக் காக்கவும் அறிவியலை வளர்க்கவும் நாட்டுப்பற்றை ஊட்டிடவும் சான்றோர் பலர் பெரிதும் முயன்றனர். அவ்வகையில் திரு.வி.க.வின் கல்விச் சீர்திருத்தச் சிந்தனைகளை அறிவோம்.

அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது கல்வி எனப்படும். மனிதர்களது வாழ்வில் உடலோம்பலுடன் அறிவோம்பலும் நிகழ்ந்து வரல் வேண்டும். அறிவோம்பலுக்குக் கல்வி தேவை. அக்கல்விப் பயிற்சிக்குரிய பருவம் இளமை என்பதை விளக்க வேண்டுவதில்லை. இது பற்றியே இளமையில் கல் என்னும் முதுமொழி பிறந்தது.

ஏட்டுக்கல்வி

இந்நாளில் ஏட்டுக்கல்வியே கல்வி என்னும் ஒரு கொள்கை எங்கும் நிலவி வருகிறது. ஏட்டுக்கல்வி மட்டும் கல்வி ஆகாது. இந்நாளில் கல்வியென்பது பொருளற்றுக் கிடக்கிறது. குறிப்பிட்ட பாடங்களை நெட்டுருச் செய்து, தேர்வில் தேறிப் பட்டம் பெற்று, ஒரு தொழிலில் நுழைவதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது. நாளடைவில் அக்கல்விக்கும் வாழ்விற்கும் தொடர்பில்லாமல் போகிறது. இது கல்வியாகுமா?

ஏட்டுக் கல்வி மட்டுமன்றித் தொழிற்கல்வி முதலியனவும் கல்வியின் பாற்பட்டனவே. கல்வித்துறைகள் பல திறத்தன. அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவர் இயல்புக்குப் பொருந்தியதாகத் தோன்றும். அப்பொருந்திய ஒன்றில் சிறப்பு அறிவு பெறவும் பிறவற்றில் பொது அறிவு பெறவும் அவரவர் முயல்வது ஒழுங்காகும். தொழில் நோக்குடன் கல்வி பயிலுதல் வேண்டா என்றும் அறிவு விளக்கத்தின் பொருட்டுக் கல்வி பயிலுதல் வேண்டும் என்றும் இயற்கை அன்னை எச்சரிக்கை செய்தவண்ணமிருக்கிறாள். அவ்வெச்சரிக்கைக்கு

மாணாக்கர் செவி சாய்த்து நடப்பாராக. அறிவு விளக்கத்துக்கெனக் கல்வி பயின்று, அவ்வறிவை நாட்டுத் தொழில்துறைகளைப் புதிய முறைகளில் வளர்க்கப் பயன்படுத்துவாராக.

தெரிந்து தெளிவோம்

கல்வி என்பது வருவாய் தேடும் வழிமுறை அன்று. அது மெய்ம்மையைத் தேடவும் அறநெறியைப் பயிலவும் மனித ஆன்மாவுக்குப் பயிற்சியளிக்கும் ஒரு நெறிமுறையாகும்.

– விஜயலட்சுமி பண்டிட்
ஐ. நா. அவையின் முதல் பெண் தலைவர்

தாய்மொழி வழிக்கல்வி

நாம் தமிழ் மக்கள்; நாம் நமது தாய்மொழி வாயிலாகக் கல்வி பெறலே சிறப்பு. அதுவே இயற்கை முறை. போதிய ஓய்வும் நேரமும் வாய்ப்பும் இருப்பின் வேறு பல மொழிகளையும் பயிலலாம். ஆனால் முதல் முதல் தாய் மொழி வாயிலாகவே கல்வி பயிலுதல் வேண்டும். தாய்நாடு என்னும் பெயர் தாய்மொழியைக் கொண்டே பிறப்பது.

தமிழ்வழிக் கல்வி

தமிழிலேயே கல்வி போதிக்கத் தமிழில் போதிய கலைகளில்லையே; சிறப்பான அறிவியல் கலைகளில்லையே என்று சிலர் கூக்குரலிடுகிறார். அவரவர் தாம் கண்ட புதுமைகளை முதல் முதல் தம் தாய்மொழியில் வரைந்துவிடுகிறார். அவை பின்னே பல மொழிகளில் பெயர்த்து எழுதப்படுகின்றன. அம்மொழிபெயர்ப்பு முறையைத் தமிழர் கொண்டு ஏன் தாய்மொழியை வளர்த்தல் கூடாது? குறியீடுகளுக்குப் பல மொழிகளினின்றும் கடன் வாங்குவது தமிழுக்கு இழுக்காகாது. கலப்பில் வளர்ச்சியுண்டென்பது இயற்கை நுட்பம். தமிழை வளர்க்கும் முறையிலும் அளவிலும் கலப்பைக் கொள்வது சிறப்பு. ஆகவே, தமிழ்மொழியில் அறிவுக்கலைகள் இல்லை என்னும் பழம்பாட்டை நிறுத்தி, அக்கலைகளைத் தமிழில் பெயர்த்து எழுதித் தாய்மொழிக்கு ஆக்கந் தேடுவோம் என்னும் புதுப்பாட்டைப் பாடுமாறு சகோதரர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கலைகள் யாவும் தாய்மொழி வழி மாணாக்கர்க்கு அறிவுறுத்தப் பெறுங் காலமே, தமிழ்த்தாய் மீண்டும் அரியாசனம் ஏறும் காலமாகும்.

காப்பியக் கல்வி

வாழ்விற்குரிய இன்பத்துறைகளுள் காவிய இன்பமும் ஒன்று. அதைத் தலையாயது என்றும் கூறலாம். நாம் தமிழர்கள். நாம் பாட்டின்பத்தை நுகர வேண்டுமேல் நாம் எங்குச் செல்லல் வேண்டும்? தமிழ் இலக்கியங்களுக்கிடையே அன்றோ? தமிழில் இலக்கியங்கள் பலப்பல இருக்கின்றன. இயற்கை ஓவியம் பத்துப்பாட்டு, இயற்கை இன்பக்கலம் கலித்தொகை, இயற்கை வாழ்வில்லம் திருக்குறள், இயற்கை இன்பவாழ்வு நிலையங்கள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும், இயற்கைத் தவம் சிந்தாமணி, இயற்கைப் பரிணாமம் கம்பராமாயணம், இயற்கை அன்பு பெரியபுராணம், இயற்கை இறையுறையுள் தேவார திருவாசக திருவாய் மொழிகள். இத்தமிழ்க் கருவூலங்களை உன்ன உன்ன உள்ளத்தெழும் இன்ப அன்பைச் சொல்லால் சொல்ல இயலாது. இளைஞர்களே! தமிழ் இளைஞர்களே! பெறற்கரிய இன்ப நாட்டில் பிறக்கும் பேறு பெற்றிருக்கிறீர்கள்! தமிழ் இன்பத்திலுஞ் சிறந்த இன்பம் இவ்வுலகிலுண்டோ? தமிழ்க் காவியங்களைப் படியுங்கள். இன்பம் நுகருங்கள்.

இயற்கைக் கல்வி

நீங்கள் ஏடுகளைப் பயில்வதுடன் நில்லாது, ஓய்ந்த நேரங்களில் இயற்கை நிலையங்களில் புகுந்து, இயற்கைக் கழகத்தில் நின்று, இயற்கைக் கல்வி பயில்வீர்களானால், இயற்கையோடியைந்த வாழ்வு நடத்த வல்லவர்களாவீர்கள். காடு செறிந்த ஒரு மலை மீது ஏறி, ஒரு மரத்தடியில் நின்று, மண்ணையும் விண்ணையும் நோக்குங்கள். இயற்கை ஓவியத்தைக் கண்டு கண்டு மகிழுங்கள். மண் வழங்கும் பரந்த பசுமையிலும் வெண்மையிலும் விண் வழங்கும் நீலத்திலும் தோய்ந்து திளையுங்கள். காலையில் இளஞாயிறு, கடலிலும் வானிலும் செக்கர் உமிழ்ந்து எழுங்காட்சியை நெஞ்சில் எழுதுங்கள்.

அருவி முழவும் குயில் குரலும் வண்டிசையும் மயில் அகவலும் மலர் மணமும் தேனினிமையும் தென்றல் வீசலும் புலன்களுக்கு விருந்தாகும் இயற்கை அன்னையைப் பாருங்கள். ஆங்கே சூழ்ந்துள்ள செடி, கொடி மரங்களையும் பறவைகளையும் விலங்குகளையும் உற்றுநோக்கி, சில செடிகள் பூமியில் பரந்தும் சில செடிகள் எழுந்து நின்றும் சில கொடிகள் சுருண்டு சுருண்டு படர்ந்தும் இருப்பதற்கும், சில மரங்கட்கு நீள் கிளையும் கிளிக்கு வளைந்த மூக்கும் யானைக்குத் துதிக்கையும் மானிற்குக் கொம்பும் அமைந்திருப்பதற்கும் என்ன காரணம்? என்று சிந்தியுங்கள்.

அந்தியில் ஞாயிறு அமருங் கோலத்தையும் பறவைகள் பறந்து செல்வதையும் கால்நடைகளின் மணியோசையையும் காணுங்கள்; கேளுங்கள். இவ்வாறு, இயற்கைக் கழகத்தில் பயின்றுபயின்று சங்கப்புலவர் இளங்கோ, திருத்தக்கத்தேவர், திருஞானசம்பந்தர், ஆண்டாள், சேக்கிழார், கம்பர், பரஞ்சோதி முதலியோர் இயற்கைக் கோலத்தை எவ்வாறு எழுத்தோவியத்தில் இறக்கியிருக்கின்றனர் என்று ஆராயுங்கள். நந்தமிழ்க் காவியங்களும், ஓவியங்களும் இயற்கை அமிழ்தாய் உயிரையும் உடலையும் பேணுவதை உணர்வீர்கள்.

இசைக்கல்வி

இன்றைய சூழலில் இசைப்பயிற்சியும் இன்றியமையாதது. இசை பாட இயற்கை சிலருக்குத் துணை செய்யும்; சிலர்க்குத் துணை செய்வதில்லை. அத்துணை பெறாதார் இசை இன்பத்தையாதல் நுகரப் பயில்வாராக. பழைய தமிழர் இசைத்துறையின் நிலை கண்டவர் என்று ஈண்டு இறுமாந்து கூறுகிறேன். தமிழ் யாழையும் குழலையும் என்னென்று சொல்வது? அந்த முகரங்களை நினைக்கும் போதே அமிழ்தூறுகிறது. கொடிய காட்டு வேழங்களையும் பாணர் தம் யாழ் மயக்குறச் செய்யுமாம். அந்த யாழ் எங்கே? இனி இசைப் புலவர்தொகை நாட்டிற்

தெரிந்து தெளிவோம்

ஏடன்று கல்வி; சிலர் எழுதும் பேசும்
இயலன்று கல்வி; பலர்க் கெட்டா தென்னும்
வீடன்று கல்வி; ஒரு தேர்வு தந்த
விளைவன்று கல்வி; அது வளர்ச்சி வாயில்

– குலோத்துங்கன்

www.cbsetamil.com

8th Std Tamil _20-12-2019.indd 76 03-01-2020 19:34:38

பெருகப் பெருக நாடு பல வழியிலும் ஒழுங்கு பெறுதல் ஒருதலை. ஆகவே அத்துறை மீதும் மாணவர் கருத்துச் செலுத்துவாராக.

நாடகக்கல்வி

நாடகக்கல்வி வாழ்விற்கு வேண்டா என்று யான் கூறேன். இடைக்காலத்தில் நாடகக் கலையால் தீமை விளைந்தபோது அதைச் சிலர் அழிக்க முயன்றதுண்டு. இப்போதைய நாடகம் நன்னிலையில்லை என்பதை ஈண்டு விளக்க வேண்டுவதில்லை. நாடகத்துக்கு நல்வழியில் புத்துயிர் வழங்க வேண்டும். நாடகத்தை நல்வழிப்படுத்தி மாணாக்கரை அதன்கண் தலைப்படுமாறு செய்யத் தமிழ்ப் பெரியோர் முயல்வாராக..

அறிவியல் கல்வி

உலக வாழ்விற்கு மிக மிக இன்றியமையாதது 'அறிவியல்' என்னும் அறிவுக்கலை. உடற்கூறு, உடலோம்பு முறை, பூதபௌதிகம், மின்சாரம், நம்மைச் சூழ்ந்துள்ள செடி, கொடி, பறவை, விலங்கு முதலியவற்றினியல், கோளியக்கம், கணிதம், அகத்திணை முதலியன வேண்டும். இந்நாளில் இவைகளைப் பற்றிய பொது அறிவாதல் பெற்றே தீரல் வேண்டும். புற உலக ஆராய்ச்சிக்கு அறிவியல் கொழுகொம்பு போன்றது. நம் முன்னோர் கண்ட பல உண்மைகள் அறிவியல் அரணின்றி இந்நாளில் உறுதிபெறல் அரிது. இக்கால உலகத்தோடு உறவு கொள்வதற்கும் அறிவியல் தேவை. ஆதலின் அறிவியல் என்னும் அறிவுக்கலை இளைஞருலகில் பரவல் வேண்டும்.

நூல் வெளி

திரு.வி.க. என்று அனைவராலும் குறிப்பிடப்படும் திருவாரூர் விருத்தாசலம் கல்யாணசுந்தரனார் அரசியல், சமுதாயம், சமயம், தொழிலாளர் நலன் எனப் பல துறைகளிலும் ஈடுபாடு கொண்டவர்; சிறந்த மேடைப் பேச்சாளர்; தமிழ்த்தென்றல் என்று அழைக்கப்படுபவர். இவர் மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை, தமிழ்ச்சோலை, பொதுமை வேட்டல், முருகன் அல்லது அழகு உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

இவரது இளமை விருந்து என்னும் நூலிலிருந்து சிலபகுதிகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

கற்பவை கற்றபின்

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஆகிய தொகுப்புகளில் இடம்பெறும் நூல்களின் பெயர்களைத் திரட்டி எழுதுக.

www.cbsetamil.com

8th Std Tamil _20-12-2019.indd 77 03-01-2020 19:34:38

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது _____.

   அ) விளக்கு ஆ) கல்வி இ) விளையாட்டு ஈ) பாட்டு

2. கல்விப் பயிற்சிக்குரிய பருவம் _____.

   அ) இளமை ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை

3. இன்றைய கல்வி _____ நுழைவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.

   அ) வீட்டில் ஆ) நாட்டில் இ) பள்ளியில் ஈ) தொழிலில்

நிரப்புக.

1. கலப்பில் _____ உண்டென்பது இயற்கை நுட்பம்.
2. புற உலக ஆராய்ச்சிக்கு _____ கொழுகொம்பு போன்றது.
3. வாழ்விற்குரிய இன்பத்துறைகளில் தலையாயது _____ இன்பம் ஆகும்.

பொருத்துக.

1. இயற்கை ஓவியம் – சிந்தாமணி
2. இயற்கை தவம் – பெரியபுராணம்
3. இயற்கைப் பரிணாமம் – பத்துப்பாட்டு
4. இயற்கை அன்பு – கம்பராமாயணம்

குறுவினா

1. இன்றைய கல்வியின் நிலை பற்றித் திரு. வி. க. கூறுவன யாவை?
2. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?
3. திரு. வி. க., சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.

சிறுவினா

1. தமிழ்வழிக் கல்வி பற்றித் திரு. வி. க. கூறுவனவற்றை எழுதுக.
2. அறிவியல் கல்வி பற்றித் திரு. வி. க. கூறுவன யாவை?

நெடுவினா

காப்பியக் கல்வி குறித்துத் திரு. வி. க. கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

சிந்தனை வினா

திரு. வி. க. குறிப்பிடும் பல்துறைக் கல்வியில் நீங்கள் எதனைக் கற்க விரும்புகிறீர்கள்?

www.cbsetamil.com

8th Std Tamil _20-12-2019.indd 78 03-01-2020 19:34:39

விரிவானம்

இயல் ஏழு

வேலுநாச்சியார்

L5H5R7

நுழையும்முன்

வணிகம் செய்ய வந்த ஆங்கிலேயர் சிறிது சிறிதாக நமது நாட்டைக் கைப்பற்றிக் கொண்டனர். அவர்களை எதிர்த்து வீரப்போர் புரிந்தவர்கள் பலர். அவர்களுள் வெற்றி பெற்றவர்கள் சிலரே. வீரமும் அதனால் விளையும் வெற்றியும் போருக்கு முக்கியமானவை. சூழ்நிலைக்கேற்பச் செயல்பட்டுப் பெறும் வெற்றியே சிறந்தது. விடுதலைப்போரில் ஆண்களுக்கு நிகராகச் செயல்பட்டு வெற்றி வாகை சூடிய பெண்களுள் ஒருவரைப் பற்றி அறிவோம் வாருங்கள்.

இராமநாதபுரத்தை ஆட்சி செய்த செல்லமுத்து மன்னரின் ஒரே மகள் வேலுநாச்சியார். தாய்மொழியாகிய தமிழ் மட்டும் அல்லாமல் ஆங்கிலம், பிரெஞ்சு, உருது ஆகிய மொழிகளையும் சிறப்பாகக் கற்றார். சிலம்பம், குதிரையேற்றம், வாட்போர், விற்பயிற்சி ஆகியவற்றையும் முறையாகக் கற்றுக் கொண்டார். சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்து மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தார்.

காளையார்கோவிலில் நடைபெற்ற போரில் முத்துவடுகநாதர் ஆங்கிலேயரால் நயவஞ்சகமாகக் கொல்லப்பட்டார். வேலுநாச்சியார் ஆங்கிலேயரை வென்று சிவகங்கையை மீட்க உறுதி பூண்டார். திண்டுக்கல் கோட்டையில் தங்கி ஒரு படையைத் திரட்டிப் பயிற்சி அளித்தார்.

எட்டு ஆண்டுகளுக்குப் பின்...

திண்டுக்கல் கோட்டையில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. கூட்டத்தின் நடுவே வீரமங்கை வேலுநாச்சியார் அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றி அமைச்சர் தாண்டவராயர், தளபதிகளாகிய பெரிய மருது, சின்ன மருது மற்றும் குறுநில மன்னர்கள் சிலர் இருந்தனர்.

"நாம் சிவகங்கையை இழந்து எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன" என்று வேலுநாச்சியார் கவலை நிறைந்த குரலில் கூறினார்.

"கவலைப்படாதீர்கள் அரசியாரே! நாம் சிவகங்கையை மீட்கும் நாள் நெருங்கிவிட்டது" என்றார் அமைச்சர் தாண்டவராயர்.

"அந்த இனிய நாளைத்தான் நானும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறேன்" என்றார் வேலுநாச்சியார்.

அப்போது வெளியே பெரும் ஆரவாரம் கேட்டது. "மைசூரிலிருந்து ஐதர்அலி அனுப்பிய படை வந்துவிட்டது என நினைக்கிறேன்" என்றார் வேலுநாச்சியார்.

அப்போது அறையின் வாயிலில் வீரன் ஒருவன் வந்து நின்றான். "அரசியாருக்கு வணக்கம். மைசூரில் இருந்து ஐயாயிரம் குதிரைப் படை வீரர்கள் வந்துள்ளனர்" என்றான். "அப்படியா! மகிழ்ச்சி. அவர்களை ஓய்வு எடுக்கச் சொல். நான் பிறகு வந்து பார்க்கிறேன்" என்றார் வேலுநாச்சியார். வீரன் வெளியேறினான்.

"ஐதர்அலி உறுதியாகப் படையை அனுப்புவார் என்று எனக்கு முன்பே தெரியும் அரசியாரே!" என்றார் அமைச்சர் தாண்டவராயர்.

"எதனால் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"நாம் இருவரும் ஐதர்அலியைச் சந்திக்க மைசூர் சென்றோம் அல்லவா? அப்போது தாங்கள் அவரிடம் உருதுமொழியில் பேசினீர்கள். அப்போது அவர் முகத்தில் பெரிய மகிழ்ச்சி தோன்றியதை நான் கண்டேன்" என்றார் தாண்டவராயர்.

"நம் அரசியாரின் பன்மொழி அறிவு நமக்குப் பெரிய நன்மையைத் தந்திருக்கிறது" என்றார் சின்ன மருது.

"ஆம். நமது வீரர்களுடன் ஐதர்அலியின் ஐயாயிரம் குதிரைப்படை வீரர்களும் சேர்ந்து விட்டனர். ஆகவே, நாளை சிவகங்கையை மீட்கப் புறப்படலாம் அல்லவா?" என்று கேட்டார் பெரிய மருது.

"என் கணவர் கொல்லப்பட்ட ஊர் காளையார்கோவில். எனவே, நாம் முதலில் காளையார்கோவிலைக் கைப்பற்றுவோம். பிறகு சிவகங்கையை

மீட்போம்" என்றார் வேலு நாச்சியார். அனைவரும் அதனை ஏற்றுக்கொண்டனர். மறுநாள் காளையார்கோவில் நோக்கி வேலுநாச்சியார் படை புறப்பட்டது. ஆண்கள் படைப்பிரிவுக்கு மருது சகோதரர்களும் பெண்கள் படைப்பிரிவுக்குக் குயிலியும் தலைமை ஏற்றனர்.

காளையார்கோவிலில் வேலுநாச்சியாரின் படைக்கும் ஆங்கிலேயரின் படைக்கும் இடையே கடுமையான போர் நடைபெற்றது. இறுதியில் ஆங்கிலேயரின் படை தோற்று ஓடியது.

"அரசியார் அவர்களே! காளையார்கோவில் நம் கைக்கு வந்து விட்டது. நாம் இப்போதே சிவகங்கைக் கோட்டையைத் தாக்கினால் ஆங்கிலேயரை விரட்டியடித்து விடலாம்" என்றார் பெரிய மருது. "அவசரம் வேண்டாம். இப்போது சிவகங்கைக் கோட்டைக் கதவுகள் அடைக்கப்பட்டிருக்கும். வரும் விசயதசமித் திருநாள் அன்று கதவுகள் திறக்கப்படும். அப்போது நமது படைகள் உள்ளே நுழையலாம்" என்றார் வேலுநாச்சியார்.

"அப்போதும் பெரிய காவல் இருக்குமே" என்றார் சின்ன மருது.

"விசயதசமி நாளில் கோட்டைக்குள் செல்வதற்குப் பெண்களுக்கு மட்டும் அனுமதி உண்டு. நமது பெண்கள் படைப்பிரிவினர் கூடைகளில் பூக்கள், பழங்கள் ஆகியவற்றுடன் ஆயுதங்களையும் மறைத்துக் கொண்டு கோட்டைக்குள் செல்லட்டும். உள்ளே அவர்கள் தாக்குதலைத் தொடங்கியதும் நமது ஆண்கள் படைப்பிரிவினரும் கோட்டைக்குள் நுழைந்து தாக்கட்டும். ஆங்கிலேயரை விரட்டியடித்து விடலாம்" என்றார் வேலுநாச்சியார்.

நடுகல்

"அப்படியே செய்யலாம் அரசியாரே! இன்னும் ஒரு செய்தி. தங்களைக் காட்டிக் கொடுக்குமாறு உடையாள் என்னும் பெண்ணை ஆங்கிலேயர்கள் வற்புறுத்தினார்களாம். அவர் மறுத்ததால் கொன்றுவிட்டார்களாம். அவருக்கு நாம் உரிய முறையில் சிறப்புச் செய்ய வேண்டும்" என்றார் அமைச்சர் தாண்டவராயர்.

"அவருக்கு ஒரு நடுகல் நடுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள் அமைச்சரே! அவரது பெருமையை எல்லோரும் அறிந்து கொள்ளட்டும்" என்றார் வேலுநாச்சியார்.

"அப்படியே செய்வோம்" என்றார் அமைச்சர்.

விசயதசமிக்கு முதல் நாள் சிவகங்கையை நோக்கிப் புறப்பட்டது படை. வழியில் உடையாளுக்காக நடப்பட்ட நடுகல் முன்பு குதிரையில் இருந்து இறங்கினார் வேலுநாச்சியார். தாம் வைத்திருந்த தாலியை எடுத்து அந்த நடுகல்லுக்குக் காணிக்கையாகச் செலுத்தி வணங்கினார். அருகில் நின்ற வீரர்கள் "உடையாள் புகழ் ஓங்குக" என்று முழக்கமிட்டனர்.

படை மறுநாள் காலை சிவகங்கையை அடைந்தது.

"அரசியாரே! நான் நமது பெண்கள் படைப்பிரிவுடன் மாறுவேடத்தில் உள்ளே செல்கிறேன். உள்ளே சென்றதும் அங்குள்ள ஆயுதக் கிடங்குக்கு எப்படியாவது தீ வைத்து விடுகிறேன். தீ எரிவது தெரிந்ததும் நம் படை உள்ளே நுழையட்டும்" என்று கூறினார் குயிலி.

"அப்படியே ஆகட்டும்" என்றார் வேலு நாச்சியார்.

தெரிந்து தெளிவோம்

- வேலுநாச்சியாரின் காலம் 1730–1796
- வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட ஆண்டு 1780.
- ஜான்சிராணிக்கு முன்பே ஆங்கிலேயரை எதிர்த்து வீரப்போர் புரிந்தவர் வேலு நாச்சியார்.

குயிலியும் பெண்கள் படையினரும் கோட்டைக்குள் சென்றனர். சிறிது நேரத்தில் கோட்டைக்குள் பெரும் கூச்சல் எழுந்தது. உள்ளே உயரமாகத் தீ எரிவது தெரிந்தது.

"நமது படை உள்ளே நுழையட்டும்" என்று ஆணையிட்டார் வேலுநாச்சியார். படை வீரர்கள் கோட்டைக்குள் பாய்ந்து சென்றனர். ஆங்கிலேயரின் படையுடன் கடுமையாகப் போரிட்டனர். இறுதியில் ஆங்கிலப்படை தோல்வியடைந்து கோட்டையைவிட்டு ஓடியது.

"வெற்றி! வெற்றி!" என்று முழக்கமிட்டனர் வீரர்கள்.

"இந்த வெற்றிக்குக் காரணமான குயிலி எங்கே?" என்று கேட்டார் வேலுநாச்சியார்.

"குயிலி தம் உடலில் தீ வைத்துக் கொண்டு ஆயுதக் கிடங்குக்குள் குதித்துவிட்டார்" என வீரர்கள் கூறினார்கள்.

"குயிலி தம் உயிரைத் தந்து நம்நாட்டை மீட்டுக் கொடுத்திருக்கிறார். அவரது துணிவுக்கும் தியாகத்திற்கும் வீரத்திற்கும் தலைவணங்குகிறேன்" என்று உணர்ச்சிப் பெருக்கோடு கூறினார் வேலுநாச்சியார்.

வேலுநாச்சியாரின் வீரம், மருது சகோதரர்களின் ஆற்றல், ஐதர்அலியின் உதவி ஆகியவற்றோடு குயிலியின் தியாகமும் இணைந்ததால் சிவகங்கை மீட்கப்பட்டது.

கற்பவை கற்றபின்

இக்கதையை நாடகமாக வகுப்பறையில் நடித்துக் காட்டுக.

மதிப்பீடு

L5R1SU

1. வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட நிகழ்வைச் சுருக்கமாக எழுதுக.

இயல் மூன்று

தேசியம் காத்த செம்மல் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்

தமது தொண்டால் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்த தலைவர்கள் பலர். நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டோர் பலர். சமுதாயப் பணி செய்தோர் பலர். அரசியல் பணி செய்தோர் பலர். இவை அனைத்தையும் ஒருசேரச் செய்து புகழ் பெற்ற தலைவர் ஒருவரைப் பற்றி அறிவோம்.

தேசியம் உடல், தெய்வீகம் உயிர் எனக் கருதி மக்கள் தொண்டு செய்தவர் பசும்பொன் உ. முத்துராமலிங்கத்தேவர். இவர் 'வீரப்பேச்சால் எத்தனையோ தியாகிகளையும் விவேகப்பேச்சால் எத்தனையோ அறிவாளிகளையும் உண்டாக்கியவர்; உண்மையை மறைக்காமல் வெளியிடுவதில் தனித்துணிச்சல் பெற்றவர்; சுத்தத் தியாகி' என்று தந்தை பெரியாரால் பாராட்டப்பட்டவர்.

இளமைக்காலம்

முத்துராமலிங்கத்தேவர் கி.பி.(பொ.ஆ.) 1908 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முப்பதாம் நாள் இராமநாதபுரம் மாவட்டத்தில் பசும்பொன் என்னும் ஊரில் செல்வச் செழிப்பு மிகுந்த குடும்பத்தில் பிறந்தார். அவருடைய பெற்றோர் உக்கிர பாண்டியத்தேவர் – இந்திராணி அம்மையார். இவர் இளமையிலேயே அன்னையை இழந்ததால் இசுலாமியத் தாய் ஒருவரால் பாலூட்டி வளர்க்கப்பட்டார்.

முத்துராமலிங்கத்தேவர் தன் தொடக்கக்கல்வியைக் கமுதியிலும் உயர்நிலைக் கல்வியை மதுரை பசுமலைப் பள்ளியிலும் இராமநாதபுரத்திலும் பயின்றார். இவர் இராமநாதபுரத்தில் படித்துக் கொண்டிருந்தபோது அவ்வூரில் பிளேக் நோய் பரவியதால் அவரது படிப்பு பாதியில் நின்றது. அதன்பிறகு தாமாகவே நிறைய நூல்களைப் படித்துத் தமது அறிவையும் ஆற்றலையும் வளர்த்துக் கொண்டார்.

பல்துறை ஆற்றல்

முத்துராமலிங்கத்தேவர் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் சொற்பொழிவு

தெரிந்து தெளிவோம்

1936 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் விருதுநகரில் போட்டியிடப் பெருந்தலைவர் காமராசர் முன் வந்தார். நகராட்சிக்கு வரி செலுத்தியவர்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட முடியும் என்னும் நிலை இருந்தது. எனவே, முத்துராமலிங்கத்தேவர் ஓர் ஆட்டுக்குட்டியை வாங்கிக் காமராசர் பெயரில் வரி கட்டி அவரைத் தேர்தலில் போட்டியிட வைத்தார்.

ஆற்றும் திறன் பெற்றிருந்தார். சிலம்பம், குதிரை ஏற்றம், துப்பாக்கிச்சுடுதல், சோதிடம், மருத்துவம் போன்ற பலதுறைகளிலும் ஆற்றல் உடையவராக விளங்கினார். முத்துராமலிங்கத்தேவர் இளமையிலேயே அரசியலில் ஆர்வம் கொண்டிருந்தார்.

விடுதலைப் போராட்டத்தில் பங்கு

முத்துராமலிங்கத்தேவர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றார். தமது பேச்சாற்றலால் ஆங்கில ஆட்சிக்கு எதிராக மக்களிடம் பெரும் எழுச்சியை ஏற்படுத்தினார். மேடைகளில் அவர் ஆற்றிய வீர உரையைக் கேட்ட மக்கள் ஆங்கில ஆட்சிக்கு எதிராக வீறுகொண்டு எழுந்தனர். அதனால் அச்சமடைந்த ஆங்கில அரசு பலமுறை அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. மேலும் வாய்ப்பூட்டுச் சட்டம் மூலம் மேடைகளில் அரசியல் பேசக்கூடாது என்று அவருக்குத் தடை விதித்தது. வடஇந்தியாவில் வாய்ப்பூட்டுச் சட்டத்தின்படி பேசத் தடை விதிக்கப்பட்ட தலைவர் பாலகங்காதர திலகர். அவரைப்போலவே தென்னாட்டில் அச்சட்டத்திற்கு ஆட்பட்ட தலைவர் முத்துராமலிங்கத்தேவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது விடுதலை வேட்கையை அறிந்த திரு. வி. கலியாணசுந்தரனார் தேசியம் காத்த செம்மல் என்று பாராட்டியுள்ளார்.

நேதாஜியுடன் தொடர்பு

வங்கச்சிங்கம் என்று போற்றப்பட்ட நேதாஜி சுபாஷ் சந்திரபோசுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அவரைத் தமது அரசியல் குருவாக ஏற்றுக்கொண்டார். முத்துராமலிங்கத்தேவரின் அழைப்பை ஏற்றுக் கி.பி.(பொ.ஆ.) 1939 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் ஆறாம் நாள் நேதாஜி மதுரைக்கு வருகை தந்தார். நேதாஜி தொடங்கிய இந்திய தேசிய இராணுவத்தில் முத்துராமலிங்கத்தேவரின் முயற்சியால் ஏராளமான தமிழர்கள் இணைந்தனர். விடுதலைக்குப்பின் நேதாஜி என்னும் பெயரில் வார இதழ் ஒன்றையும் நடத்தினார்.

பேச்சாற்றல்

தமது பேச்சாற்றலால் அனைவரையும் கவர்ந்தவர் முத்துராமலிங்கத்தேவர். அவர் முதன் முதலில் சாயல்குடி என்னும் ஊரில் விவேகானந்தரின் பெருமை என்னும் தலைப்பில் மூன்று மணிநேரம் உரையாற்றினார். அந்தக் கூட்டத்தில் பெருந்தலைவர் காமராசரும் இருந்தார். 'இது போன்ற ஒரு பேச்சை இதுவரை நான் கேட்டதில்லை; முத்துராமலிங்கத்தேவரின்

தெரிந்து தெளிவோம்

பசும்பொன்னில் உள்ள முத்துராமலிங்கத்தேவர் நினைவிடத்தில் அவர் தோன்றி மறைந்த அக்டோபர் முப்பதாம் நாள் ஆண்டுதோறும் தமிழக அரசின் சார்பில் அரசு விழா எடுக்கப்படுகிறது. தமிழகச் சட்டமன்றத்தில் அவரது திருவுருவப்படம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சென்னையில் அரசு சார்பாகச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இந்திய நாடளுமன்ற வளாகத்திலும் சிலை வைக்கப்பட்டுள்ளது. இந்திய அரசால் 1995 இல் தபால் தலை வெளியிடப்பட்டது.

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.
www.tntextbooks.in

நேதாஜியுடன் முத்துராமலிங்கத்தேவர்

வீரம்மிக்க பேச்சு விடுதலைப் போருக்கு மிகவும் உதவும்' என்று காமராசர் மகிழ்ந்தார்.

மேலும் பல தலைவர்கள் முத்துராமலிங்கத் தேவரின் பேச்சாற்றலைப் பாராட்டியுள்ளனர். 'தென்னாட்டுச் சிங்கம் என்று தேவரைச் சொல்லுகிறார்களே, அது சாலப்பொருந்தும் என அவரது தோற்றத்தைப் பார்த்த உடனேயே நினைத்தேன். அவர் பேசத் தொடங்கியதும் சிங்கத்தின் முழக்கம் போலவே இருந்தது' என்று அறிஞர் அண்ணாவும் அவரைப் புகழ்ந்துரைத்துள்ளார். 'முத்துராமலிங்கத்தேவர் பேச்சு உள்ளத்தில் இருந்து வெளிவருகிறது; உதடுகளிலிருந்து அல்ல. உள்ளத்தால் எதிலும் பற்றற்று உண்மையெனப் பட்டதை மறைக்காமல் அப்படியே பேசிவிடுவது அவர் வழக்கம்' என்று மூதறிஞர் இராஜாஜி பாராட்டியுள்ளார். பாராளுமன்றத்தில் இவர் ஆங்கிலத்தில் பேசிய பேச்சு வெள்ளையர் காலத்தில் விட்டல் பாய், வல்லபபாய் பட்டேல் போன்ற மேதைகள் பேசிய பேச்சைப் போல் இருந்ததாக வடஇந்திய இதழ்கள் பாராட்டின. அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகளை அனைவரும் பாராட்டினர்.

தேர்தல் வெற்றிகள்

மக்களின் பேராதரவு பெற்ற தலைவராக விளங்கியவர் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர். 1937 இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் இராமநாதபுரம் அரசர் சண்முக ராஜேஸ்வர சேதுபதியை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றிபெற்றார். அப்போது இலண்டனில் பாரிஸ்டருக்குப் படித்துவந்த தோழர் கே. டி. கே. தங்கமணி, 'இந்தியத் தேர்தலில் இராமநாதபுரம் மன்னரை எதிர்த்துப் போட்டியிட்ட தேவர் அவர்களின் வெற்றியையும் பொப்பிலி அரசரை எதிர்த்துப் போட்டியிட்ட வி.வி.கிரி அவர்களின் வெற்றியையுமே இந்திய மாணவர்கள் எதிர்பார்த்திருந்தோம்' எனக் குறிப்பிட்டிருந்தார். 1946 இல் போட்டியின்றி வெற்றிபெற்றார். 1952, 1957 ஆகிய ஆண்டுகளில் நடந்த சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு இரண்டிலும் வெற்றி பெற்றார். 1962 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் உடல்நலக்குறைவு காரணமாக, பரப்புரை செய்ய இயலாதபோதிலும் தேர்தலில் வெற்றிபெற்றார்.

குற்றப்பரம்பரைச் சட்ட எதிர்ப்பு மாநாடு

ஆங்கில ஆட்சியில் மக்களை ஒடுக்குவதற்காகக் கொண்டு வரப்பட்டது குற்றப்பரம்பரைச் சட்டம் ஆகும். பிறப்பாலேயே ஒருவரைக் குற்றவாளியாகக் கருதும் அச்சட்டத்தை நீக்குவதற்காக மக்களைத் திரட்டிப் பலவேறு போராட்டங்களை நடத்தினார் முத்துராமலிங்கத்தேவர். 1934 ஆம் ஆண்டு மே 12, 13 ஆகிய தேதிகளில் கமுதியில் குற்றப்பரம்பரைச் சட்ட எதிர்ப்பு மாநாட்டை நடத்தினார். அவரது தொடர் போராட்டத்தால் 1948 ஆம் ஆண்டு அச்சட்டம் நீக்கப்பட்டது.

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.
www.tntextbooks.in

ஆலய நுழைவுப் போராட்டம்

அக்காலத்தில் மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குள் செல்ல ஒரு சாராருக்குத் தடை இருந்தது. அத்தடையை எதிர்த்து 1939 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் எட்டாம் நாள் மதுரை வைத்தியநாத ஐயர் கோவில் நுழைவுப் போராட்டம் நடத்தத் திட்டமிட்டார். அதனை எதிர்த்து அர்ச்சகர்கள் ஆலயப்பணியைப் புறக்கணித்தனர். தேவர் திருச்சுழியில் இருந்து அர்ச்சகர்கள் இருவரை அழைத்துவந்து ஆலய நுழைவுப் போராட்டத்தை வெற்றிபெறச் செய்தார்.

விவசாயிகள் தோழர்

ஜமீன் விவசாயிகள் சங்கம் ஏற்படுத்தி விவசாயிகள் துயர்துடைக்கப் பாடுபட்டார். உழுபவர்களுக்கே நிலம் என்றார். தமக்குச் சொந்தமாக 32 ½ சிற்றூர்களில் இருந்த விளைநிலங்களை குத்தகை இல்லாமல் உழுபவர்க்கே பங்கிட்டுக் கொடுத்தார். அவற்றை ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் அளித்து மகிழ்ந்தார்.

கூட்டுறவுச் சிந்தனையாளர்

கமுதியில் வியாபாரிகள் விவசாய உற்பத்திப் பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்கியதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். பாரதமாதா கூட்டுறவுப் பண்டகசாலையை ஏற்படுத்தி விவசாயிகளின் விளைபொருள்களுக்குச் சரியான விலை கிடைக்கச்செய்தார்.

தொழிலாளர் தலைவர்

1938 காலக்கட்டத்தில் மதுரையில் 23 தொழிலாளர் சங்கங்களின் தலைவராகத் தேவர் திகழ்ந்தார். மதுரையிலிருந்த நூற்பு ஆலை ஒன்றில் வேலைசெய்த தொழிலாளர்களின் உரிமைக்காகத் தோழர் ப. ஜீவானந்தத்துடன் இணைந்து 1938 ஆம் ஆண்டு போராட்டம் நடத்தினார். அதற்காக ஏழு திங்கள் சிறைத் தண்டனை பெற்றார். உழவர்களின் நலன் காக்க இராஜபாளையத்தில் மிகப் பெரிய அளவிலான மாநாடு ஒன்றை நடத்தினார். பெண்தொழிலாளர்களுக்கு மகப்பேறு காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வேண்டும் என்று போராடினார்.

சிறை வாசம்

சுதந்திரப் போராட்டத்தில் மிகத்தீவிரமாக ஈடுபட்டதால் கைது செய்யப்பட்டு அலிப்பூர், அமராவதி, தாமோ, கல்கத்தா, சென்னை, வேலூர் போன்ற சிறைகளில் சிறைவைக்கப்பட்டிருந்தார். இரண்டாம் உலகப்போர் சமயத்தில் மத்திய பிரதேசத்தின் தாமோ என்னும் நகரில் உள்ள இராணுவச்சிறையில் அடைக்கப்பட்டுப் போர் முடிந்தபிறகுதான் விடுதலை செய்யப்பட்டார்.

பெண்களைத் தெய்வமாக மதித்துப் போற்றியவர்

தேவர் 1936, 1955 ஆகிய ஆண்டுகளில் இரண்டுமுறை பர்மா சென்றிருந்தார். பர்மாவில் புத்த பிட்சுகளில் உயர்ந்தவர்களுக்குப்

தெரிந்து தெளிவோம்

முத்துராமலிங்கத்தேவரின் சிறப்புப் பெயர்கள்

தேசியம் காத்த செம்மல், வித்யா பாஸ்கர், பிரவசன கேசரி, சன்மார்க்க சண்டமாருதம், இந்து புத்தசமய மேதை.

தெரிந்து தெளிவோம்

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் இம்மண்ணுலகில் வாழ்ந்த நாள்கள் 20,075. சுதந்திரப் போராட்டத்திற்காகச் சிறையில் கழித்த நாள்கள் 4000. தன் வாழ்நாளில் ஐந்தில் ஒரு பங்கினைச் சிறையில் கழித்த தியாகச் செம்மல் முத்துராமலிங்கத்தேவர் ஆவார்.

பெண்கள் தங்கள் கூந்தலை நடைபாதையாக விரித்து வரவேற்பு அளிப்பது வழக்கம். தேவர் பர்மா சென்றிருந்தபோது அவருக்கும் அத்தகைய வரவேற்பு அளிக்க முன்வந்தனர். "இது பெண்களை இழிவுபடுத்துவதாக உள்ளது" என்று கூறி, அதனை ஏற்க மறுத்துவிட்டார்.

நாடு போற்றும் நன்மகன்

பொதுத்தொண்டுக்கு இடையூறாக இருக்கும் எனக் கருதித் திருமணம் செய்துகொள்ளாமல் தியாக வாழ்வு வாழ்ந்தார் முத்துராமலிங்கத்தேவர். அவர் விவேகானந்தரின் தூதராக, நேதாஜியின் தளபதியாக, சத்தியசீலராக, முருகபக்தராக, ஆன்மிகப் புத்திரராக, தமிழ்பாடும் சித்தராக, தென்பாண்டிச் சீமையின் முடிசூடா மன்னராக, நீதிவழுவா நேர்மையாளராக, புலமையில் கபிலராக, வலிமையில் கரிகாலனாக, கொடையில் கர்ணனாக, பக்தியில் பரமஹம்சராக, இந்தியத் தாயின் நன்மகனாக விளங்கினார்.

இத்தகைய பெருமை வாய்ந்த முத்துராமலிங்கத்தேவர் கி.பி.(பொ.ஆ.) 1963 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முப்பதாம் நாளில் இவ்வுலகை விட்டு நீங்கி மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றார்.

கற்பவை கற்றபின்

நாட்டுக்கு உழைத்த சிறந்த பிற தலைவர்களைப் பற்றிய செய்திகளைத் திரட்டி எழுதுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. முத்துராமலிங்கத்தேவர் முதன்முதலில் உரையாற்றிய இடம் _____.
   அ) தூத்துக்குடி ஆ) காரைக்குடி இ) சாயல்குடி ஈ) மன்னார்குடி
2. முத்துராமலிங்கத்தேவர் நடத்திய இதழின் பெயர் _____.
   அ) இராஜாஜி ஆ) நேதாஜி இ) காந்திஜி ஈ) நேருஜி
3. தேசியம் காத்த செம்மல் எனப் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டியவர் _____.
   அ) இராஜாஜி ஆ) பெரியார் இ) திரு.வி.க. ஈ) நேதாஜி

குறுவினா

1. முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டிப் பெரியார் கூறியது யாது?
2. முத்துராமலிங்கத்தேவரின் பேச்சுக்கு வாய்ப்பூட்டுச் சட்டத்தின் மூலம் தடைவிதிக்கப்படக் காரணம் யாது?
3. முத்துராமலிங்கத்தேவர் பெற்றிருந்த பல்துறை ஆற்றலைப் பற்றி எழுதுக.

சிறு வினா

1. நேதாஜியுடன் முத்துராமலிங்கத்தேவர் கொண்ட தொடர்புப்பற்றி எழுதுக.
2. தொழிலாளர் நலனுக்காக முத்துராமலிங்கத்தேவர் செய்த தொண்டுகள் யாவை?

சிந்தனை வினா

சிறந்த தலைவருக்குரிய பண்புகள் எவை என நீங்கள் கருதுகிறீர்கள்?

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.
www.tntextbooks.in

விரிவானம்

இயல் மூன்று

கப்பலோட்டிய தமிழர்

R4A327

தென்னாட்டில் உள்ள தூத்துக்குடி அந்நாளில் எந்நாட்டவரும் அறிந்த துறைமுக நகரம். அந்நகரின் பெருமையைத் தம் பெருமையாக்கிக் கொண்டவர் சிதம்பரனார். அவர் தன்னலம் துறந்த தனிப்பெரும் தொண்டர். 'இந்தியக் கடலாட்சி எமதே எனக் கருதி இறுமாந்திருந்த ஆங்கிலேயர் பொறி கலங்கி, நெறிமயங்கக் கப்பலோட்டிய தமிழர் சிதம்பரனார். நாட்டிலே சுதந்திர உணர்ச்சியை ஊட்டியதற்காக அவரைச் சிறைக்கோட்டத்தில் மாட்டி மகிழ்ந்தது ஆங்கில அரசாங்கம். சிறைவாசம் தீர்ந்த பின்னர்த் தூத்துக்குடிக்குத் திரும்பினார் சிதம்பரனார். ஒரு நாள் மாலைப்பொழுது துறைமுகத்தின் அருகே உலாவச் சென்றார். பழைய நினைவுகள் எல்லாம் அவர் மனத்திலே படர்ந்தன. அக்கடற்கரையில் நின்று அவர் பேசியிருந்தால் என்ன பேசியிருப்பார்? இதோ அவர் வாயாலேயே கேட்போம்!



"தென்னாட்டுத் துறைமுகமே! முந்நூறு ஆண்டுகளாக நீயே இம்முத்துக் கரையில் முதன்மை பெற்று விளங்குகின்றாய்! முன்னாளில் வளமுற்றிருந்த கொற்கைப் பெருந்துறையின் வழித்தோன்றல் நீயே என்று உணர்ந்து உன்னை வணங்குகின்றேன்; வாழ்த்துகின்றேன். ஆயினும், அக்காலத் துறைமுகத்தின் மாட்சியையும் இக்காலத்தில் காணும் காட்சியையும் நினைத்துப் பார்க்கும் பொழுது என் நெஞ்சம் குமுறுகின்றதே!

பார் அறிந்த கொற்கைத் துறைமுகத்திலே பாண்டியனுடைய மீனக்கொடி உயர்ந்து பறந்தது. கொற்கைக்கடல் முத்துவளம் கொழித்தது. பழங்குடிகளாகிய பரதவர் மரக்கல வணிகத்தால் வளம்பெற்று மாடமாளிகையில் வாழ்ந்தார்கள். இது, சென்ற காலத்தின் சிறப்பு. இன்று, மீனக்கொடி எங்கே? ஆங்கில நாட்டுக் கொடியன்றோ இங்குப் பறக்கின்றது? பரங்கியர் கப்பலன்றோ எங்கும் பறந்து திரிகின்றது? கொள்ளை இலாபம் அடைகின்ற வெள்ளையர் கப்பலில், கூலி வேலை செய்கின்றனர் நம் நாட்டு மக்கள்! சொந்த நாட்டிலே வந்தவருக்கு அடிமைசெய்து வயிறு வளர்ப்பது ஒரு வாழ்வாகுமா? வசையொழிய வாழ்வாரே வாழ்வார் என்ற வள்ளுவர் வாய்மொழியை மறக்கலாமா?

Std Tamil CBSE Term 1-3 Combined 26.02.2019.indd 63 14-03-2019 11:25:17
Page 287 of 402
10

வளமார்ந்த துறைமுகமே! இந்த வசையை ஒழிப்பதற்காக இந்நகரில் சுதேசக் கப்பல் கம்பெனி ஒன்று உருவாயிற்று. பாரதநாட்டுச் செல்வரும் அறிஞரும் அந்தக் கம்பெனியில் பங்குகொண்டார்கள். பழங்காலப் பாண்டியரைப் போல் மதுரை மாநகரிலே தமிழ்ச் சங்கம் அமைத்துப் புலவர் பாடும் புகழ் உடையவராய் விளங்கிய பாண்டித்துரையார் அக்கம்பெனியின் தலைவர் ஆயினார். அதன் செயலாளனாக அமைந்து பணி செய்யும் பேறு எனக்குக் கிடைத்தது. கம்பெனியார் வாங்கிய சுதேசக் கப்பல் உன் துறைமுகத்தை வந்தடைந்தது. வெள்ளோட்டம் பார்ப்பதற்காக அக்கப்பல் இங்கிருந்து கொழும்புத் துறையை நோக்கிப் புறப்பட்ட நாளில், இன்ப வெள்ளம் என் உள்ளத்திலே பொங்கி எழுந்தது; கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

வாணிக மாமணியே! அன்றுமுதல் சுதேசக் கப்பல் வாணிகம் வளர்ந்தது; வெள்ளையர் வாணிகம் தளர்ந்தது. அதுகண்டு அவர் உள்ளம் எரிந்தது. வெறுக்கத்தக்க சூழ்ச்சிகளை அன்னார் கையாளத் தலைப்பட்டனர்; சுதேசக் கம்பெனி வேலையினின்றும் நான் விலகிக்கொண்டால் நூறாயிரம் ரூபாய் கையடக்கம் தருவதாக மறைமுகமாகக் கூறினர். எனக்கு உற்ற துணையாக நின்று ஊக்கம் தந்த நண்பர்களைப் பலவாறு பயமுறுத்தினர்; இவையெல்லாம் பயனற்று ஒழிந்த நிலையிலே அடக்குமுறையைக் கையாளக் கருதி அரசாங்கத்தின் உதவியை நாடினர்.

பரங்கியர் ஆளும் துறையே! ஆங்கில அரசாங்கம் சர்வ வல்லமையுடையது என்றும், அதை அசைக்க எவராலும் ஆகாதென்றும் அப்போது பொதுமக்கள் எண்ணியிருந்தார்கள். அதனால் அடிமைத்தனம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இந்நாட்டு மக்களிடையே வளர்ந்தது. துரைத்தனத்தார் என்ன சொன்னாலும் எதிர்த்துப் பேசாமல், 'சார், சார்' என்று சலாமிட்டும், 'புத்தி, புத்தி' என்று வாய் பொத்திச் 'சரி, சரி' எனச் சம்மதித்துத் தாளம் போடும் போலி அறிஞர்கள், பட்டங்களும் பதவிகளும் பெற்று உயர்ந்தார்கள். அரசாங்கம் ஆட்டுவித்தால் அப்பதுமைகள் ஆடும்; எப்போதும், 'அரசு வாழ்க' என்று பாடும். இத்தகைய சூழ்நிலையிலே எழுந்தது சுதந்தர நாதம்!

வந்தே மாதரம் என்ற சுதேச மந்திரம் வங்க நாட்டிலே பிறந்தது; காட்டுக்கனல் போல் எங்கும் பரவிற்று. சுதந்தரம் எனது பிறப்புரிமை; அதை அடைந்தே தீருவேன் என்று வடநாட்டிலே மார்தட்டி நின்றார் மராட்டிய வீரர் ஒருவர். அவரே பாரதநாடு போற்றும் பாலகங்காதர திலகர். தென்னாட்டிலே தோன்றினார் நாவீறுடைய நண்பர் பாரதியார். அவர் அஞ்சாத நெஞ்சினர். செஞ்சொற்கவிஞர்; வந்தே மாதரம் என்போம், எங்கள் மாநிலத்தாயை வணங்குதும் என்போம் என்று அழகிய பாட்டிசைத்து, நாட்டிலே ஆர்வத்தைத் தட்டி எழுப்பினார்.

புதுமைகண்ட துறைமுகமே! அந்நாளில் 'வந்தேமாதரம்' என்றால் வந்தது தொல்லை. அந்த வாசகத்தில் ஒரு வஞ்சகம் இருப்பதாக ஆங்கில அரசாங்கம் கருதிற்று. பொதுக்கூட்டங்களிலும் தொழிலாளர் கூட்டங்களிலும் நான் பேசும்பொழுது

தெரிந்து தெளிவோம்

'சிதம்பரனாரின் பிரசங்கத்தையும், பாரதியாரின் பாட்டையும் கேட்டால் செத்த பிணம் உயிர்பெற்று எழும். புரட்சி ஓங்கும். அடிமைப்பட்ட நாடு ஐந்தே நிமிடங்களில் விடுதலை பெறும்'

– சிதம்பரனாருக்கு இரட்டை வாழ்நாள் சிறைத்தண்டனை வழங்கிய நீதிபதி பின்ஹேவின் கூற்று.

'வந்தே மாதர'த்தை அழுத்தமாகச் சொல்வது வழக்கம். அதைக்கேட்டு நாட்டு மக்கள் ஊக்கமுற்றார்கள்; உணர்ச்சி பெற்றார்கள். உள்ளதைச் சொன்னால் கள்ளமுடையவர் உள்ளம் எரியும் அல்லவா? எரிவுற்ற அரசாங்கம் என்னை எதிரியாகக் கருதிற்று; என் மீது பல வகையான குற்றம் சாட்டிற்று. நாட்டின் அமைதியை நான் கெடுத்தேனாம்! நல்ல முதலாளிமாருக்குத் தொல்லை கொடுத்தேனாம்! வெள்ளையர் மீது வெறுப்பை ஊட்டினேனாம்! வீரசுதந்திரம் பெற வழிகாட்டினேனாம்!

சிறையில் சிதம்பரனார் இழுத்த செக்கு

வெள்ளையர் கோர்ட்டிலே இக்குற்ற விசாரணை விறுவிறுப்பாக நடந்தது. இரட்டைத் தீவாந்தர தண்டனை எனக்கு விதிக்கப்பட்டது. அப்பீல் கோர்ட்டிலே சிறைத் தண்டனையாக மாறிற்று அத்தீர்ப்பு. ஆறாண்டு கோவைச் சிறையிலும் கண்ணனூர்ச் சிறையிலும் கொடும்பணி செய்தேன். என் உடல் சலித்தது. ஆயினும், உள்ளம் ஒருநாளும் தளர்ந்ததில்லை; சிறைச்சாலையை தவச்சாலையாக நான் கருதினேன்; கைவருந்த மெய் வருத்தச் செய்த பணிகள் எல்லாம் தாய்நாட்டின் விடுதலைக்காகப் புரிந்த அருந்தவம் என்று எண்ணி உள்ளம் மகிழ்ந்தேன்.

செல்வச் செழுந்துறையே! சிறைச்சாலையில் என்னைக் கண்காணித்தவர் பலர். கடும்பணி இட்டவர் பலர். அவரை நான் எந்நாளும் வெறுத்ததில்லை. ஆனால், முறைதவறி நடந்தவர்களை எதிர்த்தேன். வரைதவறிப் பேசியவர்களை வாயால் அடக்கினேன்.

ஒரு நாள் மாலைப்பொழுது; உடல் நலிந்து, உள்ளம் தளர்ந்து சிறைக்கூடத்தில் உட்கார்ந்திருந்தேன். அங்கே வந்தான் ஒரு ஜெயிலர்; அதிகாரத் தோரணையில் நீட்டி நிமிர்ந்து நின்றுகொண்டு எனக்குச் சில புத்திமதிகளைச் சொல்லத் தொடங்கினான். அப்போது என் மனத்தில் கோபம் பொங்கி எழுந்தது. 'அடே மடையா! நீயா எனக்குப் புத்திமதி சொல்பவன்? மூடு வாயை! உனக்கும் உன் அப்பனுக்கும் புத்தி சொல்வேன் நான். உன்னுடைய கவர்னருக்கும் மன்னருக்கும் புத்தி சொல்வேன் நான்' என்று வேகமுறப் பேசினேன். மானமிழந்து வாயிலிலிருந்து மறைந்தான் ஜெயிலர்.

தமிழ்ப் பெருந்துறையே! உன் தாழ்விலும் வாழ்விலும் எந்த நாளிலும் என் தமிழ்த் தாயை நான் மறந்தறியேன். இந்த நகரத்தில் வக்கீல் வேலை பார்த்து வளமுற வாழ்ந்த நாளில் வள்ளல் பாண்டித்துரையோடு உறவு கொண்டு தமிழ் நூல்களைக் கற்றேன். அதனால் நான் அடைந்த நன்மைக்கு ஓர் அளவில்லை. சிறைச்சாலையில் செக்கிழுத்த துயரத்தை மாற்றியது என் செந்தமிழன்றோ? கைத்தோல் உரியக் கடும்பணி புரிந்தபோது என் கண்ணீரை மாற்றியது கன்னித் தமிழன்றோ?

தொல்காப்பியத்தைப் படித்துப் படித்து என் தொல்லையெல்லாம் மறந்தேன். இன்னிலையைக் கற்று என் இன்னல்களையெல்லாம் வென்றேன். ஆங்கில மொழியில்

ஆலன் என்பவர் இயற்றிய அறிவு நூல்களில் ஒன்றை மனம் போல் வாழ்வு என்று தமிழில் மொழிபெயர்த்தேன். உயர்ந்த நூல்களில் கண்ட உண்மைகளை இளைஞரும் எளிதில் அறிந்து கொள்ளுமாறு மெய்யறிவு, மெய்யறம் என்ற சிறு நூல்களை இயற்றினேன். இவற்றை என் தமிழ்த்தாயின் திருவடிகளில் கையுறையாக வைத்தேன். சிறையில் இருந்து இயற்றிய நூல்களையும் உவந்து ஏற்றுக்கொள்ளுமாறு செந்தமிழ்த்தாயின் திருவருளை வேண்டுகிறேன்.

வருங்காலப் பெருவாழ்வே! காலம் கடிது சென்றது. என் சிறைவாழ்வு முடிந்தது. இந்நகரை வந்தடைந்தேன். என் அருமைக் குழந்தைகளைக் கண்டு ஆனந்தமுற்றேன். ஆயினும் என் ஆசைக்குழந்தையை - தேசக் கப்பலை இத்துறைமுகத்தில் காணாது ஆறாத் துயருற்றேன். 'பட்ட பாடெல்லாம் பயனற்றுப் போயிற்றே' என்று பரிதவித்தேன். 'என்று வருமோ நற்காலம்' என்று ஏங்கினேன். இன்று இல்லாவிட்டாலும் என்றேனும் சுதந்தரம் வந்தே தீரும். வீரசுதந்தர வெள்ளம் புறப்பட்டு விட்டது. அதைத் தடுத்து நிறுத்த யாரால் ஆகும் பாரதநாட்டிலே?

பாயக் காண்பது சுதந்திரவெள்ளம்

பணியக் காண்பது வெள்ளையர் உள்ளம்

என்று நாம் பாடும் நாள் எந்நாளோ?" என்று உருக்கமாகப் பேசிக் கடற்கரையை விட்டு அகன்றார் வீர சிதம்பரனார்.

நூல் வெளி

இரா.பி.சேது தமிழறிஞர், எழுத்தாளர், வழக்குரைஞர், மேடைப் பேச்சாளர் எனப் பன்முகத் திறன் பெற்றவர். இவரைச் சொல்லின் செல்வர் எனப் போற்றுவர். செய்யுளுக்கே உரிய எதுகை, மோனை என்பவற்றை உரைநடைக்குள் கொண்டு வந்தவர் இவரே என்பர். இவரது தமிழின்பம் என்னும் நூல் இந்திய அரசின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற முதல் நூல் ஆகும். ஆற்றங்கரையினிலே, கடற்கரையினிலே, தமிழ் விருந்து, தமிழகம்– ஊரும் பேரும், மேடைப்பேச்சு உள்ளிட்ட பல நூல்களை இவர் எழுதியுள்ளார்.

வ.உ. சிதம்பரனார் பேசுவதாக அமைந்த நம் பாடப்பகுதி கடற்கரையினிலே என்னும் நூலிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

பாரதியார், கொடிகாத்த குமரன் போன்ற விடுதலைப் போராட்ட வீரர்களுள் ஒருவராக உங்களைக் கற்பனை செய்து கொண்டு வகுப்பில் உரையாற்றுக.

மதிப்பீடு

வ.உ. சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக.

www.tntextbooks.in
THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

இயல் ஒன்பது

கண்ணியமிகு தலைவர்

WT2YGP

நுழையும்முன்

மக்களுக்கு வழிகாட்டிய தலைவர்கள் பலர். அவர்கள் ஒவ்வொருவரும் தமக்கே உரிய தனித்தன்மையான பண்புகளால் முத்திரை பதித்துள்ளனர். எளிமை, நேர்மை, உழைப்பு, பொறுமை, நாட்டுப்பற்று முதலிய பண்புகளை ஒருங்கே கொண்டு சிறந்து விளங்கிய தலைவர் ஒருவர் 'கண்ணியமிகு' என்னும் அடைமொழியால் அழைக்கப்படுகிறார். அப்பெருமைமிகு தலைவரைப் பற்றி அறிவோம்.

நாடு முழுவதும் மக்கள் விடுதலைப் போராட்டத்தில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருந்த காலம் அது. காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை அறிவித்து அதில் இளைஞர்கள் திரளாகக் கலந்து கொள்ளவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். அப்போது இளைஞர் ஒருவர் திருச்சி தூயவளனார் கல்லூரியில் பயின்று கொண்டிருந்தார். காந்தியடிகளின் வேண்டுகோள் அவருக்குள் தீராத விடுதலை வேட்கையை ஏற்படுத்தியது. தமது கல்வியைவிட நாட்டின் விடுதலையே மேலானது என்று எண்ணி ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டார்.



எளிமையின் சிகரம்

அந்த இளைஞர் பிற்காலத்தில் பெரிய அரசியல் தலைவராக வளர்ந்தார். அவர் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்குத் தனி மகிழ்வுந்தில் செல்லமாட்டார். தொடர்வண்டி, பேருந்து போன்ற பொதுப்போக்குவரத்து ஊர்திகளையே பயன்படுத்துவார். அன்பர் ஒருவர் அவருக்கு ஒரு மகிழுந்தைப் பரிசளித்தார். ஆனால் அவர் அதை ஏற்க மறுத்து எப்போதும்போல் தொடர்வண்டியிலேயே பயணம் செய்தார். அவர் சார்ந்திருந்த இயக்கத்தின் சார்பாக அவருக்கு ஒரு மகிழுந்தும் பெருந்தொகையும் பரிசளிக்கப்பட்டன. அவற்றையும் தாம் தொடங்கி வைத்த கல்லூரியின் பயன்பாட்டிற்கு அளித்துவிட்டார்.

ஆடம்பரம் அற்ற திருமணம்

அவரது குடும்ப நிகழ்வுகளிலும் எளிமையைக் காணமுடிந்தது. அவர் தம் ஒரே மகனுக்குத் திருமணம் செய்ய முடிவு செய்தார். அவர் மிகப்பெரிய தலைவர் என்பதால் அவரது இல்லத் திருமணம் மிகவும் ஆடம்பரமாக நிகழப்போகிறது என்று எல்லாரும் எண்ணியிருந்தனர். ஆனால் எவ்வித ஆடம்பரமும் இல்லாமல் மிக எளிமையாகத் தம் மகனின் திருமணத்தை நடத்தி முடித்தார். பெண் வீட்டாரிடம் மணக்கொடை பெறுவது பெருகியிருந்த அக்காலத்தில் மணக்கொடை பெறாமல் அத்திருமணத்தை நடத்தினார். மேலும் "மணக்கொடை வாங்கும் திருமணங்களில் கலந்து கொள்ள மாட்டேன்" என்று வெளிப்படையாக அறிவித்தார்.

நேர்மை

அந்தத் தலைவர் ஒருமுறை தமது இயக்க அலுவலகத்தில் இருந்த போது அங்கிருந்த பணியாளரை அழைத்தார். அவரிடம் ஓர் உறையையும் பணத்தையும் கொடுத்து, "அஞ்சல்தலை வாங்கி இந்த உறையில் ஒட்டி அஞ்சலில் சேர்த்து விடுங்கள்" என்று கூறினார். அந்தப் பணியாளர் "ஐயா நம் அலுவலகத்திலேயே அஞ்சல்தலைகள் வாங்கி வைத்துள்ளோம், அவற்றிலிருந்து ஒன்றை எடுத்து ஒட்டி விடுகிறேன்" என்றார். அதற்கு அந்தத் தலைவர், "வேண்டாம். இது நான் தனிப்பட்ட முறையில் அனுப்பும் கடிதம். அதற்கு இயக்கப் பணத்தில் இருந்து வாங்கப்பட்ட அஞ்சல்தலைகளைப் பயன்படுத்துவது முறையாகாது" என்று கூறினார்.

மொழிக்கொள்கை

இந்தியா விடுதலை பெற்ற பிறகு நாட்டின் ஆட்சிமொழியைத் தேர்வு செய்வது தொடர்பான கூட்டம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. மிகுதியான மக்கள் பேசும் மொழியை ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும் என்றனர் சிலர். பழமை வாய்ந்த மொழியை ஆட்சிமொழியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்தனர் வேறு சிலர். ஆனால் அந்தத் தலைவர் "பழமையான மொழிகளிலே ஒன்றைத்தான் ஆட்சிமொழி ஆக்க வேண்டும் என்றால், அது தமிழ்மொழிதான் என்று நான் உறுதியாகச் சொல்வேன். இன்னமும் விரிவாகச் சொல்ல வேண்டும் என்றால் திராவிட மொழிகள்தாம் இந்த மண்ணிலே முதன்முதலாகப் பேசப்பட்ட மொழிகள். அவற்றுள் மிகவும் இலக்கியச் செறிவுகொண்ட தமிழ்மொழி தான் மிகப் பழமையான மொழி. எனவே, தமிழ்மொழியை நாட்டின் ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

நாட்டுப்பற்று

அந்தத் தலைவரின் உள்ளத்தில் எப்போதும் நாட்டுப்பற்று மேலோங்கி இருந்தது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே 1962 ஆம் ஆண்டு போர் மூண்டது. அப்போது தனது ஒரே மகனைப் போர்முனைக்கு அனுப்ப ஆயத்தமாக இருப்பதாகத் தெரிவித்து அந்தத் தலைவர் அப்போதைய முதன்மை அமைச்சர் ஜவகர்லால் நேருவுக்குக் கடிதம் எழுதினார்.

இத்தகைய சிறப்புகளுக்கெல்லாம் உரிய தலைவர் யார் தெரியுமா?

அவர்தான் கண்ணியமிகு காயிதே மில்லத். அவரது இயற்பெயர் முகம்மது இசுமாயில். ஆனால் மக்கள் அவரை அன்போடு காயிதே மில்லத் என்று அழைத்தனர். 'காயிதே மில்லத்' என்னும் அரபுச் சொல்லுக்குச் சமுதாய வழிகாட்டி என்று பொருள். அப்பெயருக்கேற்ப மக்களின் வழிகாட்டியாகத் திகழ்ந்தார் அவர்.

தெரிந்து தெளிவோம்

தமிழக அரசியல் வானில் கவ்வியிருந்த காரிருளை அகற்ற வந்த ஒளிக்கதிராகக் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்கள் திகழ்கிறார்.

– அறிஞர் அண்ணா

இப்படிப்பட்ட தலைவர் கிடைப்பது அரிது. அவர் நல்ல உத்தமமான மனிதர்.

– தந்தை பெரியார்

அரசியல் பொறுப்புகள்

காயிதே மில்லத் 1946 முதல் 1952 வரை அப்போதைய சென்னை மாகாணச் சட்டமன்ற உறுப்பினராக இருந்து சிறப்பாகப் பணியாற்றினார். இந்திய அரசியலமைப்பு உருவாக்கக் குழு உறுப்பினராகவும் பணியாற்றினார். இந்தியா விடுதலை பெற்றபின் மாநிலங்களவை உறுப்பினர், மக்களவை உறுப்பினர் எனப் பல பொறுப்புகளில் இருந்து மக்களுக்காகத் தொண்டு செய்தார்.

கல்விப்பணி

கல்வி ஒன்றுதான் ஒட்டுமொத்தச் சமூக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்று எண்ணினார் காயிதே மில்லத். "கல்வி மிகுந்திடில் கழிந்திடும் மடமை" என்ற முதுமொழிக்கு ஏற்பக் கல்வி நிறுவனங்களை உருவாக்க நினைத்தார். திருச்சியில் ஜமால் முகம்மது கல்லூரி, கேரளாவில் ஃபரூக் கல்லூரி ஆகியவற்றைத் தொடங்க அவரே காரணமாக இருந்தார்.

தொழில்துறை

அவர் மிகச் சிறந்த தொழில்துறை அறிவுபெற்றிருந்தார். இந்திய நாட்டின் கனிம வளங்களைப் பற்றிப் நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்தார். இதனால் இந்திய அரசு கனிம வளங்களைப் பயன்படுத்தும் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. அதன் மூலம் தொழில்துறை வளர்ச்சி அடைந்தது. மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினைப் பெற்றனர்.

தலைவர்கள் பலராலும் பாராட்டப்பட்ட பண்பாளர் அவர். எல்லாரிடமும் வேறுபாடு இல்லாமல் எளிமையாகப் பழகும் தன்மை கொண்டவராக விளங்கினார். தம் வாழ்நாள் முழுவதும் சமய நல்லிணக்கத்தைப் பேணிவந்தார். இத்தகைய சிறப்பு மிக்க தலைவர்களின் பெருமைகளை அறிந்து போற்றுவது நமது கடமையாகும்.

கற்பவை கற்றபின்

எளிமையின் அடையாளமாகத் திகழ்ந்த பிற தலைவர்கள் குறித்து வகுப்பறையில் பேசுக.

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. காயிதேமில்லத் _____பண்பிற்கு உதாரணமாகத் திகழ்ந்தார்.

அ) தண்மை ஆ) எளிமை இ) ஆடம்பரம் ஈ) பெருமை

2. 'காயிதே மில்லத்' என்னும் அரபுச் சொல்லுக்குச் _____ என்பது பொருள்.

அ) சுற்றுலா வழிகாட்டி ஆ) சமுதாய வழிகாட்டி

இ) சிந்தனையாளர் ஈ) சட்ட வல்லுநர்

3. விடுதலைப் போராட்டத்தின்போது காயிதேமில்லத் _____ இயக்கத்தில் கலந்துகொண்டார்.

அ) வெள்ளையனே வெளியேறு ஆ) உப்புக் காய்ச்சும்

இ) சுதேசி ஈ) ஒத்துழையாமை

4. காயிதே மில்லத் தமிழ்மொழியை ஆட்சிமொழியாக்க வேண்டும் என்று பேசிய இடம் _____.

அ) சட்டமன்றம் ஆ) நாடாளுமன்றம் இ) ஊராட்சி மன்றம் ஈ) நகர் மன்றம்

5. 'எதிரொலித்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) எதிர் + ரொலித்தது ஆ) எதில் + ஒலித்தது

இ) எதிர் + ஒலித்தது ஈ) எதி + ரொலித்தது

6. முதுமை+மொழி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

அ) முதுமொழி ஆ) முதுமைமொழி இ) முதியமொழி ஈ) முதல்மொழி

குறுவினா

1. விடுதலைப் போராட்டத்தில் காயிதே மில்லத் அவர்களின் பங்கு பற்றி எழுதுக.

2. காயிதே மில்லத் அவர்கள் தன் குடும்பத்திலும் எளிமையைக் கடைப்பிடித்தார் என்பதற்குச் சான்றாக உள்ள நிகழ்வை எழுதுக.

சிறுவினா

ஆட்சி மொழி பற்றிய காயிதே மில்லத்தின் கருத்தை விளக்குக.

சிந்தனை வினா

நீங்கள் ஒரு தலைவராக இருந்தால் எத்தகைய மக்கள் நலப்பணிகளைச் செய்வீர்கள்?

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.
www.tntextbooks.in

உரைநடை உலகம்

இயல் ஏழு

பாரத ரத்னா எம்.ஜி. இராமச்சந்திரன்

TZHXZ8

தான் எடுத்துக்கொண்ட செயலில் வெற்றியாளராக விளங்கிட வேண்டும் என்கிற எண்ணம் எல்லோருக்கும் உண்டு. எண்ணியதை எண்ணியவாறே செய்து முடிக்கும் வல்லமை சிலருக்கே வாய்க்கும். அத்தகையோர் மக்கள் மனத்தில் தலைவர்களாக நின்று வாழ்கிறார்கள். அத்தகைய தலைவரைப் பற்றி அறிந்து கொள்வோம்.

கும்பகோணத்தில் உள்ள ஆனையடிப் பள்ளி. நண்பகல் உணவு இடைவேளையின்போது மாணவர்கள் ஆங்காங்கே அமர்ந்து தாம் கொண்டுவந்த உணவை உண்கின்றனர். உடன்பிறந்தோராகிய இரண்டு சிறுவர்கள் பசியுடன் ஓர் ஓரமாக அமர்ந்திருக்கின்றனர்.

"பசிக்குது அண்ணா" என்கிறான் தம்பி.

"கொஞ்சம் பொறுத்துக்கோ தம்பி. மாலை வீட்டுக்குப் போனதும் சாப்பிடலாம்" என்கிறான் அண்ணன்.

"அம்மா ஏன் நமக்குச் சாப்பாடு கொடுத்தனுப்புறதில்ல?"

"வீட்டுவேலை செஞ்சு அம்மா கொண்டுவருகிற பணம் நமக்கு ஒருவேளை சாப்பாட்டுக்குத்தான் போதுமானதா இருக்கு. அம்மா என்ன செய்வாங்க பாவம். வீட்டுவேலைக்குப் போயிருக்கிற அம்மா, மாலையில் எப்படியும் அரிசியோடு வருவாங்க. நமக்கு ஏதாவது உணவு சமைச்சுத் தருவாங்க" என்று தம்பியை அணைத்துக்கொண்டு ஆறுதல் கூறுகிறான் அண்ணன்.

இருவரும் பசியுடன் பாடம் படிக்கின்றனர்.

காலம் வேகமாகச் சுழல்கிறது.

அந்தச் சிறுவர்களில் தம்பி இப்போது தமிழ்நாட்டின் முதலமைச்சர். பசியால் வாடிய தமது இளமைக்கால நினைவுகள் இப்போதும் மறையாமல் அவரது உள்ளத்தில் சுற்றிக்கொண்டே இருக்கின்றன. தமிழ்நாட்டுக் குழந்தைகள் பசியறியாமல் படிக்கவேண்டும் என்று விரும்புகிறார் அவர். எனவே, "காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட மதிய உணவுத்திட்டத்தை விரிவுபடுத்தப்போகிறேன். இனிமேல் பள்ளிக் குழந்தைகளுக்குக் காய்கறிகள், பருப்பு முதலியவற்றுடன்கூடிய உணவு வழங்கப்படும். இந்தத் திட்டம் இனி சத்துணவுத் திட்டம் என அழைக்கப்படும்" என்று அறிவிக்கிறார்.

இளமைக்காலத்தில் பசியின் கொடுமையால் வாடியதை மறவாமல், தாம் ஆட்சிக்கு வந்ததும் பள்ளிக்குழந்தைகளின் பசியைத் தீர்க்கத் திட்டம் தீட்டியஅந்த உயர்ந்த மனிதர்தாம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். என்று அனைவராலும் அழைக்கப்படும் எம்.ஜி.இராமச்சந்திரன்.



புரட்சி நடிகர்

எம்.ஜி.ஆர். வறுமையின் கொடுமையை நன்கு உணர்ந்தவர். வறுமை காரணமாகவே அவரும் அவருடைய அண்ணனும் பள்ளிப்படிப்பைத் தொடரமுடியாமல் நாடகக்குழுவில் சேர்ந்தனர். நாடகங்களில் சிறுசிறு வேடங்களில் நடிக்கத் தொடங்கினர். எம்.ஜி.ஆர். தமது நடிப்பாற்றலால் நாடகக்குழுவின் முதன்மை நடிகராக உயர்ந்தார்.

அதன்பின்னர் எம்.ஜி.ஆர். திரைப்படத்துறையில் நுழைந்தார். நாடகத்துறையைப் போலவே, திரைத்துறையிலும் முதலில் சிறுசிறு வேடங்களில் நடிக்கத் தொடங்கி விரைவிலேயே கதாநாயகனாக உயர்ந்தார். எம்.ஜி.ஆர். தாம் ஏற்று நடித்த கதைமாந்தர்கள் மூலம் ஏழை, எளியோர், உழவர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் முன்னேற்றத்துக்கு உரிய கருத்துகளை எடுத்துரைத்தார். எனவே, மக்கள் அவரைப் புரட்சி நடிகர், மக்கள் திலகம் என்றெல்லாம் போற்றினர். மேலும் இந்திய அரசு மிகச் சிறந்த நடிகருக்கு வழங்கும் பாரத் பட்டத்தை அவருக்கு வழங்கிச் சிறப்பித்தது. திரைத்துறையில் நடிகர், தயாரிப்பாளர், இயக்குநர் எனப் பன்முகத் திறமை கொண்டு விளங்கினார்.

எம்.ஜி.ஆர். திரைப்படங்களில் தாம் பாடி நடித்த பாடல்கள் மூலம் உயர்ந்த கருத்துகளை மக்களிடம் விதைத்தார்.

மாபெரும் சபைதனில் நீ நடந்தால்
உனக்கு மாலைகள் விழவேண்டும் – ஒரு
மாற்றுக் குறையாத மன்னவன் இவன் என்று
போற்றிப் புகழ வேண்டும்

தெரிந்து தெளிவோம்

கேரளாவைச் சேர்ந்தவர்களாகிய எம்.ஜி.ஆரின் பெற்றோர் குடும்பத்துடன் இலங்கைக்குக் குடிபெயர்ந்தனர். இலங்கையில் உள்ள கண்டியில் கி.பி. (பொ. ஆ.) 1917 சனவரித் திங்கள் பதினேழாம் நாள் கோபாலன் – சத்தியபாமா இணையருக்கு ஐந்தாம் மகனாக எம்.ஜி.ஆர். பிறந்தார். இவர் குழந்தையாக இருக்கும்போதே தந்தையை இழந்தார். இதனால் எம்.ஜி.ஆரின் தாயார் குழந்தைகளுடன் தமிழ்நாட்டுக்கு வந்து, கும்பகோணத்தில் குடியேறினார்.

8th Std Tamil _20-12-2019.indd 151 03-01-2020 19:34
THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.
www.tntextbooks.in

போன்ற பாடல்கள் மூலம் மனிதன் எத்தகைய நோக்கத்துடன் வாழவேண்டும் என்பதை எடுத்துரைத்தார்.

வாழ்வில் உயர்நிலையை அடைந்த பின்னரும் எளிமையாக வாழவேண்டும் என்பதை,

பதவி வரும்போது பணிவு வர வேண்டும்!

துணிவு வர வேண்டும் தோழா!

என்னும் பாடல் வரிகள் மூலம் எடுத்துரைத்தார். மேலும் அப்பாடல் வரிகளுக்குத் தாமே இலக்கணமாகவும் திகழ்ந்தார்.

பொன்மனச் செம்மல்

எம்.ஜி.ஆர். தாம் ஈட்டிய செல்வத்தை மற்றவர்களுக்குக் கொடுத்து மகிழ்ந்தவர். புயல், வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்கள் நிகழ்ந்த போதெல்லாம், பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, உடை வழங்கி அவர்களின் துயர் துடைக்க இவரின் கொடைக்கரங்கள் நீண்டன.

எம்.ஜி.ஆர். ஒருமுறை வெளியூரிலிருந்து மகிழ்வுந்தில் சென்னைக்கு வந்துகொண்டிருந்தார். வழியில் மூதாட்டி ஒருவரும் பத்து வயதுச் சிறுமி ஒருத்தியும் தலையில் புல்கட்டுகளைச் சுமந்தவாறு கால்களில் காலணிகள் இல்லாமல் சென்றுகொண்டிருந்தனர். சாலையின் சூடு பொறுக்கமுடியாமல் அவர்கள் சாலையோர மரநிழலில் நிற்பதும் ஓடுவதுமாக இருந்ததைக் கண்ட எம்.ஜி.ஆர். உடனே தமது மகிழ்வுந்தை நிறுத்தச்செய்தார். உடன்வந்த தமது துணைவியாரது காலணியையும் உறவினரான பெண்ணின் காலணியையும் அவர்களிடம் கொடுக்கச்செய்தார். மேலும் அவர்களுக்குப் பணமும் கொடுத்துவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தார்.

ஏழை எளியவர்கள் காலில் காலணிகூட இல்லாமல் நடந்துசெல்லும் இந்நிகழ்ச்சி அவரது மனத்தில் ஆழமாகப் பதிந்திருக்கவேண்டும். அதனால்தான் பின்னர்ப் பள்ளிக் குழந்தைகளுக்குக் காலணிகள் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.

எம்.ஜி.ஆர். ஒருமுறை படப்பிடிப்பிற்காகக் காஷ்மீருக்குச் சென்றிருந்தார். அங்கிருந்த இந்தியப் படைவீரர் நலச்சங்கத்தினர் தமது

தெரிந்து தெளிவோம்

சென்னைப் பல்கலைக் கழகம் எம்.ஜி.ஆரின் பணிகளைப் பாராட்டி டாக்டர்பட்டம் வழங்கியது. தமிழக அரசு அவர் நினைவைப் போற்றும் வகையில் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தை நிறுவியுள்ளது; சென்னைக் கடற்கரையில் இவருக்கு எழிலார்ந்த நினைவிடம் ஒன்றையும் அமைத்துள்ளது. அவரது இறப்புக்குப்பின் இந்திய அரசு, மிக உயரிய பாரத ரத்னா (இந்திய மாமணி) விருதினை 1988ஆம் ஆண்டு வழங்கிப் பெருமைப்படுத்தியது.

9th Std Tamil _20-12-2019.indd 152 03-01-2020 19:34

www.tntextbooks.in

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

சங்க விழாவிற்கு எம்.ஜி.ஆர். வருகைதர வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர். அதற்கு ஒப்புக்கொண்ட அவர் அச்சங்கத்திற்கு நன்கொடை வழங்க விரும்பினார். ஆனால், அப்பொழுது அவரிடம் பணம் இல்லை. எனவே, அங்குத் தங்கியிருந்த தமிழ்நாட்டுத் தொழிலதிபர் ஒருவரிடம் பெருந்தொகையைக் கடனாகப் பெற்று அதனை நன்கொடையாக வழங்கினார். சென்னை திரும்பியதும் முதல்வேலையாக அத்தொகையைத் திருப்பிக்கொடுத்தார்.

இவ்வாறு பிறர் வியக்கத்தக்க வகையில் தம் செல்வத்தை வாரி வழங்கியமையால்தான் அவரைப் பொன்மனச் செம்மல் என்று மக்கள் அன்புடன் அழைக்கின்றனர்.

சமூக நலத்திட்டங்கள்

எம்.ஜி.ஆர். தமிழக முதலமைச்சராக இருந்தபோது ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத்தரம் உயர அரும்பாடுபட்டார். உழவர்களின் கடன் தள்ளுபடி, ஏழைகளுக்கான வீட்டு வசதித்திட்டம், ஆதரவற்ற மகளிருக்குத் திருமண உதவித்திட்டம், தாய்சேய் நல இல்லங்கள், பற்பொடி வழங்கும் திட்டம், நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பாடநூல் வழங்கும் திட்டம், முதியோருக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம், வேலைவாய்ப்பு அற்றவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திப் புகழ் பெற்றார்.

தமிழ் வளர்ச்சிப் பணிகள்

எம்.ஜி.ஆர். தமிழ் வளர்ச்சிக்காகப் பல்வேறு பணிகளை ஆற்றினார். தந்தை பெரியார் உருவாக்கிய எழுத்துச் சீர்திருத்தங்களுள் சிலவற்றை நடைமுறைப்படுத்தித் தமிழ் எழுத்துமுறையை எளிமைப்படுத்தினார். மதுரை மாநகரில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்பாக நடத்தினார். தஞ்சையில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தார்.

இத்தகைய தமது செயல்பாடுகள்மூலம் அனைவரையும் கவர்ந்த எம்.ஜி.ஆர். புரட்சி நடிகராகப் பெயர்பெற்று, பொன்மனச் செம்மலாக வளர்ந்து,மக்கள் திலகமாக உயர்ந்து புரட்சித்தலைவராக மக்கள் மனத்தில் நீங்கா இடம்பெற்று நிலைத்து வாழ்கிறார்.

தெரிந்து தெளிவோம்

எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை ஒட்டி (2017 – 2018) தமிழக அரசால் சென்னையிலும் மதுரையிலும் பேருந்து நிலையங்களுக்கு எம்.ஜி.ஆர். பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்திய அரசு, சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்குப் புரட்சித் தலைவர் டாக்டர். எம்.ஜி. இராமச்சந்திரன் மத்திய ரயில் நிலையம் எனப் பெயர் மாற்றம் செய்து, அவரைப் பெருமைப்படுத்தியுள்ளது.

கற்பவை கற்றபின்

1. தமிழக முதலமைச்சர்களின் பெயர்களைப் பட்டியலிடுக.
2. எம்.ஜி.ஆர். நடித்த திரைப்படங்களில் உள்ள சமூகநலன் சார்ந்த பாடல்களைத் தொகுத்து எழுதுக.

www.tntextbooks.in
THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. எம்.ஜி.ஆர் _____ என்னும் ஊரில் கல்வி பயின்றார்.

அ) கண்டி ஆ) கும்பகோணம் இ) சென்னை ஈ) மதுரை

2. எம்.ஜி.ஆர். படிப்பைத் தொடர முடியாமைக்குக் காரணம் _____ .

அ) நடிப்பு ஆர்வம் ஆ) பள்ளி இல்லாமை

இ) குடும்ப வறுமை ஈ)படிப்பில் ஆர்வமில்லாமை

3. இந்திய அரசு சிறந்த நடிகருக்கான _____ எனும் பட்டத்தை எம்.ஜி.ஆருக்கு வழங்கியது.

அ) புரட்சித் தலைவர் ஆ) பாரத் இ) பாரத மாமணி ஈ) புரட்சி நடிகர்

4. ஐந்தாம் உலகத் தமிழ்மாநாடு நடைபெற்ற இடம் _____

அ) திருச்சி ஆ) சென்னை இ) மதுரை ஈ) கோவை

5. எம்.ஜி.ஆருக்கு அழியாத புகழைத் தேடித் தந்த திட்டம் _____.

அ) மதிய உணவுத்திட்டம் ஆ) வீட்டு வசதித் திட்டம்

இ) மகளிர் நலன் திட்டம் ஈ) இலவசக் காலணித் திட்டம்

குறுவினா

1. எம்.ஜி.ஆர். நாடகத்துறையில் ஈடுபடக் காரணம் என்ன?
2. திரைத்துறையில் எம்.ஜி.ஆரின் பன்முகத் திறமைகள் யாவை?
3. எம்.ஜி.ஆரின் சமூக நலத்திட்டங்களுள் நான்கனை எழுதுக.

சிறுவினா

1. பள்ளிக் குழந்தைகளுக்குக் காலணி வழங்கும் திட்டத்துக்கு அடிப்படையாக அமைந்த நிகழ்வை எழுதுக.
2. தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக எம்.ஜி.ஆர். ஆற்றிய பணிகள் யாவை?

நெடுவினா

எம்.ஜி.ஆரின் பண்புநலன்களை விளக்கி எழுதுக..

சிந்தனை வினா

சிறந்த அரசியல் தலைவருக்கு இருக்க வேண்டிய பண்புகளாக நீங்கள் கருதுவன யாவை?

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

இயல் எட்டு

அயோத்திதாசர் சிந்தனைகள்

CEWCZQ

ஒருவருடைய வாழ்க்கை என்பது பிறந்து, வாழ்ந்து, மறைவதோடு முடிந்துவிடுவதில்லை. நேர்மையான சிந்தனையும் செயலும் ஒருவருக்கு வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றுத்தருகின்றன. ஒரு காலத்தில் மக்களின் மனத்தில் நின்றவர்கள் பிற்காலத்தில் மக்கள் நினைவிலிருந்து மறைந்துபோகின்றனர். காலவெள்ளத்தில் மக்களால் மறக்கப்பட்டு, பின்னர் நினைவுக்கு வரும் சிந்தனையாளர்களும் உண்டு. அத்தகைய சிந்தனையாளர் ஒருவரைப் பற்றி அறிவோம்.

அயோத்திதாசர் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். இவர் பண்டைய இலக்கிய, சமூக, சமய, வரலாற்று ஆய்வுகளில் ஈடுபட்டார். அவற்றின் அடிப்படையில் புதிய சமுதாயத்தைக் கட்டமைக்கும் பெரும்பணியில் ஈடுபட்டார். சமத்துவம், பகுத்தறிவு ஆகிய கொள்கைகளை மக்களிடம் பரவலாக்கியவர்கள் தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத்கரும் ஆவர். இவர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் அயோத்திதாசர்.



நல்ல சிந்தனை, சிறப்பான செயல், உயர்வான பேச்சு, உவப்பான எழுத்து, பாராட்டத்தக்க உழைப்பு ஆகிய ஐந்து பண்புகளையும் ஒருசேரப்பெற்ற சிந்தனையாளர்தான் அயோத்திதாசர். இவரைத் தென்னிந்தியச் சமூகச் சீர்திருத்தத்தின் தந்தை என்று போற்றுவர்.

வாழ்க்கை

அயோத்திதாசர் 1845ஆம் ஆண்டு மே திங்கள் இருபதாம் நாள் சென்னையில் பிறந்தார். இவரது இயற்பெயர் காத்தவராயன் என்பதாகும். இவர் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்தவர் என்பதால் பள்ளிப்பருவத்தில் பல இன்னல்களுக்கு உள்ளானார். அயோத்திதாசப்

பண்டிதர் என்பவரிடம் இவர் கல்வியும் சித்தமருத்துவமும் பயின்றார்; தம்மீது அன்பு காட்டிய அந்த ஆசிரியரது பெயரையே தமது பெயராக வைத்துக்கொண்டார். நீலகிரிக்குச் சென்று அங்கு வாழ்ந்த அயோத்திதாசர், திருமணத்திற்குப் பிறகு பர்மாவுக்குச் சென்றார். அங்குக் கூலித்தொழிலாளர்களாக வேலை செய்துவந்த தமிழர்களின் உரிமைகளுக்காக இவர் பாடுபட்டார். பின்னர் இவர் தமிழ்நாட்டுக்குத் திரும்பி ஒடுக்கப்பட்டோர் உரிமைக்காகவும் அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டார்.



சிந்தனைகளின் அடித்தளம்

அயோத்திதாசர் தமிழ் மட்டுமன்றி, பாலி, வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் தேர்ச்சிபெற்றிருந்தார்; இலக்கியம், இலக்கணம், கணிதம், மருத்துவம், சமயத்தத்துவம் உள்ளிட்ட பல்துறை நூல்களையும் ஆழ்ந்து கற்றார். இத்தகைய ஆழ்ந்த படிப்பே அவரது புதுமையான சிந்தனைகளுக்கு அடித்தளமாக அமைந்தது.

இதழ்ப்பணி

1907ஆம் ஆண்டு சென்னையில் ஒருபைசாத்தமிழன் என்னும் வாரஇதழை காலணா விலையில் தொடங்கினார். ஓர் ஆண்டிற்குப்பின் அவ்விதழின் பெயரைத் தமிழன் என மாற்றினார். உயர்நிலையையும் இடைநிலையையும் கடைநிலையையும் பாகுபடுத்தி அறியமுடியாத மக்களுக்கு நீதி, நேர்மை, சரியான பாதை ஆகியவற்றைத் தெளிவுபடுத்துவதே இவ்விதழின் நோக்கம் என்று அயோத்திதாசர் குறிப்பிட்டார். இவர் 'தமிழன்' இதழ் மூலம் தமிழ்நாடு மட்டுமன்றி மைசூர், கோலார், ஐதராபாத், இரங்கூன், மலேசியா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் வாழ்ந்த தமிழர்களுக்கும் பகுத்தறிவுச் சிந்தனை, இன உணர்வு, சமூகச் சிந்தனை ஆகியவற்றை ஊட்டினார். இவர் தமது நூல்கள் மூலமாகவும் தமது சீர்திருத்தச் சிந்தனைகளை வெளியிட்டார்.

கல்விச் சிந்தனைகள்

ஒரு மனிதனின் அறிவு வளர்ச்சிபெற வேண்டுமானால், கல்வி அறிவு அவசியம் என்று அயோத்திதாசர் கருதினார். நிலவு நாளும் வளர்ந்து முழுநிலவாகி ஒளிவீசுவதுபோல் கல்வி நிறுவனங்களில் அறிவை வளர்க்கும் நூல்கள் கற்பிக்கப்படவேண்டும்; கல்வியோடு கைத்தொழில், வேளாண்மை, தையல், மரம்வளர்த்தல் போன்றவற்றையும் கற்கவேண்டும் என்று இவர் வலியுறுத்தினார். சங்ககாலப் பெண்களைப்போலவே, இக்காலப் பெண்களும் கல்விகற்றுத் தம் வாழ்க்கையைத் தாமே அமைத்துக்கொள்ளும் உரிமையைப் பெறவேண்டும் என்றும் இவர் எடுத்துரைத்தார்.

தெரிந்து தெளிவோம்

அயோத்திதாசர் பதிப்பித்த நூல்கள்

போகர் எழுநூறு, அகத்தியர் இருநூறு, சிமிட்டு இரத்திரனச் சுருக்கம், பாலவாகடம்.

வாழும் முறை

மக்கள் வாழவேண்டிய முறை பற்றிய அயோத்திதாசரின் சிந்தனைகள் சிறப்பானவையாகும். மக்கள் அனைவரும் அன்புகொண்டு வாழவேண்டும்; கோபம், பொறாமை, பொய், களவு போன்றவற்றைத் தம் வாழ்விலிருந்து நீக்கி வாழவேண்டும்; பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யக்கூடாது; மேலும் மதியை அழிக்கும் போதைப்பொருள்களைக் கையாலும் தொடுதல் கூடாது; ஒரு குடும்பத்தில் அன்பும் ஆறுதலும் நிறைந்தால், அக்குடும்பம் வாழும் ஊர் முழுவதும் அன்பும் ஆறுதலும் பெறும்; ஊர்கள் அன்பும் ஆறுதலும் பெறுமானால் நாடு முழுவதும் அன்பும் ஆறுதலும் பெற்றுத் திகழும்; இத்தகைய நாட்டில் புலியும் பசுவும் ஒரே நீர்த்துறையில் நீர் அருந்தும் என்பவை அயோத்திதாசர் கருத்துகள்.

தெரிந்து தெளிவோம்

என் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கும் சீர்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள் பண்டிதமணி அயோத்திதாசரும் தங்கவயல் அப்பாதுரையாரும் ஆவார்கள்.

– தந்தை பெரியார்

தலைமைத் தகுதி

ஒரு நாட்டுக்கு வழிகாட்டும் தலைவர் எத்தகையவராக இருக்கவேண்டும் என்பதை அயோத்திதாசர் விளக்குகிறார். 'மக்களும் அவர்தம் நோக்கங்களும் பெருமைப்படத்தக்கனவாக இருக்கவேண்டுமானால், அவர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டி அமையவேண்டும். அவர் மக்களுள் மாமனிதராக, அறிவாற்றல்பெற்றவராக, நன்னெறியைக் கடைப்பிடிப்பவராக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட தலைவரை வணக்கத்திற்கு உரியவராக மக்கள் ஏற்பார்கள்; கடவுளெனத் துதிப்பார்கள்' என்பது அயோத்திதாசர் கருத்து.

மக்களும் மழையும்

மக்களையும் மழையையும் தொடர்புபடுத்தி அயோத்திதாசர் கூறும் கருத்து சிந்திக்கத்தக்கதாகும். 'வானம் பொய்ப்பதற்குக் காரணம் ஒழுக்கமுள்ள ஞானிகள் இல்லாமையே. ஞானிகள் இல்லாமைக்குக் காரணம் நீதியும் நெறியும் வாய்மையும் நிறைந்த அறிவாளிகள் இல்லாமையாகும். அறிவாளிகள் இல்லாமைக்குக் காரணம் ஆட்சித்திறனும் அன்பும் உடைய அரசர்கள் இல்லாமையே. அத்தகைய அரசர்கள் இல்லாமைக்குக் காரணம் கல்வி, அறிவு, அருள், ஒழுக்கம், ஒற்றுமை ஆகியன உடைய குடிகள் இல்லாமையே என்று கூறுவதன்மூலம் நல்ல குடிமக்கள் இல்லாத நாட்டுக்கு இயற்கைகூட உதவாது' என்கிறார் அயோத்திதாசர்.

தெரிந்து தெளிவோம்

அயோத்திதாசர் எழுதிய நூல்கள்

புத்தரது ஆதிவேதம், இந்திரர் தேச சரித்திரம், விவாக விளக்கம், புத்தர் சரித்திரப்பா முதலியன.

திருவள்ளுவர், ஔவையார் ஆகியோரின் படைப்புகளுக்குப் பௌத்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் புதிய விளக்கங்களை எழுதியுள்ளார்.

சமத்துவம்

அயோத்திதாசர், மக்கள் அனைவரும் சமஉரிமை பெற்றுச் சமத்துவமாக வாழவேண்டும் என்று விரும்பினார். கல்வி, வேளாண்மை, காவல்துறை

போன்ற அனைத்துத் துறைகளிலும் மக்கள் அனைவருக்கும் சமவாய்ப்பு வழங்கவேண்டும்; ஊராட்சி, நகராட்சி, சட்டமன்றம், நாடாளுமன்றம் போன்றவற்றிலும் எல்லா வகுப்பினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும்; இவற்றில் இந்து, பௌத்தர், கிறித்துவர், இசுலாமியர், ஆங்கிலோ இந்தியர், ஐரோப்பியர் போன்ற அனைவருக்கும் வாய்ப்பளிக்கவேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்திவந்தார் அயோத்திதாசர்.

தெரிந்து தெளிவோம்

சென்னை தாம்பரத்தில் உள்ள சித்த ஆராய்ச்சி மையத்துடன் இணைந்த மருத்துவமனைக்கு அயோத்திதாச பண்டிதர் மருத்துவமனை என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

திராவிட மகாஜன சங்கம்

அயோத்திதாசர் தமது கொள்கைகளை வலியுறுத்தவும் ஒடுக்கப்பட்டோர் உரிமைகளைப் பாதுகாக்கவும் 1892 ஆம் ஆண்டு திராவிட மகாஜன சங்கம் என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார். இவ்வமைப்பு சாலைகள் அமைத்தல், கால்வாய்கள் பராமரித்தல், குடிகளின் பாதுகாப்புக்குக் காவல்துறையினரை நியமித்தல், பொதுமருத்துவமனைகள் அமைத்தல், சிற்றூர்கள்தோறும் கல்விக்கூடங்கள் ஏற்படுத்துதல் போன்றவற்றுக்காகவும் போராடியது.

அரசியல் விடுதலையும் மக்கள் உரிமையும்

விடுதலை என்பது வெறும் ஆட்சிமாற்றம் மட்டுமன்று. அது மக்களின் வாழ்க்கையில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்துவதாக அமையவேண்டும் என்பது அயோத்திதாசர் கருத்து. 'சுயராஜ்ஜியத்தின் நோக்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாக மட்டும் இருக்கக்கூடாது; மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியையும் உள்ளடக்கியதாக அஃது அமையவேண்டும். மக்கள் வாழ்க்கையில் மாற்றம் உண்டானால் ஒழிய, நாடு முன்னேற முடியாது' என்று ஆணித்தரமாகக் கூறினார் அயோத்திதாசர்.

தனித்தன்மை

அயோத்திதாசர் காலத்தில் பண்டிதர், புலவர், நாவலர், பேச்சாளர், எழுத்தாளர் எனப் பலர் இருந்தனர். ஆயினும், பகுத்தறிவு, இலக்கியம், சமூகம், சமயம், அரசியல், வரலாறு, தொழில் முன்னேற்றம் ஆகியவற்றில் அக்கறைகொண்டு புதிய சிந்தனைகளை விதைத்தவர் அயோத்திதாசரே. எனவே, அவரை அன்றைய தமிழர்கள் தனித்தன்மை உடைய சிந்தனையாளராக மதித்தனர்.

அயோத்திதாரின் சிந்தனைகள் ஒரு தனிமனிதரின் சிந்தனைகளாக மட்டும் அமையாமல், அகன்ற சமுதாயத்தில் விழிப்புணர்வையும் எழுச்சியையும் ஏற்படுத்தும் சித்தாந்தங்களாக விளங்கின என உறுதியாகக் கூறலாம்.

கற்பவை கற்றபின்

சமூகச் சீர்திருத்தத்திற்குப் பாடுபட்ட சான்றோர்களின் பெயர்களைத் திரட்டுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அயோத்திதாசர்_____சமூகச்சீர்திருத்தத்தின் தந்தை என்று போற்றப்படுகிறார்.

அ) தமிழக ஆ) இந்திய இ) தென்னிந்திய ஈ) ஆசிய

2. அயோத்திதாசர் நடத்திய இதழ்_____.

அ) ஒருபைசாத் தமிழன் ஆ) காலணாத் தமிழன்

இ) அரைப்பைசாத் தமிழன் ஈ) அரையணாத் தமிழன்

3. கல்வியோடு _____ கற்க வேண்டும் என்பது அயோத்திதாசர் கருத்து.

அ) சிலம்பமும் ஆ) கைத்தொழிலும்

இ) கணிப்பொறியும் ஈ) போர்த்தொழிலும்

4. அயோத்திதாசரின் புதுமையான சிந்தனைகளுக்கு அடித்தளமாக அமைந்தது அவரது _____.

அ) ஆழ்ந்த படிப்பு ஆ) வெளிநாட்டுப்பயணம்

இ) இதழியல் பட்டறிவு ஈ) மொழிப்புலமை

5. மக்களின் ஒழுக்கத்துடன் தொடர்புடையது _____.

அ) வானம் ஆ) கடல் இ) மழை ஈ) கதிரவன்

குறுவினா

1. அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?
2. ஒரு சிறந்த வழிகாட்டி எவ்வாறு இருக்கவேண்டும் என அயோத்திதாசர் கூறுகிறார்?
3. திராவிட மகாஜன சங்கம் எவற்றுக்காகப் போராடியது?

சிறுவினா

1. அயோத்திதாசரின் இதழ்ப்பணி பற்றி எழுதுக.
2. அரசியல் விடுதலை பற்றிய அயோத்திதாசரின் கருத்துகள் யாவை?

நெடுவினா

வாழும் முறை, சமத்துவம் ஆகியன பற்றிய அயோத்திதாசரின் சிந்தனைகளைத் தொகுத்து எழுதுக.

சிந்தனைவினா

ஒரு சமூகம் உயர்வடைய வேண்டுமானால் மக்களிடம் இருக்க வேண்டிய உயர்பண்புகள் யாவை?

உரைநடை உலகம்

இயல் ஒன்பது

சட்டமேதை அம்பேத்கர்

நுழையும்முன்

தன்னலமற்ற தலைவர்கள் பலர் இந்திய விடுதலைக்குப் பாடுபட்டனர். அவர்கள் தமது தொண்டினால் மக்களின் மனத்தில் நீங்கா இடம் பெற்றனர். இந்திய மக்களுக்கு அரசியல் விடுதலையோடு, சமூக விடுதலையும் கிடைக்கும்போதுதான் இந்தியா முழுமையான விடுதலைபெற்ற நாடாக இருக்க முடியும் என்று கருதி உழைத்த தலைவர் ஒருவரைப் பற்றி அறிவோம்.

விடுதலைபெற்ற இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகவும் இந்திய அரசியல் சாசனத்தின் தந்தையாகவும் விளங்கியவர் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர். இவர் சமூகச் சீர்திருத்தவாதியாக மட்டுமல்லாமல், மிகச்சிறந்த பொருளியல் அறிஞராகவும் அரசியல் தத்துவமேதையாகவும் பகுத்தறிவுச் சிந்தனையாளராகவும் விளங்கினார். சிறந்த எழுத்தாளராகவும் பேச்சாளராகவும் மக்களால் போற்றப்பட்டார்.

பிறப்பு

அம்பேத்கர் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாள் ராம்ஜி சக்பால் - பீமாபாய் இணையருக்குப் பதினான்காவது குழந்தையாகப் பிறந்தார். இவரது ஊர் மகாராட்டிர மாநிலத்தில் உள்ள இரத்தினகிரி மாவட்டத்தைச் சேர்ந்த அம்பவாதே என்பதாகும். இவருடைய தந்தை இராணுவப்பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார்.

கல்வி

அம்பேத்கர் சதாராவில் உள்ள பள்ளியில் தமது கல்வியைத் தொடங்கினார். இவர் ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர் என்பதால் பள்ளிப் பருவத்திலேயே பல அவமதிப்புகளுக்கு ஆளானார். மகாதேவ் அம்பேத்கர் என்ற ஆசிரியர், இவர்மீது அன்பும் அக்கறையும் கொண்டவராக விளங்கினார். இதனால், பீமாராவ் சக்பால் அம்பவாதேகர் என்னும் தம் பெயரைப் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர் என்று மாற்றிக்கொண்டார்.

1904 ஆம் ஆண்டு, இவருடைய குடும்பம் மும்பைக்குக் குடிபெயர்ந்தது. அங்கு எல்பின்ஸ்டன் உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தார். குடும்பத்தில் மிகவும் வறுமை சூழ்ந்த நிலையிலும் கல்வியை விடாமல் தொடர்ந்த அவர், 1907 ஆம் ஆண்டு தமது பள்ளிப்படிப்பை முடித்தார். பிறகு, பரோடா மன்னரின் உதவியுடன் மும்பைப் பல்கலைக்கழகத்தில் படித்து 1912 ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டம் பெற்றார். சிறிதுகாலம் பரோடா மன்னரின் அரண்மனையில் உயர்அலுவலராகவும் பணியாற்றினார்.

அமெரிக்காவில் உயர்கல்வி

பரோடா மன்னர் சாயாஜிராவ் உதவியுடன் உயர்கல்வி கற்க அமெரிக்கா சென்றார். கொலம்பியா பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பொருளாதாரம், அரசியல், தத்துவம், சமூகவியல் ஆகிய பாடங்களைக் கற்றார். 1915 இல் பண்டைக்கால இந்திய வணிகம் என்ற ஆய்விற்காக முதுகலைப் பட்டம் பெற்றார். இந்தியாவில் சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும் என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்றைப் படைத்தளித்தார். அதைச் சிறுபுத்தகமாகவும் வெளியிட்டார். அச்சில் வெளிவந்த அம்பேத்கரின் முதல் நூல் இதுவே. பின்னர் இந்தியாவின் தேசியப்பங்கு வீதம் என்ற ஆய்வுக்காக, கொலம்பியா பல்கலைக்கழகம் அவருக்கு முனைவர் பட்டம் வழங்கியது.

1920 ஆம் ஆண்டு பொருளாதாரப் படிப்பிற்காக இலண்டன் சென்றார். அங்கிருந்த பல நூலகங்களில் தமது பெயரைப் பதிவு செய்துகொண்டார்; நூலகம் திறக்கும் போது முதல்ஆளாக நுழைந்து மூடும்போது கடைசி ஆளாக வெளியேறுவார்; இத்தகைய அயராத உழைப்பின் பயனாக 1921 ஆம் ஆண்டு முதுநிலை அறிவியல் பட்டமும் 1923 ஆம் ஆண்டு ரூபாய் பற்றிய பிரச்சனை என்னும் ஆராய்ச்சிக் கட்டுரைக்காக முனைவர் பட்டமும் பெற்றார்; அதே ஆண்டில் சட்டப் படிப்பில் பாரிஸ்டர் பட்டமும் பெற்றார்.

சமூகப்பணிகள்

படிப்பை முடித்து இந்தியா திரும்பினார் அம்பேத்கர். இந்தியாவில் நடைபெற்றுக் கொண்டிருந்த ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான போராட்டங்களில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார். அதுமட்டுமல்லாமல், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதிகாரம் கிடைக்கப் போராட வேண்டும் என்றும் முடிவு செய்தார். 1924 ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை என்ற அமைப்பை நிறுவினார். இவ்வமைப்பின் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி மற்றும்

தெரிந்து தெளிவோம்

அம்பேத்கரின் பொன்மொழி

"நான் வணங்கும் தெய்வங்கள் மூன்று. முதல் தெய்வம் அறிவு; இரண்டாவது தெய்வம் சுயமரியாதை; மூன்றாவது தெய்வம் நன்னடத்தை."

சமுதாய உரிமைக்காகப் போராடினார். 1930 ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்வதற்காகப் புறப்படும் முன் "என் மக்களுக்கு நியாயமாக என்ன கிடைக்க வேண்டுமோ, அதற்காகப் போராடுவேன்; அதே சமயத்தில் சுயராஜ்ய கோரிக்கைகளை முழு மனத்துடன் ஆதரிப்பேன்" என்று கூறினார்.

பூனா ஒப்பந்தம்

ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமையும் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவமும் வழங்கப்படவேண்டும் என்று இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கர் வலியுறுத்தினார். இதன் விளைவாக, ஒரு தொகுதியில் பொது வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கும் ஒடுக்கப்பட்ட சமூக வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கும் அளிக்கும் இரட்டை வாக்குரிமை வழங்கப்பட்டது. ஆனால், இதை ஏற்க மறுத்த காந்தியடிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டார். இதன் விளைவாக 1931 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் இருபத்து நான்காம் நாள் காந்தியடிகளும் அம்பேத்கரும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். அதன்படி ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமை என்பதற்குப் பதிலாகப் பொது வாக்கெடுப்பில் தனித்தொகுதி வழங்குவது என முடிவு செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தமே பூனா ஒப்பந்தம் எனப்பட்டது.

சுதந்திரத் தொழிலாளர் கட்சி

1935 ஆம் ஆண்டில் மாநில சுயாட்சி வழங்குவதற்கான இந்திய அரசாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி பொதுத்தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் நலனைப் பாதுகாக்கத் தேர்தலில் போட்டியிட அம்பேத்கர் விரும்பினார்; சுதந்திரத் தொழிலாளர் கட்சியைத் தொடங்கித் தேர்தலில் போட்டியிட்டார். அவர் வெற்றி பெற்றதுடன் அவரின் கட்சி வேட்பாளர்கள் பதினைந்து பேரும் வெற்றிபெற்றனர்.

தீண்டாமைக்கு எதிராக அம்பேத்கர்

அம்பேத்கர் இந்தியச் சமூக அமைப்பில் நிலவிய சாதியமைப்பையும் தீண்டாமைக் கொடுமைகளையும் எதிர்த்துத் தீவிரமாகப் போராடினார். ஒடுக்கப்பட்ட பாரதம் என்னும் இதழை 1927 ஆம் ஆண்டு துவங்கினார். சமத்துவச் சமுதாயத்தை அமைக்கும் நோக்கில் இவர் சமாஜ் சமாத சங்கம் என்னும் அமைப்பை உருவாக்கினார்; 1930 ஆம் ஆண்டு நாசிக் கோயில் நுழைவுப் போராட்டத்தினை நடத்தி வெற்றி கண்டார்.

தெரிந்து தெளிவோம்

இரட்டைமலை சீனிவாசன்

இந்தியர்களுக்கு அரசியல் உரிமை வழங்குவதைப் பற்றி முடிவு செய்ய 1930 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் இங்கிலாந்தில் முதலாவது வட்டமேசை மாநாடு நடைபெற்றது. ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாளராக அம்பேத்கருடன் தமிழகத்தைச் சேர்ந்த இராவ்பகதூர் இரட்டைமலை சீனிவாசனும் கலந்துகொண்டார்.

அரசியல் அமைப்பில் அம்பேத்கரின் பங்கு

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் பதினைந்தாம் நாள் இந்தியா விடுதலை பெற்றது. ஜவகர்லால் நேரு தலைமையில் அமைந்த அரசில் அம்பேத்கர் சட்ட அமைச்சராகவும் இந்திய அரசியல் சாசன சபையின் தலைவராகவும் பொறுப்பேற்றுக் கொண்டார்.

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 29 ஆம் நாள் அரசியல் நிர்ணய மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அதன்படி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுத அம்பேத்கர் தலைமையில் அவர் உட்பட ஏழுபேர் கொண்ட அரசியலமைப்புச் சட்ட வரைவுக்குழு (Drafting committee) உருவாக்கப்பட்டது. இக்குழுவில், கோபால்சாமி, அல்லாடி கிருஷ்ணமூர்த்தி, கே. எம். முன்ஷி, சையது முகமது சாதுல்லா, மாதவராவ், டி. பி. கைதான் ஆகியோர் உறுப்பினர்களாக இடம்பெற்றனர். இக்குழு தனது அறிக்கையை 1948, பிப்ரவரி 21-இல் ஒப்படைத்தது. அம்பேத்கர் தலைமையிலான சட்ட வரைவுக்குழு, அப்போது மக்களாட்சி நடைபெற்ற நாடுகள் பலவற்றிலிருந்து இந்திய நடைமுறைக்குப் பொருந்தும் சட்டக்கூறுகளை, இந்திய அரசியலமைப்பு வரைவில் சேர்த்தது.

தெரிந்து தெளிவோம்

அரசியல் அமைப்புச் சட்டம்

உலகின் மிகப்பெரிய குடியரசு நாடாக இந்தியா விளங்குகிறது. இந்நாட்டில் பல்வேறுபட்ட இன, மொழி, சமயங்களைச் சார்ந்த மக்கள் வாழ்கின்றனர். இவர்களை ஒன்றிணைக்க, ஆட்சி நடத்த அடிப்படையான சட்டம் தேவைப்படுகிறது. இச்சட்டத்தினையே அரசியலமைப்புச் சட்டம் என்பர். உலகில் உள்ள அனைத்து நாடுகளும் அந்தந்த நாட்டு அரசியலமைப்புச் சட்டத்தைக் கொண்டே இயங்குகின்றன. அஃது எழுதப்பட்டதாகவோ அல்லது எழுதப்படாததாகவோ இருக்கக்கூடும்.

இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்கா, அயர்லாந்து, ஆஸ்திரேலியா, கனடா, சோவியத்யூனியன், ஜெர்மனி, தென் ஆப்பிரிக்கா முதலிய நாடுகளின் சட்டங்களையும் ஆராய்ந்து இந்திய நாட்டிற்கான சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அம்பேத்கரால் உருவாக்கப்பட்ட இந்த அரசியல் அமைப்புச் சட்டம், குடிமக்களின் உரிமைகளுக்குப் பலவகைகளில் பாதுகாப்பை அளிப்பதாக அமைந்தது. இது மிகச்சிறந்த சமூக ஆவணம் என வரலாற்று ஆசிரியர்களால் போற்றப்படுகிறது.

புத்த சமயம் மீது பற்று

அம்பேத்கர் புத்த சமயக் கொள்கைகளின் மீது ஈடுபாடு கொண்டார். இலங்கையில் நடைபெற்ற புத்தத் துறவிகள் கருத்தரங்கில் கலந்துகொண்ட அவர், உலகப் பௌத்த சமய மாநாடுகளிலும் கலந்துகொண்டார். 1956 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் நாள் நாக்பூரில் இலட்சக்கணக்கான மக்களோடு புத்த சமயத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். அவர் எழுதிய புத்தரும் அவரின் தம்மமும் என்னும் புத்தகம் அவரது மறைவுக்குப் பின் 1957 ஆம் ஆண்டு வெளியானது.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காகத் தம் வாழ்நாள் முழுவதும் உழைத்த அம்பேத்கர், 1956 ஆம் ஆண்டு டிசம்பர் 6 ஆம் நாள் காலமானார். அவருடைய மறைவிற்குப் பின், இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது 1990 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

கற்பவை கற்றபின்

1. சமூகச் சீர்திருத்தத்திற்கு உழைத்த பிற தலைவர்களின் பெயர்களைப் பட்டியலிடுக.
2. அம்பேத்கரின் பண்புகளாக நீங்கள் உணர்ந்தவற்றை எழுதுக.

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் _____

அ) இராதாகிருட்டிணன் ஆ) அம்பேத்கர்

இ) நௌரோஜி ஈ) ஜவஹர்லால் நேரு

2. பூனா ஒப்பந்தம் _____ மாற்ற ஏற்படுத்தப்பட்டது.

அ) சொத்துரிமையை ஆ) பேச்சுரிமையை

இ) எழுத்துரிமையை ஈ) இரட்டை வாக்குரிமையை

3. சமத்துவச் சமுதாயம் அமைய அம்பேத்கர் ஏற்படுத்திய இயக்கம் _____

அ) சமாஜ் சமாத சங்கம் ஆ) சமாத சமாஜ பேரவை

இ) தீண்டாமை ஒழிப்புப் பேரவை ஈ) மக்கள் நல இயக்கம்

4. அம்பேத்கரின் சமூகப்பணிகளைப் பாராட்டி இந்திய அரசு _____ விருது வழங்கியது.

அ) பத்மஸ்ரீ ஆ) பாரத ரத்னா இ) பத்மவிபூசண் ஈ) பத்மபூசன்

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. புத்த சமயம் தொடர்பாக அம்பேத்கர் எழுதிய நூல் _____.
2. அம்பேத்கர் நிறுவிய அரசியல் கட்சியின் பெயர் _____.
3. பொருளாதாரப் படிப்பிற்காக அம்பேத்கர் _____ சென்றார்.

குறுவினா

1. அம்பேத்கர் தன் பெயரை ஏன் மாற்றிக்கொண்டார்?
2. தீண்டாமைக்கு எதிராக அம்பேத்கர் மேற்கொண்ட பணிகள் இரண்டினை எழுதுக.
3. வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளும் முன் அம்பேத்கர் கூறியது யாது?

சிறுவினா

1. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக அம்பேத்கர் ஆற்றிய பணிகள் யாவை?
2. அம்பேத்கரின் முதல் தேர்தல் வெற்றி குறித்து எழுதுக.

நெடுவினா

பூனா ஒப்பந்தம் பற்றி எழுதுக

சிந்தனை வினா

பாகுபாடில்லாத மக்கள் சமூகம் உருவாக நமது கடமைகளாக நீங்கள் கருதுவன யாவை?

www.tntextbooks.in
THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

அ

அறம்
பெரியாரின் சிந்தனைகள்

சமூகம், செம்மாந்து சீர்மையுடன் திகழப் பாகுபாடுகளற்ற மனவுறுதி படைத்த மக்கள் தேவை. அத்தகைய மக்களை உருவாக்கப் பகுத்தறிவு இன்றியமையாதது. பாகுபாட்டு இருளுக்குள் சிக்கித் திணறிக்கொண்டிருந்த தமிழக மக்களைத் தம் பகுத்தறிவு ஒளியால் வெளிக்கொணரப் பாடுபட்டோருள் முதன்மையானவர்; இருபதாம் நூற்றாண்டில் ஈரோட்டில் தோன்றிப் பகுத்தறிவு, தன்மதிப்பு (சுயமரியாதை) ஆகிய கண்களை மக்களுக்கு அளிக்க அரும்பணியாற்றியவர். யார் அவர்?

LLBF1R

தந்தை பெரியார்

வெண்தாடி வேந்தர், பகுத்தறிவுப் பகலவன், வைக்கம் வீரர், ஈரோட்டுச் சிங்கம் என்றெல்லாம் பலவாறு சிறப்பிக்கப்படுபவர் தந்தை பெரியார்; மூடப்பழக்கத்தில் மூழ்கிக் கிடந்த தமிழ் மக்களைப் பகுத்தறிவுப் பாதைக்கு அழைத்துச் சென்றவர்; அடிமையாய் உறங்கிக் கிடந்த சமூகம் விழிப்பதற்குச் சுயமரியாதைப் பூபாளம் இசைத்தவர்; மானமும் அறிவும் கொண்டவர்களாகத் தமிழர்கள் வாழவேண்டும் என்று அரும்பாடுபட்டவர்; தானே முயன்று கற்று, தானாகவே சிந்தித்து அறிவார்ந்த கருத்துகளை வெளியிட்டவர்.



பகுத்தறிவு

'பெரியார்' என்றவுடன் நம்முடைய நினைவுக்கு வருவது, அவரின் பகுத்தறிவுக் கொள்கை. எச்செயலையும் அறிவியல் கண்ணோட்டத்துடன் அணுகி ஏன்? எதற்கு? எப்படி? என்ற வினாக்களை எழுப்பி, அறிவின்வழியே சிந்தித்து முடிவெடுப்பதே பகுத்தறிவாகும்.

முன்னோர்கள் செய்தார்கள் என்பதற்காகவே ஒரு செயலை அப்படியே

mil_Pages 122-264.indd 210 23-01-2020 20:21:18



பின்பற்றி இன்றும் கடைப்பிடித்தல் கூடாது. அக்காலத்திற்கு ஏற்ற வகையில் அப்படிச் செய்திருப்பார்கள்; இன்று காலம் மாறிவிட்டது. இக்கால வளர்ச்சிக்கு ஏற்ப அறிவு நிலையில், நடைமுறைக்கேற்ற வகையில் செயல்பட வேண்டும் என்ற கண்ணோட்டத்துடனே பெரியார் சிந்தித்தார். சமூகம், மொழி, கல்வி, பண்பாடு, பொருளாதாரம் என அனைத்துத் துறைகளிலும் அவரின் சிந்தனை புதிய எழுச்சியை ஏற்படுத்தியது.

சமூகம்

தந்தை பெரியார் வாழ்ந்த காலத்தில் சமூகத்தில் சாதி சமயப் பிரிவுகள் மேலோங்கி இருந்தன. பிறப்பின் அடிப்படையில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் வேறுபாடுகள் இருந்தன. சாதி என்னும் பெயரால் ஒருவரை ஒருவர் இழிவு செய்யும் கொடுமை இருந்தது. இந்த இழிநிலை கண்டு தந்தை பெரியார் கொதித்தெழுந்தார். "சாதி உணர்வு ஆதிக்க உணர்வை வளர்க்கிறது. மற்றவர்களின் உரிமைகளைப் பறிக்கிறது. மனிதர்களை இழிவுபடுத்துகிறது. அந்தச் சாதி என்ற கட்டமைப்பை உடைத்தெறிய வேண்டும்" என்றார் அவர்.

சாதியினால் மனித வாழ்விற்கு எவ்விதச் சிறு பயனும் விளையப் போவதில்லை. அதனால் வீண் சண்டைகளும் குழப்பங்களுந்தான் மேலோங்குகின்றன. அத்தகு சாதி, மனிதனுக்குத் தேவையில்லை என்று வலியுறுத்தினார்.

மதம்

'மதங்கள் என்பன மனித சமூகத்தின் வாழ்க்கை நலத்திற்கே ஏற்படுத்தப்பட்டன. ஆனால், இன்று மதத்தின் நிலை என்ன? நன்கு சிந்தித்துப் பாருங்கள்; மனிதர்களுக்காக மதங்களா? மதங்களுக்காக மனிதர்களா? மதம் என்பது மனிதர்களை ஒற்றுமைப்படுத்துவதற்காகவா? பிரித்து வைப்பதற்காகவா?' எனப் பெரியார் பகுத்தறிவு வினாக்களை எழுப்பினார்; கடவுள் மறுப்புக் கொள்கையைக் கடைப்பிடித்தார்.

கல்வி

சமூக வளர்ச்சிக்குக் கல்வியை மிகச் சிறந்த கருவியாகப் பெரியார் கருதினார். 'கற்பிக்கப்படும் கல்வியானது மக்களிடம் பகுத்தறிவையும், சுயமரியாதை உணர்ச்சியையும், நல்லொழுக்கத்தையும் ஏற்படுத்த வேண்டும்; மேன்மை வாழ்வு வாழ்வதற்கேற்ற தொழில் செய்யவோ அலுவல் பார்க்கவோ பயன்பட வேண்டும்' என்றார். 'அறிவியலுக்குப் புறம்பான செய்திகளையும் மூடப்பழக்கங்களையும் பள்ளிகளில் கற்றுத் தரக்கூடாது. தற்சிந்தனை ஆற்றலையும் தன்னம்பிக்கையையும் வளர்க்கும் கல்வியினைக் கற்றுத்தர வேண்டும்' என்று பெரியார் கூறினார்.

சமூகத்தின் அனைத்து நிலையினருக்கும் கல்வி அளிக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டுமே கல்வி உரிமையானது எனவும் சில பிரிவினர்க்குக் கல்வி கற்க உரிமை இல்லை எனவும் கூறப்பட்ட கருத்துகளைப் பெரியார் கடுமையாக எதிர்த்தார். அனைவருக்கும் கல்வி அளிக்கப்பட வேண்டும். குறிப்பாகப் பெண்களுக்குக் கல்வியறிவு புகட்ட முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றார். பெண்களுக்கு அளிக்கப்படும் கல்வியினால் சமுதாயம் விரைவாக முன்னேறும் என்று

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.
www.tntextbooks.in

பெரியார் எதிர்த்தவை...

இந்தித் திணிப்பு

குலக்கல்வித் திட்டம்

தேவதாசி முறை

கள்ளுண்ணல்

குழந்தைத் திருமணம்

மணக்கொடை

பெரியார் நம்பினார். மனப்பாடத்திற்கு முதன்மை அளிக்கும் தேர்வு முறையையும், மதிப்பெண்களுக்கு முதன்மை அளிக்கும் முறையையும் பெரியார் கடுமையாக எதிர்த்தார்.

மொழி, இலக்கியம்

'ஒரு மொழியின் தேவை என்பது, அதன் பயன்பாட்டு முறையைக் கொண்டே அமைகிறது; இந்தியாவிலேயே பழமையான மொழி தமிழ் மொழியாகும். இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கேற்ற நூல்கள் தமிழில் படைக்கப்பட வேண்டும்' என்று கூறினார்.

'மொழியோ நூலோ இலக்கியமோ எதுவானாலும் மனிதனுக்கு மானம், பகுத்தறிவு, வளர்ச்சி, நற்பண்பு ஆகிய தன்மைகளை உண்டாக்க வேண்டும்' என்று கருதி மொழி, இலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சி குறித்தும் பெரியார் ஆழ்ந்து சிந்தித்தார்.

மதம், கடவுள் ஆகியவற்றின் தொடர்பற்ற இலக்கியம், யாவருக்கும் பொதுவான இயற்கை அறிவைத் தரும் இலக்கியம், யாவரும் மறுக்க முடியாத அறிவியல் பற்றிய இலக்கியம் ஆகியவற்றின் மூலம்தான் ஒரு மொழியும் அதன் இலக்கியங்களும் மேன்மை அடையமுடியும்; அத்துடன் அவற்றைப் பயன்படுத்தும் மக்களும் அறிவுடையவராக உயர்வர் என்று பெரியார் கூறினார்.

திருக்குறளில் அறிவியல் கருத்துகளும் தத்துவக்கருத்துகளும், அனைவருக்கும் பொதுவான வகையில் இடம் பெற்றிருப்பதால் அதை மதிப்புமிக்க நூலாகப் பெரியார் கருதினார். இந்நூலில் அரசியல், சமூகம், பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்தும் அடங்கியுள்ளன; இதை ஊன்றிப் படிப்பவர்கள் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள் என்றார்.

எழுத்துச் சீர்திருத்தம்

மொழியின் பெருமையும் எழுத்துகளின் மேன்மையும் அவை எளிதில் கற்றுக் கொள்ளக்கூடியனவாக இருப்பதைப் பொறுத்தே அமைகின்றன. எனவே, காலவளர்ச்சிக்கேற்பத் தமிழ் எழுத்துகளைச் சீரமைக்கத் தயங்கக் கூடாது என்று பெரியார் கருதினார். "மொழி என்பது உலகின் போட்டி, போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும்; அக்கருவிகள் காலத்திற்கேற்ப மாற்றப்பட வேண்டும்; அவ்வப்பொழுது கண்டுபிடித்துக் கைக்கொள்ள வேண்டும்" என்றார். அம்மாற்றத்திற்கான முயற்சியையும் பெரியார் மேற்கொண்டார்.

உயிர் எழுத்துகளில் 'ஐ' என்பதனை 'அய்' எனவும், 'ஔ' என்பதனை 'அவ்' எனவும் சீரமைத்தார் (ஐயா – அய்யா, ஔவை – அவ்வை). அதுபோலவே, மெய்யெழுத்துகளில் சில எழுத்துகளைக் குறைப்பதன் வாயிலாகத் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்றார்; அவ்வாறு குறைப்பதால் தமிழ்மொழி கற்பதற்கும் தட்டச்சு செய்வதற்கும் எளிதாகும்

வ.எண்	பழைய வடிவம்	புதிய வடிவம்
1	ண	ணா
2	ணை	ணை
3	ணெ	ணொ
4	ணே	ணோ
5	லை	லை
6	ளை	ளை
7	ரு	றா
8	ரெ	றொ
9	ரே	றோ
10	ண	ணா
11	ணை	ணை
12	ணெ	ணொ
13	ணே	ணோ

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

எனக் கருதினார். இச்சீரமைப்புக்கான மாற்று எழுத்துருக்களையும் (வரி வடிவம்) உருவாக்கினார். கால வளர்ச்சிக்கு இத்தகு மொழிச் சீரமைப்புகள் தேவை என்று கருதினார். பெரியாரின் இக்கருத்தின் சில கூறுகளை 1978ஆம் ஆண்டு தமிழக அரசு நடைமுறைப்படுத்தியது.

பெண்கள் நலம்

அக்காலத்தில் பெண்கள் அனைத்துத் துறைகளிலும் ஒடுக்கப்பட்டிருந்தனர். எனவே, நாட்டு விடுதலையைவிட, பெண் விடுதலைதான் முதன்மையானது என்று கூறினார் பெரியார்.

'கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் ஆண்களுக்கு நிகரான உரிமை, பெண்களுக்கும் அளிக்கப்பட வேண்டும்; வேலைவாய்ப்பில் ஐம்பது விழுக்காடு இட ஒதுக்கீடு பெண்களுக்குத் தரப்பட வேண்டும்; பொருளாதாரத்தில் பெண்கள் பிறரைச் சார்ந்து வாழவேண்டிய நிலையில் இருக்கக்கூடாது; நன்கு கல்வி கற்று, சுய உழைப்பில் பொருளீட்ட வேண்டும். தெளிந்த அறிவுடனும் தன்னம்பிக்கையுடனும் திகழ வேண்டும்' என்றார் பெரியார்.

இளம்வயதில் பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்கக்கூடாது; கைம்பெண்களுக்கு மறுமணம் செய்ய வழிவகை காணவேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தினார். குடும்பத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களுக்கும் சம உரிமை அளிக்கப்படவேண்டும்; பெண்களின் கருத்துகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும்;

தெரியுமா?

பெரியார் விதைத்த விதைகள்:

கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் இடஒதுக்கீடு

பெண்களுக்கான இடஒதுக்கீடு

பெண்களுக்கான சொத்துரிமை

குடும்ப நலத்திட்டம்

கலப்புத் திருமணம்,

சீர்திருத்தத் திருமணம் ஏற்பு

குடும்பச் சொத்தில் ஆண்களுக்குச் சமமான உரிமையைப் பெண்களுக்கும் வழங்க வேண்டும்; குடும்பப் பணிகளில் ஆண்களுக்கென்று தனிப்பணிகள் எதுவுமில்லை. ஆண்களும் குடும்பப் பணிகளைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பன போன்ற கருத்துகளை எடுத்துரைத்தார் பெரியார்.

சிக்கனம்

சிக்கனம் என்னும் அருங்குணத்தைப் பெரியார் பெரிதும் வலியுறுத்தினார். அதற்கேற்பத் தானும் வாழ்ந்து காட்டினார். பொருளாதாரத் தன்னிறைவு அடையாத நிலையில் அனைவரும் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது கட்டாயம் என்றார் பெரியார். விழாக்களாலும் சடங்குகளாலும் மூடப்பழக்கம் வளர்வதோடு, வீண்செலவும் ஏற்படுவதால் தேவையற்ற சடங்குகளையும் விழாக்களையும்

தெரியுமா?

1938 நவம்பர் 13 இல் சென்னையில் நடந்த பெண்கள் மாநாட்டில் ஈ.வெ.ரா.வுக்குப் 'பெரியார்' என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

27. 06. 1970 இல் யுனெஸ்கோ மன்றம் என்ற அமைப்பு தந்தை பெரியாரைத் 'தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ்' எனப் பாராட்டிப் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

தவிர்க்கவேண்டும் என்றார் அவர்; திருமணம் போன்ற விழாக்களைப் பகட்டின்றி மிக எளிமையாகவும் சீர்திருத்த முறையிலும் நடத்த வேண்டும் என்றார்.

சிந்தனைச் சிறப்புகள்

பெரியாரின் சிந்தனைகள் தொலைநோக்கு உடையவை; அறிவியல் அடிப்படையில் அமைந்தவை; மனிதநேயம் வளர்க்கப் பிறந்தவை. நடைமுறைக்கு ஒவ்வாத கருத்துகளை அவர் எப்பொழுதும் கூறியதில்லை. மேலும், தமது சீர்திருத்தக் கருத்துகளுக்கேற்ப வாழ்ந்து காட்டினார்; தம் வாழ்நாள் முழுவதும் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்புரை செய்தார்; சமுதாயம் மூடப்பழக்கங்களிலிருந்து மீண்டெழ அரும்பாடுபட்டார்; அதற்காகப் பலமுறை சிறை சென்றார்; பலரின் கடும் எதிர்ப்புகளைச் சந்தித்தார். இறுதி மூச்சுவரை சமூகச் சீர்திருத்தப் போராளியாகவே வாழ்ந்து மறைந்தார்.

'பெரியாரின் சிந்தனைகள் அறிவுலகின் திறவுகோல்; பகுத்தறிவுப் பாதைக்கு வழிகாட்டி; மனித நேயத்தின் அழைப்பு மணி; ஆதிக்கசக்திகளுக்கு எச்சரிக்கை ஒலி; சமூகச் சீர்கேடுகளைக் களைவதற்கு மாமருந்து' என்று அறிஞர்கள் மதிப்பிடுவர்.

தெரிந்து தெளிவோம்

பெரியார் இயக்கமும் இதழ்களும்

தோற்றுவித்த இயக்கம் – சுயமரியாதை இயக்கம்

தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு –1925

நடத்திய இதழ்கள் – குடியரசு, விடுதலை, உண்மை, ரிவோல்ட் (ஆங்கில இதழ்)

கற்பவை கற்றபின்...

1. 'இன்று பெரியார் இருந்திருந்தால்" என்னும் தலைப்பில் மேடைப் பேச்சுக்கான உரை ஒன்றை எழுதுக.
2. பெரியாரை நேர்காணல் செய்வதாகக் கருதி வினாப்பட்டியலை உருவாக்குக.
3. 'இன்றைய சமூகம் பெரியாரின் பாதையில் நடக்கிறதா? நடக்கவில்லையா?' எனும் தலைப்பில் கலந்துரையாடல் நடத்துக.

LLKB3E

தொண்டு செய்து பழுத்த பழம்
தூயதாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்
மனக்குகையில் சிறுத்தை எழும்
அவர்தாம் பெரியார் – பார்
அவர்தாம் பெரியார்

– புரட்சிக்கவி பாரதிதாசன்

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

நாடு

எ

சிற்றகல் ஒளி

– ம.பொ.சிவஞானம்

LNWHCX

கதை கேட்கும் வழக்கம் சிறிய வயது முதல் அனைவருக்கும் இருக்கிறது. கேட்பது குறைந்துபோய்க் கதை படிப்பது அதன் அடுத்த படிநிலை. அதுவே ஒருவரைப் படிப்பாளியாகவும் படைப்பாளியாகவும் பக்குவப்படுத்துகிறது. அப்படியான ஒரு படைப்பாளி தன்னை முன்வைத்துத் தன் நாட்டின் வரலாற்றைக் கூறும்நிலை சிலருக்கு மட்டுமே வாய்த்திருக்கிறது. வரலாற்றின் போக்கினை மாற்றி வடிவமைத்தவர்களின் வாழ்க்கைக் கதையைத் தன் வரலாறாகப் படிப்பது, நம்மையும் அந்த வரலாற்றுப் பாத்திரமாக உணரவைக்கும்!



இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1906ஆம் ஆண்டு, மிகவும் சிறப்புடைய ஆண்டாகக் கருதப்படுகிறது. அந்த ஆண்டில்தான் காந்தியடிகள் சத்தியாக்கிரகம் என்ற அறப்போர் முறையைத் தென்னாப்பிரிக்காவில் தொடங்கி வைத்தார். தமிழ்நாட்டைத் தனித்து நோக்கினாலும் வரலாற்றுச் சிறப்பிற்குரிய நிகழ்வுகள் பல **அவ்வாண்டில்** நடைபெற்றன. வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார். இத்தகைய சிறப்புள்ள ஆண்டில் ஜூன் 26ஆம் நாள், சென்னை ஆயிரம்விளக்கு வட்டம் சால்வன்குப்பம் என்னும் பகுதியில் நான் பிறந்தேன். நான் பிறந்த வட்டத்துக்கு ஆயிரம்விளக்கு எனப் பெயர் இருப்பினும் என்னைப் பெற்றெடுத்த குடும்பம் வறுமை என்னும் இருள் சூழ்ந்ததுதான். என் தந்தையார் பெயர் பொன்னுசாமி. அன்னையின் பெயர் சிவகாமி. பெற்றோர் எனக்கு இட்ட பெயர் ஞானப்பிரகாசம். ஆனால் சரபையர் என்ற முதியவர் ஒருவர் என்னுடைய பெயரை மாற்றி 'சிவஞானி' என்றே அழைத்தார். பின்னாளில் அவர் எனக்கிட்டு அழைத்த சிவஞானி என்னும் பெயரே சிறிது திருத்தத்துடன் சிவஞானம் என்று நிலைபெற்றது.

வறுமையால் இழந்[illegible]

நான் பள்ளியில், மூன்றாம் வகுப்பில் நுழைந்த ஏழாம் நாளில், பகல் நேரத்தில் வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டுத் திரும்பவும் பள்ளிக்குப் போனேன். காலையிலேயே பாடப்புத்தகங்களோடு வராததற்காக ஆசிரியர் என்னைக் கண்டித்தார். பிற்பகலில் புத்தகங்களைக் கட்டாயம் கொண்டுவர வேண்டுமென்று கட்டளையிட்டிருந்தார். கையில் புத்தகமின்றி இருந்த என்னைக் கண்ட ஆசிரியர் பள்ளியிலிருந்து விரட்டிவிட்டார். இது எனக்குப் பெருத்த அவமானமாக இருந்ததால் அழுதவண்ணம் வீட்டுக்கு வந்தேன்.

நான் அழுவதற்கான காரணத்தை அறிந்ததும், என் தந்தை என்னைக் கையோடு அழைத்துக்கொண்டு வகுப்பறைக்குள் நுழைந்தார். என்னை நல்ல வெயில் நேரத்தில் வீட்டிற்கு விரட்டியதற்காக, ஆசிரியரை என் தந்தையார் வாயார வைதார். அன்றோடு என்

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

கல்வி முற்றுப் பெற்றது. மூன்றாம் வகுப் அந்த நாளில் தேவைப்பட்டவை ஆங்கிலம் – தமிழ் மொழிப் பாடப்புத்தகங்கள்தாம். இவற்றைக்கூட வாங்கிக்கொடுக்க என் குடும்பத்தின் வறுமை இடம் தரவில்லை.

செவிச்செல்வம் பெற்றேன்

அன்னையார் இளமையிலே எனக்குப் பயிற்றுவித்த பாக்கள் எனது இலக்கியப் பயிற்சிக்கான பாலபாடங்களாக அமைந்தன. அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை ஆகிய அம்மானைப் பாடல்களைப் பாடுவார். அந்த நேரத்தில் என்னையும் சிறிது நேரம் அந்த நூல்களைப் படிக்க வைப்பார். அதனால், சந்த நயத்தோடும் எதுகை மோனையோடும் உள்ள அம்மானைப் பாடல்களை அடிக்கடி பாடிப்பாடிப் பிள்ளைப் பருவத்திலேயே இலக்கிய அறிவை வளர்த்து வந்தேன். சித்தர் பாடல்களை நானாகவே விரும்பிப் படித்து மனனம் செய்வேன்.

சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாகவும் நான் இலக்கிய அறிவு பெற்றேன். அப்போது அவர்கள் வெளியிடும் சிறந்த கருத்துகளை ஏடுகளில் குறித்து வைத்துக் கொள்வேன். ஒருவன் அறிவு விளக்கம் பெறுவதற்கு இரண்டு வழிகள் உள. ஒன்று கல்வி; மற்றொன்று கேள்வி. யான் முறையாக ஏட்டுக்கல்வி பெற இயலாமல் போனதால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யக் கேள்வி ஞானத்தைப் பெறுவதிலே மிகுந்த ஆர்வம் காட்டினேன். எனது கேள்வி ஞானத்தைப் பெருக்கிய பெருமையிலே திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளுக்கே மிகுந்த பங்குண்டு.

புத்தகப்பித்தன்

எனக்கு உலகியல் அறிவு தோன்றிய நாள்தொட்டு இயன்றவரை தாய்மொழியிலேனும் நல்ல புலமை பெற்றிட வேண்டும் என்று விரும்பி, அதற்காக இடைவிடாது முயன்று வந்திருக்கிறேன். சுருங்கச்சொன்னால், என் அறியாமையுடன் கடும்போர் நடத்தியிருக்கிறேன்.

நூல் வாங்குவதற்குப் போதிய பணமில்லாத குறையால் பழைய புத்தகங்கள் விற்கும் கடைகளுக்குச் சென்று, எனக்கு விருப்பமான புத்தகங்களை, மிக மிகக் குறைந்த விலைக்கு வழக்கமாகக் கொண்டிருந்தேன். உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகங்களை வாங்கிவிட்டு, பல வேளைகளில் பட்டினி கிடந்திருக்கிறேன். குறைந்த விலைக்கு நல்ல நூலொன்று கிடைத்துவிட்டால் பேரானந்தம் அடைவேன். என் வாழ்நாளில் நானாக முயன்று சேர்த்துவைத்துள்ள செ ா த் து க ள் எ ன் னி ட மு ள் ள பல்லாயிரக்கணக்கான நூல்களைத் தவிர வேறில்லை என்று உறுதியாகக் கூறுவேன்.

பேராயக் கட்சி (காங்கிரஸ் கட்சி)

1931இல் காந்தி – இர்வின் ஒப்பந்தக் காலத்திலே நாடு முழுவதிலுமிருந்த பேராயக் கட்சிக்காரர்கள் ஆக்கவழிப்பட்ட வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். அந்நியத் துணிக்கடை மறியல், காந்தி – இர்வின் ஒப்பந்தப்படி அனுமதிக்கப்படவில்லை. ஆகவே தீண்டாமை விலக்கு, கதர் விற்பனை ஆகியவற்றிலே பேராயக் கட்சிக்காரர்களை ஈடுபடுத்தியது கட்சித்தலைமை. பேராயக் கட்சியால் நடத்தப்பட்ட ஊர்வலங்களிலும் கதர் விற்பனையிலும் தவறாமல் கலந்துகொள்வேன்.

ஆறுமாதக் கடுங்காவல்

30.09.1932இல் 'தமிழா! துள்ளி எழு' என்னும் தலைப்புடைய துண்டறிக்கை ஒன்றைக் கடற்கரையில் குழுமியிருந்த மக்களிடையே வழங்கியதற்காக, நான் சிறையிலிடப்பட்டேன். பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். அவற்றை நானும் வேறு சில தோழர்களும் சேர்ந்து நூற்றுக்கணக்கான பிரதிகளைக் கையாலேயே எழுதினோம். எதிர்பார்த்தபடியே காவலர்கள் கைது செய்தனர். வழக்குத் தொடரப்பட்டு மூன்று மாதக் கடுங்காவல் தண்டனையும் 300 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. கட்டத் தவறினால் மேலும் மூன்று மாதக் கடுங்காவல். நான் ஆறுமாதமும் கடுங்காவலை அனுபவித்தேன்.

சிறையில் வேளாவேளைக்கு எப்படியோ எனக்குச் சோறு கிடைத்து வந்தது. என்னளவில் தொடர்ந்து ஆறுமாத காலத்திற்கு வாழ்க்கைப் போராட்டத்திலிருந்து விடுதலை பெற்றுவிட்டேன். 'சி' வகுப்புச் சோறுதான் என்றாலும், அடிக்கடி பட்டினியைச் சந்தித்தவனுக்கு அதுவே அமுதந்தானே! ஆனால், என் குடும்பத்தின் அவலநிலை நினைவுக்கு வந்தபோதெல்லாம் சிறையில் தரப்பட்ட உணவை மனநிறைவோடு உண்ண முடியாதவனானேன்.

1942 ஆகஸ்டு 8ஆம் நாள், இந்திய வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கத்தக்க புனித நாளாகும். அன்றுதான் 'இந்தியாவை விட்டு வெள்ளையனே வெளியேறு' என்ற தீர்மானத்தைப் பம்பாயில் கூடிய அகில இந்திய பேராயக்கட்சி ஒரு மனதாக நிறைவேற்றியது. தேசம் முழுவதுமே அன்று புத்துயிர் பெற்றது. நாடெங்கும் தலைவர்கள் கைதான நிலையில் நானும் ஆகஸ்டு 13ஆம் நாள் வேலூர் மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டேன். காமராசர், தீரர் சத்தியமூர்த்தி, பிரகாசம் உட்பட, தென்னகத்தின் முன்னணித் தலைவர்கள் பலரை அங்கு நான் கண்டேன். சில நாள்களுக்குப் பின் அங்கிருந்து அமராவதிச் சிறைக்கு மாற்றினர். சிறைச்சாலையில் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தின் மேற்கூரை துத்தநாகத் தகடுகளால் வேயப்பட்டிருந்தது. கோடைக்காலத்தில் 120 பாகை அளவில் வெயில் காயக்கூடிய பகுதியில் மின்சார விசிறிகூட இல்லாமல் எங்களுடைய நிலை மிகவும் இரங்கத்தக்கதாக இருந்தது.

'தமிழகம்' பற்றிய கனவு

1947, ஆகஸ்டு பதினைந்தாம் நாளன்று சென்னை மாநகரில் விடுதலை விழாக் கொண்டாடி முடிந்ததும் மறுநாள் காலை நாங்கள் ஒரு குழுவாக வடக்கெல்லைக்குச் சென்றோம். இதுவே வடக்கெல்லை மீட்சிக்கான முதல் முயற்சியாக அமைந்தது. ஆசிரியர் மங்கலங்கிழார் என்ற சுமார் 55 வயதுடைய பெரியாரின் அழைப்பின் மீதே நாங்கள் வடக்கெல்லைக்குச் சென்றோம். அவர் சிறந்த தமிழறிஞர். இந்திய விடுதலைக்குப் பிறகு மாநிலங்களை மொழிவாரியாகப் பிரித்தனர். அப்போது, ஆந்திரத் தலைவர்கள் சித்தூர் மாவட்டம் முழுவதையும் புதிதாக அமையவிருக்கும் ஆந்திர மாநிலத்துடன் இணைக்க விரும்பினர். அச்சூழலில் வடக்கெல்லைத் தமிழ்மக்களை ஒருங்கிணைத்துத் தமிழுணர்வு கொள்ளச் செய்தவர் தமிழாசான் மங்கலங்கிழார். அவருடன் இணைந்து, தமிழரசுக் கழகம் சென்னையிலும் திருத்தணியிலும் தமிழர் மாநாடு நடத்தியது. சித்தூர், புத்தூர், திருத்தணி ஆகிய இடங்களிலும் வடக்கெல்லைப் போராட்டத்தைத் தொடங்கியது. போராட்டத்தில் ஈடுபட்ட நான், மங்கலங்கிழார், விநாயகம், ஈ.எஸ். தியாகராஜன், ரஷீத் என ஏராளமானோர் சிறைப்பட்டோம். போராட்டத்தில் ஈடுபட்டு இராஜமுந்திரி சிறையிலிருந்த திருவாலங்காடு கோவிந்தராசன், பழநி சிறையிலிருந்த மாணிக்கம் ஆகிய இருவரும் சிறையிலேயே உயிர் துறந்தனர்.

சர்தார் கே.எம். பணிக்கர் தலைமையில் மத்திய அரசால் அமைக்கப்பட்ட மொழிவாரி ஆணையம், சித்தூர் மாவட்டம் முழுவதையும் ஆந்திராவிற்குக் கொடுத்துவிட்டது. அதனை எங்களால் ஏற்க முடியவில்லை. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' என்று முழங்கினோம். மீண்டும் பெரும்

தெரிந்து தெளிவோம்

நான் சிலப்பதிகாரக் காப்பியத்தை மக்களிடம் கொண்டுசெல்ல விரும்பியதற்குக் காரணமுண்டு; திருக்குறளையோ, கம்பராமாயணத்தையோ விரும்பாதவனல்லன்; ஆயினும் இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கேடில்லாத வகையில், தமிழினத்தை ஒன்றுபடுத்த எடுத்துக்கொண்ட முயற்சிக்குப் பயன்படக்கூடிய ஓர் இலக்கியம் தமிழில் உண்டென்றால், அது சிலப்பதிகாரத்தைத் தவிர வேறில்லையென்று உறுதியாகக் கூறுவேன். இளங்கோ தந்த சிலம்பு, தமிழினத்தின் பொதுச்சொத்து. எனவேதான் தமிழகத்தின் பட்டிதொட்டியெங்கும் சிலப்பதிகார மாநாடுகள் நடத்தினோம்.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.
www.tntextbooks.in

போராட்டம் தொடங்கியது. அதன் விளைவாக படாஸ்கர் ஆணையம் அமைக்கப்பட்டு, திருத்தணிவரையுள்ள தமிழ்நிலங்கள் மீட்கப்பட்டன.

சென்னையை மீட்டோம்

ஆந்திர மாநிலம் பிரியும்போது சென்னைதான் அதன் தலைநகராக இருக்க வேண்டும் என்று ஆந்திரத் தலைவர்கள் கருதினர். அந்நாள் முதல்வர் இராஜாஜிக்கு நிலைமையின் தீவிரத்தை உணர்த்தியபோது, தலைநகர் காக்கத் தன் முதலமைச்சர் பதவியைத் துறக்கவும் அவர் முன்வந்தார். சென்னை மாகாணத்திலிருந்து பிரித்து ஆந்திரம் அமைவதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த நீதிபதி வாஞ்சு தலைமையிலான ஒரு நபர் ஆணையம், ஆந்திரத்தின் தலைநகராகச் சென்னை இருக்க வேண்டும் என்ற இடைக்கால ஏற்பாட்டினைப் பரிந்துரைத்திருப்பதாக அதிகாரப்பூர்வமற்ற கருத்துகள் நிலவின.

இதையொட்டி, மாநகராட்சியின் சிறப்புக் கூட்டமொன்றை அப்போதைய மாநகரத் தந்தை செங்கல்வராயன் தலைமையில் கூட்டி, சென்னை பற்றிய தீர்மானமொன்றை முன்மொழிந்து, "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்று முழங்கினேன். தீர்மானம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டமை, நடுவணரசை அசைத்தது. கடைசியாக, 25.03.1953 அன்று நாடாளுமன்றத்தில் பிரதமர் நேரு நடுவணரசின் சார்பில் அதிகாரப்பூர்வமான உறுதிமொழியொன்றை வெளியிட்டார். அதன்படி ஆந்திர அரசின் தலைநகரம் ஆந்திர நாட்டின் எல்லைக்குள்ளேயே அமையும் என்று உறுதியளிக்கப்பட்டது. சென்னை தமிழருக்கே என்பதும் உறுதியானது.

தெற்கெல்லைப் போராட்டம்

தாய்த்தமிழக மக்களில் பலர் தெற்கெல்லைக் கிளர்ச்சியோடு எனக்குள்ள தொடர்பை அறியமாட்டார்கள். நான் முதன்முதலில் ஈடுபட்டது தெற்கெல்லைக் கிளர்ச்சியில்தான். 1946 அக்டோபர் 25இல் நாகர்கோயில் நகரின் ஒரு பகுதியான வடிவீசுவரத்தில் வடிவை வாலிபர் சங்கத்தின் ஆண்டு விழாவில் பேசினேன். அதுதான் தெற்கெல்லைக் கிளர்ச்சி பற்றிய எனது முதல் பேச்சு. அந்நாளில் திருவிதாங்கூர் சமஸ்தானம் தனி அரசாக இருந்தது.

1953–54ஆம் ஆண்டுகளில் தெற்கெல்லைப் பகுதிகளைக் கேரள (திருவிதாங்கூர்) முடியாட்சியிலிருந்து மீட்கவும் போராடினோம். தமிழக வடக்கு – தெற்கு எல்லைக் கிளர்ச்சிகளைத் தமிழகம் தழுவிய அளவில் தொடங்கிவைத்தது தமிழரசுக் கழகம்தான் என்றாலும் அதனை நடத்துகின்ற பொறுப்பை எல்லைப்பகுதி மக்களிடமே விட்டுவைத்திருந்தேன். அவர்களுள் பி.எஸ். மணி, ம. சங்கரலிங்கம், நாஞ்சில் மணிவர்மன், பி.ஜே. பொன்னையா ஆகியோர் முதன்மையானவர்கள். தெற்கெல்லைக் கிளர்ச்சியில் திருவிதாங்கூர் ஆட்சி நடத்திய துப்பாக்கிச் சூடு காரணமாக உயிர்நீத்த தமிழரசுக் கழகத் தோழர்களான தேவசகாயம், செல்லையா ஆகிய இருவரையும் நாம் மறந்துவிடக் கூடாது. நதானியல், தாணுலிங்கம், காந்திராமன் போன்ற முதியவர்களும் என்பால் நம்பிக்கை வைத்திருந்தனர். இயற்கையாகவே போர்க்குணம்கொண்ட நேசமணி, தென் திருவிதாங்கூரில் மிகுந்த செல்வாக்குடையவர். அவருடைய வருகைக்குப் பிறகு போராட்டம் மேலும் வலுப்பெற்றது.

மார்ஷல் ஏ. நேசமணி

இளம்வயதிலேயே சமூக விடுதலைக்காகப் போராடியவர்; வழக்கறிஞர். நாகர்கோவில் நகர்மன்றத் தலைவராகவும் சட்டமன்ற உறுப்பினராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார். குமரி மாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர்; இதனால் மார்ஷல் நேசமணி என்று அழைக்கப்பட்டார். 1956 நவம்பர் 1ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்து, தமிழகத்தின் தென் எல்லையாக மாறியது. இவருடைய நினைவைப் போற்றும் வகையில் தமிழக அரசு இவருக்கு நாகர்கோவிலில் சிலையோடு மணிமண்டபமும் அமைத்துள்ளது.

திருவிதாங்கூர் ஆட்சி அகன்று, கேரள மாநிலம் உருவானது. அப்போது தமிழர்கள் மிகுதியாக வாழக்கூடிய தேவிகுளம், பீர்மேடு, தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு, நாகர்கோவில் ஆகிய பகுதிகள் தமிழகத்தோடு சேர வேண்டும் என்று தமிழரசுக் கழகம் போராட்டத்தைத் தொடங்கியது. ஆனால் மேற்சொன்ன பகுதிகளோடு தமிழகத்திலிருந்த கோவை மாவட்டத்தின் மேற்குப்பகுதி, நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர், உதகமண்டலம் ஆகியவற்றையும் பிரித்தெடுத்துக் கேரளத்துடன் இணைக்க வேண்டுமென்று கேரளத்தவர், பசல் அலி ஆணையத்திடம் விண்ணப்பித்தனர். பசல் அலி ஆணையம் நடுவண் அரசுக்குத் தந்த பரிந்துரை 1955 அக்டோபர் 10ஆம் நாள் வெளியானது. அந்தப் பரிந்துரையில், மாநிலங்களை மொழிவாரியாகப் பிரித்து அமைக்கும் கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டதோடு சென்னை மாநிலத்தில் உள்ள மலபார் மாவட்டத்தைக் கேரளத்தோடும் திருவிதாங்கூர் – கொச்சி இராஜ்யத்திலிருந்த கல்குளம், விளவங்கோடு, தோவாளை, அகத்தீசுவரம், செங்கோட்டை ஆகிய பகுதிகள் தமிழ்நாட்டோடும் இணைய வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது. தேவிகுளம், பீர்மேடு நம் கைவிட்டுப் போயின.

புறநானூற்றிலும் சிலப்பதிகாரத்திலும் தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கட மலையாகவும் தெற்கெல்லை குமரிமுனையாகவும் கூறப்படுவதனைப் படித்தபோது எனது நெஞ்சம் இறும்பூது எய்தியது. மலையும் கடலும் ஒரு நாட்டின் இயற்கை எல்லைகளாக அமைவதென்பது அந்த நாட்டின் தவப்பயனாகும். அந்தத் தெய்வீக எல்லைகளை ஓரளவேனும் தமிழகம் திரும்பப் பெற்றது என்பதே என் வாழ்நாள் மகிழ்ச்சியாகும்.

எத்திசையும் புகழ் மணக்க.....

கடல்கடந்த தமிழ் வணிகம்

ஆஸ்டிரியா நாட்டுத் தலைநகரமான வியன்னாவில் அமைந்துள்ள அருங்காட்சியகத்தில் பேபிரஸ் தாளில் எழுதப்பட்ட அரிய கையெழுத்துச் சுவடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இச்சுவடி சேர நாட்டுத் துறைமுகமான முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகருக்கும் எகிப்து நாட்டின் அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் வாழ்ந்த கிரேக்க வணிகருக்கும் இடையிலான வணிக ஒப்பந்தம். இது கி.பி. 2ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது.

நூல் வெளி

ம.பொ.சிவஞானத்தின் 'எனது போராட்டம்' என்னும் தன்வரலாற்று நூலில் இருந்து இக்கட்டுரை தொகுத்து வழங்கப்பட்டுள்ளது. சிலம்புச்செல்வர் என்று போற்றப்படும் ம.பொ.சிவஞானம் (1906 – 1995) விடுதலைப் போராட்ட வீரர்; 1952முதல் 1954வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் 1972முதல் 1978வரை சட்டமன்ற மேலவைத் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்; தமிழரசுக் கழகத்தைத் தொடங்கியவர். 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்னும் இவருடைய நூலுக்காக 1966ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்றார். தமிழக அரசு திருத்தணியிலும் சென்னை தியாகராய நகரிலும் இவருக்குச் சிலை அமைத்துள்ளது.

கற்பவை கற்றபின்...

1. எவரேனும் ஓர் அறிஞர் வாழ்வில் நடந்த நிகழ்வுகளில் உங்களைக் கவர்ந்த ஒன்றை அவரே சொல்வதைப் போன்று தன் வரலாறாக மாற்றி எழுதுக.
2. நீங்கள் படித்துச் சுவைத்த வரலாற்றுக் கதைகள் பற்றி வகுப்பறையில் உரை நிகழ்த்துக.

உரைநடை உலகம்

ஜெயகாந்தம்

– நினைவு இதழ்

T2GVPJ

கருத்தாழமும் வாசகச் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர் ஜெயகாந்தன். சமகாலக் கருத்துகளையும் நிகழ்வுகளையும் சமகால மொழியில் சமகால உணர்வில் தந்தவர் அவர்; சிறுகதை, புதினம், திரைப்படம், முன்னுரை, பேட்டி என எதைத் தொட்டாலும் தனிமுத்திரை பதித்தவர்; இலக்கியத்திற்கான பெரும் விருதுகளை வென்றவர். மனிதம் தோய்ந்த எழுத்தாளுமை மிக்கவர் ஜெயகாந்தன். அவரது காந்தத் தன்மையுடைய எழுத்தை நினைவூட்டும் வகையில் அவரது படைப்புப் புதையலிலிருந்து சில மணிகளைத் தொடுத்து ஜெயகாந்தம் என்னும் நினைவு இதழ் உருவாக்கப்பட்டுள்ளது.

உள்ளே...

- எதற்காக எழுதுகிறேன்? – ஜெயகாந்தன்
- இவர்கள் பார்வையில் ஜெயகாந்தன்
- ஈன்ற முத்துகளில் சில (எழுதிய நூல்கள்)
- திரைப்படமான படைப்புகள்
- முன்னுரையில் முகம் காட்டும் ஜெயகாந்தன்
- இன்னுமொரு முகம் (கவிதை)
- தொடுத்த கேள்விகளும் கொடுத்த பதில்களும் (கேள்வி பதில்)
- தர்க்கத்திற்கு அப்பால் – கதை

24.04.1934 – 08.04.2015

விருதுகள்

- குடியரசுத் தலைவர் விருது (உன்னைப்போல் ஒருவன் – திரைப்படம்)
- சாகித்திய அகாதெமி விருது – சில நேரங்களில் சில மனிதர்கள் (புதினம்)
- சோவியத் நாட்டு விருது (இமயத்துக்கு அப்பால்)
- ஞானபீட விருது
- தாமரைத்திரு விருது

THE WISDOM ACADEMY™
We Guide... You Succeed.

எதற்காக எழுதுகிறேன்? – ஜெயகாந்தன்

சமூக அமைப்பின் முரண்பாடுகளை எழுத்திலே அப்பட்டமாகக் காட்டியவர். நேர்முக எதிர்முக விளைவுகளைப் பெற்றவர். உள்ளடக்க விரிவால் மனிதாபிமானத்தை வாசக நெஞ்சங்களில் விதைத்தவர். தன்னையறிதல் என்பதிலும் தன்னை உணர்த்துதல் என்பதிலும் முனைப்பாக இருந்தவர். அவர்தான் ஜெயகாந்தன்

நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு, என் எழுத்துக்கு ஒரு இலட்சியமும் உண்டு. நான் எழுதுவது, முழுக்க முழுக்க வாழ்க்கையிலிருந்து நான் பெறும் கல்வியின் விளைவும் எனது தனிமுயற்சியின் பயனுமாகும்.

இந்த நாட்டில், வியாசன் முதல் பாரதி வரை எதற்காக எழுதினார்கள்? இவர்களில் யாராவது கலையைத் தாங்கிப் பிடிக்க என்று சொல்லிக்கொண்டதுண்டா? இவர்களைவிட கலையைத் தாங்கியவர்களும், காலம் காலமாய் வாழும், வாழப்போகும் கலா சிருஷ்டிகளைத் தந்தவர்களும் உண்டா?

தர்மார்த்தங்களை உபதேசிக்கவே வியாஸர் பாரதத்தை எழுதினார்.

தமிழ் இலக்கணமே நூலினியல்பாவது என்னவென்று சொல்லும் போது,

'நூலினியல்பே நுவலின் ஓரிரு

பாயிரந்தோற்றி மும்மை யினொன்றாய்

நாற்பொருட் பயத்தலொடு எழுமதந் தழுவி'

என்று நூலின் பயன் அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு பயனுக்காக இருத்தல் வேண்டும் என்று சொல்லி அதன் பின்னர்தான் விளக்கங்களைக் கூறிச் செல்கிறது.

கலைத்தன்மைக்கு எந்தவிதக் குறைவும் வராமல், கலாதேவியின் காதற் கணவனாகவும் சமுதாயத் தாயின் அன்புப் புதல்வனாகவும் இருந்துதான் நான் எழுதுகிறேன்.

அர்த்தமே வடிவத்தை வளமாக்குகிறது அல்லவா? வெறும் வடிவம் மரப்பாச்சிதான். ஆகையினால் இவற்றைப் பிரித்துக்கொண்டு அவஸ்தைக்கு உள்ளாகின்றார். நமது அறியாமையால் அவஸ்தைகளுக்குள்ளாகி, பிறரையும் நமது அறியாமையால் அவஸ்தைக்கு உட்படுத்தாமல், சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே நான் எழுதுகிறேன். கலைப்பணி என்றாலே அதனுள் சமூகப் பார்வை அடக்கம். பிரித்துப் பேசும் போக்கு வந்துவிட்டதால் பிரித்துச் சொல்கிறேன். அது சேர்ந்துதான் இருக்கிறது.

'எதற்காக எழுதுகிறேன்?' என்று நான் சொன்ன காரணங்களுக்குப் புறம்பாக நடந்தால் நான் கண்டிக்கப்படவும், திருத்தப்படவும் உட்பட்டிருக்கிறேன்.

இவர்கள் பார்வையில் ஜெயகாந்தன்

பள்ளிக்கல்வி அளவே படித்திருந்த ஜெயகாந்தன் தமிழிலக்கிய உலகில் மிகப் பெரிய ஆளுமையாகத் திகழ்கிறார். எல்லாத்தரப்பு மொழிகளையும் ஆண்ட வல்லமை அவருக்கிருந்தது.

- "ஜெயகாந்தன், எத்தகைய பாத்திரங்களைப் படைத்தாலும் அந்தப் பாத்திரங்களின் சிறந்த அம்சங்களைக் குறிப்பிடத் தவறுவதில்லை. துவேஷத்தைப் பரப்புவது, அவருடைய இயல்புக்கு சற்றும் ஒவ்வாதது. அவர் அரசியலில் தொடர்ந்து பங்கு பெறாமல் போனதற்கு இதுகூட காரணமாக இருந்திருக்கலாம்."
  – அசோகமித்திரன்

- கச்சிதமான உருவம், கனமான உள்ளடக்கம், வலுவான நடை, புதுக்கருத்துகள், புதுவிளக்கங்கள், ஆழம், கனம் இந்த அம்சங்களை இவருடைய சிறுகதைகளில் பூரணமாகக் காணலாம். அதுமட்டுமின்றிப் பலதிறப்பட்ட சூழ்நிலைகளையும் வெற்றிகரமாகச் சித்தரிப்பது இவருடைய அரிய சாதனை.
  – வாசகர்களின் கருத்து – தீபம் இதழ் – 1967.

- நேர் கொண்ட ஆனால் வித்தியாசமான பார்வை. நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள், திமிர்ந்த ஞானச் செருக்கு, கம்பீரமான குரல், வளமான, புதுமையான வாழ்க்கைச் சித்தரிப்புகள் – இவைகள்தாம் ஜெயகாந்தன் என்ற செம்மாந்த தமிழனின் சிறப்பான அடையாளங்கள். 'படிக்காத மேதை' என்று குறிப்பிடப்படும் அவர், முறையாகக் கல்லூரிகளில் படிக்கவில்லையே தவிர, தமிழ், இந்திய இலக்கியங்களை மட்டுமன்றி, சோவியத் பிரெஞ்சு இலக்கியங்களைத் தானே படித்து உணர்ந்தது மட்டுமன்றி, வாழ்க்கையையும் ஆழமாகப் படித்தவர் பிறகு அவற்றை வார்த்தைகளில் அழகுறப் படைத்தவர்.

◆ ◆ ◆ ◆ ◆ ◆

- கா.செல்லப்பன்

ஈன்ற முத்துகளில் சில (எழுதிய நூல்கள்)

சிறுகதைத் தொகுப்பு	குறும்புதினங்கள்	புதினங்கள்
❖ குருபீடம்	❖ பிரளயம்	❖ பாரீசுக்குப் போ!
❖ யுகசந்தி	❖ கைவிலங்கு	❖ சுந்தர காண்டம்
❖ ஒரு பிடி சோறு	❖ ரிஷிமூலம்	❖ உன்னைப் போல் ஒருவன்
❖ உண்மை சுடும்	❖ பிரம்ம உபதேசம்	❖ கங்கை எங்கே போகிறாள்
❖ இனிப்பும் கரிப்பும்	❖ யாருக்காக அழுதான்?	❖ ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்
❖ தேவன் வருவாரா	❖ கருணையினால் அல்ல	❖ இன்னும் ஒரு பெண்ணின் கதை
❖ புதிய வார்ப்புகள்	❖ சினிமாவுக்குப் போன சித்தாளு	❖ ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்

மொழி பெயர்ப்புகள்

- வாழ்விக்க வந்த காந்தி (பிரெஞ்சு மொழியில் வந்த காந்தி வாழ்க்கை வரலாற்றின் தமிழாக்கம்)
- ஒரு கதாசிரியனின் கதை (முன்சி பிரேம்சந்தின் வாழ்க்கை வரலாறு)

◆ ◆ ◆ ◆ ◆ ◆

திரைப்படமான படைப்புகள்



முன்னுரையில் முகம் காட்டும் ஜெயகாந்தன்

எழுத்தாளர், ஒருவருடைய படைப்பு நோக்கத்தையும் படைப்பு பாங்கையும் வாழ்க்கைச் சிக்கல்கள் குறித்த கண்ணோட்டத்தையும் உணர்த்துவதுதான் முன்னுரை. தன்னுடைய படைப்புகளுக்குத் தானே முன்னுரைகள் எழுதிக்கொள்ளும் ஜெயகாந்தன், பின்னர் வரவிருக்கும் கேள்விகளுக்குத் தரும் பதில்களாக அவற்றை ஆக்கிவிடுவார்.

பாரீசுக்குப்போ ... புதினத்தின் முன்னுரை

"ஒரு தேசத்தின் ஒரு நாகரிகத்தின் ஒரு காலத்தின் ஒரு வளர்ச்சியின் ஒரு வாழ்க்கையின் உரைகல் இலக்கியம்... ஓர் எழுத்தாளன் ஆத்ம சுக்தியோடு எழுதுகிறானே அது கேவலம் பிழைப்போ அல்லது ஒரு தொழிலோ அல்ல. அது ஒரு தவம். நீங்கள் கதை என்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்களே அது காலத்தின், ஒரு வாழ்க்கையின் சாசனம்" (1966)

♦ ♦ ♦ ♦ ♦ ♦

இன்னுமொரு முகம் (கவிதை)

ஜெயகாந்தன் சில கவிதைகளையும் திரைப்பாடல்களையும் படைத்திருக்கிறார். அவரது படைப்பாற்றலின் இன்னொரு பக்கம் அது. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பற்றிய அவரின் கவிதை இது

"எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும் – ஏழை
கண்ணீரும் பாடலிலே கலந்திருக்கும்
பண்ணொடு சந்தமும் பாய்ந்து வரும் – பழைய
மண்ணின் வாடையும் சேர்ந்து வரும்"

♦ ♦ ♦ ♦ ♦ ♦



தொடுத்த கேள்விகளும் கொடுத்த பதில்களும்

உடனுக்குடன் அறிவார்ந்த எதிர்வினையாக ஜெயகாந்தன் அளிக்கும் பதில்களுக்கு முன்னால், கேள்விக்கணைகள் மழுங்கிவிடும்.

சிறுகதைகளைப் படைப்பதில் தங்களுடைய தனித்தன்மை வாய்ந்த திறமையை வாசகர்கள் கொண்டாடுகிறார்களே, இத்துறையில் தாங்கள் கடைப்பிடிக்கும் நுணுக்கங்கள் யாவை?
(பேட்டி – திரு. கிருஷ்ணமணி, 1966)

நுணுக்கமா? அப்படித் தனியாக நான் எதையும் கையாளுவதாக எண்ணிச் செய்வதில்லை. என் மனத்தால், புத்தியால், உணர்வால் நான் அறிந்து அனுபவப்படாத எதைப் பற்றியும் நான் எழுதினதில்லை. என்னைப் பெரிதும் பாதிப்பவை மனித வாழ்வின் பிரச்சினைகளே. என்னைப் பொறுத்தவரையில் எழுத்தாளனுக்கு அவனுடைய படைப்புகளுக்கு அடிப்படையாக அமைய வேண்டியது மனித வாழ்வின் பிரச்சினைகளே.

உங்கள் பார்வையில் சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனை எது? மிகப் பெரிய சவால் எது?
மகத்தான சாதனை – பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தது. மிகப் பெரிய சவாலும் அதுவே.

இந்த வயதில், தேசம் செல்லும் பாதை, எழுத்துலகத்தின் போக்கு இவற்றை எல்லாம் பார்க்கும்போது எப்படி இருக்கிறது?
காலந்தோறும் மாற்றங்களை நாம் பார்க்கிறோம். நாமும் மாறிக்கொண்டே இருக்கிறோம்.

விரிவானம்

இயல் 6

இசைத்தமிழர் இருவர்

2B6SGM



இசை! கலைகளின் மகுடம்! உணர்வுகளின் வினையூக்கி. இசை, குருதியைச் சூடேற்றும்; உயிரை உருக்கும்; ஆழ்கடல் அமைதியாய் மனத்தை உறங்க வைக்கும். இரசனையின் முகவரிக்கு இசைமொழியில் கடிதமெழுதும் காற்றின் கவிஞர்களே இசைக்கலைஞர்கள். தமிழகத்தின் காட்டிலும் மேட்டிலும் வயல் சேற்றிலும் தவழ்ந்த இசையைச் சீராட்டி, மெருகூட்டி உலகுக்குத் தந்து மகிழ்ந்தவர் இருவர். இவ்விருவரும் உலக இசைப்பேரேட்டின் தமிழகத்து முத்திரைகள்; அவர்கள், சிம்பொனித் தமிழர் இளையராஜா, ஆஸ்கர் தமிழர் ஏ.ஆர். இரகுமான் ஆகியோர் ஆவர்.

சிம்பொனித் தமிழர்

ஆசியக் கண்டத்தில் பிறந்து வளர்ந்தவர்களுக்கு, சிம்பொனி இசைக்கோவையை உருவாக்கும் திறன் கைவராது என்பது மேற்கத்திய இசை வல்லுநர்களின் கருத்தோட்டமாகும். இந்தக் கற்பனைவாதத்தை உடைத்து ராயல் ஃபில்ஹார்மோனிக் இசைக்குழுவுக்கு, சிம்பொனி இசைக்கோலத்தை அமைத்துக்காட்டியவர் இசைமேதை (மாஸ்ட்ரோ) இளையராஜா. அவர், தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தில் உள்ள பண்ணைப்புரத்தைச் சேர்ந்தவர். அவருடைய இயற்பெயர் இராசையா. தாய் பாடும் தாலாட்டில் தொடங்கித் தமிழ்நாட்டின் அனைத்து இசை வடிவங்களையும் அசைபோட்டு வளர்ந்த தமிழினத்தின் பெருமைக்குரிய இசை மேதை அவர்.

அன்னக்கிளி படத்தில் இசை அமைப்பாளராக அறிமுகமான இளையராஜாவின் இசையோட்டம் தமிழர் வாழ்ந்த திசைகளில் எல்லாம் தென்றலாய் நுழைந்து புதிய வாசல்களைத் திறந்தது. அவரிடமிருந்து புதுப்புது மெட்டுகள் சிறகு விரித்தன. கண்களை மூடிக்கொண்டு இளையராஜாவின் பாடல்களைக் கேட்டால், பாடலின் ஒவ்வொரு சரணத்திற்கு இடையிலும் அவர் சுழற்றும் இசைச் சிலம்பம் நம்மைப் புதிய திசைகளில் பறக்க வைக்கும். அவர், பழந்தமிழ் இசையையும் உழைக்கும் மக்களின் துள்ளல் இசையையும் மனத்தை மயக்கும் வகையில் கலந்து தந்தார். இவர், திரையிசையில் கர்நாடக இசை என்னும் பழந்தமிழிசையின் உன்னதத்தை உணர வைத்தவர்; பல இராகங்களுக்குத் திரையிசையில் கொடுத்த அறிமுக மெட்டுகள் மெல்லிசையில் புதிய உயரங்களைத் தொட்டன.

1970களின் தொடக்கத்தில் பிறமொழிப் பாடல்களைச் சுமந்து திரிந்த தமிழ்ச்செவிகள் விடுதலை பெற்று, தமிழ்ப்பாடல்களை நோக்கித் திரும்பியதற்கு இளையராஜாவே காரணமெனலாம். எழுபது, எண்பதுகளில் மெல்லத் தோன்றிப் புது வேகம்கொண்ட சமூக மாற்றங்களின் குறியீடாக இளையராஜாவின் இசை திகழ்ந்தது. பின்னணி இசையிலும் பாடல் இசையிலும் விடுபட்டுப்போன வாய்மொழித் தன்மை, யதார்த்தம் ஆகியன பொதிந்த அவருடைய இசை, சாமானியரையும் ஈர்த்தது; அவர்களது வாழ்வின் தருணங்களில் தவிர்க்க முடியாத இடத்தைப் பெற்றதோடு அமைப்புக்கு அப்பாற்பட்ட இசை இயக்கமாகவும் மாறியது. அவர், தமிழ்ச் செய்யுளின் யாப்போசைக் கட்டமைப்புக்குள் இருக்கின்ற இசை ஒழுங்கைப் புரிந்துகொண்டு திரைப்பாடல்களைச் செவியுணர் கனிகளாகவும் பண்பாட்டு வெளிப்பாடாகவும் மாற்றிய பெருமைக்குரியவர்.

அவருடைய இசை ஐவகை நிலப்பரப்புகளையும் காட்சிப்படுத்தும் மெட்டுகளைக் கொண்டது. இன்றளவும் நெடுந்தொலைவுப் பயணங்களின் வழித்துணையாக அவரின் இசை இருப்பதற்கு இதுவுமொரு காரணம். வற்றாத நதிகள் பாயும் மலைகள் நிறைந்த ஜம்மு, காஷ்மீரின் பஹார் இன மக்களின் நாட்டுப்புற இசையில் புல்லாங்குழலில் வழிந்தோடும் பஹாடி முதல் மதுரை மக்களின் கிராமிய இசையிலிருந்து முகிழ்த்துச் செவ்வியல் இசையில் கோலோச்சும் ஆனந்தபைரவி (அன்னக்கிளி உன்னைத் தேடுதே) வரை அவரின் இசையில் பண்கள் இழையோடுகின்றன. எம்மொழியில் இசையமைத்தாலும், அவர் அம்மண் மணத்துடன் தம்மை இணைத்து இசையமைப்பதே, மக்கள் அவருடைய இசையில் ஒன்றுவதற்குக் காரணமாகும்.

இந்திய இசைமேதைகள் அனைவராலும் மதிக்கப்படுபவர் இளையராஜா. அவரின், 'எப்படிப் பெயரிடுவேன்?' (HOW TO NAME IT?) என்னும் இசைத்தொகுப்பும் புல்லாங்குழல் இசைக்கலைஞர் ஹரிபிரசாத் சௌராஸியாவுடன் இணைந்து வெளியிட்ட 'காற்றைத் தவிர ஏதுமில்லை' (NOTHING BUT WIND) என்னும் இசைத்தொகுப்பும் இசையுலகின் புதிய முயற்சிகள் எனக் கொண்டாடப்பட்டன. மகிழ்ச்சி, ஏக்கம், நம்பிக்கை, உற்சாகம், வலி போன்ற மனித உணர்வுகளுக்கும் இசை வடிவம் கொடுக்க முடியும் என்பதை "இந்தியா 24 மணிநேரம் (INDIA 24 HOURS)" என்னும் ஆவணக் குறும்படத்தின் பின்னணி இசையில் வெளிப்படுத்தினார்.

மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகப் பாடல்களுக்கு ஆரட்டோரியோ (Oratorio) என்னும் இசை வடிவில் இசையமைத்துள்ளார். 'இராஜாவின் ரமணமாலை', 'இளையராஜாவின் கீதாஞ்சலி' என்னும் தமிழ் இசைத்தொகுப்புகளையும் கன்னட மொழியில் 'மூகாம்பிகை' என்ற பக்தி இசைத் தொகுப்பினையும் வெளியிட்டுள்ளார். அத்துடன் ஆதிசங்கரர் எழுதிய மீனாட்சி ஸ்தோத்திரம் என்ற பக்திப்பாடலுக்கும் இசையமைத்துள்ளார். பஞ்சமுகி என்ற கர்நாடகச் செவ்வியல் இராகம் அவர் உருவாக்கியதாகும்.

பெற்ற விருதுகள் சில:

இந்திய அரசு – பத்ம விபூஷண் விருது
சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருது
சிறந்த பின்னணி இசைக்கான தேசிய விருது
தமிழ்நாடு – கலைமாமணி விருது
மத்தியப்பிரதேசம் – லதா மங்கேஷ்கர் விருது
கேரளம் – நிஷாகந்தி சங்கீத விருது

இளையராஜாவின் இசை நுணுக்கம்

தமிழகத்தின் நாட்டுப்புற இசை வடிவத்தைத் திரையிசையில் தவழவிட்டவராகவே இசைஞானி இளையராஜா அறியப்படுகிறார். ஆனால், மேற்கத்திய இசையை முறைப்படி பயின்ற காரணத்தால் நாட்டுப்புற இசையின்

செவ்வியல் தன்மைகளோடு மேற்கத்திய இசையைக் கலந்து உலவவிட்டார். கவிஞர், மனத்தில் உருவகித்துக் காகிதத்தில் எழுதுவதுபோல், மனத்தின் இசையைக் குறியீடுகளாகக் காகிதத்தில் எழுதிவிடுவார்! இசைஞானி தன் தேடலின் மூலம் மேற்கத்திய இசையுடன் கர்நாடக, இந்துஸ்தானி இராகங்களையும் திரையிசையில் பயன்படுத்தியிருக்கிறார்.

நாட்டுப்புறப் பாடலுக்குக் கர்நாடக இசை வடிவமும் கல்யாணி இராகத்தின் ஆரோகண சுரங்களைக்கொண்டே (ஏறுவரிசைச் சுரங்கள்) 'கலைவாணியே உனைத்தானே' என்னும் பாடலுக்கு மெட்டமைத்திருக்கிறார். மூன்றே மூன்று சுரங்களைக்கொண்டு ஒரு தெலுங்குப் பாடலுக்கு இசையமைத்தும் இருக்கிறார்; நான்கே இசைக்கருவிகளைக்கொண்டு ஒரு பாடலுக்கு இசையமைத்திருக்கிறார். முழுத் திரைப்படத்துக்கும் அரை நாளில் பின்னணி இசையும் அமைத்துக் கொடுத்திருக்கிறார் (நூறாவது நாள்). பிற நாட்டின் இசைவடிவத்தை நம் மண்ணுக்கேற்ற வகையில் மாற்றம் செய்வதோடு திரைப்படப் பின்னணி இசைக்கோவையைக்கூட உணர்வின் மொழியாக மாற்றித் தருவதே அவருடைய தனிச்சிறப்பாகும்.

தமிழ் மட்டுமன்றி இந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், மராத்தி என நம் நாட்டின் பிற மொழிப்படங்களுக்கும் இசையமைத்திருக்கின்றார். இளையராஜா இசைக்கலைஞர் மட்டுமல்லர்; சிறந்த ஒளிப்படக் கலைஞர்; கவிஞர்; பாடகர்; 'பால்நிலாப் பாதை', 'வெட்டவெளிதனில் கொட்டிக் கிடக்குது' உள்ளிட்ட பல நூல்களை எழுதியிருக்கும் எழுத்தாளரும் ஆவார்.

பரிபாடலில் நோதிறம், பாலையாழ், காந்தாரம் முதலிய பண்கள் காணப்படுகின்றன. சைவத்திருமுறைகளில் காரைக்கால் அம்மையார் நட்டபாடையிலும் இந்தளத்திலும் பாடியுள்ளார்.

தேவாரத்தில் 23 பண்களில் பாடல்கள் உள்ளன. தேவாரத்தில் இல்லாது நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் மட்டும் காணப்படும் பண்கள்: நைவளம், அந்தாளி, தோடி, கல்வாணம், பியந்தை, குறண்டி, முதிர்ந்த இந்தளம் ஆகியவை. சாளரபாணி என்ற பண் ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பாவில் காணப்படுகிறது.

மகாத்மா காந்தி எழுதிய ஒரே பாடலான "நம்ரதா கே சாகர்" என்னும் பாடலுக்கு இசையமைத்து, இந்துஸ்தானி இசைப் பாடகர் அஜோய் சக்கரபர்த்தியைப் பாடவைத்து இசைக்கோவையை வெளியிட்டிருக்கிறார். ஆசியாவிலேயே முதன்முதலில் சிம்பொனி (Symphony) என்னும் மேற்கத்திய செவ்வியல் வடிவ இசைக் கோவையை உருவாக்கியவர் இவரே. சிம்பொனி இசைப் பணியை எழுதக் குறைந்தது ஆறு மாதமாவது ஆகும்; வெறும் பதின்மூன்று நாள்களில் இச்சாதனையை நிகழ்த்தியிருக்கிறார். பண்டைய தமிழரசர்களின் ஆட்சி வட இந்தியா வரையிலும் பரவியிருந்தது. ஆனால், இளையராஜாவின் இசை ராஜாங்கமோ உலகம் முழுவதும் பரவிக் கிடக்கிறது.

ஆஸ்கர் தமிழர்

அமெரிக்காவின் கோடாக் அரங்கில் ஆஸ்கர் விருதுகள் அறிவிக்கும் தருணம். இன்னும் சில நிமிடங்களில் இசைக்கான விருதுக்குரியவர் அறிவிக்கப்பட இருக்கிறார். அவ்விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்ட ஐந்து இசையமைப்பாளர்களும் தம்முள் விருதுக்குரியவர் யார்? என அறியும் ஆவலில் அமர்ந்திருக்கின்றனர். அவர்களில் நால்வர் அவ்விருதுக்குப் பலமுறை பரிந்துரைக்கப்பட்டவர்கள்; ஒருவர் மட்டுமே புதியவர். அவருக்கே 2009ஆம் ஆண்டிற்கான சிறந்த திரைப்படப் பின்னணி இசைக்கான ஆஸ்கர் விருது என்று அறிவிக்கப்பட்டது.

அரங்கத்தின் கரவொலி அடங்குவதற்கு முன்பே சிறந்த திரையிசைப் பாடலுக்கான விருதுக்கும் இவரின் பெயரே அறிவிக்கப்படுகிறது. இரண்டு ஆஸ்கர் விருதுகள் ஒருவருக்கே! இரு கரங்களிலும் விருதுகளை ஏந்தியவாறு உரையைத் தொடங்கியவர், தம் தாய்மொழியான தமிழில் உரையை நிறைவு செய்கிறார். ஆம்! அவர்தான், உலக அரங்கில் சாதனை நாயகனாய்த் திகழும் இசைப்புயல் ஏ.ஆர். இரகுமான்.

தம் இசைக்குக் கிடைத்த இரு விருதுகளையும் கையில் ஏந்திய நிலையில், கடந்து வந்த பாதை அவர் கண்முன்னே நிழலாடியது. இவருடைய தந்தை ஆர்.கே. சேகர் மலையாளத் திரைப்பட உலகில் புகழுடன் விளங்கிய இசைக்கலைஞர். இளம்வயதிலேயே ஏ.ஆர். இரகுமான் தம் தந்தையின் இசைப்பயணத்தில் இணைந்து கொண்டார். தந்தையைச் சூழ்ந்திருந்த இசைக்கருவிகள் அவருள் இசை வேட்கையைத் தூண்டின. இசைக்கலைஞர்கள் வியக்கும் வகையில் நான்கு வயதிலேயே ஹார்மோனியம் இசைப்பதில் திறமை பெற்றிருந்தார். இளம் வயதிலேயே தந்தையை இழந்து குடும்பப் பொறுப்புகளை ஏற்கும் சூழல் ஏற்பட்டதனால் பள்ளிப்படிப்புக்கு இடையூறு ஏற்பட்டது.

இசைக்குழுக்களில் இரவெல்லாம் பணியாற்றிவிட்டு நேராகப் பள்ளிக்குச் செல்வார். பள்ளியின் நுழைவுவாயிலில் இவரின் தாயார் காத்திருந்து இவருக்குச் சீருடை அணிவித்தும் உணவளித்தும் வகுப்பிற்கு அனுப்பி வைப்பார். இத்தகைய வாழ்க்கைப் போராட்டத்தால் பள்ளிப்படிப்பு பதினோராம் வகுப்புடனே முடிந்துவிட்டது.

ஏ. ஆர். இரகுமான், 1992ஆம் ஆண்டு ரோஜா என்னும் திரைப்படத்திற்கு இசையமைப்பாளராகத் தமது திரையிசைப்

பிங்கல நிகண்டு என்னும் நூலில் 103 பண்கள் காணப்படுகின்றன. பண்கள், பாடும் காலங்களுக்கு ஏற்றவாறு பகல் பண், இரவுப் பண், பொதுப் பண் என்று வகுக்கப்பட்டுள்ளன.



பயணத்தைத் தொடங்கினார். இவரின் இசை, தமிழ்த்திரைப்பட இசையுலகில் புதிய எழுச்சியை ஏற்படுத்தியது. தன் முதல் படத்திற்கே தேசிய விருது பெற்ற முதல் இந்திய இசையமைப்பாளர் என்ற சிறப்பினைப் பெற்றார். தம் இசைப்பங்களிப்பால் இளைஞர் உலகின் இசை ஆளுமையாக வளர்ந்தார். அடுத்தடுத்த படங்களில் அவர் வெளிப்படுத்திய மெல்லிசை, கேட்டவர் நெஞ்சங்களில் எல்லாம் சிம்மாசனமிட்டு அமர்ந்தது. தமிழ் யாப்பிலக்கணத்தின் நால்வகைப் பாக்களில் கலிப்பாவின் ஓசை, துள்ளல் ஓசையாகும். இந்தத் துள்ளலோசைக்கு மயங்காதவர்களே உலகில் இல்லை எனலாம். தோற்கருவியால் துடித்தெழும் இந்தத் துள்ளல் ஓசை, கொண்டாட்ட மனநிலையின் வெளிப்பாடு. தமிழ் மக்களின் நெடிய வாழ்வியல் மரபில், துள்ளல் ஓசைச் சாயல் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும். இதனை நுட்பமாக உணர்ந்த ஏ.ஆர். இரகுமான் தம் இசைக் கட்டத்துக்குள் நின்று இளைஞர்களை ஆடவும் பாடவும் வைத்தார்.

உலகை வெற்றிகொள்ளப் புறப்பட்ட தமிழர்களுடன் வலம்வந்த இசைத்தோழமை ஏ.ஆர். இரகுமான். தொண்ணூறுகளில் தொழில்நுட்பக்கல்வி பயின்று உலகெங்கும் பரவிய தமிழ் இளைஞர்களை இணைத்தது அவர்தம் இசை. அவர், உலகின் பல நாடுகளைச் சேர்ந்த இசை, பண்பாட்டுக்

பெற்ற விருதுகள் சில:

இந்திய அரசு	– பத்ம பூஷண் விருது
தமிழ்நாடு	– கலைமாமணி விருது
கேரளம்	– தங்கப் பதக்கம்
உத்திரப்பிரதேசம்	– "ஆவாத் சம்மான்" விருது
மத்தியப்பிரதேசம்	– "லதா மங்கேஷ்கர்" விருது
மொரீஷியஸ்	– தேசிய இசை விருது
மலேசியா	– தேசிய இசை விருது
ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழகம்	– சர்வதேச இசை விருது

குறியீடுகளைத் தம் இசையில் தவழவிட்டார். இணைய வழியில் உலவும் இளைஞர்களின் கனவை, இசையாக மொழிபெயர்த்துக் காலப் பதாகையில் ஒலிவண்ணம் தீட்டினார்.

நாட்டுப்புற இசை, கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை இவற்றுடன் மேற்கத்திய, உலகளாவிய இசை முறைகளையும் கலந்து, புதிய கணினித் தொழில்நுட்ப உதவியுடன் உலகத்தரத்தில் இசையமைத்ததுடன் பல இளம் பாடகர்களையும் அறிமுகம் செய்தார்.

இரகுமானிடம் எல்லோரும் இரசித்துக் கேட்பது அவரின் 'தாளம் உருவாக்கும் முறை'. ஒரு பாடலுக்கான மெட்டை உருவாக்குமுன் அதற்கான தாளத்தைத்தான் முதலில் உருவாக்குவார். பாடலுக்கான சூழலை மனத்தில் உள்வாங்கிக்கொண்டு, அதற்கேற்ற தாளக்கட்டை உருவாக்கி அதனுள் அமிழ்ந்திருக்கும் பாடலுக்கான மெட்டை வெளிக்கொணர்வார். ஒரு சிறந்த மெட்டு எப்படி ஈர்க்கிறதோ, அதுபோலப் பாடலின் பல்லவிக்கும் சரணத்துக்கும் இடையில் வரும் இசையும் மக்களை ஈர்க்கும்படியாக இசையமைப்பதில் வல்லவர். மெட்டுக்கு இணையான இசைக்கோவையை வழங்கியதில் தனித்துவமானவர் இளையராஜா எனில், அதை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் சென்றவர் இரகுமான் ஆவார்.

இவர் இசையமைத்த "வந்தே மாதரம்", "ஜன கண மன" என்னும் இசைத்தொகுதிகள், நவீன இசை வடிவில் நாட்டுப்பற்று உணர்வை மிளிரச் செய்தன. மலையாளம், தெலுங்கு, கன்னடம் உள்ளிட்ட பல தென்னிந்திய மொழிப்படங்களுக்கும் இசையமைத்ததோடு இந்தித் திரைப்பட உலகத்திலும் தம் இசை முத்திரையைப் பதித்தார். மேலைநாட்டுத் திரைப்படங்களுக்கும், நாடகங்களுக்கும் இசையமைத்து உலக இசையமைப்பாளர்கள் வரிசையிலும் தம்மை நிலைநாட்டிக்கொண்டார். வெவ்வேறு கலாச்சார மக்களையும் தம் இசையால் ஒருங்கிணைத்ததுடன் திரையிசையில் சூஃபி இசையை அறிமுகப்படுத்திய சிறப்பும் இவருக்குண்டு.

"ஸ்லம்டாக் மில்லியனர்" என்ற திரைப்படத்தின் இசைக்காக, 'கோல்டன் குளோப்' விருது பெற்றதன் மூலம் உலகளாவிய புகழ் பெற்றார். அவ்விருது பெற்ற முதல் இந்தியரும் இவரே. இவரின் ஆஸ்கர் சாதனை, சாதிக்கத் துடிக்கும் இளைஞர்களுக்கு வாழ்க்கைப் பாடமாகும்; அதே படத்தின் இசைக்காக கிராமி விருதையும் பெற்றார்.

தமிழர் வாழ்வின் எல்லா நிலைகளிலும் இசைக்கென்று ஓர் இன்றிமையாத இடமுண்டு. அதில், இளையராஜா, ஏ.ஆர். இரகுமான் ஆகியோரின் வருகை புகழ் மகுடமாக ஒளிர்கின்றது.

கற்பவை கற்றபின்...

தமிழ்த்தாய் வாழ்த்து, நாட்டுப்பண், தமிழில் பிறந்தநாள் பாடல் – போன்றவற்றை நண்பர்களுடன் இணைந்து இசையுடன் பாடிப் பயிற்சி பெறுக.

விரிவானம்

கலை சு

நடிகர் திலகம்

– பாலச்சந்திரன் சுள்ளிக்காடு

Q32SGX

நடிப்புலகின் சக்கரவர்த்தி என எல்லோரும் வியக்கின்ற மகத்தான நடிகர் சிவாஜிகணேசன். தான் ஏற்றுக்கொண்ட கதாபாத்திரத்திற்கு உயிர் அளித்துத் தன் வசனத்தாலும் உடல் அசைவுகளாலும் உருட்டுவிழி நகர்வாலும் காண்பவர்களைக் கட்டிப்போட்டுவிடுகின்ற கலைஞர். நவரச உணர்வுகளைத் தன் முகக் குறிப்புகளாலும் உடல் மொழிகளாலும் சிறப்பாக வெளிப்படுத்தி நடித்த மகா நடிகன். இத்தகைய சிறப்புகளைப் பெற்றுத் தமிழ்த் திரையுலகின் அடையாளமாக விளங்கும் செவாலியே சிவாஜி கணேசன் பற்றி அறிவது நடிப்புக்கலையைப் பற்றி அறிவதாகும்.

"இன்று மதியம் மிகச் சரியாக மூன்று மணிக்கு ராதா பிக்சர்ஸ் பேலசின் வெள்ளித் திரையில் தென்னிந்தியத் திரைப்பட நடிப்புச் சக்ரவர்த்தி, தமிழ்நாட்டின் நாட்டியப் பெருமையின் புகழ்க்கொடி நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடிக்கும் தங்கப் பதக்கம்".

நீங்கள் இப்போது கேட்ட விளம்பரம் முப்பது வருடங்களுக்கு முன்பு கேரளத்தின் மிக முக்கியமான நகரத்தின் தெருக்களில் ஆட்டோ ரிக்சாவின் மேல் தடித்த உச்சஸ்தாயில் முழங்கிய ஒரு இளைஞனின் குரல். ஒரு நேரச் சாப்பாட்டுக்காகவும் ஐந்து ரூபாய்க் கூலிக்காவும் சினிமா விளம்பரம் செய்து, உதய அஸ்தமனம் வரை ஊர் சுற்றிக் கொண்டிருந்த அந்த 18 வயது பையனின் பெயர் பாலச்சந்திரன் சுள்ளிக்காடு.

இருபது வருடங்களுக்குப் பிறகு சென்னையில் அரண்மனை போன்ற சிவாஜி கணேசனின் வீட்டிற்குள் அவரோடு ஒன்றாக உணவு அருந்தியபோது, கேரள நகரின் வீதிகளில் குரல் விற்றுப் பிழைத்த அந்தப் பழைய பையன் என் நினைவலைகளில் மிதந்தான்.

1986 இல் நான் 'ருதுபேதம்' என்ற திரைப்படத்தின் ஐம்பதாம் நாள் விழாவில்தான் முதன்முதலில் அவரைச் சந்தித்தேன். சிவாஜிகணேசன் தலைமை ஏற்றிருந்த அந்நிகழ்ச்சியில் நானும் ஒரு பேச்சாளராக இருந்தேன்.

1995இல் நண்பர் வி.பி.கே. மேனன் ஒரு படம் எடுக்கத் தீர்மானித்தார். அதில் முக்கியமான வேடமேற்று நடிக்க சிவாஜிகணேசனும் மோகன்லாலும் சம்மதித்திருந்தார்கள். திரைக்கதை ஜான்பால்; 'ராஜீவ்நாத்'தான் படத்தின் இயக்குநர்.

ஒரு நாள் காலையில் ராஜீவ்நாத் என்னிடம் சொன்னார்: "இன்னைக்குச் சாயங்காலம் சிவாஜிகணேசன், அவருடைய வீட்டுக்கு இரவு விருந்துக்கு நம்மைக் கூப்பிட்டிருக்கார்". அன்று மாலை ஜான்பாலும் நானும் ராஜீவ்நாத்துடன் சிவாஜி கணேசனின் வீட்டுக்குப் போனோம்.

"என்னைப் போல் சிவாஜி நடிப்பார் . ஆனால் என்னால்தான் சிவாஜிபோல் நடிக்க முடியாது"

– மார்லன் பிராண்டோ (ஹாலிவுட் நடிகர்)

வீடென்றா சொன்னேன்; இல்லை அது ஓர் அரண்மனை. சிற்ப வேலைப்பாடுகள் செய்த மிகப் பெரிய கதவைத் தாண்டி உள்ளே நடந்ததும் விசாலமான ஒரு தளம் நம்மை வரவேற்கிறது. அங்கே தங்கத்தால் இழைத்த இரண்டு பெரிய யானைத் தந்தங்கள் இருந்தன. இடப்புறத்தில் மேலே செல்ல, பெரிய மாடிப்படிகள்.

வேலைக்காரர் எங்களை மேலே வருமாறு பணித்தார். இயல்பாய் மாடி ஏறிய நான் ஒரு திருப்பத்தில் நடுங்கிப்போய்க் கையெடுத்துத் தலைகுனிந்து வணங்க முற்பட்டேன். அங்கே சுவரில் வீரபாண்டிய கட்டபொம்மனின் வேடத்தில் வீரத்தையும் கம்பீரத்தையும் கொட்டி முழங்கிய சிவாஜிகணேசனின் ஆயில் பெயிண்ட் செய்யப்பட்ட படம். அடுத்த திருப்பத்தில் உடைவாள் உருவின நிலையில் சத்ரபதி சிவாஜி. வலது பெருவிரலால் மீசை முறுக்கி மந்தகாசப் புன்னகையுடன் நிற்கும் ராஜராஜசோழன் ஒரு புறம். ஒரு புறம் கண்ணாடி அறைக்குள் பிரெஞ்சு அரசு சிவாஜி கணேசனின் நடிப்பைப் பாராட்டி அளித்த செவாலியர் விருதுடன் கூடிய மிகப் பெரிய வெள்ளைக் குதிரை.

எல்லாம் பார்த்து இரசித்தபடியே நாங்கள் சோஃபாக்களில் அமர்ந்தோம். மாம்பழச் சாறு வந்தது. அதைக் குடித்து முடித்தபோது மனைவியும் வேலை ஆட்களும் இருபுறமும் நடந்து வர சாட்சாத் சிவாஜி கணேசன் எங்களைப் பார்த்து வந்துகொண்டிருந்தார்.

ஒரே சீராய் அடி எடுத்து வைத்து, ஒவ்வொரு பாத அடி வைக்கும் போதும், மறுதோள் முன்னோக்கிச் சாய, தலை நிமிர்ந்து, நெஞ்சு விரித்து, இசைக்கு அசைப்பது போலக் கைகள் வீசி, பார்வை இமை அசையாது மெல்ல மெல்லச் சிங்க நடை நடந்து வரும் அந்த மகாநடிகனைப் பார்த்தபொழுது ராஜராஜ சோழனின் வருகையைப் பார்த்த தமிழ்நாட்டுத் தெருப்பிள்ளைகளைப் போல நான் துள்ளி எழுந்தேன். அவர் ஒரு ராஜநடை நடந்து வந்து சிம்மாசனத்தில் அமர்ந்தார். நானும் ராஜீவ்நாத்தும் அவரின் காலில் விழுந்து வணங்கினோம்.

வலது கையால் ஆசீர்வாதம் செய்த சிவாஜிகணேசன் "உட்காருங்கோ" என்றார்.



நாங்கள் உட்கார்ந்தோம். "என்ன ராஜீவ் என்ன சமாச்சாரம்? கதை ரெடியாயிடிச்சா?" என்றார்.

அவர்கள் கதையைப் பற்றியும் கதாபாத்திரத்தைப் பற்றியும் பேசிக்கொண்டிருக்க நான் சிவாஜிகணேசனின் புருவங்களையும் கண்களையும் முக அபிநயங்களையும் உதடுகளையும் கைவிரல்களையும் தாள, லய அபிநயங்களையும், சலனங்களையும் பார்த்துக்கொண்டு நிசப்தனாய் அமர்ந்திருந்தேன்.

ஊழித் தாண்டவமாடும் ருத்ரன், கவச குண்டலம் கொடுத்த கர்ணன், காளமேகத்தில் கவிதை ததும்பச் செய்த கவிகுல குரு காளிதாசன். அமிழ்தத் தமிழ்மொழியின் உன்னதக் கவியான பாரதி, தாய்த் தமிழ் மண்ணின் வீர தீரச் சந்ததியான வீரபாண்டிய கட்டபொம்மன், சோழ குலோத்துங்கச் சூரியனான ராஜராஜசோழன் என சிவாஜிகணேசனின் கதாபாத்திரங்கள் என் மன அடுக்குகளில் மின்னிமறைந்தனர்.

திரைக்கதைபற்றிய அவர்களின் உரையாடல் முடிந்ததும் ராஜீவ்நாத்திடம் கேட்டார்

"இந்தப் பையன் யாரு?" நான் ஒரு மலையாளக் கவிஞன் என்று ராஜீவ்நாத் என்னை அறிமுகப்படுத்தினார். சட்டென என் முன்னால் இருகைகளையும் கூப்பி அவர் மென்மையாய்ச் சொன்னார்.

" கவிஞரா? வணக்கம் "

எனக்கான மரியாதை அல்ல அது , காவியக் கலையிடம் மூத்த திராவிடனுக்கு இருக்கும் ஆழ்ந்த ஆதரவையும் மரியாதையையும்தான் அவர் காண்பித்தது என்பதைப் புரிந்துகொள்ளும் தெளிவு எனக்கு இருந்தது.

" உள்ளே போகலாம் "அவர் எழுந்தார். நாங்கள் பின் தொடர்ந்தோம்.

எகிப்தின் முன்னாள் அதிபரான நாசர், நடிகர்களான பால் ம்யூனி, ஓமர்ஷெரீப், ரிச்சர்ட் பர்ட்டன், ப்ரதீப், ராஜ்கபூர் போன்ற உன்னதமான நண்பர்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படங்களைச் சிவாஜிகணேசன் எங்களுக்கு ஒவ்வொன்றாய்க் காண்பித்தார். அவர் வாழ்வினில் நடந்த சில விஷயங்கள் குறித்து எங்களோடு பகிர்ந்துகொண்டார்.

கணேசன் பிறந்த ஊர் விழுப்புரம். சின்னையா கணேசன் என்பதுதான் அவர் பெயர். ஆங்கிலேயரால் சிறை சென்ற தனது தந்தையை ஒன்பதாவது வயதில்தான் கணேசன் முதன்முதலில் பார்த்தார். அவர் பள்ளிக்கூடத்தில் படித்ததேயில்லை. ஐந்து வயதாகும்போதே குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக நாடகக் கம்பெனியில் சேர்ந்தார். இளம்பருவத்திலேயே தமிழ்நாட்டின் மிகச்சிறந்த நாடக நடிகன் என்று பெயரெடுத்தார்.

அண்ணாதுரையின் நாடகத்தில் சத்ரபதி சிவாஜியாக வேடமேற்று நடித்தார். அதைப் பார்த்த பெரியார், வி.சி. கணேசனுக்கு 'சிவாஜிகணேசன்' என்று பெயரிட்டார். அந்தப் பெயரே அவருக்கு நிலைத்தும்விட்டது.

அந்தக் காலத்தில் பாலக்காடு, கொச்சின், திருவனந்தபுரம் போன்ற கேரள நகரங்களிலெல்லாம் சிவாஜி கணேசன் நாடகம் நடித்துள்ளார்.

அவர், 'பராசக்தி' என்ற திரைப்படத்தில் நடிக்க, முதன்முதலில் ஏ.வி.எம். ஸ்டுடியோவுக்கு வருகிறார். பராசக்தியின் வெற்றி அவரைத் திரைப்படத்துறையின் உச்சாணிக்கொம்பில் மலரச்செய்து அழகுபார்த்தது. மிகவும் பிஸியானதிரைப்பட நடிகனாக இருந்தபோதும் ஐம்பதுவயது வரை சொந்தமாக நாடகக் கம்பெனி நடத்தி, அரங்கங்களில் நடித்தும் வந்தார்.

"அரங்கத்து நடிப்போடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது என்னுடைய சினிமா நடிப்பு ஒண்ணுமேயில்ல. சரித்திரத்திலும் புராணங்களிலும் வரும் வீரபுருஷர்களைத் தத்ரூபமாய் நடித்து அவர்களை எங்கள் நாட்டின் சாமானியப்பட்டவர்களும் ஏழைகளுமான மக்களின் இதயத்தில் குடிபுகச் செய்தேன். இதுதான் இந்த நாட்டிற்கு நான் செய்த கலாச்சாரப் பங்களிப்பு. என் நாடு என்னை ஒரு நாளும் மறக்காது". இப்படிப் பேசி நிறுத்தியபோது அறுபத்து ஐந்து ஆண்டுகளாக அபிநயக் கலையின் அபார சமுத்திரத்தில் கப்பலோட்டிய அந்தத் தமிழனின் முகத்தில் தெரிந்த ஆத்ம திருப்தியை வர்ணிக்க என்னுடைய எளிய வார்த்தைக்குச் சக்தியில்லை.

வீரபாண்டிய கட்டபொம்மன் என்ற திரைப்படம்தான் சிவாஜிகணேசனை உலக பிரசித்தி பெற்ற நடிகனாய் மாற்றியது. ஆனாலும் அவர், 'கட்டபொம்மன் நாடகம்தான் பிரமாதம். படம் ஒண்ணுமேயில்லை' என்றார்.

பல நாடகங்களில் அதிக வேலையுள்ள பெரும் பாத்திரங்களை ஏற்று நான் நடித்திருக்கிறேன். ஆனாலும், இந்த கட்டபொம்மனில் எனக்கு இயற்கையாக எழும் உணர்ச்சி நாடக முடிவில் எத்தகைய களைப்பை, சிரமத்தை உண்டாக்குகின்றது என்பதை நினைக்க எனக்குப் பயமாகவே இருக்கிறது. என்றாலும் எனது குழுவினர்களோடு நாடக நாள்களில் ஒன்றுபட்டுச் செயல்படுவதில் காணும் இன்பமும், மக்களின் பாராட்டுதலை நேருக்குநேர் பெறும் வாய்ப்பும், எனக்கு எதிலும் பெற முடியாத ஒரு தனி மகிழ்ச்சியைத் தருகிறதென்ற உண்மை ஒன்றே எனக்குக் கிடைக்கும் பெரும் ஆறுதலாகும்.

–நடிகர் திலகம் சிவாஜிகணேசன்

"அந்த நாடகத்தின் வசனம் ஏதும் ஞாபகம் இருக்கிறதா"? ராஜீவ்நாத்தான் அந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டார்.

"தலைபோனாலும் மறக்கமுடியுமா ?"

ஒரு வசனம் எங்களுக்காகச் சொல்லமுடியுமா ?

ராஜீவ்நாத் கேட்ட கேள்வியால் நான் பயந்துபோனேன். யாரிடம் இதைக்கேட்கிறோம் என்று ராஜீவ் யோசிக்கவில்லையா? அவரை சிவாஜி கணேசன் கோபித்துக் கொள்வார் என்றே நான் நினைத்தேன். ஆனால் நம்பமுடியாத அந்த அதிசயம் அப்பட்டமாய் நிகழ்ந்தேறியது.

சிவாஜிகணேசன் சிறிது நேரம் கண்மூடிக் கைகூப்பி அமர்ந்திருந்தார். பிறகு மெதுவாகக் குனிந்து, இடது கையால் வேட்டியின் தலைப்பைப் பிடித்து, மெதுவாக நிமிர்ந்து சட்டென விஸ்வரூபமெடுத்தது போலத் திரும்பி நின்றார். நாங்கள் மிரண்டு போனோம். உயரம் குறைவான, வயதான, எங்களிடம் இவ்வளவு நேரம் இயல்பாய் பேசிக்கொண்டிருந்த சிவாஜிகணேசனல்ல அது. மனித ஆத்மாவை நடுநடுங்க வைத்த வீரபாண்டிய கட்டபொம்மன்தான் அது. சூரியன் அஸ்தமனம் ஆகாத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பிரதிநிதியான ஜாக்சன் துரைக்கு நேராக ஆதித் தமிழக வீர பௌருஷத்தின் சிங்கக் கர்ஜனை முழங்கியது.

"நீ ஏர் பிடித்தாயா? களை வெட்டினாயா? கஞ்சிக்கலயம் சுமந்தாயா ? அங்கு கொஞ்சி விளையாடும் எங்கள் குலப் பெண்களுக்கு மஞ்சள் அரைத்துக் கொடுத்தாயா? நீ என்ன எனக்கு மாமனா? மச்சானா? மானங்கெட்டவனே".

தமிழக மக்களைச் சிலிர்த்தெழச் செய்த உலகப் பிரசித்தி பெற்ற அந்த வசனத்தைக் கொஞ்சமும் மறக்காமல் ஏற்ற இறக்கத்துடன் ஒரே மூச்சில் சொல்லி முடித்து, நெற்றியில் வியர்வையை வடித்துவிட்டு சிவாஜி கணேசனாய்ச் சுருங்கி சோஃபாவில் திரும்பி வந்து உட்கார்ந்து எங்களை ஆழமாக ஒரு முறை பார்த்தார். ஜான்பாலும் ராஜீவ் நாத்தும் மௌனத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

சிவாஜிகணேசன் பெற்ற விருதுகள்

- ஆப்பிரிக்க – ஆசியத் திரைப்பட விழாவில் (கெய்ரோ) சிறந்த நடிகருக்கான விருது
- கலைமாமணி விருது
- பத்ம ஸ்ரீ விருது (தாமரைத் திரு)
- பத்ம பூஷன் விருது (தாமரை அணி)
- செவாலியர் விருது
- தாதாசாகெப் பால்கே விருது

"மலையாளத்தில் சரித்திர புராண நாடகங்கள் இல்லையா ?"

சிவாஜி கணேசன் கேட்டபோது ஜான்பாலும் ராஜீவ்நாத்தும் நானும் ஒரு நிமிடம் தலைகுனிந்து உட்கார்ந்தோம்.

" இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டு சி.என். ஸ்ரீகண்டன் சாகேதம் , கஞ்சன சீதா, லங்காலக்ஷ்மி என்று மூன்று நாடகங்கள் எழுதியிருக்கிறார்". மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள ராஜீவ்நாத் சொன்னார் "லங்காலக்ஷ்மியில் இராவணின் வசனம் முழுவதும் பாலன் பாக்காம சொல்வான்" – என்னைப் பார்த்து ஜான்பால் சொன்னார்.

"ராவணனின் இரண்டு வசனத்தை எடுத்துவிடுடா பாலா,சிவாஜி சார் கேட்கட்டும்"

ராஜீவ்நாத் ஆவேசத்தோடு சொன்னார்.

நான் பதறிப்போனேன். சிவாஜிகணேசனின் வீட்டிற்குப்போய் அவரிடமே நாடக வசனம் சொல்வதா ?"

"சும்மா எடுத்துவிடடா இங்க என்ன பாக்கறே "

ராஜீவ்நாத் மறுபடியும் என்னைத் தூண்டினார். நான் பதுங்கிப் பதுங்கி அமர்ந்து பார்த்தேன் .

"சொல்லப்பா, இங்க நாம நண்பர்கள் மட்டும்தானே இருக்கோம். எதுக்கு வெட்கப்படறே?" சிவாஜி கணேசன் உற்சாகப்படுத்தினார். வாத்சல்யத்தோடு அதில் எனக்குத் தைரியம் வந்தது. எழுந்து நடிப்புச் சக்ரவர்த்தி சிவாஜி கணேசனின் காலைத் தொட்டு வணங்கினேன். அவர் என் தலையில் கை வைத்து வாழ்த்தினார்.

திருவிளையாடலில் ருத்ர தாண்டவமாடிய சிவாஜி கணேசனை இதயத்தில் தியானித்து , சிவபக்தனான இராவணனின் ஆக்ரோஷமான உத்தரவுகளைக் கீழ்ஸ்தாயில் நான் ஆரம்பித்தேன். மெல்ல மெல்ல இராவணன் என்னை ஆகர்ஷித்து ஆவேசப்படுத்தினான்.

"இலங்கையில் போர்க்கொடிகள் பறக்கட்டும். எதிரிகளைத் தடுக்க ஆயத்தமாகலாம். கோட்டை வாயிலில் மகரட்சன். கிழக்கிலும் மேற்கிலும் சுகசாரணர்கள் நிற்கட்டும். தெற்கில் நிகும்பன், அகம்பானன் முன்னணியில் படை போக ஆரம்பிக்கட்டும். பிரகஸ்தன் படையின் பின்னால் வந்து யுத்த நிலையைக் கணிக்கட்டும். தூம்ராட்சன் எதிரிப் படைகளின் பின்னாலிருந்து அழித்து வரட்டும். வலத்தில் மகா பார்ஷ்வன். இடத்தில் மகோதரன். யானை ஆயிரம், ரதம் ஆயிரம்,குதிரைகள் இரண்டாயிரம்,காலாட்படை ஒரு கோடி, ஆ…… நானே வெல்வேன்."

நான் சொல்லி முடித்ததும் தான் ஒரு மாபெரும்நடிகன்என்பதையெல்லாம்ஒதுக்கிவிட்டு முதன்முதலாய் ஒரு நாடக வசனத்தைக் கேட்கும் சாதாரண மனிதனைப் போலக் கைதட்டினார் சிவாஜிகணேசன். என் குரல் நன்றாக இருப்பதாகப் பாராட்டவும் செய்தார்.

"இராவண வேடத்தில் நீங்கள் நடித்தால் நன்றாக இருக்கும்." ராஜீவ்நாத் சிவாஜியிடம் சொன்னார். "என்ன பண்றது ? மலையாளம் தெரியாதே; வயசும் ஆயிடுச்சு?"

ஒரு கதாபாத்திரத்தை இழந்த நடிகனின் நிராசை உதட்டிலும் குரலிலும் படர சிவாஜிகணேசன் சொன்னார். பிறகு அவர் எங்களை விசாலமான சாப்பாட்டு அறைக்கு அழைத்துச்சென்றார். அங்கே அவர் மனைவி கமலா அம்மா பலவிதமான, தரமானதொரு விருந்தினை ஏற்பாடு செய்துவிட்டு எங்களுக்காய்க் காத்திருந்தார். சிவாஜி கணேசனும் எங்களோடு அமர்ந்தார். அவர் மனைவி, உணவை எங்களுக்குப் பரிமாறினார்.

திரும்பி வரும்போது வாசல் வரை வந்து அந்தத் திராவிடத் தம்பதிகள் எங்களை வழியனுப்பினார்கள். இரவு வணக்கம் சொல்லிக் கையசைத்து நிற்கும் சிவாஜிகணேசனையும் அவரின் மனைவியையும் பார்வையிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டே வந்தேன்.

சீறிப்பாயும் காரில் உட்கார்ந்திருந்திருக்கும் போது என் இதயத்தில் தெருக்களில் குரல்விற்றுப் பிழைத்த அந்தப் பழைய பையனின் சப்தம்.

"தென்னிந்திய நடிப்புச் சக்கரவர்த்தி , தமிழ்நாட்டின் நாட்டியப் பெருமையின் புகழ்க் கொடி, நடிகர் திலகம் சிவாஜிகணேசன் நடிக்கும்....."

நூல்வெளி

இப்பாடப்பகுதி, மலையாளக் கவிஞரும் நடிகருமான பாலச்சந்திரன் சுள்ளிக்காடு எழுதிய 'சிதம்பர ஸ்மரண' என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது. இவர் எர்ணாகுளம் மகாராஜா கல்லூரியில் ஆங்கிலத்தில் பட்டம் பெற்றவர். இவரின் இந்நூலை கே.வி.சைலஜா 'சிதம்பர நினைவுகள்' என்னும் தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

கற்பவை கற்றபின்...

1. பராசக்தி, வீரபாண்டிய கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன், திருவிளையாடல் போன்ற திரைப்படங்களில் இடம்பெற்ற சிவாஜிகணேசனின் வசனங்களை உரிய உச்சரிப்புடன் பேசி வகுப்பறையில் நடித்துக் காட்டுக.
2. உங்கள் பகுதியில் வாழ்ந்து வரும் கலைஞர் ஒருவரை நேரில் கண்ட அனுபவத்தை எழுதுக

உரைநடை உலகம்

ஆளுமை அ

நமது அடையாளங்களை மீட்டவர்

W1D7TV



நாட்டின் வரலாறு என்பது அந்நாட்டை ஆண்ட அரசர்களுடைய வரலாறு மட்டுமன்று; அந்நாட்டில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை வரலாறும் சேர்ந்ததே. ஒவ்வொரு நாட்டுக்கும் அந்தந்த நாட்டின் வரலாறு முதன்மையானதாகும். ஆனால் வரலாற்றை ஆவணப்படுத்தும் வழக்கம் நமது நாட்டில் மிக அரிதாகவே இருந்தது. எனவேதான், நமக்குப் பழைய வரலாறுகள் இன்றும் குறைவாகவே கிடைக்கின்றன. பெரிதும் கவனம் குவிக்கப்படாத இத்தகு துறைகளில் வெளிச்சம் பாய்ச்சிய ஆளுமைகள் போற்றத்தக்கவர்கள். ஆய்வுநோக்கில் வரலாற்றையும் பண்பாட்டையும் செழுமைப்படுத்தும் ஆளுமைகளின் ஆய்வும் போற்றத்தக்கது.

ஒவ்வொரு தேசிய இனமும் தன்னுடைய கடந்தகால வரலாற்றை அறிந்திருந்தால் மட்டுமே எதிர்கால இலக்குகளை அடைய முடியும். அத்தகைய இன வரலாற்றை இலக்கியம், தொல்லியல், கல்வெட்டு, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் தரவுகளைத் தேடி எழுதிய ஆளுமைகளில் முக்கியமானவர் **மயிலை சீனி. வேங்கடசாமி**. இதழ் ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கிய அவர், பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியபடியே எழுதி முடித்த புத்தகங்களே, தமிழர் தம் பழம்பெருமையை உணர உதவும் புதையல்களாக விளங்குகின்றன.

இளமைக்கால வாழ்க்கை:

மயிலை சீனி. வேங்கடசாமி, 16.12.1900ஆம் ஆண்டு சென்னை மயிலாப்பூரில் பிறந்தார். தந்தை சீனிவாசன் ஒரு சித்த மருத்துவராகவும் அவருடைய தமையனார் கோவிந்தராசன் தமிழாசிரியராகவும் விளங்கியமையால், இளமையிலேயே தமிழின்மீது தணியாத பற்றும் நுணுகி ஆராயும் திறனும் பெற்றவராகத் திகழ்ந்தார். தந்தையின் சித்தமருத்துவப் பின்புலம், தமையனாரின் தமிழ்ப் பின்புலம் ஆகியவையே தன்னை வரலாற்றாய்வாளராக உருவாக்கியது என்பதை,

"தமிழ்ப்பற்று முன்னோர்வழியாக எனக்குக் கிடைத்த சீதனம். எங்கள் வீட்டில் இராமாயணம், மகாபாரதம் போன்றவையும் ஏட்டுச்சுவடிகளும் நிறைய இருந்தன. ஏட்டுச்சுவடிகளை எடுத்துப் புரட்டிப் பார்த்தேன்; எதுவும் புரியாது. பின்னால் இவற்றையெல்லாம் படித்து ஆராய வேண்டும் என்னும் எண்ணம் எழும். பின்னால் நான் செய்யப் புகுந்த இலக்கிய வரலாற்றுக் கல்வெட்டு ஆராய்ச்சிகளுக்கு அன்றே என் மனத்தில் வித்தூன்றிவிட்டேன்" என்று கூறுவார்.

ஆசிரியர் பயிற்சி பெற்றுத் தொடக்கப் பள்ளியில் 25 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார். பாடம் கற்பிக்கும் நேரத்தைத்தவிர மற்ற நேரங்களில் அவர் வளாகம் சாராத ஆய்வாளராகத் தம்மை உருவாக்கிக் கொண்டார். கட்டுரையோ, நூலோ எழுதும்முன் தரவுகளைச் சேகரித்துத் தமது ஆய்வுக்கு ஏற்றதை ஒப்பிட்டு ஐயமிருப்பின் மற்றவர்களைக் கேட்டுத் தெளிந்த பிறகே வெளியிடுவார். **விபுலானந்த அடிகள், கா. சுப்பிரமணியர், திரு.வி.க, தெ.பொ.மீ, ச.த. சற்குணர்** ஆகிய அறிஞர் பெருமக்களிடம் கொண்டிருந்த தொடர்பு காரணமாக அவரது ஆய்வுக்கட்டுரைகள் **குடியரசு, ஊழியன், செந்தமிழ்ச்செல்வி, ஆரம்பாசிரியன், லஷ்மி**

முதலான இதழ்களில் வெளியாகின. மயிலை சீனி. ஒரு தமிழ்த் தேனீ. அறிவின் வாயில்களை நோக்கியே அவர் கால்கள் நடந்தன. நூலகங்களே அவரது தாயகங்களாகின. அறிவை விரிவு செய்து அல்லும் பகலும் ஆய்வில் மூழ்கிக் கருத்து முத்துகளைத் தமிழ்நாட்டிற்கு வழங்கினார். புதிய செய்தி தருதல், புது விளக்கமளித்தல், இருண்ட பக்கங்களுக்கு ஒளியூட்டுதல், தவறுகளை மறுத்து உண்மையை எடுத்துரைத்தல் என்பனவற்றை ஆய்வு அணுகுமுறைகளாகக் கொண்டார்.

தொடக்ககால ஆய்வுகள்:

1934இல் **தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்** சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் நடத்திய தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் **ச.த. சற்குணர்,** கிறித்துவமும் தமிழும் என்ற பொருள் குறித்து உரையாற்றினார். அவ்வுரையைக் கேட்டுப் பெற்ற ஆர்வத்தினால் 'கிறித்துவமும் தமிழும்' என்னும் நூலை மயிலையார் எழுதினார். இதுவே அவருடைய முதல் நூலாகும். தமிழின் தொல் இலக்கியம், தொல் கலை, தொல்லெழுத்து ஆகியவற்றில் கொண்ட ஈடுபாடு காரணமாக, '**பௌத்தமும் தமிழும்**', '**சமணமும் தமிழும்**' ஆகிய நூல்களை அவர் இயற்றினார். அச்சமயத்தார் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள் அளப்பரியன. அதனை, அவர் காழ்ப்புணர்வின்றி நடுநிலை நின்று இந்நூல்கள் வாயிலாக வெளிப்படுத்தினார்.

சமயம், மானுடவியல், தமிழக வரலாறு, தொல்பொருள் ஆய்வு, கலை வரலாறு, மொழியாய்வு முதலான பல துறைகளிலும் இவர் கவனம் செலுத்தினார். குறிப்பாக, கல்வெட்டு ஆய்வில் இவருக்குப் பயிற்சி அதிகம்; தமிழ் எழுத்தியலின் வளர்ச்சியை நன்குணர்ந்தவர். வட்டெழுத்து, கோலெழுத்து, தமிழ் பிராம்மி ஆகியவற்றில் புலமை பெற்றிருந்த காரணத்தால் சாசனங்களை அவரால் எளிதாக வாசிக்க முடிந்தது. வரலாறு, இலக்கியம், கலையியல், சமயம் எனப் பல துறைகளிலும் நூல்களை எழுதியிருப்பது வேங்கடசாமியின் பன்முக அறிவை விளக்குகிறது.

வரலாற்று ஆய்வுகள்

1950களில், கி.பி.(பொ.ஆ.) 3ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி.(பொ.ஆ.) 9ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலங்களில் ஆட்சி புரிந்த மன்னர்களைப் பற்றிய ஆய்வில் ஈடுபட்டார். **மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன்** ஆகியோர் குறித்த நூல்களைத் தொடர்ந்து மூன்றாம் நந்திவர்மன் என்னும் பல்லவ மன்னனைப் பற்றியும் அவர் எழுதினார். இது, தமிழில் அம்மன்னனைப் பற்றி எழுதப்பட்ட முதல் நூல் என்னும் பெருமையைப் பெற்றது. இவை தவிர, சங்க கால மூவேந்தர்கள், கொங்குநாட்டு மன்னர்கள், துளு நாட்டு மன்னர்கள், களப்பிரர் மற்றும் இலங்கை குறித்த வரலாறு ஆகியவற்றையும் எழுதினார். மேற்குறித்தவற்றுள் வரலாற்றை மட்டும் எழுதாது அதன் அரசியல், பண்பாடு மற்றும் கலை வரலாறுகளையும் பதிவு செய்தார்.

சங்க காலத்துக்குப் பிற்பட்ட காலத்தில் தமிழகத்தைக் களப்பிரர்கள் என்ற மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். இக்காலம் தமிழர்களின் வரலாற்றில் **இருண்ட காலம்** என்று

மரபுவழிப்பட்ட வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டிருந்தனர். இம்மன்னர்கள் குறித்த ஆய்வை வேங்கடசாமி விரிவாக மேற்கொண்டு களப்பிரர் குறித்த புதிய கண்ணோட்டத்தைக் **'களப்பிரர் ஆட்சியில் தமிழகம்'** என்னும் நூல்மூலம் வெளிப்படுத்தினார்.

கலையியல் ஆய்வுகள்

கலையியல் சார்ந்து தமிழில் வெளியான பல நூல்களுக்கும் வேங்கடசாமியே வழிகாட்டியாக விளங்கினார். இக்கலை ஆராய்ச்சிக்கு அவருடைய பல்துறை அறிவும் தம் இளமைப்பருவத்தில் அவர் ஓவியக் கல்லூரியில் பயின்றதும் இதற்கு உதவியாக அமைந்தது. கட்டடம், சிற்பம், ஓவியம் தொடர்பான இவரது ஆய்வுகள் தமிழ்ச்சமூக வரலாற்றுக்குப் புதிய வரவாக அமைந்தன. தமிழரது கலைத்திறனை எடுத்தோதும் **'தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்'** என்னும்நூல்,கவின்கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முழுமையான முதல்நூல் ஆகும். "தற்காலத்துத் தமிழ்ச்சமூகம் தனது பழைய அழகுக் கலைச்செல்வங்களை மறந்து, தன்பெருமை தான் அறியாச் சமூகமாக இருந்து வருகிறது; 'கலை கலை' என்று இப்போது கூறப்படுகிறதெல்லாம் சினிமாக்கலை, இசைக்கலைகள் பற்றியே; இலக்கியக்கலைகூட அதிகமாகப் பேசப்படுவதில்லை; ஏனைய அழகுக்கலைகளைப் பற்றி அறவே மறந்துவிட்டனர்; எனவே இந்நூல்எழுதப்பட்டது" என்று இந்நூலின் முன்னுரையில் மயிலை சீனி. வேங்கடசாமி குறிப்பிடுகின்றார். இந்நூல் தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம், நுண்கலைகள், இசைவாணர் கதைகள் ஆகியவை கலை பற்றிய இவருடைய பிற நூல்கள் ஆகும். தமது நூல்களின் படங்களைத் தானே வரைந்து வெளியிட்டது இவரது கலைத்திறனுக்குச் சான்றாகும்.

இலக்கிய ஆய்வுகள்

1962ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் அறக்கட்டளைச் சொற்பொழிவு ஒன்றினை வேங்கடசாமி நிகழ்த்தினார். இச்சொற்பொழிவுகள் மூலம் அவரது ஆய்வுப்பயணம் தொல்காப்பியம், சங்க இலக்கியம், கல்வெட்டுகள் ஆகியவற்றை நோக்கி நகர்ந்தது. அதன் விளைவாக, சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள், பழங்காலத் தமிழர் வணிகம், களப்பிரர் ஆட்சியில் தமிழகம், கொங்கு நாட்டு வரலாறு, தமிழ்நாட்டு வரலாறு – சங்ககாலம் (அரசியல்) ஆகிய நூல்களையும் எழுதினார்.

ஆய்வுலகில் மயிலை சீனி. வேங்கடசாமியின் குறிப்பிடத்தக்கபங்களிப்பைக் கூற வேண்டுமானால் தமிழக வரலாற்றினைப் பல கோணங்களில் மீட்டுருவாக்கம் செய்ததைக் குறிப்பிடலாம். **'தமிழ்நாட்டு வரலாறு'** என்னும் நூல் இவருடைய மீட்டுருவாக்க முயற்சிக்குச் சரியான சான்றாகும். சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம் முதலிய இலக்கியத் தரவுகளைக்கொண்டு இந்த நூலை எழுதியுள்ளார். அத்துடன் துளு மொழியையும் தமிழ்மொழியையும்ஒப்பிட்டுஆராய்ந்துள்ளார்.

தெரியுமா?

மயிலை சீனி. வேங்கடசாமி பற்றி நாரண துரைக்கண்ணன் சொன்ன உருவ விவரிப்பு

"ஐந்தடிக்கு உட்பட்ட குறள் வடிவம்; அகன்ற நெற்றி; வட்ட முகம்; எடுப்பான மூக்கு; பேசத் துடிக்கும் மெல்லுதடுகள்; நான்கு முழ வெள்ளை வேட்டி; காலர் இல்லாத முழுக்கைச் சட்டை; சட்டைப்பையில் மூக்குக்கண்ணாடி; பவுண்டன் பேனா; கழுத்தைச் சுற்றி மார்பின் இருபுறமும் தொங்கும் மேல்துண்டு; இடது கரத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் புத்தகப்பை. இப்படியான தோற்றத்துடன் கன்னிமாரா நூலகத்தை விட்டு வேகமாக நடந்து வெளியே வருகிறாரே, அவர்தான் மயிலை சீனி. வேங்கடசாமி.

– நாரண. துரைக்கண்ணன்

குறைந்த ஆதாரங்களைக்கொண்டு ஒரு பெரிய வரலாற்றையே உருவாக்கிய இவரது நுண்ணிய அறிவிற்குச் சான்றாக இந்நூல் விளங்குகிறது.

தமிழியலுக்குத் தேவையான பல்வேறு ஆவணங்களையும் தொகுத்து ஆய்வு செய்யும் பணியை இவர் மேற்கொண்டார். இப்பணியின் விளைவாக, **சாசனச் செய்யுள் மஞ்சரி, மறைந்துபோன தமிழ்நூல்கள்** ஆகிய நூல்களை எழுதினார். இவருடைய, **பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்** இலக்கியம் என்னும் நூல், ஒவ்வொரு நூற்றாண்டையும் எவ்வகையில் ஆவணப்படுத்துவது என்பதற்கான முன்னோடி நூல் எனலாம். இதேபோல, 'மறைந்துபோன தமிழ்நூல்கள்' என்னும் நூல் வேங்கடசாமி அவர்களின் அரிய ஆவணப்பணிகளில் ஒன்றாகும். இந்நூல் தமிழ் மறுமலர்ச்சிக்குப் பெரும் ஊக்கம் அளிப்பதாக அமைந்தது. இந்நூலில், பரந்த தமிழ் இலக்கிய, இலக்கணப் பரப்பில் உறைந்திருந்த செய்திகளைத் தொகுத்து மறைந்துபோன 333 நூல்கள் தொடர்பான குறிப்புகளை நம் முன் நிறுத்துகிறார்.

பன்மொழிப் புலமை

தமிழ் ஆய்வு மரபில், சொல் ஆய்வுகளை

சிறுபாணன் சென்ற பெருவழி நிலப்படம்
(மயிலை சீனி. வேங்கடசாமி வரைந்தது)

மயிலை சீனி. வேங்கடசாமி ஆய்வுக் கட்டுரைகள்

தாங்கெட நேர்ந்த போதும்
தமிழ்கெட லாற்றா அண்ணல்
வேங்கட சாமி என்பேன்
விரிபெரு தமிழர் மேன்மை
ஓங்கிடச் செய்வ தொன்றே
உயிர்ப்பணியாகக் கொண்டோன்
வீங்கிட மாட்டான் கல்வி
விளம்பரம் விழைதல் இல்லான்

– பாவேந்தர் பாரதிதாசன்

மேற்கொள்ளாத ஆய்வாளர் இல்லை. நீண்ட வரலாறுகொண்ட மொழியின் சொற்களில் இவ்வகையான ஆய்வுக்குரிய ஏதுக்கள் மிகுதியாகும். வேங்கடசாமி தொடர்ச்சியாக இத்தகைய சொல்லாய்வுப் பணியை மேற்கொண்டு வந்துள்ளார். '**செந்தமிழ்ச் செல்வி**' என்னும் இதழில் அவர் எழுதிய சொல்லாய்வுக் கட்டுரைகள் '**அஞ்சிறைத் தும்பி**' என்ற தொகுப்பாக வெளியிடப்பட்டது.

வேங்கடசாமி அவர்கள் மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம், பாலி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பயிற்சியுடையவர். எனவே, மகேந்திரவர்மன் இயற்றிய '**மத்த விலாசம்**' என்ற நாடக நூலை ஆங்கிலம் வழியாகத் தமிழாக்கியுள்ளார்.

தமிழ்ப் பண்பாட்டிலும் தமிழர் வரலாற்றிலும் ஆழ்ந்த அக்கறை கொண்ட மயிலை சீனி. அவர்கள் தமிழர் பண்பாட்டின் தனித்தன்மையை நிறுவுவதில் உறுதியான பார்வை கொண்டவர். 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியவியல் என்ற வட்டத்திற்குள் பேசப்பட்ட தமிழகத்தின் வரலாற்றை, அதிலிருந்து மீட்டுத் திராவிட இயலாக அடையாளப்படுத்தியதில் இவருடைய பங்கு குறிப்பிடத்தக்கது. அதன் பயனாக, இன்று திராவிட இயல் தமிழியலாக வளர்ந்துள்ளது.

"நான் கதைகளையும் நவீனங்களையும்

எழுதுகிறவன் அல்லன். வரலாற்று ஆராய்ச்சி நூல்களையும் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி நூல்களையும் எழுதுகிறவன். ஆராய்ச்சி நூல்களைப் பெரும்பான்மையோர் படிப்பதில்லை; இதை மிகச் சிறுபான்மையோரே படிக்கின்றனர் என்பதை நன்றாகத் தெரிந்தே ஆராய்ச்சி நூல்களை எழுதுகிறேன்" என்று வேங்கடசாமி வருந்தி எழுதியுள்ளார். இது, வரலாற்றின் மீதுள்ள அவருடைய ஈடுபாட்டையும் உழைப்பையும் பறைசாற்றுவதோடு தமிழர், தம் வரலாற்றைப் பொருட்படுத்தாத போக்கினையும் அறிவிக்கிறது. எனவேதான் சுவாமி விபுலானந்த அடிகள், 'மயிலை சீனி. வேங்கடசாமி ஆண்டில் இளைஞராக இருந்தாலும் ஆராய்ச்சித்துறையில் முதியவர்; நல்லொழுக்கம் வாய்ந்தவர். நல்லோருடைய கூட்டுறவைப் பொன்னேபோல் போற்றுபவர்' என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

ஆராய்ச்சிப் பேரறிஞர்

மயிலை சீனியாரால் பல ஆய்வுகள் தமிழுலகுக்கு முதன்முதலாக வழங்கப்பட்டவை. இவரது ஆய்வுகள் அறிஞருக்கு மட்டுமன்றிப் பொதுமக்களுக்கும் அறிவு விருந்தோம்பியவை. பல ஆய்வுகள் கிளைவிடுவதற்கு அடிமரமாக இருந்தவை இவரது ஆய்வுகள். வேண்டாத நூலிது என்றோ நூலில் வேண்டாத பகுதி என்றோ ஒதுக்க முடியாத வகையில் இவரது எழுத்தாளுமை திகழ்ந்தது.

தமிழக வரலாற்றுக் கழகத்திலும் தமிழகப் புலவர் குழுவிலும் உறுப்பினராக இருந்து பெருந்தொண்டாற்றிய வேங்கடசாமிக்கு 1962இல் தமிழ் எழுத்தாளர் சங்கம் பாராட்டிக் கேடயம் வழங்கியது. மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் '**தமிழ்ப் பேரவைச் செம்மல்**' என்ற விருதினை அளித்தது. தமது ஓயாத தேடலினாலும் கடுமையான உழைப்பாலும் அரிய ஆய்வு முடிவுகளைக் கொணர்ந்த இம்மாமனிதருக்கு அறிஞர்கள் கூடிச் சென்னை கோகலே மண்டபத்தில் மணிவிழா எடுத்து '**ஆராய்ச்சிப் பேரறிஞர்**' என்ற பட்டத்தை வழங்கினர்.

திருமணமே செய்துகொள்ளாமல் இல்லறத் துறவியாக வாழ்ந்து, தம் வாழ்வை முழுமையாகத் தமிழியல் ஆய்வுக்கு ஒதுக்கியவர் மயிலை சீனி. வேங்கடசாமி. அவர், நாம் தாழாமல் இருக்கத் தம்மைத் தாழ்த்திக் கொண்டவர். நமது பெருமைகளை ஆய்வுநோக்கில் விரித்துரைத்தவர்; நமது சுய அடையாளங்களை மீட்டுத் தந்தவர்.

தெரிந்து தெளிவோம்

புதிய செய்தி காணும் ஆய்வு

சேரன் கொடிக்கு வில், சோழன் கொடிக்கு புலி, பாண்டியன் கொடிக்கு மீன் என்று மரபான சின்னங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மற்ற சின்னங்கள் பற்றிய குறிப்புகள் ஆய்வுலகு அறியாதவை. சங்ககாலப் பசும்பூண் பாண்டியன் தன் கொடியில் யானைச் சின்னத்தைக் கொண்டிருந்தான் என்ற செய்தி அகநானூற்றில் (162) இருப்பதை முதன் முதலில் அறிந்து வெளிப்படுத்தியவர் மயிலை சீனி. வேங்கடசாமி. இப்படி அவர் வெளிப்படுத்திய அரிய செய்திகள் பற்பல.

கற்பவை கற்றபின்...

1. உங்கள் பகுதியைச் சேர்ந்த தமிழறிஞர் ஒருவரின் பணிகள் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.
2. தமிழறிஞர்களின் பணிகள் குறித்து வகுப்பறையில் படத்தொகுப்பு உருவாக்குக.

விரிவானம்

அறம்

அ

மகனுக்கு எழுதிய கடிதம்

– நா. முத்துக்குமார்

LPL9Z9



தொலைவில் உள்ளோருக்குக் கருத்தைத் தெரிவிக்கப் புகையில் தொடங்கி ஒலியில் வளர்ந்து விலங்குகள், பறவைகள், மனிதர்கள் எனப் பலராலும் தொடர்ந்து அஞ்சலில் நிலைபெற்றுள்ளோம் நாம். அதுவே இன்று மின்னஞ்சல் உள்ளிட்ட புதுப்புதுப் படிமலர்ச்சிகளில் வளர்ந்து கொண்டே இருக்கிறது. பரிமாற்றங்கள் எவ்வாறாக இருப்பினும் உயர்வான கருத்தும் உயிர்ப்புள்ள மொழியுமே செய்தி அளிப்பவருக்கும் பெறுபவருக்குமான உறவுப்பாலத்தை உறுதியாக்குகிறது! கவிஞர் நா. முத்துக்குமார், தம் மகனுக்கு எழுதுவதாக அமைந்த இக்கடிதம், பிள்ளை வளர்ப்பில் தாயுமானவராகத் திகழ்ந்த ஒருவரை நமக்குக் காட்டிச் செல்கிறது.

அன்புள்ள மகனுக்கு, அப்பா எழுதுவது.

இது நான் உனக்கு எழுதும் முதல் கடிதம். இதைப் படித்துப் புரிந்துகொள்ளும் வயதில் நீ இல்லை. மொழியின் விரல் பிடித்து நடக்கப் பழகிக்கொண்டு இருக்கிறாய். உன் மொழியில் உனக்கு எழுத, நான் கடவுளின் மொழியை அல்லவா கற்க வேண்டும்.

என் பிரியத்துக்குரிய பூங்குட்டியே!

உன் மெத்தென்ற பூம்பாதம் என் மார்பில் உதைக்க... மருத்துவமனையில் நீ பிறந்ததும் உனை அள்ளி என் கையில் கொடுத்தார்கள். என் உதிரம் உருவமானதை, அந்த உருவம் என் உள்ளங்கையில் கிடப்பதை, குறுகுறு கை நீட்டி என் சட்டையைப் பிடித்து இழுப்பதை, கண்ணீர் மல்கப் பார்த்துக்கொண்டு இருந்தேன்.

உலகிலேயே மிகப்பெரிய இன்பம் எது?.... "தம் மக்கள் மெய் தீண்டல் உயிர்க்கு இன்பம்" என்கிறார் வள்ளுவர். நீ எம் மெய் தீண்டினாய், மெய்யாகவே மெய்யாகவே நான் தூள் தூளாக உடைந்து போனேன். உன் பொக்கை வாய்ப் புன்னகையில் நீ என்னை அள்ளி அள்ளி எடுத்து மீண்டும் மீண்டும் ஒட்டவைத்துக்கொண்டு இருந்தாய்.

நீ அழுதாய்; சிரித்தாய்; சிணுங்கினாய்; குப்புறக் கவிழ்ந்து, தலை நிமிர்ந்து, அந்தச் சாகசத்தைக் கொண்டாடினாய். தரை எல்லாம் உனதாக்கித் தவழ்ந்தாய். தகப்பன் விரல் பிடித்து எழுந்தாய். நீயாகவே விழுந்தாய். தத்தித் தத்தி நடந்தாய். தாழ்வாரம் எங்கும் ஓடினாய். மழலை பேசி, மொழியை ஆசீர்வதித்தாய்.

என் பொம்முக்குட்டியே! இந்த எல்லாத் தருணங்களிலும் நீ நம் வீட்டுக்கு இறைவனை அழைத்து வந்தாய்.

என் செல்லமே! இந்த உலகமும் இப்படித்தான். அழ வேண்டும். சிரிக்க வேண்டும். சிணுங்க வேண்டும். குப்புறக் கவிழ்ந்து, பின் தலை நிமிர்ந்து, அந்தச்

சாகசத்தைக் கொண்டாட வேண்டும். தரை எல்லாம் தனதாக்கித் தவழ வேண்டும். எழ வேண்டும். விழ வேண்டும். தத்தித் தத்தி நடக்க வேண்டும். வாழ்க்கை முழுக்க இந்த நாடகத்தைத்தான் நீ வெவ்வேறு வடிவங்களில் நடிக்க வேண்டும்.

என் சின்னஞ்சிறு தளிரே! கல்வியில் தேர்ச்சிகொள். அதே நேரம், அனுபவங்களிடம் இருந்து அதிகம் கற்றுக்கொள். தீயைப் படித்துத் தெரிந்து கொள்வதைவிட, தீண்டிக் காயம் பெறு. அந்த அனுபவம் எப்போதும் சுட்டுக்கொண்டே இருக்கும். இறக்கும்வரை இங்கு வாழ, சூத்திரம் இதுதான், கற்றுப்பார். உடலைவிட்டு வெளியேறி, உன்னை நீயே உற்றுப்பார்.

எங்கும் எதிலும், எப்போதும் அன்பாய் இரு. அன்பைவிட உயர்ந்தது இந்த உலகத்தில் வேறு எதுவுமே இல்லை. உன் பேரன்பால் இந்தப் பிரபஞ்சத்தை நனைத்துக்கொண்டே இரு.

உன் தாத்தா, ஆகாய விமானத்தை அண்ணாந்து பார்த்தார். அவரது 57ஆவது வயதில்தான் அதில் அமர்ந்து பார்த்தார். உன் தகப்பனுக்கு 27ஆவது வயதில் விமானத்தின் கதவுகள் திறந்தன. ஆறு மாதக் குழந்தைப் பருவத்திலேயே நீ ஆகாயத்தில் மிதந்தாய். நாளை உன் மகன் ராக்கெட்டில் பறக்கலாம்.

இந்த மாற்றம் ஒரு தலைமுறையில் வந்தது அல்ல. இதற்குப் பின்னால் நெடியதொரு உழைப்பு இருக்கிறது. என் முப்பாட்டன் காடு திருத்தினான். என் பாட்டன் கழனி அமைத்தான். என் தகப்பன் விதை விதைத்தான். உன் தகப்பன் நீர் ஊற்றினான். நீ அறுவடை செய்துகொண்டு இருக்கிறாய். என் தங்கமே! உன் பிள்ளைக்கான விதையையும் உன் உள்ளங்கையில் வைத்திரு. உழைக்கத் தயங்காதே. உழைக்கும்வரை உயர்ந்து கொண்டு இருப்பாய்.

இதை எழுதிக்கொண்டு இருக்கையில் என் பால்ய காலம் நினைவுக்கு வருகிறது. கிராமத்தில் கூரை வீட்டிலும், பின்பு ஓட்டு வீட்டிலும் வளர்ந்தவன் நான். கோடைக் காலங்களில் வெப்பம் தாங்காமல் ஓட்டுக்கூரையில் இருந்து கொடிய தேள்கள் கீழே விழுந்துகொண்டே

தெரிந்து தெளிவோம்

கைபேசியின் வரவால் இன்று கடிதம் எழுதும் பழக்கம் பெரும்பாலும் இல்லை என்றே சொல்லலாம். கடிதங்களைக் கொண்டு பல வரலாறுகளையும் இலக்கியங்களையும் பரிமாறியிருக்கிறார்கள். கடித வடிவில் புதினங்களும் எழுதப்பட்டுள்ளன. தாகூர், நேரு, டி.கே.சி., வல்லிக்கண்ணன், பேரறிஞர் அண்ணா, மு. வரதராசனார், கு. அழகிரிசாமி, கி. இராஜநாராயணன் முதலானோர் கடித வடிவில் இலக்கியங்கள் படைத்துள்ளனர்.

இருக்கும். அதற்குப் பயந்து என் தகப்பன் என் அருகே அமர்ந்து இரவு முழுவதும் பனை ஓலை விசிறியால் விசிறிக்கொண்டே இருப்பார். இன்று அந்த விசிறியும் இல்லை. கைகளும் இல்லை. மாநகரத்தில் வாழும் நீ, வாழ்க்கை முழுக்கக் கோடைக்காலங்களையும் வெவ்வேறு வடிவங்களில் கொடிய தேள்களையும் சந்திக்க வேண்டி இருக்கும். எத்தனை காலம்தான் உன் தகப்பன் உன் அருகில் அமர்ந்து விசிறிக்கொண்டு இருப்பான்? உனக்கான காற்றை நீயே உருவாக்கப் பழகு.

வயதின் பேராற்றங்கரை உன்னையும் வாலிபத்தில் நிறுத்தும். சிறகு முளைத்த தேவதைகள் உன் கனவுகளை ஆசீர்வதிப்பார்கள். பெண் உடல் புதிராகும். உன் உடல் உனக்கே எதிராகும். என் தகப்பன் என்னிடம் ஒளித்துவைத்த ரகசியங்கள் அடங்கிய பெட்டியின் சாவியை நான் தேட முற்பட்டதைப்போல், நீயும் தேடத் தொடங்குவாய். பத்திரமாகவும் பக்குவமாகவும் இருக்க வேண்டிய தருணம் அது. உனக்குத் தெரியாதது இல்லை. பார்த்து நடந்துகொள்.

நிறையப் பயணப்படு. பயணங்களின் ஜன்னல்களே முதுகுக்குப் பின்னாலும் இரண்டு கண்களைத் திறந்து வைக்கின்றன. புத்தகங்களை நேசி. ஒரு புத்தகத்தைத் தொடுகிறபோது

9th_Tamil_Pages 122-264.indd 221 22-12-2020 15:58:05

தூர்

வேப்பம்பூ மிதக்கும்
எங்கள் வீட்டுக் கிணற்றில்
தூர் வாரும் உற்சவம்
வருடத்திற்கொரு முறை
விசேஷமாய் நடக்கும்.

ஆழ்நீருக்குள்
அப்பா முங்க முங்க
அதிசயங்கள் மேலே வரும்.

கொட்டாங்குச்சி, கோலி, கரண்டி,
கட்டையோடு உள்விழுந்த
துருப்பிடித்த ராட்டினம்,
வேலைக்காரி திருடியதாய்
சந்தேகப்பட்ட வெள்ளி டம்ளர்,
சேற்றிற்குள் கிளறி
எடுப்போம் நிறையவே.

சேறுடா... சேறுடாவென
அம்மா அதட்டுவாள்
என்றாலும்
சந்தோஷம் கலைக்க
யாருக்கு மனம் வரும்?

பகை வென்ற வீரனாய்
தலைநீர் சொட்டச் சொட்ட
அப்பா மேல் வருவார்.

இன்றுவரை அம்மா
கதவுகளின் பின்னிருந்துதான்
அப்பாவோடு பேசுகிறாள்.
கடைசிவரை அப்பாவும்
மறந்தே போனார்
மனசுக்குள் தூரெடுக்க.

– நா. முத்துக்குமார்

நீ ஓர் அனுபவத்தைத் தொடுவாய். உன் பாட்டனும் தகப்பனும் புத்தகங்களின் காட்டில் தொலைந்தவர்கள். உன் உதிரத்திலும் அந்தக் காகித நதி ஓடிக்கொண்டே இருக்கட்டும்.

கிடைத்த வேலையைவிட, பிடித்த வேலையைச் செய். இனிய இல்லறம் தொடங்கு. யாராவது கேட்டால், இல்லை எனினும் கடன் வாங்கியாவது உதவி செய். அதில் கிடைக்கும் ஆனந்தம் அலாதியானது.

உறவுகளிடம் நெருங்கியும் இரு, விலகியும் இரு. இந்த மண்ணில் எல்லா உறவுகளையும்விட மேன்மையானது நட்பு மட்டுமே. நல்ல நண்பர்களைச் சேர்த்துக்கொள். உன் வாழ்க்கை நேராகும்.

இவை எல்லாம் என் தகப்பன் எனக்குச் சொல்லாமல் சொன்னவை. நான் உனக்குச் சொல்ல நினைத்துச் சொல்பவை.

என் சந்தோஷமே! நீ பிறந்த பிறகுதான் என் தகப்பனின் அன்பையும் அருமையையும் நான் அடிக்கடி உணர்கிறேன். நாளை உனக்கொரு மகன் பிறக்கையில், என் அன்பையும் அருமையையும் நீ உணர்வாய்.

நாளைக்கும் நாளை நீ உன் பேரன், பேத்திகளுடன் ஏதோ ஒரு ஊரில் கொஞ்சிப் பேசி விளையாடிக்கொண்டு இருக்கையில் என் ஞாபகம் வந்தால், இந்தக் கடிதத்தை மீண்டும் எடுத்துப் படித்துப்பார். உன் கண்களில் இருந்து உதிரும் கண்ணீர்த் துளியில் வாழ்ந்து கொண்டு இருப்பேன் நான்.

இப்படிக்கு,
உன் அன்பு அப்பா.

கற்பவை கற்றபின்...

1. முத்துக்குமார் தம் மகனுக்கு எழுதிய கடிதத்தைப் போல நீங்கள் யாருக்குக் கடிதம் எழுத விரும்புகிறீர்கள்? அப்படியொரு கடிதம் எழுதுக.
2. வகுப்பில் நீங்கள் தேர்ந்தெடுத்த நண்பரின் சிறந்த பண்பைப் பாராட்டியும் அவர் மாற்றிக்கொள்ள வேண்டிய பண்பைப் பற்றியும் பெயரைக் குறிப்பிடாமல் கடிதமாக எழுதிப் படித்துக்காட்டுக.

LPV61H

உரைநடை உலகம்

நாடு

எ

இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு

— மா.சு. அண்ணாமலை

நுழையும்முன்

இந்திய தேசிய இராணுவம் இந்திய விடுதலைக்காக உருவாக்கப்பட்ட அமைப்பு. இந்த அமைப்பின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் நம் தமிழர்கள். விடுதலைப் போராட்டத்தை ஒளி மங்காமல் பாதுகாத்தவர்களுள் ஒருவரான நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களுடன் இணைந்து இந்திய தேசிய இராணுவப் படையில் போராடிய தமிழர்களின் பங்கு வியந்து போற்றத்தக்கது.

LJZZSI

இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்த 1942ஆம் ஆண்டு பிப்ரவரி 15ஆம் நாள், ஆங்கிலேயப் படைகள் மலேயாவில் ஜப்பானியரிடம் சரணடைந்தன. இப்படையில் இந்திய வீரர்களும் இருந்தனர். சரணடைந்த அவ்வீரர்களைக் கொண்டு ஜப்பானியர்கள், மோகன்சிங் என்பவரின் தலைமையில் இந்திய தேசிய இராணுவம் (ஐ.என்.ஏ.) என்ற படையை உருவாக்கினர்.

இந்திய தேசிய இராணுவத்திற்கு மக்கள் ஆதரவு பெருகியது. அக்காலகட்டத்தில் தமிழகத்தில் இருந்து மலேயா, பர்மா போன்ற நாடுகளுக்குப் பிழைப்பிற்காகச் சென்ற தமிழர் பலர் இந்திய தேசிய இராணுவத்தில் சேர்ந்தனர். இந்திய தேசிய இராணுவத்தில் பல பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. அதில் ஒன்றுதான் ஒற்றர்படை. ஜப்பானியர்கள் ஒற்றர்படையில்

9th_Tamil_Pages 122-264.indd 182 22-12-2020 15:57:55

இருந்த வீரர்களை, இந்தியாவில் உள்ள ஆங்கிலேய இராணுவத்தைப் பற்றி ஒற்றறிய நீர்மூழ்கிக்கப்பல் மூலம் கேரளாவிற்கும் குஜராத்திற்கும் அனுப்பினர். சிலரைத் தரைவழியில், பர்மாக் காடுகள் வழியாக இந்தியாவிற்கு அனுப்பினர். இந்திய இராணுவம் அவர்களைக் கைது செய்து சென்னைச் சிறைக்கு அனுப்பியது; பலருக்கு மரண தண்டனை அளித்தது.

நேதாஜி தமிழ் வீரர்களைப் பாராட்டி நான் மறுபடியும் பிறந்தால் ஒரு தென்னிந்தியத் தமிழனாகப் பிறக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்.

– பசும்பொன் முத்துராமலிங்கனார்

தூண்களாகத் திகழ்ந்தவர்கள்

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய இராணுவத்தின் பொறுப்பை ஏற்க, 91நாள்கள் நீர்மூழ்கிக் கப்பலில் பயணம் செய்து ஜெர்மனியிலிருந்து சிங்கப்பூர் வந்தடைந்தார். 1943ஆம் ஆண்டு சூலை மாதம் 9ஆம் நாள் பதவியேற்றார். அவர் உரையாற்றிய மாபெரும் கூட்டத்தில் "டெல்லி நோக்கிச் செல்லுங்கள்"(டெல்லி சலோ) எனப் போர்முழக்கம் செய்தார். இவரின் வேண்டுகோள் அனைவரது மனத்திலும் பசுமரத்தாணிபோல் பதிந்தது.

நேதாஜி தலைமையில் இருந்த இந்திய தேசிய இராணுவப்படை பிரித்தானிய அரசை எதிர்த்தது. அப்போது தமிழகத்திலிருந்து பெரும்படையைத் திரட்டி இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுச்சேர்த்த பெருமைக்கு உரியவர் பசும்பொன் முத்துராமலிங்கனார்.

இந்திய தேசிய இராணுவப்படைத் தலைவராக இருந்த தில்லான், "இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான்" என்றார்.

தெரியுமா?

வான்படைப் பிரிவு

இந்திய தேசிய இராணுவத்தில் இருந்து 45 வீரர்கள் நேதாஜியால் தேர்வு செய்யப்பட்டு, வான்படைத் தாக்குதலுக்கான சிறப்புப் பயிற்சி பெறுவதற்காக, ஜப்பானில் உள்ள இம்பீரியல் மிலிட்டரி அகடமிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அந்த 45பேர் கொண்ட பயிற்சிப் பிரிவின் பெயர்தான் டோக்கியோ கேடட்ஸ்.

போர்ச் சூழலுக்கு நடுவில் இந்திய தேசிய இராணுவ வீரர்கள் டோக்கியோ செல்வது ஒரு சவாலாக இருந்தது. பர்மாவில் இருந்து காட்டுவழியாகப் பயணம் செய்து, சயாம் மரண ரயில் பாதையைக் கடந்து, அங்கிருந்து படகு வழியாகத் தப்பிச் சென்று, பழைய கப்பல் ஒன்றில் ஏறி, சீறும் அலைகளில் சிக்கித் தவித்து முடிவில் ஜப்பானின் "கியூசு" தீவை அடைந்தனர். அந்தத் தீவு, கடற்படையின் வசம் இருந்தது.

காலை 5 மணிக்கு எழுந்து மூன்று கல் தூரம் ஓடவேண்டும். அப்போது குளிர், சுழியத்திற்குக் கீழ் இருக்கும். உதடுகள் வெடித்து வலி தாங்க முடியாது. பனிப்புகை படர்ந்த மைதானத்தில் ஓடுவார்கள். மூன்று கல் தூரம் ஓடியதும் ஐந்து நிமிடங்கள் ஓய்வு, பிறகுதான் சிறப்புப் பயிற்சிகள். அதை முடித்துக்கொண்டு அவசரமாகக் குளித்துத் தயாராகி வர வேண்டும்.

– பசும்பொன் மடல், மடல் 32, இதழ் 8,சனவரி 2018, ப.14–16

9th_Tamil_Pages 122-264.indd 183 22-12-2020 15:57:56



மகளிர் படை உருவாக்கம்

இந்திய தேசிய இராணுவத்தில் ஜான்சிராணி பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது. இதன் தலைவர் டாக்டர் லட்சுமி. இப்படையில் தமிழ்ப் பெண்கள் பெருமளவில் பங்கேற்றனர். இவர்களில் தலைசிறந்த தலைவர்களாக ஜானகி, இராஜாமணி முதலானோர் விளங்கினர்.

நேதாஜி அமைத்த தற்காலிக அரசில் கேப்டன் லட்சுமி, சிதம்பரம் லோகநாதன் முதலான தமிழர்கள் அமைச்சர்களாக இருந்தார்கள். சிறந்த வீரர்களை உருவாக்க நேதாஜி 45 இளைஞர்களை டோக்கியோ அனுப்பினார். அவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள். அதில் பயிற்சி பெற்றவர்களுள் குறிப்பிடத்தக்கவர் கேப்டன் தாசன் ஆவார். அவர் பின்பு சுதந்திர இந்தியாவில் செசல்ஸ் நாட்டுத் தூதுவராகப் பணியாற்றினார்.

இரண்டாம் உலகப்போர்க் காலம்

இந்திய தேசிய இராணுவம் ஜப்பானிய இராணுவத்தோடு சேர்ந்து, ஆங்கிலேயரோடு போரிடப் பர்மா வழியாக இந்தியா வரத் திட்டமிட்டது.

தமிழ் மக்கள் துணையுடன் போராடிய நேதாஜியைக் கண்டு ஆங்கிலப் பிரதமர் சர்ச்சில் கோபம் கொண்டார். 'மலேயாவில் உள்ள தமிழர்களின் இரத்தம் நேதாஜியின் மூளையில் கட்டியாக உள்ளது' என்று சர்ச்சில் கூறினார். அதற்கு நேதாஜி இந்தத் தமிழினம்தான் ஆங்கிலேயர்களை அழிக்கும் என்று பதில் கூறினார்.

நேதாஜியின் பொன் மொழி

- அநீதிகளுக்கும் தவறான செயல்களுக்கும் மனம் ஒப்ப இடம் தருதல் மிகப் பெரிய குற்றமாகும். நீங்கள் நல்வாழ்வைத் தந்தே ஆக வேண்டும் என்பதுதான் காலத்தால் மறையாத சட்டமாகும். எந்த விலை கொடுத்தாவது சமத்துவத்திற்குப் போராடுவதே மிகச்சிறந்த நற்குணமாகும்.
- மனதை மலரவைக்கும் இளங்கதிரவனின் வைகறைப் பொழுது வேண்டுமா? அப்படியானால் இரவில் இருண்ட நேரங்களில் வாழக் கற்றுக்கொள்.

9th_Tamil_Pages 122-264.indd 184 22-12-2020 15:57:56

தெரிந்து தெளிவோம்

நேதாஜியின் பொன்மொழி

விடுதலையினால் உண்டாகும் மகிழ்ச்சியும் சுதந்திரத்தினால் உண்டாகும் மனநிறைவும் வேண்டுமா? அப்படியானால் அதற்கு விலையுண்டு. அவற்றுக்கான விலை துன்பமும் தியாகமும்தான்.

இரண்டாம் உலகப்போரில் பர்மாவில் நடந்த போர் "மிகவும் கொடூரமானதாகும்". இந்திய தேசிய இராணுவம் 1944ஆம் ஆண்டு மார்ச் 18அன்று ஆங்கிலேயரை வென்று இந்தியாவிற்குள் மணிப்பூர்ப் பகுதியில் 'மொய்ராங்' என்ற இடத்தில் மூவண்ணக் கொடியை ஏற்றியது. ஆனால், அமெரிக்கர்களும், ஆங்கிலேயர்களும் சேர்ந்து போரிட்டதால் இந்த வெற்றி நிலைபெற்று நீடிக்கவில்லை. இப்போரில் ஒரு இலட்சம் இந்தியரும் ஜப்பானியரும் வீரமரணம் எய்தினர்.

மரணம் பெரிதன்று

இந்திய தேசிய இராணுவத்தைச் சேர்ந்த பதினெட்டு இளைஞர்கள், 1943-45ஆம் ஆண்டுகளில் சென்னைச் சிறையில் தூக்கிலிடப்பட்டனர்.

1944ஆம் ஆண்டு பதினெட்டே வயதான இராமு என்பவர் தூக்கிலிடப்பட்டார். அவர் தூக்கிலிடப்படுவதற்கு முதல்நாள் இரவு, "நான் என் உயிரைக் கொடுப்பதற்குக் கொஞ்சமும் கவலைப்படவில்லை; ஏனெனில் நான் கடவுளுக்கு எதிராக ஒன்றும் செய்யவில்லை" என்று கூறினார்.

மரணதண்டனை பெற்ற அப்துல்காதர் பின்வருமாறு கூறினார்.

"வாழ்வின் பொருள் தெரிந்தால்தான் மனிதன் மேல்நிலை அடைவான். நாட்டிற்காக உயிர்நீத்த முழுநிலவினைப் போன்ற தியாகிகள் முன்பு நாங்கள் மெழுகுவர்த்திதான்".

இந்தியாவிற்கு விடுதலை பெற்றுத் தந்ததில் இந்திய தேசிய இராணுவத்தினரின் பங்கினை நாம் மறந்துவிட முடியாது. அவர்கள் தாயக நலனுக்காகத் தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்தனர். இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்ட தமிழர்கள் பலர் வீரமரணத்தைத் தழுவினர். அவர்களின் வீரம் போற்றுதலுக்குரியது. தங்கள் இன்னுயிர் இழந்த முகம் தெரியாத தமிழர்களின் அர்ப்பணிப்பு உணர்வையும் அஞ்சாத வீரத்தையும் நாட்டுப்பற்றையும் என்றும் போற்றுவது நம் கடமையாகும்.

நூல் வெளி

பேராசிரியர் மா.சு.அண்ணாமலை: "இந்திய தேசிய இராணுவம் – தமிழர் பங்கு" என்ற நூலுக்காகத் தமிழக அரசின் பரிசுபெற்றவர். இவர் தலைமையில் எடுக்கப்பட்ட குறும்படங்கள் சர்வதேச அளவில் பரிசுகள் பெற்றன.

கற்பவை கற்றபின்...

1. நீங்கள் நாட்டிற்கு உங்கள் பங்கினை அளிக்க விரும்புகிறீர்களா? - இந்திய இராணுவத்தில் சேருவதற்கான தகுதி, அவர்களுக்கான பணிகள் குறித்த கருத்துகளைத் திரட்டி வகுப்பில் கலந்துரையாடுக.
2. எனக்குப் பிடித்த விடுதலைப் போராட்ட வீரர் என்ற தலைப்பில் அவர்தம் வாழ்க்கை நிகழ்வுகளைக் காலக்கோட்டில் உருவாக்குக.

LK9VU6

9th_Tamil_Pages 122-264.indd 185 22-12-2020 15:57:56

உரைநடை உலகம்

இயல் 5

ஆனந்தரங்கர் நாட்குறிப்பு

293Q3G

நுழையும்முன்

பன்மொழிப் புலமையும் பல்துறை ஆளுமையும் கொண்ட ஆனந்தரங்கர் புதுச்சேரி வரலாற்றினைப் பதிவு செய்தவர்களில் முதன்மையானவர். அவருடைய நாட்குறிப்பு, 18ஆம் நூற்றாண்டின் புதுவை வரலாற்றினை அறிந்துகொள்ள நமக்குக் கிடைத்த அரிய பெட்டகமாகும். புதுச்சேரியில் பிரெஞ்சு ஆட்சியின் எழுச்சியும் வீழ்ச்சியும் அவரின் வாழ்வோடு ஒன்றியிருப்பது ஓர் அரிய நிகழ்வு.

நாட்குறிப்பு என்பது தனிமனிதர் ஒருவரின் அன்றாட நிகழ்வுகளை அல்லது பணிகளைப் பதிவு செய்யும் ஏடாகும். இதனை ஆங்கிலத்தில் 'டைரி' என்று அழைப்பர். டைரியம் என்னும் இலத்தீன் சொல்லின் மூலமான 'டைஸ்' என்ற சொல்லில் இருந்து இச்சொல் உருவாயிற்று.

நாட்குறிப்புகளின் முன்னோடியாகத் திகழ்வது EPHEMERIDES என்று அழைக்கப் பெறும் கிரேக்கக் குறிப்பேடு ஆகும். இச்சொல் ஒரு நாளுக்கான முடிவு என்னும் பொருளைத் தரும். முகலாய மன்னர்களில் பாபர் காலம் முதல் நாட்குறிப்பு எழுதும் வழக்கம் இருந்து வந்துள்ளது. ஔரங்கசீப் ஆட்சிக்காலத்தில் நாட்குறிப்பு எழுதுவது தடை செய்யப்பட்டிருந்தது. 1498இல் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்குக் கடல்வழியைக் கண்டுபிடித்த போர்ச்சுகீசிய மாலுமி வாஸ்கோடகாமா நாட்குறிப்பு எழுதும் பழக்கம் உள்ளவர். அவருடைய நாட்குறிப்புகள் ஆல்வாரோ வெல்லோ என்பவரால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆனந்தரங்கர் 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் குழுமத்தின் மொழிபெயர்ப்பாளராகவும் துய்ப்ளே என்ற பிரெஞ்சு ஆளுநரின் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றியவர். இவருடைய நாட்குறிப்புகள் 25 ஆண்டுகாலத் தென்னிந்திய வரலாற்றை வெளிப்படுத்துவதோடு. அக்காலத்திய பிரெஞ்சு அரசு பற்றி அறிய உதவும் சிறந்த வரலாற்று ஆவணமாகவும் இலக்கியமாகவும் திகழ்கின்றன.

ஆனந்தரங்கர்

பிரான்சுவா மர்த்தேனுக்குப் பிறகு கியோம் ஆந்த்ரே எபேர் புதுச்சேரியின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். அவர்தம் தரகராக 'நைனியப்பர்' நியமிக்கப்பட்டார். நைனியப்பரின் மைத்துனர் திருவேங்கடம் என்பவரின் மகன் ஆனந்தரங்கர். இவர் 1709ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 30ஆம் நாள் சென்னையிலுள்ள பெரம்பூரில்

பிறந்தார். தம்முடைய பதினேழு வயதில் தந்தையை இழந்த ஆனந்தரங்கர், பிரெஞ்சு மேலதிகாரி 'அலனுவார்' உதவியால் பரங்கிப்பேட்டை நெசவுச்சாலைக்கும் சாயம் தோய்க்கும் கிடங்குக்கும் தலைவராக நியமிக்கப்பட்டார்.

உழைப்பும் உண்மையும் உறுதியும் மிக்க ஆனந்தரங்கர் பிரெஞ்சு ஆளுநர் 'துய்ப்ளே' காலத்தில் தலைமை மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார். வல்லாண்மை மிக்க பிரெஞ்சு ஆட்சியரின் நம்பிக்கைக்கு உரியவராக, மிகுந்த அரசியல் செல்வாக்குடன் திகழ்ந்தார்.

ஆனந்தரங்கர், தம்முடைய நாட்குறிப்பில் ஒவ்வொரு நாள் நிகழ்வுக்கும் ஆண்டு, திங்கள், நாள், கிழமை, அந்த நாளின் நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிட்டே செய்திகளை எழுதியுள்ளார்.

நாட்குறிப்பு வெளிப்படுத்தும் அரசியல் செய்திகள்

ஆனந்தரங்கர் நாட்குறிப்பு அக்கால கட்டங்களில் புதுவையிலும், தமிழகத்திலும், தென்னிந்தியாவிலும் நிகழ்ந்த பல்வேறு அரசியல் நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளது.



ஆனந்தரங்கரின் கையெழுத்து

*10.09.1736*ஆம் நாள் குறிப்பு பிரெஞ்சு ஆளுநர் டூமாஸ் நாணய அச்சடிப்பு உரிமையைப் பெற்றதை விளக்குகிறது. இந்த உரிமையைப் பெறுவதற்காக ஆளுநர் செலவழித்த பெருந்தொகையையும் ஆனந்தரங்கர் குறிப்பிட்டுள்ளார்.

பிரெஞ்சுக் கப்பல் தளபதி லெபூர்தொனே ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் இருந்த சென்னையை, *1746*இல் கைப்பற்றியதையும் அதனால் சினமுற்ற ஆற்காடு நவாபு அன்வர்தீன்கானின் மூத்த மகன் மகபூஸ்கான் பிரெஞ்சு அரசை எதிர்த்துப் போரிட்டதையும் நேரில் கண்டு உரைப்பதுபோல் நாட்குறிப்பில் கூறியுள்ளார்.

தேவனாம்பட்டணத்தைக் கைப்பற்றுவதற்காக ஆங்கிலேயருடன் பிரெஞ்சு அரசு நடத்திய படையெடுப்பு, புகழ் பெற்ற ஆம்பூர் போர் பற்றிய செய்திகள், தஞ்சைக் கோட்டை மீது நடத்திய முற்றுகை, இராபர்ட் கிளைவின் படையெடுப்பு, ஆங்கிலேயர் புதுச்சேரியை முற்றுகை இட்டது முதலியவற்றையெல்லாம் வரலாற்று ஆசிரியர் போன்று நாட்குறிப்பில் விளக்கிக் கூறியுள்ளார்.

*1758*ஆம் ஆண்டு இறுதியில் சென்னைக் கோட்டை முற்றுகையை லல்லி என்பார் தொடங்கினார். கோட்டையை இடித்தும் வீடுகளைத் தரை மட்டமாக்கியும், மதிலை இடித்து அகழியைத் தூர்த்தும் கூடக் கோட்டையை லல்லியால் கைப்பற்ற

தெரியுமா?

உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் சாமுவேல் பெப்பிசு ஆவார். ஆங்கிலேயக் கடற்படையில் பணியாற்றிய அவர் 'இரண்டாம் சார்லஸ்' மன்னர் காலத்து நிகழ்வுகளை (1660 – 1669) நாட்குறிப்பாகப் பதிவு செய்துள்ளார். இவரைப் போலவே ஆனந்தரங்கரும் 06.09.1736 முதல் 11.01.1761வரை நாட்குறிப்பு எழுதியுள்ளார். இந்நாட்குறிப்பு இந்தியாவின் முதன்மையான நாட்குறிப்பாகும். இதனால், ஆனந்தரங்கர் இந்தியாவின் பெப்பிசு என்று அழைக்கப்படுகிறார்.

முடியவில்லை. அக்கோட்டையின் கவர்னர் 'மேஸ்தர் பிகட்' மகத்தான வெற்றி பெற்றார்.

நாட்குறிப்பு வெளிப்படுத்தும் சமுதாயச் செய்திகள்

இவரின் நாட்குறிப்பு 18ஆம் நூற்றாண்டின் தமிழ்ச்சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. பண்பாடு, சமயம், சாதி, நீதி, வணிகம், நம்பிக்கைகள் முதலான பல்வேறு கூறுகள் அடங்கிய நிகழ்வுகளை ஆனந்தரங்கர் பதிவு செய்துள்ளார்.

'11.06.1739ஆம் நாள் புதுச்சேரியின் ஆளுநர் 'துய்மா' பிறப்பித்த ஆணையில், புதுச்சேரிப் பட்டணத்திற்குள்ளேயும், சம்பாக் கோவிலுக்குத் தெற்காகப் போகிற உப்பங்கழிப் பகுதியிலும் பட்டணத்தின் வீதிகள் எவ்விடத்திலும் காலைக்கடன் கழிப்பவர்களுக்கு ஆறு பணம் தண்டம் விதிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மீறியவர்களிடமிருந்து பெறப்பட்ட தண்டத்தொகையில் இரண்டு பணம் பிடித்துக் கொடுப்பவருக்கும், மீதி நான்கு பணம் சாவடிக்கும் உரியது என்று அறிவிக்கப்பட்டது. இது தெரியாமல் பலரும் தண்டம் கட்டியதாக' ஆனந்தரங்கர் நாட்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

நீதி வழங்குதல், தண்டனை அளித்தல் முதலிய செய்திகளையும் இவருடைய நாட்குறிப்பு, பதிவு செய்துள்ளது. பல்வேறு காரணங்களுக்காக மரணதண்டனை வழங்கல், காதறுத்தல், சாட்டையடி, கிடங்கில் போடுதல் முதலிய தண்டனைகள் அக்காலத்தில் வழங்கப்பட்டுள்ளன.

ஆனந்தரங்கர் நாட்குறிப்புக் குறித்து உ. வே. சா.

தமிழ்த்தாய் நெருப்பினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டாலும் அவளது ஆபரணங்கள் தொலைவில் உள்ள நகரமான பாரீசில் மிகவும் பாதுகாக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன.

அந்தக் காலத்தில் நடந்த செய்திகளையெல்லாம் முக்கியமானது, முக்கியமில்லாதது என்று கூடக் கவனிக்காமல், ஒன்று தவறாமல் சித்திரகுப்தன் எழுதி வரும் பதிவைப் போல நல்ல பாஷையில் அன்றாடம் விஸ்தாரமாக எழுதி வைத்திருக்கிறார், ஆனந்தரங்கர் .

– வ.வே.சு.

தொடர்ந்து வீடுகளில் திருடி வரும் கும்பல் ஒன்று பிடிபட்டபோது, அவர்களுள் தலைமைத் திருடனைக் கடைத்தெருவில் தூக்கில் தொங்கவிட்டனர். ஏனைய இருவருக்கும் இரண்டு காதுகளை அறுத்து, ஐம்பது கசையடிகளும் தரப்பட்டன.

ஆனந்தரங்கர் நாட்குறிப்பின் பெரும்பகுதி வணிகச் செய்திகளையே விவரித்துள்ளது. கணக்கு வரவுசெலவுப் பட்டியல் என அச்செய்திகள் நீண்டுள்ளன. ஆனந்தரங்கரும் பிறரும் வணிகத்திற்கு முதன்மை அளித்துள்ளதை உணரமுடிகிறது. பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கழகம் வணிகர் பலரைப் பங்குதாரராகக் கொண்ட கூட்டு நிறுவனம் ஆகும். தமது மூலதனத்திற்கு ஏற்ப ஒவ்வோராண்டும் எத்தனை கப்பல்களைக் கீழை நாடுகளுக்கு அனுப்புவது என்பது முன்பே திட்டமிடப்பட்டது. புதுச்சேரியில் இருந்து மணிலாவுக்குச் சென்ற கப்பலில் அழகப்பன் என்ற தமிழ் மாலுமி பணியாற்றியதையும் அவர் பதிவு செய்துள்ளார்.

ஐரோப்பாவிலிருந்து இந்தியாவை அடைய, கப்பல்களுக்கு ஆறு திங்கள் தேவைப்பட்டன. 11.11.1737 அன்று பிரான்சிலிருந்து புறப்பட்ட கப்பல் 08.05.1738 அன்று புதுச்சேரியை அடைந்துள்ளது. கப்பல் வந்தவுடன் பீரங்கி முழங்குதல் வழக்கத்தில் இருந்துள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் துணிகளுக்காக வர்த்தகரிடமும் தரகரிடமும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. சிலர், கழகத்தின்

வர்த்தகர் என்ற அங்கீகாரத்தைப் பெற்றிருந்தனர். துணிகள், வர்த்தகருக்கு விற்கப்பட்டபோது உரிய இரசீதுகள் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. 100க்கு 320 என்ற விகிதத்தில் அவர்கள் ஆறு திங்களுக்குள் கழகத்திற்குப் பணத்தைச் செலுத்திவிடுவதாகவும் கையெழுத்திட்டுக் கொடுத்தனர். வணிகக் கழகத்தின் அதிகாரியான கொர்னே இவற்றைப் பெற்றுப் பாதுகாத்துள்ளார்.

புதுச்சேரியில் நாணயம் அச்சிடும் உரிமையை நிஜாமிடமிருந்து பிரெஞ்சு வணிகக் கழகம் பெற்றது. இதற்கான ஆணையை 10.09.1736 அன்று கனகராயர் பல்லக்கில் வைத்து ஊருக்குள் கொண்டு வந்தார். 21 பீரங்கிகள் முழங்கின. எட்டு மாற்றுக்குக் குறைவான வராக நாணயங்களை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றம் என்று பிரெஞ்சு மன்னரின் ஆணையின் பேரில் 1739ஆம் ஆண்டு மே திங்களில் அறிவிக்கப்பட்டது. பல்வேறுவிதமான வராகன்களை ஆனந்தரங்கர் குறிப்பிட்டுள்ளார். அவை புதுச்சேரிப் பிறை வராகன், சென்னைப் பட்டணத்து நட்சத்திர வராகன், வட்ட வராகன், பரங்கிப் பேட்டை வராகன், ஆரணி வராகன் முதலியன.

ஆனந்தரங்கர் காலத்தில் வழக்கில் இருந்த நாணயங்கள்

480 காசு	–	ஒரு ரூபாய்
60 காசு	–	1 பணம்
8 பணம்	–	1 ரூபாய்
24 பணம்	–	ஒரு வராகன்
1 பொன்	–	1/2 வராகன்
1 வராகன்	–	3 அல்லது 3.2 ரூபாய்
1 மோகரி	–	14 ரூபாய் மதிப்புள்ள தங்க நாணயம்
1 சக்கரம்	–	1/2 வராகனுக்கும் கூடுதல் மதிப்புள்ள தங்க நாணயம்.

ஆனந்தரங்கரின் பதிவுகள்

1745ஆம் ஆண்டு 21ஆம் நாள் வியாழக்கிழமை மாலைப் பொழுதிலே வீசிய பெருங்காற்று புதுச்சேரியைச் சூறையாடியதனை,

"அஸ்தமித்த உடனே துவங்கிப் பெருங்காற்று அடித்தது. ஊரிலே உண்டான மரங்களெல்லாம் படுகாடாய் விழுந்து போனதும், வீடுகள் வெள்ளத்தில் முழுகிப்போய், அந்த வெள்ளத்திலே வீடுகளை அடித்துக்கொண்டு போனதும், மாடுகள், கன்றுகள், மனுஷர் செத்ததும் தெருவுக்குத்தெரு பிணநாற்றமாய் இருந்தது!" என்று மனம் நொந்து எழுதியுள்ளார்.

இப்பேரிடர் புதுச்சேரியில் நிகழ்ந்தபோது மக்கள் எல்லோரும் உணவும் நீரும் இன்றி வாடினர். அப்போது ஒழுகரையிலே கனகராயர், பெருஞ்சோறு அளித்துத் தமிழரின் இரக்கத்தையும் ஈரத்தையும் வெளிப்படுத்தியதை ஆனந்தரங்கர் பெருமிதத்துடன் பதிவு செய்துள்ளார்.

இங்கிலாந்திற்கும், பிரான்சுக்கும் இடையே போர் மூண்டதால் கப்பல் வணிகம் பெரிதும் தடைபட்டது. புதுச்சேரிக்குக் கப்பல்களின் வருகை 1745ஆம் ஆண்டில் தடைபட்டுப் பெரும் பொருளாதாரத் தட்டுப்பாடு தோன்றியது. புதுச்சேரி வணிகம் முழுவதும் வீழ்ந்தது. மக்கள் எல்லோரும் கப்பல் வருகையையே எதிர்பார்க்கத் தொடங்கினர். ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்கக்கூடப் பணம் இல்லாமல் ஆளுநர் துன்பப்பட்டார். இந்நிலையில் 08.06.1746ஆம் நாள் லெபூர்தொனேவின் ஒன்பது கப்பல்கள் புதுவைக்கு வந்தன. இது பற்றி ஆனந்தரங்கர், "கப்பல்கள் வருகின்ற செய்தியைக் கேட்டதும் நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற்போலவும், மரணமுற்ற உறவினர்கள் உயிர்பெற்று எழுந்து வந்தது போலவும், நீண்டநாள் தவமிருந்து புத்திரப் பாக்கியம் கிட்டினாற்போலவும், தேவாமிர்தத்தைச் சுவைத்தது போலவும்

மக்கள் சந்தோஷித்தார்கள்; அதைக் காகிதத்தில் எழுத முடியாது" என்று நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார்.

ஆனந்தரங்கரின் இறுதிக்கால நாட்குறிப்புகள்

அவருடைய இறுதிக்கால நாட்குறிப்புகள் ஆங்கிலேயர் புதுச்சேரி மீது நிகழ்த்திய முற்றுகையையும் புதுச்சேரியின் வீழ்ச்சியையும் மிக விரிவாகப் பேசியுள்ளன. 1760 பிப்ரவரியில் புதுச்சேரியைத் தாக்க ஆங்கிலேயக் கப்பல்கள் வந்துகொண்டிருந்ததாகவும் செஞ்சியைச் சுற்றியுள்ள பகுதிகளை வென்று ஆங்கிலத் தளபதி, புதுச்சேரியை நெருங்கிவிட்டதாகவும் தகவல் வந்துள்ளது. ஆங்கிலேயப் படைகள் சாரம் வரை வந்துவிட்டதைப் பொதுமக்கள் வேடிக்கை பார்த்தனர். குண்டு சாலையை ஆங்கிலேயர் பிடித்ததும் புதுச்சேரி நகரில் பீதி நிலவியது. தேவனாம்பட்டணத்தில் மேலும் மேலும் துருப்புகளை ஆங்கிலேயக் கப்பல்கள் இறக்கின. புதுச்சேரியைச் சுற்றியுள்ள பகுதிகள் அனைத்தையும் ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர்.

புதுச்சேரியின் இவ்வாறான சூழ்நிலையில் ஏற்கெனவே நோய்வாய்ப்பட்டு இருந்த ஆனந்தரங்கரின் உடல்நிலை மிகவும் மோசமடைந்தது. 12.01.1761 திங்கள் கிழமை ஐந்து நாழிகைக்குப் பட்டணத்தின் மீது பீரங்கிக் குண்டுகள் விழுந்துகொண்டிருந்த வேளையில் ஆனந்தரங்கர் மறைந்தார்.

1736ஆம் ஆண்டு செப்டம்பர் 6ஆம் நாள் தொடங்கி ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகாலத் தென்னிந்திய வரலாற்றைப் பதிவுசெய்த ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 1761ஆம் ஆண்டு ஜனவரி 11ஆம் நாளோடு முடிவடைந்துள்ளது. புதுச்சேரியின் முற்றுகை பற்றிய முடிவினைக் கூறாமலேயே நாட்குறிப்பும் முடிந்துள்ளது. ஆனந்தரங்கர் நாட்குறிப்பு 12 தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இது வெளிப்படுத்தும் விரிவான செய்திகளை, வரலாற்றறிஞர் தம் குறிப்புரைகளின் துணையோடு கண்டறிய முடியும்.

புதுச்சேரியின் ஆளுநராக லெறி இருந்த காலத்தில், புதுச்சேரியின் இராணுவ அரசியல் செய்திகளை முகலாயருக்கும், ஆங்கிலேயருக்கும் கூறுவதாக ஆனந்தரங்கர் மீது பழி சுமத்தப்பட்டது.

அப்போது ஆளுநரிடம், ஆனந்தரங்கர், "இப்பட்டணத்தில் உம்முடைய அதிகாரம்தான் இறுதியானது. அநீதியாகவும் உண்மைக்கு மாறாகவும் நடக்க நீர் விரும்பினால் உம்மைத் தடுக்கும் அதிகாரம் ஒருவருக்கும் இல்லை. ஆகவே, என்னைக் காவலில் போட விரும்பினால் உடனே செய்யலாம். பிற தண்டனையும் வழங்கலாம். இரண்டு சல்லிகூட நான் செலுத்த மாட்டேன். சிறையில் அடைத்துவிடுவீர் எனப் பயந்து ஒரு வாரத்தில் பணம் தருவேன் என்று நீர் கருத வேண்டாம்.

(தொகுதி 11 பக். 81–84)

ஆனந்தரங்கர் பற்றிய நூல்கள் சில

1. ஆனந்தரங்கன் கோவை – தியாகராய தேசிகர்
2. ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ் – புலவரேறு அரிமதி தென்னகன்
3. வானம் வசப்படும் – பிரபஞ்சன்

கற்பவை கற்றபின்...

1. உங்களது ஒரு வாரத்திய நிகழ்வுகளை நாட்குறிப்பில் பதிவு செய்க.
2. ஆனந்தரங்கர் நாட்குறிப்பு விவரிக்கும் நிகழ்வுகளைக் காலக்கோட்டில் அமைத்துக் காட்டுக.

XI Std Tamil Chap_117-148.indd 122 1/10/2020 4:35:52 PM

இயல் ஏழு

தமிழ்நாட்டில் காந்தி

நுழையும்முன்

காந்தியடிகள் இந்திய விடுதலைக்குப் பாடுபட்டவர் என்பதை நாடு நன்கு அறியும். பெண்கள் முன்னேற்றம், சமுதாய மறுமலர்ச்சி, தீண்டாமை ஒழிப்பு முதலியவற்றுக்காகவும் அவர் பாடுபட்டார். எளிமையை ஓர் அறமாகப் போற்றினார். இந்தியாவில் அவர் காலடி படாத இடமே இல்லை. தமிழ்நாட்டின் மீதும் தமிழ்மொழியின் மீதும் காந்தியடிகள் கொண்ட பற்றினைக் காண்போம் வாருங்கள்.

மதுரையில் உள்ள காந்தி அருங்காட்சியகம்

காந்தியடிகளுக்குத் தமிழ்நாட்டின் மீதும் தமிழ் மக்கள் மீதும் மிகுந்த அன்பு உண்டு. அவர் பலமுறை தமிழ்நாட்டில் பயணம் செய்துள்ளார். அப்போது சுவையான பல நிகழ்வுகள் நடந்துள்ளன. அவற்றில் சிலவற்றைக் காணலாம்.

1919 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் காந்தியடிகள் சென்னைக்கு வந்தார். அப்போது ஆங்கில அரசு ரௌலட் சட்டம் என்னும் கடுமையான சட்டத்தை நடைமுறைப்படுத்தி இருந்தது. அதனை எதிர்த்துப் பெரிய போராட்டத்தை நடத்தக் காந்தியடிகள் திட்டமிட்டார். அதைப் பற்றிய கருத்தாய்வுக் கூட்டம் இராஜாஜியின் வீட்டில் நடைபெற்றது. காந்தியடிகள், அங்கு ஒரு மெத்தையில் அமர்ந்து இருந்தார். அவருக்கு அருகில் இராஜாஜியும் மற்ற தலைவர்களும் நின்றுகொண்டு இருந்தனர்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 151 20-03-2020 17:42:45

அப்போது அங்கு வந்த பாரதியார் விரைந்து சென்று காந்தியடிகளின் அருகில் அமர்ந்தார். "திரு. காந்தி அவர்களே! நான் இன்று மாலை ஒரு பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளேன். அதற்குத் தாங்கள் தலைமைதாங்க முடியுமா?" என்று கேட்டார். "இன்று எனக்கு வேறு பணி இருக்கிறது. உங்கள் பொதுக்கூட்டத்தை நாளை நடத்த முடியுமா?" என்று கேட்டார் காந்தியடிகள். "அது முடியாது. திட்டமிட்டபடி கூட்டம் நடக்கும். தாங்கள் தொடங்கப்போகும் இயக்கத்துக்கு என் வாழ்த்துகள்" என்று கூறிய பாரதியார் "நான் போய் வருகிறேன்" என்று கூறி எழுந்து சென்றுவிட்டார்.

அவர் சென்றதும் "இவர் யார்?" என்று காந்தி வியப்புடன் கேட்டார். "இவர் எங்கள் தமிழ்நாட்டுக் கவிஞர்" என்றார் இராஜாஜி. "அப்படியா! இவரைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும்" என்றார் காந்தியடிகள். இந்நிகழ்ச்சியின் மூலம் பாரதியார் பற்றிய காந்தியடிகளின் மதிப்பீட்டை அறியலாம்.



1921 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் காந்தியடிகள் தமிழ்நாட்டிற்கு வந்தார். அப்போது புகைவண்டியில் மதுரைக்குச் சென்றார். செல்லும் வழியில் பெரும்பாலான மக்கள் இடுப்பில் ஒரு துண்டு மட்டுமே அணிந்து இருப்பதைக் கண்டார். அப்போது காந்தியடிகள் நீளமான வேட்டி, மேல்சட்டை, பெரிய தலைப்பாகை அணிவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

பெரும்பாலான இந்தியர்கள் போதிய உடைகள் இல்லாமல் இருக்கிறார்கள். தான் மட்டும் இவ்வளவு துணிகளை அணிவதா? என்று சிந்தித்தார். அன்றுமுதல் வேட்டியும் துண்டும் மட்டுமே அணியத் தொடங்கினார். அவரது தோற்றத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்திய பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு. அந்தக் கோலத்திலேயே தம் வாழ்நாள் முழுவதும் இருந்தார். உலகம் போற்றிய எளிமைத் திருக்கோலம் இதுவாகும்.

காந்தியடிகள் ஒருமுறை காரைக்குடியைச் சுற்றியுள்ள ஊர்களில் சுற்றுப்பயணம் செய்தார். அப்போது கானாடுகாத்தான் என்னும் ஊரில் அன்பர் ஒருவர் வீட்டில் தங்கி இருந்தார். அந்த வீடு மிகவும் ஆடம்பரமாக இருந்தது. வீட்டில் எங்குப் பார்த்தாலும் வெளிநாட்டு அலங்காரப் பொருள்கள் நிறைந்து இருந்தன. காந்தியடிகள் அந்த அன்பரிடம், "உங்கள் வீட்டை வெளிநாட்டுப் பொருள்களால் அழகு செய்து இருக்கிறீர்கள். அதற்குச் செலவு செய்த பணத்தில் பத்தில் ஒரு பங்கு பணத்தை என்னிடம் கொடுத்தால்

6th Std Tamil CBSE Pages 77-206.indd 152 20-03-2020 17:42:46

போதும். இதைவிட அழகாகச் செய்துவிடுவேன்" என்று கூறினார். அதனைக் கேட்டு, அன்பர் தலைகுனிந்தார். அந்த வீட்டுக்குக் காந்தியடிகள் மறுமுறை வந்தபோது அங்கே வெளிநாட்டுப் பொருள்கள் ஒன்றுகூட இல்லை. காந்தியடிகள் மகிழ்வுடன் அவரைப் பாராட்டினார்.

காந்தியடிகள் ஒருமுறை மதுரையில் தங்கி இருந்தார். மீனாட்சி அம்மன் கோவிலுக்குச் சென்று வரலாம் என்று தலைவர்கள் அவரை அழைத்தனர். "அந்தக் கோவிலுக்குள் செல்ல எல்லா மக்களுக்கும் அனுமதி உண்டா?" என்று காந்தியடிகள் கேட்டார். அங்கு இருந்தவர்கள் "இல்லை" என்றனர். "அப்படியானால் அங்கே வரமாட்டேன்" என்று கூறிவிட்டார். பல ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக் கோவிலுக்குள் செல்ல அனைவருக்கும் உரிமை உண்டு என்று அறிவிக்கப்பட்டது. அதன் பிறகு மதுரைக்கு வந்த போதுதான் காந்தியடிகள் மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் சென்றார்.

இதே போன்ற நிகழ்ச்சி குற்றாலத்திலும் நடைபெற்றது. குற்றால அருவியில் நீராட அனைவருக்கும் உரிமை அளிக்கப்பட்டு இருந்தது. ஆனால், அருவிக்குச் செல்லும் வழியில் ஒரு கோவில் இருந்தது. அதன் வழியாகச் செல்ல ஒருசாராருக்குத் தடை இருந்தது. எனவே அனைவரும் அருவியில் நீராட முடியாத நிலை இருந்தது. அதனை அறிந்த காந்தியடிகள் குற்றால அருவியில் நீராட மறுத்துவிட்டார். மனிதர்களிடம் உயர்வு தாழ்வு பாராட்டக் கூடாது என்பதில் காந்தியடிகள் உறுதியாக இருந்ததை இதன்மூலம் அறிய முடிகிறது.



காந்தியடிகளின் தமிழ்க் கையெழுத்து

காந்தியடிகள் தமக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பைப் பற்றிப் பலமுறை கூறியுள்ளார். தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த காலத்தில் தமிழ்மொழியைக் கற்கத் தொடங்கியதாகக் கூறியுள்ளார். ஜி.யு.போப் எழுதிய தமிழ்க்கையேடு தம்மைக் கவர்ந்ததாகவும் குறிப்பிட்டு உள்ளார். திருக்குறள் அவரைப் பெரிதும் கவர்ந்த நூலாகும்.

1937 ஆம் ஆண்டு சென்னையில் இலக்கிய மாநாடு ஒன்று நடைபெற்றது. அம்மாநாட்டுக்குக் காந்தியடிகள் தலைமை வகித்தார். உ.வே.சாமிநாதர் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்தார். உ.வே.சாமிநாதரின் உரையைக் கேட்ட காந்தியடிகள் மகிழ்ந்தார். "இந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது" என்று கூறினார் காந்தியடிகள்.

இந்நிகழ்வுகள் மூலம் ஏற்றத்தாழ்வு அற்ற சமுதாயம் மலர வேண்டும் என்னும் காந்தியடிகளின் உள்ள உறுதியை அறிந்து கொள்ளலாம். மேலும் அவர் தமிழ் மொழியின் மீது கொண்ட பற்றையும் அறிந்து கொள்ள முடிகிறது.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 153 20-03-2020 17:42:46

கற்பவை கற்றபின்

1. காந்தியடிகளின் பொன்மொழிகளைத் திரட்டுக.
2. காந்தியடிகள் நடத்திய அறவழிப் போராட்டங்களின் பெயர்களைத் தொகுக்க.

மதிப்பீடு

L589PJ

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. காந்தியடிகளிடம் உடைஅணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர் _____

அ) கோவை ஆ) மதுரை இ) தஞ்சாவூர் ஈ) சிதம்பரம்

2. காந்தியடிகள் _____ அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்று விரும்பினார்.

அ) நாமக்கல் கவிஞர் ஆ) பாரதிதாசன் இ) உ.வே.சாமிநாதர் ஈ) பாரதியார்

பொருத்துக

1. இலக்கிய மாநாடு – பாரதியார்
2. தமிழ்நாட்டுக் கவிஞர் – சென்னை
3. குற்றாலம் – ஜி.யு.போப்
4. தமிழ்க் கையேடு – அருவி

சொற்றொடரில் அமைத்து எழுதுக

1. ஆலோசனை 2. பாதுகாக்க 3. மாற்றம் 4. ஆடம்பரம்

குறுவினா

1. காந்தியடிகள் மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குள் முதலில் ஏன் நுழையவில்லை?
2. காந்தியடிகளுக்குத் தமிழ் கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்திய நிகழ்வைக் கூறுக.

சிறுவினா

1. காந்தியடிகளின் உடை மாற்றத்திற்குக் காரணமாக அமைந்த நிகழ்வினை எழுதுக.
2. காந்தியடிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை எழுதுக.

சிந்தனை வினா

காந்தியடிகளிடம் காணப்படும் உயர்ந்த பண்புகளாக நீங்கள் கருதுபவை யாவை?

6th Std Tamil CBSE Pages 77-206.indd 154 20-03-2020 17:42:46

இயல் ஐந்து

நாட்டுப்புறக் கைவினைக் கலைகள்

EYIQ5D

கண்ணுக்கும் கருத்துக்கும் மகிழ்ச்சியளித்து நற்பண்புகளை வளர்ப்பது கலைகளின் இயல்பாகும். மேலும் அவை தொன்மையான பண்பாட்டுக்கூறுகளையும் எடுத்துக்காட்டுகின்றன. அன்றாடப் பயன்பாட்டுக்காக அழகிய பொருள்களைத் தொழில்முறையில் உருவாக்கும் கலையைக் கைவினைக்கலை எனலாம். அக்கலையைப் பற்றி அறிவோம்.

(கல்லூரி மாணவி மலர்விழி, அவளுடைய தம்பி அமுதன், நண்பர்கள் சையது, சாலமன் ஆகியோர் கைவினைப் பொருள்கள் கண்காட்சி அரங்குக்குள் நுழைகின்றனர்.)

அமுதன் : அடேயப்பா! எத்தனை அரங்குகள். எவ்வளவு அழகான பொருள்கள்...

சையது : எல்லாவற்றையும் ஓடி ஓடிப் பார்க்கவேண்டும் என்று தோன்றுகிறது.

மலர்விழி: அவசரம் வேண்டாம். ஒவ்வொன்றாகப் பார்க்கலாம். இதோ இந்த மண்பாண்ட அரங்கை முதலில் பார்ப்போம்.

பொறுப்பாளர்: உலகின் பழமையான கலைகளுள் ஒன்றாகிய மண்பாண்டக்கலை அரங்கு உங்களை வரவேற்கிறது.

சாலமன் : என்ன? உலகின் பழமையான கலைகளுள் ஒன்றா?

பொறுப்பாளர்: ஆமாம். மிகவும் பழமையான கைவினைக்கலைகளுள் ஒன்று மண்பாண்டக் கலை. சிந்துசமவெளி அகழாய்வில் பானைஓடுகள் கிடைத்துள்ளன என்பதைப் படித்திருப்பீர்களே. தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூரில் முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன. நாகை மாவட்டம் செம்பியன் கண்டியூரில் கலையழகு மிகுந்த மண்கலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் ஏராளமான சுடுமண் பொருள்கள் கிடைத்துள்ளன. இவை எல்லாம் தமிழருக்கும் மண்பாண்டக்கலைக்கும் உள்ள தொடர்பைக் காட்டும் சான்றுகள் ஆகும்.

சையது: ஐயா, மண்பாண்டம் என்றால் பானை, சட்டி ஆகியவைதானே?

பொறுப்பாளர்: இங்கே பாருங்கள். குடம், தோண்டி, கலயம், கடம், மூடி, உழக்கு, அகல், உண்டியல், அடுப்பு, தொட்டி என்று எத்தனை பொருள்கள் இருக்கின்றன பார்த்தீர்களா? இவைகளெல்லாம் சுத்தமான களிமண்ணால் செய்யப்பட்டவை. குளங்கள், ஆற்றங்கரைகள், வயல்வெளிகள் ஆகிய இடங்களில் இத்தகைய களிமண் கிடைக்கும்.

மலர்விழி: நல்ல களிமண் கிடைத்தால் உடனே பாண்டங்கள் செய்யத் தொடங்கிவிடலாம் அல்லவா?

பொறுப்பாளர்: அப்படி உடனே செய்துவிட முடியாது. பள்ளம் தோண்டி அதில் களிமண்ணை நிரப்பவேண்டும். அதில் தண்ணீர் ஊற்றி ஒரு நாள் முழுவதும் ஊறவைக்க வேண்டும். பின்பு அதனுடன் குறிப்பிட்ட அளவில் மெல்லிய மணல், சாம்பல் ஆகியவற்றைக் கலந்து பக்குவப்படுத்த வேண்டும். இதுதான் பானை செய்யும் சக்கரம். இதனை நாங்கள் திருவை என்போம். திருவையை வேகமாகச் சுழலச்செய்து அதன் நடுவில் மண்ணை வைத்துக் கையால் அணைத்துப் பிடித்து மண்பாண்டங்களை உருவாக்குவோம். உரிய வடிவம் வந்ததும் அடிப்பகுதியில் நூல் அல்லது ஊசியால் அறுத்து எடுத்துக் காயவைப்போம்.

(அங்கிருக்கும் உதவியாளர் சக்கரத்தைப் பயன்படுத்தி மண்பானை செய்து காட்டுகிறார்.)

பொறுப்பாளர்: பானை செய்தலைப் பானை வனைதல் என்று சொல்வது மரபு. வனையப்பட்ட பானைகள் ஓரளவு காய்ந்ததும் தட்டுப்பலகையைக் கொண்டு தட்டிப் பானையின் அடிப்பகுதியில் இருக்கும் ஓட்டையை மூடிப் பானையை முழுமையாக்குவோம். பிறகு உருட்டுக்கல் கொண்டு தேய்த்துப் பானைகளை மெருகேற்றுவோம்.

அமுதன் : எங்கள் ஊரில் பாட்டி மண்பாண்டங்களில்தான் சமையல் செய்வார்.

பொறுப்பாளர்: மண்பாண்டங்களில் சமைத்தால் உணவு நல்ல சுவையுடன் இருக்கும். மேலும் உடல்நலத்திற்கும் நல்லது. மண்பானையில் வைத்த தண்ணீர் குளிர்ச்சியாக இருக்கும். இப்போது மண்பாண்டங்களின் பயன்பாடு குறைந்து வருகிறது. ஆனால் இன்னும் திருவிழாக்களிலும், சமயச் சடங்குகளிலும் மண்பானைகளே பயன்பட்டு வருவது சற்று ஆறுதல் அளிக்கிறது. இந்த மண்பாண்டக் கலையின் இன்னொரு வளர்ச்சிநிலைதான் சுடுமண் சிற்பக்கலை.

மலர்விழி : டெரகோட்டா என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே, அதுதானே?

பொறுப்பாளர்: ஆம். அதுவேதான். இந்த அரங்கின் அடுத்த பகுதிக்கு வாருங்கள். அவற்றைப் பார்க்கலாம்.

(அடுத்த பகுதிக்குச் செல்கின்றனர். அங்கு அழகான சுடுமண் சிற்பங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.)

சாலமன் : அடடா! எவ்வளவு சிற்பங்கள்!

அமுதன்: இங்கு மனித உருவங்கள் மட்டுமல்லாமல் விலங்குகள், பறவைகள், பொம்மைகள், அலங்கார வடிவங்கள் எனப் பலவகையான சிற்பங்களும் உள்ளனவே!

பொறுப்பாளர்: ஆமாம். மண்பாண்டங்களைப் போன்றே களிமண்ணால் செய்யப்பட்டுச் சூளையில் சுட்டு எடுக்கப்படுபவை சுடுமண் சிற்பங்கள் ஆகும். தமிழர்கள் பழங்காலத்தில் இருந்தே சுடுமண் சிற்பக்கலையிலும் சிறந்து விளங்கியுள்ளனர். சுடுமண் சிற்பங்களுக்கு

வண்ணங்கள் பூசுவதும் தொன்றுதொட்டு இருந்துவரும் வழக்கமாகும். பெரிய மாளிகைகளிலும் கலையரங்குகளிலும் இவைபோன்ற சுடுமண் சிற்பங்களை அழகுக்காக வைத்திருப்பார்கள். முன்பெல்லாம் சிற்றூர்களில் உள்ள கோயில்களில் மட்டுமே இவற்றைக் காண முடியும். இப்போது கலைப்பொருளாக அழகுக்காகப் பல இடங்களிலும் பயன்படுத்துகின்றனர்.

அமுதன்: எங்கள் ஊர்க் கோயிலில் இவைபோன்ற ஏராளமான குதிரைச் சிற்பங்கள் உள்ளன. எதற்காக அத்தனை சிற்பங்கள் உள்ளன?

பொறுப்பாளர்: மக்கள் தங்கள் வேண்டுதல் நிறைவேறினால் குதிரைச் சிற்பம் செய்து வைப்பதாக வேண்டிக்கொள்வது உண்டு. அப்படி வேண்டிக்கொண்டவர்கள் வைத்தவையாக இருக்கும்.

மலர்விழி: மண்ணால் உருவாகும் அழகிய கலைகளைப் பற்றிச் சிறப்பாகச் சொன்னீர்கள். மிக்க நன்றி ஐயா. நாங்கள் பிற கைவினைக்கலை அரங்குகளையும் பார்த்துவிட்டு வருகிறோம்.

(அவர்கள் அடுத்துள்ள மூங்கில்கலை அரங்கிற்குச் செல்கின்றனர். அவ்வரங்கின் பொறுப்பாளர் அவர்களை வரவேற்கிறார்.)

மலர்விழி: மூங்கிலால் கூடைகளும் ஏணிகளும் மட்டும்தான் செய்வார்கள் என நினைத்திருந்தேன். என் எண்ணம் தவறு என்று இங்கு வந்தபிறகுதான் புரிகிறது.

பொறுப்பாளர்: உண்மைதான். மூங்கிலைக் கொண்டு பலவகையான கைவினைப் பொருள்கள் செய்யப்படுகின்றன. இதோ பாருங்கள். மட்டக்கூடை, தட்டுக்கூடை, கொட்டுக்கூடை, முறம், ஏணி, சதுரத்தட்டி, கூரைத்தட்டி, தெருக்கூட்டும் துடைப்பம், மாடுகளுக்கான மூஞ்சிப்பெட்டி, பழக்கூடை, பூக்கூடை, பூத்தட்டு, கட்டில், புல்லாங்குழல், புட்டுக்குழாய், கால்நடைகளுக்கு மருந்து புகட்டும் குழாய் என எத்தனையோ பொருள்கள் மூங்கில் மூலம் உருவாகின்றன. சுருக்கமாகச் சொன்னால் பிறந்த குழந்தைக்கு விளையாட்டுப்பொருள் முதல் இறந்தவரை எடுத்துச்செல்லும் பாடை வரை மூங்கிலால் செய்யப்படுகின்றன.

www.cbsetamil.com
8th Std Tamil _20-12-2019.indd 100 03-01-2020 19:34:42

மலர்விழி: முன்பெல்லாம் திருமணத்தின்போது துணிகள், பழங்கள், பலகாரங்கள் முதலியவற்றை வைத்துக் கொடுப்பதற்குச் சீர்க்கூடைகளைப் பயன்படுத்துவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

பொறுப்பாளர்: ஆமாம். அதுமட்டுமல்லாமல் கடவுள் வழிபாட்டின்போது வெற்றிலை, பாக்கு, பூ, பழம் போன்றவற்றை முறத்தில் வைத்துப் படைக்கும் வழக்கமும் சில பகுதிகளில் இருந்தது. அவையெல்லாம் இப்போது வழக்கொழிந்து விட்டன.

தெரிந்து தெளிவோம்

கல்மூங்கில், மலைமூங்கில், கூட்டுமூங்கில் என மூன்றுவகை மூங்கில்கள் உண்டு. அவற்றுள் கூட்டு மூங்கில்களே கைவினைப் பொருள்கள் செய்வதற்கு ஏற்றவை.

(அவர்கள் அடுத்துள்ள கோரைப்பாய் அரங்குக்குச் செல்கின்றனர்)

சையது: பாய் என்பது படுக்கப் பயன்படுவது. அதில் வேறு என்ன சிறப்பு இருக்கிறது?

பொறுப்பாளர்: பாய்களில் பலவகை உண்டு. குழந்தைகளைப் படுக்கவைப்பது தடுக்குப்பாய், உட்கார்ந்து உண்ண உதவுவது பந்திப்பாய், உட்காரவும், படுக்கவும் உதவுவது திண்ணைப்பாய், திருமணத்துக்குப் பயன்படுத்துவது பட்டுப்பாய், இசுலாமியர் தொழுகைக்குப் பயன்படுத்துவது தொழுகைப்பாய். இப்படிப் பலவகைப் பாய்கள் உண்டு. இங்கேயுள்ள பாய்களைப்பாருங்கள். முற்காலத்தில் பாய்மரக்கப்பல்களில் பயன்பட்டதுகூடப் பாய்தான். இதனைப் புறநானூறு கூம்பொடு மீப்பாய் களையாது என்னும் அடியால் குறிப்பிடுகிறது.

மலர்விழி: திருமணத்திற்குப் பயன்படுத்தும் பட்டுப்பாய்களில் மணமக்கள் பெயர்கள் இடம்பெற்றிருப்பதைப் பார்த்திருக்கிறேன்.

பொறுப்பாளர்: பெயர்கள் மட்டுமன்றிக் குத்துவிளக்கு, மயில், பூக்கள் போன்றவையும் வழிபாட்டுச் சின்னங்களும்கூடப் பாய்களில் இடம்பெறுவதுண்டு. பாய் பின்னுவதும் சிறந்த கலையே!

(அடுத்துப் பனையோலை அரங்கிற்குச் செல்கின்றனர்)

பொறுப்பாளர்: தம்பிகளே, பனையோலை என்றதும் உங்களுக்கு என்ன நினைவுக்கு வருகிறது?

அமுதன்: ஓலைச்சுவடிதான் நினைவுக்கு வருகிறது.

பொறுப்பாளர்: ஆம். பழந்தமிழ் இலக்கியங்களை எல்லாம் நமக்காகப் பாதுகாத்து வைத்திருந்தவை பனையோலைகள் அல்லவா? அதுமட்டுமல்லாமல் பனையோலைகளினால் பல வகையான பொருள்கள் உருவாக்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் பாருங்கள். குழந்தைகளுக்கான கிலுகிலுப்பை, பொம்மைகள், பொருள்களை வைத்துக்கொள்ள உதவும் சிறிய கொட்டான், பெரிய கூடை, சுளகு, விசிறி, தொப்பி, ஓலைப்பாய் எல்லாம் இருக்கின்றன. பனைமட்டையின்

தெரிந்து தெளிவோம்

தமிழ்நாட்டின் மாநில மரம் பனை.

www.cbsetamil.com

8th Std Tamil _20-12-2019.indd 101 03-01-2020 19:34:42

நாரிலிருந்து கயிறு, கட்டில், கூடை போன்றவை செய்யப்படுகின்றன.

மலர்விழி: பனைமரம் தோற்றத்தில் மட்டுமல்லாமல் பயன்தருவதிலும்கூட மிகவும் உயர்வான மரம்தான் போலிருக்கிறது.

(அடுத்துப் பிரம்புக்கலை அரங்கிற்குச் செல்கின்றனர்.)

பொறுப்பாளர்: பிரம்பினால் செய்யப்பட்ட பலவகையான பொருள்கள் இங்கே உள்ளன. வந்து பாருங்கள். இங்குக் குழந்தைகளுக்கான தொட்டில், பெரியவர்களுக்கான கட்டில், ஊஞ்சல், நாற்காலி, மேசை, பூக்கூடை, பழக்கூடை, இடியாப்பத்தட்டு, அருச்சனைத்தட்டு, வெற்றிலைப்பெட்டி என வகைவகையான பொருள்கள் பிரம்பிலேயே உள்ளன.

மலர்விழி: பிரம்பு ஒரு தாவரம்தானே, அதனை எப்படி உலோகம்போல வளைத்துப் பொருள்களைச் செய்ய முடிகிறது?

பொறுப்பாளர்: அதுதான் பிரம்பின் சிறப்பு. முதலில் பிரம்பினை நெருப்பில் காட்டிச் சூடுபடுத்துவோம். சூடான பிரம்பை நட்டுவைத்திருக்கும் இரண்டு கடப்பாரைகளுக்கு இடையே செலுத்தி வளைப்போம். அது வேண்டிய வடிவத்தில் கம்பிபோல வளையும். பின்னர் அதனைத் தண்ணீரில் நனைத்து வைத்துவிட்டால் அப்படியே நிலைத்துவிடும். பிறகு அவற்றை இணைத்துச் சிறு ஆணிகளை அறைந்தும், சிறு பிரம்பு இழைகளைக் கொண்டு கட்டியும் தேவையான பொருள்களாக மாற்றுவோம். பிரம்பு மிகவும் குளிர்ச்சியானது. எனவே, அதில் அமர்வதும் படுப்பதும் உடல்நலத்துக்கு நல்லது. மேலும் பிரம்புப் பொருள்கள் வீட்டுக்கு அழகையும் கொடுக்கும்.

மலர்விழி: இந்தக் கண்காட்சிக்கு வந்ததன்மூலம் நாட்டுப்புறக் கைவினைக் கலைகளைப்பற்றிப் பல புதிய செய்திகளை அறிந்துகொண்டோம். மிகவும் நன்றி ஐயா.

பொறுப்பாளர்: இவை மட்டுமல்ல. மண் பொம்மைகள் செய்தல், மரப்பொம்மைகள் செய்தல், காதிதப்பொம்மைகள் செய்தல், தஞ்சாவூர்த்தட்டு செய்தல், சந்தனமாலையும் ஏலக்காய் மாலையும் செய்தல், மாட்டுக்கொம்பினால் கலைப்பொருள்கள் செய்தல், சங்கு, கிளிஞ்சல் போன்றவற்றால் பொருள்கள் உருவாக்குதல் என இன்னும் பலவகையான கைவினைக்கலைகள் உள்ளன. இவற்றைப்பற்றி அறிந்துகொண்டால் மட்டும் போதாது. இவைபோன்ற கைவினைப் பொருள்களை வாங்கிப் பயன்படுத்துவதன் மூலம் அவற்றை உருவாக்கும் கலைஞர்களையும் ஊக்குவிக்க வேண்டும். அப்படிச் செய்தால் சுற்றுச்சூழலையும் மாசடையாமல் பாதுகாக்கலாம்.

மலர்விழி: அப்படியே செய்கிறோம் ஐயா.

(நால்வரும் விடைபெற்றுத் திரும்புகின்றனர்.)

தெரிந்து தெளிவோம்

பிரம்பு என்பது கொடிவகையைச் சேர்ந்த தாவரம். இதன் தாவரவியல் பெயர் கலாமஸ் ரொடாங் *(Calamus Rotang)* என்பதாகும். இது நீர்நிறைந்த வாய்க்கால் வரப்புகளிலும், மண்குகைகளிலும் செழித்து வளரும். தமிழகத்தில் இப்போது இஃது அருகிவிட்டது. நமது தேவைக்காக அசாம், அந்தமான், மலேசியா ஆகிய இடங்களிலிருந்து தருவிக்கப்படுகிறது.

www.cbsetamil.com
8th Std Tamil _20-12-2019.indd 102 03-01-2020 19:34:43

கற்பவை கற்றபின்

1. உங்கள் பகுதியில் கிடைக்கும் களிமண், பனையோலை போன்ற பொருள்களைப் பயன்படுத்திக் கைவினைப்பொருள்களைச் செய்து காட்சிப்படுத்துக.
2. பனையோலையால் செய்யப்படும் பல்வேறு கைவினைப்பொருள்களின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு உருவாக்குக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை _____.
   அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள் இ) பனையோலைகள் ஈ) மண்பாண்டங்கள்
2. பானை_____ ஒரு சிறந்த கலையாகும்.
   அ) செய்தல் ஆ) வனைதல் இ) முடைதல் ஈ) சுடுதல்
3. 'மட்டுமல்ல' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.
   அ) மட்டு + மல்ல ஆ) மட்டம் + அல்ல இ) மட்டு + அல்ல ஈ) மட்டும் + அல்ல
4. கயிறு + கட்டில் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.
   அ) கயிற்றுக்கட்டில் ஆ) கயிர்க்கட்டில் இ) கயிறுக்கட்டில் ஈ) கயிற்றுகட்டில்

பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. முழுவதும் 2. மட்டுமல்லாமல் 3. அழகுக்காக 4. முன்பெல்லாம்

குறுவினா

1. எவற்றையெல்லாம் கைவினைக்கலைகள் எனக் கூறுகிறோம்?
2. மண்பாண்டம் , சுடுமண் சிற்பம் – ஒப்பிடுக.
3. பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?

சிறுவினா

1. பிரம்பினால் பொருள்கள் செய்யும் முறையைக் கூறுக.
2. மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.

நெடுவினா

தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

சிந்தனை வினா

கைவினைக்கலைகளுக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் இடையேயுள்ள தொடர்பு குறித்து எழுதுக.

www.cbsetamil.com
8th Std Tamil _20-12-2019.indd 103 03-01-2020 19:34:43

இயல் ஐந்து

தமிழர் இசைக்கருவிகள்

Q6B1QL

நுழையும்முன்

ஒரு சொல்லின் பொருளை அறியப் பயன்படுவது அகராதி. ஒரு பொருள் குறித்த அனைத்து விவரங்களையும் அறிந்துகொள்ளப் பயன்படுவது கலைக்களஞ்சியம் ஆகும். இது பல்துறை அறிவை உள்ளடக்கியதாக அல்லது ஒரு குறிப்பிட்ட துறை அறிவை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும். கலைக்களஞ்சியத்தில் தகவல்கள் பெரும்பாலும் அகரவரிசையில் தொகுக்கப் பட்டிருக்கும். இசைத்துறை பற்றிய கலைக்களஞ்சியம் ஒன்றை அறிவோம்.

இசை



மக்களின் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சி, குரல் வழியாக அல்லது செயற்கைக் கருவி ஒன்றின் வழியாக வெளிப்பட்டது. இது நகை, அழுகை, வீரம் உள்ளிட்ட ஒன்பது சுவைகளை வெளிப்படுத்தக்கூடிய கலையாகப் பிறந்தது. இக்கலையே இசை எனப்பட்டது. குரல்வழி இசை, கருவிவழி இசை என இசையை இரண்டாகப் பிரிப்பர்.

இசைக்கருவிகள்

இசையின் இனிமைக்குத் துணை செய்பவை இசைக் கருவிகள் ஆகும். காலத் தேவைகள், சமயச்சடங்குகள், திருவிழாக்கள் போன்ற பல நிகழ்வுகளின் பொருட்டு பலவிதமான இசைக்கருவிகள் தோன்றி வளர்ச்சிபெற்றன. இசைக்கருவிகள் குரல்இசைக்கு மட்டும் பயன்படுபவை, நாடகத்திற்கு மட்டும் பயன்படுபவை, இரண்டிற்கும் பயன்படுபவை எனப் பலவாகத் தோன்றிக் கிளைத்தன. இசைக்கருவிகளை இசைத்துப் பாடல் பாடுவோர் பாணர் எனப்பட்டனர்.

நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி அணியாள்

– புறநானூறு

www.cbsetamil.com

8th Std Tamil _20-12-2019.indd 104 03-01-2020 19:34:43

இசைக்கருவிகளின் வகைகள்

இசைக்கருவிகள் தோல்கருவி, நரம்புக்கருவி, காற்றுக்கருவி, கஞ்சக்கருவி என நான்கு வகைப்படும்.

1. விலங்குகளின் தோலால் மூடப்பட்டுச் செய்யப்படும் கருவிகள் தோல்கருவிகள் எனப்படும். (எ.கா.) முழவு, முரசு
2. நரம்பு அல்லது தந்திகளை உடையவை நரம்புக்கருவிகள் எனப்படும். (எ.கா.) யாழ், வீணை
3. காற்றைப் பயன்படுத்தி இசைக்கப்படுபவை காற்றுக்கருவிகள் எனப்படும். (எ.கா.) குழல், சங்கு
4. ஒன்றோடு ஒன்று மோதி இசைக்கப்படுபவை கஞ்சக்கருவிகள் எனப்படும். (எ.கா.) சாலரா, சேகண்டி

உடுக்கை

வகை – தோல்கருவி

உடுக்கை என்பது இடை சுருங்கிய ஒரு கைப்பறை ஆகும். இதன் உடல் பித்தளையால் ஆனது. வாய்ப்பகுதி ஆட்டுத்தோலால் பொருத்தப்பட்டிருக்கும். இரு வாய்களையும் இணைக்கும் கயிறுகள் இடையில் கோக்கப்பட்டிருக்கும். இவற்றின் மீது ஒரு நாடா சுற்றப்பட்டுத் தொங்கும். வலது வாயின் மீதுதான் அடிப்பர். அவ்வப்போது இடையின் மீதுள்ள நாடாவை அமுக்குவர். பெரிய உடுக்கையைத் தவண்டை என்பர். சிறு உடுக்கையைக் குடுகுடுப்பை என்பர். தில்லையில் நடனமாடும் நடராசரின் கைகளுள் ஒன்றில் இதனைக் காணலாம். இறை வழிபாட்டின் போதும் குறிசொல்லும் போதும் இக்கருவி இசைக்கப்படுகிறது.

தண்டுடுக்கை தாளந்தக்கை சாரநடம் பயில்வார்

– சம்பந்தர் தேவாரம்

குடமுழா

வகை – தோல்கருவி

ஐந்து முகங்களை உடைய முரசு வகையைச் சேர்ந்தது குடமுழா. ஒரு பெரிய குடத்தின் வடிவில் ஐந்து வட்டவடிவ வாய்களுடன் அமைந்திருக்கும். நடுவில் இருக்கும் வாய் மற்றவற்றைவிடப் பெரியதாக இருக்கும். ஒவ்வொரு வாயும் தோலால் மூடப்பட்டிருக்கும். ஒவ்வொரு வாயிலிருந்தும் ஒரு தனி வகையான இசை பிறக்கும். இதன் காரணமாக இதனைப் பஞ்சமகா சப்தம் என்றும் அழைப்பர். இது கோயில்களில் ஒலிக்கப்படும் இசைக்கருவியாகும். சென்னை அருங்காட்சியகத்தில் இவ்வகை முழவு ஒன்று காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

www.cbsetamil.com

8th Std Tamil _20-12-2019.indd 105 03-01-2020 19:34:43

குழல்

வகை – காற்றுக்கருவி

காடுகளில் வளரும் மூங்கிலில் வண்டுகள் துளையிடும். அவற்றின் வழியாகக் காற்று வீசும்போது இன்னிசை எழும்பும். இதனைக் கேட்டு மகிழ்ந்த நம் முன்னோர் அமைத்துக் கொண்டவையே குழல்கள். இதனை வேய்ங்குழல், புல்லாங்குழல் என்றும் அழைப்பர். குழல் ஏழு சுரங்களை உண்டாக்குவதற்கு உரிய ஏழு துளைகளை உடையதாக இருக்கும். இது சுமார் இருபது விரல் நீளம் உடையதாக இருக்கும். மூங்கில் மட்டுமன்றிச் சந்தனம், செங்காலி, கருங்காலி ஆகிய மரங்களாலும் குழல்கள் செய்யப்படுகின்றன. கொன்றைக்குழல், முல்லைக்குழல், ஆம்பல்குழல் எனப் பலவகையான குழல்கள் இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

– திருக்குறள்

கொம்பு

வகை – காற்றுக்கருவி

மனிதர்கள் தொடக்க காலத்தில் இறந்த மாடுகளின் கொம்புகளைப் பயன்படுத்தி ஒலி எழுப்பினர். அதுவே பிற்காலத்தில் கொம்பு என்னும் இசைக்கருவிக்கு அடிப்படையாயிற்று. இக்காலத்தில் பித்தளை அல்லது வெண்கலத்தால் கொம்புகள் செய்யப்படுகின்றன. இதனை வேடர் வேட்டையின் போது ஊதுவர். கழனி மேடுகளில் காவல் புரிபவர்கள் விலங்குகள், கள்வரை விரட்டவும் மற்ற காவல்காரர்களை விழித்திருக்கச் செய்யவும் கொம்பினை ஊதுவர். ஊதுகொம்பு, எக்காளம், சிங்கநாதம், துத்தரி போன்ற பலவகையான கொம்புகள் இக்காலத்தில் திருவிழா ஊர்வலங்களின்போது இசைக்கப்படுகின்றன.

சங்கு

வகை – காற்றுக்கருவி

இஃது ஓர் இயற்கைக் கருவி. கடலில் இருந்து எடுக்கப்படுவது. வலமாகச் சுழிந்து இருக்கும் சங்கை வலம்புரிச்சங்கு என்பர். சங்கின் ஒலியைச் சங்கநாதம் என்பர். இலக்கியங்களில் இதனைப் பணிலம் என்றும் குறிப்பிட்டுள்ளனர். கோயில் திருவிழாக்களின் போதும் சமயச் சடங்குகளில் போதும் சங்கு முழங்கும் வழக்கம் உண்டு.

சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாவாய்

– திருப்பாவை

www.cbsetamil.com

8th Std Tamil _20-12-2019.indd 106 03-01-2020 19:34:43

சாலரா

வகை – கஞ்சக்கருவி

இது பித்தளை அல்லது வெண்கலத்தால் செய்யப்பட்டிருக்கும். அதன் உட்புறம் குவிந்து இருக்கும். இதனை ஒன்றோடு ஒன்று பொருத்தியும் விளிம்பின் மீது தட்டியும் தாளத்தின் தேவைக்கு ஏற்ப இசைப்பர். இதனைப் பாண்டில் எனவும் அழைப்பர். இது கோயில் கூட்டு வழிபாட்டின் போதும் இன்னிசை அரங்குகளிலும் இசைக்கப்படும் இன்றியமையாத இசைக்கருவி ஆகும். இதனை இக்காலத்தில் 'ஜால்ரா' என்பர்.

சேகண்டி

வகை – கஞ்சக்கருவி

வட்டவடிவமான மணி வகையைச் சேர்ந்தது சேகண்டி. இதனைக் குச்சியாலோ அல்லது இரும்புத் துண்டாலோ அடித்து ஒலி எழுப்புவர்.

இது தேவைக்கு ஏற்பப் பல அளவுகளில் உருவாக்கப்படும். இதனைச் சேமங்கலம் என்றும் அழைப்பர். இதனைக் கோவில் வழிபாட்டின் போதும் இறுதி ஊர்வலத்தின் போதும் இசைப்பர்.

திமிலை

வகை – தோல்கருவி

பலா மரத்தினால் செய்யப்பட்டு விலங்குத் தோலினால் கட்டப்படும் கருவி திமிலை ஆகும். மணற்கடிகார வடிவத்தில் இக்கருவி அமைந்திருக்கும். இதனைப் பாணி என்னும் பெயரால் அழைப்பர்.

சங்கொடு தாரை காளம் தழங்கொலி முழங்கு பேரி
வெங்குரல் பம்பை கண்டை வியன்துடி திமிலை தட்டி
– பெரியபுராணம்

பறை

வகை – தோல்கருவி

விலங்குத் தோலால் இழுத்துக் கட்டப்பட்ட கருவி பறையாகும். பழங்காலத்தில் செய்திகளைத் தெரிவிக்கக் கோட்பறையை முழக்கினர். பகைவர்களின் ஆநிரையைக் கவரச் செல்லும்போது ஆகோட்பறையை முழக்குவர்.

இக்காலத்தில் இது தப்பு என்னும் பெயரில் வழங்கப்படுகிறது. இதனை முழக்கிக்கொண்டு ஆடும் ஆட்டம் தப்பாட்டம் என்று அழைக்கப்படுகிறது.

www.cbsetamil.com

8th Std Tamil _20-12-2019.indd 107 03-01-2020 19:34:43

மத்தளம்

வகை – தோல்கருவி

மத்து என்பது ஓசையின் பெயர். இசைக்கருவிகளுக்கு எல்லாம் தளம் அடிப்படை ஆகும். மத்து + தளம் = மத்தளம் என்று ஆகியது என்கிறார் அடியார்க்கு நல்லார்.

மத்தளத்தின் நடுப்பகுதி பெருத்தும் கடைப்பகுதி சிறுத்தும் காணப்படும். மரத்தால் செய்யப்பட்டிருக்கும் இதன் வாய்ப்பகுதி வளையங்களில் தோல் இழுத்துக் கட்டப்பட்டிருக்கும். இக்கருவி இரண்டு கைகளாலும் இசைக்கப்படுகிறது. ஆகவே இதனை முதற்கருவி என்பர். தஞ்சை பெரிய கோயில் கல்வெட்டில் கோயிலுக்கு நியமிக்கப்பட்ட இசைக்கலைஞர்களுள் கொட்டி மத்தளம் வாசிப்பவர் ஒருவரும் இருந்தார் என்பர்.

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்த பந்தர்க்கீழ் – நாச்சியார் திருமொழி

முரசு

வகை – தோல்கருவி

தமிழர்கள் போர்த் துணையாகக் கொண்ட கருவிகளுள் முதன்மையானது முரசு ஆகும்.

படைமுரசு, கொடைமுரசு, மணமுரசு என்று மூன்று வகையான முரசுகள் பழந்தமிழ் நாட்டில் புழக்கத்தில் இருந்தன. தமிழ் மக்களிடம் முப்பத்தாறு வகையான முரசுகள் வழக்கத்தில் இருந்ததாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. மாக்கண் முரசம் என்று மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது.

முழவு

வகை – தோல்கருவி

ஒரே முகத்தையுடைய முரசு வகையைச் சேர்ந்தது முழவு. ஒரு பெரிய குடத்தின் வாயில் தோலை இழுத்துக் கட்டப்பட்ட கருவியாகும். இத்தோலில் ஒருவகை பசை மண்ணைத் தடவி முழக்குவர். மண்ணமை முழவு எனப் பொருநராற்றுப்படையில் இடம் பெற்றுள்ளது.

காலத்தை அறிவிக்க நாழிகை முழவு, காலை முழவு ஆகியவை பயன்படுத்தப்பட்டன.

கலைஉணக் கிழிந்த முழவுமருள் பெரும்பழம்
– புறநானூறு

www.cbsetamil.com
8th Std Tamil _20-12-2019.indd 108 03-01-2020 19:34:44

யாழ்

வகை – நரம்புக்கருவி



வேட்டுவர் இறுகக் கட்டிய தங்கள் வில் நாணில் இருந்து எழும் ஓசையை உணர்ந்தனர். வில்லைப் போன்ற வளைவு உடையதும் நரம்புகளால் ஆனதும் விரலால் வருடக் கூடியதுமான கருவி ஒன்றை உருவாக்கினார். இதன் அடிப்படையில் உருவான கருவியே யாழ் ஆகும். பேரியாழ், செங்கோட்டியாழ் போன்றவை மிகப் பழமையானவை. யாழின் வகைக்கு ஏற்ப அதில் இருக்கும் நரம்புகளின் எண்ணிக்கை வேறுபடுகிறது. இருபத்தொரு நரம்புகளைக் கொண்டது பேரியாழ், பத்தொன்பது நரம்புகளைக் கொண்டதாக மீன் வடிவில் அமைந்தது மகரயாழ், பதினான்கு நரம்புகளைக் கொண்டது சகோடயாழ். யாழின் வடிவமே மெல்லமெல்ல மாற்றமடைந்து பிற்காலத்தில் வீணையாக உருமாறியது என்பர்.

வீணை

வகை – நரம்புக்கருவி

யாழ் போன்ற அமைப்பையுடைய நரம்புக்கருவி வீணையாகும். இஃது ஏழு நரம்புகளைக் கொண்டது. இடக்கை விரல்களால் நரம்புகளை அமுக்கியும் தேய்த்தும் வலக்கை சுண்டுவிரலால் கம்பிகளை மீட்டியும் இசை எழுப்புவர்.

இவ்வாறு நரம்புகள் மூலம் எழுப்பப்படும் இசையை அதன் குடம், தண்டு முதலிய பாகங்கள் பெருக்கி அனுப்புகின்றன. பரிவாதினி என்னும் வீணை பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் காலத்தில் வழக்கத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

கற்பவை கற்றபின்

1. இசைக்கருவிகளின் படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.
2. இக்கால இசைக்கருவிகள் குறித்துக் கலைக்களஞ்சிய வடிவில் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

மதிப்பீடு

காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

www.cbsetamil.com
8th Std Tamil _20-12-2019.indd 109 03-01-2020 19:34:44

பண்பாடு

5

ஏறு தழுவுதல்



வீரத்திற்கும் விளைச்சலுக்கும் செழிப்பிற்கும் செல்வத்திற்கும் தமிழர்களால் அடையாளப்படுத்தப்படுபவை மாடுகள். முல்லை, மருதநிலங்களில் கால்கொண்டு தமிழர்தம் வாழ்வோடு பின்னிப்பிணைந்து பண்பாடாகியுள்ளது ஏறுதழுவுதல். ஏறுதழுவுதல், தமிழரின் நாகரிகத்தை உணர்த்தும் விளையாட்டு; இளைஞர்களின் வீரத்தைப் பெருமிதப்படுத்தும் பண்பாட்டு நிகழ்வு. இது, நூற்றாண்டுகள் பல கடந்தும் தமிழர்தம் அடையாளமாகவே நிறுவப்பட்டிருக்கிறது.

பண்பாட்டுத் தொன்மையும் இலக்கிய வளமையும் வாய்ந்தது தமிழர் வரலாறு. இயற்கையைச் சார்ந்தும் பிற உயிர்களோடு இணைந்தும் வாழ்ந்தனர் சங்ககாலத் தமிழர்கள். இதற்குச் சங்க இலக்கியங்களில் ஏராளமான சான்றுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று ஏறு தழுவுதல் நிகழ்வாகும்.

இலக்கியங்களில் ஏறு தழுவுதல்

சங்க இலக்கியமான கலித்தொகையில், ஏறு தழுவுதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. முல்லைநில ஆயர்கள் பங்கேற்கும் இந்நிகழ்வு, அவர்களின் வீரத்தினை மெய்ப்பிக்கக்கூடிய ஒன்றாகத் திகழ்கிறது.

49F7TT

எழுந்தது துகள்,
ஏற்றனர் மார்பு
கவிழ்ந்தன மருப்பு,
கலங்கினர் பலர்

(கலி – 102: அடி 21–24)

என்று முல்லைக்கலியில் ஏறு தழுவுதல் களம் குறித்த அடிகள், காட்சியை நம் கண்முன்னே நிறுத்துகின்றன. காளைகளின் பாய்ச்சல் பற்றியும் கலித்தொகை கூறுகிறது.

திமில் பெருத்த காளைகள் பல, காலாலே தரையைக் கிளறி, புழுதியை எழுப்பின. சில நிலத்தை நொறுக்கின; சில தம்முள் முரண்பட்டு ஒன்றோடொன்று எதிர்த்துக் கொண்டன; சில மண்டியிட்டுப் பாய்ந்தன. இந்தக் காளைகள் மிடுக்குடனும் வீரத்துடனும்

9th_Tamil_Pages 001-121.indd 64 22-12-2020 15:38:51

போருக்குச் செல்லும் மருதநிலத்துப் போர் வீரர்களை நிகர்த்தனவாக இருந்தன. இதனை,

நீறு எடுப்பவை, நிலம் சாடுபவை,
மாறுஏற்றுச் சிலைப்பவை, மண்டிப் பாய்பவையாய்
துளங்கு இமில் நல்ஏற்றினம் பல களம்புகும்
மள்ளர் வனப்பு ஒத்தன

(கலி – 106: அடி 7–10)

என்று கலித்தொகை விவரிக்கிறது.

கலித்தொகை தவிர, சிலப்பதிகாரம் முதலான இலக்கியங்களிலும் புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

ஏறு தழுவுதல் பற்றிப் பிற்காலச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றான பள்ளு இலக்கியத்திலும் குறிப்புகள் உள்ளன. எருதுகட்டி என்னும் மாடு தழுவுதல் நிகழ்வைக் கண்ணுடையம்மன் பள்ளு பதிவு செய்துள்ளது.

தொல்சான்றுகள்

ஏறு தழுவுதல் குறித்த பல நடுகற்கள், புடைப்புச் சிற்பங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ளன. சேலம் மாவட்டத்தில் எருது விளையாடி

நடுகல் – சேலம்

தெரிந்து தெளிவோம்

எகிப்தில் உள்ள பெனி – ஹாசன் சித்திரங்களிலும், கிரீட் தீவிலுள்ள கினோஸஸ் என்னுமிடத்தில் உள்ள அரண்மனைச் சித்திரங்களிலும் காளைப்போர் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.

மரணமுற்றவன் பெயரால் எடுக்கப்பட்ட எருது பொருதார் கல் ஒன்று உள்ளது. கோவுரிச் சங்கன் கருவந்துறையிலே எருது விளையாடிப் பட்டான் சங்கன் மகன் பெரிய பயலு நட்டகல்லு என்பது அந்நடுகல் பொறிப்பு. கருவந்துறை என்னும் ஊரில் எருதோடு போராடி இறந்துபட்டவனாகிய சங்கன் என்பவனுக்கு அவனுடைய மகன் பெரிய பயல் எடுத்த நடுகல் என்பது இதன் பொருள்.

கரிக்கையூர் பாறை ஓவியம்

கூரிய கொம்புகளும் சிலிர்த்த திமில்களும் கொண்ட மூன்று எருதுகளைப் பலர் கூடி விரட்டுவதுபோன்ற பண்டைய ஓவியம் நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகேயுள்ள கரிக்கையூரில் காணப்படுகிறது. திமிலுடன் கூடிய காளையொன்றை ஒருவர் அடக்க முயல்வது போன்ற ஓவியம் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே கல்லூத்து மேட்டுப்பட்டியில் கண்டறியப்பட்டுள்ளது. தேனி மாவட்டம் மயிலாடும் பாறை அருகே சித்திரக்கல் புடவு என்ற இடத்தில் திமிலுடன் கூடிய காளை ஓவியம் கண்டறியப்பட்டுள்ளது.

9th_Tamil_Pages 001-121.indd 65 22-12-2020 15:38:51

சிந்துவெளி நாகரிக வரலாற்றிலும் காளை முக்கியப் பங்கு வகிக்கின்றது. இம்மக்கள் காளையைத் தெய்வமாக வழிபட்டதை அகழாய்வில் கிடைக்கப்பெற்ற சான்றுகள் வாயிலாக அறிகிறோம். சிந்துவெளி அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட மாடு தழுவும் கல் முத்திரை ஒன்று தமிழர்களின் பண்பாட்டுத் தொல்லியல் அடையாளமான ஏறு தழுவுதலைக் குறிப்பதாக ஐராவதம் மகாதேவன் தெரிவித்துள்ளார்.

சிந்துவெளி கல் முத்திரை

பண்பாட்டு அடையாளம்

ஏறு தழுவுதல், முல்லை நிலத்து மக்களின் அடையாளத்தோடும் மருத நிலத்து வேளாண் குடிகளின் தொழில் உற்பத்தியோடும் பாலை நிலத்து மக்களின் தேவைக்கான போக்குவரத்துத் தொழிலோடும் பிணைந்தது. இதுவே வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாளமாக நீட்சி அடைந்தது.

ஏரில் பூட்டி உழவு செய்ய உதவிய காளை மாடுகள் ஏர் மாடுகள், எருதுகள், ஏறுகள் என்று அழைக்கப்பட்டன. தமிழக உழவர்கள் தங்களின் உழவு சார்ந்த கருவிகளோடு அறுவடைக்குப் பெரிதும் துணைநின்ற மாடுகளைப் போற்றி மகிழ்விக்க ஏற்படுத்திய விழாவே மாட்டுப் பொங்கல். அவ்விழாவன்று மாடுகளைக் குளிப்பாட்டிப் பல வண்ணங்களில் பொட்டிட்டு, மூக்கணாங் கயிறு, கழுத்துக் கயிறு, பிடி கயிறு அனைத்தையும் புதிதாக அணிவிப்பர். கொம்புகளைப் பிசிறு சீவி, எண்ணெய் தடவி, கழுத்து மணியாரம் கட்டி, வெள்ளை வேட்டியோ, துண்டோ கழுத்தில் கட்டுவர். பின்னர், பூமாலை அணிவித்துப் பொங்கலிட்டுத் தம்மோடு உழைப்பில் ஈடுபட்ட மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் விதத்தில் தளிகைப் பொங்கலை ஊட்டிவிடுவர்.

இதன் தொடர்ச்சியாக, வேளாண் குடிகளின் வாழ்வோடும் உழைப்போடும் பிணைந்துகிடந்த மாடுகளுடன் அவர்கள் விளையாடி மகிழும் மரபாக உருக்கொண்டதே ஏறு தழுவுதலாகும்.

ஏறு தழுவுதல், தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது. அது மாடு பிடித்தல், மாடு அணைதல், மாடு விடுதல், மஞ்சுவிரட்டு, வேலி மஞ்சுவிரட்டு, எருது கட்டி, காளை விரட்டு, ஏறு விடுதல், சல்லிக்கட்டு எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றது.

சல்லிக்கட்டு பேச்சுவழக்கில் திரிபுற்று, ஜல்லிக்கட்டு என அழைக்கப்படுகிறது. சல்லி என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகின்ற வளையத்தினைக் குறிக்கும். புளியங்கொம்பினால் வளையம் செய்து காளையின் கழுத்தில் அணிவிக்கும் வழக்கம் தற்போதும் உள்ளது. அக்காலத்தில் புழங்கிக் கொண்டிருந்த சல்லி நாணயங்களை, துணியில் முடிந்து மாட்டின் கொம்புகளில் கட்டிவிடும் பழக்கமும் இருந்தது. மாட்டைத் தழுவும் வீரருக்கு அந்தப் பணமுடிப்புச் சொந்தமாகும்.

ஏறு தழுவுதலும் தமிழர் அறமும்

மேலைநாடுகளில் குறிப்பாக, தேசிய விளையாட்டாகக் காளைச் சண்டையைக் கொண்டிருக்கும் ஸ்பெயின் நாட்டில், காளையைக் கொன்று அடக்குபவனே வீரனாகக் கருதப்படுவான். அவ்விளையாட்டில், ஆயுதங்களைப் பயன்படுத்துவதும் உண்டு.

9th_Tamil_Pages 001-121.indd 66 22-12-2020 15:38:51

மேலை நாட்டுக் காளை விளையாட்டு



தமிழக ஏறு தழுவுதல்

சில நாட்டு விளையாட்டுகளில் காளையை அடக்கும் வீரன் வென்றாலும் தோற்றாலும் ஆட்டத்தின் முடிவில் அந்தக் காளை கொல்லப்படுதலும் உண்டு. மேலைநாடுகளில் ஆண்டு முழுவதும் நடத்தப்படும் காளை விளையாட்டு, மனிதனுள் ஒளிந்திருக்கும் வன்மத்தையும் போர் வெறியையும் வெளிப்படுத்துவது போல் இருக்கிறது.

தமிழகத்தில் நடைபெறும் ஏறு தழுவுதலில் காளையை அடக்குபவர்கள் எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தக் கூடாது. நிகழ்வின் தொடக்கத்திலும் முடிவிலும் காளைகளுக்கு வழிபாடு செய்வர். எவராலும் அடக்க முடியாத காளைகளும் உண்டு. எனவே, காளைகளும் வெற்றி பெற்றதாகக் கருதப்படும். அன்பையும் வீரத்தையும் ஒருசேர வளர்த்தெடுக்கும் இவ்விளையாட்டில் காளையை அரவணைத்து அடக்குபவரே வீரராகப் போற்றப்படுவர்.

நம் கடமை

தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவாக விளங்கும் ஏறு தழுவுதல் இரண்டாயிரம் ஆண்டுகாலத் தொன்மையுடையது.

பண்டைய வீரவுணர்வை நினைவூட்டும் ஏறுதழுவுதல் விலங்குகளை முன்னிலைப்படுத்தும் வழிபாட்டையும் இயற்கை வேளாண்மையையும் வலியுறுத்தும் பண்பாட்டுக் குறியீடு ஆகும். நம் முன்னோரின் இத்தகைய பண்பாட்டுக்கூறுகளைப் பேணிப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமையுமாகும்.

கற்பவை கற்றபின்...

1. இலக்கியங்கள் காட்டும் ஏறுதழுவுதல் காட்சிகளை உங்கள் பகுதியில் நடைபெற்ற எருது விடும் விளையாட்டு நிகழ்வுடன் ஒப்பிட்டு வகுப்பறையில் கலந்துரையாடுக.

2. உங்கள் ஊரில் பொங்கல்விழா நடைபெறுகிறது. அவ்விழாவில் சாக்கு ஓட்டம், தவளை ஓட்டம், புட்டியில் தண்ணீர் நிரப்புதல், இசை நாற்காலி, உருளைக் கிழங்கு பொறுக்குதல், ஊசியில் நூல் கோத்தல், கோலம் போடுதல், கயிறு இழுத்தல், மெதுவாக மிதிவண்டி ஓட்டுதல், பானை உடைத்தல் ஆகிய போட்டிகள் நடைபெறுகின்றன. அப்போட்டிகள் குறித்து நேரடி வருணனை செய்க.

9th_Tamil_Pages 001-121.indd 67 22-12-2020 15:38:51

கலை

சு

சிற்பக்கலை

KHMJCR

நுழையும்முன்

கல்லிலும், உலோகத்திலும் கருவிகள் செய்த மனிதன், அவற்றில் சிற்பமென்னும் நுண்கலையை வடிக்கத் தொடங்கினான். மனித நாகரிக வளர்ச்சியின் தொடக்கமாக இதைக் கொள்ளலாம். உயிரற்ற கல்லிலும் உலோகத்திலும் தமிழர் மன உணர்வுகளையும் நிகழ்வுகளையும் செதுக்கிவைத்த சிற்பங்கள், இன்றும் வரலாற்றின் வாயில்களாக விளங்குகின்றன. தமிழர் அழகியலின் வெளிப்பாடுதான் நாம் காணும் சிற்பங்கள். தமிழ்ச் சிற்பிகள் கல்லில் வடித்த கவிதைகளே சிற்பங்கள்.

புலிக்குகை, மகாபலிபுரம்

கல், உலோகம், செங்கல், மரம் முதலியவற்றைக் கொண்டு கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் உருவங்கள் அமைக்கும் கலையே சிற்பக்கலை எனலாம்.

"கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும்
மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்
கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை
பத்தே சிற்பத் தொழிற்குஉறுப் பாவன"

என்று திவாகர நிகண்டு குறிப்பிடுகிறது. மணிமேகலையிலும் இத்தகு குறிப்புகள் காணப்படுகின்றன.

சிற்பங்களின் வகைகள்

சிற்பங்களை அவற்றின் உருவ அமைப்பு அடிப்படையில் முழு உருவச் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள் என இரண்டாகப் பிரிக்கலாம். உருவத்தின் முன்பகுதியும் பின்பகுதியும் தெளிவாகத் தெரியும் வகையில் முழு உருவத்துடன் அமைந்த சிற்பங்களை முழு உருவச் சிற்பங்கள் என்று கூறலாம். அவ்வாறின்றி முன்பகுதி மட்டும் தெரியும்படி அமைக்கப்பட்ட சிற்பங்களைப் புடைப்புச் சிற்பங்கள் எனலாம். இத்தகு சிற்பங்களை அரண்மனைகள், கோவில்கள் போன்ற

9th_Tamil_Pages 122-264.indd 152 22-12-2020 15:57:41

இடங்களில் காணலாம். குறிப்பாகக் கோவிலின் தரைப் பகுதி, கோபுரம், தூண்கள், நுழைவாயில்கள், சுவர்களின் வெளிப்புறங்கள் என எல்லா இடங்களிலும் புடைப்புச் சிற்பங்களைப் பார்க்க முடிகிறது.

தெய்வ உருவங்கள், இயற்கை உருவங்கள், கற்பனை உருவங்கள், முழுவடிவ (பிரதிமை) உருவங்கள் என நான்கு நிலைகளில் உலோகத்தினாலும் கல்லினாலும் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன. சிற்ப இலக்கண மரபைப் பின்பற்றிக் கலை நயத்துடனும் மிகுந்த தேர்ச்சியுடனும் சிற்பிகள் சிற்பங்களை வடிவமைக்கின்றனர். அதனால், அவர்களைக் "கற்கவிஞர்கள்" என்று சிறப்பிக்கின்றனர்.

பல்லவர் காலச் சிற்பங்கள்

பல்லவர் காலத்தில் சுதையினாலும், கருங்கற்களினாலும் சிற்பங்கள் அமைக்கப்பட்டன. கோவில் தூண்கள் சிற்பங்களால் அழகு பெற்றன. தூண்களில் யாளி, சிங்கம், தாமரை மலர், நுட்பமான வேலைப்பாடுகள் நிறைந்த வட்டங்கள் போன்றவை பொறிக்கப்பட்டன. பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்ட கோவில்களின் கட்டடங்கள், கற்றூண்கள், சுற்றுச்சுவர்கள், நுழைவு வாயில்கள் என அனைத்து இடங்களிலும் சிற்பங்கள் மிளிர்வதைக் காண முடியும்.

தெரியுமா?

தமிழின் தொன்மையான இலக்கண நூலாகிய **தொல்காப்பியத்தில் சிற்பக்கலை** பற்றிய குறிப்பு காணப்படுகிறது. போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரருக்கு நடுகல் நடப்படும். அக்கல்லில் அவ்வீரரின் உருவம் பொறிக்கப்பெறும். தமிழரின் தொடக்ககாலச் சிற்பக்கலைக்குச் சான்றாக இதையும் குறிப்பிடலாம். சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்குச் சிலைவடித்த செய்தி இடம் பெற்றுள்ளது. மாளிகைகளில் பல சிற்பங்களில் சுண்ணாம்புக் கலவை (சுதைச் சிற்பங்கள்) இருந்ததை **மணிமேகலை** மூலம் அறிய முடிகிறது.

பல்லவர்காலச் சிற்பக்கலைக்கு மாமல்லபுரச் சிற்பங்கள் மிகச் சிறந்த சான்றுகளாகும். கடற்கரையில் காணப்பட்ட பெரும் பாறைகளைச் செதுக்கிப் பற்பல உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு உருவாக்கப்பட்ட பஞ்ச பாண்டவர் இரதங்களில் அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் பல்வேறு உருவச் சிற்பங்களும் பல்லவர்களின் சிற்பக்கலைப் பெருமையை உலகுக்கு உணர்த்துகின்றன.

காஞ்சி கைலாசநாதர் கோவில் சுற்றுச்சுவர் (முழுவதும்) சிற்பங்களின் கலைக்கூடமாகத் திகழ்கிறது. அதே போன்று காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோவிலிலும் பல்லவர் காலச் சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. இங்குத் தெய்வ உருவங்களும் பிற சிற்பங்களும் கோவிலின் உட்புறச் சுவரில் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர் காலக் குடைவரைக் கோவில்களின் நுழைவு வாயிலின் இருபுறங்களிலும் காவலர்கள் நிற்பது போன்று சிற்பங்கள் படைக்கப்பட்டுள்ளன.

மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருச்சி மலைக்கோட்டை போன்ற இடங்களில் காணப்படும் பல்லவர் காலச் சிற்பங்கள் சிறந்த கலைநுட்பத்துடன் அமைந்துள்ளன.

பாண்டியர் காலச் சிற்பங்கள்

பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்ட குகைக்கோவில்களில் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்துள்ளன. அவற்றைத் திருமயம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம் முதலிய இடங்களில் உள்ள கோவில்களில் காணலாம். கோவில்பட்டிக்கு மேற்கே கழுகுமலை வெட்டுவான்கோவிலில் அமைந்துள்ள சிற்பங்களும் பாண்டியர் காலச் சிற்பக்கலைக்குச் சான்றுகளாகும்.

சோழர்காலச் சிற்பங்கள்

கற்சிற்பங்கள் அமைக்கும் கலை, சோழர் காலத்தில் விரைவாக வளர்ச்சி பெற்றது. முதலாம் இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரியகோவில், முதலாம் இராசேந்திர

9th_Tamil_Pages 122-264.indd 153 22-12-2020 15:57:41

சோழன் எழுப்பிய கங்கை கொண்ட சோழபுரம், இரண்டாம் இராசராசன் எழுப்பிய தாராசுரம் ஐராவதீசுவரர் கோவில், மூன்றாம் குலோத்துங்கச் சோழன் அமைத்த திரிபுவன வீரேசுவரம் கோவில் போன்றவை சோழர் காலச் சிற்பக்கலையின் கருவூலங்களாகத் திகழ்கின்றன.

தஞ்சைப் பெரியகோவிலில் காணப்படுகின்ற பதினான்கு அடி உயரமுள்ள வாயிற்காவலர் உருவங்களும் மிகப்பெரிய நந்தியும் வியப்பூட்டும் வேலைப்பாடுகள் கொண்ட தூண்களும் சோழர்காலச் சிற்பத்திறனுக்குச் சான்றுகளாக விளங்குகின்றன. கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரே கல்லில் அமைந்த நவக்கிரகமும் சிங்கமுகக் கிணறும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள உருவங்களும் குறிப்பிடத்தக்கன.

புதுக்கோட்டை மாவட்டம், நார்த்தாமலையில் நடன முத்திரைகளுடன் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அம்மாவட்டத்தில் உள்ள கொடும்பாளூரில் இரண்டாம் பராந்தகச் சோழனால் கட்டப்பட்ட மூவர் கோவில் சிற்பங்கள் அழகானவை. திருச்சிராப்பள்ளி மாவட்டம், சீனிவாசநல்லூரில் உள்ள குரங்கநாதர் கோவில் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. சோழர் கால இறுதியில் திருவரங்கக் கோவிலினுள் அமைக்கப்பட்ட சிற்பங்களில் வெளிப்படும் முக பாவனைகள் சோழர்காலச் சிற்பக்கலை நுட்பத்திற்கு மிகச்சிறந்த சான்றுகளாகும். சோழர்காலத்தில் மிகுதியான செப்புத் திருமேனிகள் உருவமைக்கப்பட்டன. கடவுளின் உருவங்களும், மனித உருவங்களும் மிகுந்த கலைநுட்பத்தோடு வடிவமைக்கப்பட்டன. சோழர்காலம் செப்புத்திருமேனிகளின் 'பொற்காலம்' என்று அழைக்கப்படும் அளவிற்கு அவை அழகுற அமைந்துள்ளன.

விஜயநகர மன்னர் காலச் சிற்பங்கள்

விஜயநகர மன்னர்கள் காலத்தில் கோவில்களில் மிக உயர்ந்த கோபுரங்கள்

தெரியுமா?

தமிழக அரசு, சிற்பக் கலைஞர்களைப் பரிசளித்துப் பாராட்டிச் சிற்பக்கலையை வளர்த்து வருகிறது. மாமல்லபுரத்தில் தமிழ்நாடு அரசு சிற்பக்கல்லூரியை நடத்தி வருகிறது. அக்கல்லூரியிலிருந்து ஆண்டுதோறும் சிற்பக் கலைஞர்கள் பலர் உருவாகின்றனர். சுவாமிமலை, கும்பகோணம், மதுரை ஆகிய இடங்களில் உலோகப் படிமங்கள் செய்யும் பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ளன. சென்னையிலும் கும்பகோணத்திலும் உள்ள அரசு கவின்கலைக் கல்லூரிகளில் சிற்பக்கலையைப் பயிலலாம். இக்கலைத்துறையில் மிகுதியான வேலைவாய்ப்புகள் உள்ளன. சிற்பக்கலை குறித்த செய்திகளை அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் தமிழ்நாடு தொழில்நுட்பக்கல்வி இயக்ககம் "சிற்பச்செந்நூல்" என்ற நூலை வெளியிட்டுள்ளது.

9th_Tamil_Pages 122-264.indd 154 22-12-2020 15:57:42

எழுப்பப்பட்டன. அக்கோபுரங்களில் சுதைகளாலான சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. இவர்கள் தெலுங்கு, கன்னடப்பகுதிகளுடன் தொடர்புகொண்டிருந்த காரணத்தால் அந்நாட்டுச் சிற்பக் கலையின் தாக்கம் தமிழகச் சிற்பங்களில் ஏற்பட்டது. ஆடை, அணிகலன்கள் அணிந்த நிலையில் உள்ள உருவங்கள் சிற்பங்களாயின. கோவில் மண்டபங்களில் மிகுதியான சிற்பத்தூண்கள் அமைக்கப்பட்டன. குதிரையின் உருவங்களைச் சிற்பங்களில் இடம் பெறச் செய்தனர். வீரர்கள் அமர்ந்த நிலையில் குதிரைகள் முன்கால்களைத் தூக்கி நிற்பது போன்ற சிற்பங்களை மண்டபத் தூண்களில் அமைத்தனர். அத்துடன் பல்வேறு ஓசைகளை எழுப்பும் இசைக் கற்றூண்களையும் இவர்கள் அமைத்தது குறிப்பிடத்தக்கது.

நாயக்கர் காலச் சிற்பங்கள்

நாயக்க மன்னர் பல இடங்களில் ஆயிரங்கால் மண்டபங்களை அமைத்தனர். அம்மண்டபத் தூண்களில் அழகிய சிற்பங்களைச் செதுக்கினர். மதுரை மீனாட்சி அம்மன் கோவில், இராமேசுவரம் பெருங்கோவில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில், கிருஷ்ணாபுரம் பெருமாள் கோவில், திண்டுக்கல் அருகே தாடிக்கொம்பில் உள்ள பெருமாள் கோவில், பேரூர் சிவன் கோவில் போன்ற இடங்களில் கலைநயம் மிக்க சிற்பங்களைக் காணமுடியும்.

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஆயிரங்கால் மண்டபத் தூண்களில் கண்ணப்பர், குறவன் குறத்தி போன்ற சிற்பங்கள் உள்ளன. அரிச்சந்திரன், சந்திரமதி சிற்பங்களில் ஆடை, ஆபரணங்கள் கலை நயத்துடன் காணப்படுகின்றன. இறந்த மைந்தனைக் கையில் ஏந்தியபடி நிற்கும் சந்திரமதி சிலையும் அமைந்துள்ளது.

கோயம்புத்தூருக்கு அண்மையிலுள்ள பேரூர் சிவன் கோவிலில் உள்ள சிற்பங்கள் நாயக்கர் காலச் சிற்பக் கலை நுட்பத்தின் உச்சநிலைப் படைப்பு என்று கூறலாம். விழியோட்டம், புருவ நெளிவு, நக அமைப்பு என மிக மிக நுட்பமாகக் கலைநயத்துடன் அவை படைக்கப்பட்டுள்ளன.

கிருஷ்ணாபுரம் வேங்கடாசலபதி கோவிலில் உள்ள குறவன் குறத்தி, இரதிதேவி சிலைகள் காண்போரை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளன.

பௌத்த–சமணச் சிற்பங்கள்

பௌத்த மதத்தைத் தழுவிய தமிழர்கள், புத்தரின் உருவத்தை அமர்ந்த, நின்ற, படுத்த (கிடை) நிலைகளில் சிற்பங்களாகப் படைத்து வழிபட்டனர். சமண மதத்தினர் அருகக் கடவுளின் உருவத்தையும், இருபத்து நான்கு தீர்த்தங்கரர் உருவங்களையும் சிற்பங்களாக்கியுள்ளனர். சமண மதத்தில் சில சிற்பங்கள் அளவுக்கு மீறிய உயரமும், பருமனும் உடையனவாக உள்ளன.

சான்றாக விழுப்புரம் மாவட்டம் செஞ்சிக்கு அண்மையில் உள்ள திருநாதர்குன்று என்னும் இடத்தில், ஒரு பாறையில் இருபத்துநான்கு தீர்த்தங்கரர் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

9th_Tamil_Pages 122-264.indd 155 22-12-2020 15:57:42

அது போலவே மதுரைக்கு அண்மையில் சமணர்களின் படுக்கைகள் செதுக்கப்பட்ட இடங்களிலும் மலைப்பாறைகளிலும் சமணச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

தனிச்சிறப்புகள்

பிறநாட்டுச் சிற்பங்களைக் காட்டிலும் தமிழகச் சிற்பங்கள் தனித்தன்மையுடன் திகழ்கின்றன. யோகக்கலை, நாட்டியக்கலைக் கூறுகளும் தமிழகச் சிற்பக்கலையில் இடம் பெற்றுள்ளன.

இன்றைய சிற்பக்கலை

தமிழகத்தில் கட்டப்படும் கோவில்களில் இன்றும் சுதைச் சிற்பங்களும் கற்சிற்பங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. செங்கல், பைஞ்சுதை (சிமெண்ட்), கற்கள் ஆகியவற்றைக் கொண்டு கலைநயமிக்க சிற்பங்கள் உருவாக்கப்படுகின்றன. வெண்கலம் முதலான உலோகங்களாலும் செயற்கை இழைகளாலும் கடவுள் உருவங்களும் மனித உருவங்களும் உருவாக்கப்படுகின்றன. இன்றைய சிற்பக்கலை கோவில்களைக் கடந்தும் பலதுறைகளில் தன் இடத்தை நிறைவு செய்கிறது. பெரும் அரங்குகளில், காட்சிக்கூடங்களில், வரவேற்பறைகளில் காணப்படுகிற கலைநயம் மிக்க சிற்பங்கள், நினைவுப் பொருள்கள், பரிசுப் பொருள்கள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் நேர்த்திமிகு சிற்பங்கள் முதலானவை தமிழர் சிற்பக்கலையின் மேன்மையை உலகுக்குப் பறைசாற்றுகின்றன.

சிற்பங்கள் என்பன தெய்வங்களாகப் போற்றி வணங்குவதற்கும், ஏனைய உருவங்களாகக் கண்டு களிப்பதற்கும் மட்டுமல்ல! அவை வரலாற்றுப் பதிவுகளாகும்; மனித அறிவு வளர்ச்சியின் முதிர்ச்சியாகும்; அத்தகு சிறப்புமிக்க சிற்பக் கலையைப் போற்றிப் பாதுகாப்பது நமது கடமையாகும்.

KHWFEE

கற்பவை கற்றபின்...

1. உங்கள் பகுதியில் உள்ள பழமையான சிற்பம் ஒன்றைப் பற்றிய செய்திக் குறிப்பை உருவாக்குக.
2. ஓவியர்/சிற்பி/இசைக் கலைஞர் ஒருவரைச் சந்தித்து அவர் கூறும் கலை நுட்பங்களையும் அனுபவங்களையும் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.

9th_Tamil_Pages 122-264.indd 156 22-12-2020 15:57:42

கலை

சு

நிகழ்கலை

HUPK4B

நுழையும்முன்

கண்ணுக்குக் காட்சியையும் சிந்தைக்குக் கருத்தினையும் தருவன; கருத்துடன் கலைத்திறனை நோக்காகக்கொண்டு காலவெள்ளத்தைக் கடந்து நிற்பன; ஆடல், பாடல், இசை, நடிப்பு, ஒப்பனை, உரையாடல் வழியாக மக்களை மகிழ்வடையச் செய்வன; சமூகப் பண்பாட்டுத்தளத்தின் கருத்துக் கருவூலமாக விளங்குவன; நுட்பமான உணர்வுகளின் உறைவிடமாக இருப்பன. அவை யாவை? அவைதாம் மக்கள் பண்பாட்டின் பதிவுகளான நிகழ்கலைகள்.

நிகழ்கலை

சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன; சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணைசெய்கின்றன.

கரகாட்டம்

பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்றே கரகாட்டம். 'கரகம்' என்னும் பித்தளைச் செம்பையோ, சிறிய குடத்தையோ தலையில் வைத்துத் தாளத்திற்கு ஏற்ப ஆடுவது, கரகாட்டம். இந்த நடனம் கரகம், கும்பாட்டம் என்றும் அழைக்கப்படுகிறது.

கரகச் செம்பின் அடிப்பாகத்தை உட்புறமாகத் தட்டி, ஆடுபவரின் தலையில் நன்கு படியும்படி செய்கின்றனர். தலையில் செம்பு நிற்கும் அளவு எடையை ஏற்றுவதற்குச் செம்பில் மணலையோ பச்சரிசியையோ நிரப்புகின்றனர். கண்ணாடியாலும் பூக்களாலும் அழகூட்டிய கரகக் கூட்டின் நடுவில், கிளி பொம்மை பொருத்திய மூங்கில் குச்சியைச் செருகி வைத்து ஆடுகின்றனர். இதற்கு நையாண்டி மேள இசையும் நாகசுரம், தவில், பம்பை போன்ற இசைக்கருவிகளும் இசைக்கப்படுகின்றன. ஆணும் பெண்ணும் சேர்ந்து நிகழ்த்தும் கரகாட்டத்தில் சில நேரங்களில் ஆண், பெண் வேடமிட்டு ஆடுவதும் உண்டு. கரகாட்டம் நிகழ்த்துதலில் இத்தனைபேர்தான் நிகழ்த்த வேண்டும் என்ற வரையறை இல்லை.

10th_Tamil_Unit 6.indd 128 24-01-2020 10.06.48 AM

"நீரற வறியாக் கரகத்து" (புறம்.1) என்ற புறநானூற்றுப் பாடலடியில் கரகம் என்ற சொல் இடம்பெறுகிறது. சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல்களில் 'குடக்கூத்து' என்ற ஆடலும் குறிப்பிடப்படுகிறது. இதுவே கரகாட்டத்திற்கு அடிப்படை என்றும் கருதப்படுகிறது. இது தமிழகத்தில் மதுரை, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் நிகழ்த்தப்படுகிறது.

மயிலாட்டம்

மயில் வடிவுள்ள கூட்டுக்குள் ஒருவர் தன் உருவத்தை மறைத்துக்கொண்டு, நையாண்டி மேளத்திற்கேற்ப ஆடும் ஆட்டமே மயிலாட்டமாகும். நையாண்டி மேளம் இசைக்க, காலில் கட்டப்பட்டுள்ள சலங்கை ஒலிக்க மயிலின் அசைவுகளை ஆடிக்காட்டுவர்.

கரகாட்டத்தின் துணையாட்டமாகவும் மயிலாட்டம் ஆடப்படுகிறது. ஊர்ந்து ஆடுதல், மிதந்து ஆடுதல், சுற்றி ஆடுதல், இறகை விரித்தாடுதல், தலையைச் சாய்த்தாடுதல், தாவியாடுதல், இருபுறமும் சுற்றியாடுதல், அகவுதல், தண்ணீர் குடித்துக்கொண்டே ஆடுதல் ஆகிய அடவுகளைக் கலைஞர்கள் இவ்வாட்டத்தில் ஆடிக்காட்டுவர்.

காவடியாட்டம்

கா-என்பதற்குப் பாரந்தாங்கும் கோல் என்று பொருள். இருமுனைகளிலும் சம எடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டம். மரத்தண்டின் இரு முனைகளிலும் சிற்ப வேலைப்பாடுள்ள பலகையைப் பொருத்தி, மூங்கில் குச்சிகளால் அரைவட்டமாக இணைக்கின்றனர். அந்த அரைவட்டப்பகுதியைப் பட்டுத்துணியால் மூடி அழகுபடுத்துகின்றனர். மேலும் மயிலிறகுக் கற்றைகளை இருபுறமும் பொருத்தி, மணிகளால் அழகுபடுத்திக் காவடியை உருவாக்குகின்றனர். காவடியின் அமைப்புக்கேற்ப மச்சக்காவடி, சர்ப்பக்காவடி, பூக்காவடி, தேர்க்காவடி, பறவைக்காவடி என்று அவற்றை அழைக்கின்றனர். இலங்கை, மலேசியா உட்பட, புலம்பெயர் தமிழர் வாழும் பிற நாடுகளிலும் காவடியாட்டம் ஆடப்படுகிறது.

ஒயிலாட்டம்

ஒரே நிறத் துணியை முண்டாசுபோலக் கட்டியும் காலில் சலங்கை அணிந்தும் கையில் வைத்துள்ள சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஒயிலாக ஆடும் குழு ஆட்டமே ஒயிலாட்டம். உணர்ச்சிக்கேற்பப் பாட்டின் சந்தமும் சந்தத்திற்கேற்ப ஆட்டத்தின் இசையும் மாறிமாறி, மனத்தை ஈர்க்கும். இதில் கம்பீரத்துடன் ஆடுதல் என்பது தனிச்சிறப்பானது.

ஒயிலாட்டத்தை இருவரிசையாக நின்றும் ஆடுகின்றனர். ஒருவருக்கொருவர் இடம்விட்டு விலகிநின்று ஆடும் இந்த ஒயிலாட்டத்தைப் பெரும்பாலும் ஆண்கள் ஆடுவதே வழக்கில் உள்ளது. ஒரே குழுவில் வயது முதிர்ந்தவர்களும் இளைஞர்களும் இணைந்து ஆடுவதும் உண்டு. இந்த ஆட்டத்தில் தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

தேவராட்டம், சேர்வையாட்டம்

தேவராட்டம், வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. இது ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம். உறுமி எனப் பொதுவாக அழைக்கப்படும் 'தேவதுந்துபி', தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி. இந்தக் கலை, வேட்டி கட்டியும் தலையிலும் இடையிலும் சிறுதுணி கட்டியும் கால்களில் சலங்கை அணிந்தும் எளிய ஒப்பனையுடன் நிகழ்த்தப்படுகின்றது. இவ்வாட்டத்தில் பெரும்பான்மையாக எட்டு முதல் பதின்மூன்று கலைஞர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்பது பொது மரபாக உள்ளது. தேவராட்டம் குறிப்பாகச் சடங்கு சார்பாக ஆடப்படுகின்றது.

தேவராட்டம் போன்றே ஆடப்பட்டு வருகின்ற கலை, சேர்வையாட்டம்.

10th_Tamil_Unit 6.indd 129 24-01-2020 10.06.48 AM

ஆட்டக்கலைஞர்கள் சேவைப்பலகை, சேமக்கலம், ஜால்ரா ஆகிய இசைக்கருவிகளை இசைத்துக்கொண்டே ஆடுகின்றனர். இதனை இசைச்சார்புக் கலையாகவும் வழிபாட்டுக் கலையாகவும் நிகழ்த்துகின்றனர்.

பொய்க்கால் குதிரையாட்டம்

"போலச்செய்தல்" பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக்காட்டும் கலைகளில் பொய்க்கால் குதிரையாட்டமும் ஒன்று. மரத்தாலான பொய்க்காலில் நின்றுகொண்டும் குதிரைவடிவுள்ள கூட்டை உடம்பில் சுமந்துகொண்டும் ஆடும் ஆட்டமே பொய்க்கால் குதிரையாட்டம். அரசன், அரசி வேடமிட்டு ஆடப்படும் இவ்வாட்டம் புரவி ஆட்டம், புரவி நாட்டியம் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. இது மராட்டியர் காலத்தில் தஞ்சைக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

கலைஞர்கள் தங்கள் கால்களை மறைக்கும் உயரத்திற்குத் துணியைக் கட்டிக் கொள்கின்றனர். காலில் சலங்கை அணிந்தும் அரசன் அரசி உடையணிந்தும் கிரீடம் அணிந்தும் ஆடுகின்றனர். குதிரைமேல் ஏறிப் பயணம் செய்வது போன்று கடிவாளத்தை ஆட்டியும் காலை உயர்த்தியும் நான்கு புறமும் ஓடியும் ஆடுகின்றனர்.

பொய்க்கால் குதிரையாட்டத்திற்குப் பாடல்கள் பயன்படுத்தப்படுவதில்லை. நையாண்டி மேளமும் நாகசுரமும் இசைக்கப்படுகின்றன. இது இராஜஸ்தானில் கச்சிகொடி என்றும் கேரளத்தில் குதிரைக்களி என்றும் அழைக்கப்படுகின்றது.

தப்பு ஆட்டம்

'தப்பு' என்ற தோற்கருவியை இசைத்துக்கொண்டே, அதன் இசைக்கு ஏற்ப ஆடுகின்ற நிகழ்கலையே தப்பாட்டமாகும். ஆண்கள் மட்டுமே ஆடிவந்த இந்த ஆட்டம் தற்போது பெண்களாலும் ஆடப்படுகின்றது. இவ்வாட்டம் தப்பாட்டம், தப்பட்டை, தப்பு என்றும் அழைக்கப்படுகின்றது. தப்பு என்பது வட்ட வடிவமாக அமைந்துள்ள அகன்ற தோற்கருவி. கோவில் திருவிழா, திருமணம், இறப்பு, விழிப்புணர்வு முகாம், விளம்பர நிகழ்ச்சி ஆகியவற்றில் தப்பாட்டம் ஆடப்படுகின்றது. 'தப் தப்' என்று ஒலிப்பதால், அந்த ஒலியின் அடியாகத் 'தப்பு' எனப் பெயர் பெற்றதெனக் கூறப்படுகிறது.

"தகக தகதகக தந்தத்த தந்தகக
என்று தாளம்
பதலை திமிலைதுடி தம்பட்ட மும் பெருக"
திருப்புகழ், 143

என்று அருணகிரிநாதர், தப்பாட்ட இசை குறித்துப் பதிவு செய்துள்ளார். இதனைப் 'பறை' என்றும் அழைப்பர்.

ஒன்றைச் சொல்லுவதற்கென்றே (பறைதல்) இசைக்கப்படும் இசைக்கவல்ல தாளக்கருவி பறை. தொல்காப்பியம் குறிப்பிடும் கருப்பொருள்களில் ஒன்றாகப் பறை இடம்பெறுகிறது. மேலும் பறையாடல் பற்றிய செய்திகள் இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.

10th_Tamil_Unit 6.indd 130 24-01-2020 10.06.49 AM

தப்பாட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப அதன் இசைப்பு முறைகளும் ஆட்ட முறைகளும் வேறுபடுகின்றன. வட்டமாக ஆடுதல், இரண்டு வரிசையாக எதிர்எதிர்த் திசையில் நின்று ஆடுதல், அனைவரும் நேர் வரிசையில் நின்று ஆடுதல், குதித்துக் குதித்து ஆடுதல், உட்கார்ந்து எழுதல், நடையாட்டம் ஆகிய ஆட்டக் கூறுகளை இன்றைய கலைஞர்களிடம் காணமுடிகின்றது. தப்பாட்டத்தில் கலைஞர்கள் குழுவாகப் பங்கேற்கின்றனர்.

புலி ஆட்டம்

தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலி ஆட்டமாகும். பாட்டும் வசனமும் இல்லாத ஆட்டங்களில் புலி ஆட்டமும் ஒன்று. விழாக்களில் புலிவேடமிடுவோர் உடம்பெங்கும் புலியைப் போன்று கறுப்பும் மஞ்சளுமான வண்ணக்கோடுகளையிட்டுத் துணியாலான வாலை இடுப்பில் கட்டிக் கொள்வர். தப்பு மேளத்திற்கேற்ப ஒருவரோ, இருவரோ ஆடுவர். புலியைப் போன்று நடந்தும் பதுங்கியும் பாய்ந்தும் எம்பிக்குதித்தும் நாக்கால் வருடியும் பற்கள் தெரிய வாயைப்பிளந்தும் உறுமியும் பல்வேறு அடவுகளை வெளிப்படுத்துகின்றனர்.

தெருக்கூத்து

நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டு வரும் கலையே தெருக்கூத்து. இப்பெயர், அது நிகழ்த்தப்பட்ட இடத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. கூத்து இசையுடன் கூடிய உடல் அசைவியக்கத்துடன் தொடர்புடையது.

திறந்த வெளியை ஆடுகளமாக்கி ஆடை அணி ஒப்பனைகளுடன் இது வெளிப்படுத்தப்படுகிறது. களத்துமேடுகளில் நிகழ்த்தப்பட்ட தெருக்கூத்து, தெருச் சந்திப்புகளிலும் நிகழ்த்தப்படுகிறது; பின்னர்க் கோவில் சார்ந்த கலையாகவும் ஆக்கப்பட்டது. இதில் ஒரு கதையை இசை, வசனம், ஆடல், பாடல், மெய்ப்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைத்து வழங்குவர். திரௌபதி அம்மன் வழிபாட்டின் ஒரு பகுதியாகவும் இது இருக்கிறது.

யார் இவர்?

தெருக்கூத்தைத் தமிழ்க்கலையின் முக்கிய அடையாளமாக்கியவர். "நாடகக்கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள்" என்றவர். இவர் தமிழ்நாட்டின் வழிவழி

நாடகமுறையான கூத்துக்கலையின் ஒப்பனை முறை, கதை சொல்லும் முறைகளையும் எடுத்துக்கொண்டு புதுவிதமான நாடகங்களை உருவாக்கியவர். அதே வேளையில் நாடகத்தில் பயன்படுத்தும் நேரடி இசைமுறையை அறிமுகம்செய்து இசையிலும் மாற்றங்களை நிகழ்த்தியவர். அவர்தான் கூத்துப்பட்டறை ந. முத்துசாமி என்ற கலைஞாயிறு.

இவரின் நாடகங்கள் பெரும்பாலும் சமூக அரசியல் மாற்றங்களைப் பேசின. இந்தியாவில் மட்டுமன்றி உலகின் பல்வேறு நகரங்களிலும் இவரது நாடகங்கள் நடத்தப்பட்டன. இந்திய அரசின் தாமரைத்திரு விருதையும் தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருதையும் பெற்றார்.

10th_Tamil_Unit 6.indd 131 24-01-2020 10.06.50 AM

தெருக்கூத்து, வேளாண்மை செய்வோரின் கலையாக இருந்தது. அருச்சுனன் தபசு என்பது மழை வேண்டி நிகழ்த்தப்படுவதாக இருக்கிறது. கூத்துக்கலைஞர், கூத்தைக் கற்றுக்கொடுப்பவர் ஆகியோரின் அடிப்படையிலும் காலம், இடம் போன்றவற்றின் அடிப்படையிலும் கூத்து நிகழ்த்தப்படுவதில் சிறுசிறு மாறுபாடுகள் உள்ளன. தெருக்கூத்து, பொழுதுபோக்குக் கூறுகளைப் பெற்று நாடகமாக வளர்ச்சியடைந்துள்ளது. இதனைக் கதகளி போன்று செவ்வியல் கலையாக ஆக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தோற்பாவைக் கூத்து

தோலில் செய்த வெட்டு வரைபடங்களை, விளக்கின் ஒளி ஊடுருவும் திரைச்சீலையில் பொருத்தி, கதைக்கேற்ப மேலும் கீழும் பக்கவாட்டிலும் அசைத்துக்காட்டி, உரையாடியும் பாடியும் காட்டுவது தோற்பாவைக் கூத்து. தோலால் ஆன பாவையைக் கொண்டு நிகழ்த்தும் கலையாதலால் தோற்பாவை என்னும் பெயர் பெற்றது. இதில் இசை, ஓவியம், நடனம், நாடகம், பலகுரலில் பேசுதல் ஆகியவை இணைந்துள்ளன. கூத்து நிகழ்த்தும் திரைச்சீலையின் நீளம், அகலம் ஆகியன பாவையின் அமைப்பையும் எண்ணிக்கையையும் பொறுத்து வேறுபடுகின்றன. இந்நிகழ்ச்சியில் பாவையின் அசைவு, உரையாடல், இசை ஆகியனவற்றோடு ஒளியும் முதன்மை பெறுகின்றது.

பாவை குறித்த செய்திகள் சங்ககாலம்முதல் பதினெட்டாம் நூற்றாண்டுவரையான தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. திருக்குறளில் மரப்பாவையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவாசகத்திலும் பட்டினத்தார் பாடலிலும் தோற்பாவைக் கூத்து பற்றிய செய்திகளைக் காணமுடிகிறது. ஊர் ஊராகச் சென்று நிகழ்த்துகிற கூட்டுக்குடும்பக் கலையாகத் தோற்பாவைக் கூத்து விளங்குகிறது. தோற்பாவைக் கூத்து கையுறைப் பாவைக் கூத்து, பொம்மலாட்டம் என்பனவாகவும் மாற்றம் பெற்றுள்ளது.

நிகழ்கலைகள் ஊரக மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்திருக்கின்றன. இவை கற்றோராலும் மற்றோராலும் விரும்பப்படும் கலைகளாக உள்ளன; உழைப்பாளிகளின் உணர்வுகளாக உள்ளன; மக்களின் எண்ண வெளிப்பாடாக, வாழ்க்கையைக் காட்டும் கண்ணாடியாக, மக்களின் சமய வழிபாட்டிலும் வாழ்வியல் நிகழ்வுகளிலும் பிரிக்க முடியாத பண்பாட்டுக் கூறுகளாக விளங்குகின்றன.

எத்திசையும் புகழ் மணக்க.....

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் புகழ்மிக்க பகுதியில், 'இராச சோழன் தெரு' என்பது இன்றும் உள்ளது. இது மாமன்னன் இராசராச சோழன் பல்வேறு நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்ட சிறப்பினை உணர்த்துகின்றது.

ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டுமலர்

கற்பவை கற்றபின்...

1. நீங்கள் அறிந்த நிகழ்கலைகளைத் தனியாகவோ, குழுவாகவோ வகுப்பறையில் நிகழ்த்துக.
2. நீங்கள் வாழும் பகுதியிலுள்ள நிகழ்கலைக் கலைஞர்களை நேர்முகம் கண்டு, அவற்றைத் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.

10th_Tamil_Unit 6.indd 132 24-01-2020 10.06.51 AM

பண்பாடு

நு

அகழாய்வுகள்

(பட்டிமன்றம்)

மனிதன் தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்றும் பண்பாட்டு அளவில் சிறந்த வாழ்வை வெளிப்படுத்திய தமிழர்களின் வரலாற்றை அறிந்துகொள்ளத் தமிழகத்தின் தொன்மையான பகுதிகளை அகழாய்வு செய்தல் இன்றியமையாதது. அகழாய்வு செய்தல் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட நிலப்பகுதியில் தோண்டிச் செதுக்கி ஆராய்தல் ஆகும். அகழாய்வு வரலாறு முழுமை பெற உதவுகிறது. அகழாய்வில் கிடைத்த பொருள்கள் நாம் வாழ்ந்த காலத்தை மட்டுமன்றி, நமது வரலாற்றையும் உணர்த்துகின்றன.

பட்டிமன்ற அழைப்பிதழ்

பள்ளி இலக்கிய மன்றத் தொடக்கவிழாவில் மாணவர்களே பங்கேற்று நடத்தும்

சிந்தனைப் பட்டிமன்றம்

49XYX4

நடுவர்: மாணவர் பூங்குன்றன்

முன்னிலை: தமிழாசிரியர் கலைவாணன்

இன்றைய சூழ்நிலையில் அகழாய்வு என்பது

தேவையான செயல்பாடே!

மாணவர் பாத்திமா

மாணவர் செல்வன்

தேவையற்ற செலவினமே!

மாணவர் முத்து

மாணவர் அன்புமேரி

அனைவரும் வருக!

அறிமுகவுரை (இலக்கிய மன்றச் செயலர்)

அன்பிற்குரிய நல்லுள்ளங்களே! வணக்கம். இன்று நம் பள்ளியில் இலக்கிய மன்றத் தொடக்கவிழா இனிதே தொடங்குகிறது. அதனை முன்னிட்டு நடைபெறவுள்ள பட்டிமன்றத் தலைப்பினை அறிய ஆவலாக இருக்கிறதா? இதோ சொல்கிறேன். இன்றைய சூழ்நிலையில் அகழாய்வு என்பது தேவையான செயல்பாடா? தேவையற்ற செலவினமா? (மாணவர்கள் கரவொலி எழுப்புதல்)

அண்மையில் நடைபெற்ற மாநில அளவிலான பேச்சுப்போட்டியில் முதல் பரிசுபெற்ற நம் வகுப்புத்தோழர் பூங்குன்றன் நடுவராகப் பொறுப்பேற்கிறார். வாதிடுவோராக நம்முடன் பயிலும் முத்து, பாத்திமா, அன்புமேரி, செல்வன் ஆகியோர் பங்கேற்கின்றனர். இதோ பட்டிமன்றம் தொடங்குகிறது.

நடுவர்

அருந்தமிழ் வணக்கம்.

9th_Tamil_Pages 001-121.indd 72 22-12-2020 15:38:52

திட்பமும் நுட்பமும்

மதுரை நகருக்கு அருகே உள்ள கீழடி என்னுமிடத்தில் நடத்தப்பட்ட அகழாய்வில் சுடுமண் பொருள்கள், உலோகப் பொருள்கள், முத்துகள், கிளிஞ்சல் பொருள்கள், மான்கொம்புகள், சோழிகள், கிண்ணங்கள், துளையிடப்பட்ட பாத்திரங்கள், இரத்தினக்கல் வகைகள், பழுப்பு, கறுப்பு, சிவப்பு–கறுப்புப் பானைகள், சதுரங்கக் காய்கள், தானியங்களைச் சேகரிக்கும் கலன்கள், செம்பு, சங்கு வளையல்கள், எலும்பினால் ஆன கூர் முனைகள், தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், கற்கருவிகள், நீர் சேகரிக்கும் பெரிய மட்கலன்கள், சிறிய குடுவைகள், உறைக்கிணறுகள், சுடுமண் கூரை ஓடுகள் போன்ற பல்வேறு தொல்லியல் பொருள்கள் கிடைத்துள்ளன. மூன்று வெவ்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த இவற்றுள் தொன்மையானவை சுமார் 2300ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கருதப்படுகின்றன. இதுவரை அகழாய்வு செய்யப்பட்ட பெரும்பான்மையான இடங்கள், இறப்புத் தொடர்பான தடயங்களை வெளிப்படுத்துவனவாக அமைந்திருந்தன. ஆனால், கீழடியில் கண்டறியப்பட்டுள்ள முழுமையான வாழ்விடப்பகுதியும் செங்கல் கட்டுமானங்களும் இதரப்பொருள்களும் தமிழரின் உயரிய நாகரிகத்தைக் கண்முன் காட்டும் சாட்சிகளாய் அமைந்துள்ளன.

கீழடி அகழாய்வுக்களம்

மதிப்பிற்குரிய தமிழாசிரியர் அவர்களே! அன்பிற்குரிய ஆசிரியப் பெருமக்களே! அருமை மாணவ நண்பர்களே! அனைவருக்கும் அன்பான வணக்கம்.

வரலாற்றை அறிவதற்கு வழிகாட்டும் ஒரு தலைப்பெடுத்துப் பேச முனைகின்றோம். ஒரு செடி வளர்வதற்கு, விதையை ஊன்றுவதற்குக்கூடக் குழி தோண்டுகிறோம். தோண்டிய குழிக்குள் ஒரு பழம்பொருள் கிடைத்தால்கூடக் கொண்டாடுகிறோம். அதில் பயன் இருக்கிறதா என்பதைச் சிந்திப்பதற்கே இந்த மாபெரும் சிந்தனைப் பட்டிமன்றம்.

ஆய்வு என்பது அறிவின் வெளிப்பாடு. அதற்கு ஓய்வு என்பதே கிடையாது. இதோ! இன்றைய சூழ்நிலையில் அகழாய்வு என்பது தேவையற்ற செலவினமே! என்னும் தலைப்பில் உரைவீச்சைத் தொடங்க வருமாறு அன்புத் தோழர் முத்து அவர்களை அழைத்து என் முன்னுரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மாணவர் கரவொலி)

9th_Tamil_Pages 001-121.indd 73 22-12-2020 15:38:52

முத்து

உங்கள் அனைவருக்கும் என் பணிவான வணக்கம். நடுவர் அவர்களே! உள்ளங்கையில் உலகத்தை அளந்து பார்க்கும் காலகட்டத்தில் மண்ணைத் தோண்டி எலும்புகளைத் தேடும் மனிதர்களைப் பற்றி நான் என்ன சொல்ல?

அறிவியல் உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பழைய தலைமுறையைப் பற்றித் தெரிந்து என்ன செய்யப் போகிறோம்? செல்லிடப் பேசிக்குள்ளே, உலகத்தைச் சுற்றும் வேளையில் அகழாய்வில் கிடைக்கும் செல்லாக் காசுகளை வைத்து என்ன செய்வதாம்?

வானுலகத்தில் பறந்து செவ்வாயில் குடியேற வழிதேடும் நேரத்தில் பழைய வரலாற்றுக்கு முந்தைய காலத்தைப் பற்றி அறிந்து என்ன பயன்? உள்ளங்கையில் உலகம் இருக்கிறது. மடிக்கணினி மலைக்க வைக்கிறது. அதையெல்லாம் விட்டுவிட்டு மண் ஓடுகள், இறந்தோரைச் சுமந்த மண்தாழிகள் இவற்றைக் கண்டறிந்து எதைச் சாதிக்கப் போகிறோம்?

நாம் கண்டுபிடிக்க வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன. அறிவை விரிவுசெய் எனப் பாவேந்தர் கூறினார். நாம் அறிவை வீணாக்கிக் கொண்டிருக்கிறோம். எனவே, நடுவர் அவர்களே! அகழாய்வு என்பது தேவையற்ற செலவினமே, தேவையற்ற செலவினமே என்றுகூறி என் வாதத்தை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

நடுவர்

நண்பர் முத்து, காரசாரமான தன் வாதத்தை முன்வைத்தார். மிகவும் அருமை. இதற்குப் பாத்திமா, எப்படித்தான் பதில் சொல்லப் போகிறார் என்பது தெரியவில்லை. வாங்கம்மா! வாங்க எப்படிச் சமாளிக்கப் போறீங்க!

பாத்திமா

அவையோரை வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

மண்ணைத் தோண்டிப் பார்ப்பது எலும்புகளைச் சேகரித்து எண்ணிப் பார்ப்பதற்கன்று. நம் முன்னோர்களின் பண்பாட்டை எண்ணிப் பார்ப்பதற்கு. கடந்த காலத்தைப் புரிந்துகொள்ளாமல் நிகழ்காலத்தில் வெற்றிபெற முடியுமா? எதிர்காலத்தைத்தான் கணிக்க இயலுமா?

நமது வரலாறு மிக நீண்டது. 150 ஆண்டுகளுக்கு முன்னால் 1863ஆம் ஆண்டு இராபர்ட் புரூஸ்புட் என்னும் தொல்லியல் அறிஞர் சென்னைப் பல்லாவரம் செம்மண் மேட்டுப்பகுதியில் எலும்பையும் கற்கருவியையும் கண்டுபிடித்தார். இந்தக் கற்கருவிதான் இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட முதல் கல்லாயுதம். இந்தக் கல்லாயுதம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பே, ரோமானியர்களின் பழங்காசுகளைக் கோவையில் கண்டெடுத்தோம்.

அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய மட்பாண்டங்கள் கிடைத்தன. அதனால், ரோமானியர்களுக்கும் நமக்கும் இருந்த வணிகத் தொடர்பு உறுதிப்படுத்தப்பட்டது.

அதற்குப் பின்னால், 1914ஆம் ஆண்டு ஆதிச்சநல்லூரில் நடத்தப்பட்ட அகழாய்வில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. நண்பர் சொன்னார்! உள்ளங்கையில் உலகம் இருக்கிறதாம். மடிக்கணினி மலைக்க வைக்கிறதாம். நம் முன்னோர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, அறிவியல் அடிப்படையிலான பண்பாட்டு வாழ்க்கையை வாழ்ந்தவர்கள். தமிழர்களின் உணவு, உடை, வாழிடம் முதலியன இயற்கையைச் சிதைக்காத இயல்புகளைக் கொண்டவை என்பதற்கு அகழாய்வில் கண்ட சான்றுகளே ஆவணங்களாகத் திகழ்கின்றன.

எதிரணித் தலைவருக்கு ஒன்றைச் சொல்லி விடைபெறுகிறேன். மடிக்கணினியில் பூக்கின்ற ரோஜா மணக்காது; செல்லிடப் பேசியில் பார்க்கும் வற்றல் குழம்பு சுவைக்காது; மாறாக நமது மூளையைக்

9th_Tamil_Pages 001-121.indd 74 22-12-2020 15:38:52

தெரிந்து தெளிவோம்

பட்டிமண்டபம்

பட்டிமண்டபம் என்பதுதான் இலக்கியவழக்கு. ஆனால் இன்று நடைமுறையில் பலரும் பட்டிமன்றம் என்றே குறிப்பிடுகிறார்கள். பேச்சுவழக்கையும் ஏற்றுக்கொள்கிறோம்.

மகத நன்நாட்டு வாள்வாய் வேந்தன், பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண்டபம்
என்று சிலப்பதிகாரத்திலும் (காதை 5, அடி 102)

பட்டிமண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின் என்று மணிமேகலையிலும் (காதை 1, அடி 16)

பட்டிமண்டபம் ஏற்றினை, ஏற்றினை; எட்டினோடு இரண்டும் அறியேனையே என்று திருவாசகத்திலும் (சதகம் 41)

பன்ன அரும் கலைதெரி பட்டிமண்டபம் என்று கம்பராமாயணத்திலும் (பாலகாண்டம், நகரப் படலம் 154) பட்டிமண்டபம் என்ற சொல் பயின்று வருகிறது.

குப்பைத்தொட்டியாக்கும்; நமது மண்ணை நெகிழிக் கிடங்காக மாற்றும். ஆனால், அகழாய்வில் கிடைத்த ஆவணங்களோ அடுத்த தலைமுறைக்கு நம் பண்பாட்டின் மேன்மையைப் பறைசாற்றும். எனவே, நடுவர் அவர்களே! அகழாய்வு என்பது நமக்கு மிகமிகத் தேவையான செயல்பாடே! என்று கூறி நல்ல தீர்ப்பு வேண்டி விடைபெறுகின்றேன்.

நடுவர்

அடேயப்பா! பாத்திமாவின் வார்த்தைகளுக்குள் மின்னிய வரலாறு புதிய வெளிச்சத்தைக் காட்டியது. என்ன அன்புமேரி! என்ன செய்யப் போறீங்க? பேசத்தான் போறீங்களா? இல்லை பட்டிமன்றத்தை இப்படியே முடிச்சிட்டுத் தீர்ப்பைச் சொல்லிவிடட்டுமா?

அன்புமேரி

பாரதியை வணங்கித் தொடங்குகின்றேன்.

ஐயா, நடுவர் அவர்களே! எங்க ஊர்ல ஒரு சொலவடை சொல்லுவாங்க. பகுமானக் கோழி பறந்துக்கிட்டே முட்டை போட்டுச்சாம்.

நடுவர்

என்ன! பகுமானக் கோழி பறந்துக்கிட்டே முட்டை போட்டுச்சா? சரி, தலைப்புக்கு வாங்கம்மா.

அன்புமேரி

இல்லைங்கய்யா, வெட்டிப் பெருமைக்காகவே வீறாப்பா பேசுபவர்களைப் பற்றிச் சொல்ல வந்தேன். நாம் எப்படிப்பட்ட காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்? உலகத்தில் குட்டி நாடுகள்கூட அறிவியல் விந்தைகளால் வானத்தை அளந்து பார்க்கின்றன. அமெரிக்காவில் இருக்கும் என் தோழியின் நட்பை இணையத்தளம் இணைத்துக் காட்டுகிறது. விபத்தில் துண்டிக்கப்பட்ட கால்களுக்கு அறிவியல், செயற்கைக் கால் பொருத்தி அழகு பார்க்கிறது. பழுதுபட்ட இதயத்திற்கு மாற்று இதயம் பொருத்தி மருத்துவ அறிவியல் மனிதனை வாழவைக்கிறது.

புற்றுநோய் என்னும் அரக்கனை வீழ்த்த, புதிய மருந்து கண்டுபிடிக்க அறிவியலாளர்கள் பெருமுயற்சி மேற்கொண்டு வருகிறார்கள். இன்னும் எவ்வளவோ சாதனைகள் கண்முன்னே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்த உலகப்போக்கிற்கு ஈடுகொடுத்து நாமும் நமது அறிவியல் பயணத்தை முன்னெடுக்காமல் அகழாய்வுக்குள் விழுந்து கிடப்பது என்ன நியாயம்? நானொன்றும் அகழாய்விற்கு எதிரானவள் இல்லை.

இன்றைய மாறிவரும் உலகச் சூழலில் அகழாய்வு என்ன, முக்கியத் தேவைகளுள் ஒன்றா? இருபத்தோராம் நூற்றாண்டு

9th_Tamil_Pages 001-121.indd 75 22-12-2020 15:38:52

அறிவியலால் வியக்க வைக்கின்ற காலத்தில், இந்தப் பழைய காலத்துப் பொருள்களையும் கட்டடங்களையும் கண்டுபிடித்து என்ன சாதிக்கப் போகின்றோம்?

நடுவர் அவர்களே! பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே என்று நமது இலக்கணப் புலவர் ஒருவர் சொன்னதை எதிரணிக்கு நினைவூட்டி நல்ல தீர்ப்புத் தருமாறு கேட்டு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

நடுவர்

அருமை, அன்புமேரி... அருமை. உங்களுக்கு ஆதரவா நன்னூலை இயற்றிய பவணந்தி முனிவரையும் துணைக்கு இழுத்து வந்துட்டீங்க. மிக்க மகிழ்ச்சி. இப்போ இந்த அணி கொஞ்சம் சோர்ந்து போனமாதிரி தெரியுது. நண்பர் செல்வன் வாங்க. எப்படிப் பதில் சொல்லப் போறீங்க.

செல்வன்

அவைக்கு என் பணிவான வணக்கத்தைக் கனிவோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

நடுவர் அவர்களே! அறிவியலைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுகிறார் சகோதரி அன்புமேரி. ஏதோ, நாங்கள் எல்லாம் அறிவியலுக்குப் பகைவர் என்பதைப் போல. அகழாய்வே அறிவியலை அடிப்படையாகக் கொண்டதுதான் என்பதை அறியாதவராக இருக்கின்றார். இதில் பவணந்தி முனிவரைவேறு சாட்சிக்கு இழுத்திருக்கிறார். பழமையின் பட்டையை உரித்துக் கொண்டுதான் புதுமையே பிறக்கும். தனியாகப் புதுமைக்கென்று வேரோ விதையோ கிடையாது நண்பர்களே!

கடந்த காலத்தை ஆராய்ந்து அறிந்துகொண்டால்தான் நிகழ்காலத்தைச் செம்மைப்படுத்திக் கொள்ளலாம். வருங்காலம் வளமாக அமைவதற்கு வலிமையான கட்டமைப்பை உருவாக்கலாம். நமது முன்னோர்கள் வாழ்ந்து பெற்ற பட்டறிவை வகைப்படுத்தித் தொகுத்துப் பார்ப்பதற்குத் தொல்லியல் ஆய்வே பெரும் கல்வியாக அமைகின்றது.

வேடிக்கை என்னவென்றால், தமிழகத்தில் பண்டைக் காலத்திலேயே நமது தமிழ் முன்னோர்கள் செம்மையான பண்பாட்டுக் கட்டமைப்போடு வாழ்ந்திருக்கிறார்கள். நாம்தான் அந்தத் தொன்மை வரலாற்றின் உண்மையை அறியாமல் தொடர்ச்சி அறுபட்டு இடையில் எங்கோ பாதைமாறி, பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு நாம் ஒரு புதிய நாகரிகச் சூழலைப் பழகிக் கொண்டிருக்கிறோம். அது என்னவென்றால், ஒரு பொருளை ஒருமுறை பயன்படுத்திவிட்டுத் தூக்கி எறி என்பதாகும். எழுதுகிற பேனா, குடிக்கிற தண்ணீர்ப்புட்டி, பழுதுபட்ட மடிக்கணினி, செல்லிடப்பேசி போன்றவற்றை ஒருமுறை பயன்படுத்தித் தூக்கி எறிகிற வழக்கத்தால் மின்சாதனக் குப்பைகள் மலையெனக் குவிந்துவிட்டன. சுற்றுச்சூழல் சிதைந்து புற்றுநோயாளிகள் பெருகும் அபாயம் வந்துவிட்டது. ஆனால், நமது முன்னோர்கள் கண்டுபிடித்துச் சுடுமண்ணிலும் உலோகத்திலும் செய்து பயன்படுத்திய பொருள்கள் பல தலைமுறைகளைக் கடந்தும் பயன்பாட்டில் இருந்திருக்கின்றன.

பழுதுபட்டால் சரிசெய்து மீண்டும் பயன்படுத்துவோம். இது கடந்த நூற்றாண்டுவரை தொடர்ந்தது. எதிரணி கூறிய போலி அறிவியல் பண்பாட்டுச் சூழல் வளர்ந்த பின்தான் "பயன்படுத்து, தூக்கி எறி" என்ற பழக்கம் பிறந்து வளர்ந்தது. அதன் தொடர்ச்சி எதுவரை வந்தது தெரியுமா? பெற்றெடுத்து வளர்த்த தாய்தந்தையரையும் கூடப் பயன்படுத்திவிட்டு முதியோர் இல்லத்தில் தூக்கி எறிகிற மூடத்தனம் உருவாகியிருக்கிறது.

எனவே, நடுவர் அவர்களே! அகழாய்வு தரும் சான்றுகளின் மூலம் நமது வளமான வரலாற்றையும் பண்பாட்டையும் அறிந்துகொண்டு வலிமையான எதிர்காலத்தை உருவாக்க முடியும். நெடிய வரலாறு நமக்கு இருக்கிறது. எனவே, அதனை உறுதியுடன்

9th_Tamil_Pages 001-121.indd 76 22-12-2020 15:38:53

வலியுறுத்துகிறோம்.

நடுவர் அவர்களே! அகழாய்வு என்பது தேவையற்ற செலவினமல்ல. தேவையான செயல்பாடே! என்று திசைகள்தோறும் அறிவியல் குரல்கள் ஒலிக்கத் தொடங்கிவிட்டன. நல்ல தீர்ப்புத் தாருங்கள். நன்றி, வணக்கம்.

நடுவர்

செல்வனின் ஆய்வுக் கண்ணோட்டம் அருமையானது. அரிய செய்திகளோடு இரண்டு அணிகளும் வாதிட்டுள்ளன. 1863இல் ஆரம்பித்த அகழாய்வுப் பணி இன்றுவரையிலும் தொடரும்போது பல உண்மைகள் உறைக்கத்தொடங்கி இருக்கின்றன. பழையனவற்றை ஏன் தோண்டியெடுத்துப் பாதுகாக்க வேண்டும்? ஆராய வேண்டும்? அதற்கு நம் புழங்குபொருள் பண்பாடே சான்றாக நிற்கின்றது. தேவையற்ற செயல்பாடே! என்று பேசிய அணியினர் கூறியது போல அகழாய்வு என்பது அறிவியலுக்கு எதிரான சிந்தனை அன்று.

அறிவியலில் இரண்டு வகையுண்டு. ஒன்று வணிக அறிவியல். மற்றொன்று மக்கள் அறிவியல். வணிக அறிவியல், முதலீட்டைப் பெருக்குவதற்காகப் பொருள்களைக் கண்டுபிடிக்கிறது. அதனை விற்பனை செய்கிறது. அதன் விளைவுதான் நெகிழிக் குப்பைகள். ஆனால், அகழாய்வில் கிடைத்த சுடுமண், கல், இரும்பு, செம்பு ஆகியவற்றாலான புழங்கு பொருள்கள், கருவிகள் பல நூற்றாண்டுகளாக வாழையடி வாழையாகப் பயன்பாட்டில் இருந்தன. இயற்கையோடு இணைந்த பண்பாட்டு வாழ்க்கை நம்முடையது என்பதனை அறிந்துகொண்டோம். இதுவே, மக்கள் அறிவியல்.

மக்கள் அறிவியல் என்கிற மகத்தான சிந்தனையைப் புரிந்துகொள்வதற்கும் நமது பண்பாட்டின் மேன்மைகளை இன்றைய தலைமுறை எடுத்துக்கொண்டு சிறப்பாக வாழ்வதற்கும் அகழாய்வு துணைநிற்கின்றது.

எனவே, அகழாய்வு என்பது அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டிய, புரிந்துகொள்ள வேண்டிய, தேவையான செயல்பாடே! அகழாய்வைத் தொடர்வோம், தொன்மை வரலாற்றை மீட்போம் என்ற எனது தீர்ப்பினைக் கூறி, நல்ல வாய்ப்பைத் தந்த இலக்கிய மன்றத்திற்கு நன்றி பாராட்டி, பட்டிமன்றத்தை நிறைவு செய்கிறேன்.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

வாழிய பாரத மணித்திருநாடு!

நன்றி, வணக்கம்.

கற்பவை கற்றபின்...

1. இளைஞர்களிடையே பண்பாட்டினை வளர்ப்பதில் பெரும்பங்கு வகிப்பது குடும்பமா? சமூகமா? – என்னும் தலைப்பில் சொற்போர் நிகழ்த்துக.
2. தொல்லியல் துறை சார்ந்த அலுவலர் ஒருவரிடம் நேர்காணல் நிகழ்த்துவதற்கான வினாப்பட்டியலை உருவாக்குக.
3. உங்கள் ஊருக்கு அருகில் உள்ள தொன்மையான இடத்தைப் பார்வையிட்டுக் குறிப்பு எழுதுக.

4A7UYR

9th_Tamil_Pages 001-121.indd 77 22-12-2020 15:38:53

இயல் ஆறு

பேசும் ஓவியங்கள்

IVMYLX

நுழையும்முன்

ஆயகலைகள் அறுபத்து நான்கனுள் ஒன்று ஓவியக்கலை. காண்போரின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்திழுக்கும் ஆற்றல் ஓவியத்திற்கு உண்டு. ஒரு கருத்தைப் பேச்சாலும் எழுத்தாலும் வெளிப்படுத்துவதைக் காட்டிலும் ஓர் ஓவியத்தால் மிக நுட்பமாகப் புரிய வைத்துவிட முடியும். அதனால்தான் ஓவியத்தை நுண்கலைகளுள் முதன்மையான ஒன்றாகக் கருதுகின்றனர். இத்தகைய சிறப்பு மிக்க ஓவியக்கலையைப் பற்றி அறிவோம்.

ஒரு விடுமுறை நாளன்று கண்ணனும் மணியும் அரசுப் பொருள்காட்சிக் கூடத்திற்குச் செல்கின்றனர். ஒவ்வோர் அரங்காகக் கண்டுகளித்தவாறே சென்று இறுதியில் ஓவியக்கூடத்தை அடைகின்றனர்.

மணி : கண்ணா அந்த அறிவிப்புப் பலகையைப் பார்.

அறிவிப்புப் பலகை

ஓவியங்களைத் தொடாமல் பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம். ஓவியங்களுக்குக் கீழே உள்ள பொத்தானை அழுத்தினால் ஓவியங்கள் உங்களுடன் பேசும்.

கண்ணன் : மணி! இங்குக் குகை போன்று வடிவமைக்கப்பட்ட பாறையில் அழகான ஓவியங்கள் வரையப்பட்டு உள்ளன. அந்தப் பொத்தானை அழுத்து. குகை ஓவியம் பேசுவதைக் கேட்போம்.

(மணி பொத்தானை அழுத்துகிறான்)

குகை ஓவியம் : நான்தான் குகை ஓவியம் பேசுகிறேன். பழங்கால மனிதர்கள் குகைகளில்தான் வாழ்ந்து வந்தனர். அங்குதான் அவர்கள் முதலில் ஓவியங்களை வரையத் தொடங்கினார்கள். செய்திகளை மற்றவர்களுக்குத் தெரிவிப்பதற்காக எங்களை வரைந்தனர். வேட்டைக்குச் செல்லுதல், நடனம் ஆடுதல், போர் செய்தல் போன்ற காட்சிகள் வரையப்பட்டன. நாங்கள் பெரும்பாலும் கோட்டோவியமாக இருப்போம். மண் மற்றும் கல் துகள்களைக் கொண்டு எங்களுக்கு வண்ணம் தீட்டினர். எங்களை உற்று நோக்கினால் பழந்தமிழரின் வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ளலாம்.

மணி : கண்ணா! இதோ இங்குள்ள சுவர் ஓவியத்தின் பொத்தானை அழுத்து.

(கண்ணன் பொத்தானை அழுத்துகிறான்.)

சுவர் ஓவியம் : மனிதர்கள் வீடுகட்டி வாழத் தொடங்கிய காலம் முதல் சுவர் ஓவியங்களாகிய எங்களை வரைந்து வருகின்றனர். அரண்மனைகள், மண்டபங்கள், கோவில்கள் போன்றவற்றின் சுவர்களிலும் மேற்கூரைகளிலும் எங்களைக் காணமுடியும். சித்தன்னவாசல் என்னும் ஊரில் எங்களைப் பார்த்திருப்பீர்கள். எங்களை எவ்வாறு வரைந்தனர் தெரியுமா? முதலில் ஆற்று மணலுடன் சுண்ணாம்பைச் சேர்த்துச் சுவரைச் சமப்படுத்துவர். சுவர் ஈரப்பதமாக இருக்கும்போது எங்களை வரைவர். சுவர் உலர்ந்தபிறகு எங்களை வரைவதும் உண்டு. தஞ்சைப் பெரியகோயிலில் சுவர் ஓவியங்களான எங்களை ஏராளமாகக் காணமுடியும். கருவறைச் சுற்றுச்சுவரிலும் மண்டபங்களின் சுவர்களிலும் நாங்கள் அழகாகக் காட்சியளிக்கிறோம். நாயன்மார்களில் ஒருவரான சுந்தரரின் வாழ்க்கை நிகழ்வுகளாக நாங்கள் வரையப்பட்டிருக்கிறோம்.

மணி : கண்ணா, வா! அதோ! அங்குள்ள துணி ஓவியங்களைப் பார்ப்போம்.

(கண்ணன் துணி ஓவியத்தின் அருகிலுள்ள பொத்தானை அழுத்துகிறான்.)

துணி ஓவியம் : துணிகளில் ஓவியங்கள் வரையும் முறை பழங்காலம் முதலே வழக்கத்தில் இருந்துள்ளது. ஓவியம் வரையப் பயன்படும் துணியை எழினி, திரைச்சீலை, கிழி,

www.cbsetamil.com
7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 128 20-03-2020 17:48:05

படாம் எனப் பல பெயர்களில் அழைப்பர். சீவகசிந்தாமணிக் காப்பியத்தில் குணமாலை என்னும் தலைவி யானையைக் கண்டு அஞ்சிய காட்சியைச் சீவகன் துணியில் வரைந்ததாகக் கூறப்பட்டுள்ளது. தற்காலத்தில் எங்களைக் கலம்காரி ஓவியங்கள் என்னும் பெயரில் தமிழகத்திலும் ஆந்திராவிலும் ஓவியர்கள் வரைந்து வருகின்றனர்.

கண்ணன் : மணி, வா! அந்த ஓலைச்சுவடி ஓவியத்தைப் பார்ப்போம்.

(கண்ணன் ஓலைச்சுவடி ஓவியத்தின் அருகிலுள்ள பொத்தானை அழுத்துகிறான்)

தெரிந்து தெளிவோம்

புனையா ஓவியங்கள் பற்றி நம் இலக்கியங்கள் கூறும் செய்திகள்

புனையா ஓவியம் கடுப்பப் புனைவில்
– நெடுநல்வாடை

புனையா ஓவியம் புறம் போந்தன்ன
–மணிமேகலை

ஓலைச்சுவடி ஓவியம் : ஓலைச்சுவடிகள் மீது எழுத்தாணிகளைக் கொண்டு கோட்டோவியமாகவும் வண்ணப்பூச்சு ஓவியமாகவும் எங்களை வரைவார்கள். நாங்கள் பெரும்பாலும் இதிகாசம் மற்றும் புராணக் காட்சிகளாகவே இருக்கிறோம். தற்காலத்தில் எங்களைக் காண்பது அரிதாகிவிட்டது. தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்திற்குச் சென்றால் எங்களைக் காணலாம்.

மணி: தாள்களில் ஓவியம் வரையும்போதே நாம் அழிப்பான்களைக் கொண்டு பலமுறை அழித்து அழித்து வரைகிறோம். ஒருமுறை எழுத்தாணியால் கீறிவிட்டால் திருத்தமுடியாத ஓலைச்சுவடிகளில் நம் முன்னோர் ஓவியம் வரைந்துள்ளனர். அவர்களின் திறமையை எண்ணிப் பார்த்தால் வியப்பாக இருக்கிறது.

கண்ணன் : சரி, வா! செப்பேட்டுஓவியம் என்ன சொல்கிறது என்று கேட்போம்.

(கண்ணன் செப்பேட்டு ஓவியத்தின் அருகிலுள்ள பொத்தானை அழுத்துகிறான்)

செப்பேட்டு ஓவியம் : முற்காலத்தில் மன்னர்களின் ஆணைகளையும் அரசு ஆவணங்களையும் செப்பேடுகளில் பொறிப்பது வழக்கம். அதைப்போல உளிகொண்டு வரைகோடுகளாக எங்களையும் வரைந்தனர். பொதுவாக நீர்நிலைகள், செடிகொடிகள், பறவைகள், விலங்குகள், குறியீடுகள் போன்றவையாக எங்களைக் காணலாம்.

தெரிந்து தெளிவோம்

ஓவிய மண்டபத்தில் பல வகை ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. ஓவியங்கள் குறித்து அறிந்தோர் அறியாதவர்களுக்கு விளக்கிக் கூறினர் என்ற செய்தி பரிபாடலில் இடம் பெற்றுள்ளது.

இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம்
துன்னுநர் சுட்டவும் சுட்டு அறிவுறுத்தவும்
– பரிபாடல் (19:54–55)

கண்ணன் : அங்கே சில புதுமையான ஓவியங்கள் காணப்படுகின்றனவே! வா! சென்று பார்க்கலாம்.

மணி : தந்த ஓவியங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதே! இவை யார் தந்த ஓவியங்களாக இருக்கும்?

www.cbsetamil.com
7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 129 20-03-2020 17:48:05

(கண்ணன் தந்த ஓவியத்தின் அருகிலுள்ள பொத்தானை அழுத்துகிறான்)

தந்த ஓவியம் : நாங்கள் யானைத் தந்தங்களின் மீது வரையப்பட்ட ஓவியங்கள். வயது முதிர்ந்து இறந்த யானையின் தந்தங்களின்மீது பலவகை நீர்வண்ணங்களைப் பயன்படுத்தி அழகான ஓவியங்களாக எங்களை வரைவார்கள். எங்களைக் கேரள மாநிலத்தில் அதிகமாகக் காணமுடியும்.

கண்ணன் : வா! அங்கே உள்ள கண்ணாடி ஓவியங்களைப் பார்ப்போம்.

(கண்ணன் கண்ணாடி ஓவியத்தின் அருகிலுள்ள பொத்தானை அழுத்துகிறான்.)

கண்ணாடி ஓவியம் : கண்ணாடிகள் முகம் பார்க்க மட்டும்தான் பயன்படும் என நினைத்திருப்பீர்கள். ஆனால், அழகிய வண்ண ஓவியங்களாகிய எங்களை வரையவும் கண்ணாடிகளைப் பயன்படுத்துகின்றனர். பலவகையான உருவங்கள், இயற்கைக் காட்சிகள் போன்றவைகளாக நாங்கள் வரையப்படுகிறோம். எங்களை உருவாக்கும் ஓவியர்கள் தஞ்சாவூரில் மிகுதியாக உள்ளனர்.

மணி : அடடா, ஓவியங்களில்தான் எத்தனை வகைகள்! இதோ! இருபதாம் நூற்றாண்டு ஓவியங்கள் என்னும் இறுதிப் பகுதிக்கு வந்துவிட்டோம். அதோ! அங்கே நாம் இப்போது வரைவது போலத் தாள்களில் வரையப்பட்ட ஓவியங்கள் உள்ளன. வா, சென்று பார்க்கலாம்.

(கண்ணன் தாள் ஓவியத்தின் அருகிலுள்ள பொத்தானை அழுத்துகிறான்)

தாள் ஓவியம் : தற்காலத்தில் பரவலான பயன்பாட்டில் இருப்பவர்கள் நாங்களே. கோட்டோவியங்கள், வண்ண ஓவியங்கள், நவீன ஓவியங்கள் எனப் பலவகையான வடிவங்களில் நாங்கள் காணப்படுகின்றோம். கரிக்கோல், நீர்வண்ணம், எண்ணெய் வண்ணம் ஆகியவற்றைப் பயன்படுத்தி எங்களை வரைகின்றனர்.

(கண்ணன் அருகிலிருந்த கருத்துப்பட ஓவியத்தின் பொத்தானை அழுத்துகிறான்.)

கருத்துப்பட ஓவியம் : அரசியல் கருத்துகளை எளிமையாக விளக்குவதற்கு நாங்கள் பயன்படுகிறோம். இந்தியா இதழில் பாரதியார்தான் எங்களை முதன்முதலில்

தெரிந்து தெளிவோம்

வேறுபெயர்களை அறிவோம்

ஓவியம்	ஓவு, ஓவியம், ஓவம், சித்திரம், படம், படாம், வட்டிகைச்செய்தி
ஓவியம் வரைபவர்	கண்ணுள் வினைஞர், ஓவியப் புலவர், ஓவமாக்கள், கிளவி வல்லோன், சித்திரக்காரர், வித்தகர்
ஓவியக் கூடம்	எழுதெழில் அம்பலம், எழுத்துநிலை மண்டபம், சித்திர அம்பலம், சித்திரக்கூடம், சித்திரமாடம், சித்திரமண்டபம், சித்திர சபை

www.cbsetamil.com
7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 130 20-03-2020 17:48:05

தமிழில் அறிமுகப்படுத்தினார். இப்போது பெரும்பாலான இதழ்களில் நீங்கள் எங்களைப் பார்க்க முடியும். எங்களுடைய மற்றொரு வடிவமே கேலிச்சித்திரம் ஆகும். மனித உருவங்களை விந்தையான தோற்றங்களில் நகைச்சுவை தோன்றும்படி வரைவதையே கேலிச்சித்திரம் என்பர்.

(கண்ணன் நவீன ஓவியத்தின் அருகிலுள்ள பொத்தானை அழுத்துகிறான்)

பாரதியார் வெளியிட்ட கேலிச்சித்திரம்

தெரிந்து தெளிவோம்

ஐரோப்பியக் கலை நுணுக்கத்துடன் இந்தியக் கதை மரபுகளை இணைத்து ஓவியங்களில் புதுமைகளைப் புகுத்தியவர் இராஜா இரவிவர்மா. இவரது ஓவியமுறைகள் பிற்காலத்தில் நாட்காட்டிகளில் அதிகம் பயன்படுத்தப்பட்டன. நாட்காட்டி ஓவியம் வரையும் முறையின் முன்னோடிகளுள் ஒருவராகக் கருதப்படுபவர் கொண்டையராஜு. நாட்காட்டி ஓவியங்களைப் பசார் பெயிண்டிங் என்றும் அழைப்பர்

நவீன ஓவியம் : ஓவியக்கலையின் மிகப் புதுமையான வடிவமாக நாங்கள் விளங்குகிறோம். புதுமையான பார்வையில் புதிய கருத்துகள் வெளிப்படுமாறு எங்களை வரைகின்றனர். பார்வையாளர்களின் மனப்பான்மைக்கு ஏற்பப் பொருள்கொள்ளும் வகையில் கோடுகளாகவும் கிறுக்கல்களாகவும் நாங்கள் வரையப்படுகிறோம். பல வண்ணக் கலவைகளைக் கொண்டும் எங்களை வரைகின்றனர்.

மணி : இந்தக் கண்காட்சியின் மூலம் பலவகையான ஓவியங்களைப் பற்றி அறிந்து கொண்டோம்.

கண்ணன் : அதிலும் ஓவியங்களே நம்மோடு பேசியது மிகமிகச் சிறப்பாக இருந்தது. இந்த நாளை நம்மால் மறக்கவே முடியாது! நாமும் சிறந்த ஓவியங்களை வரைந்து பழகுவோம்.

கற்பவை கற்றபின்

1. உமக்குப் பிடித்த காட்சியை வரைந்து வண்ணம் தீட்டுக.
2. பருவ இதழ்களில் வெளிவந்த பலவகை ஓவியங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு உருவாக்குக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. குகை ஓவியங்களில் வண்ணம் தீட்டப் பயன்பட்ட பொருள்களில் ஒன்று _____.

அ) மண்துகள் ஆ) நீர் வண்ணம் இ) எண்ணெய் வண்ணம் ஈ) கரிக்கோல்

www.cbsetamil.com
7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 131 20-03-2020 17:48:05

2. நகைச்சுவை உணர்வு வெளிப்படுமாறு வரையப்படும் ஓவியம் _____.

அ) குகை ஓவியம் ஆ) சுவர் ஓவியம்

இ) கண்ணாடி ஓவியம் ஈ) கேலிச்சித்திரம்

3. 'கோட்டோவியம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) கோடு + ஓவியம் ஆ) கோட்டு + ஓவியம்

இ) கோட் + டோவியம் ஈ) கோடி + ஓவியம்

4. 'செப்பேடு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) செப்பு + ஈடு ஆ) செப்பு + ஓடு

இ) செப்பு + ஏடு ஈ) செப்பு + யேடு

5. எழுத்து + ஆணி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

அ) எழுத்துஆணி ஆ) எழுத்தாணி

இ) எழுத்துதாணி ஈ) எழுதாணி

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர் _____.
2. கலம்காரி ஓவியம் என்று அழைக்கப்படுவது _____.
3. மன்னர்களின் ஆணைகளையும் அரசு ஆவணங்களையும் _____ மீது பொறித்துப் பாதுகாத்தனர்.

குறுவினா

1. ஓவியங்களின் வகைகள் யாவை?
2. குகை ஓவியங்களில் இருந்து நாம் அறியும் செய்திகள் யாவை?
3. தாள் ஓவியங்களை எவற்றைக் கொண்டு வரைவர்?
4. சுவர் ஓவியங்கள் காணப்படும் இடங்களைக் கூறுக.
5. செப்பேட்டு ஓவியங்களில் காணப்படும் காட்சிகள் யாவை?

சிறுவினா

1. கேலிச்சித்திரம் என்றால் என்ன?
2. ஓலைச்சுவடி ஓவியங்கள் குறித்து நீங்கள் அறிந்து கொண்டவற்றை எழுதுக.

சிந்தனை வினா

தந்த ஓவியங்கள் கேரளாவில் அதிகம் காணப்படுவது ஏன்?

www.cbsetamil.com

7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 132 20-03-2020 17:48:05

இயல் ஆறு

தமிழ் ஒளிர் இடங்கள்

JGX9QH

நுழையும்முன்

மனிதர்கள் புதிய புதிய இடங்களைக் காண்பதில் விருப்பம் உடையவர்கள். பழமையான நினைவுச் சின்னங்கள், இயற்கை அழகு நிறைந்த பகுதிகள், வழிபாட்டு இடங்கள், கடற்கரைப் பகுதிகள், தேசியப் பூங்காக்கள் போன்ற இடங்களைக் காண்பது உள்ளத்துக்கு மகிழ்ச்சியைத் தரும். அவற்றுள் தமிழின் பெருமையை விளக்கும் இடங்கள் சிலவற்றை அறிவோம்.

அன்பு மாணவர்களே! புத்தகங்களில் பல வகை உண்டு. கதைப் புத்தகங்கள், கட்டுரைப் புத்தகங்கள், கவிதைப் புத்தகங்கள் ஆகியவை நீங்கள் அறிந்தவையே. இது தமிழுடன் தொடர்புடைய இடங்கள் குறித்த கையேடு. இக்கையேடு அத்தகைய இடங்களை நேரில் காண வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தஞ்சை சரசுவதி மகால் நூலகம்



இந்தியாவில் உள்ள தொன்மையான நூலகங்களுள் தஞ்சை சரசுவதி மகால் நூலகமும் ஒன்று. இந்நூலகம் கி.பி. (பொ.ஆ.) 1122 முதல் இயங்கி வருவதாகக் கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன. இங்குத் தமிழ், தெலுங்கு உள்ளிட்ட பல்வேறு மொழிகளின் ஓலைச் சுவடிகளும் கையெழுத்துப் படிகளும் உள்ளன. தலைசிறந்த ஓவியங்களும் தொன்மையான இசைக் கருவிகளும் சிற்பங்களும் இங்கு இடம்பெற்றுள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழகம் – தஞ்சாவூர்

செம்மொழியாகிய தமிழுக்கு ஒரு பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தமிழக அரசால் கி.பி. (பொ.ஆ.) 1981 இல் தோற்றுவிக்கப்பட்டது தமிழ்ப் பல்கலைக்கழகம். இது தஞ்சாவூரில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. வானத்தில் இருந்து பார்க்கும் பொழுது "தமிழ்நாடு" எனத் தெரியும் வகையில் இதன் கட்டட அமைப்பு உள்ளது. இந்திய நாகரிகத்தின் பண்பாட்டுக் கூறுகள் அனைத்தையும் விரிவாகவும் ஆழமாகவும் ஆராய வேண்டும் என்பதே இப்பல்கலைக்கழகத்தின் நோக்கம்.

இங்குக் கலைப்புலம், சுவடிப்புலம், வளர்தமிழ்ப்புலம், மொழிப்புலம், அறிவியல்புலம் ஆகிய ஐந்து புலங்களும் இருபத்தைந்து துறைகளும் உள்ளன. இப்பல்கலைக்கழகம் தமிழ்மொழி ஆய்வுகள் செய்வது மட்டுமன்றி, சித்த மருத்துவத்துறை மூலம் பொதுமக்களுக்குப் பயனுள்ள வகையில் மருத்துவத் தொண்டு செய்து வருகிறது. இந்திய ஆட்சிப்பணி பயிற்சியாளர்களுக்குத் தமிழ்மொழிப்பயிற்சியை இப்பல்கலைக்கழகமே வழங்குகிறது. இங்கு மிகப்பெரிய நூலகம் ஒன்று அமைந்துள்ளது. உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் இங்குக் கல்வி கற்று வருகின்றனர்.

உ.வே.சா நூலகம் – சென்னை

கி.பி. (பொ.ஆ.) 1942 இல் தொடங்கப்பட்ட இந்நூலகத்தில் தமிழ், தெலுங்கு, வடமொழி உள்ளிட்ட பல்வேறு மொழி நூல்கள் உள்ளன. இங்கு 2128 ஓலைச்சுவடிகளும் 2941 தமிழ் நூல்களும் உள்ளன.

கீழ்த்திசை நூலகம் – சென்னை

இந்நூலகம் கி.பி. (பொ.ஆ.) 1869ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இங்குத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளின் ஓலைச்சுவடிகள் உள்ளன. கணிதம், வானியல், மருத்துவம், வரலாறு உள்ளிட்ட பல்வேறு துறை நூல்களும் இடம்பெற்றுள்ளன. இது தற்போது அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் ஏழாம் தளத்தில் இயங்கி வருகின்றது.

www.cbsetamil.com

7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 134 20-03-2020 17:48:06

கன்னிமாரா நூலகம் – சென்னை

கி.பி. (பொ.ஆ.) 1896 இல் தொடங்கப்பட்ட கன்னிமாரா நூலகம் தமிழ்நாட்டின் மைய நூலகம் ஆகும். இஃது இந்திய நாட்டின் களஞ்சிய நூலகங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது. இந்நூலகத்தில் ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. இந்தியாவில் வெளியிடப்படும் புத்தகங்கள், நாளிதழ்கள், பருவ இதழ்கள் ஆகியவற்றின் ஒரு படி (பிரதி) இங்குப் பாதுகாக்கப்படுகிறது. இந்நூலகத்தின் மூன்றாம் தளத்தில் மறைமலை அடிகள் நூலகமும் செயல்பட்டு வருகின்றது.

வள்ளுவர் கோட்டம் – சென்னை

திருவள்ளுவரின் புகழை உலகறியச் செய்யும் வகையில் சென்னைக் கோடம்பாக்கத்தில் வள்ளுவர் கோட்டம் என்னும் கலைக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் கட்டுமானப் பணிகள் கி.பி.(பொ.ஆ.) 1973 இல் தொடங்கி 1976 இல் முடிக்கப்பட்டன. இது திருவாரூர்த் தேர் போன்ற வடிவில் அமைக்கப்பட்டு அதனை இரண்டு யானைகள் இழுத்துச் செல்வது போன்று கருங்கற்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்பகுதி இருபத்தைந்து அடி நீளமும் இருபத்தைந்து அடி அகலமும் உடையது. தேரின் மொத்த உயரம் 128 அடி. இரண்டு பக்கங்களிலும் பக்கத்திற்கு நான்கு சக்கரங்கள் தனிக்கற்களால் அமைக்கப்பட்டுள்ளன. கடைக்கோடி இரண்டு சக்கரங்கள் பெரியனவாகவும் நடுவில் இரண்டு சக்கரங்கள் சிறியனவாகவும் உள்ளன. தேரின் மையத்தில் உள்ள எண்கோண வடிவக் கருவறையில் திருவள்ளுவரின் சிலை கவினுற அமைக்கப்பட்டுள்ளது.

வள்ளுவர் கோட்டத்தில் நிகழ்ச்சிகள் நடத்துவதற்கான அரங்கம் ஒன்றும் உள்ளது. வள்ளுவர் கோட்டத்தில் 1330 குறட்பாக்களும் செதுக்கப்பட்டுள்ளன. அறத்துப்பால் கருநிறப் பளிங்குக் கல்லிலும் பொருட்பால் வெண்ணிறப் பளிங்குக் கல்லிலும் இன்பத்துப்பால் செந்நிறப் பளிங்குக் கல்லிலும் அழகாகப் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும் திருக்குறளின் கருத்துகளை விளக்கும் ஓவியங்களும் வரையப்பட்டுள்ளன.

www.cbsetamil.com

7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 135 20-03-2020 17:48:06

திருவள்ளுவர் சிலை – கன்னியாகுமரி

இந்தியாவின் தெற்கு எல்லையாகிய கன்னியாகுமரியில் திருவள்ளுவரின் சிலை தமிழக அரசால் நிறுவப்பட்டுள்ளது. விவேகானந்தர் பாறைக்கு அருகில், கடல் நடுவே நீர் மட்டத்திலிருந்து முப்பது அடி உயரப் பாறை மீது இச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. கி.பி.(பொ.ஆ.) 1990ஆம் ஆண்டு இப்பணி தொடங்கியது. பொதுமக்கள் பார்வைக்காக 2000ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாள் அன்று திறந்துவைக்கப்பட்டது. பாறையிலிருந்து சிலையின் உயரம் மொத்தம் 133 அடி. இது திருக்குறளின் மொத்த அதிகாரங்களைக் குறிக்கிறது. அறத்துப்பாலின் அதிகாரங்களை உணர்த்துவது போல் பீடம் முப்பத்தெட்டு அடி உயரம் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. பொருட்பால், இன்பத்துப்பால் ஆகியவற்றின் மொத்த அதிகாரங்களைக் குறிக்கும் வகையில் சிலை தொண்ணூற்றைந்து அடி உயரம் உடையதாக அமைக்கப்பட்டுள்ளது.

பீடத்தின் உட்புறத்தில் மண்டபம் ஒன்று அமைந்துள்ளது. மண்டபத்தின் உட்சுவரில் அதிகாரத்திற்கு ஒரு குறள் வீதம் 133 குறட்பாக்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் செதுக்கப்பட்டுள்ளன. திருவள்ளுவர் சிலை அமைப்பதற்கு மூன்று டன் முதல் எட்டு டன் வரை எடை உள்ள 3,681 கருங்கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. திருவள்ளுவர் சிலை மொத்தம் ஏழாயிரம் டன் எடை கொண்டது. திருவள்ளுவர் சிலைக்குச் செல்வதற்குப் படகு வசதி செய்யப்பட்டுள்ளது. உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இங்கு நாள்தோறும் வந்து செல்கின்றனர். தமிழின் பெருமைமிகு அடையாளமாக இச்சிலை உயர்ந்து நிற்கிறது.

உலகத் தமிழ்ச் சங்கம் – மதுரை

மதுரை மாநகரின் தல்லாகுளம் பகுதியில் காந்தி அருங்காட்சியகம் அருகில் உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டுள்ளது. இது சுமார் எண்பத்தேழு ஆயிரம் சதுரஅடி பரப்பளவில் மனத்தைக் கவரும் வகையில் கட்டப்பட்டுள்ளது. கி.பி. (பொ.ஆ.) 1981-ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டில் மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி இக்கட்டடம் கட்டப்பட்டு

www.cbsetamil.com

7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 136 20-03-2020 17:48:06

கி.பி. (பொ.ஆ.) 2016 ஆம் ஆண்டு திறந்துவைக்கப்பட்டது. இதனுள் பன்னாட்டு அளவிலான கருத்தரங்கக் கூடங்கள், ஆய்வரங்கங்கள், நூலகம், பார்வையாளர் அரங்கம் ஆகியன கவினுற அமைக்கப்பட்டுள்ளன. வெளிப்புறச் சுற்றுச்சுவர்களில் 1330 குறட்பாக்களும் இடம்பெற்றுள்ளன.

உலகத் தமிழ்ச் சங்கத்தின் மற்றோர் அமைப்பான சங்கத்தமிழ்க் காட்சிக்கூடம் தனிக்கட்டடத்தில் இயங்கி வருகிறது. தருமிக்குப் பாண்டிய மன்னன் பொற்கிழி வழங்கிய திருவிளையாடல் புராணக் காட்சி இதன் நுழைவாயிலில் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள காட்சிக்கூடத்தில் வள்ளல்கள், புலவர்கள் ஆகியோரின் வாழ்க்கை நிகழ்வுகள் ஓவியங்களாகவும் சிற்பங்களாகவும் உள்ளன. தொல்காப்பியர், ஔவையார், கபிலர் ஆகியோரின் முழுஉருவ வெண்கலச் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் இதன் சுற்றுச் சுவர்களில் சங்க இலக்கியக் காட்சிகள் வண்ண ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. மூன்றாம் தமிழ்ச்சங்கம் அமைந்த மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கக் கட்டடமும் சங்கத்தமிழ்க் காட்சிக்கூடமும் தமிழின் பெருமையைப் பறைசாற்றி நிற்கின்றன.

சிற்பக் கலைக்கூடம் – பூம்புகார்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சோழர்களின் தலைநகரமாகவும் துறைமுக நகரமாகவும் விளங்கியது பூம்புகார். இந்நகரைப் பற்றிய செய்திகள் சிலப்பதிகாரத்திலும் பட்டினப்பாலையிலும் இடம்பெற்றுள்ளன. இங்கு மருவூர்ப்பாக்கம் என்னும் கடல் பகுதியும் பட்டினப்பாக்கம் என்னும் நகரப் பகுதியும் அமைந்திருந்ததாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. பின்னர் ஏற்பட்ட கடல்கோளினால் பூம்புகார் நகரம் அழிந்துவிட்டது. இந்நகரத்தின் பெருமையை உலகறியச் செய்ய கி.பி.(பொ.ஆ.) 1973 ஆம் ஆண்டு பூம்புகார் கடற்கரையில் சிற்பக் கலைக்கூடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இக்கூடம் ஏழுநிலை மாடங்களைக் கொண்டது. கண்ணகியின் வரலாற்றை விளக்கும் நாற்பத்தொன்பது சிற்பத் தொகுதிகள் இதில் இடம்பெற்றுள்ளன. மாதவிக்கும் ஒரு நெடிய சிலை இங்கு நிறுவப்பட்டுள்ளது.

www.cbsetamil.com

7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 137 20-03-2020 17:48:06

கலைக்கூடத்திற்கு அருகில் இலஞ்சிமன்றம், பாவைமன்றம், நெடுங்கல்மன்றம் ஆகியன அமைந்துள்ளன. இலஞ்சிமன்றத்திலும் பாவைமன்றத்திலும் வடிவமைக்கப்பட்டுள்ள பெண்களின் உருவங்கள் நம் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. நெடுங்கல் மன்றத்தில் நெடிய கற்றூண் ஒன்றும் அதைச் சுற்றி எட்டுச் சிறிய கற்றூண்களும் எட்டு மனித உருவங்களும் தற்காலச் சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டுகளாய் நிற்கின்றன.

இக்கையேட்டில் நாம் கண்ட பகுதிகள் அனைத்தும் தமிழின் பெருமையை உலகறியச் செய்ய நிறுவப்பட்டவை ஆகும். இவற்றைக் காணும் பொழுது தமிழரின் வாழ்வையும் தமிழ்மொழியின் சிறப்பையும் அறிய முடிகிறது. இத்தகைய சிறப்புமிக்க இடங்களுக்குச் சென்று பார்வையிடுவதும் அவற்றைப் பாதுகாப்பதும் தமிழராகிய நம்முடைய கடமை ஆகும்.

கற்பவை கற்றபின்

1. உங்கள் மாவட்டத்திலுள்ள சுற்றுலா இடங்களின் சிறப்புகளை எழுதி வருக.
2. நீங்கள் கண்டுகளித்த இடங்களின் தனித்தன்மைகளை எழுதுக.

மதிப்பீடு

நீங்கள் சுற்றுலா வழிகாட்டியாக இருந்தால், சுற்றுலாக் கையேடு என்னும் பகுதியில் உள்ள இடங்களைப் பார்வையிட வருபவர்களுக்கு எவ்வாறு விளக்கிக் கூறுவீர்கள்?

www.cbsetamil.com

7th Std Tamil CBSE Term 1-3_Pages-1-222.indd 138 20-03-2020 17:48:06

பண்பாடு

ந

விருந்து போற்றுதும்!

49I3CF



முளிதயிர் பிசைந்த சோற்றை உருட்டி அனைவருக்கும் கையில் ஓர் உருண்டை கொடுத்து, உருண்டையின் நடுவில் வைத்த குழியில் புளிக்குழம்பு இட்டு உண்ணச் சொன்ன அன்னையின் அன்பில் தொடங்குகிறது அனைவருடனான பகிர்ந்துண்ணல். சிறு வயதில் மகனுடனோ மகளுடனோ வரும் நண்பர்களுக்கும் சேர்த்து அம்மா தரும் சிற்றுண்டியில் தொடங்குகிறது, தமிழரின் விருந்து போற்றுதல். தமிழர் மரபில் உணவோடு உணர்வையும் குழைத்துச் செய்த சமையல் விருந்தாகிறது.

தம் வீட்டுக்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.



விருந்தோம்பல்
17 ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், சிதம்பரம்.

அறவுணர்வும் தமிழர் மரபும்

திருவள்ளுவர் இல்லறவியலில் 'விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரத்தையே' அமைத்திருக்கிறார்; இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார்; முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை "மோப்பக் குழையும் அனிச்சம்" என்ற குறளில் எடுத்துரைக்கிறார். விருந்தினரைப் போற்றுதல் இல்லறக் கடமையாக இருந்தது.

"…… தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"
– சிலப்பதிகாரம், 16:72,73

என்று கண்ணகி வருந்துகிறாள். கோவலனைப் பிரிந்து வாழும் கண்ணகி அவனைப் பிரிந்ததைவிட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணியே வருந்துவதாகக் குறிப்பிடுவதன் மூலம் விருந்தினரைப் போற்றிப் பேணல் பழந்தமிழர் மரபு என்பதை இளங்கோவடிகள் உணர்த்துகிறார்.

கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள், விருந்தும் ஈகையும் செய்வதாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார்.

கலிங்கத்துப்பரணியிலும் செயங்கொண்டார் விருந்தினர்க்கு உணவிடுவோரின் முகமலர்ச்சியை உவமையாக்கியுள்ளார்.

10th_Tamil_Unit 3.indd 50 24-01-2020 10.05.31 AM

"பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால் வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும் விருந்தும் அன்றி விளைவன யாவையே" – கம்பராமாயணம், 1:2:36	"விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண மேன்மேலும் முகமலரும் மேலோர் போல" – கலிங்கத்துப்பரணி, 477

தனித்து உண்ணார்

தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை. அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர்; அத்தகையோராலும்தான் உலகம் நிலைத்திருக்கிறது என்பதை,

"உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத் தமியர் உண்டலும் இலரே……."

– புறநானூறு, 182

என்று கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி குறிப்பிட்டுள்ளார்.

அல்லில் ஆயினும்

விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு குடும்பத் தலைவிக்கு உண்டு. இதை

"அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்"

என்று நற்றிணை (142) குறிப்பிடுகிறது.

தெரியுமா?

ஏழு அடி நடந்து சென்று வழியனுப்பினர்

பண்டைத் தமிழர்கள் வீட்டிற்கு வந்த விருந்தினர் திரும்பிச் செல்லும்போது, அவர்களைப் பிரிய மனமின்றி வருந்தினர். மேலும், வழியனுப்பும் பொழுது அவர்கள் செல்லவிருக்கிற நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர்வரை ஏழு அடி நடந்து சென்று வழியனுப்பினர்.

"காலின் ஏழடிப் பின் சென்று"

–பொருநராற்றுப்படை, 166

இன்மையிலும் விருந்தோம்பல்

வீட்டிற்கு வந்தவருக்கு வறிய நிலையிலும் எவ்வழியிலேயேனும் முயன்று விருந்தளித்து மகிழ்ந்தனர் நம் முன்னோர். தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குத்தியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி. இதனை,

குரல்உணங்கு விதைத் தினை உரல்வாய்ப் பெய்து சிறிது புறப்பட்டன்றோ இலள்

என்று புறநானூறு (333) காட்சிப்படுத்துகிறது.

நேற்று வந்த விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் இரும்பினால் செய்த பழைய வாளைப் பணையம் வைத்தான் தலைவன்; இன்றும் விருந்தினர் வந்ததால் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு. இச்செய்தி,

நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன் இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்றுஇக் கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்....

– புறநானூறு, 316

என்ற பாடலடிகளில் இடம்பெறுகிறது.

இளையான்குடி மாறநாயனாரின் வீட்டுக்கு வந்த சிவனடியார்க்கு விருந்தளிக்க அவரிடம் தானியமில்லை; எனவே, அன்று விதைத்துவிட்டு வந்த நெல்லை அரித்து வந்து, பின் சமைத்து விருந்து படைத்த திறம் பெரியபுராணத்தில் காட்டப்படுகிறது.

நிலத்திற்கேற்ற விருந்து

நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்கிறது சிறுபாணாற்றுப்படை (அடி:160–163).

10th_Tamil_Unit 3.indd 51 24-01-2020 10.05.31 AM

"இலையை மடிப்பதற்கு முந்தைய
வினாடிக்கு முன்பாக
மறுக்க மறுக்க
பரிமாறப்பட்ட கூடுதல் இட்லியில்
நீண்டு கொண்டிருந்தது
பிரியங்களின் நீள் சரடு"

–அம்சப்பிரியா

விருந்தை எதிர்கொள்ளும் தன்மை

இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா? என்று கேட்கும் வழக்கம் இருந்ததை,

"பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீ ரோ"

என்ற குறுந்தொகை (118) அடிகள் புலப்படுத்துகின்றன.

"மருந்தே ஆயினும் விருந்தொடு உண்"
என்று கொன்றை வேந்தனில் ஔவையார் பாடியுள்ளார். அவர் பாடிய தனிப்பாடலில்,

"வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரெனவே புளித்த மோரும் – திறமுடனே
புள்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந்து இட்டான்ஈ(து)
எல்லா உலகும் பெறும்"

என்று அவர் கூறுவதிலிருந்து வள்ளல்களால் விருந்தினர் போற்றப்பட்டதை அறியமுடிகிறது.

உற்றாரோடு நின்ற விருந்து . . .

சங்க காலத்திலிருந்தே அரசராயினும் வறியோராயினும் விருந்தினர்களைப் போற்றினர். கால மாற்றத்தில் புதியவர்களாகிய விருந்தினர்களை வீட்டுக்குள் அழைத்து உணவிடுவது குறைந்தது. விருந்து புரப்பது குறைந்ததால் சத்திரங்கள் பெருகின. நாயக்கர், மராட்டியர் ஆட்சிக் காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச் செல்வோர்க்காகக் கட்டப்பட்டன.

புதியவர்களான விருந்தினர்களை ஏற்பது குறைந்துவிட்ட காலத்தில், ஓரளவு தெரிந்தவர்களை மட்டுமே விருந்தினர்களாக ஏற்றனர். படிப்படியாக உற்றார் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரையே விருந்தினர்களாகப் போற்றும் நிலைக்கு மாறினர்.

விருந்தோம்பல் இன்றும். . .

புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர் முன்னோர். இன்று வீட்டுக்குத் திண்ணை வைத்துக் கட்டுவதுமில்லை; அறிமுகமில்லாத புதியவர்களை விருந்தினர்களாக ஏற்பதுவும் இல்லை. இருப்பினும் திருவிழாக் காலங்களில்

தெரிந்து தெளிவோம்

வாழை இலையில் விருந்து

தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது. நம் மக்கள் வாழை இலையின் மருத்துவப் பயன்களை அன்றே அறிந்திருந்தனர்.

தமிழர்கள் உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்திருந்தனர். உண்பவரின் இடப்பக்கம் வாழை இலையின் குறுகலான பகுதியும் வலப்பக்கம் இலையின் விரிந்த பகுதியும் வரவேண்டும். ஏனென்றால் வலது கையால் உணவு உண்ணும் பழக்கமுடையவர்கள் நாம். இலையில் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலான அளவில் சிறிய உணவு வகைகளையும் வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலான அளவில் பெரிய உணவு வகைகளையும் நடுவில் சோறும் வைத்து எடுத்துண்ண வசதியாகப் பரிமாறுவார்கள். உண்பவர் மனமறிந்து, அவர்கள் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளைப் பரிவுடன் பரிமாறுவர்.

10th_Tamil_Unit 3.indd 52 24-01-2020 10.05.31 AM

ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காணமுடிகிறது.

திருமணத்தை உறுதி செய்தல், திருமணம், வளைகாப்பு, பிறந்தநாள், புதுமனை புகுவிழா போன்றவற்றை இல்ல விழாக்களாகவே கொண்டாடினர். அப்போது மிகுதியான விருந்தினர்களை வரவேற்று உணவளித்து மகிழ்ந்தனர். அந்த இல்லவிழா நாள்களில் அப்பகுதி வாழ் மக்களும் வெளியூர் விருந்தினர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தனர்.

காலப்போக்கில் வீட்டில் நடைபெற்ற விழாக்கள் திருமணக்கூடங்களுக்கு இடம்பெயர்ந்துவிட்டன. பண்பாட்டு மாற்றமாக இன்று சில இடங்களில் விருந்தினர்களை வரவேற்பது முதல் பந்தியில் உபசரித்து வழியனுப்பும்வரை 'திருமண ஏற்பாட்டாளர்'களே செய்யும் விருந்தோம்பல் நடைபெறுவதைக் காணமுடிகிறது.

பண்டைத் தமிழர் இல்லங்களிலும் உள்ளங்களிலும் விருந்தோம்பல் பண்பாடு செழித்திருந்தது. அந்த உயரிய தமிழ்ப் பண்பாடு இன்றைய தமிழர்களிடம் மேற்கூறிய முறைகளில் பின்பற்றப்படுகின்றது. காலந்தோறும் தமிழர்களின் அடையாளமாக விளங்கும் உயர் பண்பான விருந்தோம்பலைப் போற்றிப் பெருமிதம் கொள்வோம்.

எத்திசையும் புகழ் மணக்க.....

அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச் சங்கம் 'வாழையிலை விருந்து விழா'வை ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றது. தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகளைக் கொண்டு வாழையிலையில் விருந்து வைக்கின்றனர். முருங்கைக்காய் சாம்பார், மோர்க்குழம்பு, வேப்பம்பூ ரசம், வெண்டைக்காய்க் கூட்டு, தினைப் பாயசம், அப்பளம் எனச் சுவையாகத் தமிழர் விருந்து கொடுக்கின்றனர். அங்கு வாழும் தமிழர்கள் பலரும் இந்த விருந்தில் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர். தொடர்ந்து பல பண்பாட்டு நிகழ்வுகளையும் நிகழ்த்தி வருகின்றனர்.

கற்பவை கற்றபின்...

1. வீட்டில் திண்ணை அமைத்த காரணம், விருந்தினர் பேணுதல், தமிழர் பண்பாட்டில் ஈகை, பசித்தவருக்கு உணவிடல் – இவைபோன்ற செயல்கள் குறித்து உங்கள் வீட்டிலுள்ளவர்களிடம் கேட்டுத் தெரிந்து வந்து கலந்துரையாடல் செய்க.
2. "இட்டதோர் தாமரைப்பூ
இதழ்விரித் திருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள்கூடி
இரையுண்ணும்....." பாரதிதாசனார்
இவ்வாறாகக் கவிதைகளில் பதிவு செய்யப்பட்டுள்ள பகிர்ந்துண்ணல் குறித்துப் பேசுக.

10th_Tamil_Unit 3.indd 53 24-01-2020 10.05.32 AM



ஊழையும் உப்பக்கம் காண்பர், உலைவின்றித்
தாழா துஞற்று பவர்

பொருள் :
மனம் தளராமல் இடைவிடாது முயற்சி செய்பவர், விதியையும் புறமுதுகு காட்டக் காண்பர்.

- திருக்குறள்

THE WISDOM ACADEMY
We Guide... you Succeed.

Head Office :
#1, First Floor, New Colony,
2nd Main Road, Chrompet,
Chennai - 600 044.

Branch Office :
#7, First Floor, Post Office Road,
Palani - 624 601. Opp to State Bank
+91 73388 51213

+91 94878 49494 / 73388 91214
contact@thewisdomacademy.in
www.thewisdomacademy.in

ISO 9001:2015